கலைஞரின்
கடிதங்கள்



49

01.06.2013 - முதல்
10.10.2013 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 49

01.06.2013 - 10.10.2013

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வகம் நூல்
நிலையம்
சென்னை-113
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00


CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

42256
894.8116

போராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3764. சாதனைப் பட்டியலில் விட்டுப் போனவை!	01-06-2013	23
3765. உழைப்பேன்; உழைத்துக் கொண்டே இருப்பேன்!	6-6-2013	31
3766. இந்திய அரசு இனியும் தூங்குவதா?	8-6-2013	39
3767. பதவிக்குத்தக்க பண்பாடு வேண்டாமா?	17-6-2013	44
3768. இத்தகையோர் மத்தியிலேதான்....	21-6-2013	51
3769. கழகம் ஆற்றும் அறப்பணிகளில் சில!	28-06-2013	56
3770. வாலறுந்த பல்லி போல் ஆவதா?	30-6-2016	63
3771. “நிலக்கரி நாயகி” என்ற பட்டம் பெறவா?	2-7-2013	69
3772. மாநிலங்களவைத் தேர்தல் - ஓர் ஆய்வு!	3-7-2013	76

3773. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகக் குரல் கொடுப்போம்!	14-7-2013	86
3774. இந்திக்கு உள்ள உரிமை; தமிழுக்கு வேண்டாமா?	15-7-2013	93
3775. பெருந்தலைவர் காமராஜர் புகழ் வாழ்க!	16-07-2013	100
3776. தொய்வின்றி தொடரும் நமது பயணம்!	18-07-2013	106
3777. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்!!	19-7-2013	113
3778. கச்சத் தீவும், "கச்சடா" கேள்வியும்!	20-7-2013	119
3779. ஆபத்தின் உச்சக்கட்டம்; அன்னிய நேரடி முதலீடு!	21-7-2013	126
3780. நுழைவுத் தேர்வு தீர்ப்பு - தேவையா எதிர்ப்பு?	23-07-2013	131
3781. காழ்ப்புணர்வோ, ஆதங்கமோ எனக்கு அல்ல!	24-7-2013	138
3782. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!	26-7-2013	148
3783. வெற்றி முகட்டை நோக்கி நமது முயற்சிகள்!	27-7-2013	155
3784. இந்தியாவுக்கே இவர்தான் முன்னோடியாம்!	29-7-2013	161

3785. நிறைவேறட்டும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா!	30-7-2013	168
3786. தாமதமே; உன் பெயர்தான் தமிழக அரசா?	31-7-2013	175
3787. ஆகஸ்ட் 8: ஆர்ப்பாட்டத்தில் அலைகடலெனத் திரள்வீர்!	01-08-2013	181
3788. அமர்த்தியா சென்னும் - அவர் விடுக்கும் அறைகூவலும்!	04-08-2013	188
3789. கொடுத்ததையும் பறித்துக் கொண்ட கொடுமை!	05-08-2013	195
3790. ஆகஸ்ட் 8; ஆர்ப்பாட்டம்; அகிலமே வியக்கட்டும்!	07-08-2013	202
3791. இஸ்லாமியப் பெருமக்களுக்கு இதய வாழ்த்துகள்!	8-8-2013	210
3792. உணவு மசோதா; நமது நிலை!	10-8-2013	217
3793. மத்திய அரசு தருவதை மாநில அரசு மறுப்பதா?	14-8-2013	225
3794. பெரியார், காமராசர் பெயரை மறந்த சுதந்திர நாள் உரை!	17-08-2013	233
3795. இலங்கையை, இந்தியா இனியாவது புரிந்துகொள்ளுமா?	19-08-2013	241
3796. மகளிர் மேம்பாடு - அன்றும், இன்றும்!	22-8-2013	248

3797. விடை அளிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை!	23-08-2013	255
3798. அன்னை இந்திரா வழியில் தீர்வு காண்போம்!	26-8-2013	262
3799. இந்தச் சோதனையிலும் இந்தியா வெற்றி பெறும்!	30-8-2013	269
3800. உணவுப் பாதுகாப்புச் சட்டம் - இலாபமா? நட்டமா?	3-9-2013	276
3801. மூடுவிழா நடத்திட முனைப்பு காட்டும் முதலமைச்சர்!	4-9-2013	284
3802. ஒகேனக்கல் திட்டமும், முத்தியால்பேட்டை காவல் நிலையமும்!	6-9-2013	291
3803. கழக ஆட்சியில் மகளிர்க்கான மகத்தான திட்டங்கள்!	8-9-2013	298
3804. மூடநம்பிக்கை ஒழிப்பை முன்னெடுத்துச் செல்வோம்!	10-9-2013	306
3805. பொது வாக்கெடுப்பே ஈழத்தமிழர்க்குப் புது வாழ்வு தரும்!	13-9-2013	313
3806. நீதி வெல்லும்; நிச்சயம் வெல்லும்!	14-9-2013	319
3807. அறப்போர் வாளேந்தி, அய்யா; அண்ணா வழியில் பயணம் தொடருவோம்!	17-09-2013	327
3808. கொலை பயத்தின் கோரப்பிடியில் தமிழகம்!	21-09-2013	334

3809. நீவிர், வீட்டுக்கு விளக்குகள்; நாட்டுக்குத் தொண்டர்கள்!	23-9-2013	341
3810. விளம்பர வெளிச்சத்தில் காணும் கனவு!	24-9-2013	349
3811. கேழ்வரகில் நெய் வடியுதாம்; கேளுங்கள் தமிழர்களே!	26-9-2013	357
3812. அழைக்காமல் பலரையும், அழைத்துப் பலரையும்?	28-9-2013	364
3813. எத்தனை சாமிக்கண்ணுகள் வளர்த்த கழகமிது!	30-9-2013	374
3814. “மெஜாரிட்டி” ஆட்சி என்றால் எதுவும் செய்யலாமோ?	8-10-2013	379
3815. ஊழலைத் தவிர வேறு எதுவும் உயரப் போவதில்லை!	9-10-2013	387
3816. இனியும் தமிழினம் ஏமாறத் தயாராக இல்லை!	10-10-2013	393

3764. சாதனைப் பட்டியலில் விட்டுப் போனவை!

உடன்பிறப்பே,

29-5-2013 தேதிய "தினமலர்" நாளிதழில் வந்துள்ள ஒரு செய்திக்குத் தலைப்பு - "மதுரையில் மே மாதம் - கொலை மாதம்! மூன்று நாளில் ஐந்து கொலைகள் - நேற்றைய லிஸ்ட் ரவுடி"சங்கறுப்பு" - என்பதாகும். அந்தத் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில், "மதுரையில் மே 26ம் தேதி முதல் அடுத்தடுத்து தினமும் கொலைகள் நடந்து வருகின்றன. நேற்று மாலை, குடியிருப்புகள் மிகுந்த பகுதியில், ரவுடியை ஓட ஓட விரட்டிக் கொன்ற கும்பல், தொண்டைக் குழி "சங்கை" அறுத்து எடுத்துக்கொண்டு தப்பியது. மதுரையில் இந்த ஆண்டு ஜனவரி 31இல் தி.மு.க. செயற்குழு உறுப்பினர் "பொட்டு" சுரேஷில் ஆரம்பித்த கொலை, மாதந்தோறும் சராசரியாக மூன்று கொலைகள்வரை அரங்கேறி வருகின்றன. ஏப்ரல் 3ஆம் தேதி தனிச்சியம் ஸ்டேட் வங்கி ஏ.டி.எம்., மையக் காவலாளி செல்வம், ஏப்ரல் 21இல் மாடக்குளம் கூலித் தொழிலாளி முருகேசன், மே 18ல் முடக்காத்தான் குணவதி ஆகியோர் கொல்லப்பட்டனர். இவ்வழக்குகளில் இதுவரை "க்ளூ" கிடைக்கவில்லை. இந்த ஆண்டு ஜனவரியில் 3 பேரும், பிப்ரவரியில் 4 பேரும், மார்ச்சில் 5 பேரும், ஏப்ரலில் 4 பேரும், மே மாதத்தில் நேற்று முன்தினம்வரை 6 பேரும் கொலை செய்யப்பட்டனர். இதில் மே 26 முதல் நேற்று மாலைவரை அடுத்தடுத்து, 4 பேர் கொல்லப்பட்டனர்." எப்படி அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அமைதி?

மதுரையில் பொட்டு சுரேஷ் கொலை செய்யப்பட்டு நான்கு மாதங்கள் ஆகின்றன. முக்கியக் குற்றவாளியாகக் கூறப்படும் அட்டாக் பாண்டியை; சர்வவல்லமை படைத்த தமிழகக் காவல்துறை தேடுகிறது, தேடுகிறது, தேடிக்கொண்டே இருக்கிறது. அவருடைய மனைவி மற்றும் மாமனாரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. ஆனால் அவரைப் பிடிக்க

முடியவில்லை. ஆனால் "குமுதம் ரிப்போர்ட்டர்" பத்திரிகை அதே அட்டாக் பாண்டியிடம் பேட்டி பெற்று அதனை அவர்களுடைய இதழிலே வெளியிட்டுள்ளது. எப்படி நமது ஜெயா ஆட்சி?

இதற்கிடையே சசிகலாவின் அண்ணன் மகன் வெங்கடேஷ் என்பவர் திடீரென்று இந்த ஆட்சியில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர் சிறையிலே கண்ணீர் வடிப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இந்த ஆட்சியில் யார் எப்போது கைது செய்யப்படுவார்கள், எப்போது அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பதற்கான காரணங்களைக் கேட்கக் கூடாது. சசிகலாவின் அண்ணன் மகன் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். கடந்த ஆண்டு சசிகலாவின் கணவரே கைது செய்யப்பட்டுச் சிறையிலே அடைக்கப்பட்டார். அப்போது அவர் ஆனந்தவிகடன் வார இதழுக்கு அளித்த பேட்டியில்,

"நில அபகரிப்பு செய்ததாகச் சொல்லி என்னைக் கைது செய்து 82 நாட்கள் சிறையில் அடைத்தார்கள். மொத்தம் ஆறு வழக்குகள் போட்டார்கள். இத்தனை மாதங்கள் ஆகியும் இவற்றில் எந்த வழக்குக்கும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவில்லையே, ஏன்? ஜெயலலிதாவை முதன் முதலில் முதலமைச்சர் நாற்காலியில் அமர வைத்ததே நான்தான். எங்களால்தான் இரட்டை இலைச் சின்னம் கிடைத்தது. எங்களால்தான் தலைமைக் கழகம் மீட்கப்பட்டது. எங்களால்தான் 1991ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்படும் அரசியல் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. "நான் ராஜினாமா செய்யப் போகிறேன்" என்று ஜெயலலிதா எழுதி வைத்திருந்த கடிதத்தை நான் கொண்டு போய்ப் பதுக்கி வைத்ததால்தான் அவரால் இன்றுவரை அரசியல் செய்ய முடிகிறது. இதை ஜெயலலிதாவால் மறுக்க முடியுமா?"

– என்றெல்லாம் கேட்டிருந்தார். அதற்கே இந்த ஆட்சியினரோ முதல்வரோ பதிலளிக்க வில்லையே?

முதலமைச்சர் நினைத்தால் சசிகலா மீதும், அவருடைய கணவர் மீதும், அவர்களுக்கு வேண்டிய ராவணன், திவாகரன்

போன்றவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பார்! அடுக்கடுக்கான வழக்குகளைப் பதிவு செய்வார். பிறகு அந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்ட ராவணனைக் கொடநாட்டிற்கே அழைத்துப் பேசுகிறார் என்றால் இவைகள் எல்லாம் யாரை ஏமாற்றுகின்ற செயல்கள்? அவர்கள் மீதெல்லாம் போடப்பட்ட வழக்குகள் என்னவாயிற்று? நடராஜன் மீது புகார் என்றார்கள். பிறகு கொடுக்கப்பட்ட புகார்கள் திரும்பப் பெறப்பட்டன என்கிறார்கள். அப்படியென்றால் பொய்ப் புகார் கொடுத்தவர்கள் மீது என்ன நடவடிக்கை? அந்தப் புகார் பொய்யானதா, மெய்யானதா? என்று காவல் துறை முறையாக முதல் நிலை விசாரணை நடத்தாதது ஏன்? காவல் துறையினரின் அந்தத் தவறான நடவடிக்கைக்குக் காரணம் என்ன? அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர் சிறையிலிருந்து வெளியே வந்ததும், அவரை "என்கவுண்டர்" செய்ய முயற்சி நடைபெற்றதாக இந்த ஆட்சியினர் மீது குற்றம் சாட்டினாரே; அதற்கு இந்த அரசின் பதில்கள் என்ன?

சசிகலாவின் கணவர் நடராசன் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு 12-5-2012 அன்று கொடுத்த பேட்டியில் என்ன சொன்னார்?

**"என் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் பொய் வழக்குகள். என் மீது போடப்பட்ட ஆறு வழக்கில் 2 பேர் தற்போது வாபஸ் பெற்றுள்ளனர். நில அபகரிப்புச் சட்டத்தை என் மீது மோசடியாகப் பயன்படுத்தி உள்ளனர். இதற்காகத் தலைமைச் செயலாளர், முதன்மைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், டி.ஜி.பி., திருச்சி ஐ.ஜி., டி.ஐ.ஜி., உள்ளிட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க சென்னை ஐகோர்ட்டில் 3 ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளோம். ஜெ. வீட்டில் இருந்து நான் வெளியேறி 20 ஆண்டுகள் ஆகிறது. என்னைக் கட்சியில் இருந்து நீக்கியதாக அறிக்கை வெளியிட்டார். நான் கட்சியில் உறுப்பினராகவே இல்லை. அப்படி இருந்ததாக அவர்களால் நிரூபிக்க முடியுமா? அவர்கள் என்ன செய்தாலும் அமைதி யாக இருந்தேன். இனி அப்படி இருக்க மாட்டேன். நேரடியாக அரசியலில் இறங்குவேன். 2011

தேர்தல் அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்ததே நான்தான். பொன்ராஜ், பன்னீர்செல்வம் ஐ.ஏ.எஸ்., ஆகியோர்தான் லேப்டாப் உள்ளிட்ட இலவசங்களை சேர்த்தோம். அந்த அறிக்கையின் முதல் பிரதி என்கிட்டேதான் இருக்கு. சசிகலா மீண்டும் சேர்வதற்கு முன்னாடி அவர் பெயரில் வந்த அறிக்கை, அவர் கொடுத்த அறிக்கை அல்ல. என் மனைவிக்கு அறிக்கை தயாரிக்கத் தெரியாது. 3 முறை முதல்வராக இருப்பவராலேயே ஒரு அறிக்கை தயாரிக்க முடியாது. என்னை மாதிரி ஒரு இளிச்சவாயன்தான் ரெடி பண்ணித்தரணும். அப்படிச் செய்தாலும் ஒரு குறிப்புகூட இல்லாமல் பேசத் தெரியாது. என்னை நில அபகரிப்பில் கைது செஞ்சீங்களே, எத்தனை ஏக்கரை மீட்டீங்க? சார்ஜ் ஷீட்டாவது போட முடியுமா? சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு 5 மணி நேரத்தில் காரில் போயிடலாம். என்னைக் கைது செய்து 12 மணி நேரம் அலைக் கழிச்சாங்க. டி.ஐ.ஜி. அமல்ராஜ் தஞ்சாவூர் பக்கத்தில் செங்கிப்பட்டியில் ஒரு நடுக்காட்டில் வண்டியை நிறுத்தி வைத்துவிட்டார். எதற்கு? என்கவுண்டரில் என்னைச் சாகடிக்கவா? திருச்சி ஐ.ஜி. அலெக்சாண்டர் மோகன் தஞ்சாவூரில் ஒரு போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்துக்கிட்டு எல்லா இன்ஸ்பெக்டர்களையும் கூப்பிட்டு என் மேலே ஏதாவது ஒரு கேஸ் போட்டுட்டு வாங்கன்னு உத்தரவு போடுறாராம்”

இப்படியெல்லாம் நடராசன் பேட்டி கொடுத்து ஏடுகளில் எல்லாம் வெளிவந்ததே? இந்த அ.தி.மு.க. அரசு இதற்கு என்ன பதில் சொல்லியது? எதுவுமே சொல்லவில்லையே? அப்படியென்றால் அந்தப் பேட்டியிலே சொல்லப்பட்டவைகள் எல்லாம் உண்மைதானா?

இந்தத் தொடரில்தான் தற்போது வெங்கடேஷ் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதையும் பாராட்டி தலையங்கம் எழுத தமிழ்நாட்டில் சில ஏடுகள் தயாராகவே இருக்கின்றன என்பது தான் வேதனையினும் வேதனை!

இதற்கிடையே சசிகலாவின் அக்காள் மகன் பாஸ் என்கிற பாஸ்கரன் போலீசாரால் கைது செய்யப்பட்டதாக ஒரு செய்தி பரவி, அந்தச் செய்தியை மறுத்து அவரே ஒரு பேட்டி அளித்திருக்கிறார். அந்தப் பேட்டியில், அவர் தீவிர எம்.ஜி.ஆர். பக்தன் என்றும், 1995இல் ஒரு டி.வி.யைத் திறம்பட நடத்தி வந்ததாகவும், அரசியல் சூழ்ச்சியால் வெளியேற்றப்பட்டு, பாளையங்கோட்டை சிறையில் 8 மாதம் இருந்ததாகவும், தற்போது ஒரு திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்திருப்பதாகவும், ஆனால் அந்தப் படத்தை வெளியிடவிடாமல் பயமுறுத்தப் படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். இவர் யார் என்றால் சசிகலாவின் அக்காள் மகன். கைது செய்யப்பட்டுள்ள வெங்கடேஷ், சசிகலாவின் அண்ணன் மகன். சிறையில் வெளியே வந்து இந்த அரசைக் குற்றஞ்சாட்டிப் பேட்டி அளித்திருப்பவரோ, சசிகலாவின் கணவர். ஆனால் இந்த நிலையில் முதலமைச்சர் ஜெயலலிதாவோடு நேற்றையதினம் திருவரங்கம் கோவிலுக்கு உடன் சென்றிருப்பவர் யார் என்றால் சாட்சாத் சசிகலாதான்! இதையெல்லாம் பார்ப்பவர் களுக்கு இந்த நாட்டில் என்னதான் நடக்கிறது? நினைத்தால் கைது, நினைத்தால் விடுதலை என்றால் ஏதாவது சட்ட விதி முறைப்படி நடவடிக்கைகள் நடக்கிறதா? யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்றால், அதைப்பற்றியெல்லாம் விமர்சிக்க வேண்டிய பத்திரிகைகளோ தங்களுக்கு முழுப் பக்க விளம்பரங்கள் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தோடு வாய் மூடி மௌனியாகக் கிடக்கிறார்கள். ஏன், ஒரு சில கட்சிகளே, அதே நினைப்போடுதான் செயல்படுகின்றன.

இந்த மே மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டில் நடைபெற்ற கொலைகள், அதுவும் ஏடுகளில் வெளிவந்த கொலைகள் மாத்திரம் எத்தனை தெரியுமா?

குடியாத்தத்தில் நகைக்கடை ஊழியர் கொலை - ஒன்றரை லட்சம் ரூபாய் கொள்ளை.

பனப்பாக்கத்தில் தந்தையை அடித்துக் கொன்ற மகன்.

கூடுவாஞ்சேரி அருகே வாலிபர் சுபாஷ் ஓட ஓட விரட்டி வெட்டிக் கொலை.

கொடுங்கையூரில் ஆட்டோ டிரைவர் சரவணன் வெட்டிக் கொலை.

சென்னை புதுப்பேட்டையில் வேன் டிரைவர் ரமேஷ் கொலை.

சோழவரம் அருகே தலை துண்டித்து வாலிபர் கொலை.

திருப்பெரும்புதூர் அருகே புரட்சி பாரதம் கட்சிப் பிரமுகர் ராமு கழுத்தை அறுத்துக் கொலை.

தாராபுரத்தில் காதல் மனைவியைக் கொன்ற வாலிபர் ரமேஷ்.

ஜெயங்கொண்டம் அருகே மகளின் கள்ளக்காதலன் பழனிச்சாமி கொலை.

திருப்பூரில் மின்சாரம் பாய்ச்சி மனைவி செல்வி கொலை

செங்குன்றம் அருகே வாலிபர் எரித்துக் கொலை.

கூடுவாஞ்சேரி அருகே கட்டிடத் தொழிலாளி சம்பத் அடித்துக் கொலை.

பூவிருந்தவல்லி அருகே கழுத்தை இறுக்கி வாலிபர் கொலை.

கோடம்பாக்கத்தில் லட்சுமி என்ற பெண் கொலை. சென்னை ஆதம்பாக்கத்தில் டிராவல்ஸ் நடத்திய பெண் உஷாராணி கொலை.

புது வண்ணாரப்பேட்டையில் ரவுடி சுரேஷ் வெட்டிக் கொலை.

மாதவரம் போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்ற வியாபாரி கோபால் அடித்துக் கொலை.

கடையநல்லூர் அருகே மாணவர் மதன் வகுப்பறையில் கொலை.

சென்னை அருகே தி.மு.க. பஞ்சாயத்துத் தலைவர் பாலு குண்டு வீசிக் கொலை.

வானூர் அருகே அ.திமு.க. பிரமுகர் மூர்த்தி அடித்துக் கொலை.

பூவிருந்தவல்லி அருகே குடிபோதையில் மனைவியை அடித்துக் கொன்ற கணவர்.

சங்கராபுரம் மாஜி சேர்மன் மர்ம கும்பலால் வெட்டிக் கொலை.

சங்கராபுரத்தில் தி.மு.க. செயலாளர் முனுசாமி வெட்டிக் கொலை.

தண்டையார்பேட்டையில் துண்டு துண்டாக வெட்டி வாலிபர் படுகொலை.

குரோம்பேட்டை அருகே வீட்டுக்குள் கட்டிப் போட்டு முன்னாள் கவுன்சிலர் குப்புசாமி படுகொலை.

வளசரவாக்கத்தில் சொத்துத் தகராறில் தந்தை பரமசிவம் கொலை.

ராஜபாளையத்தில் ஒன்றரைக் கோடி ரூபாய்க்காகத் தொழில் அதிபர் மகன் பிரேம் குமார் கொன்று புதைப்பு.

அரியலூரில் இரண்டு வயது குழந்தை கடத்திக் கொலை.

புரசைவாக்கத்தில் மதுக்கடை பார் முன்பு வாலிபர் படுகொலை

கொருக்குப்பேட்டையில் புது மாப்பிள்ளை கமல்ராஜ் வெட்டிப் படுகொலை.

நாகர்கோவிலில் திருமணம் செய்த பெண் மாமனாருடன் வெட்டிக் கொலை.

சோழவரம் அருகே மது குடிக்கும் தகராறில் பெயிண்டர் விமல்பிரபு படுகொலை.

செங்குன்றம் அருகே பரோலில் வந்த கைதி முத்துபிரகாஷ் வெட்டிக் கொலை.

பல்லடம் அருகே மணி என்பவர் சாமாரி வெட்டிக் கொலை. செம்மஞ்சேரியில் வாலிபர் சுரேஷ் கொலை.

சோழிங்கநல்லூர் அருகே பூட்டிய வீட்டில் பெயிண்டர் சுரேஷ் பிணம்.

சங்கராபுரம் அருகே விடுதலைச் சிறுத்தைப் பிரமுகர் விசுவநாதன் வெட்டிக் கொலை.

மறைமலைநகர் அருகே நள்ளிரவில் வாலிபர் முருகன் வெட்டிக் கொலை.

அருப்புக்கோட்டையில் சொக்கலிங்கம் குத்திக் கொலை

சேரன்மகாதேவியில் தொழிலாளி இசக்கி முத்து பாண்டியன் படுகொலை.

சேலையூர் அருகே ஆட்டோ டிரைவர் ராஜேஷ் தலையில் அம்மிக்கல்லைப் போட்டுக் கொலை..

ராணிப்பேட்டை அருகே சிலோன் போகன் படுகொலை.

சேலம் ரியல் எஸ்டேட் அதிபர் ரங்கநாதன் துண்டு துண்டாக வெட்டிக் கொலை

சென்னையில் மாநகராட்சி ஊழியர் வீர கொலை.

சென்னையில் டெய்லர் முனியாண்டி படுகொலை.

செங்கோட்டை அருகே அதிமுக நிர்வாகி முத்தையா வெட்டிக் கொலை

வேலூர் காவல் நிலையம் அருகே இளம்பெண் வெட்டிக் கொலை.

சென்னையில் பழ வியாபாரி மணி வெட்டிக் கொலை

சூளையில் வியாபாரம் செய்தபோது வேலு வெட்டிக் கொலை.

வியாசர்பாடியில் பெண் தகராறில் வாலியர் ராஜா படுகொலை.

வானூர் கோயில் திருவிழாத் தகராறில் தே.மு.தி.க. பிரமுகர் பாஸ்கர் வெட்டிக் கொலை..

ஒரே மாதத்தில் கொலைகள் - அதிமுக ஆட்சியில் இரண்டாண்டு சாதனைப் பட்டியல்களில் இவைகளையெல்லாம் சேர்க்கலாமே? மனச்சாட்சி இல்லாத பத்திரிகைக்காரர்கள் இதற்கும் மௌனம் சாதிக்கலாமோ?

அன்புள்ள,

மு.க.

01-06-2013

3765. உழைப்பேன்;
உழைத்துக் கொண்டே இருப்பேன்!

உடன்பிறப்பே,

என்னுடைய 90ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவினை எந்த ஆண்டும் இல்லாத வகையில் மிகவும் சீரோடும் சிறப்போடும் உடன்பிறப்புகள் அனைவரும் ஒன்றிணைந்து நடத்தியிருக்கிறீர்கள். இரண்டு மூன்று நாட்களாக நான் சரியாகத் தூங்கவில்லை. என் வீட்டாரும் திரும்பத் திரும்ப அதுபற்றிக் கேட்டார்கள். இரண்டு மூன்று நாட்களாக என்னுடன் காலையிலும் மாலையிலும் பக்கத்திலே இருக்கின்ற பாசம் மிகுந்த என் தம்பிமார்கள் சிலர்கூட "என்ன அண்ணே, தூக்கம் வரவில்லையா" என்றார்கள்! தூக்கம் வராததற்குக் காரணம் எனக்குத்தான் தெரியும்; ஆம்; வேறொன்றுமில்லை. தமிழ் மக்கள் என்னிடம் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் எல்லையில்லாத அன்போடு இருக்கிறார்களே? எங்கோ ஒரு கிராமத்தில், அதுவும் மிக மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவன் ஆயிற்றே? என் உயிர் மாறன்தான் எங்கள் குடும்பத்திலேயே முதல் பட்டதாரி! அதுவரை யாரும் எங்கள் குடும்பத்தில் பட்டதாரி கிடையாது! எங்கள் குடும்பத்திற்கு என்று எந்தப் பெருமையும் கிடையாது. ஆனால் ஐந்து முறை முதல் அமைச்சராக இருந்துவிட்டேன். 12 முறை சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு ஒரு முறைகூட தோல்வியடையாமல், தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, 1969ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்துவருகிறேன். தமிழ்நாட்டில் ஏழு கோடி மக்கள் இருப்பதாக அண்மையில் ஏடுகள் தெரிவித்திருந்தன. இந்த ஏழு கோடி மக்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு என்னை எதிரியாகக்

கருதக்கூடிய வர்கள் ஒரு சிலர் இருக்கலாமே தவிர, மற்றவர்கள் எல்லாம் என்பால் அன்புதான் காட்டியிருக்கிறார்கள். ஒரு சில காலம் என்னை எதிர்த்தவர்கள்கூட, பின்னர் என்னிடம் அன்பு காட்டியிருக்கிறார்கள். ஏன் என்ன காரணம்? எனக்கென்று உள்ள பெருமைதான் எது? உழைப்பு ஒன்றுதான். சிறு வயது முதல் இடைவிடாமல் உழைத்திருக்கிறேன். கூட்டங்களில் பேசியிருக்கிறேன். எழுதியிருக்கிறேன்.

எழுதியிருக்கிறேன், பேசியிருக்கிறேன் என்றால் சும்மாவா? என்னுடைய சுயசரிதையும், அதோடு இணைந்த கழகத்தின் வரலாற்றையும் "நெஞ்சுக்கு நீதி" என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதியிருக்கிறேன். இதுவரை ஐந்து பாகங்கள் நூல்களாக "நெஞ்சுக்கு நீதி" வெளிவந்துவிட்டது. ஆறாவது பாகமும் "முரசொலி"யில் வாரந்தோறும் தொடராக எழுதிவிட்டேன். இன்னும் அது நூலாக வெளிவரவில்லை. இந்த ஆறு பாகத்தில் 1924ஆம் ஆண்டு நான் பிறந்தது முதல் 2002ஆம் ஆண்டு வரை நடைபெற்ற நிகழ்வுகளைத்தான் எழுதியிருக்கிறேன். இந்த ஆறு பாகங்களும் மட்டும் எத்தனை பக்கங்கள் தெரியுமா? 4,616 பக்கங்கள். ஆம், இந்த ஒரு நூல் மட்டுமே 6 பாகங்கள், 4,616 பக்கங்கள்.

அதுபோலவே தமிழகச் சட்டப்பேரவையில் நான் ஆற்றிய முக்கிய உரைகள் இதுவரை 12 பாகங்கள் வெளிவந்துள்ளன. அது எத்தனை பக்கங்கள் தெரியுமா? 6,077 பக்கங்கள். இதுதவிர நான் எழுதிய கவிதைகளை எல்லாம் தொகுத்து "கவிதை மழை" என்ற தலைப்பில் 1,107 பக்கங்கள்! தற்போது வெளியிடப்பட்ட "சிறுகதைப் பூங்கா" 670 பக்கங்கள்! ரோமாபுரிப் பாண்டியன், சரித்திர நாவல், 705 பக்கங்கள்! தென்பாண்டிச் சிங்கம் 453 பக்கங்கள்! முத்துக்குளியல் இரண்டு பாகங்களும் சேர்ந்து 1,062 பக்கங்கள்! புதையல் 380 பக்கங்கள்! சங்கத் தமிழ் 484 பக்கங்கள்! பொன்னர் சங்கர் 543 பக்கங்கள்! குறளோவியம் 648 பக்கங்கள்! குறள் உரை 285 பக்கங்கள்! தொல்காப்பிய பூங்கா (இதுவரை 14 பதிப்புகள் வெளிவந்துள்ளன) 551 பக்கங்கள்! நான் பேசி, எழுதி அச்சில் மட்டும் வந்திருப்பது மொத்தம் எத்தனை பக்கங்கள் தெரியுமா? 17,082 பக்கங்கள்! எனக்கே மலைப் பாகவும், பிரமிப்பாகவும் இருக்கிறது - இத்தனை பக்கங்களை

எழுதியிருக்கிறோமா என்று! இது மட்டுமல்ல; சிறு சிறு நூல்கள் வடிவில் 100க்கு மேற்பட்ட புத்தகங்கள் நான் எழுதியவை வெளி வந்திருக்கின்றன. இதுதவிர, நான் "முரசொலி"யில் எழுதிய கடிதங்கள் 12 பாகங்கள் வெளிவந்துள்ளன. கல்வி நிலையங்களில் நான் ஆற்றிய உரைகளைத் தொகுத்து தம்பி இள.புகழேந்தி ஒரு பெரிய நூலாக வெளியிட்டுள்ளார்.

எழுதியது மாத்திரமல்ல; என்னுடைய இந்த 90 வயதில் தமிழகத்திலே உள்ள பெரு நகரங்களில், சிறு நகரங்களில், கிராமங்களில் நான் பேசாத இடம் எதுவுமே கிடையாது. வெளியூர்களிலும், நான் வெளியூர் செல்லும்போது சாலையோரங்களிலும், சென்னையிலும், மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், ஏன் என்னுடைய இல்ல வாயிலிலும் என்று நான் நடத்திவைத்த திருமணங்கள் மட்டும் சுமார் 20 ஆயிரத்தைத் தொடும்!

இது மாத்திரமல்ல; தமிழ்நாட்டு அரசியலில், மாநில கட்சிகளில் ஒன்றின் தலைவராக இருந்தபோதிலும், என்னை அறிந்துகொள்ளாத அகில இந்தியத் தலைவர்கள் இல்லை என்ற அளவிற்குப் பழகியிருக்கிறேன். இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்த காலந்தொட்டு, அதற்குப் பிறகு வந்த அனைத்துப் பிரதமர்களும் என்னுடன் அன்புடனே பழகியிருக்கிறார்கள். யாரும் என்னிடம் வெறுப்பு காட்டுகின்ற அளவிற்கு நான் நடந்துகொண்டதில்லை. பிரதமர்கள் மாத்திரமல்ல, மத்திய அமைச்சர்கள் மாத்திரமல்ல, மத்தியில் எதிர்க்கட்சி வரிசையில் இடம்பெற்ற அத்தனை தலைவர்களும் என்னை மதித்தே பாராட்டியிருக்கிறார்கள். ஏன், இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள தலைவர்களும் என்னை நன்கறிவார்கள்.

முதுகில் மிகப் பெரிய வலி வந்து, அதற்காக அறுவை சிகிச்சை செய்துகொண்டு, தற்போது நடக்க முடியாத நிலையில் சக்கர வண்டியில் பயணம் மேற்கொள்கிற போதும், நான் என்னுடைய பணிகள் எதையும் நிறுத்தி விடவும் இல்லை; ஒத்திப் போடவும் இல்லை. கூட்டங்களுக்குச் செல்லாமல் இல்லை, எழுதாமல் இருப்பதில்லை. என்னுடைய அரசியல் பணிகளுக்கிடையே கலைத்

துறையிலும் ஈடுபட்டு இதுவரை சுமார் 75 திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதி, அவற்றில் பெரும்பாலானவை வெற்றிகரமாக ஓடியுள்ளன என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நான் எழுதிய உரையாடல்கள், தமிழகத்திலே உள்ள பலரால் மனப்பாடம் செய்யப்பட்டதும், உரையாடல்கள் முதன் முதலாக நூல் வடிவில் வெளிவந்ததும் உண்டு. இத்தனைக்குப் பிறகும் நான் அகம்பாவம் கொண்டதில்லை. யாரையும் அலட்சியமாக நடத்தியதுமில்லை. எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசியதில்லை.

இப்படிப்பட்ட எனக்குத்தான் 90ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா. பிறந்த நாள் 3ஆம் தேதிதான் என்றாலும், 1ஆம் தேதியன்றே 90 கவிஞர்களை அழைத்து உங்களைக் கௌரவிக்கப்போகிறேன் என்று தம்பி கவிப்பேரரசு வைரமுத்து ஒரு மாதத்திற்கு முன்பே என்னிடம் ஒப்புதல் பெற்றுவிட்டார். அந்த நிகழ்ச்சியை மிக அருமையாக ஏற்பாடு செய்திருந்தார். ஒவ்வொன்றையும் அவரே நேரடியாகச் சரிபார்த்து நடத்தினார். தமிழகக் கவிஞர்கள் 90 பேரை அங்கே கொண்டு வந்து குவித்துவிட்டார். மூத்த கவிஞர்கள் குலோத்துங்கன் என்ற வா.செ. குழந்தைசாமி, கவிக்கோ அப்துல் ரகுமான், காவியக் கவிஞர் வாலி, கல்யாண்ஜி, மனுஷ்யபுத்திரன், கவிதைப்பித்தன், வா.மு.சேதுராமன், கனிமொழி, பா.விஜய், இளைய பாரதி, பழனிபாரதி, சல்மா, கலாப் பிரியா, ஆண்டாள் பிரியதர்ஷினி, க்ருஷாஞ்கிணி என்று 90 கவிஞர்கள் அங்கே ஒவ்வொருவராக என்னிடம் வந்து பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்கள்.

1ஆம் தேதியன்று காலையிலே மகளிர் அணியின் சார்பில் சகோதரி நூர்ஜகான் பேகம் தலைமையில் பிறந்த நாள் விழா கருத்தரங்கம். நூர்ஜகான் பேகம் இன்றைக்கு மகளிர் அணியின் தலைவராக இருந்தபோதிலும், அந்தக் காலம் தொட்டு நான் புகைவண்டியில் மதுரைக்குச் செல்கிறேன் என்றால், திண்டுக்கல் புகைவண்டி நிலையத்தில் இருபது மகளிரோடு கூடி நின்றுகொண்டு, “கலைஞர் வாழ்க” என்ற குரலை அந்தப் புகைவண்டி நிலையம் முழுவதும் கேட்கக்கூடிய அளவிற்கு எதிரொலிக்கும் நாள் முதல் நான் அறிவேன். பாசக்காரத் தங்கை! அந்தக் கருத்தரங்கில் தம்பி துரைமுருகன், நாடாளுமன்ற கழகக்

குழுத் தலைவர் தம்பி டி.ஆர். பாலு, மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, தம்பி கம்பம் செல்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு அருமையாக உரையாற்றினர்.

ஜூன் 2ஆம் தேதியன்று நான் எழுதிய "நெஞ்சுக்கு நீதி"யின் 5ஆம் பாகம் நூலும், "சிறுகதைப் பூங்கா" நூலும் வெளியீட்டு விழா. ஒவ்வொரு ஆண்டு எனது பிறந்தநாள் விழாவிலும் முன்னின்று பங்கேற்றுச் சிறப்பிக்கும் பொதுச் செயலாளர் பேராசிரியர், உடல் நலமின்றி இருப்பதால் நான் 2ஆம் தேதி மாலையில் இந்த நிகழ்ச்சிக்குச் செல்வதற்கு முன்பு அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். இந்த விழாவில் நீதியரசர் மோகன் தலைமை தாங்கி, நூல்களை வெளியிட்டு என்மீது அவருக்குள்ள பாசத்தை அங்கே குற்றால அருவியெனக் கொட்டினார். முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட நமது முனைவர் நன்னன் அவர்களோ உரிமையுடனும், உணர்வுடனும் கருத்துகளைப் பொழிந்தார். கவிப்பேரரசு வைரமுத்து அவர்களோ, அந்த நூல்களின் பெருமையை அவருக்கே உள்ள சிறப்போடு வியந்து போற்றினார். மனுஷ்யபுத்திரன் அவர்களின் கருத்தினை நான் ஏடுகளின் வாயிலாகவும், தொலைக்காட்சிகளின் வாயிலாகவும் தான் கேட்டிருக்கிறேன் என்ற போதிலும், நேரில் அன்றுதான் கேட்டேன். ஓர் ஆழமான ஆய்வுரையை நீண்ட நாள் சிந்தித்துக் கட்டுரையாக யாத்து, அதனைப் படித்துக் காட்டுவது போல, எந்தக் குறிப்பும் கையிலே இல்லாமல் அங்கே தொகுத்தளித்தார். வரவேற்புரை ஆற்றிய தம்பி துரைமுருகனோ, என் தம்பி என்பதை மீண்டும் ஒரு முறை அனைவரும் எழுச்சிகொள்ளும்வண்ணம் அங்கே நிரூபித்துக் காட்டினார்.

ஜூன் 3; அன்று காலை 5 மணி முதல் அன்றிரவு 12 மணியளவில் படுக்கச் செல்கின்ற வரையில் தமிழ் மக்கள் என் மீது பெய்த அன்பு மழை இருக்கிறதே; அதற்கு நான் என்ன கைமாறு எப்படிச் செய்யப் போகிறேன்? அண்ணா அறிவாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும்தான் பிறந்த நாளில் கழகத் தோழர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் இந்த ஆண்டு எப்படி இவ்வளவு கூட்டம்? அண்ணா அறிவாலயத்திற்குள் நுழையும் கண்ணாடிக் கதவு தூள்தூளாகி விட்டது. முதல் நாள் இரவு அறிவாலய நண்பர்கள், கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கிறோம்

என்று அழகாக "சாரம்" கட்டி வைத்திருந்தார்கள். அத்தனையும் மறுநாள் காலையில் மக்கள் கூட்டத்திற்கிடையே முறிந்து விட்டது. இடையில் ஒரு முறை கூட்டத்தினர் என் மீது சாய்ந்து விடக்கூடிய நிலை ஏற்படுமோ என்ற அச்சத்தில் பக்கத்தில் இருந்த அறைக்குள் அவசர அவசரமாகச் சென்று விட்டோம்!

ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்திலே தான் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்! வேறு இடங்களிலே நடத்தினால் காவல் துறையினரிடம் அனுமதி பெறுவதில் சிக்கல் என்பதால் அங்கே கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மிகப் பெரிய திடல். அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி ஜெ. அன்பழகன் பற்றியும், அவரது தலைமையில் பணியாற்றிய கழக உடன்பிறப்புக்களைப் பற்றியும் நான் அவசியம் குறிப்பிட வேண்டும். அந்தப் பொதுக் கூட்டத்திலேயே குறிப்பிட வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அண்ணா அறிவாலயத்தையே அப்படியே பெயர்த்து எடுத்து அங்கே கொண்டு போய் நிறுத்திவிட்டார்களோ என்று ஆச்சரியம் கொள்கின்ற அளவிற்குச் செய்திருந்தார்கள். தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளருக்கு என் மீது அப்படி ஒரு "பக்தி"! கடந்த ஆண்டு என்னுடைய பிறந்த நாள் விழா கூட்டத்தை ஏற்பாடு செய்தபோது, கோபாலபுரத்தில் என் இல்லத்திலே நான் அமர்ந்து உரையாற்றுவதைப் போலவே ஏற்பாடு செய்திருந்தார். வெளியூர்களில் தொலைக்காட்சி மூலமாக அந்த மேடையைப் பார்த்தவர்கள், கோபாலபுரத்தில் வீட்டில் இருந்தவாறே நான் பேசுவதைப் போல உணர்ந்தார்கள். ஜெ. அன்பழகனின் தந்தை பழக்கடை ஜெயராமன், இப்படித்தான் மேடைகளைப் புதுமை குலுங்க நிர்மாணிப்பார். ஒரு முறை பழங்களைக் கொண்டே மேடையை நிர்மாணித்திருந்தார். அவருடைய செல்வன் ஜெ. அன்பழகன் தந்தையை மிஞ்சும் மகனாக இந்தப் பொதுக் கூட்ட மேடையை நிர்மாணித்து விட்டார். அறிவாலயத்திற்குள் எப்படி அறைகள் இருக்குமோ, அதுபோலவே இங்கேயும் அறைகளை அசலைப் போலவே அமைத்து, என்னுடைய அறையிலே அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த தலைவர்களையெல்லாம் அழைத்து வந்து காட்டினார். அண்ணா அறிவாலய வாசலில் இருப்பதைப் போலவே அண்ணா சிலை ஒன்றையே அங்கே

கொண்டு வந்து வைத்திருந்தார். உயரமாக மேடை அமைத்து, அங்கே கூடியிருந்த மக்களை அல்ல, மக்கள் கடலைத்தான் நாங்கள் பார்த்தோம்.

வீட்டில் இருந்து கிளம்பி, பொதுக்கூட்ட மேடைக்கு ஒரு கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கும். அந்தத் தூரத்தில், வரும் வழியில் ஒன்பது இடத்தில் வரவேற்பு என்ற பெயரால், ஒவ்வொரு பகுதிக் கழகத்தின் தலைமையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மாலை 6.30 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் இரவு 8 மணிக்குத் தான் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தை, அல்ல அல்ல, அங்கே உருவாக்கப்பட்டிருந்த புதிய அண்ணா அறிவாலயத்தை அடைய முடிந்தது. விழா ஏற்பாடுகளையும், அண்ணா அறிவாலய ஏற்பாடுகளையும் கட்டுக்கோப்பாக செய்துமுடித்த கழகப் பொருளாளர் தம்பி தளபதி; அண்ணா அவர்கள் இருந்தபோது நிகழ்ச்சிகளை ஏற்பாடுகளைச் செய்த என்னைத்தான் நினைவூட்டினார்.

பொதுக்கூட்ட மேடையில் தமிழர் தலைவர், திராவிடர் கழகத் தலைவர், என்னுடைய அருமை இளவல் வீரமணியார், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் தம்பி தொல். திருமாவளவன், பேராசிரியர் காதர்மொய்தீன், அருளாளர் ஆர்.எம்.வீ., பேராசிரியர் தம்பி சுப.வீரபாண்டியன் ஆகியோரும் என்னை வாழ்த்தியும், பாராட்டியும் பேசிய கருத்துக்கள் என் காதுகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையே 2ஆம் தேதியன்று இளைஞர் அணியின் சார்பாக, முன்னாள் மேயர் தம்பி மா. சுப்பிரமணியம், "காமராஜர் அரங்கத்தில்" முத்தமிழ்க் கருத்தரங்கம் ஒன்றினைக் கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், திண்டுக்கல் லியோனி, வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோரைக் கொண்டு மிகச்சிறப்பாக நடத்தினார். பேசியவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கே உரிய சிறப்போடு மற்றவர்களை வெல்லுகின்ற அளவில் பேசினார்கள். மா. சுப்பிரமணியம் தொடர்ந்து பல நாட்களுக்கு நகரின் பல்வேறு பகுதிகளில் என்னுடைய பிறந்த நாளை முன்னிட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் ஏற்பாடு செய்திருந்த அந்த முதல்

நிகழ்ச்சியே, முழு நிகழ்ச்சியாக, முத்தாய்ப்பு நிகழ்ச்சியாகக் காமராஜர் அரங்கத்தில் நடைபெற்றது.

விழாக்கள் இன்னும் முடிந்தபாடில்லை. மாவட்டங்கள் எல்லாம் 100 நிகழ்ச்சிகள் என்றும், மாதம் முழுவதும் நிகழ்ச்சிகள் என்றும், தொடர் நிகழ்ச்சிகள் என்றும் போட்டிபோட்டுக் கொண்டு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்பதுதான் இரண்டு மூன்று நாட்களாக என்னைத் தூங்க விடாமல் என் மனதிற்குள் எழுகின்ற கேள்வியாகும். இந்த அளவிற்கு என்னிடம் பாசத்தையும், அன்பையும் கொட்டுகிறார்களே, இவர்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? என் மனதாலும் செயலாலும் தொடர்ந்து உழைப்பேன், உழைப்பேன், தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பேன்!

அன்புள்ள,

மு.க.

6-6-2013

3766. இந்திய அரசு இனியும் தூங்குவதா?

உடன்பிறப்பே,

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் வேட்டையாடப்படுவது என்பது நின்றபாடில்லை! தமிழக அரசின் சார்பிலும், தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகளின் சார்பிலும் எத்தனையோ முறை மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தும், ஏன் ஒருசில நேரங்களில் மத்திய அரசு இதைப் பற்றி இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதிலும், இலங்கைக் கடற்படை அதைக் காதிலே போட்டுக்கொள்வதே இல்லை.

ஆண்டுதோறும் கடலில் மீன் இனப் பெருக்கத்துக்காக 45 நாட்கள் மீன் பிடிக்க விசைப்படகுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கி, கடந்த 1ந்தேதி முதல் மீனவர்கள் மகிழ்ச்சியுடன் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லத் தொடங்கினர். பொதுவாக விசைப்படகு மீனவர்கள் ஒருநாள் விட்டு ஒரு நாள்தான் முறை வைத்து மீன் பிடிக்கச் செல்வது வழக்கம். அந்த வகையில் ஜூன் 1ஆம்தேதியன்றும், 3ஆம் தேதியன்றும் மீன் பிடிக்கச் சென்ற போது அதிக அளவில் மீன்கள் கிடைத்ததாகவும், இலங்கைக் கடற்படையினரின் அச்சுறுத்தல் எதுவுமின்றி மீன் பிடித்து வந்ததாகவும் மீனவர்கள் மகிழ்ச்சியுடன் கூறினார்கள். ஆனால் ராமேஸ்வரத்திலிருந்து 5-6-2013 அன்று 600க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 2,400க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். மதியம் சுமார் 3 மணியளவில், நெடுந்தீவு அருகில் இவர்களில் ஒரு பிரிவினர் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கே வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைச் சுற்றி வளைத்தனர்.

இந்திய கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடித்ததாகச் சாக்கிட்டு, ஐந்து படகுகளையும், அவற்றில் இருந்த அருள்சீலன்,

மரியஅஸ்ரின், வில்வத்துரை, ராமகிருஷ்ணன், வசந்தகுமார், பூப்பாண்டி, வடிவேல், லூர்து, அயோடின், முனீஸ்குமார், காத்தணன், செல்வன், ஜெயராமன், பாண்டி, மதியழகன், தாசன், ஸ்டீபன்ராஜ், காளிமுத்து, பாக்கியராஜ், செசத்தை, பாபு, ராயப்பன், கண்ணன், ஜோசப், ஆகிய 24 மீனவர்களையும் மடக்கிப் பிடித்திருக்கிறார்கள். பின்னர் விசாரணைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை வருகிற 20ஆம் தேதிவரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார். அனுராதபுரம் சிறையில் இவர்கள் இப்போது அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிர்ச்சியிலிருந்து ராமேஸ்வரம் மீனவர்கள் மீளாமல் இருக்கின்ற நிலையில், நேற்றையதினம் (6-6-2013) கிடைத்த செய்திப்படி, கச்சத் தீவு பகுதியில் ரோந்து கப்பல்களுடன் முகாமிட்டுள்ள இலங்கைக் கடற்படையினர் மேலும் ஸ்ரீதர், அன்றன், கிரீன்சன், ராயப்பன், மற்றொரு ராயப்பன், ராஜதுரை, முருகானந்தம், பெவினேஷ், சித்திரைப்பாண்டி, காமாட்சி உட்பட 25 தமிழக மீனவர்களை சிறை பிடித்து, தங்கள் கப்பலுடன் படகுகளை இணைத்து இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இந்த 25 மீனவர்கள் யாழ்ப்பாணம் ஊர்க்காவல்படை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, ஜூன் 19ஆம் தேதி வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டு, யாழ் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கைது செய்த 49 மீனவர்களை அன்னியில், அந்தப் பகுதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த மற்ற மீனவர்களையும் துப்பாக்கி முனையில் அடித்து விரட்டியிருக்கிறார்கள். இதன் காரணமாக 2 படகுகள் பாறையின் மீது மோதி விபத்திற்குள்ளானதாகவும், படகிலே இருந்த மீனவர் முனியசாமி கடலில் விழுந்து உயிரிழந்து விட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன.

இந்தச் சம்பவம் பற்றி மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜ் கூறும்போது, கடந்த 700 ஆண்டு காலமாக மன்னார் கடலில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்து வருவதாகவும், ஆனால் கடந்த 30 ஆண்டுகாலமாகத்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள்

ஏற்படுவதாகவும், இதற்கு இந்திய அரசும், இலங்கை அரசும் ஒரு சுமூகமான தீர்வினை ஏற்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த 49 மீனவர்கள் தவிர நேற்று முன் தினம், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவருக்குச் சொந்தமான படகில் சென்ற மீனவர்கள் போஸ், பாபு, ரீகன் ஆகிய மூன்று மீனவர்களையும் இலங்கை கடலோர காவல்படை போலீசார் சிறை பிடித்திருக்கிறார்கள். அவர்களைத் தங்களது ரோந்துப் படகில் வைத்தே விசாரித்துக் கடுமையாக மிரட்டியிருக்கிறார்கள். சுமார் பத்து மணி நேரம் அவர்களைத் தங்கள் படகிலேயே போலீசார் வைத்திருந்து பின்னர் இந்த மூவரையும் விடுவித்திருக்கிறார்கள்.

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 49 மீனவர்களையும் விடுதலை செய்யாவிட்டால், இலங்கை நோக்கி ஜூன் 22ந்தேதி அனைத்து விசைப் படகுகளிலும் வெள்ளைக் கொடி கட்டியபடி பேரணி நடத்துவோம் என்ற அறப்போராட்ட அறிவிப்பினை ராமேஸ்வரம் மீனவர்கள் தற்போது வெளியிட்டிருக்கிறார்கள்.

மேலும் குமரி மாவட்டம், குளச்சலைச் சேர்ந்த ஜெயசீலன், ஆரோக்கியபுரத்தைச் சேர்ந்த ஆண்டனி சுரேஷ் உட்பட 11 மீனவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் தேதி சவூதி அரேபியா கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, ஈரான் கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்டு, அங்கேயுள்ள பந்தரா அப்பாஸ் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பல முறை கோரிக்கை விடுத்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களோ இதுபோன்ற பிரச்சினைகளுக்குப் பிரதமருக்கு உடனடியாகக் கடிதம் எழுதுவதோடு தன்னுடைய கடமை முடிந்தது என்ற போக்கில் செயல்பட்டு வருகிறார். இந்த முறையும் நேற்றையதினம் இந்தச் செய்தி வந்ததும், 49 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கடிதம்

எழுதிவிட்டு, அவசர அவசரமாக அந்தக் கடிதத்தை அனைத்து ஏடுகளிலும் வெளிவரச் செய்துவிட்டார். உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் முதல் அமைச்சரின் உரை யாரோ ஒரு அமைச்சரால் படிக்கப்பட்டு, ஏடுகளுக்கெல்லாம் தரப்பட்டுள்ளது. அதில் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்தும் கண்மூடித்தனமான கொலைவெறி தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்துப் பிரதமருக்குத் தமிழக முதலமைச்சர் பல கடிதங்கள் எழுதியிருப்பதாகவும், ஆனால் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும், தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்வதும், தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மீனவர் சமுதாயத்தை ஆத்திரமடையச் செய்துள்ளதாகவும், கச்சத் தீவை மீட்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் இதே முதலமைச்சர் ஜெயலலிதா 15-8-1991 அன்று விடுதலை நாள் விழாவில், "கச்சத் தீவினை மீட்டே தீருவேன்" என்று கோட்டை கொத்தளத்திலே இருந்து கொடியேற்றிவிட்டுப் பேசும்போது சவால் விட்டார். அதன் பின்னர், 20-4-1992 அன்று, "கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்றார்.

30-9-1994 அன்று பிரதமருக்கு ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், "இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியா கச்சத் தீவினைக் கொடுத்தது" என்று, இந்திய அரசின் நடவடிக்கைக்கு இவரே காரணம் கூறினார்.

உண்மையில் தற்போது கச்சத் தீவு அருகே இலங்கை போர்க் கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது. அதில் சீன வீரர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அச்சுறுத்துகிறார்கள். இது இந்தியாவின் இறையாண்மைக்கே விடப்பட்ட சவாலாகும். இதற்கான எதிர்ப்பு அதிகமான நிலையில், போர்க் கப்பல்களை இலங்கை அரசு அகற்றிய போதிலும் தற்போது மீண்டும் கச்சத் தீவு அருகே இலங்கை அரசு போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது. பெரிய

போர்க் கப்பல் ஒன்றும், ரோந்துக் கப்பல்கள் பத்தும் அங்கே நிறுத்தப்பட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளது. இதன் காரணமாக ராமேஸ்வரம் மீனவர்கள் மீண்டும் அச்சமடைந்திருக்கிறார்கள்.

கச்சத் தீவு பிரச்சினை இந்திய நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவில்லை என்பதால், அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அதைச் சுட்டிக்காட்டி தி.மு.க. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

தொடர்ந்து இந்திய மீனவர்கள் கடந்த பல ஆண்டுக் காலமாக இன்னலுக்கு ஆளாகி வருகிறார்கள். இந்திய அரசு இனியும் தாமதம் செய்யாமல் கடுமையாக ஒரு நடவடிக்கை எடுத்தாலன்றி, தமிழக மீனவர்கள் வாழ்வில் ஒளி தென்படப் போவதில்லை.

அன்புள்ள,

மு.க.

8-6-2013

3767. பதவிக்குத்தக்க பண்பாடு வேண்டாமா?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தில் வறட்சி தாண்டவமாடுவதை எடுத்துக்காட்டி, மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் திறந்து விடப்படுவதைப் போல இந்த ஆண்டும் திறந்து விடப்படுமா என்று கேட்டதற்கு, ஜெயலலிதா தனது பதிலில், 2011ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 6ஆம் தேதியே குறுவைச் சாகுபடிக்காக மேட்டூர் அணை திறக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார். 2011ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதிவரை தமிழகத்தில் ஆட்சி செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். அந்த ஆண்டு கர்நாடகத்தோடு கழக அரசு சுமூகமாகப் பேசி நல்லுறவுடன் இருந்த காரணத்தால், மேட்டூர் அணையும் நிரம்பியிருந்த நிலையில், பதவிக்கு வந்த இருபதே நாட்களில் மேட்டூர் அணையைத் திறந்ததைப் பற்றி, ஏதோ அவருடைய ஆட்சியின் முயற்சியால்தான் அதைச் செய்ததைப் போல ஜெயலலிதா தற்போது தற்பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கிறார். கழக ஆட்சியில் விவசாயிகள் நலன் கருதி முன்னெச்சரிக்கையோடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாகச் செய்யப்பட்ட ஒரு சாதனைக்கு ஜெயலலிதா தற்போது சொந்தம் கொண்டாட முயற்சி செய்கிறார் என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன அர்த்தம் என்பதை நடுநிலையாளர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகள்தான் உண்மையில் ஜெயலலிதா ஆட்சியில் இருக்கும் ஆண்டுகள். அந்த இரண்டு ஆண்டுகளில் மேட்டூர் அணை எப்போது திறக்கப்பட்டது என்பதை ஜெயலலிதா சொல்லியிருக்க வேண்டியதுதானே? இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் இலட்சணம் என்ன?

அம்மையார் ஆட்சிக்கு வந்தது முதல் கர்நாடக அரசும், அது எந்த அரசாக இருந்தாலும் மேட்டூர் அணைக்கு நீர் கொடுப்பதில்லை. இயற்கையும்கூட இவருக்குப் பயந்து

பதுங்கிக் கொள்வதால் மழை பெய்ய மறுக்கின்றது. ஆனால் எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை சொல்வது அல்லது இங்கேயுள்ள எதிர்க்கட்சிகளைக் குறிப்பாகத் தி.மு. கழகத்தைக் குறை சொல்வது என்பதிலேயே காலத்தைக் கழித்து விடலாம் என்று அவர் எண்ணுகிறார்.

"அ.தி.மு.க. அரசு இனியாவது விழித்துக்கொண்டு இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி உண்டா? இல்லையா? என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்" என்று நான் விடுத்த அறிக்கை கேலிக் கூத்தான, நகைப்புக்குரிய, தெளிவற்ற அறிக்கையாம்! முதலமைச்சர் சொல்லுகிறார்! ஆம், அவருடைய பதவி அவ்வாறு அவரைச் சொல்ல வைக்கிறது! டெல்டா மாவட்ட விவசாயிகளின் குழப்பத்தையும் பதற்றத்தையும் போக்கும்படி நான் விடுத்துள்ள அறிக்கையிலே என்ன கேலி இருக்கிறது? விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றும்படி நான் வலியுறுத்தியதில் என்ன தெளிவற்ற தன்மை இருக்கிறது? நான் அறிக்கை விடுகின்றவரை, அதாவது ஜூன் 12 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டிய நாள்வரை குறுவைச் சாகுபடி பற்றித் தமிழக அரசு அறிவிப்பு எதையாவது வெளியிட்டதா? நான் அறிக்கை விடுத்த பிறகுதானே, அவசர அவசரமாக ஆலோசனைக் கூட்டம்? அதற்குப் பிறகு சலுகைகள் அறிவிப்பு எல்லாம் நடைபெறுகிறது. இதற்கெல்லாம் மூல காரணம் என்னுடைய அறிக்கை அல்லவா? இதிலே என்ன நகைப்புக்கு இடம் இருக்கிறது? முதலமைச்சர் என்பதால் எப்படி வேண்டுமானாலும் அறிக்கை விடலாமா?

வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசின் சார்பில் நிதி ஒதுக்கியதையும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்த வறட்சி நிவாரணத் தொகையைத் தமிழக அரசு உடனடியாகவா அறிவித்தது? அதற்காகத் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள், விவசாயச் சங்கங்கள் எல்லாம் கொடுத்த குரல் எவ்வளவு? விவசாயிகள் நடத்திய போராட்டங்கள் எத்தனை? வெளியிட்ட அறிக்கைகள் எத்தனை? அதற்குப் பிறகுதானே மிகவும் தாமதமாக நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டது. அந்த வறட்சி நிவாரணம் வழங்குவதிலேதான் எத்தனை குளறுபடிகள்?

முதலமைச்சர் ஜெயலலிதா தன்னுடைய அமைச்சர்கள் சொல்வதையே கேட்டுக்கொண்டிராமல், சற்று இறங்கி

வந்து தமிழ்நாட்டு விவசாயிகளின் குமுறலையும், குரலையும் கொஞ்சம் காது கொடுத்து நிதானமாகக் கேட்டால் உண்மை நிலவரங்களை எளிதில் புரிந்துகொள்ள முடியும். அல்லது அவர் கொடுக்கின்ற முழு பக்க விளம்பரங்களை வெளியிட்டுப் பயனடையும் சில பத்திரிகைகளே உண்மையில் வறட்சி நிவாரணப் பங்கீடு எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பற்றி வெளியிடும் செய்திகளையாவது படிக்க வேண்டும். அல்லது ஒரு சில தொலைக்காட்சி ஊடகங்களில் பாதிக்கப்படும் விவசாயிகள் தங்கள் மனக் கொதிப்பைக் கொட்டி நேரில் பேட்டி அளிக்கிறார்களே, அதையாவது பார்த்துத்தெரிந்துகொள்ள வேண்டும். அதையெல்லாம் விட்டுவிட்டு, நான் இத்தனை கோடி ரூபாயை வறட்சி நிவாரணமாக அளித்துவிட்டேன் என்று உப்பரிகையில் உட்கார்ந்து கொண்டு பெருமை பேசிக்கொள்வதில் எந்தப் பயனும் இல்லை?

கடந்த ஆண்டு மட்டும் தமிழகத்தில் சாகுபடி பொய்த்துப் போன காரணத்தால், 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதைப் பெயர்களோடு ஏடுகள் எல்லாம் வெளியிட வில்லையா? அந்த 17 விவசாயிகளிலே கூட, அரசின் சார்பில் ஒரு சில குடும்பங்களுக்கு மட்டும் நிவாரணத் தொகையை அரசு அறிவித்துவிட்டு, மற்றவர்கள் எல்லாம் விவசாயிகளே இல்லை என்று கூறிவிடவில்லையா?

சாகுபடி செய்யாத தரிசு நிலங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படுவதாகவும், சாகுபடி செய்த நிலங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை என்றும் புகார்கள் ஏடுகளிலே வரவில்லையா? நிலத்தின் உரிமையாளரும், விவசாயம் செய்தவரும் வெவ்வேறு நபர்களாக இருப்பதால், நிவாரணத் தொகையாருக்கு வழங்குவது என்பதில் குழப்பம் நிலவுகிறது என்று வந்த செய்தியை முதலமைச்சர் பார்க்கவில்லையா? ஒரு சில இடங்களில் அறிவித்த தொகையைவிட மிகவும் குறைவாக ஏக்கருக்கு 3000 ரூபாய் மட்டுமே நிவாரணத் தொகையாகக் கொடுக்கப்படுவதாக விவசாயிகள் சொல்லுகிறார்களே, அது அரசின் காதுகளிலே விழவில்லையா? கிராம நல அதிகாரிகள், கூட்டுறவு வங்கி அதிகாரிகள் நிவாரணத் தொகையில் 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை பிடித்தம் செய்துகொள்கிறார்கள் என்று இன்னமும் சொல்லப்படுகிறதே, முதல் அமைச்சருக்கு

அது தெரியுமா? வறட்சி நிவாரணத் தொகையில் பயிர்க் கடன் வசூலிக்கக் கூடாது என்று அரசு உத்தரவிட்டபோதிலும், சில கூட்டுறவு வங்கிகளில் வறட்சி நிவாரணத் தொகை கொடுக்கும்போதே பயிர்க் கடன்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பது உண்மையா? பொய்யா? என்பதை விசாரித்துத் தெரிந்து கொள்ளட்டும்! அதையெல்லாம் விட்டுவிட்டு, "நுனிப்புல் மேய்வது" என்பார்களே, அதைப்போலப் பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்துகொள்ளாமல், என் மீது தாண்டிக் குதித்து வார்த்தைகளில் அநாகரிகத்தைக் குழைத்து அறிக்கை விடுவது என்பது அவருக்கு அழகாக இருக்கலாம்; ஆனால் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல!

"விழி இமை போல் விவசாயிகளைக் காத்து வரும் எனது தலைமையிலான அரசைப் பார்த்து "இனியாவது விழித்துக் கொண்டு" என்று கருணாநிதி கூறுவது தூங்குபவரை எழுப்பலாம், தூங்குபவரைப் போல நடிப்பவரை எழுப்ப முடியாது என்ற பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது" என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். விழி இமை போல் விவசாயிகளைக் காக்கின்றாரா? அல்லது இமையைத் திறந்து வைத்துக்கொண்டு விவசாயிகளின் விழியில் மண்ணை வாரிப் போடுகிறாரர? என்பதைத் தமிழ்நாட்டு விவசாயிகள் நன்றாகவே அறிவார்கள். "நடிப்பவரை" எழுப்ப முடியாது என்கிறார், உண்மைதான், "நடிப்பவரை" அல்லது "நடித்தவரை" எழுப்பத்தான் முடியாது!

"கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டதைக் கருணாநிதி சுட்டிக்காட்டியிருப்பது நகைப்புக்குரியதாகவும், வியப்பளிப்பதாகவும் உள்ளது" என்கிறார் ஜெயலலிதா. இதிலே என்ன நகைப்பு வேண்டியிருக்கிறது? கர்நாடகாவில் அந்த மாநில முதலமைச்சர் காவேரி பிரச்சினைக்காக உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியது பொய்யான செய்தியா? அதிலே முன்னாள் முதலமைச்சர்கள் எல்லாம் கலந்துகொண்ட புகைப்படமே ஏடுகளிலே வெளிவந்ததே? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. கே. பாலகிருஷ்ணன் அவர்களும், திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் திரு.வீரமணி அவர்களும் விடுத்த அறிக்கைகளில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைத் தமிழகத்திலே கூட்ட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்களே? இந்த

இரண்டரை ஆண்டுக் காலத்தில் எத்தனையோ முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் வந்தனவே; அவற்றில் எதற்காகவாவது தமிழக முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி கலந்தாலோசனை செய்தது உண்டா? "மெஜாரிட்டி" ஆட்சி என்பதால் எதை வேண்டுமானாலும் தன் மனம் போனபோக்கில் செய்வதா? இதுதான் மக்களாட்சிக்குக் கொடுக்கப்படும் மதிப்பா? ஜனநாயகத்தைப் போற்றிடும் அழகா?

"அரசியல் லாபத்திற்காக, சுயநலனுக்காக, குடும்ப நலனுக்காகத் தமிழக மக்கள் நலனை அடகு வைக்கக் கூடியவர், இரட்டை வேடம் போடக் கூடியவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி" - முதலமைச்சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் எனக்குச் செய்த அர்ச்சனைகள் இது! இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும், கச்சத் தீவு பிரச்சினையிலும், சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினையிலும், ஏன் காவிரிப் பிரச்சினையிலும் கூட ஜெயலலிதா போட்ட இரட்டை வேடம் பற்றித் தமிழ்நாட்டு மக்கள் அறியமாட்டார்களா என்ன?

வெலிங்டனில் இலங்கை ராணுவ வீரர்களுக்கு இந்திய அரசு பயிற்சி அளிப்பது பற்றி மத்திய அரசை நான் எதிர்க்காததற்குக் காரணம், என் மகள் கனிமொழி மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுக்காகத்தான் என்ற ஒரு அபூர்வக் கண்டுபிடிப்பையும் ஜெயலலிதா தன் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். இப்படிப் பட்ட "விநோதமான" எண்ணங்கள் எல்லாம் ஜெய லலிதாவுக்குத்தான் வரும். வெலிங்டனில் இலங்கை ராணுவ வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி நான் அறிக்கை எழுதியது இந்த மாதம் 10ஆம் தேதியாகும். அப்போது கனிமொழி மாநிலங்கள் அவை தேர்தலில் போட்டியிடுவது பற்றிய முடிவே எடுக்கப்படவில்லை. முடிவெடுத்து வேட்பு மனு தாக்கல் செய்தது 15ஆம் தேதியாகும். ஆனால் 10ஆம் தேதியன்றே காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவுக்காகத்தான் அப்படியொரு அறிக்கை விடுத்தேன் என்று திசைதிருப்பக் கூடிய வகையில் சிந்திக்கக் கூடியவர் ஜெயலலிதாவைத் தவிர வேறு யார் இருக்க முடியும்? அது மாத்திரமல்ல; அந்த அறிக்கையிலேகூட நான் மத்திய அரசை ஆதரித்து எதுவும் எழுதிடவில்லை. குறிப்பாக எனது அறிக்கை யில் "ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இருக்கின்ற உணர்வுகளைத் தி.மு. கழகம் மதிக்கின்றது. இலங்கை ராணுவ

வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உணர்வும் அதுதான். அதிலே எந்த வேறுபாடான எண்ணமும் நமக்கு இல்லை. இந்த அறிக்கை மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாக ஜெயலலிதா கூறியுள்ள குற்றச்சாட்டிற்கான பதிலே தவிர, இலங்கை ராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை நியாயப்படுத்துவதாக அர்த்தம் ஆகாது" என்று தெளிவுபடுத்தி எழுதியிருக்கிறேன். இது மத்திய அரசுக்கு ஆதரவான கருத்தா என்பதைத் தமிழ்நாட்டு மக்கள்தான் கூற வேண்டும்.

"எதற்கெடுத்தாலும் உச்ச நீதிமன்றத்திலே முறையிடுவதும், மத்திய அரசின் மீது பழிபோட்டுத் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பதும் என்ற போக்கிலே செயல்படுவதன் காரணமாக உண்மையில் பல வகையிலும் பாதிக்கப்படுவோர் தமிழ்நாட்டு விவசாயிகள் தான்" என்று நான் அறிக்கை விட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்கிறார் ஜெயலலிதா. நான் கூறியது உண்மைக்குப் புறம்பானதா என்பதையும் தமிழ்நாட்டு விவசாயிகளே தீர்மானித்துக் கொள்ளட்டும்!

காவேரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணை இவரது தலைமையிலான அரசு உச்ச நீதிமன்றத்திலே வற்புறுத்தியதன் காரணமாகத்தான் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது என்று ஜெயலலிதா திரும்பத் திரும்பக் கூறி வருகிறார். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தன்னிச்சையாக மத்திய அரசை வலியுறுத்திய காரணத்தால்தான் நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசிதழிலே வெளியிடப்பட்டதே தவிர, அதற்குத் தான்தான் காரணம் என்று ஜெயலலிதா பெருமை சேர்த்துக்கொள்ள முயற்சிப்பது தான் உண்மைக்குப் புறம்பானது.

காவேரி மேற்பார்வைக் குழுவின் கூட்டம் 12.6.2013 அன்று முடிந்தவுடன் குறுவைச் சாகுபடி குறித்த அறிவிப்பை ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசால் வெளியிடப்படும் என்பதை யூகித்துக் கொண்டு, "இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி உண்டா?" என்று நான் குதர்க்கமான, குரோதமான, முரண்பாடான அறிக்கை விட்டேனாம்! அரசு இவ்வாறு அறிக்கை வெளியிடக் கூடும் என்பதை யூகித்து, நான் முன்பே அதுபற்றி அறிக்கை வெளியிட்டிருந்தால், அது எதிர்க்கட்சியின் கடமைதானே? அதிலே என்ன குதர்க்கம்? குரோதம்? என்ன முரண்பாடு? என்ன

விதண்டாவாதம்? இந்த ஆண்டிலாவது குறுவைச் சாகுபடி செய்ய தண்ணீர் கிடைக்குமா, கிடைக்காதா என்ற குழப்ப நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள், அவர்களைக் காப்பாற்றி ஆறுதல் வழங்கிடும் வகையில் அரசின் சார்பில் அறிவுரை வழங்கப்பட வேண்டாமா என்று நான் நல்ல நோக்கத்தோடு அறிக்கை விடுத்தால்; அது குதர்க்கமா? குரோதமா?

இறுதியாக முதலமைச்சர் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஓர் உறுதி அளித்துவிட்டார். என்ன உறுதி தெரியுமா? "காவேரி நீர் பிடிப்புப் பகுதியில் மழை பெறப்பட்டவுடன் நமக்கு உரிய தண்ணீர் பெறப்படும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். மழை பெறப்பட்டவுடன் நமக்கு உரிய தண்ணீர் பெறப்படுமாம்! விவசாயிகளுக்கு எத்தகைய உறுதியை முதலமைச்சர் அளித்திருக்கிறார், பார்த்தீர்களா? நல்லவேளை, வானத்திலே மேகம் திரளட்டும், மேகம் திரண்டால் மழை வரும், மழை வந்தால் தண்ணீர் வரும் என்று விஞ்ஞான ரீதியாக விளக்கமாகவே சொல்லியிருக்கலாம்! காவிரியில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட அடுத்த நாளே காவேரியில் தண்ணீர் கரைபுரண்டோடும், டெல்டா மாவட்ட விவசாயிகள் எல்லாம் களிநடனமாடுவார்கள், முப்போகம் விளையும் என்றெல்லாம் ஊரை ஏமாற்றச் சொன்ன நம்பிக்கை வார்த்தைகள் எல்லாம் இப்போது எங்கே போய்விட்டன?

ஒட்டுமொத்தமாக முதலமைச்சரின் அறிக்கையைப் படித்தால் நமக்கு வருத்தம்தான் ஏற்படுகிறது! முதல் அமைச்சர் மீண்டும் ஒருமுறை அவருடைய அறிக்கையைப் படித்துப் பார்க்கட்டும். அப்போது தெரியும், நான் சொல்வது உண்மையா? அல்லது அம்மையாரின் அறிக்கை உண்மையா? இனியாவது காழ்ப்புணர்வைக் கைவிட்டு, குரோதத்தை ஒதுக்கிவிட்டு ஆட்சியை நடத்த முயற்சி செய்யுங்கள்! பதவிக்குத் தக்க பண்பாடு வேண்டாமா?

அன்புள்ள,

மு.க.

17-6-2013

3768. இத்தகையோர் மத்தியிலேதான்....

உடன்பிறப்பே,

"அமைச்சர் வைகைசெல்வன் மீண்டும் மீண்டும் சொதப்பல்! தேர்வில் சாதித்த மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் பெரும் குளறுபடி" என்பது ஒரு பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளிவந்த தலைப்புச் செய்தி. "முரசொலி", "தினகரன்" போன்ற நாளிதழ்களில் வெளிவந்த செய்தி அல்ல. 20-6-2013 தேதிய "தினமலர்" நாளேட்டில் முதல் பக்கத்தில்தான் இந்தச் செய்தி வந்துள்ளது.

பிளஸ் 2 மற்றும் 10ஆம் வகுப்புத் தேர்வில், தமிழை முதல் பாடமாகப் படித்து, மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்குவதுடன் அவர்களின் உயர்கல்விச் செலவையும் தமிழக அரசே பல ஆண்டுகளாக ஏற்றுவருகிறது. இதற்கான நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் அறையிலே நடைபெறும். இந்தத் தகுதி பெற்ற மாணவ, மாணவியரை தலைமைச் செயலகத்திற்கு அழைத்து வந்து, முதலமைச்சர் அறையில், அந்த மாணவர்களின் பெற்றோர்கள் முதலமைச்சரோடு புகைப்படமும் எடுத்துக்கொண்டு, அதற்குரிய பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றுச் செல்வார்கள். ஆனால் இந்த ஆண்டு இதற்காக நடைபெற்ற விழா பற்றித்தான் "தினமலர்" நாளேடு மேலே குறிப்பிட்டுள்ளவாறு தலைப்பிட்டுப் புகைப்படத்தோடு செய்தியினை வெளியிட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் கையால் இந்தப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும் எனக் கூறி மாநிலம் முழுவதிலுமிருந்து பரிசுக்குரிய மாணவர்களை, பெற்றோர்களுடன் சென்னைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். இரண்டு தேர்வுகளையும் சேர்த்து 211 மாணவர்களுக்கும் முதல்வர் பரிசு

வழங்குகிறார், அனைவரும் 19ஆம் தேதி காலை 8 மணிக்குள், சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் ஆஜராக வேண்டும் என முதன்மைக் கல்வி அதிகாரிகள் மூலம் பெற்றோருக்குக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்திருந்ததையொட்டி, அந்த மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் நெல்லை, கோவை, தூத்துக்குடி, கன்னியா குமரி போன்ற தொலைதூரத்திலிருந்து சென்னை வந்து சேர்ந்து - எப்படியோ எங்கேயோ தங்கித் தயாராகி, டி.பி.ஐ. வளாகத்திற்கு காலை 7.30 மணிக்கே வந்து விட்டார்கள். காலை 10 மணியளவில் முதல்வர் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுமென்று அதிகாரிகள் அவர்களிடம் தெரிவித்து, அதன்பின் அந்த நிகழ்ச்சி காலையில் ரத்தாகி விட்டது என்றும், மாலையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. அறிவித்தவாறு மாலையிலாவது அனைவருக்கும் அந்தப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டதா என்றால் அதுவுமில்லை.

பிளஸ் 2 தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் 13 பேர், பத்தாம் வகுப்புத் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர் 9 பேர் என 22 பேருக்கு மட்டும் பிற்பகல் 2.30 மணியளவில் முதலமைச்சர் ஜெயலலிதா பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி, புகைப்படம் எடுத்து ஏடுகளில் எல்லாம் பெரிதாக விளம்பரம் செய்து விட்டார்கள். ஆனால் பத்தாம் வகுப்புத் தேர்வில் இரண்டாம் இடம் பிடித்த 52 மாணவர்கள், மூன்றாம் இடம் பிடித்த 137 மாணவர்களுக்கு ஏற்கனவே முதலில் அறிவித்தவாறு முதலமைச்சர் தலைமைச் செயலகத்தில் பரிசுகளையோ, சான்றிதழ்களையோ வழங்கவில்லை. அவர்களுக்கெல்லாம் பள்ளிக் கல்வி அமைச்சர் வைகைசெல்வன், டி.பி.ஐ. வளாகத்தில், சான்றிதழ்களை வழங்குவார் என்று அதிகாரிகள் கூறிவிட்டார்களாம். முதலமைச்சர் கையால் பரிசுகளையும், விருதுகளையும் பெறுவதற்காகத் தொலை தூரத்திலிருந்து வருகை தந்த அந்த 189 மாணவர்களுக்கும் அறிவித்தவாறு தலைமைச் செயலகத்திலே முதல்வர்கையால் அவை வழங்கப்படவில்லை. அதுமாத்திரமா?

முதல்வர் கையால் பரிசும், விருதும் பெறாத அந்த 189 மாணவர்களையும், டி.பி.ஐ. வளாகத்தில் ஒரு அரங்கில் உட்கார வைத்து, அவர்களின் பெற்றோர்களை வெளிப்புறத்தில் அமர

வைத்து, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் இதோ வருகிறார், அதோ வருகிறார், வந்தவுடன் பரிசுகளையும் விருதுகளையும் வழங்கிவிடுவார் என்று அதிகாரிகள் கூறியவாறு இருந்துள்ளனர். மாலை 4 மணி வரை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவைகளை வழங்க வராததால், அதுவரை காத்திருந்த அந்த மாணவர்களின் பெற்றோர் ஆத்திரமடைந்திருக்கிறார்கள். தொலைதூரத்திலிருந்து மாணவர்களுடன் வந்திருந்த பெற்றோர், சென்னையிலே தங்குவதற்கு வசதியில்லாத நிலையில், அன்று மாலையில் 6 மணி அளவில் திரும்பிச் செல்வதற்காக டிக்கெட்டுகளைப் பெற்றிருந்த காரணத்தால் என்ன செய்வதென்று புரியாமல் தவித்திருக்கிறார்கள். அதிகாரிகள் வேறு வழியின்றி, ஆவேசமாக இருந்த பெற்றோர்களுக்குப் பதில் சொல்ல இயலாமல், அந்த அரங்கிற்குள் இருந்த ஓர் அறைக்குள் சென்று அமர்ந்துகொண்டு கதவையே பூட்டி விட்டார்களாம். இதிலே இன்னும் கொடுமை, பல மணி நேரமாகக் காத்திருந்த அந்த மாணவச் செல்வங்களுக்குக் குடிக்கத் தண்ணீர்கூடக் கொடுக்கவில்லையாம்.

4.30 மணிவரை பொறுத்திருந்த பெற்றோர்களில் சிலர் வேறு வழியின்றித் தங்கள் பிள்ளைகளை பரிசும் வேண்டாம், சான்றிதழும் வேண்டாம் என்று கூறி அழைத்துச் சென்றுவிட்டார்கள். அதற்கு மேலும் நேரம் ஆனால், எல்லா மாணவர்களுமே சென்று விடுவார்கள் என்பதால் மத்திய இடைநிலைக் கல்வி திட்ட இயக்குனர் மூலமாக அவசர அவசரமாகச் சான்றிதழ்களைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். முதலமைச்சரிடம்தான் அவைகளைப் பெற இயலவில்லை, குறைந்தபட்சம் அமைச்சரிட மாவது அவைகளைப் பெறலாம் என்று காத்திருந்த மாணவர்கள் அதற்கும் வழியின்றிச் சோகத்துடன் ஏன் சென்னைக்கு வந்தோம் என்ற நினைப்புடன் திரும்பிச் சென்ற கொடுமை நடைபெற்றுள்ளது.

இந்தத் தகவலையெல்லாம் சாங்கோபாங்கமாக “தினமலர்” நாளேடு விவரமாக எழுதியிருக்கின்றது. இதைவிட மற்றொரு வேடிக்கை, இதுபற்றி தமிழக அரசின் செய்தித் துறை, ஏடுகளுக்கு செய்திக் குறிப்பு தயாரித்து வழங்கியுள்ளது. அந்தச் செய்திக் குறிப்பில், பத்தாம் வகுப்பில் மாநில அளவில் இரண்டாம் இடம் மற்றும் மூன்றாம் இடம் எடுத்த மாணவ, மாணவியருக்கும்

முதல்வர் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார் என்று எழுதி, நடைபெறவே இல்லாத ஒரு நிகழ்ச்சியை நடைபெற்றதைப் போலச் செய்திக்குறிப்பு தயாரித்து ஏடுகளுக்கெல்லாம் வழங்கிய கொடுமையும் நடைபெற்றுள்ளதாக - அதையும் "தினமலர்" நாளேடே அதன் நான்காவது பக்கத்தில் "முதல்வர் விழாச் செய்தியைத் தவறாகக் கொடுத்த செய்தித் துறை" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. தனியார் நடத்தும் ஏடுகளில் தவறான செய்திகள் வந்தாலே அதனை யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் தமிழக அ.தி.மு.க. அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பே இவ்வாறு தவறான தகவலைத் தருமேயானால் பின்னர் இதற்கு விமோசனம்தான் ஏது? உண்மையிலேயே அரசின் செய்தித் துறை தவறாகச் செய்திக்குறிப்பு தயாரித்துக் கொடுத்திருக்கிறதா? அல்லது "தினமலர்" நாளேடு தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளதா என்பதை அரசுதான் விளக்கிட வேண்டும்.

அ.தி.மு.க. அரசிலே நடைபெற்ற இந்த கூத்துகளையெல்லாம் வெளியிட்ட காரணத்தாலோ என்னவோ, இன்றைய தினம் முதலமைச்சர் கலந்துகொள்ளும் இரண்டு நிகழ்ச்சிகளுக்காக இரண்டு முழுப் பக்க விளம்பரங்கள் மற்ற நாளேடுகளில் எல்லாம் வெளிவந்திருக்கின்றபோது, "தினமலர்" நாளேட்டில் மட்டும் அந்த இரண்டு பக்க விளம்பரங்கள் வெளிவரவில்லை. ஒருவேளை அவர்களுக்குத் தரப்படவில்லையோ என்னவோ?

கல்வித் துறை பற்றிய இந்தச் செய்திகள் வந்திருக்கிற நேரத்தில், மின் வாரியம் பற்றியும் ஒரு செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியின் தலைப்பு, "மின் வாரியத்தின் குறைகேட்பு மையம் சரியில்லை - துறை அமைச்சர் விஸ்வநாதன் தூக்கம்" என்ற தலைப்பில் நீண்ட விவரங்களைத் தந்திருப்பதோடு, அரசின் மீது மிகுந்த அக்கறையோடு "மின் வாரியத்தின் அலட்சிய மனப்பான்மையால் அவதிப்படுவதைத் தவிர்க்க, மின்சாரத் துறை அமைச்சர், நத்தம் விஸ்வநாதன் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் வரும் தேர்தல்களில் இவர் ஒருவராலேயே அ.தி.மு.க. வுக்கு அதிக ஓட்டு இழப்பு ஏற்பட்டு, செல்வாக்கும் சரிந்துவிடும். இதை அமைச்சர் கவனத்தில்

கொள்ளாததை, முதல்வர் ஜெ. கவனத்தில் கொள்ள வேண்டும்" என்றும் எழுதியுள்ளது.

இதிலிருந்து "தினமலர்" போன்ற நாளேடுகளுக்கு அரசின் மீதுள்ள குறைபாடுகளை மறைக்கவும் முடியவில்லை. அதனால் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கெட்டப் பெயர் வந்துவிடுமோ என்பதைத் தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை. இத்தகையோர் மத்தியிலேதான் நாம் கழகத்தை நடத்திச் செல்ல வேண்டியிருக்கின்றது!

அன்புள்ள,

மு.க.

21-6-2013

3769. கழகம் ஆற்றும் அறப்பணிகளில் சில!

உடன்பிறப்பே,

கழக வளர்ச்சிக்கும், தேர்தலில் களம் காண்பதற்கும் என் பிறந்த நாட்களின்போதும் - மற்றும் மாநாட்டு நன்கொடை நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கும்போதும் - மாவட்டக் கழகங்கள் - மற்றும் இளைஞர் அணி, தொழிலாளர் அணி போன்றவை நிதி வழங்கும்போதும் நாம் திரட்டுகிற கழக நிதியைத் தேர்தலுக்காகப் பயன்படுத்துவதைத் தவிர, இந்திய அளவில், மாநில அளவில் இயற்கைப் பேரிடர்கள் நேரும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிட, அரசுக்கு உதவி வருவதை வழக்கமாகக் கொண்டு வருகிறோம். மேலும், கட்சியில் நலிந்த நிலைக்கு ஆளாகியுள்ள உடன்பிறப்புகளின் கல்வி உதவி, நோய் சிகிச்சை போன்ற அவசர அவசியங்களுக்கும் நிதி உதவி செய்து வருகிறோம். ஒருசிலர் அதிகமாக எதிர்பார்த்த போதிலும், அனைவருக்கும் பரவலாக உதவிட வேண்டுமென்ற அடிப்படையில் முடிந்த அளவு உதவித் தொகையை வழங்கி வருகிறோம்.

கழகம் திரட்டுகின்ற நிதிக்கும் கணக்கு உண்டு; அவை யார் யாருக்கு எதற்காக வழங்கப்படுகின்றன என்பதற்கும் கணக்கு உண்டு. அதுபற்றி அவ்வப்போது ஏடுகள் வாயிலாக வெளியிட்டும் வருகிறோம்.

தி.மு.க.வில் நலிந்த நிலையில் இருப்போர், உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டோர், விபத்துக்கு ஆளானவர்கள், அடக்குமுறை காரணமாகவோ; மாற்றுக் கட்சியினர் நடத்திய அராஜகத்தினாலோ பாதிக்கப்பட்டோர் எனப் பல பிரிவினருக்கும்; அஃதன்னியில் மாணவர்கள் கல்வியை ஊக்கப்படுத்தவும், தொழிலாளர்கள் குறிப்பாக ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பரிசு தரவும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களை ஒப்புவிப்போரை உற்சாகப்படுத்தவும், பெரியார், அண்ணா, புரட்சிக் கவிஞர், கழகத்

தலைவர் பெயர்களால் விருதுகளும் பொற்கிழிகளும் வழங்கவும், இவையன்னியில் 'முரசொலி' விருதுகள் என பெருநிதியை வழங்கவும் - அண்ணா அறிவாலயத்தில் கழக வரலாற்றுக் கருவூலத்தைத் தொடர்ந்து நடத்தவும் - வெற்றிச்செல்வி அன்பழகன் கண் மருத்துவமனையைச் சிறப்புற நடத்தவும் - பேராசிரியர் நூல் நிலையம் ஒன்றை மிகப் பெரும் நூல் நிலையம், படிப்பகம் என்று நடத்திடவும் - இத்தனை பணிகளும் இவை தொடர்பான சமூகப் பணிகளும் கழகத்தின் சார்பில் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

கழகத்தின் சார்பில் உதவித் தொகை வழங்கப்பட்டதற்கு சில உதாரணங்களை ஏற்கனவே நான் தெரிவித்திருந்தபோதிலும், மீண்டும் ஒருமுறை நினைவூட்ட விரும்புகிறேன்.

1976ஆம் ஆண்டு நெருக்கடி காலத்தில் மிசாவில் கைது செய்யப்பட்டோர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் கழகச் சார்பில் தேவைப்பட்டோருக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட குடும்பங்களில் மிசாக் கைதியாக சிறையில் மறைந்த சாத்தூர் பாலகிருஷ்ணன் குடும்பத்துக்கு அப்போது மாதந்தோறும் அளித்து வந்த உதவி நிதி ரூபாய் இருநூறு, 1976 முதல் 2010ஆம் ஆண்டு வரையும் வழங்கப்பட்டு, அதன் பின்னர் அது ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு பண விடைத்தாள் மூலம் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது.

தி.மு.க. அறக்கட்டளை சார்பில் வெற்றிச் செல்வி அன்பழகன் இலவசக் கண் மருத்துவ மனையில் 1988 முதல் இதுவரையில் மருந்துகள், கருவிகள், பணிபுரிவோர் ஊதியம் உட்பட ரூபாய் 44,95,525 (சுமார் 45 இலட்சம் ரூபாய்) செலவாகியிருக்கிறது. அந்த மருத்துவமனையில் டாக்டர் வசந்தி அவர்களின் மேற்பார்வையில், கண் அறுவை சிகிச்சை உட்பட இந்தக் காலகட்டத்தில் 70,656 பேர் (சுமார் எழுபதாயிரம் பேர்) இலவசமாகப் பயன் பெற்றிருக்கிறார்கள்.

தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி நிதியாக 28-12-2004 அன்று பிரதமர் நிவாரண நிதியாக திருமதி சோனியா காந்தி அம்மையார் மூலம் (ரூபாய் 1,00,00.000) ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கழக முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் சுனாமி நிவாரண நிதியாக வழங்கி, பிரதமர் நிதியில் சேர்க்கப்பட்ட வகையில் மொத்தம் 1 கோடியே 97 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் 2004-2005இல் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கும், மேற்படிப்பு படிக்க விரும்புவோருக்கும் உதவி நிதியாக 222 பேருக்கு 9 இலட்சத்து 44 ஆயிரத்து 885 ரூபாயும்,

11 பேருக்கு மருத்துவச் செலவிற்காக

50 ஆயிரத்து 300 ரூபாயும்,

தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 650 ரூபாயும்,

இலங்கையில் ராணுவத்தினரின் கொடுமைகளுக்காளாகி வீடுகளை இழந்து உண்ண உணவின்றி வாடிய ஈழத் தமிழர்களுக்கு உதவி நிதியாக

4-6-1987 அன்று ஒரு இலட்சம் ரூபாயும், ஈழத்தில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் மருத்துவ உதவிகளுக்காக 3-11-1995 அன்று 25 இலட்சம் ரூபாயும்,

சென்னை லிட்டில் பிளவர் கான்வென்ட் பள்ளி -சீர்காழி கோவிந்தராஜன் நினைவு அறக்கட்டளை - காட்டாங்கொளத்தூரில் உள்ள சிவானந்தா குருகுலம் - கியூபா நாட்டு மக்களுக்கு உதவி - மராட்டிய மாநில பூகம்ப நிதி உதவி - "உதவும் கரங்கள்" சேவை நிறுவனத்திற்கு நிதி - தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தையொட்டி வெள்ள நிவாரண நிதி - கார்கில் போரில் வீரமரணமடைந்த

11 பேர்களின் குடும்ப நிவாரண நிதி - அரசு அலுவலர், ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்டு இறந்த இருவரின் குடும்பங்களுக்கு நிதியென மொத்தம் 58 இலட்சத்து 66 ஆயிரத்து 853 ரூபாய் நிதி தி.மு.கழக அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தி.மு.க. அறக்கட்டளை சார்பில் மட்டுமல்லாமல், தி.மு.க. தலைமைக் கழகச் சார்பில் 1985 முதல் 2005 வரை இருபதாண்டுகளில் ஒரு கோடியே 39 இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில், 370 கழகத் தோழர்களின் குடும்ப நிதியாக 1 கோடியே 6 இலட்சத்து

9 ஆயிரத்து 432 ரூபாயும், 205 கழகத் தோழர்களின் மருத்துவ உதவி நிதியாக 8 இலட்சத்து

97 ஆயிரத்து 983 ரூபாயும், 358 கழகச் சொற்பொழி வாளர்களின் உதவி நிதியாக 6 இலட்சத்து

97 ஆயிரத்து 500 ரூபாயும், 34 பேருக்கு முப்பெரும் விழா விருது பெற்றவர்களுக்கு பொற்கிழி வழங்கிய வகையில் 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், தமிழ் ஈழ மக்களுக்கு நிதி உதவி மற்றும் குஜராத் பூகம்ப நிதி வழங்கிய வகையில் 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் இடம் பெறும்.

2005 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் தி.மு.கழக அறக்கட்டளையின் சார்பாக மராட்டிய மாநிலத்தில் மழை, வெள்ளத்தால் வாடும் மக்களின் துயர் துடைப்பதற்காக 10 லட்சம் ரூபாயும், பாகிஸ்தான் - ஜம்மு-காஷ்மீர் பூகம்ப நிவாரண நிதியாக 10 லட்சம் ரூபாயும், தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட 25 லட்சம் ரூபாயும், 2011 ஆம் ஆண்டு தாக்கிய "தானே" புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட 50 லட்சம் ரூபாயும் என்பன போன்றவைகளுக்காக 98 லட்சத்து 79 ஆயிரத்து 5 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2005 ஆம் ஆண்டு முதல் இதுவரை கழகத் தோழர்களுக்கு உதவியாக அளித்த வகையிலும், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவரது வாரிசுகளுக்கு 40 லட்சம் ரூபாயும், டெல்லியில் உள்ள பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திற்கு 5 லட்சம் ரூபாயும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் மரபுரிமையர்களுக்கு 55 லட்சம் ரூபாயும், ஏன் அண்மையில் உத்தரகாண்ட் மாநிலத்தில் பெருமழையினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிட 25 லட்சம் ரூபாயும் என மொத்தம்

2 கோடியே 12 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் உதவி நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

கழகத்தின் சார்பிலும், தி.மு.கழக அறக்கட்டளை யின் சார்பிலும் உதவி நிதிகளை வழங்குவதைப் போலவே, தி.மு.கழக இளைஞர் அணி அறக் கட்டளையின் சார்பாக கடந்த சில ஆண்டுகளாக என்னுடைய பிறந்த நாளினை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெற்ற மாணவர் களுக்கு - மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றவர் களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதமும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதமும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதமும் இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதமும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதமும் தொடர்ந்து நான்காண்டு காலமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த நான்காண்டுகளில் 1,646 மாணவ, மாண வியர்க்கு 97 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் உதவி நிதியாக தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஆண்டாக இந்த ஆண்டுக்கான உதவித் தொகை 29-6-2013 அன்று மதுரையில் மாநில அளவில் அதிக மதிப்பெண்களைப் பெற்ற 211 மாணவர்களுக்கும், மாவட்ட அளவில் 1,364 மாணவர்களுக்கும் மொத்தம் 97 இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் கழகப் பொருளாளர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படவுள்ளது. மாணவர்களை அழைத்து வந்து, பரிசு பெறச் செய்து, பின்னர் பத்திரமாக அழைத்துச் செல்லும் பொறுப்புகளையெல்லாம் இளைஞர் அணியினரே ஏற்றுக் கொள்கிறார்கள்.

தமிழக அரசின் சார்பில் தமிழைப் மொழிப் பாடமாகக் கொண்டு, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கும், அதுபோலவே 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கும் ரொக்கப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் நமது தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் இந்த இரண்டு தேர்வுகளிலும், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப்

பெறுவோருக்கு மாத்திரமல்லாமல், மாவட்ட அளவிலும் இந்த இரண்டு தேர்வுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அரசின் சார்பில் இந்த விருதுகள் வழங்குவதிலே கூட குழப்பங்கள் ஏற்பட்டு, அதைப் பற்றி "தினமலர்" நாளிதழில் செய்தி வெளியிட்டதைப் போலவே நானும் எழுதிய பிறகு முதல் அமைச்சர் அதை நேரடியாகக் கவனித்து பரிசு பெறாமல் ஊருக்குத் திரும்பச் சென்ற மாணவர்களையெல்லாம் மீண்டும் சென்னைக்கு அழைத்து நேரடியாக அவரே வழங்கியிருக்கிறார். அரசின் சார்பில் இந்த ஆண்டு சுமார் 200 மாணவர்களுக்கு மட்டுமே இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மதுரையில் சுமார் 1500 மாணவர்களுக்கு 29ஆம் தேதி ரொக்கப் பரிசுகள் வழங்கவிருப்பதால் அதிலே எந்தவிதமான குளறுபடிக்கும் நாம் இடம் கொடுத்துவிடாமல் மாணவர்கள் மகிழ்வோடு பரிசுகளைப் பெற்றுச் செல்ல வழிவகுக்க வேண்டும்.

இந்த ஆண்டு இவ்வளவு மாணவர்கள் இந்தப் பரிசுகளைப் பெறுவதற்குக் காரணம், நீண்ட வரலாறு கொண்டதும், நீதிமன்றத் தீர்ப்புகள் மூலமாக நிலைநாட்டப்பட்டதுமான சமச்சீர் கல்வித் திட்டத்தின் காரணமாக, 2013ஆம் ஆண்டு 10ஆம் வகுப்புத் தேர்வில், பல்லாண்டுக் காலமாக கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து ஏராளமான மாணவ, மாணவியர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பில் சமச்சீர் கல்வி நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகு அதிக அளவில் மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். 2013ஆம் ஆண்டு 89 விழுக்காடு வெற்றி கிடைத்துள்ளது. இது 2012ஆம் ஆண்டைவிட, 2.8 விழுக்காடு அதிகமாகும். மாணவர்களில் 86 சதவிகிதம் பேரும், மாணவியர்களில் 92 சதவிகிதம் பேரும் வெற்றி பெற்றுள்ளனர். 9 பேர் 500க்கு 498 மதிப்பெண்கள் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். 52 பேர் 497 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 137 பேர் 496 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இவ்வாறு கழக அரசு கொண்டு வந்த சமச்சீர் கல்வித் திட்டத்தினால், சமுதாயத்தில் அடிப்படை மாற்றங்கள் உருவாக ஆரம்பித்திருக்கின்றன! அதன் காரணமாகத் தான் தி.மு.க. இளைஞர் அணியின் சார்பாக கடந்த நான்காண்டுகளில் எந்த அளவிற்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டதோ, அந்த நான்காண்டில் வழங்கப்பட்ட மொத்தத் தொகைக்குச் சமமாக

இந்த ஓராண்டில் மட்டும் பரிசுகளை மாணவச் செல்வங்களுக்கு வாரி வழங்கவிருக்கிறார்கள்.

தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் மேலும் ஒரு பாராட்டத்தக்கப் பணியாக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை யொட்டி, அவரது நூற்றாண்டு தொடங்கி ஒவ்வொரு ஆண்டும், உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் வகையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதை ஒப்புவித்தல் போன்ற போட்டிகளை நடத்தி மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து ஐந்தாண்டுகளாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகள் வாயிலாக 7 ஆயிரத்து 98 மாணவர்களுக்கு

1 கோடியே 53 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

எனவே கழகத்தின் சார்பில் ஆனாலும், இளைஞர் அணியின் சார்பில் ஆனாலும் திரட்டப்படுகின்ற ஒவ்வொரு ரூபாயும் முறையாக நல்ல காரியங்களுக்காகவே செலவழிக்கப்படுகின்றன என்பதை விளக்குவதற்காகவே இந்தக் கடிதம். 29ஆம் தேதி மதுரையில் நடைபெறும் விழாவில் பரிசு பெறவிருக்கும் 1500 மாணவ, மாணவியரை யும் வாழ்த்துகிறேன். இந்தப் பரிசுகளை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் பெறுகின்ற அளவிற்கு மற்ற மாணவர்களும் முனைந்து கல்வியில் தங்கள் நாட்டத்தைச் செலுத்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

28-06-2013

3770. வாலறுந்த பல்லி போல் ஆவதா?

உடன்பிறப்பே,

மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.கழக வேட்பாளர் கனிமொழிக்குக் காங்கிரஸ் கட்சியிடம் ஆதரவு கேட்டுப் பெற்றதையொட்டி, தி.மு.கழகம் இலங்கைப் பிரச்சினையையே மறந்து விட்டதாகவும், கைவிட்டு விட்டதாகவும் ஒருசிலர் பேச முற்பட்டிருக்கிறார்கள். தி.மு. கழகத்தின் மாநிலங்களவை வேட்பாளருக்கு முதலில் கம்யூனிஸ்ட் கட்சிகளிடமும், பின்னர் தே.மு.தி.க.விடமும், மனிதநேய மக்கள் கட்சியிடமும், புதிய தமிழகம் கட்சியிடமும், அதன் பின்னர் காங்கிரஸ் கட்சியிடமும் ஆதரவு கேட்டதுதான் உண்மை. இதில் எந்தக் கட்சியிடமும் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் இந்தத் தேர்தலை யொட்டி மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் கடந்த சில மாதங்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியோடு உடன்பாட்டை முறித்துக்கொண்ட தி.மு. கழகம், தற்போது மீண்டும் காங்கிரஸ் கட்சியோடு உறவு கொண்டுவிட்டது, இலங்கைப் பிரச்சினையையே கைகழுவிவிட்டது என்றெல்லாம் ஆரம்பத்திலிருந்தே தி.மு. கழகத்தின்மீது பகையுணர்ச்சியோடு வெறுப்பு அரசியல் நடத்தி வரும் ஒருசிலர் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

இதற்கிடையே இலங்கைத் தமிழர் விவகாரத்தில், அந்த நாட்டு அரசு 13வது சட்டத் திருத்தம் செய்து, அதன் அடிப்படையையே நீர்த்துப் போகச் செய்து, அதனை உயிரற்ற ஒன்றாக ஆக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை நாம் மனதிலே கொள்ளவேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை மனதிலே கொண்டுதான், இந்தத் திங்கள் தொடக்கத்தில், அதாவது 9-6-2013 அன்று பிரதமருக்கு நான் எழுதிய விரிவான கடிதத்தில், “இலங்கை அரசியல் சட்டத்தின் 13வது திருத்தம் என்பது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நேரடி விளைவாக ஏற்பட்டது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

இலங்கைத் தமிழர்களுக்கு முந்தைய காலத்தில் சிங்களர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் கசப்பான அனுபவம் காரணமாக, இந்த ஒப்பந்தம் அமலாக்கப்படுவதற்கு இந்தியாவிலுள்ள நாம் இலங்கைத் தமிழர்களுக்கு உறுதியளித்துள்ளோம். 13வது அரசியல் சட்டத் திருத்தத்தை ரத்து செய்யுமாறு ஏற்கனவே அதிபர் மகிந்தா ராஜபக்சேவின் சகோதரரும், இலங்கைப் பாதுகாப்புச் செயலாளருமான கோதேபய்யா ராஜபக்சே கூறியுள்ளார். தற்போது, ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய இந்தியா நேரடியாகத் தலையிடுவது இந்திய அரசின் கடமையும், பொறுப்புமாகும். இது மோதலுக்குத் தீர்வு மற்றும் இனச் சமரசம் ஆகியவற்றை நோக்கிய பாதையை இலகுவானதாக ஆக்கும். இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கையில் நடைபெற்றுவரும் நிகழ்வுகளுக்கு இந்தியா மவுனமான பார்வையாளராக இருக்கக் கூடாது. இலங்கையிலுள்ள தமிழர்களின் உரிமைகளையும், வாழ்க்கையையும் பாதுகாக்கத் தங்களது தலையீட்டினைக் கோருகிறேன்" என்று எழுதியிருந்தேன்.

என்னுடைய இந்தக் கடிதத்திற்கு, 11-6-2013 அன்றே உடனடியாக பதில் எழுதிய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், "இலங்கை அரசியல் சட்டத்தில் 13வது திருத்தம் தொடர்பான தங்களது ஜூன் 9ஆம் தேதி கடிதம் கிடைக்கப் பெற்றேன். இது இலங்கையிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் சேர்ந்து எடுக்கப்படவேண்டிய முடிவு என்றாலும், அதன் விளைவுகள் குறித்து நாங்கள், நிச்சயம் பரிசீலித்து இது தொடர்பான எங்களது கருத்துக்களை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்துவோம். இலங்கைவாழ் தமிழர்கள் உட்பட அங்குள்ள அனைத்துத் தரப்பினரும் தங்களுக்குரிய உரிமைகளைப் பெற்று, நல்லிணக்கத்தோடு வாழ வேண்டுமென்ற கருத்தில் இந்திய அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தாங்களும் அறிவீர்கள்" என்று எழுதியிருந்தார். என்னுடைய கடிதமும், பிரதமர் எனக்கு எழுதிய கடிதமும் திராவிட முன்னேற்றக் கழகம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து விலகிய பிறகுதான் எழுதப்பட்டது. கூட்டணியிலே இல்லாத போதுதான், இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தி.மு. கழகம் மறந்து விடாமல் இந்தக் கடிதத்தை எழுதியது. பிரதமரும் அதற்கு உடனடியாகப் பதில் எழுதினார்.

அதன்பிறகு 18-6-2013 அன்று இலங்கையின் தமிழ் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமரை டெல்லியில் சந்தித்து, 13வது சட்டத் திருத்தம் நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டுமென்று கேட்டபோது, "இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டுவிட மாட்டோம், பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர்களிடம் பிரதமர் தெரிவித்த கருத்தும் ஏடுகளிலே வெளிவந்துள்ளது.

மேலும் இலங்கையிலே உள்ள இடதுசாரி அமைச்சர்கள், அதிபர் ராஜபக்சே 13வது சட்டத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக மேற்கொண்டுவரும் முயற்சிகளை எதிர்த்து, "13வது திருத்தத்தில் நிலம் மற்றும் போலீஸ் தொடர்பான அதிகாரங்களை நீக்காமல் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்தித் தமிழர்களின் உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும், அதை விடுத்து 13வது திருத்தத்தில் கைவைத்து இந்தியாவை எதிர்த்தால் கச்சத் தீவு பறிபோய் விடும்" என்று பேசியிருக்கிறார்கள்.

13வது திருத்தத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் இலங்கை ஆளுந்தரப்பின் இடதுசாரி அமைச்சர்களின் மாநாடு கொழும்பில் உள்ள இலங்கை சமசமாஜக் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றிருக்கிறது. இதில் இலங்கை அமைச்சர்களான வாசுதேவநாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, ராஜிதசேனாரத்னா, ரெஜினால்ட்கூரே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களில் அமைச்சர் திஸ்ஸவிதாரண கூறும்போது, "போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, தமிழ் மக்களின் மனங்களை வென்று, தேசிய நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதற்கான தகுந்த சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையிலும், கடந்த 26 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மாகாண சபை முறையை இல்லாது ஒழிக்குமாறு சிலர் வாதங்களை முன்வைக்கின்றனர். 13வது திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்குப் போலீஸ், நிலம் அதிகாரங்களை வழங்கியிருந்தால் நாட்டில் பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. 13வது திருத்தத்தினூடாக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து மாகாண சபை முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். சிறுபான்மையினருக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து அவர்களுடன் இணைந்து நாம் செயல்படுகின்றோம் என்பதை

நாம் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்" என்று சொல்லி யிருக்கிறார்.

அமைச்சர் டியூ குணசேகர கூறும்போது, "13ஆவது திருத்தச்சட்டம் நாட்டு மக்களின் விருப்பத்திற்கு ஏற்பக் கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல எனக் கூறுகின்றனர். 1978ஆம் ஆண்டு முதல் 18 அரசமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறு இருக்கையில் 13வது திருத்தச் சட்டத்துக்கு மட்டும் ஏன் எனக் கேள்வி எழுப்புவது நல்லதல்ல. நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நாட்டின் பிரதான பிரச்சினையான இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இனப்பிரச்சினை தொடர்பில் அவர்களால் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியாது" என்று தெரிவித்திருக்கிறார்.

இந்திய அரசின் சார்பில் இலங்கை அரசுக்குக் கடிதம் எழுதியபோதும், அது எந்தவிதமான தாக்கத்தையோ அல்லது நிர்பந்தத்தையோ இலங்கை அரசுக்கு ஏற்படுத்துமா என்று தெரியவில்லை. 13வது சட்டத் திருத்தத்தில் மாற்றம் செய்வது குறித்து ஆலோசனை செய்ய நாடாளுமன்றத் தேர்வுக் குழு அமைத்தார்கள். அதில் தமிழ் தேசியக் கூட்டணி உட்பட பல கட்சிகள் இடம்பெற விரும்பவில்லை என்று தெரிவித்து விட்டார்களாம். தற்போது 13வது சட்டத் திருத்தத்தின் உட்பிரிவுகள் திருத்தம் குறித்த கருத்துரு இலங்கை உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைக்கு அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள், முஸ்லிம்கள் என, எந்தச் சிறுபான்மையினருக்கும் மாகாண அளவில் முழு அதிகாரம் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக 13வது சட்டத் திருத்தத்தில் உட்பிரிவுகள் மாற்றப்பட உள்ளதாகத் தெரிகிறது. இது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறுகின்ற செயலாகத்தான் இருக்கும். இந்தியாவும், இலங்கையும் இணைந்து ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் உட்பிரிவு களில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால், இந்தியாவின் ஒப்புதல் பெறாமல் இத்தகைய திருத்தம் செய்வது எந்தவிதத்திலும் நியாயமில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீறி, 13வது

சட்டத் திருத்தத்தில் இலங்கை தன்னிச்சையாக மாற்றங்கள் செய்தால், அது உலக அரங்கில் இந்தியாவுக்குத்தான் பெருத்த தலைகுனிவாகிவிடும்.

இதற்கிடையே 28-6-2013 தேதிய "தீக்கதிர்" நாளிதழில், இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு மாகாணத் தேர்தலை அந்த நாட்டின் அதிபர் ராஜபக்சே திடீரெனத் தள்ளிவைப்பதாக அறிவித்திருக்கிறார் என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்புச் சட்டம் 13 ஏ விதியில் திருத்தம் கொண்டு வர ராஜபக்சே முடிவுசெய்தார். ஆனால் இதற்கு எட்டு மாகாண கவுன்சிலின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்தச் சட்ட நுணுக்கங்களால் குடியரசுத் தலைவரின் முடிவு தடைபட்டுள்ளது. எதிர்க்கட்சிகளான தமிழ் மற்றும் முஸ்லீம் சிறுபான்மையினர் 13 ஏ திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

1987 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை இடையே இலங்கையின் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்யும் ஒப்பந்தம் நிறைவேறியது. இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் தற்போது இலங்கை அரசு 13 ஏ வில் திருத்தம் கொண்டு வருகிறது. இந்தப் பிரச்சினையிலே மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதல் கட்டமாக ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றிடக் கடும் அழுத்தத்தைத் தர வேண்டுமென்றுதான் தி.மு. கழகம் இப்போதும் வலியுறுத்துகிறது. எனவே இலங்கைப் பிரச்சினை வேறு, மாநிலங்களவைத் தேர்தல் வேறு, கூட்டணி வேறு. ஆனால் அனைத்தையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பம் விளைவித்திட சிலர் முயற்சிக்கிறார்கள். தி.மு.கழகம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலிருந்து விலகியபோது, மத்திய அரசிலே கழகத்தின் சார்பில் அமைச்சர்களாக இருந்தவர்கள் எல்லாம் விலகினார்கள். இப்போது மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு. கழக வேட்பாளருக்குக் காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்த காரணத்தால், கழகத்தைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசிலே சேர்ந்து விடவில்லை. இதையெல்லாம் மறைத்துவிட்டு, தி.மு.கழகத்தின் மீது ஏதாவது பழி சுமத்த வேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள்தான், கழகத்தின்மீது சேற்றை வாரித் தூற்றிட முயலுகிறார்கள்.

ஆனால் "இந்து" போன்றதொரு நாளேடே; மாநிலங்களவை கழக வேட்பாளருக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்தது பற்றி

ஒரு தலையங்கமே எழுதியிருக்கிறது. "அடைந்தது ஒன்று; இழந்தது ஏராளம்" (For one more, a lot lost) என்ற தலைப்பில் அது எழுதப்பட்டுள்ளது. அதில் தி.மு. கழகமும், காங்கிரசும் ஏதோ சந்தர்ப்பவாதிகள் போலவும், அ.தி.மு.க.வின் தலைவி மிகவும் தந்திரமாகக் காயை நகர்த்தினார் என்பது போலவும் எழுதியிருப்பதன் மூலம் "இந்து" யார் என்பதையும், அவர்களின் உள்நோக்கம் என்ன என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

அந்தத் தலையங்கத்தில் எழுதியிருப்பதைப் போல, ஜெயலலிதா கடந்த தேர்தலில் அவர்களோடு ஒன்றாக இருந்த தோழமைக் கட்சிகளையெல்லாம் தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கழற்றிவிட்டது சந்தர்ப்பவாதமாக "இந்து"வுக்குத் தெரியவில்லையா? ஏன்; இறுதியாக அ.தி.மு.க. ஆதரித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியத் தலைவர்கள் எல்லாம் டெல்லியில் ஜெயலலிதாவைச் சந்தித்து ஆதரவு கேட்டபோதே, அவர்களை அங்கேயே மதித்து ஆதரிப்பதாகக் கூறாமல், சென்னைக்கு வந்த பிறகு, எங்கே தே.மு.தி.க.வும், தி.மு.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து இரண்டு இடங்களிலே வெற்றி பெற்று, அ.தி.மு.க. நிறுத்திய ஐந்து வேட்பாளர்களில் ஒருவர் தோற்க நேர்ந்துவிடுமே என்பதைப் புரிந்துகொண்டு தனது வேட்பாளர்களில் ஒருவரைத் திரும்பப் பெற்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரிப்பதாக அறிவித்தாரே, அதற்குப் பெயர் என்ன? டெல்லியிலே இருந்தபோது பிடிக்காமல் இருந்த எந்தக் கம்யூனிசக் கொள்கை, தமிழ்நாட்டிற்கு வந்ததும் அம்மையாருக்குப் பிடித்துவிட்டது?

ஜெயலலிதா செய்தால் அதற்குப் பெயர் ராஜதந்திரம்; அதையே தி.மு.க. செய்தால் 'இந்து'வுக்கு அது சந்தர்ப்பவாதமா? இப்படி இடையிலே உள்ள சிலர்; தேவையில்லாமல் வாலறுந்த பல்லியைப் போலத் துள்ளுவதேன்? துடிப்பதேன்?

அன்புள்ள,

மு.க.

30-6-2016

3771.“நிலக்கரி நாயகி” என்ற பட்டம் பெறவா?

உடன்பிறப்பே,

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்கு விற்பனை குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் “கனி” மொழிக்குப் பதவிகிடைத்ததும், நான் நிலக்“கரி”யை மறந்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். “கனி” - “கரி” என்றெல்லாம் வார்த்தை விளையாட்டு ஆட முனைந்துள்ளார். அறிக்கை “கொடநாட்டில்” இருந்து அல்லவா வருகிறது; அப்படித்தான் இருக்கும்! நெய்வேலி நிலக்கரி நிறுவனம் பற்றியும், அந்தத் தொழிலாளர்கள் பற்றியும் தி.மு.கழகம் மறந்துவிட்டது என்று ஜெயலலிதா சொல்வது உண்மையா?

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் பற்றி கடந்த ஆண்டு 8-5-2012 அன்றும் 25-5-2012 அன்றும் விரிவாக “முரசொலி”யில் உடன்பிறப்பு மடல் எழுதியிருக்கிறேன். மீண்டும் இந்த ஆண்டு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்கு விற்பனை பற்றியே கடந்த 26-5-2013 அன்று உடன்பிறப்பு மடலும், ஏன் கடந்த வாரம் 22-6-2013 அன்று விரிவானதொரு அறிக்கையும் எழுதியிருக்கிறேன். ஆனால் தமிழக முதலமைச்சர் நான் நிலக்கரியை மறந்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். நெய்வேலி நிறுவனத்தை நான் மறந்தவனா என்பதைப் பின்வரும் சில நிகழ்ச்சிகளே அனைவருக்கும் தெளிவாக்கிடும் என்று நம்புகிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 13 ஆயிரம் பேர், பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 21-4-2012 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது, 8-5-2012 தேதிய “முரசொலி”யில், “மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு இந்தப் பிரச்சினையிலே அக்கறையின்றி இருந்தாலும், மத்திய அரசும், இந்தத் துறையின் அமைச்சரும்

உடனடியாக நெய்வேலி நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு போராடுகின்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளை; அழைத்துப் பேசி சுமூக முடிவுகாண முன்வர வேண்டும்; அதற்கு பிரதமர் அவர்கள் ஆவன செய்திட வேண்டும்" என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டேன்.

3-5-2012 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நெய்வேலி தொழிலாளர்கள் பிரச்சினை பற்றிக் கேள்வியெழுப்பியபோது, "என்.எல்.சி. தொழிலாளர்களின் போராட்டப் பிரச்சினை தமிழக அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல, எனவே அதில் தலையிட முடியாது" என்று அரசின் சார்பில் பதிலளிக்கப்பட்டது. நிலக்"கரியை" மறந்தது நானா? அ.தி.மு.க. அரசா?

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சினை என்பது இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை தொடர்கின்ற ஒன்றாகும். நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தொடங்கப்பட்ட காலந்தொட்டு பணி புரிந்துவரும் ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சினை 1994ஆம் ஆண்டில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் முயற்சியின் காரணமாக ஓரளவு தீர்த்து வைக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் நெய்வேலியில் போராட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் ஆட்சியிலே இருந்த தி.மு. கழகம் மாநில அரசுக்கு இதிலே அக்கறை இல்லை என்று சொல்லாமல், முதலமைச்சராக இருந்த நானே இந்தப் பிரச்சினையிலே நேரடியாகத் தலையிட்டு, 16-6-2008 அன்று தொழிற் சங்கமும், நிர்வாகமும், டெல்லி தலைமை தொழிலாளர் ஆணையர் முன்பாக ஓர் முத்தரப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதால், வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுத் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர். நிலக்கரியை மறந்திருந்தால் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமா?

2010ஆம் ஆண்டு மீண்டும் நெய்வேலியில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்பொழுதும் தமிழக முதலமைச்சராக இருந்த நான், 15-10-2010 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அதன் பின்னர் நிர்வாகத்தை அழைத்துப் பேசி, மாதம் 1,040 ரூபாய் உயர்த்தப் பட்டு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகோள் விடுத்தேன்.

இதனைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் மட்டும் ஏற்றுக் கொண்டார்கள். மற்றத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உடனே நான் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், 26-10-2010 அன்று தலைமைச் செயலகத்திற்கே அழைத்து வரச் செய்து அவர்களிடம் பேசினேன். நிர்வாகத்தையும் சம்மதிக்கவைத்து, மேலும் பல சலுகைகளையும் வழங்கச் செய்தேன்.

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது 22-6-2006 அன்று நெய்வேலி பங்குகளில் 10 சதவிகிதத்தை விற்பனை செய்யும் முடிவினை மத்திய அரசு அறிவித்தது. மறுநாள் 23ஆம் தேதி காலையிலேயே தி.மு.க. தொழிற்சங்கம் (தொ.மு.ச.); சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., அதிகாரிகள் சங்கம் ஆகிய சங்கத்தினரை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தியது. 4-7-2006 அன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவதென அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. 25-6-2006 அன்று இந்தப் பிரச்சினை குறித்துப் பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தில், "நெய்வேலியில் பத்து சதவிகிதப் பங்கினை விட்டுத் தருவது பற்றி, தமிழகத்தில் எழுந்துள்ள எதிர்க் கருத்துக்களை மத்திய அரசு அலட்சியப் படுத்திவிடக் கூடாது. ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட குறைந்தபட்சத் திட்டத்தில் இருந்து விலகிச் செல்வதற்கு; எந்தக் காரணம் கூறப்பட்டாலும், அது முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்கும் உறுதிப் பாட்டினைத் தளர்த்துவதாகவே கருதப்படும். எனவே மத்திய அரசு இந்த முடிவை மறுபரிசீலனை செய்திட வேண்டுகிறேன்" என்று கேட்டுக்கொண்டிருந்தேன்.

2004ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்சத் திட்டத்தில், "இலாபகரமாக இயங்கும், அரசுத் துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படமாட்டா; "நவரத்தினங்களாக" விளங்கும் அரசு நிறுவனங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும்" என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

எனது இந்தக் கடிதத்திற்கு உடனடியாகப் பதில் வராத நிலையில், 4ஆம் தேதி முதல் நெய்வேலியில் வேலை நிறுத்தம் தொடங்கியது. 6-7-2006 அன்று செய்தியாளர்கள்

என்னைக் கேட்டபோது, "நெய்வேலி பிரச்சினையில் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் மத்திய அரசு இருக்கும்போது, மத்திய அரசினால் எடுக்கப்பட்டுள்ள அந்த முடிவுக்குத் தி.மு.க. அந்த அரசிலே இடம்பெற்று, இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதை டெல்லியிலே உள்ள கழக அமைச்சர்கள் பிரதமரிடத்திலே அறிவித்திடுமாறு கூறியிருக்கிறேன்" என்று சொன்னேன். அவ்வாறே மத்திய அமைச்சராக இருந்த தம்பி தயாநிதிமாறனும் உடனடியாகப் பிரதமரைச்சந்தித்து எனது கருத்தைத் தெரிவித்தார். அதன் பின்னர் நெய்வேலி நிறுவனத்தின் பத்து சதவிகித பங்குகளை விற்கும் முடிவை நிறுத்திவைப்பதாக அன்று இரவே மத்திய அரசு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து தொழிலாளர்கள் தங்களது வேலை நிறுத்தத்தையும் திரும்பப் பெற்றனர். ஆனால் முதலமைச்சர் இன்று விடுத்துள்ள அறிக்கையில் இதை யெல்லாம் அப்படியே மூடி மறைத்துவிட்டு, "மத்திய அரசின் முடிவைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதனையடுத்து மத்திய அரசு தனது முடிவைக் கைவிட்டது" என்று திரித்துக் கூறியிருக்கிறார்.

கடந்த ஆண்டு மத்திய அரசின் சார்பில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை விற்பதற்கான முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்ட நேரத்தில், உடனடியாக நான் விடுத்த அறிக்கையில், "நவரத்னா" தகுதி பெற்ற என்.எல்.சி. பங்குகளை விற்கும் முயற்சியில் மத்திய அரசு மீண்டும் ஈடுபடக்கூடாது; அது தேவையின்றி தமிழர்களைக் குறிப்பாக நெய்வேலி தொழிலாளர்களை வீண் வம்புக்கு இழுக்கும் செயல்; அப்படிப்பட்ட செயலில் மத்திய அரசு ஈடுபட்டு மேலும் ஒரு எதிர்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்க விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதன்பிறகு கடந்த மாதம் 26-5-2013 அன்று நான் எழுதிய "உடன்பிறப்பு" மடலில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் இருக்கும் தனது பங்குகளை மத்திய அரசு மேலும் 5 சதவிகிதம் விற்பனை செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிவதாகவும், அந்த முயற்சி விரும்பத்தக்கதல்ல என்றும், எனவே என்.எல்.சி. பங்குகளை விற்பனை செய்வதற்குப் பதிலாக மாற்று வழிமுறைகளை ஆராயுமாறு கேட்டுக்கொள்வதாகவும்

ஜெயலலிதா 23-5-2013 அன்று இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் எழுதியிருந்ததை பெருந்தன்மையோடு நான் சுட்டிக் காட்டியிருந்தேன். அது என் வழக்கம். ஆனால் "கனி"மொழிக்காக நிலக்"கரி"யை மறந்துவிட்டேன் என்று என்னைக் குற்றஞ்சாட்டி அறிக்கை விடுவது அம்மையாரின் பெருந்தன்மை - வழக்கம் - கபடநாடகம்!

21-6-2013 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் என்.எல்.சி. யின் ஐந்து சதவிகித பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டதாக செய்தி வந்தவுடனேயே அந்த நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களும் கடும் அதிர்ச்சியடைந்து, தங்களது கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் காட்டுகின்ற வகையில் போராட்டங்களில் இறங்க ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டதையும் எடுத்துக்காட்டி;

"மத்திய அரசு தனது 5 சதவிகித பங்குகளை விற்பதன் மூலமாக 466 கோடி ரூபாய் தான் மத்திய அரசுக்குக் கிடைக்கக் கூடுமென்று தெரிகிறது. மத்திய அரசுக்கு இது ஒரு பெரும் தொகையல்ல. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளில் குறைந்தது 10 சதவிகிதம் பொதுமக்களிடம் இருக்க வேண்டும் என்ற இந்தியப் பங்கு பரிவர்த்தனை வாரியம் (செபி) நிபந்தனை விதித்திருப்பதின் அடிப்படையிலே தான் இந்த முடிவு எடுக்கப்படுவதாக மத்திய அரசு கூறக்கூடும். ஆனால் இந்தக் கட்டுப்பாட்டில் இருந்து நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு விலக்களிக்க பங்கு ஒப்பந்த விதிகள் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரலாம் அல்லது என்.எல்.சி நிறுவனத்தையே பங்குகள் விற்பனை செய்யப்படும் நிறுவனங்களின் பட்டியலிலே இருந்து நீக்கிவிடலாம்" என்று தமிழக முதலமைச்சர் மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருப்பதையும் மத்திய அரசு கருத்திலே கொண்டும்; ஏற்கனவே இதுபோல நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை விற்க மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு பின்னர் தமிழகத்தின் வேண்டுகோளையேற்று அந்த முடிவினைத் தள்ளி வைத்ததை மனதிலே கொண்டும்; தற்போது மத்திய அமைச்சரவை எடுத்துள்ள இந்த முடிவினை ரத்து செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அறிக்கை விடுத்திருந்தேன். நிலக்கரியை மறந்திருந்தால்;

ஜெயலலிதாவின் கருத்துக்களையும் சுட்டிக்காட்டி மத்திய அரசுடன் நான் வாதாட வேண்டிய அவசியம் என்ன?

நான் அறிக்கை விடுத்த 22-6-2013 அன்றுதான், தமிழக முதலமைச்சரும் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். அதன் பிறகுதான் பத்திரிகையாள நண்பர் ஒருவர் 5 சதவிகித பங்கினைத் தனியாருக்கு விற்பதற்குப் பதிலாக மாநில அரசுக்கு விற்பனை செய்யலாம் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். அந்தக் கருத்தையே தமிழக அரசின் கருத்தாக ஏற்றுக் கொண்டு 25-6-2013 அன்று முதல்வர் பிரதமருக்குத் தெரிவித்தார்.

நெய்வேலியில் உள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் இந்தப் பிரச்சினை பற்றி விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தி ஜூலை 3ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக முடிவெடுத்து, முறைப்படி அதனை நிர்வாகத்திற்கும் தெரிவித் திருக்கிறார்கள்.

ஆனால் இன்று 1-7-2013 "இந்து" நாளேடு "CM's offer to be examined as per SEBI rules, says Jaiswal" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில், "Asked for reaction to Ms Jayalalithaa's proposal, Mr. Jaiswal told The Hindu on Saturday evening that the question whether any State PSUs could pick up stake in a Central undertaking should also be examined" அதாவது ஜெயலலிதாவின் திட்டம் பற்றி மத்திய அமைச்சர் திரு. ஜெய்ஸ்வால் அவர்களிடம் கேட்டபோது, மத்திய நிறுவனத்தின் பங்குகளை மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் வாங்குவது பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்று தான் பதிலளித்திருக்கிறார்.

இதற்கிடையேதான் சென்னையில் 29-6-2013 அன்று பேட்டியளித்த மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் அவர்கள் "என்.எல்.சி.யின் 5 சதவிகித பங்குகளைத் தங்களுக்கு விற்க வேண்டும் என்று தமிழக அரசு கோரியிருக்கிறது. அதனைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கூடுதலாக 5 சதவிகித பங்குகளைக்கூடக் கொடுக்கச் சொல்வோம். நம் சொத்து நம்மிடமே இருக்க வேண்டும். என்.எல்.சி. யின் பங்குகளைத் தமிழக அரசு வாங்கினால் எங்களுக்கு மகிழ்ச்சி தான்" என்றெல்லாம் கூறி அந்தச் செய்தியும் ஏடுகளிலே வெளி வந்திருக்கிறது. (At a press meet in Chennai on Saturday, Mr. Jaiswal's colleague and Union Minister of State for

Industry and Commerce E.M. Sudarsana Natchiappan said the Centre would happily sell five per cent stake to the State Government. - "The Hindu", 1-7-2013)

இந்த நிலையில் தான் முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாட்டிலிருந்து விடுத்துள்ளதாக ஏடுகளில் வெளிவந்திருக்கும் அறிக்கையில், நெய்வேலி பங்கு விற்பனை உறுதி என்று மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் அறிவித்துள்ளதாகச் செய்தி வந்திருப்பதாகக்கூறி, ஜூலை 2ஆம் தேதியன்று இதற்காக அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

எனவே உண்மையில் ஜெயலலிதா அறிவித்துள்ள ஆர்ப்பாட்டம் நெய்வேலி நிலக்கரிக்காகவா அல்லது 8ஆம் தேதியன்று தி.மு. கழகம் சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் தொடங்கிட வேண்டுமென்பதை வலியுறுத்தி நடத்தவிருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு எதிராகவா? தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கே வழங்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்து ஏற்றுக்கொள்வதாக இருக்கும் நிலையில், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களும் இணைந்து ஜூலை 3ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் அறிவித்திருக்கும் நிலையில், ஜெயலலிதா அ.தி.மு.க. சார்பில் இங்கே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருப்பது ஊரை ஏமாற்றித் திசை திருப்பவா? அல்லது நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால்தான் நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்குகளை விற்கும் திட்டம் பற்றி மத்திய அரசு பரிசீலிக்க முடிவு செய்தது என்று வெற்றி விழா நடத்தி "நிலக்கரி நாயகி" என்ற பட்டம் பெற்றுக்கொள்ளவா? "கனி" - "கரி" என்றெல்லாம் ஒரு முதலமைச்சரே எழுதியிருப்பதால்தான், "நிலக்கரி நாயகி" என்று குறிப்பிட நேரிட்டது! என்ன செய்வது? கொண்டதே கோலம், கண்டதே காட்சி!

அன்புள்ள,

மு.க.

2-7-2013

3772. மாநிலங்களவைத் தேர்தல் - ஓர் ஆய்வு!

உடன்பிறப்பே,

தமிழகத்தைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆறு பேரின் பதவிக் காலம் ஜூலை 24ஆம் தேதியோடு முடிவடைவதால், அதற்கான தேர்தல் ஜூன் 27ஆம் தேதி நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தற்போது தமிழகத்தில் உள்ள சட்டப் பேரவை உறுப்பினர்களின் கட்சிவாரி விவரம் வருமாறு :-

அ.தி.மு.க. அணி 151 இடங்கள் (அ.தி.மு.க. 147, சமத்துவ மக்கள் கட்சி 2, குடியரசுக் கட்சி 1, கொங்கு முன்னேற்றக் கழகம் 1) - தி.மு.க. 23 இடங்கள் - தே.மு.தி.க. 22 இடங்கள் - சி.பி.எம். 10 இடங்கள் - சி.பி.ஐ. 8 இடங்கள் - தே.மு.தி.க. அதிருப்தியாளர்கள் 7 இடங்கள் - காங்கிரஸ் 5 இடங்கள் - பா.ம.க. 3 இடங்கள் - புதிய தமிழகம் 2 இடங்கள் - மனித நேய மக்கள் கட்சி 2 இடங்கள் - பார்வார்டு பிளாக் 1 இடம்.

மாநிலங்களவைத் தேர்தல் தொடக்கத்தில், தி.மு.க., தே.மு.தி.க., காங்கிரஸ், பா.ம.க. தவிர்த்த எஞ்சிய இடங்களான 181 இடங்கள் அ.தி.மு.க. அணிக்கு ஆதரவாகத்தான் இருந்தன. அந்த 181 இடங்களைக் கொண்டு ஐந்து இடங்களில் அவர்களின் கூட்டணி சுலபமாக வெற்றி பெற முடியும் என்ற நிலையே இருந்தது. ஆனால் காலியான ஆறு இடங் களில்; அந்த அணியில் இடம்பெற்றிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.ராஜாவின் இடமும் ஒன்று. எனினும் உண்மையில் அந்த இடத்தை டி. ராஜாவிற்கு வழங்கிடும் எண்ணம் ஜெயலலிதாவுக்கு தொடக்கத்தில் இல்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தா.பாண்டியன் தொடர்ந்து ஜெயலலிதாவிற்குத் தீவிர ஆதரவாளராகப் பேசி வருகின்ற காரணத்தால், அவருக்கு அந்த

இடத்தைப் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று ஜெயலலிதா எண்ணினார். ஆனால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையோ, அந்த ஒரு இடத்தில் டி.ராஜாதான் நீடிக்க வேண்டுமென்று நினைத்தது. எனவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஓர் இடத்தைக் கொடுத்திட ஜெயலலிதா முதலில் விரும்பவுமில்லை, அறிவிக்கவுமில்லை. அறிவிக்காதது மட்டுமல்ல; அந்தக் கட்சியின் சார்பில் முதலமைச்சரைப் பார்ப்பதற்காக டெல்லியிலிருந்து பரதன், சுதாகர் ரெட்டி போன்றவர்கள் நாள் கணக்கிலே காத்திருந்தபோதும் அரசியல் நாகரிகம் கருதி மரியாதைச் சந்திப்புக்குக்கூட நேரம் கொடுக்காமல், அலட்சியம் செய்துவிட்டு, அவர்களை டெல்லியிலே சந்திப்பதாகக் கூறி விட்டார். அவர்களை டெல்லியிலே சந்திப்பதாகக் கூறிவிட்டு, ஜெயலலிதா டெல்லி புறப்படுவதற்கு முன்பாகவே அ.தி.மு.க. ஐந்து இடங்களிலே போட்டியிடும் என்றும், வேட்பாளர்கள் யார் யார் என்றும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏமாற்றம் தரும் வகையில் சென்னையிலேயே அறிவித்துவிட்டார்.

டெல்லியில் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களான பரதனும், சுதாகர் ரெட்டியும் ஜெயலலிதாவைச் சந்தித்து, காலியாகும் இடங்களில் ஒரு இடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் "சிட்டிங் சீட்" என்பதை ஞாபகப்படுத்தி, அந்த இடத்தை அவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டபோது, "சிட்டிங் சீட் என்றால் தந்துவிட வேண்டுமா? அ.தி.மு.க. சார்பில் ஐந்து வேட்பாளர்களை அறிவித்து விட்டேன், மாற்ற முடியாது" என்று அழுத்தமாகக் கூற, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மீண்டும் வேண்டுகோள் விடுக்க, "6வது இடத்தில் நின்று வெற்றி பெற்றுக் கொள்ளுங்கள், வாழ்த்துக்கள்" என்று கூறிப் பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பது இடங்களிலும் அ.தி.மு.க. போட்டியிடும் என்றும், யாருடனும் கூட்டணி இல்லை என்றும் ஜெயலலிதா டெல்லியில் பகிரங்கமாகவும், பரபரப்பாகவும் அறிவித்தார். அந்த அறிவிப்பைக் கேட்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் நெளிந்தன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இடம்கொடுக்காமல், 5 இடங்களில் அ.தி.மு.க. போட்டியிட்டால், ஏற்கனவே

தே.மு.தி.க.விலிருந்து அதிருப்தி கொண்டு வெளியே வந்தவர்கள், புதிய தமிழகம், மனித நேய மக்கள் கட்சி, மேலும் சிலரைத் தே.மு.தி.க.விலிருந்து ரகசியமாக வாக்களிக்கச் செய்வதின் மூலம், ஐந்து இடங்களிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்று விடலாமென்று முதலில் எண்ணித்தான் ஐந்து இடங்களிலே அ.தி.மு.க. போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை ஜெயலலிதா அறிவித்தார்.

அ.தி.மு.க.விலிருந்து கம்யூனிஸ்ட்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில்தான், தொடக்கத்தில் இந்தத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி முடிவெடுக்காமல் இருந்த தி.மு.கழகம், டெல்லியிலே உள்ள சி.பி.எம். தலைவர்களிடம் மாநிலங்களவைத் தேர்தல் பற்றிப் பேசுவதற்கு முற்பட்டது. டெல்லியில் தோழர்கள் யெச்சூரி, பிரகாஷ் காரத் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களை நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு சந்தித்துப் பேசியபோது, "ஜெயலலிதாவின் அரசியல் நடவடிக்கைகளில் எங்களுக்கும் அதிருப்திதான்; மேலும் ஜெயலலிதா அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பது இடங்களிலும் தாங்களே போட்டியிடப் போவதாக அறிவித்துவிட்டார்; ஆனால் சி.பி.ஐ. தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துவிட்டால் எங்களுக்குள் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, நாங்கள் அவர்களைத்தான் ஆதரிக்க நேரிடும்" என்று நிலைமைகளை விளக்கினார்கள்.

13-6-2013 அன்று சென்னையில் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. அப்போது கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தி.மு. கழகத்தோடு கூட்டணி வைக்கத் தயாராக இருப்பதாக தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் கூறுவதாகவும், அவருடைய மைத்துனரும் அதை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகவும் கருத்துத் தெரிவித்தார்கள். அன்றையதினம் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது, "மாநிலங்களவைத் தேர்தல் குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை, எல்லாக் கட்சி களிடமும் பேசுவோம்" என்று கூறினேன்.

அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் ஐந்து பேரில் ஒருவராக இருந்த சரவணப் பெருமாளைக் கழற்றிவிட்டு, அவருக்குப் பதிலாகத் தஞ்சாவூர் கு.தங்கமுத்துதான் வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிலும் உறுதியாக இல்லாமல்,

கு.தங்கமுத்து அவர்களையும் திரும்பப் பெற்றுவிட்டு, அந்த இடத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரான டி.ராஜாவிற்கு அளிப்பதாக அ.தி.மு.க. அறிவித்தது.

"40 தொகுதிகளிலும் நாங்களே போட்டியிடுவோம், யாருடனும் கூட்டணி இல்லை" என்று டெல்லியிலே முதல் வாரம் பரபரப்பாக அறிவித்த அதே ஜெயலலிதா, ஒரே வார காலத்திற்குள் மனம் மாறி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்குத் தங்களுடைய ஆதரவு என்று அறிவித்தார்.

இந்த முரண்பாடுகளைப்பற்றித் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் யாராவது ஏதாவது விமர்சனம் செய்தார்களா? தி.மு. கழகத்தையும், காங்கிரஸ் கட்சியையும் "சந்தர்ப்பவாதிகள்" என்று தலையங்கம் தீட்டிய "இந்து" நாளேடு ஏதாவது விமர்சனம் செய்ததா? என்றால் இல்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அ.தி.மு.க. ஆதரவு தெரிவித்த பிறகு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வேறு வழியில்லாமல், சி.பி.ஐ. வேட்பாளரை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது.

அ.தி.மு.க. இவ்வாறு ஒரு முடிவெடுக்கக் காரணம், தி.மு.கழகமும், தே.மு.தி.க. வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் இணைந்து முடிவெடுத்துப் போட்டியிட்டால், அவர்களே இரண்டு இடங்களில் சுலபமாக வெற்றி பெற்று, அ.தி.மு.க.வின் வேட்பாளர் ஒருவர் தோற்கடிக்கப்பட நேரிடும் என்ற உண்மை தான்.

கம்யூனிஸ்ட் கட்சியோடு உறவு இல்லை என்று முடிவான பிறகுதான், தே.மு.தி.க. - தி.மு.க., பேச்சுவார்த்தை நடைபெற்றது.

15-6-2013 அன்று தி.மு.க. வேட்பாளர் கனிமொழி வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தார். கழகப் பொருளாளர் மு.க. ஸ்டாலினும் தே.மு.தி.க.வின் சுதீஷ் உடன் பேசினார். நல்ல முடிவு காணலாம் என்று முதலில் கூறிய போதிலும், தே.மு.தி.க. கட்சியின் கூட்டம் நடைபெற்ற பிறகு, அவர்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதென்று திடீரென்று முடிவெடுத்து அறிவித்து விட்டார்கள். அந்தக் கட்சியின் சார்பில் சேலம் திரு.ஏ.ஆர். இளங்கோவன் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். அவர்களுடைய வேட்பாளருக்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவையும் கோரி டெல்லிக்குச் சென்றார்கள். தி.மு.கழகம்; - பா.ம.க., காங்கிரஸ்,

மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் போன்ற கட்சிகளைத் தொடர்புகொள்ள முனைந்தது.

18-6-2013 அன்று மனித நேய மக்கள் கட்சியின் கூட்டம் நடைபெற்றது. பொருளாளர் மு.க.ஸ்டாலின் அவர்களோடு தொடர்பு கொண்டார். புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களையும் கழகத்தின் சார்பில் தொடர்புகொண்டு பேசியபோது, அவரும் கழகத்திற்கு ஆதரவாக உறுதியளித்தார். தே.மு.தி.க. வும் அவர்களுடன் தொடர்பு கொண்டது. அ.தி.மு.க. தரப்பிலும் பேசப்பட்டது. அதேநேரத்தில் பா.ம..க. வின் அன்புமணி ராமதாசை ஸ்டாலின், துரைமுருகன், ஜெகத்ரட்சகன் ஆகியோர் சந்தித்தனர். அவர் உறுதியளித்ததோடு 21-6-2013 தேதிய கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிப்பதாகத் தெரிவித்தார். ஆனால் அந்தக் கூட்டத்தில் பா.ம.க. தேர்தலையே புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டது. எனினும் மனித நேய மக்கள் கட்சியும், புதிய தமிழகம் கட்சியும் தி.மு. கழக வேட்பாளருக்கு வாக்களிப்பதாக என்னை நேரில் சந்தித்து உறுதி தெரிவித்தார்கள்.

இதற்குப் பிறகுதான், திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசுடன் பேசியது. அதே நேரத்தில் தே.மு.தி.க.வினரும் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் மூலமாக ஆதரவு கேட்டுக் கடிதம் கொடுத்து, அந்தக் கடிதமும் காங்கிரஸ் மேலிடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமை தனது ஆதரவைத் தி.மு.கழக வேட்பாளருக்குத் தெரிவித்தது. இதுதான் இந்த மாநிலங்களவைத் தேர்தலில் கட்சிகள் காட்டிய உறவும், மேற்கொண்ட நிலையும்!

ஆனால் இதுபோன்ற மாநிலங்களவைத் தேர்தல்களில் கடந்த காலங்களில் தி.மு. கழகம் காட்டிய அணுகுமுறை எப்படி இருந்தது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன். ஏனென்றால், மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியிடம் உதவி கேட்கும் தி.மு.க., ஈழப் பிரச்சினையை மறந்துவிட்டதா என்பதை நான் விளக்க வேண்டுமென்று பா.ம.க.வைச் சேர்ந்த அன்புமணி கேட்டிருக்கிறார். அவருக்கு நான் விளக்கம் தர வேண்டாமா?

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, அடுத்து வரும் மாநிலங்களவைத் தேர்தலில்

பா.ம.க.விற்கு ஓரிடம் வழங்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. 28-6-2004 அன்று மாநிலங்களவைத் தேர்தல் நடைபெற்றபோது - தி.மு.கழகம் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவோடு ஒரு இடத்தில் சுலபமாக வெற்றி பெறலாம் என்ற நிலை இருந்த போதிலும் - அவ்வாறு தி.மு.கழகம் தனக்கொரு இடத்தை எடுத்துக் கொள்ளாமல், தனது 30 வாக்குகளையும் பா.ம.க., காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் வழங்கி, அந்த இரண்டு கட்சிகளின் சார்பில் இன்று என்னைக் கேள்வி கேட்கும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்களும், மற்றும் சுதர்சன நாச்சியப்பன் (காங்கிரஸ்) அவர்களும் மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட மனப்பூர்வமாக ஒத்துழைத்தோம். அப்போது மாநிலங்களவை உறுப்பினராக அன்புமணி அவர்களைத் தி.மு.கழகம் வெற்றி பெறச் செய்ததால்தான் அவர் பின்னர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்ற முடிந்தது. எந்த அளவிற்குத் தி.மு.கழகம் தனது இடத்தை இணக்கமாக விட்டுக்கொடுத்தது என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

2006ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற நேரத்திலேகூட, ஒவ்வொரு கட்சியுடனும் உடன்பாடு செய்து கொண்டபோது, பா.ம.க. வுடன் செய்து கொண்ட உடன்பாட்டில் 31 சட்டமன்ற இடங்கள்தான் அவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளப்பட்டதே தவிர, மாநிலங்களவை உறுப்பினர் ஒன்று தரப்பட வேண்டுமென்று எந்தக் குறிப்பும் கிடையாது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தங்களைவிட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சட்டமன்றத் தேர்தலில் அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியபோது, அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக, அடுத்து வரும் மாநிலங்களவைத் தேர்தலில் ஓர் இடம் அவர்களுக்குத் தருவதாகத் தி.மு.க. ஒப்புக் கொண்டது. அந்த வார்த்தையைக் காப்பாற்றிடும் வகையில் 2007ஆம் ஆண்டு நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி. ராஜா அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டு தி.மு.கழகத்தின் உறுதியான, கண்ணியம் மிக்க ஆதரவோடு வெற்றி பெற்றார்.

2008ஆம் ஆண்டு மாநிலங்களவைத் தேர்தல் நடைபெற்றபோது, தி.மு.கழகம் சட்டப் பேரவையில் 96

இடங்களைப் பெற்றிருந்தது. தி.மு. கழகம் மூன்று இடங்களில் மாநிலங்களவைத் தேர்தலில் நின்று வெற்றி பெறலாம் என்ற நிலை இருந்தபோதிலும், தி.மு.க. இரண்டு இடங்களிலும், காங்கிரஸ் இரண்டு இடங்களிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஓர் இடத்திலும் போட்டியிடலாம் என்று முடிவு செய்தோம். அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்ட தோழர் டி.கே. ரெங்கராஜனின் வேட்பு மனுவை நான்தான் முன்மொழிய வேண்டுமென்று தோழர் வரதராசனும், தோழர் ஜி. ராமகிருஷ்ணனும் கேட்டு, என்னுடன் புகைப்படமே எடுத்துக் கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் தம்பி ஜி.கே.வாசனும், சகோதரி ஜெயந்தி நடராசனும் வெற்றி பெற்றார்கள்.

இன்னொரு உதாரணத்தையும் கூற விரும்புகிறேன். 1996ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க.வுடன் உறவு வைத்துக் கொள்ள முடிவெடுத்தபோது, மூப்பனார் தமிழ் மாநிலக் காங்கிரசை உருவாக்கி, தி.மு.க.வுடன் உறவுகொண்டு, அந்தத் தேர்தலில் தமிழகத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்றோம். அந்த வெற்றிக்குப் பின்னர், மூப்பனார் அவர்களும், திருமதி ஜெயந்தி நடராசன் அவர்களும், பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் த.மா.கா.வில் இருந்து கொண்டு, காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தாங்கள் பெற்ற மாநிலங்களவை உறுப்பினர் பொறுப்புக்களில் நீடிப்பது சரியல்ல என்ற கருத்துடன், மூவரும் தங்கள் மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளை 9-9-1997 அன்று ராஜினாமா செய்தார்கள்.

காலியாகிவிட்ட அந்த மூன்று இடங்களை நிரப்புவதற்கான இடைத் தேர்தல் வந்தது. அப்போது தி.மு.க.விற்கு 165 இடங்கள் இருந்தன. அதன் காரணமாக மாநிலங்களவை இடைத் தேர்தலில் மூன்று இடங்களிலும் தி.மு.க. சார்பில் மூன்று பேரை நிறுத்தி வெற்றி பெறலாம் என்ற நிலைமை இருந்தது. ஆனால் தி.மு.க. அப்படிச் சுயநல எண்ணத்தோடு நடந்துகொள்ளவில்லை. மூப்பனார் அவர்களிடம் பேசி, தி.மு. கழகம் ஒருவரைக்கூட நிறுத்தாமல், த.மா.கா. சார்பிலேயே மூன்று பேரை நிறுத்திக் கொள்ளலாம், அவர்களுக்குத் தி.மு.க. வெற்றியைத் தேடித் தரும் என்று கூறி, பீட்டர் அல்போன்ஸ், ஜெயந்தி நடராசன், அப்துல் காதர் ஆகியோர் த.மா.கா. சார்பில் வெற்றி பெற வழிவகுத்தோம். இதுவும் தி.மு.க. தோழமைக் கட்சிகளிடம் எந்த அளவிற்கு

உறவோடும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடும் இருந்தது என்பதற்கான உதாரணம்தான்.

மேலும் தி.மு.கழகம் தற்போது எடுத்த முடிவு காரணமாக ஈழப் பிரச்சினையை மறந்து விடவும் இல்லை; விட்டுவிடவும் இல்லை; எப்போதும் விடவும் மாட்டோம்.

மாநிலங்களவைத் தேர்தல் வேறு, இலங்கைப் பிரச்சினை வேறு, கூட்டணி வேறு என்று நான் தெளிவாகக் கூறிய பிறகும், ஒருசில பத்திரிகைக்காரர்கள் தி.மு.கழகம் இலங்கைத் தமிழர் பிரச்சினையை விட்டுவிட்டதைப் போலவும் தொடர்ந்து எழுதி வருகிறார்கள்.

தி.மு. கழகம், காங்கிரஸ், மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் போன்ற கட்சிகளோடு இணைந்து இந்த மாநிலங்களவைத் தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் இப்படியெல்லாம் எழுதி, தங்கள் மனப்புழுக்கத்தைப் போக்கிக்கொள்ள முயலுகிறார்கள். "தினமணி" நாளேடு அந்த எண்ணத்தோடு தான் மத்திய அமைச்சர் நண்பர் நாராயணசாமி அவர்களிடம், "காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி என்று கூற முடியாது என்று கருணாநிதி கூறியுள்ளாரே?" என்று கேட்ட நேரத்தில், அவர் மிகத் தெளிவாக, "மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரசின் ஆதரவை தி.மு.க. கேட்டது. காங்கிரசும் கொடுத்தது. அந்த அளவில்தான் இது இருக்கிறது. கூட்டணி தொடர்பாக எங்கள் கட்சியின் மேலிடம்தான் பதில் கூற முடியும்" என்று சொல்லியிருக்கிறார்.

மாநிலங்களவைத் தேர்தலில் தனக்கு வாக்களித்ததற்காக அந்தக் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தியையும், பிரதமர் மன்மோகன்சிங் அவர்களையும் கனிமொழி நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து வந்தார். அதுபற்றி "தினமணி"; "மத்திய அரசுக்கு தி.மு.க. ஆதரவளிக்கும், மன்மோகன்சிங், சோனியாவிடம் கனிமொழி உறுதி" என்று அரைப் பக்கத்திற்கு தலைப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி, "மாநிலங்களவைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஆதரவு அளித்ததற்காகத் தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்தேன்" என்று மட்டுமே கூறியிருக்கிறார். ஆனால் "தினமணி" காங்கிரஸ் மேலிட வட்டாரங்களும், பிரதமர்

அலுவலக வட்டாரங்களும் கூறியதாக "நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடரில் மத்திய அரசு கொண்டுவரும் சட்ட மசோதாக்களுக்கும், மத்திய அரசு எடுக்கும் முடிவுக்கும் தி.மு.க. ஆதரவு அளிக்கும்" என்று கனிமொழி உறுதியளித்தார் என்று எழுதியுள்ளது. ஒரு காலத்தில் "தினமணி"க்கு "தினப் புளுகு மணி" என்று பெயர் உண்டு. அதை மீண்டும் மீண்டும் "தினமணி" மெய்ப்பித்து வருகிறது.

இப்படிப்பட்ட பிரச்சாரங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தமிழகக் காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் திரு. முகுல் வாஸ்னிக் அவர்கள் சென்னையில் பேட்டியளித்துள்ளார். அப்போது, "மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.க.வை ஆதரிக்கும் முடிவு, எல்லாத் தலைவர்களையும், எல்லாச் சூழ்நிலைகளையும் ஆலோசித்துத்தான் எடுக்கப்பட்டது. உணவுப் பாதுகாப்பு மசோதா, நிலம் கையகப்படுத்தும் மசோதா போன்றவற்றைத் தி.மு.க. ஆதரிக்கும் என்று கூறியதன் காரணமாகத்தான் மாநிலங்களவைத் தேர்தலில் கனிமொழியை ஆதரித்தோம் என்று கூறுவதெல்லாம் பொய்யானவை" என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்.

ஏன்; இன்னமும் ஓர் உதாரணம் கூறுகிறேன். அண்மையில் இரண்டு வாரங்களுக்கு முன்பு பீகார் சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த நிதீஷ் குமார் அரசு வெற்றி பெற்றது. 243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டசபையில் முதல்வர் நிதீஷ்குமார் வெற்றி பெற 122 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆனால் அந்தக் கட்சிக்கு 118 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களுக்கு; இதுவரையில் அவர்களோடு கூட்டணியில் இல்லாத, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் 4 பேரும், சுயேச்சைகள் 4 பேரும், இந்தியக் கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஒருவரும் ஆதரவளித்தனர். அதன் காரணமாக எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சியோடும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடும் ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி அமைத்துவிட்டது என்று அர்த்தமா? இது பற்றிய விவரத்தை தம்பி டி.கே.எஸ். இளங்கோவன் "முரசொலி" யில் எழுதிய தன் கட்டுரையில் விளக்கியிருக்கிறார்.

எனவே தி.மு.கழகம் ஏதோ கொள்கைகளையெல்லாம் விட்டுவிட்டது என்றோ, சந்தர்ப்பவாதத் தன்மையோடு நடந்து

கொண்டது என்றோ, மற்ற கட்சிகளையெல்லாம் புறக்கணித்து விட்டுக் காங்கிரஸ் கட்சியோடு உறவு கொண்டுவிட்டது என்றோ, இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைக் கைவிட்டுவிட்டது என்றோ, மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு இடத்தைப் பெறுவதற்காக ஏதோ தவறு செய்துவிட்டது என்றோ ஒரு சிலர், குறிப்பாக ஒரு சில ஏடுகள் உள்நோக்கத்துடன் செய்கின்ற பிரச்சாரங்கள் அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது கறை பூசுவதற்காகவும், புழுதிவாரித் தூற்றுவதற்காகவும் ஜெயலலிதாவிடம் ஆதாயம் பெறுவதற்காகவும் செய்யப்படுகின்ற மாய்மாலங்களே தவிர வேறல்ல!

அன்புள்ள,

மு.க.

3-7-2013

3773. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகக் குரல் கொடுப்போம்!

உடன்பிறப்பே,

1970ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் தந்தை பெரியார் அவர்கள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அறிவித்திருந்தார்கள். ஆலயங்களில் கர்ப்பக்கிரகம் வரையில் சாதிப் பாகுபாடின்றி அனைவரும் சென்று ஆண்டவனைத் தொழுதிட வேண்டுமென்றும், அனைவருக்கும் சமமாக சாதி உயர்வு தாழ்வு இன்றி அர்ச்சகராகும் உரிமை வேண்டுமென்றும் வலியுறுத்துகிற அடிப்படையில் அந்தக் கிளர்ச்சி அமையுமென்று பெரியார் போர் முரசு கொட்டினார்.

அப்படியொரு கிளர்ச்சி நடத்தாமலே அவரது எண்ணத்தை நடைமுறைக்குக் கொண்டுவரச் சட்டம் இயற்றப்படும் என உறுதியளித்து, நான் தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் அறிக்கை கொடுத்தேன். அந்த வேண்டுகோளில்,

“குறிப்பிட்ட வகுப்பினர்தான் அர்ச்சகராக இருக்க வேண்டுமென்று யாரும் இந்த நூற்றாண்டில் வாதாடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காலம் வேகமாகச் சுழன்று மனிதனுக்கு மனிதன் பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது என்ற கொள்கை வலுப்பெற்று வரும் இந்நாளில் அப்படிப்பட்ட ஒரு பிற்போக்கு எண்ணத்தை யாரும் முரட்டுப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். வள்ளுவர், புத்தர், காந்தியடிகள் போன்றோரைப் போற்றுகிறவர்கள், ஆண்டவனுக்கு அர்ச்சகராகக் குறிப்பிட்ட சாதியினர்தான் இருந்திடல் வேண்டுமெனல் அநியாயமாகும். அர்ச்சகர்களுக்கெனச் சில தகுதிகள் இருக்க வேண்டும் என்பதிலோ, போற்றக்கூடிய புனிதத் தன்மைகளை அவர்கள் கடைப்பிடித்தாக வேண்டும் என்பதிலோ, அதற்குரிய

பயிற்சிகளை அவர்கள் பெற்றாக வேண்டும் என்பதிலோ, எனக்குக் கருத்து வேறுபாடில்லை. அப்படிப் பயிற்சி பெறுகிறவர்கள், எந்த வகுப்பினராயிருந்தாலும் அவர்கள் அதில் தேர்வு பெற்று அர்ச்சகராக ஆகலாம். அதற்கு விதிமுறைகள் வகுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதேசமயம் பரம்பரை அர்ச்சகர் வீட்டுப் பிள்ளைகள் அர்ச்சகராக விரும்பினால் அவர்களுக்கு முதல்சலுகை அளிப்பது பற்றியும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டு, அதன்படி அர்ச்சகர் பதவிகளைப் பிறப்பினால் கணக்கிடாமல் தகுதியொன்றினால் மட்டுமே கணக்கிடப்படக் கூடிய நாள் வந்து விடுமேயானால் ஆண்டவனைத் தொழுதிட ஆலயம் செல்வோர் சாதி வேறுபாடின்றிக் கர்ப்பக்கிரகம் வரையில் செல்வதற்கும் தடையில்லை என்பதும் கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டதாக ஆகிவிடும். கர்ப்பக்கிரகத்தில் இருக்கின்ற பொருள்களின் பாதுகாப்புக்காக மட்டுமே அந்த இடம், ஒருவர் பொறுப்பில் விடப்பட வேண்டுமே தவிர, அதற்குச் சாதி வர்ணம் பூசப்படக் கூடாது என்பதை இந்த அரசு மட்டுமல்ல; ஆண்டவன் எதிரே அனைவரும் சமம் என்ற கருத்தினை ஒப்புக் கொள்கிற எல்லோரும் ஏற்றுக்கொண்டே தீர்வர்.

ஆகவே, இந்த நல்ல நிலை ஏற்பட ஆலயங்களில் ஆண்டவன் முன்னே சாதியின் பெயரால் மற்றவர்களுக்கு இழைக்கப்படும் இழிவான அநீதி அகன்றிட, விதிமுறைகள் செய்திட அரசு முன்வருகிறது என்ற உறுதிமொழியினை ஏற்றுப் பெரியார் அவர்கள், தான் திட்டமிட்டிருக்கிற கிளர்ச்சியினை நிறுத்திவைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தந்தை பெரியார் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

இந்த எனது அறிக்கைக்கும் வேண்டுகோளுக்கு மிணங்கப் பெரியார் அவர்கள், தான் நடத்த இருந்த போராட்டத்தைத் தள்ளி வைக்கச் சம்மதித்தார்.

'தந்தை பெரியார் அவர்களுக்கு நான் அளித்த அந்த உறுதிமொழிக்கேற்ப 2.12.70ல் சட்டப் பேரவையில் 'அர்ச்சகர் சட்டம்' கொண்டு வரப்பட்டு நிறைவேறியது. அர்ச்சகர் சட்டம் கண்டு, சமத்துவம் விரும்பாத சனாதனிகள் வெகுண்டார்கள். பல்லாண்டு காலமாக அனுபவித்து வருகிற ஆதிக்கத்தை

அவ்வளவு எளிதில் இழந்திடச் சம்மதிப்பார்களா? அதனால் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். 12 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அரசியல் சட்டத்தில் மத சம்பந்தமாக அளிக்கப்பட்டுள்ள உறுதிப்படி அர்ச்சகர்கள் தங்கள் தொழிலை நடத்தும் உரிமையை அந்தச் சட்டத் திருத்தம் தடுக்கிறது எனக்கூறி அந்த அடிப்படையில் 'ரிட்' மனுக்கள் அளித்திருந்தனர். அந்த வழக்கில் 1972ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் நாள் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது வகுப்பு வேறுபாடற்ற நடவடிக்கை. அந்த நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட உரிமை உண்டு. மனுதார்களால் தவறு என்று கூறப்படும் இந்தச் சட்டம் மத சம்பந்தமான நடவடிக்கைகளிலோ விவகாரங்களிலோ தலையிடவில்லை. எனவே தமிழ்நாடு அரசு கொண்டுவந்த சட்டத் திருத்தம் செல்லுபடியானதே என்று தீர்ப்பிலே கூறப்பட்டிருந்தபோதிலும், நடைமுறையில் இனிமேல் செய்யக்கூடிய காரியம் என்ற வகையில் அந்தச் சட்டத்தின்படி காரியங்கள் நடைமுறைக்கு வராத அளவுக்கு முடக்கப்பட்டது. அது நடைமுறைக்கு வரவேண்டுமென்றால் அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். எத்தனையோ முறை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியும் மத்திய அமைச்சர்களிடத்தில் விவாதித்தும்கூட அந்த அரசியல் சட்டத்திருத்தப் பணி நடைபெறவே இல்லை. இது கண்டு கொதிப்படைந்த பெரியார் அவர்கள் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9 ஆகிய நாட்களில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் நாடு தழுவிய ஒரு போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். ஆனால், அந்தப் போராட்டத்தை நடத்தாமலேயே 1973 ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் பெரியார் அவர்கள் மறைந்து விட்டார்கள்.

சென்னை அண்ணா மேம்பாலத்திற்கருகே 1977ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ந்தேதி பெரியார் அவர்களின் சிலை திறப்பு விழா அ.தி.மு.க. சார்பாக நடைபெற்றபோது திராவிடர் கழகத்தின் சார்பில் அந்த விழாவில் கலந்துகொண்ட அன்னை மணியம்மையார் அவர்கள் அந்நாளைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில் பேசும்போது, "அர்ச்சகர் சட்டம் முடமாக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கென அரசியல்

சட்டம் திருத்தப்பட வேண்டும் என்கிற ஆவலை உள்ளத்தில் தேக்கி வைத்துக்கொண்டு, அதற்காக ஒரு போராட்டத்தையே நடத்தப் பெரியார் திட்டமிட்டிருந்தார். அதற்குள் மறைந்து விட்டார். கலைஞர் கருணாநிதி அவர்கள் பெரியார் மறைந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். பெரியாருடைய ஆசைகளை எல்லாம் எவ்வளவோ நிறைவேற்றினோம். ஆனால் இந்த அர்ச்சகர் சட்டத்தை எழுந்து நடமாடவைக்க முடியவில்லை. ஆகவே அவருடைய நெஞ்சில் ஒரு முள்ளோடுதான் புதைத்திருக்கிறோம்" என்று சொன்னார். "முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே அரசியல் சட்டத்தைத் திருத்தி, அர்ச்சகர் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வழிவகை செய்யுங்கள்" என்று உருக்கத்துடன் கேட்டுக்கொண்டார்.

1978ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சென்னை கடற்கரையில் நான் பேசும்போது, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களையும் அந்த மேடையில் வைத்துக்கொண்டு மத்திய அரசுக்கு விடுத்த வேண்டுகோள்களில், "பெரியாருக்கு எத்தனையோ விருப்பங்கள் உண்டு. சாதிபேதமற்ற சமுதாயம், மூட நம்பிக்கை ஒழிந்த சமுதாயம் இதையெல்லாம் காணவேண்டு மென்று பெரியார் ஆசைப்பட்டார். என்றாலும், அந்த ஆசைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன எனினும், இந்த ஆசை ஒன்றை நிறைவேற்ற முடியாமல் பெரியார் மறைந்துவிட்டார். ஆகவே மத்திய அரசுக்கு இந்த நூற்றாண்டு விழாவில் நான் இந்தப் பொதுக்கூட்டத்தின் மூலமாக இங்கே வெள்ளமெனத் திரண்டிருக்கின்ற உங்கள் சார்பாக விடுக்கின்ற வேண்டுகோள், அர்ச்சகர் சட்டம் நடைமுறைக்கு வர அரசியல் சட்டத்தைத் திருத்திக் கொடுங்கள் என்கிற வேண்டுகோள்' என்பதாகும். ஆனால் இந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை.

எனவே தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் இருந்த முள்ளை அகற்றிடும் வகையில் தி.மு. கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே 23-5-2006 அன்று அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதன்படி தகுதியும், திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதி வேறுபாடின்றித் திருக்கோவில்களில் அர்ச்சகர்களாக ஆவதற்கு வழி வகை செய்யப்பட்டது.

அப்போது வேத விற்பன்னரும், தமிழ் அர்ச்சனைக்காகப் பல்லாண்டு காலம் போராடியவருமான அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச் சாரியர், "இப்போது தேர்ந்தெடுத்திருக்கிற கருணாநிதி மந்திரிசபை எல்லா சாதிக்காரர்களும் அர்ச்சகர் ஆகலாம் என முடிவெடுத்து அறிவித்திருப்பது வேதவாக்கு. ஆகமத்தைச் சொல்லி மற்ற சாதிக்காரர்களைப் பிராமணர்கள் கோவிலுக்குள் விடாமல் இருந்தார்கள். ஆனால், உண்மை என்ன வென்றால் பிராமணனுக்கும், ஆகமத்துக்குமே முரண்பாடுதான். பிராமணன் தனக்கு எதிரான ஆகமத்தின் பெயரைச் சொல்லியே மற்ற சாதிக்காரர்களை உள்ளேவிட மறுத்து வந்தான். ஆனால் உண்மையில் பாஞ்சராத்ர ஆகமப்படி சாதி தத்துவமே இல்லை. ஆகமப்படியே பார்த்தாலும் யார் வேண்டுமானாலும் பூஜை செய்யலாம். பிராமணர் இதையே, தன் தொழிலாக்கிக் கொண்டதால், மற்ற யாரையும் உள்ளே விடவில்லை. ராமசாமி நாயக்கர் அந்தக் காலத்தில் என்னிடம் "தாத்தாச்சாரியாரே எங்க கையால ஒரு பூவை எடுத்து உங்க சாமிக்குப் போடக்கூடாதாய்யா?" என்று கேட்டார். அந்தப் பூவை இப்போது கருணாநிதி எடுத்துப் போட வைத்திருக்கிறார். இது வரவேற்க வேண்டிய ஒரு சீர்திருத்த விஷயம். இதை யாராவது ஆட்சேபித்தால் அவர்கள் மக்கள் முன்னேற்றத்தைத் தடுக்கிறார்கள்னு அர்த்தம். அவர்களுக்கு நாம் தான் நல்ல புத்தி சொல்லித் திருத்த வேண்டும்" என்று பதிலளித்தார்.

தி.மு.கழக ஆட்சியின் அரசாணையினை அடுத்துப் பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும்; சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டன. பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை இலவசமாக அளிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூபாய் 500 ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 34 மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 76 மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 மாணவர்கள், இதர வகுப்பைச் சேர்ந்த 42 மாணவர்கள் உட்பட மொத்தம் 207 மாணவர்கள் பயிற்சியை முடித்துச் சான்றிதழ் பெற்றனர்.

பயிற்சி முடித்த நிலையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் பிரச்சினை உச்ச நீதிமன்றம்வரை எடுத்துச் செல்லப்பட்டது. அதன் காரணமாக அவர்களுக்கு உடனடியாகத் திருக் கோவில்களில் வேலைவாய்ப்பு உருவாக்கிட இயலாமல் போயிற்று. அதற்குப் பின்னர் அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் பொறுப்பேற்றது. உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு அர்ச்சகர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஆறு மாத கால அவகாசத்தைக் கேட்டுப் பெற்றது. ஆறு மாத காலம் முடிந்த பிறகும், இந்தப் பிரச்சினையில் எவ்விதமான நடவடிக்கைகளையும் அ.தி.மு.க. அரசு மேற்கொள்ளவில்லை. அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத்தைச் சேர்ந்தோர், "உச்ச நீதிமன்றம் ஆறு மாத கால அவகாசம் வழங்கியும்கூட மாநில அரசு இதுவரை எவ்வித கலந்தாலோசனையையும் நடத்தவில்லை. எனவே மாநில அரசின் நோக்கத்தை நாங்கள் சந்தேகிக்கிறோம். 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையைத் தற்போதுள்ள தமிழக அரசு என்ன செய்யப்போகிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எனினும் எங்களுடைய சட்ட ரீதியான போராட்டத்தை நிறுத்திக் கொள்ளப் போவதில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் அரசியல் சட்ட ரீதியாக பயிற்சிபெற்ற அனைத்துச் சாதி அர்ச்சகர்களுக்கும் திருக்கோவில்களில் வேலை பெறுவதற்கான உரிமை உள்ளது என்று வழக்கறிஞர்களும் கருத்து அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில்தான் நமது தாய்க் கழகமான திராவிடர் கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்களின் முனைப்போடு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமையை வலியுறுத்தும் வகையிலும், தமிழ்நாடு அரசு இதனைச் செயல்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்தும் வகையிலும் ஆகஸ்ட் முதல் தேதியன்று அனைத்துக் கழக மாவட்டத் தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம்; இதில் ஒத்த கருத்துள்ளவர்களை அழைத்து மாநாடு ஒன்றினை நடத்துவது; மாவட்டத் தலைநகரங்களில் கருத்தரங்குகள் நடத்துவது; மூன்றாவது கட்டமாக மறியல் போராட்டத்தை நடத்துவது என்றெல்லாம் முடிவெடுத்து அறிவித்திருக்கிறார்கள்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற முடிவுக்குத் தொடக்கம் முதல் ஆதரவாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் நிறைவேற்றியிருக்கும் இந்தத் தீர்மானத்திற்கும் ஆதரவாக இருக்கும் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளேன். திராவிடர் கழகத் தீர்மானத்தின்படி, இதற்காக நடத்தும் போராட்டங்களில் கழக உறுப்பினர்கள் பங்கேற்று அந்தப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டும் வகையில் தேவையான நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

14-7-2013

3774. இந்திக்கு உள்ள உரிமை; தமிழுக்கு வேண்டாமா?

உடன்பிறப்பே,

மதுரை உயர்நீதிமன்றக்கிளையில் நேற்றைய தினம் (12-7-2013) சவுதி அரேபியாவில் தவிக்கும் கணவரை மீட்டுத் தரக் கோரிய வழக்கில் தமிழில் வாதாட அனுமதி மறுத்து, "உயர்நீதி மன்றத்தில் தமிழில் வாதாட அனுமதிக்க இயலாது" என்று கூறி, மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார் என்ற செய்தி வந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த ஆயிஷாபானு என்ற பெண்மணி மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறார். அந்த மனுவில் தன் கணவர் பக்கீர் மைதீன் என்பவர் துபாய்க்கு வேலைக்காகச் சென்றவரிடம் இருந்த பாஸ்போர்ட்டை கம்பெனி உரிமையாளர் பறித்துக் கொண்டதாகவும், கணவர் படிப்பறிவு இல்லாதவர் என்பதால் அவரால் இந்தியத் தூதரக அதிகாரிகளைத் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும், கடந்த 21 மாதங்களாக அவர் சிரமப்பட்டு வருவதாகவும், தன் கணவரை மீட்டு இந்தியாவுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பெண்மணிக்காக வாதாட விரும்பிய வழக்கறிஞர் தமிழில் வாதாட விரும்புவதாகவும், அதற்குத் தன்னை அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்கு மறுப்பு தெரிவித்த உயர் நீதிமன்ற நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் அரசியல் அமைப்பு பெஞ்ச், உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் ஆங்கிலத்தில்தான் வாதாட வேண்டுமென்று தெரிவித்திருப்பதாகக் கூறி, தீர்ப்பின் நகலையும் வழக்கறிஞரிடம் காட்டியதோடு, ஆயிஷா பானு தாக்கல் செய்த மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருக்கிறார்.

நீதிபதியின் மீது எந்தவிதமான குறையும் சொல்ல நான் முன்வரவில்லை. அவர் தனது தீர்ப்பில் கூறும்போது, அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 348, உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்காடு மொழியாக ஆங்கில மொழிதான் இருக்கும் என்று கூறுகிறது. ராஜ் நாராயணன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் ஆஜராகி இந்தியில் வாதாடினார். அப்போது அட்டார்னி ஜெனரலாக இருந்த தப்தாரி என்பவர் எதிர்ப்பு தெரிவித்தார். வழக்கை விசாரித்த பெஞ்சில் இருந்த நீதிபதிகளில் சிலரும் இந்தியில் பேசுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் பின்பு, இந்தியில் பேச நீதிபதிகள் அனுமதி மறுத்துவிட்டனர். அப்போது நீதிபதிகள், வழக்கு தொடர்ந்தவர் ஆங்கிலத்தில் பேசலாம் என்றும், இல்லாத பட்சத்தில் தனது தரப்பு வாதத்தை எழுத்துப்பூர்வமாக அளிக்கலாம் என்றும், இல்லையென்றால் வக்கீல் ஒருவரை நியமித்து வாதாடலாம் என்றும் உத்தரவிட்டனர். அப்போதும், கோர்ட்டு வழக்காடு மொழி ஆங்கிலம்தான் என்பதை அரசியலமைப்பு சட்டப் பிரிவு 348ஐச் சுட்டிக்காட்டி, நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

தி.மு. கழக ஆட்சி நடைபெற்றபோது, 22.11.2006 அன்று என்னைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம்,

“சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும், இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. இந்திய அரசியல் சாசனத்தின் சட்டப்பிரிவு 348ல் உயர் நீதிமன்றத்திலும் மற்றும் உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி ஆங்கில மொழியே சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2)இல் மாநில மொழியில் உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற வேண்டுமென்றால் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று மாநில அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப் பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள அரசியல் சாசனச் சட்டப் பிரிவைப் பயன்படுத்திச் சென்னை உயர் நீதிமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளிலும் வழக்கு மொழியாக நமது தாய்மொழியாம் தமிழை அறிமுகப்படுத்திடத் தமிழக அரசு முடிவெடுத்துள்ளது” என்று அறிவித்தேன்.

இந்த என் அறிவிப்பு தமிழக அரசின் செய்திக் குறிப்பாகவும் வெளியிடப்பட்டது. தமிழக அரசின் அறிவிப்புக்கு உயர்நீதி மன்றமும், வழக்கறிஞர்கள் சங்கமும் வரவேற்பு தெரிவித்தது. உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, மாண்புமிகு ஏ.பி.ஷா அவர்கள் இந்த முடிவினை ஆதரித்ததோடு, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளையும் அவரே தெரிவித்திருந்தார். நான் அதற்கு நன்றி தெரிவித்துக் கடிதமும் அவருக்கு அப்போதே எழுதினேன்.

அந்த அறிவிப்பு வந்தவுடன் "அன்றைய" டாக்டர் ராமதாஸ் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலைப்பாட்டை, கலைஞரை விட்டால் வேறு யார் நிறைவேற்ற முடியும்? அதன் தொடக்கத்தை அவர் ஆரம்பித்து விட்டார்" என்று என்னைப் பாராட்டி அறிக்கை விடுத்தார்.

உயர் நீதிமன்றத்திலே உள்ள வழக்கறிஞர்களின் தமிழ் மன்றத்தின் சார்பில் 2001ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இதே பிரச்சினைக்காக ஒரு ரிட் மனு தாக்கல் செய்தார்கள். ஆனால் அப்போது அதனை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. அப்போது என்ன காரணம் சொன்னார்கள் என்றால், "இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 348(2)இன்கீழ் ஆணை பிறப்பிக்கக் கூடிய அதிகாரம் ஆளுநருக்கு மட்டும்தான் உள்ளது, எனவே அவர் ஆணை பிறப்பிக்க வேண்டுமே தவிர, நீதி மன்றத்தில் வாதாடிப் பயனில்லை" என்று கூறினார்கள். அப்போது ஆட்சியிலே அ.தி.மு.க. இருந்தது எனினும், தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

22-11-2006 அன்று நான் செய்த அறிவிப்பினைத் தொடர்ந்து, 6-12-2006 அன்று உயர் நீதி மன்றத்தில் தமிழ் வழக்கு மொழி என்ற அரசினர் தீர்மானத்தை நானே தமிழகச் சட்டப்பேரவையில் முன்மொழிந்தேன். அந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் வருமாறு :-

> "சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்துவருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1) ஆவது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும்

ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருந்திட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7இன்படி, உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நட வடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7இன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயற்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதென இந்தச் சட்டமன்றப் பேரவையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் படுகிறது”

2006, டிசம்பர் 6ஆம் தேதியன்று தி.மு. கழக ஆட்சியில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட “உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழி” எனும் அரசின் தீர்மான நகலை, தமிழக ஆளுநர் அவர்களின் பரிந்துரையுடன், குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து நானே வழங்கியதோடு; அந்தத் தீர்மானத்தைச் சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைமுறைக்குக் கொண்டு வர அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டேன். குடியரசுத் தலைவர் அவர்களும் அதனைக் கவனிப்பதாக உறுதி அளித்தார்கள்.

ஆனால் மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் துறை 27-2-2007 தேதிய கடிதத்தில், “உச்ச நீதிமன்றத்துடன்

கலந்தாலோசித்து இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டதாகவும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகள், ஆணைகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் பிராந்திய மொழியைத் தற்போது அறிமுகப்படுத்துவது உகந்ததாக இருக்காது என்று இந்தியத் தலைமை நீதிபதி கருதுவதாகவும்" தெரிவிக்கப்பட்டிருந்தது.

11-3-2007 அன்று நான் இதுபற்றி விளக்கமாகப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ்பட்டீல், சட்டத் துறை அமைச்சராக இருந்த பரத்வாஜ் ஆகியோருக்கும் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் ராஜஸ்தான், பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநில உயர் நீதிமன்றங்களில் பிராந்திய மொழியான இந்தி மொழி பயன்படுத்தப்பட்டு வருகிற முன்மாதிரிகளையெல்லாம் சுட்டிக்காட்டிவிட்டு, இறுதியாகத் தமிழக மக்களின் நீண்ட கால விருப்பத்திற்கு வடிவம் கொடுக்க அவசர நடவடிக்கைகளை எடுத்து, குடியரசுத் தலைவரின் ஒப்புதலை விரைவாகப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டேன்.

11ஆம் தேதி நான் எழுதிய கடிதத்திற்கு, அடுத்த நாளான 12ஆம் தேதியே மத்திய சட்டத் துறை அமைச்சராக இருந்த எச்.ஆர். பரத்வாஜ் அவர்கள் எழுதிய பதிலில் "நான் தங்கள் கடிதத்தைக் கவனமாகப் படித்து, இந்த விஷயத்தில் தாங்கள் எழுப்பியுள்ள கருத்துகளை மனதில்கொண்டு இந்த விஷயத்தைப் புதிதாகப் பரிசீலித்து, கூடிய விரைவில் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுமாறு என்னுடைய துறையை நான் கேட்டுக் கொண்டுள்ளேன்" என்று தெரிவித்திருந்தார்.

12-3-2007 அன்று மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், டி.ஆர். பாலு, ஆ. இராசா, எஸ். ரகுபதி, க.வேங்கடபதி, சுப்புலட்சுமி ஜெகதீசன், மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனுவில் கையெழுத்திட்டு, பிரதமரை சந்தித்துக் கொடுத்தனர்.

கழக அரசு இந்தப் பிரச்சினையில் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக 2010ஆம் ஆண்டு சூன் மாதம் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், "சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழ்ப் பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக; 2006ஆம் ஆண்டு

தமிழக அரசு, சட்டப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறை வேற்றி, மேதகு தமிழக ஆளுநரின் பரிந்துரையினையும், மாண்பமை சென்னைஉயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியின் பரிந்துரையினையும் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. எனவே தாமதமின்றி உடனடியாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்ப் பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று இந்த மாநாடு; மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கில் முன்னாள் அமைச்சர், மதுரை பொன்.முத்துராமலிங்கம் தமிழிலேயே முழுவதும் வாதாடினார். அது அப்போதே "இந்து" நாளிதழில் "Judges Impressed : First case argued entirely in Tamil" என்ற தலைப்பிலே "Pon. Muthuramalingam, a former Minister and lawyer, argued the criminal appeal, filed by two convicts in a 2007 murder case, before a Division Bench comprising Justice M. Chockalingam and Justice M. Duraiswamy. The Judges recorded their appreciation of the counsel's effort" விரிவாக வெளியிட்டிருந்ததையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இவ்வளவிற்குப் பிறகும், உச்ச நீதிமன்றம் இதற்கு ஆட்சேபணை தெரிவித்த காரணத்தினால் மத்திய அரசினால் அப்போது தமிழக அரசின் தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்க முடிய வில்லை. இருந்தாலும் தமிழகத்திலே அப்போது தி.மு.கழக அரசு இருந்த காரணத்தினால் சென்னை உயர் நீதிமன்றத்திலே பெரும்பாலான வழக்குகளின் விசாரணைகள் எல்லாம் தமிழி லேயே நடைபெற்றன. தலைமை நீதிபதியாக இருந்த எம்.ஒய் இக்பால் அவர்களும், கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில், 2010ஆம் ஆண்டு, உயர் நீதிமன்றத்தில் தமிழில் வாதம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

ஆனால் தற்போது உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், ஜனவரி 3ஆம் தேதியன்று ஒரு வழக்கறிஞரிடம் தமிழில் வாதம் செய்ய அனுமதி மறுத்ததோடு; தமிழில் வாதம் செய்ய அரசியல் சட்டத்தில் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் கருத்துக்கூறியுள்ளார். இதனை எதிர்த்துத்தான் உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக

தமிழை அறிவிக்கக்கோரி, வழக்கறிஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களின் போராட்டம் மிகவும் நியாயமான போராட்டம் என்பதை மத்திய, மாநில அரசுகள் உணர்ந்துகொள்ள வேண்டும். குறிப்பாக மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு, வேறு சில வட இந்திய மாநிலங்களில் தற்போது நடைமுறையிலே இந்தி வழக்காடு மொழியாக அனுமதிக்கப்பட்டுள்ளதைப் போலவே, தமிழகத்திலே உள்ள உயர் நீதிமன்றத்திலும் வழக்காடும் மொழியாகத் தமிழை சட்டப்படி கையாளுவதற்கு, உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று, குடியரசுத் தலைவரிடம் தி.மு.கழக ஆட்சிக் காலத்திலிருந்து ஒப்புதலுக்காக நிலுவையிலே உள்ள சட்டத் திருத்தத்திற்கு அனுமதி பெற்றுத் தர வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-7-2013

3775. பெருந்தலைவர் காமராஜர் புகழ் வாழ்க!

(பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 111வது பிறந்த நாளையொட்டி "வசந்த்" தொலைக்காட்சி ஒளிபரப்பிய நிகழ்ச்சிக்கு தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி வழங்கிய புகழாரம்)

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் விழா இன்று! மறைந்த தலைவர்கள், மற்றும் சான்றோர்கள் யாராயினும் அவர்களுக்கும் நமக்கும் எவ்வளவு கொள்கை வேறுபாடுகள், கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் அவர்களின் சிறப்புகளையும், சீலமிகு செயல்களையும், செயற்கரிய மக்கள் பணிகளையும், தியாகங்களையும், ஆற்றலையும், என்றைக்கும் நாம் மறந்ததில்லை; மறவாமல் போற்றிக் கொண்டிருக்கிறோம்.

முதன் முதலாக தமிழகத்திலே காமராஜர் அவர்களுக்கு சிலை அமைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்த சென்னை மாநகராட்சியைச் சேர்ந்ததாகும்.

காவேரிப் பிரச்சினை, நெருக்கடி கால நிலை என்பன போன்றவற்றில் ஒவ்வொரு முடிவிற்கு முன்பும் அவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் ஆயிற்றே என நினைக்காமல், அனுபவத்தில் மூத்த அரசியல் தலைவர் என்ற முறையில் அவரை நான் அணுகி அவருடைய வீட்டிற்கே சென்று அவருடைய கருத்துக்களைத் தெரிந்து கொண்டு அவ்வாறே செயல்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்து நடத்திய இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது மாநாட்டிற்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றி அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் காமராஜர் அவர்கள்தான்.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் பிரதமர் வாஜ்பய் அவர்களிடம் வலியுறுத்தி, வாதாடிப் பெற்று குமரிக் கடற்கரையில்,

894.8116
கா 49

பேராசிரியர் அன்பழகன் நூலகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம்

காமராஜருக்கு, ஏற்றமிகு மணி மண்டபம் ஒன்றை நான் எழுப்பியதை எவர்தான் மறந்திட இயலும்?

சென்னை கடற்கரை சாலை, கழக ஆட்சியில் காமராஜர் சாலை ஆயிற்று. மீனம்பாக்கம் உள்நாட்டு விமான நிலையம் காமராஜர் பெயர் தாங்கி நிற்பதற்கு காரணம் கழக ஆட்சி!

விருதுநகரில் காமராஜர் பிறந்த இல்லத்தை நினைவகம் ஆக்கியது, சென்னையில் அவர் உடலை அடக்கம் செய்ய கிண்டியில், அண்ணல் காந்தி அடிகளின் பெயரால் உள்ள மண்டபத்திற்குப் பக்கத்திலேயே இடம் தேடி அங்கே எழிலார் நினைவகம் அமைத்தது போன்றவை கர்ம வீரர் காமராஜர் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஆற்றிய தொண்டுக்கு கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட எளிய காணிக்கைகளாகும்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு காமராஜரின் தாயார் பெயர் நினைவில் நிலைத்திருக்கும் வகையில் "அன்னை சிவகாமி அம்மையார் வளாகம்" என்று பெயர் சூட்டியதும், அரசின் "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட"த்திற்கு சிவகாமி அம்மையார் பெயரைச் சூட்டி அதை நடைமுறைப்படுத்தியதும், காமராஜரின் ஊழியராகப் பணியாற்றிய வைரவன் என்பவரை சென்னை காமராஜர் நினைவகத்தில் வழிகாட்டியாக அரசு ஊதியத்தில் அமர்த்தியதும், அவர் குடியிருக்க அரசு குடியிருப்பில் வீடு வழங்கியதும் கழக ஆட்சிதான். காமராஜரின் சகோதரியார் திருமதி நாகம்மாள் அவர்களை என் சகோதரியாராகவே கருதி, அந்த வழியே செல்லும் போதெல்லாம் அவரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

என் அருமை அன்னையார் அஞ்சுகம் அம்மையார் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் 27-1-1963 அன்று இயற்கையெய்தியபோது அவரது உடல் என் வீட்டிற்கு வந்து சேருவதற்கு முன்பே, அப்போது முதல் அமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் எனக்கு நேரில் ஆறுதல் கூறுவதற்காக, நான் வந்து சேரும் முன்பே என் இல்லத்திற்கு வந்து காத்திருந்தது என்னால் என்றைக்கும் மறக்க முடியாத மனிதாபிமானம் மிக்க நிகழ்ச்சியாகும்.

மு.க.ஸ்டாலின் திருமணத்தின்போது நேரில் சென்று அவரை அழைத்தேன். உடல் நலிவைக் காரணம் காட்டி வரஇயலாதே என்று வருத்தப்பட்டார். அவர் வரவேண்டும் என்பதற்காகவே திருமண மண்டபத்தை வேறு இடத்திற்கு மாற்றி, அவர் வரும் கார், மேடைக்கே வந்து அவர் மேடையிலேயே இறங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அவரும் வந்திருந்து வாழ்த்தியது எனக்கும், தம்பி ஸ்டாலினுக்கும் என்றும் பசுமையான நினைவில் பதிந்திருக்கும் நிகழ்ச்சியாகும்.

காமராஜர் பிறந்த நாளையொட்டி 15-7-1976இல் நான் எழுதிய ஒரு கவிதை :

"பெருந்தலைவ;
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் -
கொள்கைக் குன்றுக்கு எங்கணும் திருவிழா!
விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைந்த தலைவனாய் நின்றாய்!
சிறையின் கொடுமையும் சித்ரவதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி
ஆயிரம் உண்டு கருத்து மோதல் - எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப்போமோ?
தமிழ்நிலம் மணக்க வந்த திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!
கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும் - நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!
கதராடை மேனிதனை அலங்கரிக்கும் -
கதறுகின்ற ஏழைகளைக் கரம் அணைக்கும்.
கட்சிகளை நோக்கி, நீ கடுமொழிகள்
தொடுத்திடுவாய் - பிற
கட்சித் தலைவர்க்கோர் இன்னலென்றால்
துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!
பேரறிஞர், மூதறிஞர் மறைந்த போதும் உன் கண்ணீர்!
பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய்
கண்ணீர்! பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ ?

தனி மனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்
குமரிமுதல் இமயம்வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்.
"குணாளா! குலக்கொழுந்தே!" என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்.
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்.
கருப்புக் காந்தியென உன்னை - இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ !
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம் வாஞ்சையும்
காட்டினாய்! உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும்
நிலை நாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்த நாள் -
என்றைக்கும் அது சிறந்த நாள்!

திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் ஒருமுறை மேலவையில் என்னிடத்திலே ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதில் பெருந்தலைவர் காமராஜர், "நான் ஊட்டிக்குச் செல்கிறேன், ஊட்டிக்குச் சென்றால் அங்கே அரண்மூர் அரண்மனையில் ஓரிரு வார காலம் தங்க நேரிடும். அதற்கான அனுமதியை எனக்கு வழங்குமாறு அதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டுகிறேன்" என்று எழுதியிருந்தார். அதிலே கடைசியாக, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அப்படி இடம் ஒதுக்கப்படுவது இயற்கை, அவ்வாறு ஒதுக்கவும் என்று எழுதப்பட்டிருந்தது. நான் உடனே ராஜாராம் நாயுடுவிடம், "காமராஜருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறை யிலே இடம் ஒதுக்க முடியாது, தலைவர் என்ற முறையிலேதான் அவருக்கு இடம் தரமுடியும், அவ்வாறே அவர் அங்கே தேவைப்படுகின்ற நாள் வரை தங்கலாம்" என்று கூறினேன். அந்த அளவிற்கு அவரிடம் பற்றும் பாசமும் மரியாதையும் கொண்டிருந்தவர்கள் நாங்கள்.

தி.மு.கழக அரசு பதவிக்கு வந்த பிறகு கடுமையான சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். அப்போது அவருடைய அந்தரங்கச் செயலாளர்கள் "பெருந்தலைவர் அவர்கள் ஏ.சி. இல்லாமல் உறங்க முடியாது. அப்படிப்பட்ட உடல்நிலை இப்போது

அவருக்குள்ளது. எனவே அரசு விடுதிகளில் ஏ.சி. ஏற்பாடு செய்து கொடுங்கள்" என்று சொன்னார்கள். உடனடியாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு "அவர்கள் செல்கின்ற எல்லா விருந்தினர் மாளிகை களிலும் ஏ.சி. வசதி செய்து கொடுங்கள். அவர் அதிகாரத்தில் இல்லையே என்று பார்க்காதீர்கள், நாமெல்லாம் அதிகாரத்திலே வருவதற்கு அவர் வழி விட்டவர், வழி காட்டியவர், எனவே நீங்கள் யாரும் இதில் சுணங்காதீர்கள்" என்று உத்தரவு பிறப்பித்தேன்.

ஆம்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்கு நேரமாகி விட்டது என்று அந்த ஊர் காங்கிரஸ் கட்சித் தோழர்கள் பெருந்தலைவரைப் பார்த்து அழைத்த நேரத்தில், உடனே காமராஜர் கோபத்தோடு, "சும்மா இரு அய்யா, கருணாநிதியை திட்டத்தானே கூப்பிடுகிறே, அவர்தான் ஊருக்கு ஊர் ஏ.சி வச்சிக் கொடுத்திருக்கிறார், ஏ.சி.யை அனுபவித்துவிட்டுப் போய் அவரைத் திட்டச் சொல்றே, சரி, வாய்யா வாய்யா" என்று சொன்னாராம் (கைதட்டல்) இப்படி ஒரு மானசீகமான பாசம் அவருக்கு என்மீது; எனக்கு அவர் மீது.

ஒருமுறை காங்கிரஸ் கட்சி மாணவர்கள் சட்டக் கல்லூரியிலே கறுப்புக்கொடி காட்டப் போகிறோம் என்று சொன்னவுடன் காமராஜர் சொன்னாராம்: "வேலை கிடையாதா உங்களுக்கு? அவன் என்னாட்டம் பின்தங்கிய சமுதாயத்திலே பிறந்தவன், அவனும் போயிட்டா வேறு யாரு இருக்கா? நான்தான் இப்போது முதல் அமைச்சரா இல்லை, பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த அவனுக்கு கறுப்புக் கொடி காட்டப் போறீங்களா? கறுப்புக் கொடி களையெல்லாம் சுருட்டி வச்சிட்டு வீட்டுக்குப் போங்க" என்று சொன்னவர் பெருந்தலைவர் காமராஜர்.

காமராஜருக்கான இறுதிச் சடங்குகளை நிறைவேற்றியபோது ஒரு காங்கிரஸ் தலைவர் மேலவையிலே "ஒரு அண்ணனுக்கு ஒரு தம்பி இவ்வளவு ஈமச் சடங்குகளைச் செய்திருப்பாரா என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு சடங்குகளை, அவ்வளவு காரியங்களை பெருந்தலைவர் காமராஜருக்காக முதல் அமைச்சர் கருணாநிதி செய்தார்" என்று என்னைப் பாராட்டினார்.

காமராஜர் பிறந்த நாளை தமிழகமெங்கும் நினைவுகூர்ந்திடும் வகையில் "கல்வி வளர்ச்சி நாள்" என்ற பெயரில் அனைத்துக்

கல்விக் கூடங்களிலும் கொண்டாட வேண்டுமென்று அறிவித்து, அதனை அடுத்து வருகின்ற ஆட்சியினர் மாற்றி விடக் கூடாதே என்பதற்காகவே சட்டமாகவே இயற்றினேன்.

இவைகள் எல்லாம் - இந்தப் பாராட்டுக்கள் எல்லாம் - இந்தச் சிறப்புக்கள் எல்லாம் - இந்தப் புகழுரைகள் எல்லாம் நான் அரசியலிலே காமராஜரை எதிர்த்துப் பேசிய பேச்சுக்கள், நான் ஈடுபட்ட செயல்கள் இவைகளுக்கெல்லாம் ஒரு பரிகாரமாக என்னை மாற்றுகின்ற அளவிற்கு இருந்தன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் புகழ் வாழ்க!

★★★

16-07-2013

3776. தொய்வின்றி தொடரும் நமது பயணம்!

உடன்பிறப்பே,

ஈழத் தமிழர்கள் ஜனநாயக ரீதியாக அனைத்து வகை உரிமைகளையும் பெற்று, சுயமரியாதையோடும், கண்ணியத்தோடும் வாழ்ந்திட வேண்டும் என்பதற்காக நாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, 16-7-2013 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் "டெசோ" அமைப்பின் கூட்டம் நடைபெற்று, ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானங்கள் எல்லாம் ஏடுகளில் வெளிவந்திருப்பதைப் படித்திருப்பாய்!

இடையறாத இன்னல்களுக்குத் தொடர்ந்து ஆளாகிவரும் இலங்கைத் தமிழர்தம் வாழ்வில் ஒளி காண வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் தலைமையிலான திராவிடர் கழகமும், மதுரை நெடுமாறன் தலைமையில் இருந்த காமராஜ் காங்கிரஸ் இயக்கமும் சேர்ந்து தான் தமிழ் ஈழ ஆதரவாளர் இயக்கம் என்ற "டெசோ" அமைப்பு சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. 26-4-1985 அன்று திருவள்ளூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) உருவாக்கப்படுவதைப் பற்றி அறிவித்தேன். டெசோ அமைப்புக்கு தலைவராக நானும், உறுப்பினர்களாக கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், தமிழர் தலைவர் கி. வீரமணி, பழ. நெடுமாறன், அய்யணன் அம்பலம் ஆகியோரும் அப்போது இடம் பெற்றோம்.

ஈழத் தமிழருக்கு ஆதரவாக 29-4-1985 அன்று சென்னையில் நடைபெற்ற மறியலில் 4002 பேரும், 30ஆம் தேதி திருச்சியில் 3000 பேரும், மே 3ஆம் தேதி தர்மபுரியில் 1000 பேரும், 6ஆம் தேதி சேலத்தில் 3000 பேரும், 7ஆம் தேதி தஞ்சையில் 6000 பேரும், 8ஆம் தேதி வட ஆர்க்காட்டில் 2500 பேரும், 13ஆம்தேதி தென் ஆர்க்காட்டில் 3000 பேரும், 15ஆம் தேதி பெரியார் மாவட்டத்தில்

1500 பேரும், 16ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3000 பேரும், 17ஆம் தேதி கோவை, நீலகிரி மாவட்டங்களில் 3500 பேரும், 18ஆம் தேதி ராமனாதபுரம், பசும்பொன், காமராஜர் மாவட்டங்களில் 3000 பேரும், 20ஆம் தேதி மதுரை மாவட்டத் தில் 5000 பேரும், 22ஆம் தேதி நெல்லை, குமரி, புதுவையில் 5500 பேரும் ஈடுபட்டு கைது ஆயினர்.

இலங்கைத் தமிழர்களின் நலன் காக்க 16-5-1985 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற என்னையும் மற்றும் ஆயிரம் பேரையும் கைது செய்து சிறைச்சாலையில் அடைத்தனர். நீதிபதி என்னைப் பார்த்து குற்றச்சாட்டை ஒப்புக் கொள்கிறீர்களா என்று கேட்ட போது, "நீதிமன்றத்தின் கண்ணோட்டத்தில் சட்டப்படி நான் குற்றவாளி யாக இருக்கலாம், ஆனால் எனது தமிழ் இன உணர்வு அடிப்படையில் என் மனசாட்சிப்படி நான் குற்றவாளி அல்ல" என்று கூறினேன்.

1986ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் திங்களில் இலங்கையில் சிங்கள இராணுவத்தின் கொடுமைகள் அதிகரித்தன. அம்பாறை மாவட்டத்தில் தங்கவேலாயுதபுரம் என்ற கிராமத்தில் ஒரு நாள் இலங்கை இராணுவம் நுழைந்து கண்ணில் பட்ட பெண்களையும், வயதானவர்களையும், குழந்தைகளையும் குருவிகளைச் சுடுவது போலச் சுட்டுக் கொன்றார்கள். ஒரே நாளில் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழர்கள் மடிந்தனர். தொடர்ந்து இப்படிப்பட்ட துயரச் செய்திகள் தமிழகத்திற்கு வந்து கொண்டே யிருந்ததால், சென்னையில் 'டெசோ'வின் அமைப்புக் கூட்டம் என் தலைமையிலே கூடி, மாவட்டந்தோறும் பேரணிகளை நடத்துவதென்றும், மதுரை மாநகரில் 'டெசோ' சார்பில் அனைத்திந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களை எல்லாம் அழைத்து "இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டினை" நடத்துவதென்றும் முடிவெடுத்தோம்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்து டெசோ அமைப்பின் சார்பில் 3-10-1985 அன்று கோவையிலும், 4-10-1985 அன்று திண்டுக்கல்லிலும், 5-10-1985 அன்று தூத்துக்குடியிலும், 6-10-1985 அன்று திருச்சியிலும், 7-10-1985 அன்று சேலத்திலும், 13-10-1985 அன்று வேலூரிலும் மிகப் பெரிய பேரணிகள் நடத்தப்பட்டன.

4-5-1986 அன்று மதுரையில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டுக்கு "டி.யு.எல்.எப்." சார்பாக அமிர்தலிங்கம், "எல்.டி.டி.ஈ." (விடுதலைப் புலிகள்) சார்பாக திலகர், "டெலோ" சார்பாக மதி, "புரோடெக்" சார்பாக சந்திரகாசன், "ஈராஸ்" சார்பாக ரத்தின சபாபதி, "டி.இ.எல்.எப்." சார்பாக ஈழவேந்தன், "ஈ.பி.ஆர்.எல்.எப்." சார்பாக வரதராஜப்பெருமாள், "பிளாட்" சார்பாக வாசுதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பதும், அந்த மாநாட்டில் அகில இந்திய ரீதியில் என்.டி ராமராவ், வாஜ்பய், பகுகுணா, ராமுவாலியா, உபேந்திரா, உன்னிகிருஷ்ணன், ஜஸ்வந்த் சிங், கர்நாடக உள்துறை அமைச்சர் ராச்சையா மற்றும் தமிழகத் தலைவர்கள் பேராசிரியர் அன்பழகன், தமிழர் தலைவர் வீரமணி, பழ. நெடுமாறன், அய்யணன் அம்பலம், அப்துல் சமத், சுப்பிரமணியம் சுவாமி ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போதும் இலங்கைத் தமிழர் வாழ்வில் நிரந்தர விடியல் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் அந்த மாநாட்டினை "டெசோ" அமைப்பின் சார்பில் நடத்தினோம்.

எனவே "டெசோ" இயக்கத்தின் சார்பில் நாங்கள் நடத்துகின்ற எந்த நிகழ்ச்சியும் சில உளறுவாயர்கள் கூறுவது போன்ற எந்த உள்நோக்கத்தோடும் நடத்தப்படுவதில்லை. ஏன், கடந்த ஆண்டு 12-8-2012 அன்று சென்னையில் "டெசோ" இயக்கத்தின் சார்பில் நடத்திய "ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாடு"ம் எந்த உள்நோக்கத்திற்கும் இடம் தராமல் நடத்தப்பட்ட மாநாடுதான். அந்த மாநாட்டினை அ.தி.மு.க. அரசின் தடைகளையெல்லாம் கடந்து நாங்கள் நடத்திய போதும், மாலையில் நடைபெற்ற "டெசோ" மாநாடும், அதனையொட்டி காலையில் நடைபெற்ற ஆய்வரங்கமும் நடைபெறவே நடைபெறாது என்றும், அப்படியே நடைபெற்றாலும் வெளிநாட்டிலிருந்தோ, இலங்கையிலிருந்தோ, வட மாநிலங்களிலிருந்தோ இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் ஆர்வமும் அக்கறையும் உடைய யாருமே கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும், கருணாநிதி ஏமாறப் போகிறார் என்றும் மனப்பால் குடித்தவர்களின் முகத்தில் எல்லாம் கரியை அள்ளிப் பூசுகின்ற அளவிற்கு அந்த "டெசோ" மாநாடு மிகவும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் ஈழத்தமிழர்களுக்குப் பயனுள்ள வகையிலும் நடைபெற்று முடிந்தது.

"டெசோ" இயக்கத்தின் சார்பில், அன்று காலையில் மூன்று மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்ற ஆய்வரங்கத்தில் இந்தியாவின் வட மாநிலங்களிலிருந்தும், அமெரிக்கா, பிரிட்டன், சுவிட்சர்லாந்த், சுவீடன், மொராக்கோ, சிங்கப்பூர், மலேசியா, நைஜீரியா மற்றும் இலங்கை நாடுகளிலிருந்தும்; மாநாட்டுக்கு வந்தால் இலங்கை கொடுங்கோல் அரசு என்ன செய்யுமோ என்ற அச்சத்தால் வராத ஒரு சிலர் தவிர்த்து வந்திருந்த 30க்கு மேற்பட்ட பன்னாட்டுப் பிரதிநிதிகள், தமிழார்வலர்கள், ஈழத் தமிழர் பிரச்சினைகளில் தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருவோர், வரைவுத் தீர்மானங்களாக தயாரிக்கப்பட்டிருந்த 11 தீர்மானங் களின் மீது விரிவாக தங்கள் ஆழ்ந்த கருத்துக்களையும், திருத்தங்களையும் எடுத்து வைத்து இறுதித் தீர்மானங்களை வடிவமைத்து உருவாக்கிய தோடு மட்டுமின்றி, புதிதாக மூன்று தீர்மானங்களையும் முன்மொழிந்து அவையும் விவாதிக்கப் பட்டு மாநாட்டிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. குறிப்பாக கடைசித் தீர்மானமான "டெசோ" மாநாட்டிற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்த தமிழக அ.தி.மு.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறி, அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததே "லோக் ஜனசக்தி" தலைவரும், மத்திய அரசின் முன்னாள் அமைச்சரும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அருமை நண்பர் ராம் விலாஸ் பஸ்வான் அவர்கள்தான்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டோடும் "டெசோ" பணிகளை நாங்கள் முடித்திடவில்லை. 19-11-2012 அன்று அண்ணா அறிவாலயத்தில் "டெசோ" அமைப்பின் கூட்டம் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. பொதுச் செயலாளர் பேராசிரியரும், இளவல் கி. வீரமணி, தொல். திருமாவளவன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோரும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஐ.நா.விற்குச் சென்று தேவையான விளக்கங்கள் அளித்து வந்த தளபதி மு.க.ஸ்டாலின், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, லண்டன் மாநாட்டில் கலந்து கொண்ட அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் மற்றும் ரவிக்குமார், அசன் முகமது ஜின்னா ஆகியோரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு; நான்கு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

4-2-2013 அன்று மீண்டும் "டெசோ" அமைப்பின் கூட்டம் சென்னையில், அண்ணா அறிவாலயத்தில் என் தலைமையில் நடைபெற்று 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த மாநாட்டில்தான், இலங்கையில் தமிழர்கள் வாழும் 89 கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டதைப் பற்றியும், தமிழர்கள் வழிபடும் 367 இந்துக் கோயில்கள் மற்றும் மசூதிகள், தேவாலயங்கள் அழிக்கப்பட்டு வருவதைப் பற்றியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து துன்புறுத்தி வருவதைக் கண்டித்து 18-2-2013 அன்று ராமேஸ்வரத்திலும், 19-2-2013 அன்று நாகப்பட்டினத்திலும், "டெசோ" இயக்கத்தின் சார்பில் "கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அவ்வாறே அந்த அறவழி ஆர்ப்பாட்டங்களும் தமிழ் மக்களின் பேராதரவோடு நடைபெற்றுள்ளன.

மீண்டும் 25-2-2013 அன்று "டெசோ" அமைப்பின் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் என் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்குப் பின், என் சார்பில், செய்தியாளர்களைச் சந்தித்த தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள், "மனித உரிமைகளை மீறிய போர்க் குற்றவாளியான இலங்கை அதிபர் ராஜபக்சேவை கண்டித்திடும் வகையில் மார்ச் 5ஆம் தேதியன்று "டெசோ" இயக்கத்தின் சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை "முற்றுகையிடும் போராட்டம்" நடைபெறும் என்றும், அதே நாளில் டெல்லி நாடாளு மன்றம் முன்பு தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர், தொல். திருமாவளவனும் கலந்து கொண்டு "கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்துவார்கள் என்றும் அறிவித்தார். மேலும் மார்ச் 7ஆம் தேதியன்று "டெசோ" இயக்கத்தின் சார்பில் டெல்லியில் நடைபெறும் சிறப்பு மாநாடு மற்றும் கருத்தரங்கில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், பல்வேறு மனிதநேய அமைப் பினரும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள் என்றும் கூறினார். அவ்வாறே இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சிறப்பாக நடைபெற்றன.

5-3-2013 அன்று "டெசோ" அமைப்பின் சார்பில் நடைபெற்ற "முற்றுகைப் போராட்டத்தைத்" தொடர்ந்து அண்ணா அறிவாலயத்தில் "டெசோ" உறுப்பினர்களின் கூட்டத்தில் இலங்கை அரசின் இனப் படுகொலையைக் கண்டித்து அமெரிக்கா

கொண்டு வரும் தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி 12-3-2013 அன்று தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

15-4-2013 அன்று நடைபெற்ற "டெசோ" கூட்டத்தில், கச்சத் தீவினை இலங்கைக்கு ஒப்பந்தத்தின் மூலம் விட்டுக் கொடுத்தது அரசியல் சட்ட ரீதியாகச் செல்லுபடி ஆகாது என்பதுதான் உண்மை என்றும், எனவே 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதைப் பிரகடனப்படுத்தவும், "டெசோ" அமைப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதென முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அவ்வாறே உச்ச நீதிமன்றத்தில் என் பெயரிலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கும் உச்ச நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட் டிருக்கிறது.

இந்த வரிசையில்தான் நேற்றையதினம் (16-7-2013) "டெசோ" கூட்டம் நடைபெற்று, அதிலே இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தியும், இலங்கையில் நடைபெறவுள்ள "காமன்வெல்த்" மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வற்புறுத்தியும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியும், இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த தீர்மானங்களின் மீது இந்திய மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், சிங்கள ஆதிக்க வெறிக்கு எதிராக தமிழர் எழுச்சியை ஒன்று திரட்டவும், "டெசோ" இயக்கத்தின் சார்பில் வரும் ஆகஸ்ட் 8 ஆம் தேதியன்று தமிழகம் முழுதும் மாவட்டத் தலைநகரங்களில் "தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்" நடத்துவதென முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, நமது இயக்கத்தின் சார்பில் இவ்வாறு இலங்கைப் பிரச்சினைக்காகவும், சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும், ஏனைய பொதுமக்கள் பிரச்சினைகளுக்காகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டுமென்று தலைமையின் சார்பில் முடிவெடுத்து அறிவித்து வருகிறோம். இத்தகைய நிகழ்ச்சிகளை இன்றுள்ள அரசியல்

சூழலில் நடத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை நீங்கள் எல்லாம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இலங்கைத் தமிழர் உறவு என்பது நம்முடைய தொப்புள் கொடி உறவாகும். அவர்களுக்காக "டெசோ" இயக்கத்தின் சார்பில் ஆகஸ்ட் 8ஆம் தேதி நடத்த வேண்டிய ஆர்ப்பாட்டத்தை எப்போதும் போல் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்பவே இருக்கிறது. சென்னை மாநகரில் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நான் தலைமை தாங்கவிருக் கிறேன் என்கிற போது, நீயும் இந்த ஆர்ப்பாட்டத்தைச் சிறப்பாக ஆக்கிடுவாய்; ஆக்கிட வேண்டும்! ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைத்திடும் வரை, நமது அறவழிப் பயணம் நிற்காது!

அன்புள்ள,

மு.க.

18-07-2013

3777. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்!!

உடன்பிறப்பே,

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் விற்பனை பிரச்சினை நல்ல முறையில் நடந்து முடிந்து தொழிலாளர்கள் எல்லாம் பணிக்குத் திரும்பினார்கள் என்று செய்தி வந்துள்ளது. நமது தொ.மு.ச.வின் தலைவர் தம்பி சண்முகம் தொலைபேசி வாயிலாக அந்தச் செய்தியை அன்று மாலையில் கூறியபோதே என்னுடைய பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் மனதிலே நெருடும் ஒருசில கேள்விகள் என்னைக் குடையவே செய்தன.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1500 கோடி ரூபாய் இலாபத்தோடு இயங்கி வந்த நிலையில், மத்திய அரசின் அமைச்சரவை 21-6-2013 அன்று 466 கோடி ரூபாய் மதிப்புள்ள 5 சதவிகிதப் பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்க முற்பட்ட நிலையில் 22-6-2013 அன்றையதினமே நான் ஓர் அறிக்கை விடுத்தேன்.

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா இந்த ஆண்டு மே மாதத்தில், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்கக் கூடும் என்று ஒருசில நாளேடுகளில் செய்தி வந்தவுடனே பிரதமருக்கு 23-5-2013 அன்று; தான் கடிதம் எழுதியதாக, தனது அறிக்கையிலே கூறியிருக்கிறார்.

அவர் கடிதம் எழுதிய அதே காலகட்டத்தில் தி.மு. கழகத்தின் சார்பாக நானும் இதே பிரச்சினை பற்றி 26-5-2013 அன்று "முரசொலி"யில் எழுதும்போது, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் இருக்கும் தனது பங்குகளை மத்திய அரசு மேலும் 5 சதவிகிதம் விற்பனை செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிவதாகவும், அந்த முயற்சி விரும்பத்தக்கதல்ல என்றும், எனவே என்.எல்.சி. பங்குகளை விற்பனை செய்வதற்குப் பதிலாக

மாற்று வழிமுறைகளை ஆராயுமாறு கேட்டுக்கொள்வதாகவும் ஜெயலலிதா இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் எழுதி யிருந்ததைப் பெருந்தன்மையோடு நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அ.தி.மு.க. அரசின் சார்பில் எழுதப்பட்டதை மறைக்க வேண்டும் என்ற குறுகிய புத்தி எனக்கு எப்போதும் கிடையாது.

தற்போது நடந்ததைப் போலவேதான், தி.மு. கழகம் மீண்டும் 2006ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது 22-6-2006 அன்று நெய்வேலிப் பங்குகளில் 10 சதவிகிதத்தை விற்பனை செய்யும் முடிவினை மத்திய அரசு அறிவித்தது. மறுநாள் 23ஆம் தேதி காலையிலேயே தி.மு.க. தொழிற்சங்கம் (தொ.மு.ச.); சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., அதிகாரிகள் சங்கம் ஆகிய சங்கத்தினரை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தியது. 4-7-2006 அன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவதென அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. 25-6-2006 அன்று இந்தப் பிரச்சினை குறித்துப் பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தில், "நெய்வேலியில் பத்து சதவிகிதப் பங்கினை விட்டுத்தருவது பற்றி, தமிழகத்தில் எழுந்துள்ள எதிர்க் கருத்துக்களை மத்திய அரசு அலட்சியப்படுத்தி விடக் கூடாது. ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்சத் திட்டத்தில் இருந்து விலகிச் செல்வதற்கு; எந்தக் காரணம் கூறப்பட்டாலும், அது முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்கும் உறுதிப்பாட்டினைத் தளர்த்துவ தாகவே கருதப்படும். எனவே மத்திய அரசு இந்த முடிவை மறுபரிசீலனை செய்திட வேண்டுகிறேன்" என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

எனது இந்தக் கடிதத்திற்கு உடனடியாகப் பதில் வராத நிலையில், 4ஆம் தேதி முதல் நெய்வேலியில் வேலை நிறுத்தம் தொடங்கியது. 6-7-2006 அன்று செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, "நெய்வேலிப் பிரச்சினையில் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் மத்திய அரசு இருக்கும்போது, மத்திய அரசினால் எடுக்கப்பட்டுள்ள அந்த முடிவுக்குத் தி.மு.க. அந்த அரசிலே இடம்பெற்று, இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதை டெல்லியிலே உள்ள கழக அமைச்சர்கள் பிரதமரிடத்திலே அறிவித்திடுமாறு கூறியிருக்கிறேன்" என்று சொன்னதோடு, அவ்வாறே மத்திய

அமைச்சராக இருந்த தம்பி தயாநிதி மாறன் மூலமாக உடனடியாகப் பிரதமரைச் சந்தித்து எனது கருத்தைத் தெரிவிக்கச் செய்தேன். அதன் பின்னர் நெய்வேலி நிறுவனத்தின் பத்து சதவிகிதப் பங்குகளை விற்கும் முடிவை நிறுத்திவைப்பதாக அன்று இரவே மத்திய அரசு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து தொழிலாளர்கள் தங்களது வேலை நிறுத்தத்தையும் திரும்பப் பெற்றனர்.

ஆனால் இப்போது முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கும் ஜெயலலிதா விடுத்துள்ள நீண்ட அறிக்கையில் இதையெல்லாம் அப்படியே மூடி மறைத்துவிட்டு, "மத்திய அரசின் முடிவைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதனையடுத்து மத்திய அரசு தனது முடிவைக் கைவிட்டது" என்று அப்போது 2006ஆம் ஆண்டில் மத்திய அரசு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் திரும்பப் பெற்றதற்கு அ.தி.மு.க.தான் காரணம் என்பதைப்போல இப்போது வெளியிட்டுள்ள அறிக்கையில் தனக்குத்தானே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அதைப்போலவே - சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு இமாலய வெற்றியை இப்போது 2013ஆம் ஆண்டில் முதலமைச்சர் ஜெயலலிதா பெற்றுவிட்டார் என்றெல்லாம் விளம்பரங்கள்! அவைகளையெல்லாம் பார்த்துச் சிரிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

21-6-2013 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் என்.எல்.சி.யின் ஐந்து சதவிகிதப் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டதாகச் செய்தி வந்தவுடனேயே அந்த நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களும் கடும் அதிர்ச்சியடைந்து, தங்களது கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் காட்டுகின்ற வகையில் போராட்டங்களில் இறங்க ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டதையும் எடுத்துக்காட்டி;

"மத்திய அரசு தனது 5 சதவிகிதப் பங்குகளை விற்பதன் மூலமாக 466 கோடி ரூபாய்தான் மத்திய அரசுக்குக் கிடைக்கக்கூடுமென்று தெரிகிறது. மத்திய அரசுக்கு இது ஒரு பெரும் தொகையல்ல. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளில் குறைந்தது 10 சதவிகிதம் பொதுமக்களிடம் இருக்க வேண்டும் என்ற இந்தியப் பங்கு பரிவர்த்தனை வாரியம் (செபி) நிபந்தனை விதித்திருப்பதின் அடிப்படையிலேதான் இந்த முடிவு எடுக்கப்படுவதாக மத்திய அரசு கூறக்கூடும். ஆனால் இந்தக்

கட்டுப்பாட்டில் இருந்து நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு விலக்களிக்க பங்கு ஒப்பந்த விதிகள் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரலாம், அல்லது என்.எல்.சி நிறுவனத்தையே பங்குகள் விற்பனை செய்யப்படும் நிறுவனங்களின் பட்டியலிலே இருந்து நீக்கி விடலாம்" என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருப்பதை மத்திய அரசு கருத்திலே கொண்டும்; ஏற்கனவே இதுபோல நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை விற்க மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு பின்னர் எனது வேண்டுகோளையேற்று அந்த முடிவினைத் தள்ளிவைத்ததை மனதிலே கொண்டும்; தற்போது மத்திய அமைச்சரவை எடுத்துள்ள இந்த முடிவினை ரத்து செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் 22-6-2013 அன்று அறிக்கை விடுத்திருந்தேன்.

நான் அறிக்கை விடுத்த 22-6-2013 அன்றுதான், தமிழக முதலமைச்சரும் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்திலே முதலமைச்சர் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்கக் கூடாது என்றுதான் வேண்டுகோள் விடுத்திருந்தாரே தவிர, அந்தப் பங்குகளைத் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விற்க வேண்டுமென்று எழுதவே இல்லை. அவர் அதற்கு முன்பு பிரதமருக்கு எழுதிய கடிதத்திலும் பங்குகளைத் தனியாருக்கு விற்கக் கூடாது என்று அதே வேண்டுகோளைத்தான் விடுத்திருந்தார்.

தற்போது அந்த வேண்டுகோள் நிறைவேறி விட்டதா? நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை மத்திய அரசு விற்காமல் 2006ஆம் ஆண்டு கழக ஆட்சியிலே செய்ததைப் போல முடிவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டதா? நெய்வேலி பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளை யாருக்கும் விற்கமாட்டோம் என்று மத்திய அரசு ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு விட்டதா என்றால் கிடையாது. ஆனால் ஆளுங்கட்சி நாளேடுகளும், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் நாளேடுகளும் ஜெயலலிதாவிற்கு இமாலய வெற்றி கிடைத்திருப்பதாகக் கூறி, ஆளுங்கட்சி நாளேட்டில் மட்டும் 55 பக்கங்களுக்கு விளம்பரங்கள் கொடுத்திருக்கிறார்கள். மற்ற ஏடுகளிலும் பக்கம் பக்கமாக விளம்பரங்கள்.

ஜெயலலிதா முதலில் நெய்வேலிப் பங்குகளை விற்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள்விடுத்து வந்த நிலையில், பத்திரிகையாள நண்பர் ஒருவர் 5 சதவிகிதப் பங்கினை தனியாருக்கு விற்பதற்குப் பதிலாக மாநில அரசுக்கே விற்பனை செய்யும்படி கோரலாம் என்று முதலமைச்சருக்கே ஒரு கடிதம் எழுதிய பிறகு - நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்கு விற்கக் கூடாது என்று 22-6-2013 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம் எழுதியதற்கு மாறாக, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை தமிழக அரசே வாங்கிக் கொள்ளத் தயார் என்று பத்திரிகையாளரின் கருத்தையே தமிழக அரசின் கருத்தாக ஏற்றுக் கொண்டு 25-6-2013 அன்று முதல்வர் பிரதமருக்கு எழுதினார். முதலமைச்சர் ஜெயலலிதா அந்தக் கருத்தை அமைச்சரவையைக் கூட்டித்தான் எடுத்தாரா என்பது விவாதத்திற்குரிய வேறு விஷயம்.

3-7-2013 அன்று என்.எல்.சி. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கி விட்ட நிலையில், 4-7-2013 அன்று சோனியாகாந்திக்கும், பிரதமருக்கும், நிதித் துறை அமைச்சருக்கும் அவசரக் கடிதம் ஒன்று எழுதினேன். அந்தக் கடிதத்தில், 2006ஆம் ஆண்டு மத்திய அரசு நெய்வேலி நிறுவனத்தின் பங்குகளை விற்கும் முடிவினை அறிவித்து, அதன் பின்னர் கழக அரசின் வேண்டுகோளையேற்று அந்த முடிவினைத் திரும்பப் பெற்றதை நினைவூட்டி, தற்போதும் அவ்வாறே முடிவினைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தேன். உடனே நமது முதலமைச்சரும் 7-7-2013 அன்று பிரதமருக்கு மீண்டும் ஒரு கடிதத்தை, நெய்வேலி நிறுவனப் பங்குகளைத் தமிழக அரசின் நிறுவனங்களுக்குத் தரும்படி கேட்டுக் கொண்டு எழுதினார். ஆனால் 8-7-2013 அன்று நெய்வேலியில் உள்ள அனைத்துத் தொழிற் சங்கங்களும் கலந்து பேசி, அ.தி.மு.க. வைத் தவிர்த்த மற்ற சங்கங்கள் மத்திய அரசு அதன் பங்குகளை தமிழக அரசுக்குக்கூட விற்கக் கூடாது என்று அறிவித்தன. ஆனால் அ.தி.மு.க. சங்கம் மட்டும் முதலமைச்சர் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவோம் என்று கூறினார்கள். 12-7-2013 அன்று பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு கடிதம் எழுதி, தம்பி டி.ஆர். பாலு மூலமாக அனுப்பி பிரதமரிடம் விளக்கமாக எடுத்துரைக்கச் செய்தேன். அந்தக் கடிதத்திலும் தொழிலாளர்களின் போராட்டத்தை நினைவுபடுத்தி, 5 சதவிகித என்.எல்.சி.

பங்குகளை தனியாருக்கு விற்பதற்கான முடிவை உடனடியாகக் கைவிட்டு, சிறப்பு விதிவிலக்கு அளிக்க முதலில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். வேறு வழியே இல்லை என்றால், இறுதிக்கட்டமாக, தமிழக அரசு வாங்க முன்வந்துள்ள பங்குகளை வாங்கிக் கொண்டு, அவற்றைப் "பொதுமக்கள் பங்கு" என்று கணக்கில் எடுத்துக் கொண்டு பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் தெரிவித்திருந்தேன்.

இதற்குப் பிறகுதான் "செபி" நிறுவனம் நெய்வேலிப் பங்குகளை தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு விற்க ஒப்புக்கொண்டு, தமிழக அரசு அதனை ஏற்றுக் கொண்டது. அதைத்தான் "வெற்றி, வெற்றி" என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை யாருக்கும் விற்கக் கூடாது என்று முதலில் வைத்த கோரிக்கையில் தமிழக அரசு உறுதியாக இருந்திருக்குமானால்; தொழிலாளர்களின் காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டம் தரும் அழுத்தத்தின் காரணமாக மத்திய அரசு விதிவிலக்குக் கொடுத்து, 2006ஆம் ஆண்டில் நடந்ததைப் போலவே தங்கள் முடிவினைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் அதற்கு மாறாக நெய்வேலி நிறுவனப் பங்குகளை விற்பது என்ற "செபி"யின் ஆரம்ப முடிவுக்கு தமிழக அரசு இணங்கித் துணைபோய் இருக்கிறதே தவிர, வேறொன்றும் இல்லை. இது உண்மையிலேயே "இமாலய" வெற்றியா? இதற்கு அ.தி.மு.க.வின் நாளேட்டுக்கு இவ்வளவு விளம்பரங்களா?

இதற்கிடையே அம்மையாரின் முடிவுக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் பாராட்டாம்! எந்தெந்த அரசியல் கட்சிகள் என்று பார்த்தால்; அ.தி.மு.க.விடம் தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற எல்லாக் கட்சிகளும் இதற்குப் பாராட்டுத் தெரிவிக்கவில்லை. ஓரிரு கட்சிகள்தான் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றன. அதற்குத்தான் இவ்வளவு கூப்பாடுகள்! பல லட்ச ரூபாய்க்குப் பாராட்டு விளம்பரங்கள்! ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!

அன்புள்ள,

மு.க.

19-7-2013

3778. கச்சத் தீவும், "கச்சடா" கேள்வியும்!

உடன்பிறப்பே,

"முதலமைச்சர் ஜெயலலிதா கொடை நாட்டிலே ஓய்வெடுக்கச் சென்றிருக்கிறார்" என்று எங்கே பத்திரிகைக்காரர்கள் எழுதிவிடப் போகிறார்களோ என்பதற்காக, அன்றாடம் ஏதாவதொரு அறிக்கையை அவர் பெயரால் நாளேடுகளில் வருமாறு பார்த்துக்கொள்கிறார். கொடைநாட்டில் அமர்ந்து கொண்டு, அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, அம்மையார் அறிக்கைகளைத் தயாரித்து அனுப்புகிறார் என்று தமிழ்நாட்டு மக்கள் எண்ணிக் கொள்ள வேண்டுமாம்! தமிழ்நாட்டு மக்கள் என்ன அவ்வளவு இளித்தவாயர்களா என்ன? அவர்களுக்கு உண்மை தெரியாதா என்ன? அந்த வரிசையிலேதான் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்கு விற்பனை குறித்தும், அந்தத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் பற்றியும் அறிக்கை மூலமாகவே தீர்த்துவைத்த நமது முதல்அமைச்சருக்கு நேற்றையதினம் அறிக்கை விடுவதற்குப் பொருள் கிடைக்கவில்லைபோலும்! அதுமாத்திரமல்ல; 17ஆம் தேதிய நாளேடுகளில் எல்லாம் - "இந்து" நாளிதழ் உட்பட, "கச்சத் தீவினைத் திரும்பப் பெறுவது பற்றி உச்ச நீதிமன்றத்தில் நான் தொடுத்த வழக்கினை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு மத்திய அரசினைப் பதில் கூறுமாறு உத்தரவிட்டுள்ளது" என்று விரிவாகச் செய்தி வெளியிட்டதைப் பார்த்தவுடன், பொறுக்க முடியவில்லை! எடுத்தார் பேனாவை; எழுதித் தள்ளிவிட்டார் எட்டு பக்கத்திற்கு கச்சத்தீவு பிரச்சினையில் நான் துரோகம் செய்து விட்டதாக! இந்தப் பிரச்சினையில் நான் துரோகம் செய்து விட்டதாக "அம்மையார்" இதுவரை எத்தனை முறை அறிக்கை விடுத்திருக்கிறார் என்று எண்ணித்தான் பார்க்க வேண்டும்! ஒவ்வொரு முறையும், கச்சத் தீவினை நானும், மத்திய அரசும் சேர்ந்துகொண்டு தாரை வார்த்துவிட்டதாகப் புகார்களை அடுக்கத் தொடங்கிவிடுவார்!

முதலமைச்சர் மீது எதிர்க்கட்சிக்காரர்கள் யாராவது பேசினால் போதும்; உடனே "அவதூறு வழக்குகள்" பாய்ந்து வரும். ஆனால்

அவர் எதிர்க்கட்சிக்காரர்களைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் அவதூறாகப் பேசுவார். அதைப்பற்றி யாரும் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது. கருணாநிதியின் முதல் துரோகம், இரண்டாவது துரோகம், மூன்றாவது துரோகம் என்று பட்டியல் போடுவார்; கபட நாடகங்கள் என்பார்; கண்துடைப்பு நாடகங்கள் என்பார்; சுய நலம் என்பார்; கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பார்; ஒப்புக்கு சப்பாணி என்பார்; இதெல்லாம் அவரது அரசியல் பண்பாட்டில் பிறந்து அடிக்கடி பயன்படுத்தும் "அழகு தமிழ்ச் சொற்கள் (?) அவருக்கே வழக்கில் வந்த வார்த்தைகள்! இத்தனைப் பக்கங்கள், இவ்வளவு கடுமையானதும் கசப்பானதுமான அர்ச்சனைகளை முதலமைச்சர் ஜெயலலிதா என் மீது வாரி இறைத்திருக்கிறாரே; என்ன காரணம்? கச்சத் தீவில் அவர் எதுவுமே செய்யவில்லை என்று நான் எழுதினேனா என்றால் இல்லை! அவர் பிரச்சினைக்கே நான் செல்லவில்லை. நான் செய்ததெல்லாம் உச்ச நீதிமன்றத்தில் கச்சத் தீவு பிரச்சினையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வழக்கு தொடுத்தது தான்! அதுகூடக் குற்றம் இல்லை. அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் ஏற்கப்பட்டு, அதைப்பற்றிச் செய்தி ஏடுகளில் வெளிவந்துவிட்டது. அவரைப் பற்றிய செய்திகள் தவிர, என் தொடர்பான செய்திகள் வரலாமா?

எப்படியோ கச்சத் தீவில் நான் துரோகம் செய்துவிட்டதாக முதலமைச்சர் எட்டு பக்க அறிக்கை விடுத்தபிறகு, அதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டாமா? கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு 3-5-2013 அன்று திடீரென்று கச்சத் தீவுப் பற்றிப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அவரே அந்தத் தீர்மானத்தின்மீது நீண்ட நேரம் பேசி நிறை வேற்றப்பட்டது. அந்த உரையில்; தொடக்கம் முதல் முடிகின்ற வரையில் எனக்குச் செய்யப்பட்ட "அர்ச்சனை" தான்!

அப்போது திடீரென்று கச்சத் தீவு பற்றிய தீர்மானம் அம்மையாருக்கு எப்படி நினைவுக்கு வந்தது தெரியுமா? 15-4-2013 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற "டெசோ" அமைப்பின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான் காரணம். அந்தத் தீர்மானத்தின் இறுதியாக "1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதைப் பிரகடனப்படுத்தவும், "டெசோ" அமைப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதென முடிவெடுக்கப் பட்டது" என்று குறிப்பிட்டதுதான் காரணம்.

கச்சத்தீவில் நான் துரோகம் செய்து விட்டதாக அறிக்கை விட்ட அம்மையாரைக் கேட்கிறேன்; கச்சத் தீவை மீட்பதற்காக நான் எதுவுமே செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறீரே, தற்போது அம்மையாரின் கோபத்திற்குக் காரணமான உச்ச நீதிமன்ற வழக்கை இந்தக் கச்சத்தீவினை மீட்க வேண்டும் என்பதற்காகத் தானே நான் தொடுத்துள்ளேன். இதுவும் ஒரு துரோகமா?

"கச்சத் தீவை மீட்டே தீருவேன்" என்று அம்மையார் ஜெயலலிதா அவர்கள் 1991ஆம் ஆண்டு விடுதலை நாள் விழா உரையில் சூளுரைத்ததைப்போல நானா சூளுரைத்தேன்? அவர் சபதம் செய்துதான் 22 ஆண்டுகள் ஓடிவிட்டனவே! என்ன செய்து கிழித்துவிட்டார்? 15-8-1991 அன்று ஜெயலலிதா என்ன பேசினார்? "கச்சத் தீவைத் திரும்பப் பெற மத்திய அரசுடன் வாதாடவும், தேவை ஏற்பட்டால் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது" என்று முழங்கியது நானா? ஜெயலலிதாவா? அப்படிச் சவால்விட்டுவிட்டுத் தற்போது என்னைப் பார்த்து, ஏன் போராடவில்லை என்றும், துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை என்றும் இவர் ஏதோ தூணையே கிள்ளிப் போட்டதைப் போலவும் குற்றம் சாட்டுவது என்ன வகை நியாயம்?

20-4-1992 அன்று இதே சட்டப் பேரவையில் ஜெயலலிதா பேசும்போது, "கச்சத் தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால், கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக்கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று கச்சத்தீவுப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதைப்போலக் கூறியது உண்டா? இல்லையா? அவரே பேரவையில் அவ்வாறு பேசி விட்டு, கச்சத்தீவை மீட்பதற்கு நான் எதுவும் செய்யவில்லை என்று அறிக்கை விடுவதற்கு என்ன பெயர்?

நேற்றையதினம் ஜெயலலிதா கச்சத்தீவு பிரச்சினை பற்றி என்மீது கூறிய குற்றச்சாட்டுகளை எல்லாம், இரண்டு மாதங்களுக்கு முன்பு பேரவையிலே அவர் பேசியபோதே கூறி அப்போதே நான் அவரது குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமாக பதில் எழுதியிருந்தேன். அந்தப் பதிலிலேயே கச்சத்தீவைத் தாரைவார்க்கத் தி.மு.க. எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ளவும் இல்லை, தாரை வார்க்க உடன்படவும் இல்லை. தி.மு. கழகத்தைப் பொறுத்து மாத்திரமல்ல; தி.மு. கழக ஆட்சியைப் பொறுத்தும் பல நேரங்களில் கச்சத் தீவு பிரச்சினையை எழுப்பிக் கச்சத் தீவை

மீட்டுக் கொடுங்கள் என்று கேட்கத் தவறியதும் இல்லை. கச்சத் தீவிலே மீனவர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டி, அந்தப் பாதிப்பை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்கவும் கழக அரசு தவறியது இல்லை என்றெல்லாம் விளக்கிய பிறகும், மீண்டும் அதே குற்றச்சாட்டுகளை ஜெயலலிதா எழுப்பியிருக்கிறார் என்றால், அது சரியா?

எனது அந்த விளக்கத்தில் ஒன்றை எழுதியிருந்தேன். 30-9-1994இல் தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, அப்போது பிரதமராக இருந்த திரு.நரசிம்ம ராவ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations" அதாவது, "தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ் சிறிய தீவினை (கச்சத் தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்" - என்று அப்போதும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, கச்சத் தீவை விட்டுக் கொடுத்ததை நியாயப்படுத்தி குறிப்பிட்டது உண்டா இல்லையா என்று கேட்டிருந்தேனே, அதற்கு ஏன் இன்று வரை பதிலளிக்கவில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா தனது உரையில்; "ஒப்பந்தம் கையெழுத்து ஆவதற்கு முன்பே கச்சத் தீவை இந்தியா தாரைவார்க்கப் போவது தெரிந்திருந்தும் ஏன் எந்தவிதமான நடவடிக்கையையும் கருணாநிதி உடனே எடுக்கவில்லை?" என்று கேள்வி கேட்டிருக்கிறார். இதே கேள்வியை இதுவரை ஜெயலலிதா எத்தனை முறைதான் கேட்டிருக்கிறார். ஒப்பந்தம் 28-6-1974 அன்று கையெழுத்தான உடனேயே 29-6-1974 அன்று சென்னைத் தலைமைச் செயலகத்தில் நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அதில் கச்சத் தீவு பற்றித் தீர்மானம் நிறை வேற்றியது உண்மையா இல்லையா? ஆனால் அ.தி.மு.க. அந்தத் தீர்மானத்தை ஆதரித்துக் கையெழுத்திட அப்போதே மறுத்துவிட்டது. அதே 29-6-1974 அன்று நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்,

"Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Sri

Lanka Agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India. May I express the hope that you will take into consideration the decision contained in the Resolution and take appropriate action?"

- என்று எழுதியிருக்கிறேன். இதுதான் கச்சத் தீவினை நான் தாரை வார்த்துவிட்டேன் என்பதற்கான ஆதாரமா? இதுதான் நான் துரோகம் செய்ததற்கான அடையாளமா?

24-7-1974 அன்று கச்சத் தீவு பிரச்சினைக்காகத் தமிழகம் முழுவதும் கண்டனப் போராட்டங்களை தி.மு.க. நடத்தியது பொய்யா? தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களிலே முதலமைச்சராக இருந்த நானே கலந்து கொள்ளவில்லையா? 23-7-1974 அன்று நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வந்த போது, "தமிழகத்துக்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்ததை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று அப்போது தி.மு.கழக உறுப்பினராக இருந்த நண்பர் இரா. செழியன் குறிப்பிட்டாரா இல்லையா? "தமிழக அரசைக் கலந்தா லோசிக்காமல், மத்திய அரசு தன்னிச்சையாக இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது ஜனநாயக விரோதப் போக்காகும்" என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் நண்பர் எஸ்.எஸ். மாரிசாமி தெரிவித்தாரா இல்லையா? அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே, அதாவது 21-8-1974 அன்று பேரவையில் அரசின் சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானம், "இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத்தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறு பரிசீலனை செய்து, கச்சத் தீவின்மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது" என்பதாகும். இதெல்லாம் துரோகத்திற்கான ஆதார ஆவணமா?

அடுத்து ஜெயலலிதா தனது நீண்ட அறிக்கையில் எடுத்து வைத்திருக்கும் மற்றொரு வாதம் - "1974இல் திரு. கருணாநிதி கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட செய்தியை,

பத்திரிகைகளில் பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன், பதறிப் போனேன்" என்கிறார். ஆனால் "2013இல் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே இவர் சொல்லித்தான் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன என்கிறார்" - என்பதாகும். இதே கருத்தினை வார்த்தை மாறாமல் கடந்த மே மாதம் பேரவையில் பேசி, அதற்கும் நான் விரிவான பதிலை அப்போதே எழுதினேன். இருந்தாலும் மீண்டும் நேற்றைய அறிக்கையிலே இதைச் சொல்லியிருக்கிறார்.

15-4-2013 அன்று "டெசோ" சார்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது, கழக அரசு முதல் நிலையிலேயே அதனைக் கடுமையாக எதிர்த்தது. அதையும் மீறி ஒப்பந்தம் கையெழுத்தானபோது, குறைந்தபட்சம் தமிழக மீனவர்களுக்கு கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையும், மீனவர்களின் வலைகளை அங்கே உலர்த்திக் கொள்வதற்கான உரிமையும் அந்த ஒப்பந்தத்தின் பிரிவுகளில் சேர்க்கப்பட வேண்டுமென்று கழக அரசு வலியுறுத்தி அந்த ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன" என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையில், "கருணாநிதி ஆட்சி அதிகாரம் போன பிறகு அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே "டெசோ" அமைப்பைப் புதுப்பித்து, கூட்டங்களை நடத்துவது, தீர்மானம் நிறைவேற்றுவது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பது போன்ற நடவடிக்கைகளை எடுப்பது, தமிழக மக்களை ஏமாற்றும் செயல், தான் செய்த தவறை மூடி மறைக்கும் முயற்சி" என்றெல்லாம் வெறுப்பு விஷத்தைக் கக்கியிருக்கிறார். நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதுவும் தமிழக மக்களை ஏமாற்றுகின்ற செயல் அல்ல; தமிழ் மக்கள் நலனைக் காப்பாற்றும் செயல்களாகும்.

"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்கு அழைத்து வர வேண்டும்" என்று பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்துவிட்டு, இப்போது இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுகிறாரே; அதுதான் தமிழக மக்களை ஏமாற்றுகின்ற துரோகச் செயல்!

இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது, "போர் என்றால் அப்பாவி மக்கள்

கொல்லப்படுவது சகஜம்தான்" என்று பேரவையில் ஜெயலலிதா முழங்கிவிட்டு, தற்போது இலங்கைத் தமிழர்களுக்காகவும், கச்சத் தீவுக்காகவும் பரிந்து பேசி அறிக்கை விடுகிறாரே, அதுதான் தமிழக மக்களை ஏமாற்றுகின்ற செயல்!

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது கருணாநிதி கச்சத் தீவை மீட்க ஏன் ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை என்று ஜெயலலிதா திரும்பத் திரும்பக் கேட்டு வருகிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரையிலும், 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலும், ஏன் இப்போது 2011 முதலும் ஜெயலலிதா தானே ஆட்சியிலே இருக்கிறார், இவர் ஏன் கச்சத் தீவை மீட்கவில்லை என்று நான் கேட்டிருந்தேனே, அதற்குத் தனது நீண்ட அறிக்கையில் ஜெயலலிதா ஏன் பதில் கூறவில்லை?

இதே கச்சத் தீவுப் பிரச்சினைக்காக முதலமைச்சர் ஜெயலலிதாவும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார். "டெசோ" அமைப்பின் சார்பில் நானும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறேன்.

ஆனால் "தமிழக மீனவர்களுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் திரு. கருணாநிதி உச்ச நீதிமன்றத்தில் கச்சத் தீவு வழக்கைத் தாக்கல் செய்யவில்லை என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்" என்று ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். இது ஜெயலலிதா!

"தமிழக மீனவர்களுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும்தான் ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் கச்சத் தீவு வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்; தயவு செய்து நம்புங்கள்!" இது கருணாநிதி!

"தமிழக மக்களை யாரும் ஒருபோதும் ஏமாற்ற முடியாது" என்கிறார் ஜெயலலிதா; ஆம், உண்மைதான்; தமிழக மக்களை யாரும் ஒருபோதும் ஏமாற்ற முடியாது! தமிழக மக்கள் யாரிடமும் நிச்சயம் ஏமாற மாட்டார்கள். வெண்ணெய்க்கும், சுண்ணாம்புக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்திருப்பவர்கள்தான் தமிழக மக்கள்!

அன்புள்ள,

மு.க.

20-7-2013

3779. ஆபத்தின் உச்சக்கட்டம்; அன்னிய நேரடி முதலீடு!

உடன்பிறப்பே,

நான் ஏற்கனவே கடந்த ஆண்டு எழுதிய கடிதத்திலேயே இலட்சக்கணக்கான சில்லரை வணிகர்களையும், நுகர்வோர் என்னும் நிலையிலே இருந்து பொருள்களை வாங்கிப் பயன்படுத்தும் கோடிக்கணக்கான சாதாரண ஏழையெளிய நடுத்தர மக்களையும் ஒரே நேரத்தில் பாதிக்கக்கூடிய அளவுக்குச் சில்லரை வணிகத்தில் அன்னிய நாட்டு நிறுவனங்களின் நேரடி முதலீட்டை அனுமதிப்பது ஆபத்து என்பதையும் - நாட்டின் பொருளாதாரச் சரிவுக்கு, அதுவும் ஒரு மூலகாரணமாக ஆகிவிடும் என்பதையும், மத்திய அரசு அந்த முடிவை மாநில அரசுகள் ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த இயலாது என்பதையும், எடுத்து விளக்கியதோடு; சில்லரை வாணிபத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிப்பது என்ற மத்திய அரசின் முடிவை மாநிலங்களிலும் அமல்படுத்துவது என்ற நிலையை வற்புறுத்தாமல்; வற்புறுத்தாதது மட்டுமல்ல; ஆலோசனையாகக் கூடக் கூறாமல்; இதுகுறித்து, தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் கருத்துக்கும் - வணிகப் பெருமக்களின் ஒருமித்த கோரிக்கைக்கும் இசைவளித்து உடனடியாக இந்த முடிவைத் திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டதை 28.11.2012 தேதியன்று நான் விடுத்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்!

சில்லரை வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலே நேரடி அன்னிய முதலீடுகளை 100 சதவிகித அளவிற்கு அதிகரிக்க வழிவகுத்த மத்திய அரசு, தற்போது இந்திய பாதுகாப்பு மற்றும் நிர்வாக ரகசியங்களுக்கு மிகவும் இன்றியமையாத துறைகளான தொலைத் தொடர்பு, ராணுவத் தளவாட உற்பத்தி ஆகிய இரண்டு

துறைகளிலுமே அன்னிய நேரடி முதலீட்டுக்குக் கூடுதலாக அனுமதி அளித்திருக்கிறது.

16-7-2013 அன்று பிரதமர் தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்புத் துறையில் தற்போதுள்ள 74 சதவிகித அன்னிய நேரடி முதலீட்டு வரம்பு, 100 சதவிகிதமாக உயர்த்தப்பட ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இதில் 49 சதவிகித அளவிலான முதலீட்டை அரசின் முன்ஒப்புதல் இல்லாமலே நிறுவனங்கள் பெறலாம்.

பாதுகாப்புத் துறையில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு தற்போதுள்ள 26 சதவிகித உச்ச வரம்பு தொடரும் என்றாலும், நவீனமயமான தயாரிப்புத் திட்டங்கள் தொடர்பாக ஒவ்வொரு திட்டத்துக்கும் தனித்தனியாகப் பாதுகாப்புத்துறைக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளிக்கும். காப்பீட்டுத் துறையில் 26 சதவிகித அளவில் நேரடி முதலீட்டு வரம்பு 49 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. விமான போக்குவரத்துத் துறையில் தற்போதுள்ள 49 சதவிகித உச்ச வரம்பு அப்படியே தொடருகிறது. கட்டுமானக் கம்பெனிகளின் எப்.டி.ஐ. முதலீடு 49 சதவிகிதத்தில் இருந்து 100 சதவிகிதமாக அதிகரிக்கப்படுகிறது. ஒரே "பிராண்டை"ச் சேர்ந்த பொருள்களின் சில்லரை வர்த்தகத்தில் தற்போது உள்ள 49 சதவிகித அன்னிய நேரடி முதலீடு 100 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. ஒட்டுமொத்தமாக 12 துறைகளில் நேரடி அன்னிய முதலீட்டிற்கான வரம்பை உயர்த்திட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொலைத் தொடர்புத் துறையில் இதுவரை அனுமதிக்கப்பட்டு வந்த 74 சதவிகித அன்னிய நேரடி முதலீடு, இனி 100 சதவிகிதம் என உயர்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளதால்; இதுவரை இந்திய நிறுவனங்களுடன் சேர்ந்து இயங்கி வந்த சில பெரிய வெளிநாட்டு நிறுவனங்கள், இனிமேல் தாங்களாகவே முழு முதலீட்டோடு நடத்துகிறோம் என்று சொல்வார்கள். அதனால் அவர்களுக்கு இந்திய நிறுவனங்களின் ஒத்துழைப்புத் தேவையில்லை என்ற நிலை ஏற்படும். வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவோடு இயங்கி வந்த இந்திய நிறுவனங்களும் தனித்துப் போட்டியிட முடியாமல் தவிக்க நேரிடும். ஓரளவு முதலீட்டோடு இயங்கி வந்த இந்திய நிறுவனங்களின் கதி, நிர்க்கதியாக முடியும். பல இலட்சம்

ஊழியர்களின் நலனும் நட்டாற்றில் கை விட்டதைப் போலாகி விடும்.

தொலைத் தொடர்புத் துறையில் வெளிநாட்டு நிறுவனங்களும், இந்திய நிறுவனங்களும் இணைந்து கூட்டாக நடத்தி வருகின்ற நிறுவனங்கள் எல்லாம் தற்போது லாபம் அடைகின்ற நிலையில்; இந்திய அரசின் பி.எஸ்.என். எல். நிறுவனத்தின் தணிக்கை நிறைவுபெறாத கணக்கைப் பார்த்தால், 2008-2009ஆம் ஆண்டில் 525 கோடி ரூபாய் இலாபம் என்பதற்கு மாறாக, 2009-2010ஆம் ஆண்டு நட்டம் 1,823 கோடி ரூபாய்; 2010-2011ஆம் ஆண்டு நட்டம் 6,384 கோடி ரூபாய்; 2011-2012ஆம் ஆண்டு நட்டம் 8,851 கோடி ரூபாய்; 2012-2013ஆம் ஆண்டு நட்டம் 8,198 கோடி ரூபாய் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நமது மத்திய அரசு, வெளிநாட்டு நிறுவனங்கள் மேலும் அதிக அளவில் இலாபம் அடைவதற்குத் தேவையான வழிகளைத் திறந்துவிட்டிருக்கிறது.

தொலைத் தொடர்புத் துறையில் இவ்வாறு 100 சதவிகித அன்னிய முதலீட்டிற்கு இந்திய அரசு அனுமதி அளித்து எடுத்துள்ள முடிவினை, பி.எஸ்.என்.எல். தேசிய சம்மேளனம் மிகவும் கடுமையாக எதிர்த்துள்ளது. மேற்கு நாடுகளின் விருப்பத்திற்கேற்பவே இத்தகைய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுப்பதாக அந்தச் சம்மேளனம் குறை கூறுகிறது. இந்த முடிவின் காரணமாக, மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்களான பி.எஸ்.என்.எல்., எம்.டி.என்.எல் ஆகியவை நேரடியாகப் பாதிப்புக்கு ஆளாகும் என்ற கருத்தில் நியாயம் நிரம்பவே இருக்கிறது.

இன்சூரன்ஸ் துறையில் அன்னிய நேரடி முதலீட்டு வரம்பை 49 சதவிகிதமாக அதிகரிக் கும் முடிவினை எதிர்த்து அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். இன்சூரன்ஸ் துறையில் அன்னிய முதலீட்டு வரம்பினை நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இன்றி அதிகரிக்க முடியாது என்ற போதிலும், குறுக்கு வழியில் அதற்கான ஏற்பாட்டினை மத்திய அரசு செய்ய முயற்சிக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் காப்பீட்டுத் துறையில் அன்னிய முதலீட்டுக்கான 26 சதவிகித அனுமதியை மேலும் உயர்த்த வேண்டியதில்லை என்று நாடாளுமன்ற நிலைக் குழு ஏற்கனவே கூறியிருப்பதைப்

பற்றிக் கவலைப்படாமல், அதைப் பொருட்படுத்தாமல், 49 சதவிகித அளவிற்கு உயர்த்த அனுமதிக்கப்படுகிறது என்றால் பிறகு எதற்காக நாடாளுமன்ற நிலைக்குழு என்ற கேள்வி எழுப்பப்படுவதைத் தவிர்ப்பதற்கில்லை.

அமெரிக்கா, பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளில் எல்லாம் 35 சதவிகிதத்திற்கு மேல் தொலைத் தொடர்புத் துறையில் அன்னிய நேரடி முதலீடுகள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் இந்தியாவில் மட்டும் இந்த அளவிற்கு உயர்த்தப்படுவது ஏன்? தொலைத் தொடர்புத் துறையில் இந்த அளவிற்கு அன்னிய நிறுவனங்களுக்கு அதிக ஆதிக்கம் செலுத்திட அனுமதி கொடுத்து விட்டால், அது நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்புடையதுதானா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டாமா என்ற கருத்தை அலட்சியப்படுத்திவிட முடியாது. அமெரிக்கா, தனது உளவுத் துறை இணையத் தொடர்புகள் மூலமாக இந்தியா போன்ற நாடுகளை உளவு பார்க்கிறது என்ற செய்தி வெளியானதற்குப் பிறகும், இந்தியா இப்படிப்பட்டதொரு முடிவினை எடுப்பது எங்கே போய் முடியப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அதிகரித்து வரும் நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காகவும் அதிக அளவில் அன்னிய முதலீடுகளை அனுமதிக்க வேண்டிய நெருக்கடியான அவசியம் இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

இந்த முடிவுகளை அறிவித்த மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. ஆனந்த் சர்மா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் "கவலைகளில்" அக்கறை செலுத்தும் வகையில்தான் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார். அப்படியென்றால் இந்திய அரசு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் "கவலைகளில்"தான் அக்கறை செலுத்துமா? உள்நாட்டு முதலீட்டாளர்களைப் பற்றியோ, அரசின் பொது நிறுவனங்களைப் பற்றியோ நமது இந்திய அரசுக்கு "கவலை" இல்லையா என்ற கேள்வி எழுவதைத் தடுக்க இயலாது.

இந்திய நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நோயைப் போக்கவும், இந்திய ரூபாய் மதிப்பின் வீழ்ச்சியைத் தடுக்கவும் தேவையான மருந்துகளாக இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென நியாயம் கற்பிக்கப்படுகிறது. "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி"ச் செயலாற்ற வேண்டும். நோய்க்குத் தரப்படும் மருந்து நோயைத் தணிப்பதாகவும், குறைப்பதாகவும், முழுதுமாய்க் குணப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு கண்டுபிடித்துள்ள மருந்துகள், நோயைத் தணித்திட உதவாது என்பதோடு, பக்க விளைவுகளையும் ஏற்படுத்திப் பாதிப்பைப் பன்மடங்கு பெருக்கிவிடும் என்பதை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு வரவிருக்கின்ற நிலையில், இதுபோன்ற மிகக் கடுமையான முடிவுகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமா என்பதும் எண்ணிப்பார்த்திட வேண்டிய ஒன்றாகும். மத்திய அரசின் இந்த முடிவு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். குறிப்பாக நாட்டின் பாதுகாப்புத் தளவாட உற்பத்தித் துறையை வெளிநாட்டினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுசெல்ல வழி வகுக்கும். அன்னிய நேரடி முதலீட்டினை இவ்வாறு பல்வேறு முக்கியத் துறைகளில் உயர்த்துகின்ற மத்திய அரசின் முடிவுகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழுவதுமாக எதிர்க்கின்றது.

அன்புள்ள,

மு.க.

21-7-2013

3780. நுழைவுத் தேர்வு தீர்ப்பு - தேவையா எதிர்ப்பு?

உடன்பிறப்பே,

எம்.பி.,பி.எஸ்., பி.டி.எஸ்., மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்புகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க நாடு முழுவதும் ஒரே மாதிரியான பொது நுழைவுத் தேர்வு நடத்துவது தொடர்பாக இந்திய மருத்துவக் கவுன்சில் (எம்.சி.ஐ.), வெளியிட்ட அறிவிப்பினை உச்ச நீதிமன்றமே 18-7-2013 அன்று ரத்து செய்து தீர்ப்பளித்திருக்கிறது. பொது நுழைவுத் தேர்வு தொடர்பான இந்திய மருத்துவக் கவுன்சிலின் அறிவிப்பு, அரசியல் சாசனச் சட்டத்தை மீறுவதாக உள்ளது என்று தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

மேலும் ஏற்கனவே பொது நுழைவுத் தேர்வு மூலம் நடைபெற்ற மருத்துவ மாணவர்கள் சேர்க்கையை இந்தத் தீர்ப்பு எந்த வகையிலும் பாதிக்காது என்றும், இந்தத் தீர்ப்பு மூலம் தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்கள், மாணவர் சேர்க்கைக்காக தாங்களாகவே நுழைவுத் தேர்வை நடத்திக்கொள்ள உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றும் தீர்ப்பிலே கூறியிருக்கிறார்கள். மூன்று நீதிபதிகள் அடங்கிய இந்த அமர்வில், இரண்டு நீதிபதிகள் அதாவது தலைமை நீதிபதி அல்தமஸ் கபீர், விக்ரம்ஜித் சிங் ஆகியோர் இவ்வாறு தீர்ப்பு கூறியுள்ள போதிலும், இதே அமர்வில் இடம் பெற்ற மற்றொரு நீதிபதியான ஏ.ஆர். தேவ், மற்ற இரண்டு நீதிபதிகளின் கருத்தில் தனக்கு உடன்பாடில்லை என்றும், தேசிய அளவில் தகுதித் தேர்வு நடத்துவது என்பது சட்டப்படியானது, நடைமுறைக்குச் சாத்தியமானது மற்றும் சமூகத்துக்குத் தேவையானது என்றும் தெரிவித்திருக்கிறார்.

என்றாலும் இந்த வழக்கை விசாரித்த மூன்று நீதிபதிகளில் இருவர், பொது நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று கூறிவிட்டதால், அந்தத் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாக அமைந்துள்ளது.

எம்.பி.,பி.எஸ் படிப்பிற்கு அகில இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து பல ஆண்டுக் காலமாகவே பிரச்சினை உள்ளது. தி.மு.கழக ஆட்சிக் காலத்திலேயே, இந்தியாவிலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.,பி.எஸ். படிப்பிற்கு நுழைவுத்தேர்வு நடத்துவது என இந்திய மருத்துவக் கழகம் எடுத்த முடிவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு 18.2.2011 அன்று விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசின் வழக்கறிஞர் திரு.கோபால் சுப்பிரமணியம் அவர்கள் - பொது நுழைவுத் தேர்வு சம்பந்தமான இந்திய மருத்துவக் கழகத்தின் அறிவிக்கைக்கு எந்த ஒப்புதலும் மத்திய அரசு வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால், இந்திய மருத்துவக் கழகத்தின் வழக்கறிஞர் மத்திய அரசு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது எனக்கூறியுள்ளார். மேற்படி வழக்கை விசாரித்த மாண்புமிகு நீதிபதிகள் இந்திய மருத்துவக் கழகமும் மத்திய அரசும் முரண்பாடான கருத்தைக் கொண்டிருப்பதால் இரு தரப்பினரும் அமர்ந்து கலந்தாலோசித்து இது குறித்து ஒருமித்த முடிவெடுப்பது நல்லது என்று அப்போதே தெரிவித்திருக்கின்றனர்.

இந்த வழக்கு மீண்டும் 7.3.2011 அன்று விசாரணைக்கு வந்தபோது, இந்திய மருத்துவக் கழகத்தின் வழக்கறிஞர் மருத்துவப் படிப்பிற்காக மாற்றியமைக்கப்பட்ட சட்ட நெறிமுறைகள் 21.12.2010 அன்று அறிவிக்கை செய்யப்பட்டது என்றும், அந்த மாற்றியமைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, மத்திய அரசின் முன் அனுமதியுடன் எம்.பி.,பி.எஸ். படிப்பிற்கு பொதுநுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்றும் கூறினார்.

இந்திய மருத்துவக் கழகத்தின் மாற்றியமைக்கப்பட்ட நெறிமுறைகள் சட்டப்படி செல்லத் தக்கதா என்ற கேள்வி எழவில்லை என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இந்த மாற்றியமைக்கப்பட்ட நெறிமுறைகளால் யாருக்காவது பாதிப்பு ஏற்படுமாயின் அவர்கள் அதனை எதிர்த்து வழக்குத் தொடரலாம் என்றும் கூறியுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், நடைமுறையில் இருந்த பொது நுழைவுத் தேர்வினை ரத்து செய்து, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் சட்டம் இயற்றப்பட்டு 2007-08 ஆம் கல்வி ஆண்டு முதல் மாணவர்கள் +2 படிப்பில் பெறும் மதிப்பெண்கள்

அடிப்படையில் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி மருத்துவப் படிப்பிற்கு மாணவர்களைச் சேர்க்கும் நடைமுறைதான் இருந்து வருகிறது. இது தொடரப்பட வேண்டும் என்று நான் முதல்வராக இருந்தபோது, இந்தியப் பிரதமருக்கும், மத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கும் 15.8.2010ல் கடிதம் எழுதினேன். மேலும் உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கில் தன்னையும் ஒரு வாதியாக தமிழக அரசு இணைத்துக் கொண்டது. தமிழ்நாடு அரசு எம்பி.,பி.எஸ் படிப்பிற்கு மேல்நிலைக்கல்வி தேர்வில் மதிப்பெண்களின் அடிப்படையில் சேர்க்கையை அனுமதிப்பது என்ற நிலையை உச்சநீதி மன்றத்தில் தெரிவித்தது. இதற்கிடையில் சென்னை உயர்நீதி மன்றத்திலும் இந்திய மருத்துவக் கழகத்தின் அறிவிக்கை குறித்து இடைக்கால தடை உத்தரவும் 2011ஆம் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி அன்று கழக அரசால் பெறப்பட்டது.

11.01.2011 முதல் 13.01.2011 வரை ஐதராபாத்தில் மத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் மருத்துவப் படிப்பிற்கு அகில இந்திய அளவில் பொதுநுழைவுத் தேர்வு கொண்டுவரப்படமாட்டாது என முடிவெடுக்கப்பட்டது. அகில இந்திய அளவில் எம்.பி.,பி.எஸ். படிப்பிற்கான பொது நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து ஏற்கனவே இந்திய மருத்துவக் கழகம் வெளியிட்ட அறிவிக்கையினை திரும்பப் பெற வேண்டும் என்று 13.1.2011 அன்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

எனவே தமிழகத்தில் நுழைவுத் தேர்வு முறையை ஒழித்தது கழக ஆட்சிதான் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் கடந்த 2012இல் மருத்துவக் கல்வியில் மத்திய அரசு அளவில் நுழைவுத் தேர்வினை நடத்தப் போவதாகச் செய்திகள் வந்தபோது, அதில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, நுழைவுத் தேர்வு முறையை அறவே ஒழிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் 15 சதவிகித இடங்களை மத்தியத் தொகுப்புக்கு எடுத்துச் சென்று, அந்த இடங்களை நிரப்ப அகில இந்திய அடிப்படையில் நுழைவுத் தேர்வு நடத்துகிறார்கள். அதுபோலவே மருத்துவக் கல்லூரிகளில் முதுநிலைப் பிரிவில், அதாவது எம்.டி., எம்.எஸ்., போன்ற

வகுப்புகளில் சேருவதற்கும் அகில இந்திய அளவில் நுழைவுத் தேர்வு வைக்கப்படுகிறது. இவ்வாறு மத்திய தொகுப்புக்கு எடுத்துச் செல்லப்படும் இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி ஒதுக்கீடு அறவே இல்லை. இந்தப் பிரச்சினை பற்றி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உடனடியாகத் தலையிட்டு, இதிலே நுழைவுத் தேர்வு முறையை ஒழித்தும், இதர பிற்படுத்தப்பட்டோருக்குரிய இட ஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்தும் நல்லதோர் முடிவு காணவேண்டுமென்றும் 29-9-2012இல் நான் கேட்டுக் கொண்டேன்.

எம்.பி.,பி.எஸ் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளில் மாணவர்களைச் சேர்க்க நாடு முழுவதும் ஒரே மாதிரியான நுழைவுத் தேர்வு நடத்தும் இந்திய மருத்துவக் கவுன்சிலின் அறிவிப்பை எதிர்த்து மொத்தம் 115 மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீதுதான் வழக்கு நடைபெற்று, தற்போது உச்ச நீதிமன்றம் பொது நுழைவுத் தேர்வினை ரத்து செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பினை பெரும்பாலோர் வரவேற்று மகிழ்கிற இந்த நேரத்தில், மத்திய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர், குலாம் நபி ஆசாத் செய்தியாளர்களிடம் கூறும்போது, "உச்ச நீதி மன்றத்தில் நல்ல தீர்ப்பு வரும் என்று காத்திருந்தோம்; துரதிருஷ்டவசமாக, அத்தகைய தீர்ப்பு கிடைக்கவில்லை; இதனால், எங்களுக்குச் சிறிது மன வருத்தம்தான்; ஏனெனில், பலவற்றை சீர்படுத்த நாங்கள் திட்டமிட்டிருந்தோம். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு எங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது. எனவே, இப்போதிருக்கும் நிலையில், தீர்ப்பை எதிர்த்து சீராய்வு அல்லது வேறு எந்த முறையீடாவது செய்வதுதான், சரியாக இருக்கும். எனவே, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை, முழுமையாகப் படித்து ஆராயுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். சட்ட நிபுணர்களின் ஆலோசனையும் கோரப்பட்டுள்ளது. சட்டப்படியான நடவடிக்கையை தவிர்த்து, வேறு ஒன்றும் இப்போதைக்கு இல்லை" என்று கூறியிருக்கிறார்.

மருத்துவப் படிப்பில் சேருவதற்கு அகில இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு நடத்துவது சம்பந்தமான வழக்கு இந்திய உச்சநீதிமன்றத்தில் ஏற்கனவே வந்தபோது, இந்திய மருத்துவக் குழுமம் வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு

அகில இந்திய பொது நுழைவுத் தேர்வுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை எடுத்தது.

இதனை அறிந்ததும் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் அவர்களுக்கும் 15.8.2010 அன்று நான் எழுதிய கடிதத்தில்,

கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு, பொறியியல் மற்றும் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வினை, 2007-2008ஆம் ஆண்டு முதல் ரத்து செய்து சட்டம் இயற்றியுள்ளது என்றும்; அதன் காரணமாக சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தங்கியுள்ள கிராமப்புற மாணவர்கள் பெரிதும் பயன் அடைந்து வருகின்றனர் என்றும்; அகில இந்திய பொது நுழைவுத் தேர்வுமுறை; மாநிலங்கள் கல்வித் துறையை நிர்வாகம் செய்வதில் உள்ள உரிமையில் குறுக்கிடுவதாகக் கருதப்படுகிறது என்றும்; தமிழக அரசு நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தி வரும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு அது பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்றும்; சமூக நீதியின் தாயகமான தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் நலன்கள் பாதிப்புக்குள்ளாகும் என்றும் கருத்துத் தெரிவித்து, பொது நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து மறுபரிசீலனை செய்து நல்ல முடிவு ஒன்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டேன்.

மத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.குலாம் நபி ஆசாத் அவர்கள் இதற்குப் பதில் அளித்து, 27.8.2010 அன்று அவர் அனுப்பிய கடிதத்தில்,

“மருத்துவப் படிப்பில் அகில இந்திய நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்த கருத்து அகில இந்திய மருத்துவக் கவுன்சில் மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையிலானதாகும். எனினும் இக்கருத்தின்மீது மாநில அரசுகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் ஆகியவற்றுடன் விரிவாக ஆலோசனை செய்து அவர்களின் அக்கறையையும், உணர்வுகளையும் கருத்தில் கொண்டு முடிவு மேற்கொள்ள வேண்டியது அவசியம் என மத்திய அரசு கருதுகிறது. எனவே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள்

எழுதிய கடிதத்தில் அவர் வெளிப்படுத்தியுள்ள அக்கறையைக் கருத்தில்கொண்டு, அகில இந்திய நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்த முடிவுகள் மாநில அரசுகளுடனும், மற்ற சம்பந்தப் பட்ட அமைப்புகளுடனும் விரிவாக ஆலோசனை செய்த பிறகே மேற்கொள்ளப்படும் என இக்கடிதத்தின் வாயிலாகத் தங்களுக்கு உறுதி அளிக்கிறேன்" என கடிதம் எழுதியிருக்கிறார். இந்தச் செய்தி தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகள் அனைத்திலும் அப்போதே விரிவாக வெளிவந்துள்ளன.

உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்து 20-7-2013 அன்று தலையங்கம் எழுதிய "தினமணி" நாளேடு, "மருத்துவக் கல்விக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பதைத் தவிர, நுழைவுத் தேர்வு நடத்த உத்தரவிடும் சட்டப்படியான அதிகாரம் இந்திய மருத்துவக் குழுமத்துக்கு இல்லை என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இந்தத் தீர்ப்பு, இந்திய மருத்துவக் குழுமத்தின் அதிகார வரம்பை வரையறுத்திருக்கிறதே தவிர, மருத்துவ நுழைவுத் தேர்வு என்பது கூடவே கூடாது என்று கூறவில்லை. அந்தந்த மாநிலங்கள், தங்கள் மாநிலங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கையை நுழைவுத் தேர்வு மூலம் நடத்துவதற்கும் நீதிமன்றம் தடை விதிக்கவில்லை. நாடு தழுவிய நுழைவுத் தேர்வு என்பது மாநில அரசின் உரிமையில் தலையிடுவதாக இருக்கும் என்று உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி அல்தமஸ் கபீர், விக்ரம்ஜித் சிங் ஆகியோர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்" என்று கூறியுள்ளது.

ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த வசதிகளற்ற கிராமப்புற மாணவர்களுக்கும், வசதிகள் மிகுந்திருக்கும் நகர்ப்புற மாணவர்களுக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டை அகற்றுவதற்காகவே நுழைவுத் தேர்வு முறையையே ரத்து செய்தது கழக ஆட்சி. எனவே நுழைவுத் தேர்வு கூடாது என்ற கொள்கை அடிப்படையிலும்; மருத்துவக் கல்லூரி இடங்களுக்கான அகில இந்திய நுழைவுத் தேர்வில் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு இடமில்லை என்பதாலும்; அகில இந்திய நுழைவுத் தேர்வு மாநில உரிமைகளில் தலையிடும் காரியமாகும் என்பதாலும்; இந்த நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்து உச்சநீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்தத் தீர்ப்பினை மறு ஆய்வு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக மத்திய அமைச்சர்

குலாம் நபி ஆசாத் அறிவித்திருப்பது, ஏற்றுக்கொள்ள இயலாதது மட்டுமல்லாமல்; அவர் ஏற்கனவே நுழைவுத் தேர்வு தொடர்பாக மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கும் தற்போதைய அவரது அறிவிப்புக்கும் உள்ள முரண்பாட்டையும் சுட்டிக்காட்ட விழை கிறேன். தி.மு.கழகத்தைப் பொறுத்தவரை, நுழைவுத் தேர்வு எந்த வடிவத்தில் வந்தாலும்; அதை எதிர்க்கும் என்பதையும் தெளிவுபடுத்திட விரும்புகிறேன்!

அன்புள்ள,

மு.க.

23-07-2013

3781. காழ்ப்புணர்வோ, ஆதங்கமோ எனக்கு அல்ல!

உடன்பிறப்பே,

"என்.எல்.சி. பிரச்சினையில் தமிழக அரசுக்கு வெற்றி - பத்திரிகைகள் பாராட்டுகின்றன - கருணாநிதி புகாருக்கு ஜெயலலிதா பதில்" என்ற தலைப்பில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிக்கை வெளிவந்துள்ளது. நான் 19ஆம் தேதி விடுத்த அறிக்கைக்கு முதலமைச்சர் இவ்வளவு விரைவாக நான்கே நாட்களில் பதில் தந்துள்ளது ஆச்சரியத்தைத் தருகிறது. மகிழ்ச்சி, நன்றி. ஆனால் அந்த நீண்ட பதிலில் ஆத்திரமும், அவசரமும்தான் பிரதிபலிக்கிறதே தவிர, காரண காரிய விளக்கத்தோடு கூடிய வாதம் இருப்பதாகத் தெரியவில்லை. அம்மையாரின் அறிக்கையையும், என்னுடைய அறிக்கையையும் படிக்கின்ற நடுநிலையாளர்களாவது உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் எனது விளக்கங்களை மீண்டும் அளித்திட விரும்புகிறேன்.

"ஜெயலலிதாவுக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டதே என்ற பொறாமையில்" - "அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக" நான் அறிக்கை வெளியிட்டிருப்பது "ஆதங்கத்தின் உச்ச கட்டம்" என்று முதலமைச்சர் தன் அறிக்கையின் துவக்கத்தில் எழுதியிருக்கிறார்.

22-6-2013 அன்று நான் விடுத்த அறிக்கையில் "நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு விலக்களிக்க பங்கு ஒப்பந்த விதிகள் சட்டத்திலே திருத்தம் கொண்டுவரலாம் அல்லது என்.எல்.சி. நிறுவனத்தையே பங்குகள் விற்பனை செய்யப்படும் நிறுவனங்களின் பட்டியலிலே இருந்து நீக்கிவிடலாம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருப்பதை மத்திய அரசு கருத்திலே கொண்டு மத்திய அமைச்சரவை எடுத்துள்ள இந்த முடிவினை ரத்து செய்ய வேண்டும்" என்று முதல் அமைச்சரின்

கருத்தை எடுத்துக்காட்டி எழுதியிருக்கிறேன் என்றால் இது அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கான அடையாளமா?

ஏன், அதற்கு முன்பே 26-5-2013 அன்று நான் "முரசொலி"யில் எழுதிய கடிதத்தைத் தொடங்கும் போதே, "தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 23-5-2013 அன்று இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் இருக்கும் தனது பங்குகளை மத்திய அரசு மேலும் 5 சதவிகிதம் விற்பனை செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிவதாகவும், அந்த முயற்சி விரும்பத் தக்கதல்ல என்றும், எனவே என்.எல்.சி. பங்குகளை விற்பனை செய்வதற்குப் பதிலாக மாற்று வழிமுறைகளை ஆராயுமாறு கேட்டுக்கொள்வதாகவும் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது" என்று எழுதியிருக்கிறேன் என்றால், இதுதான் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கும், ஆதங்கத்திற்குமான எடுத்துக்காட்டா?

நெய்வேலி நிறுவனப் பங்கு விற்பனை தொடர்பாக முதலமைச்சரின் செயல்பாடுகள் பற்றி எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்வோ, ஆதங்கமோ சிறிதும் கிடையாது. 600 கோடி ரூபாய் செலவழித்துக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தை மூன்றாண்டுகளாக மூடியே வைத்திருப்பது - செம்மொழி நிறுவனத்தையே தலை தூக்காமல் செய்திருப்பது - மதுரவாயல், துறைமுகம் "எக்ஸ்பிரஸ் ஹைவே" சாலையை முடக்கிப் போட்டிருப்பது - சேதுக் கால்வாய்த் திட்டத்தைத் தூங்க வைத்திருப்பது - பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை முறையாகச் செயல்படவிடாமல் செய்திருப்பது போன்றவைதான் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகச் செய்யப்படும் நடவடிக்கைகள். நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பிரச்சினையில் நான் எழுப்பியிருக்கும் கேள்விகள் எதுவும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கேட்கப்பட்டது அல்ல.

"2006 ஆம் ஆண்டு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் 10 விழுக்காடு பங்குகளை மத்திய அரசு விற்பனை செய்ய முடிவு எடுத்தபோது, அதைத் தடுத்து நிறுத்தியது தான்தான் என்று கருணாநிதி தம்பட்டம் அடித்திருக்கிறார்" என்று ஜெயலலிதாதன் அறிக்கையிலே கூறி, அ.தி.மு.க. வின் கடுமையான எதிர்ப்பையும், நெய்வேலி தொழிலாளர்களின்

உண்ணாவிரதப் போராட்டத்தையும் கருத்திலே கொண்டுதான் தனியாருக்கு தாரைவார்க்கும் முடிவை மத்திய அரசு கைவிட்டது என்று மீண்டும் தன்னைத்தானே பெருமைப்படுத்திக்கொண்டு பாராட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்.

சுருக்கமாக நான் கேட்கிறேன்; நெய்வேலி பங்குகளை விற்க முதலில் மத்திய அரசு முடிவு செய்து, பின்னர் மத்திய அரசே அதைத் திரும்பப் பெற்றது தி.மு. கழக ஆட்சிக் காலத்தில்தானே; தற்போது அதுபோல மத்திய அரசின் முடிவினைத் திரும்பப் பெறச் செய்யவில்லையே? இது யாருக்கு வெற்றி? யாருக்குத் தோல்வி?

முதலமைச்சர் அவர்களே, நீங்கள் அ.தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியதால்தான் மத்திய அரசு நெய்வேலி பிரச்சினையில் தன் முடிவைத் திரும்பப் பெற்றது என்று 29-6-2013 தேதிய அறிக்கையில் கையெழுத்திட்டுச் சொல்லியிருக்கிறீர்களே, அந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் எந்தத் தேதியில் நடத்தப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா? அ.தி.மு.க. சார்பில் 2006ஆம் ஆண்டு நெய்வேலி பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டம் நடத்தவே இல்லை. ஒரு முதலமைச்சர் இவ்வாறு உண்மைக்கு மாறான தவறான தகவலைத் தரலாமா?

2006ஆம் ஆண்டு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் என்னதான் நடைபெற்றது?

23-6-2006 நாளிட்ட "தினமணி"யில் "தமிழகத்தைச் சேர்ந்த ஆளும் கூட்டணியில் உள்ள கட்சிகளின் ஆட்சேபத்தையும் மீறி, என்.எல்.சி. பங்குகளை விற்க மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது" என்று செய்திவந்துள்ளது. 24-6-2006 நாளிட்ட அதே தினமணியில் என்.எல்.சி. பங்குகள் விற்பனையைக் கண்டித்து ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் - நெய்வேலி தொழிற்சங்க கூட்டமைப்பு முடிவு" என்று தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர் ராசவன்னியன் தெரிவித்த செய்தி வெளிவந்துள்ளது. அதே தினமணியில், என்.எல்.சி. பங்கு விற்பனை முடிவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பா.ம.க., ம.தி.மு.க., ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. அ.தி.மு.க. சார்பில் எந்த எதிர்ப்பும் இல்லை. அதற்கடுத்த நாள் 25-6-2006 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது எதிர்ப்பினைத் தெரிவித்த செய்தியும், 4-7-2006 முதல் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டச்

செய்தியும் வெளிவந்துள்ளது. மேலும் அதே தினமணியில், தே.மு.தி.க. தலைவர், திரு. விஜயகாந்த், என்.எல்.சி. பங்குகளைத் தமிழக அரசே வாங்கலாம் என்று யோசனை தெரிவித்து, அதுவும் செய்தியாக வெளிவந்துள்ளது. எனவே என்.எல்.சி. பங்குகளைத் தமிழக அரசே வாங்கலாம் என்ற முடிவுகூட 2006ஆம் ஆண்டே தே.மு.தி.க. தலைவர், விஜயகாந்த் தெரிவித்த கருத்துதான்; இன்றைய முதல் அமைச்சரின் சொந்தக் கருத்து அல்ல! நம்முடைய முதலமைச்சருக்கு இந்தக் கருத்து ஏற்கனவே தே.மு.தி.க. தலைவரால் சொல்லப்பட்ட கருத்து என்று தெரிந்திருந்தால், அதே கருத்தை இப்போது மத்திய அரசுக்கு எழுதியே இருக்கமாட்டார்!

25-6-2006 அன்று என்.எல்.சி. பங்கு விற்பனை முடிவினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பிரதமருக்கு முதல்வராக இருந்த நான் கடிதம் எழுதினேன். 4-7-2006 அன்று தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தத்திலும் தி.மு.க. பங்கேற்கும் என்று செய்தியாளர்களிடம் கூறினேன். அன்றைய தினமும் ஜெயலலிதா நெய்வேலி பிரச்சினை குறித்து வாய்திறக்கவில்லை.

இவ்வளவிற்கும் பிறகுதான்; 22-6-2006 அன்று மத்திய அரசு எடுத்த முடிவினைப்பற்றி 27-6-2006 அன்றுதான் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வாய் திறக்கிறார். அப்போதுகூட, "என்.எல்.சி. விவகாரம் குறித்து தி.மு.க. அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டும்" என்கிறார். மேலும், "என்.எல்.சி. ஊழியர்களின் போராட்டத்தில் தி.மு.க. தொழிற் சங்கம் பங்கெடுக்கும் என்று கருணாநிதி கூறியிருப்பது நகைப்புக்கு இடமானது. அந்தப் போராட்டத்தில் அண்ணா தொழிற்சங்கம் கலந்துகொள்ளும்" என்று அறிவிக்கிறார். அந்தச் செய்தி 28-6-2006 "தினமணி"யில் வெளிவந்துள்ளது.

26-6-2006 அன்று தொழிற்சங்கத் தலைவர்கள் சென்னையில் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். மேலும் அவர்கள் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களுக்கும் சென்று தலைவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாகத் தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் 28-6-2006 அன்று ஜெயலலிதாவையும் சந்தித்துத் தங்களின் போராட்டத்தைத் தொடங்கிவைக்க வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்கள் அப்போதும் நெய்வேலி நிறுவனப் பங்குகளைத் தனியாருக்கு விற்பதிலிருந்து பின் வாங்கமுடியாத நிலை இருப்பதாகத் தெரிவித்த போது; "தொழிற்சங்கங்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளன; பத்து சதவிகித பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்வது பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும்; விற்பதிலே மத்திய அரசு உறுதியாக இருந்தால், அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கே வழங்கலாம்" என்று 2-7-2006 அன்று நான் பிரதமருக்கு எழுதினேன். இப்போது போலவே அப்போதும் நான் எழுதிய கருத்துக்குப் பிரதமர் இணங்கிவரும் நிலையிலே இருந்தாலும், அதை அப்போது தொழிலாளர்கள் ஏற்க முன் வரவில்லை. அதனால் 4-7-2006 அன்று மத்திய நிதியமைச்சர் நண்பர் ப. சிதம்பரம் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். அவரும் இதைப் பற்றிப் பிரதமரிடம் பேசுவதாக உறுதியளித்தார். அதே நாளில் நான் பிரதமருக்கு எழுதிய அவசரக் கடிதத்தில், பணியாற்றும் ஊழியர்களுக்குப் பங்குகள் விற்பனையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை ஊழியர்கள் ஏற்கவில்லை, எனவே நெய்வேலி பங்கு விற்பனையைக் கைவிடுமாறு வலியுறுத்தியிருந்தேன்.

3-7-2006 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், தான் போராட்டத்தில் கலந்து கொள்ள நெய்வேலிக்கு வர இயலவில்லை என்றும், போராட்டத்திற்குத் தனது ஆதரவு உண்டு என்றும் தெரிவித்தார். 4-7-2006 அன்று நான் எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசிடமிருந்து பதில் வராத நிலையில், நெய்வேலியில் தொழிலாளர்களின் போராட்டமும் தொடங்கிவிட்டதையடுத்து, 6-7-2006 அன்று முதலமைச்சர் என்ற முறையில் செய்தியாளர்களைச் சந்தித்த நான் "நெய்வேலி பிரச்சினையில் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் மத்திய அரசு இருக்கும்போது, மத்திய அரசினால் எடுக்கப்பட்டுள்ள அந்த முடிவுக்கு, தி.மு.க. அந்த அரசிலே இடம்பெற்று, இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதை டெல்லியிலே உள்ள தி.மு.க. அமைச்சர்கள் பிரதமரிடம் அறிவிப்பார்கள்" என்று கூறினேன். (தினமணி 7-7-2006) இந்த என்னுடைய அறிவிப்புக்குப் பிறகு, என்.எல்.சி. பங்கு விற்பனை முடிவினை நிறுத்திவைப்பதாக

மத்திய அரசு அறிவித்தது. 7-7-2006 தேதிய தினமணியில் முதல் பக்கத்தில் "தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க முடியாத நிலையில் மத்திய அரசு இருந்ததால், மத்திய அரசிலிருந்து விலகுவது என்ற முடிவை தி.மு.க. எடுக்க வேண்டியிருக்கும் என்று தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு. கருணாநிதி சென்னையில் 6-7-2006 காலை கடுமையாக எச்சரித்த சில மணி நேரங்களுக்கெல்லாம் இந்த முடிவு டெல்லியில் அறிவிக்கப்பட்டது" என்றும் அதுபற்றிப் பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டதாக வும் செய்தி வெளி வந்திருக்கிறது.

இவ்வளவு செய்திகளும் முரசொலியில் வெளிவந்தவை அல்ல. "தினமணி"யில் வெளிவந்தவை ஆகும். ஆனால் இவ்வளவையும் மறைத்துவிட்டு, 2006ஆம் ஆண்டு நெய்வேலி பங்கு விற்பனையை மத்திய அரசு திரும்பப்பெற்றது, தான் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் என்று ஒரு முதலமைச்சரே 29-6-2013 தேதியிட்ட தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறார் என்றால்; அது எவ்வளவு பெரிய உண்மைக்கு மாறான தகவல் என்பதைப் பத்திரிகையாளர்களும், நடுநிலையாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவையும் குறிப்பிட்டு இங்கே எழுதியிருக்கிறேன்.

அடுத்து அம்மையார் தனது அறிக்கையில், தான் எடுத்த முயற்சியை அரசியல் கட்சிகள் பாராட்டி வருவதைக் கண்டு பொறுக்க முடியாத தி.மு.க. தலைவர் கருணாநிதி, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் விதமாக, தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டுள்ளார் என்று எழுதியிருக்கிறார்.

இப்படி நான் எழுதியதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், அதற்கேற்ற பதிலாக எந்தெந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அம்மையாரின் முயற்சியைப் பாராட்டியிருக்கிறார்கள் என்ற பட்டியலை எழுதியிருப்பார் என்று தேடித் தேடிப் பார்த்தால், அம்மையாரின் அந்த நீண்ட அறிக்கையில் யாருடைய பெயரும் இல்லை.

அவர்களுடைய கட்சி நாளேட்டிலேயே, ஒருசில தலைவர்களின் பெயர்களை மட்டும் வெளியிட்டு அவர்கள் பாராட்டு தெரிவித்த வண்ணம் உள்ளனர் என்று செய்தி வந்திருக்கிறதே தவிர, 52 பக்கங்கள் கொண்ட அவர்களின்

கட்சி ஏட்டில் (17-7-2013) அரசியல் தலைவர்களின் பாராட்டு அறிக்கைகள்கூட வெளிவர வில்லையே? ஆளுங்கட்சியின் நாளேட்டிலேயே இதற்காக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, சமத்துவ மக்கள் கட்சித் தலைவர், கொங்கு இளைஞர் பேரவைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர் என்று தான் வெளிவந்துள்ளது. இவர்கள்தான் அவர்களின் அகராதிப்படி தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களா?

இவ்வளவையும் எழுதிய முதலமைச்சர், "ஜெயலலிதாவிற்கு இமாலய வெற்றிகிடைத்திருப்பதாகக் கூறி, ஆளுங்கட்சி நாளேட்டில் (16-7-2013) மட்டும் 55 பக்கங்களுக்கு விளம்பரங்கள் கொடுத்திருக்கிறார்கள், மற்ற ஏடுகளிலும் பக்கம் பக்கமாக விளம்பரங்கள்" என்று நான் எழுதியதற்கு ஏன் பதில் அளிக்கவில்லை? அது உண்மை என்பதால்தானே?

15-7-2013 அன்று மாலையில்தான் நெய்வேலி பிரச்சினையில் உடன்பாடு ஏற்பட்டு அன்றிரவு 7 மணிக்குத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள். 16ந்தேதிய காலை ஏடுகளில்தான் அந்தச் செய்தியே வெளிவருகிறது. ஆனால் 16-7-2013 அன்று காலையில் வெளிவந்த ஆளுங்கட்சி நாளிதழில்தான் முதலமைச்சர் "எனது தனிப்பட்ட முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி" என்று விடுத்த அறிக்கையே முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அதே பத்திரிகையில் 55 பக்கங்களுக்கு முதலமைச்சரைப் பாராட்டியும், நன்றி தெரிவித்தும் விளம்பரங்கள் வந்தது எப்படி? கால அவகாசமே இல்லாத நிலையில் வெளியிடப்பட்ட அவை உண்மையான பாராட்டுகள்தானா?

ஆனால் 2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் நெய்வேலி பங்குகளை விற்பனை செய்ய மத்திய அரசு முதலில் முடிவெடுத்து, பிறகு அந்த முடிவினைத் திரும்பப் பெற்றது குறித்து அப்போது அனைத்துக் கட்சித் தலைவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையும் நினைவூட்டுகிறேன்.

சி.ஐ.டி.யு. பொதுச் செயலாளர் சிட்டாப்ரதா மஜூம்தார், எம்.பி., 6-7-2006 அன்று வெளியிட்ட அறிக்கையில் "இந்த முடிவை மத்திய அரசு எடுக்க, உடனடியாகத் தலையிட்டு

செயல்பட்டதற்காகத் தமிழக முதல்வர்கலைஞர் அவர்களுக்கு எங்களின் பாராட்டுதல்களைத் தெரிவித்து, அதைப் பதிவு செய்கிறோம்" என்று தெரிவித்திருந்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் என். வரதராசன் 6-7-2006 அன்று மதியமே என்னை நேரில் சந்தித்துப் பாராட்டியதோடு, "நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்கு விற்பனை குறித்த முதல்வர் கலைஞரின் அறிவிப்பு கண்டு ஆறு கோடித் தமிழ் மக்களும் மகிழ்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். கலைஞரின் இந்த நடவடிக்கை பொதுத்துறை நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கான உந்து சக்தியாக இருக்கும்" என்றார். மேலும் அந்தக் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் 6-7-2006 அன்று வெளியிட்ட அறிக்கையில் "பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கக் கூடாது என்று தமிழக முதல்வர் கலைஞர் எடுத்த நிலைப்பாட்டிற்கு எங்களின் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் நெய்வேலி பிரச்சினையை நேர்த்தியாக நான் கையாண்டதாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர், தோழர் தா. பாண்டியன் வெளியிட்ட அறிக்கையில் "தமிழக மக்களின் உணர்வை வெளிப்படுத்திய முதல்வர் கலைஞரின் முடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது" என்றார்.

7-7-2006 அன்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் விடுத்த அறிக்கையில் "முதலமைச்சர் கலைஞர் அவர்களும் இந்த முடிவை மாற்றுவதற்குப் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார். இவற்றின் பலனாக மத்திய அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

பார்வர்டு பிளாக் கட்சியின் செயலாளர் ஜி. தேவராசன் பாராட்டி அறிக்கை விடுத்தார். இதுதவிர ஐதராபாத்தில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுக் கூட்டத்திலும், சென்னையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் என்னைப் பாராட்டித் தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டன.

7-7-2006 அன்று அண்ணா அறிவாலயத்தில் நெய்வேலித் தொழிலாளர்களின் 18 சங்கங்களைச் சேர்ந்த 36 பேர் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.

ஆனால் அப்போது "என் தனிப்பட்ட முயற்சிக்குக் கிடைத்த வெற்றி" என்று நான் கூறிக் கொள்ளவில்லை. மாறாக செய்தியாளர்கள் கேட்ட போது "இது வியர்வைக்கும் உண்மைக்கும் கிடைத்த வெற்றி" என்று அடக்கத்தோடு கூறினேன். இன்னும் சொல்லப்போனால் எங்கள் கட்சிப் பத்திரிகையான முரசொலியில் ஒரு பக்கம் கூட பாராட்டு விளம்பரம் அப்போது வெளிவரவில்லை.

இப்போதும் கூறுகிறேன். முதலமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதைப்போல எனக்கு ஆதங்கமோ, அரசியல் காழ்ப்போ, பொறாமையோ, விரக்தியோ நிச்சயமாகக் கிடையாது. ஆனால் நமது முதலமைச்சருக்கு எப்போதும் தன்னால்தான் நடந்தது என்று சொல்லிக்கொள்வதில் ஒரு ஆர்வமும் ஆசையும் உண்டு என்பதை அவர்களே ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், "எனது தலைமையிலான அரசு" - "என்னுடைய தனிப்பட்ட முயற்சி" - "முதலமைச்சரின் உத்தரவு" - என்றுதான் கூறிக்கொள்வார். அதிலே அவருக்கு ஒரு மகிழ்ச்சி, பெருமை. பேரவை நடைபெறும்போது கூட, அரசின் எந்த அறிவிப்பாக இருந்தாலும், எந்தத்துறை அறிவிப்பாக இருந்தாலும் 110வது விதியின் கீழ் முதலமைச்சர்தான் படிப்பார். வேறு எந்தத் துறை அமைச்சருக்கும் அந்த அனுமதியே கிடையாது. ஏன், அ.தி.மு.க. சார்பில் யாராவது ஒரு "போஸ்டர்" அல்லது விளம்பரத் தட்டி வைக்க விரும்பினால்கூட, ஏடுகளில் விளம்பரம் செய்ய விரும்பினால்கூட, அவரவர்களும் தங்கள் புகைப்படங்களை வெளியிடக் கூடாது. முதலமைச்சர் ஒருவரது படங்கள் மட்டும்தான் வெளிவரும். இதிலே நான் குறைசொல்ல முடியாது. அது அவர்கள் விருப்பம். எனவே அதற்காக நான் பொறாமைப்படுகிறேன், ஆதங்கப்படுகிறேன் என்று கூறுவது கடைந்தெடுத்த பொய்; அவரது அறிக்கையை முழுமையாக வெளியிட்டு மகிழ்ந்த அத்தனை ஏடுகளும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்குகளைத் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கிக்கொள்ளத் தயார் என்று முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம்

எழுதாமல் இருந்திருந்தால், நெய்வேலித் தொழிலாளர்களின் ஒற்றுமையான, ஒட்டுமொத்தப் போராட்டம் காரணமாகவே, மத்திய அரசு தானாகவே முன்வந்து நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்குகளை 2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் திரும்பப் பெற்றதைப் போலவே தற்போதும் திரும்பப் பெற்றிருக்கும் என்பது உண்மையா? இல்லையா? இந்த வாய்ப்பு முதலமைச்சர் எழுதிய அவசரக் கடிதம் காரணமாகத் தவறிப் போய்விட்டது என்பது தான் பலரின் கருத்து!

முதலமைச்சர் தனது நீண்ட அறிக்கையை முடிக்கும்போது "திருக்குறள்" ஒன்றைச் சொல்லி முடித்திருக்கிறார். அவருக்கு வள்ளுவர் எழுதியுள்ள மற்றொரு குறளையும் நினைவு படுத்துகிறேன்.

"நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்."

ஆட்சியினால் விளையும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அவற்றிற்குத் தக்கவாறு நடந்துகொள்ளாத அரசு அமைந்த நாடு சீர்குலைந்து போய்விடும் என்பதுதான் இதன் பொருள்!

அன்புள்ள,

மு.க.

24-7-2013

3782. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!

உடன்பிறப்பே,

"சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ. 2,950 கோடி நிதி ஒதுக்கீடு - ஜெயலலிதா உத்தரவு" என்ற தலைப்பில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் முதலமைச்சரின் அறிக்கை ஒன்றைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருக்கின்றன. ஆகா; நம்முடைய முதலமைச்சர் கொடைநாட்டில் இருந்து கொண்டே, சுமார் 3 ஆயிரம் கோடி ரூபாய் நிதியைச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காகவே ஒதுக்கியிருக்கிறாரே; எவ்வளவு பெரிய அறிவிப்பு; என்றெல்லாம் வியந்திடத்தான் தோன்றும்!

ஏனென்றால் கடந்த 21-3-2013 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அரசின் சார்பாக நிதியமைச்சர் படித்த நிதிநிலை அறிக்கையில், "2012-2013ஆம் ஆண்டில் 5,615.71 கோடி ரூபாயாக இருந்த நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை, 2013-2014ஆம் ஆண்டில் 6,452.77 கோடி ரூபாயாக இந்த அரசு உயர்த்தியுள்ளது" என்று அறிவித்தார். மேலும் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2,032 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. இந்தத்துறையின் அமைச்சர் ஏப்ரல் திங்களில் நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போதும் எந்தெந்த திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்று விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

8,580 கோடி ரூபாய்ச் செலவில் முதல் கட்டமாக 1,678 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்த முதலமைச்சர் ஆணை பிறப்பித்திருப்பதாகவும், 1,088 கோடியில் இந்த ஆண்டு 5000 கிலோ மீட்டர் நீளச்சாலைகள் புதுப்பிக்கப்படும் என்றும், 41 ரயில்வே சாலை மேம்பாலம் அமைக்கும் பணிகள் 1,062 கோடி ரூபாயில் நடந்து வருவதாகவும், சென்னை நகரில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சுரங்க நடைபாதைகள் அமைக்க

385.68 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் கிடைத்து விட்டதாகவும், திருப்பெரும்புதூர் பகுதியில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சாலைகள் அமைக்க 549 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் தனது பதிலிலே பேரவையில் கூறினார்.

இந்தத் துறைக்கான மானியக் குறிப்புகள் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாகவே அவசர அவசரமாக முதலமைச்சர் 1-4-2013 அன்று பேரவையில் படித்த 110வது விதியின் கீழான அறிக்கையில், திருநின்றவூர் முதல் பாடி வரையில் ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்த 168 கோடி ரூபாய்; தஞ்சாவூர் புறவழிச் சாலை அமைக்க 98 கோடி ரூபாய்; அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் 131 பாலங்கள் அமைக்க 300 கோடி ரூபாய்; 67 அரசு சாலைகள் அமைக்க 100 கோடி ரூபாய்; 11 மாவட்டங்களில் 18 ரயில்வே மேம்பாலங்கள் அமைக்க தல ஆய்வு போன்ற ஆரம்பக் கட்டப் பணிகளுக்காக 202 கோடி ரூபாய் என்று பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவித்தார். முதலமைச்சர் 110வது விதியின்கீழ் அறிவித்த திட்டங்கள் எல்லாம் நிதி நிலை அறிக்கையிலும், மானிய கோரிக்கையிலும் இடம்பெற்ற திட்டங்களா? அல்லது புதிய திட்டங்களா? என்றே தெரியவில்லை.

இதுதவிர 15-4-2013 அன்று முதலமைச்சர் பேரவையில் 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி, ஒன்றிய தார்ச்சாலைகளைப் பராமரிக்க 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் ஏற்படுத்தப்படும் என்று ஓர் அறிவிப்பினைச் செய்தார்.

2013-2014ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பத்தி 76இல், 168 கிலோ மீட்டர் நீளமுள்ள இடைவழித்தட மாநில நெடுஞ்சாலைகள் இருவழித்தடச் சாலைகளாகவும், 1000 கிலோ மீட்டர் நீளம் உள்ள ஒருவழித்தட முக்கிய மாவட்டச் சாலைகள், இடைவழித் தடங்களாகவும், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்த் தரம் உயர்த்தப்படும் என்றும், 3,500 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்றும், 2013-2014ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒருங்கிணைந்த சாலைக்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2,032 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களுக்காக நிதிநிலை அறிக்கையில், 2,032 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கிவிட்டு, நான்கு மாதங்கள் முடிவதற்குள்ளாக 24-7-2013 அன்று, ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ்ச் சாலை அகலப்படுத்துதல், சாலைக் கட்டமைப்பின் தரம் மற்றும் திறன் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக 2,950 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதல் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என்றால்; இது புதிய அறிவிப்பா? அல்லது நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதாக எழுதியிருந்தார்களே, அதே அறிவிப்பினை மீண்டும் ஒரு முறை செய்திருக்கிறார்களா? புதிய அறிவிப்பு இல்லை என்றால், நிதிநிலை அறிக்கையிலே இவ்வாறு அறிவித்திருந்தோம், அதற்கான அறிவிப்பு என்று கூறியிருக்க வேண்டாமா? இது புதிய அறிவிப்பு என்றால், நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்ட திட்டங்கள் எல்லாம் இந்த நான்கே மாதங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்டு விட்டனவா? எல்லாமே முதலமைச்சர் அறிக்கையை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட பத்திரிகைகளுக்குத்தான் வெளிச்சம்! மேலும் முதல் அமைச்சர் 110வது விதியின்கீழ்ப் பல அறிவிப்புகளைச் செய்தாரே; அதற்காக நிதி ஒதுக்கீடுகள் செய்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா? இது புதிய அறிவிப்பு இல்லை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற ஆணைதான் என்றால், அனைத்து ஏடுகளும் இவைகளை ஏதோ முதலமைச்சர் புதிதாக அறிவித்திருப்பதைப்போல செய்தி வெளியிட்டிருக்கிறார்களே, இதிலே எது உண்மை என்பதை அரசுத் தரப்பில் மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டாமா?

புதிய அறிவிப்பாகவே முதலமைச்சர் 2,950 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களைப் புதியதாக அறிவித்திருக்கிறார் என்பது உண்மையானால், இந்த நிதி ஒதுக்கீட்டிற்குப் பேரவையின் ஒப்புதல் பெறவேண்டாமா? நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்கள் மே திங்களில்தான் முடிவுற்றிருக்கின்ற நிலையில் இரண்டே மாதங்களில் இந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பது முறையானதுதானா? இதற்கெல்லாம் இந்த ஆட்சியினரின் விளக்கம் என்ன?

அதுமாத்திரமல்ல; இவ்வளவு பெரிய தொகைக்கான திட்டங்களை அறிவிக்கின்றபோது, அந்தத் திட்டங்களுக்கு அமைச்சரவையில் ஒப்புதல்பெற வேண்டாமா? அவ்வாறு

அமைச்சரவையில் இந்தத் திட்டங்கள் பற்றி எப்போது விவாதிக்கப்பட்டது? விவாதிக்கப்பட்டது என்றால், அந்த அமைச்சரவையின் கூட்டம் முடிவுற்றவுடனேயே ஏடுகளுக்கு அறிவித்திருக்க வேண்டாமா?

இந்த அழகில், நெடுஞ்சாலைத்துறையின் அமைச்சர் பேரவையில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில், கடந்த ஆண்டு,

2012-2013இல் இந்தத் துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் இன்னமும் நிலுவையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். உதாரணமாக, 2012-2013ஆம் ஆண்டில், ரூ.1,136 கோடி மதிப்பில் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், பாலங்கள் மற்றும் சிறுபாலப்பணிகள் ஆகியவை நிலுவைப் பணிகளாகச் செயலாக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து 2012-2013ஆம் ஆண்டிற்கான பல திட்டங்கள் இன்னும் முடிவடையாத நிலையில் இருக்கின்றன என்பதையும், அந்த நிலையில்தான் இந்த அளவிற்குப் புதிய திட்டங்களை மேலும் மேலும் தொடர்ந்து அறிவிக்கிறார்கள் என்பதும் நன்றாகவே விளங்குகிறது அல்லவா?

2013-14ஆம் ஆண்டிற்கு, சாலைப் பராமரிப்பிற்காக 1,088 கோடி ரூபாய் முதலமைச்சர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று இந்தத் துறையின் அமைச்சர் பேரவையிலே அறிவித்தார். இப்போது முதலமைச்சர் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 1,021 கோடியே 26 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார். இந்தத் தொகை அமைச்சரின் அறிவிப்பின்கீழ் வருமா? அல்லது அமைச்சர் ஒதுக்கியதாக அறிவித்ததை அன்னியில் வேறு கூடுதலான ஒதுக்கீடா?

முதல் அமைச்சரின் நேற்றைய அறிக்கையில் “இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2950 கோடி ரூபாய்” என்று குறிப்பிட்டிருப்பதால், ஏற்கனவே ஒதுக்கப்பட்டதை அன்னியில் இது புதிய அறிவிப்பாகத் தோன்றவில்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையே தான் “புதிய மொந்தையில் பழைய கள்” என்பதைப்போல - ஏடுகள் புதிய அறிவிப்பு என்பதைப்போல - வெளியிட்டிருக்கின்றன.

நெடுஞ்சாலைத்துறை சார்பில் முதலமைச்சர் இந்த அறிவிப்பினைச் செய்திருக்கின்ற இந்த நேரத்தில்; 1-8-1996 முதல் தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலைத்துறை எனத் தனித் துறை ஒன்றையும், 1998 மார்ச் 26ஆம் நாள் முதல் தமிழகத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கென தனி அமைச்சகத்தையும் உருவாக்கியதே தி.மு.கழக ஆட்சிதான் என்பது எனது நினைவுக்கு வருகிறது. அ.தி.மு.க. ஆட்சியோடு ஒப்பிட்டு ஒரு புள்ளி விவரம் கூற வேண்டுமேயானால்; 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஆட்சியில் 5,569 கோடி ரூபாய்ச் செலவில் 46 ஆயிரத்து 17 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன என்றால், தி.மு.கழக ஆட்சியில் 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் 13,529 கோடி ரூபாய்ச் செலவில் 65 ஆயிரத்து 886 கி.மீ. சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

2001-2006ஆம் ஆண்டுவரை 497 கோடி ரூபாய்ச் செலவில் 871 பாலங்கள் மற்றும் 814 சிறிய பாலங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டதற்கு மாறாக; 2006-2011ஆம் ஆண்டுவரை தி.மு.க. ஆட்சியில் 1,385 கோடி ரூபாய்ச் செலவில் 4,019 சிறிய பாலங்கள் கட்டப்பட்டன. 2001-2006ஆம் ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்ட புறவழிச் சாலைகள் 6 மட்டுமே! 2006-2011இல் தி.மு. கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட புறவழிச் சாலைகள் 48.

இவ்வளவு ஏன்? சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல்வரை புதிய நான்கு வழி உயர்மட்டச் சாலை அமைக்கும் திட்டத்திற்குக் கழக ஆட்சியில் முயற்சி எடுத்துத் தொடக்க விழாவும், பிரதமரை அழைத்து, என் முன்னிலையில் நடைபெற்று, பல கோடி ரூபாய் செலவழித்த பிறகு, அந்தச் சாலையை முடக்கிப்போட்டு வைத்திருப்பதே, அ.தி.மு.க. ஆட்சி தான்!

இந்த அரசினால் அறிவிக்கப்படுகின்ற திட்டங்களில் பல நடைமுறைக்கே வருவதில்லை என்றும், ஒரு சில திட்டங்கள் நீண்ட தாமதத்திற்கு உள்ளாவதாகவும் சொல்லப்படுகிறது. உதாரணமாக "டைம்ஸ் ஆப் இந்தியா", ஆங்கில நாளேடு கடந்த 15ஆம் தேதியன்று, பழைய மாமல்லபுரம் சாலையையும், கிழக்குக் கடற்கரைச் சாலையையும் இணைக்கும் மேம்பாலம் ஒன்றுக்கு கடந்த டிசம்பர் மாதம் ஒப்புதல் தரப்பட்டது என்றும், ஆனால்

அதற்கான இடத்தை முடிவு செய்ய இத்தனை மாதங்கள் ஆயிற்று என்றும் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மதிப்பு 400 கோடி ரூபாயாகும். மேலும் அதே ஏட்டில், போரூர், மூலக்கடை மற்றும் திருமங்கலம் ஆகிய இடங்களிலே கட்டுவதற்குத் திட்டமிடப்பட்ட மேம்பாலங்கள் நில ஆக்கிரமிப்பு காரணமாக தாமதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் எழுதியுள்ளது.

முதலமைச்சர் மூவாயிரம் கோடி ரூபாய்க்குச் சாலைகளை மேம்படுத்தப் போவதாக அறிவிப்பு செய்கிறார். ஆனால் சென்னையைச் சுற்றியுள்ள நகரங்களில் சாலைகள் எவ்வாறு இருக்கின்றன என்று "இந்து" நாளிதழே விரிவாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

12-7-2013 தேதியிட்ட "இந்து", "Roads in Tondiarpet, New Washermenpet, Perambur and Moolakadai were completely inundated. Kilpauk, Villivakkam and Mogappair West also suffered with Balfour Road and Barnaby Road among those flooded. Residents of Kilpauk said roads in the area became flooded even after a brief spell of rains, forcing them to walk on the road as pavements were completely encroached by parked vehicles. Several roads in north Chennai already in bad shape, have worsened now. In Moolakadai, road users had to battle not just rain-ravaged roads but also traffic snarls. Walking on Madhavaram High Road requires real skill. There are no pavements and the roadside is either slushy or waterlogged" என்றெல்லாம் எழுதியுள்ளது.

இதைப்போலவே 17-7-2013 அன்றும் "இந்து" நாளிதழ் தமிழகத்திலே உள்ள சாலைகள் எந்த இலட்சணத்திலே உள்ளன என்பதைப்பற்றி விரிவாக எழுதியுள்ளது. "இந்து" நாளிதழே இவ்வாறு இரண்டு நாட்கள் எழுதிய காரணத்தினால்தானோ என்னவோ முதலமைச்சர் அவர்கள் அவசர அவசரமாக சுமார் 3000 கோடி ரூபாய் திட்டத்திற்குச் சாலைகளின் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்குவதாக அறிவித்திருக்கிறார்.

தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறை பற்றி, மத்திய அரசின் "இந்தியத் தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம்" என்ன சான்றிதழ் கொடுத்துள்ளது என்பதை 14-7-2013 அன்று "இந்து" ஆங்கில நாளிதழ் பெரிதாக வெளியிட்டுள்ளது. முதல் அமைச்சரைப் பாராட்டி ஒரு சிறிய செய்தி வெளிவந்தால் கூட, அதைப் பெரிதுபடுத்தி வெளியிடும் தமிழ் நாளேடுகள் தேசிய நெடுஞ்சாலைத்துறை வாரியம் என்ன கூறியது என்பதை

வெளியிடவே இல்லை. "இந்து" செய்திக்கு தலைப்பே, "NHAI blames State for delay in ongoing projects" என்பதாகும். அந்தச் செய்தியில், "As many as seven ongoing important road widening works valued over Rs. 3,000 crore were moving at a snail's pace in Tamil Nadu due to lack of support from the State Government, said National Highways Authority of India (NHAI) officials" என்று வெளியிடப்பட்டுள்ளது. அதாவது மாநில அரசின் ஒத்துழைப்பு முறையாக இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் 3,000 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைகளை அகலப்படுத்துகின்ற முக்கியமான ஏழு திட்டங்கள் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றன என்று தேசிய நெடுஞ்சாலைத்துறை வாரிய அதிகாரிகள் தெரிவித்தார்கள் என்று செய்தி வந்துள்ளது. "மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, முன்னர் இருந்த தி.மு.க. ஆட்சி ஆகியவற்றைக் காட்டிலும் பலவகையிலும் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி" என்று போற்றிப் புராணம் எழுதிய "இந்து" நாளேடுதான், அ.தி.மு.க. ஆட்சியில் சாலைகளைப் பற்றிய அவலங்களை இவ்வாறெல்லாம் விவரித்துள்ளது!

இதையெல்லாம் மூடி மறைத்துவிட்டுத்தான், புதிய புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டு நாளேடுகளும் அந்த அறிவிப்புகளையெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரே அறிவிப்பை நிதி நிலை அறிக்கையில் ஒரு முறை - மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது ஒருமுறை - முதலமைச்சர் 110வது விதியின்கீழ்ப் படிக்கும் அறிக்கையில் ஒருமுறை - இத்தனையும் போதாதென்று அறிவிப்பு என்ற பெயரால் பல கோடி ரூபாய்த் திட்டங்களைப் புதிது புதிதாக அறிவிப்பதைப் போலச் செய்து நாட்டு மக்களைத் திசை திருப்பி நம்ப வைத்து ஏமாற்றிட முயற்சி செய்கிறார்கள். இதை யெல்லாம் பார்க்கும்போது "எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்று "மலைக்கள்ளன்" படத்தில் பாடப்பட்ட பாடல் தான் நினைவுக்கு வருகிறது!

அன்புள்ள,

மு.க.

26-7-2013

3783. வெற்றி முகட்டை நோக்கி நமது முயற்சிகள்!

உடன்பிறப்பே,

இன்று (26-7-2013) "தினத்தந்தி", "தினமணி", "ஜனசக்தி" போன்ற நாளேடுகளில் தமிழக முதல் அமைச்சருக்குப் பிரதமர், இலங்கைப்பிரச்சினையில் மத்திய அரசின் நிலையில் மாற்றம் இல்லை என்றும், தமிழர்களுக்குத் தன்னாட்சி கிடைக்கும் வரை பணி தொடரும் என்றும் உறுதிஅளித்துக் கடிதம் எழுதியிருப்பதாக, அரசின் செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாக வெளியிடப்பட்டுள்ளது.

விளக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால், தமிழக முதல் அமைச்சருக்குப் பிரதமர் 16-7-2013 அன்று எழுதிய கடிதத்தில் "இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆம் திருத்தம் தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாத்தியமான மாற்றங்கள் குறித்த தங்களுடைய (முதல் அமைச்சருடைய) 14-7-2013 அன்று தேதியிட்ட கடிதத்திற்கு நன்றி. இலங்கையில் அரசியல் அதிகாரங்களை ஒருங்கிணைப்பது மற்றும் தன்னாட்சி உரிமைஅளிப்பது குறித்த பிரச்சினையில் மத்திய அரசின் நிலையில் எந்த ஒரு மாற்றமும் இல்லை. இலங்கையில் எல்லாச் சமுதாயத்தினரும், குறிப்பாக இலங்கைவாழ் தமிழர்கள் அங்கு ஒருங்கிணைந்து வாழும் வகையில் அவர்களுக்குத் தலைமைப் பொறுப்பை அளித்து ஓர் உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதே நம்முடைய நாள்பட்ட கோரிக்கையாகும். இலங்கைவாழ் தமிழர்களுக்கு இத்தகைய தன்னாட்சி உரிமை அளிக்கும் வரையில் நம்முடைய பணி தொடரும்" என்று எழுதியிருக்கிறார்.

பிரதமர் கடிதத்தில் தெரிவித்திருக்கும் செய்திகள் நமக்கு ஆறுதலானவை. இலங்கைத் தமிழர் விவகாரத்தில், அந்த நாட்டு அரசு 13வது சட்டத் திருத்தத்தின் அடிப்படையையே நீர்த்துப் போகச் செய்து, அதனை உயிரற்ற ஒன்றாக ஆக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது நம் கவனத்திற்கு வந்தவுடனேயே,

9-6-2013 அன்று பிரதமருக்கு நான் எழுதிய விரிவான கடிதத்தில், "இலங்கை அரசியல் சட்டத்தின் 13வது திருத்தம் என்பது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நேரடி விளைவாக ஏற்பட்டது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். முந்தைய காலத்தில் சிங்களர்களுடன் இலங்கைத் தமிழர்கள் செய்துகொண்ட பல்வேறு ஒப்பந்தங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்ற கசப்பான அனுபவத்தின் பின்னணியில் ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் அமலாக்கப் படுவதற்கு இந்தியாவிலுள்ள நாம் இலங்கைத் தமிழர்களுக்கு உறுதியளித்துள்ளோம். 13வது அரசியல் சட்டத் திருத்தத்தை ரத்து செய்யுமாறு அதிபர் மகிந்தாராஜபக்சேவின் சகோதரரும், இலங்கைப் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபய்ய ராஜபக்சே ஏற்கனவே கூறியுள்ளார். தற்போது, ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்ய இந்தியா நேரடியாகத் தலையிடுவது இந்திய அரசின் கடமையும், பொறுப்புமாகும். இது மோதலுக்குத் தீர்வு மற்றும் இனச்சமரசம் ஆகியவற்றை நோக்கிய பாதையை இலகுவானதாக ஆக்கும். இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கையில் நடைபெற்றுவரும் நிகழ்வுகளுக்கு இந்தியா மவுனமான பார்வையாளராக இருக்கக் கூடாது. இலங்கையிலுள்ள தமிழர்களின் உரிமைகளையும், வாழ்க்கையையும் பாதுகாக்கத் தங்களது தலையீட்டினைக் கோருகிறேன்" என்று எழுதியிருந்தேன்.

என்னுடைய இந்தக் கடிதத்திற்கு, 11-6-2013 அன்றே உடனடியாகப் பதில் எழுதிய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், "இலங்கை அரசியல் சட்டத்தில் 13வது திருத்தம் தொடர்பான தங்களது ஜூன் 9ஆம் தேதி கடிதம் கிடைக்கப்பெற்றேன். இது இலங்கையிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் சேர்ந்து எடுக்கப்பட வேண்டிய முடிவு என்றாலும், அதன் விளைவுகள் குறித்து நாங்கள், நிச்சயம் பரிசீலித்து இதுதொடர்பான எங்களது கருத்துக்களை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்துவோம். இலங்கைவாழ் தமிழர்கள் உட்பட அங்குள்ள அனைத்துத் தரப்பினரும் தங்களுக்குரிய உரிமைகளைப் பெற்று, நல்லிணக்கத்தோடு வாழ வேண்டு மென்ற கருத்தில் இந்திய அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தாங்களும் அறிவீர்கள்" என்று எனக்கு எழுதியிருந்தார்.

அதாவது நான் எந்தப் பிரச்சினை குறித்துப் பிரதமர் அவர்களுக்கு கடந்த ஜூன் மாதம் 9ஆம் தேதியன்று விரிவாகக்

கடிதம் எழுதி, அதற்கு 11ஆம் தேதியன்றே பிரதமர் விளக்கமாகப் பதில் எழுதியிருந்தாரோ, அதே பிரச்சினையைத்தான் நம்முடைய முதல் அமைச்சரும் 14-7-2013 அன்று பிரதமருக்குக் கடிதமாக எழுதி, அதற்கு 16-7-2013 அன்று பிரதமரும் பதில் எழுதி, அந்தக் கடிதம்தான் இன்று (26-7-2013) தமிழக நாளேடுகளில் வெளிவந்துள்ளது.

நம்முடைய கடிதம் மட்டுமல்ல; கடந்த மாதம் 18-6-2013 அன்று இலங்கையின் தமிழ் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமரை டெல்லியில் சந்தித்து, 13வது சட்டத் திருத்தம் நீர்த்துப்போகச் செய்யும் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டுமென்று கேட்டபோது, "இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டுவிட மாட்டோம், பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர்களிடம் பிரதமர் தெரிவித்த கருத்தும் அப்போதே ஏடுகளிலே வெளிவந்துள்ளது.

இந்தியப் பிரதமர் எனக்குக் கடிதம் எழுதியது மாத்திரமல்ல; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவைத் தலைவர், தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 21.6.2013 அன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்குப் பிரதமர் 10.7.2013 அன்று பதிலளித்து எழுதிய கடிதத்தில், இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்ய நடக்கும் முயற்சிகள் குறித்த யெச்சூரியின் கருத்துக்களைத்தான் அறிந்ததாகவும், அதுகுறித்து இலங்கையில் தமிழ்மக்களும் இதர சமூகங்களைச் சேர்ந்த மக்களும் சமமாகவும், சுயமரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்ய முயற்சித்து வருவதாகவும் தெரிவித்திருந்தார்.

பிரதமர் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எனக்கும், தோழர் யெச்சூரி அவர்களுக்கும், தற்போது தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கும் எழுதிய கடிதங்கள் நமக்கு நம்பிக்கையைத் தருகின்றன.

1987ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை இடையே இலங்கையின் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்யும் ஒப்பந்தம் நிறைவேறியது. இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் தற்போது இலங்கை அரசு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருகிறது. இந்தப் பிரச்சினையிலே மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு முழுமையானதும், நிரந்தரமானதுமான அரசியல் தீர்வு காண்பதற்கான பாதையைச்

செப்பனிடும் முயற்சியின் முதல் கட்டமாக ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை நிறைவேற்றிடக் கடும் அழுத்தத்தைத்தர வேண்டுமென்றுதான் தி.மு.கழகம் வலியுறுத்துகிறது.

பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தின் தொடர்ச்சியாக, 16-7-2013 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற "டெசோ" அமைப்பின் கூட்டத்தில் நிறைவேற்றிய முதல் தீர்மானத்திலேயே, "இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர்மேனன் சில நாட்களுக்கு முன் இலங்கைக்குச் சென்று, இலங்கை அதிபர் ராஜபக்சே அவர்களைச் சந்தித்ததின் தொடர்ச்சியாக இலங்கையிலே உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையில் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்துக் குடிமக்களும் சமத்துவம், சமநீதி, சுயமரியாதையுடன் வாழ வேண்டும்; இதை இந்தியா உறுதி செய்ய விரும்புகிறது. அந்த வகையில் இலங்கையில் (இனப் பிரச்சினையில்) விரைவான அரசியல் தீர்வு காண்பதற்கு, 13வது அரசியல் சட்டத் திருத்தத்துக்கும் கூடுதலாக, இந்திய அரசுக்கும், சர்வதேசச் சமுதாயத்துக்கும் அளித்த வாக்குறுதியினை இலங்கை பின்பற்றி, அதிகாரப்பகிர்வு வழங்குவது அவசியம்; இதை இலங்கை அதிபர் ராஜபக்சேயிடம் சிவசங்கர்மேனன் இந்தியாவின் சார்பில் வலியுறுத்தியுள்ளார். வடக்கு மாகாணத்தில் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும், நம்பத் தகுந்த விதத்திலும் நடத்தப்படும் என நம்புகிறோம். இந்திய மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் குறித்தும் இலங்கை அதிபர் ராஜபக்சேயிடம் பேசப் பட்டுள்ளது. எந்த நிலையிலும் வன்முறையில் இறங்காமல் மனிதநேய அடிப்படையில் செயல்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவரும் தமிழர்கள், இலங்கையின் பூர்வக் குடிமக்களாக விளங்கிய போதிலும், அவர்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதப்படுகிற இன்றைய நிலைக்கு எதிராக நடத்திய பல்வகை தொடர் போராட்டங்கள் பயன்தராத நிலையிலும், இலங்கை அரசின் அடக்குமுறை காரணமாகவும், இலட்சக்கணக்கானோர் சொந்த நாட்டிலேயே அடிமைகளாக வாழவும், மேலும் பல இலட்சக்கணக்கானோர் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வாழவும் வேண்டியிருக்கிறது.

ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில், பிரிவு 2.14ன்படி "The Government of India will underwrite and guarantee the resolutions and co-operate in the implementation of these proposals" அதாவது, "இந்த ஒப்பந்தம் நிறைவேறுவதற்குப் பொறுப்பேற்கவும், உறுதியளிக்கவும், ஒத்துழைக்கவும் இந்திய அரசு ஒப்புக்கொள்கிறது" என்று இலங்கையோடு செய்துகொண்ட ஒப்பந்தத்திலேயே இந்திய அரசு கையொப்பமிட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் தன்னிச்சையாக மீறுவதற்கோ திருத்தம் செய்வதற்கோ எந்த ஒரு நாட்டுக்கும் அதிகாரம் கிடையாது; காரணம், மேற்படி ஒப்பந்தத்தில் இந்திய நாட்டின் நலனும் அடங்கியுள்ளது; இந்தச் சூழ்நிலையில், பசில் ராஜபக்சேயின் அறிவிப்பு உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு எதிராக அமைந்துள்ளது என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

இந்த நேரத்தில்தான் நேற்றையதினம் பிரதமரிடமிருந்து இந்தப் பிரச்சினை குறித்து, தமிழக முதல் அமைச்சருக்குக் கடிதம் வந்துள்ளது.

"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து, இந்தியாவுக்குக் கொண்டு வரவேண்டும்" என்று தமிழகச் சட்டப்பேரவையிலேயே ஒரு காலத்தில், ஏன் 16-4-2002 அன்று தீர்மானம் நிறைவேற்றிய ஜெயலலிதாவே தற்போது, அவற்றையெல்லாம் மறந்துவிட்டு, இலங்கையிலே 13வது திருத்தம் நீர்த்துப் போகாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்று; பிரதமருக்கு அவசரக் கடிதம் எழுதி, அதற்குப் பிரதமர் அவர்களும் பதில் எழுதியிருக்கிறார் என்று ஏடுகளில் செய்தி வருவதைப் பார்க்கும்போது, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளலாம்.

அதே ஜெயலலிதா பேரவையில் இலங்கைப் பிரச்சினைக்காக, பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தபோது, தமிழ் ஈழமே கிடைத்துவிட்டது என்பதைப்போல மகிழ்ச்சியடைந்து வானத்திற்கும், பூமிக்குமாக எகிறிக் குதித்தவர்கள், தற்போது ஜெயலலிதா 13வது சட்டத் திருத்தம் பற்றிப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருப்பதைப் பற்றி வாயே திறக்காமல் இருப்பதைப் பார்க்கும்போது, இலங்கைத்

தமிழர் பிரச்சினை என்றால் தாங்கள்தான் என்று அவர்கள் ஒரு காலத்தில் முந்திக்கொண்டு வந்ததையும், இப்போது அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று தேட வேண்டிய நிலை இருப் பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

13வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முழு அரசியல் தீர்வாக அமையாது என்பதும்; இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுடைய கருத்தினைக் கேட்டுத் தீர்வு காண்பதுதான், ஈழத் தமிழர்களின் நலனுக்கு உகந்த தீர்வாக இருக்கும் என்பதும்தான், "டெசோ" அமைப்பின் நிலைப்பாடாகும்.

இருப்பினும் தற்காலிகத் தீர்வாகவாவது, ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் பயன்பட வேண்டும் என்று "டெசோ" அமைப்பு கருதுகிறது" என்று முக்கியமான கருத்துகள் அனைத்தையும் எடுத்துக்காட்டியதோடு; இலங்கையில் நடைபெறவுள்ள "காமன் வெல்த்" மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வற்புறுத்தியும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியும், இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் வலியுறுத்திடும் வகையில்தான்; "டெசோ" இயக்கத்தின் சார்பில் வரும் ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் "தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்" நடத்துவதென்று முடிவெடுத்திருப்பதை யொட்டி; சென்னையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் நானும், என்னுடன் பேராசிரியர் சுப.வீரபாண்டியனும், மதுரையில் தமிழர் தலைவர் வீரமணி அவர்களும், திருச்சியில் கழகப் பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலினும், திருவள்ளூரில் தொல்.திருமாவளவனும், மற்றும் பல்வேறு மாவட்டங்களில் கழக முன்னணியினரும் தலைமை தாங்கி நடத்திடவிருக்கிறோம். அதற் கான அறிவிப்புகளும் ஏற்கனவே வெளிவந்துள்ளன. ஆகஸ்ட் 8ஆம் தேதிய ஆர்ப்பாட்டத்தை வழக்கம்போல வெற்றிகரமாக ஆக்கித் தரவேண்டிய கடமையை நிறைவேற்றுவதில் உடன்பிறப்பே, நீ கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டிருப்பாய் என்பதை நான் அறிவேன்!

அன்புள்ள,

மு.க.

27-7-2013

3784. இந்தியாவுக்கே இவர்தான் முன்னோடியாம்!

உடன்பிறப்பே,

"சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணை ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதியன்று திறக்கப்படும்'' என்று முதலமைச்சர் ஜெயலலிதா கொடைநாட்டிலிருந்து நேற்று (27-7-2013) அறிவித்திருக்கிறார். இதிலிருந்து இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி "அம்போ" ஆகி விட்டது என்பது உறுதியாகிவிட்டது.

இதைத்தான் 12-6-2013 அன்றே நான் விடுத்த அறிக்கை ஒன்றில், "அ.தி.மு.க. அரசு இனியாவது விழித்துக்கொண்டு, இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி உண்டா? இல்லையா? சாகுபடி செய்ய நீர் கிடைக்குமா? கிடைக்காதா? விவசாயிகள் என்ன செய்ய வேண்டும்? என் பதைப் பற்றியும்; விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட அரசு என்ன செய்யப் போகிறது என்பதைப் பற்றியும் உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்" என்று கேட்டிருந்தேன். நான் இவ்வாறு ஒரு மாதத்திற்கு முன்பு குறுவைச் சாகுபடி உண்டா? இல்லையா? என்று கேட்ட கேள்விக்குத்தான், முதலமைச்சர் நேற்றைய தினம் இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி கிடையாது; சம்பா சாகுபடி மட்டும்தான்; என்று பதில் கொடுத்திருக்கிறார்.

அம்மையாரின் அறிக்கை அனைத்து ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. அதன் முதல் பத்தியைப் படித்தவுடன்தான் இந்தக்கடிதமே எழுத வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. அந்த அறிக்கையின் முதல் பத்தி வருமாறு :-

"தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திடும் வகையில், பாசன ஆதாரங்களை வலுப்படுத்துவதிலும், வேளாண் துறையில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்துவதிலும், விவசாயி

களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் **இந்தியாவிற்கே முன்னோடியாக எனது தலைமையிலான தமிழக அரசு** விளங்கிவருகிறது"

இந்தியாவிற்கே முன்னோடியாகத் தனது தலைமையிலான தமிழக அரசு விளங்குகிறது என்கிறார் ஜெயலலிதா! இதைச் சொன்னால், உடனே நான் ஆதங்கப்படுகிறேன் என்றும், பொறாமைப்படுகிறேன் என்றும் கூறுவார். நான் ஏற்கனவே எழுதியிருந்தபடி, "எனது தலைமையிலான அரசு" என்று அடிக்கடி சொல்லிக்கொள்வதிலே ஜெயலலிதாவுக்கு ஒரு பெருமை! ஆனால் உங்கள் தலைமையிலான ஆட்சியில் நன்மை நடந்தால் பாராட்டிக் கொள்ளலாம். கடந்த ஆண்டும் சாகுபடி பொய்த்து விட்டது! இந்த ஆண்டு இதுவரையில் குறுவை கிடையாது. ஜூன் 12ஆம் தேதி திறக்க வேண்டிய மேட்டூர் தண்ணீரைக் கடந்த ஆண்டு எப்போது திறந்தார்கள் தெரியுமா? செப்டம்பர் 17ஆம் தேதி அன்றுதான் திறந்தார்கள். கடந்த ஆண்டு இவ்வாறு தாமதமாக அணை திறக்கப்பட்டதால், பிப்ரவரி மாதம் இறுதிவரை நீர் தேவைப்படும் என்று டெல்டா விவசாயிகள் கோரியிருந்தனர். பொதுவாக டெல்டா பாசனத்திற்கு வழக்கமாக ஜனவரி 28ஆம் தேதிவரை மேட்டூர் அணை திறந்துவைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்தியாவிற்கு முன்னோடியாக இருக்கும் "எனது தலைமையிலான ஆட்சி" என்று ஜெயலலிதா எப்போதும் சொல்லிக்கொள்ளும் ஆட்சியிலே என்ன செய்தார்கள் தெரியுமா? ஜனவரி மாதம் பிறப்பதற்கு முன்பாகவே கடந்த டிசம்பர் 21ஆம் தேதி இரவு 8 மணியோடு பாசனத்திற்கு அணை திறப்பு நிறுத்தப்பட்டுக் கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

கடந்த ஆண்டு 2012இல் தான் ஜூன் 12ஆம் தேதியன்று குறிப்பிட்ட நேரத்திற்குள் மேட்டூர் அணை திறக்கவில்லை என்றால், இந்த 2013ஆம் ஆண்டிலாவது ஜூன் 12ஆம் தேதியன்று வழக்கம் போலத் தண்ணீர் திறக்கப்பட்டதா என்றால், ஆகஸ்ட் 12ல் மேட்டூர் அணை திறக்கப்படும் என்று ஜூலை 27ஆம் தேதியே முதலமைச்சர் கொடைநாட்டிலிருந்து அறிவித்திருக்கிறார். இந்த இலட்சணத்தில்தான் வேளாண்மையில் இந்தியாவிற்கே முன்னோடியாக இருப்பதாக முதல் பத்தியில் எழுதியிருக்கிறார்கள். இதுதான் "முன்னோடி" என்பதற்கான இலக்கணம் போலும்!

மேலும் முதலமைச்சரின் அறிக்கையில் 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக நீரினைத் திறந்து விடுவதற்குப் பதிலாக, முதன் முறையாக முன்கூட்டியே 2011ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் தேதியே அதாவது ஆறு நாட்களுக்கு முன்பே நீரினைத் திறந்துவிடுமாறு ஆணையிட்டேன் என்றும் கூறியிருக்கிறார். 2011ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் தேதிவரை தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். ஜூன் மாதம்வரை அந்த ஆட்சியின் காலம் நீடித்திருந்தால் அப்போதும் தண்ணீர் திறந்துதான் விடப்பட்டிருக்கும். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது மே மாதத்தில்; ஜூன் 6ஆம் தேதிக்குள் அதாவது ஆட்சிக்கு வந்த 23 நாட்களுக்குள் இவர்கள் என்ன அற்புதம் செய்து, மேட்டூர் அணையைத் திறக்கச் செய்துவிட்டார்கள்? மேட்டூர் அணை நிரம்பிவிட்டது என்றால் திறந்துதானே ஆக வேண்டும். அதிலே என்ன புதிய சாதனை? தி.மு. கழக ஆட்சியில் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்திருந்த காரணத்தால்தானே, இவர்களால் ஜூன் 6ஆம் தேதியே மேட்டூர் அணையைத் திறக்க முடிந்தது. இவ்வாறு முன்கூட்டியே தண்ணீர் திறந்து விட்டதன் காரணமாக 2011-2012ஆம் ஆண்டு உணவு உற்பத்தியில் தமிழ்நாடு 101.52 லட்சம் மெட்ரிக் டன் அளவை எட்டிச் சாதனை படைத்தது என்றும், இதற்காக மத்தியஅரசின் விருதும் தமிழகத்திற்குக்கிடைத்தது என்றும் முதலமைச்சர் அறிக்கையில் சொல்லியிருக்கிறாரே, 2011ஆம் ஆண்டுவரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடர்ந்து மேற்கொண்டு வந்த பல்வேறு ஆக்கபூர்வமான முயற்சிகளின் காரணமாகத்தான் அந்தப் பெருமை கிடைத்தது என்பதை மறைக்க முயற்சிக்கலாமா? 2011ஆம் ஆண்டு பிள்ளை பெற்றது தி.மு.க. ஆட்சி. அதற்கு அ.தி.மு.க. ஆட்சி பெயரிட்டுப் பெருமைதேடிக் கொள்வது சரியானதுதானா?

முதலமைச்சர் ஜெயலலிதா மேலும் தனது அறிக்கையில் “காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்ததுடன், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்திடவும் எனது அரசு போராடி வருகிறது” என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலும் “எனது அரசு” என்ற பெருமைப்படலம்தான்! நடுவர்மன்ற இறுதி ஆணையை

மத்திய அரசிதழில் வெளியிட இவரது ஆட்சிதான் காரணமா? இவரது ஆட்சிக் காலத்திலே நடுவர்மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது என்பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். ஆனால் அதற்கு இவர் பெருமை தேடிக்கொள்ள முயற்சிக்கலாமா? உச்ச நீதி மன்ற நீதிபதி அவர்கள்தான் வழக்கினை விசாரிக்கும்போது, நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசின் அரசிதழில் ஏன் இன்னும் வெளியிடவில்லை; அந்த இறுதி ஆணையை உடனடியாக மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டுமென்று தாமாகவே முன்வந்து உத்தரவு பிறப்பித்து, அதன் காரணமாக நடுவர்மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது என்பதுதானே உண்மை! நடைபெற்ற வழக்கு வேண்டுமானால் ஜெயலலிதா தொடுத்த வழக்காக இருக்கலாம். ஆனால் அந்த வழக்கு நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துத் தொடுக்கப்பட்ட வழக்கா என்றால் கிடையாது. நீதிபதி அவர்கள் தன்னிச்சையாகத்தான், நடுவர்மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடும்படி உத்தரவிட்டார் என்பதே அசைக்க முடியாத உண்மை. இந்த உண்மையை ஜெயலலிதாவே 20-2-2013 அன்று அளித்த பேட்டியின்போது செய்தியாளர் "Madam, you have charged that the DMK has not done anything to get the Cauvery final Award published" என்று கேட்டதற்கு, முதலமைச்சர் ஜெயலலிதா "I hold the same charge against them and what has compelled the Central Government to notify the Award is the Supreme Court. So we are grateful to the Supreme Court for giving us Justice" என்று ஆங்கிலத்தில் பதிலளித்து, அது அவர்களுடைய கட்சி ஏட்டிலேயே வெளிவந்துள்ளது.

அவரே மத்திய அரசின் இறுதி அறிக்கையை மத்திய அரசிதழிலே வெளியிட வேண்டுமென்று உத்தரவிட்டது உச்சநீதிமன்றம். எனவே அந்த நீதியை வழங்கிய உச்சநீதிமன்றத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்று ஜெயலலிதாவே செய்தியாளர்களிடம் தெரிவித்துவிட்டு, அதே ஜெயலலிதா மேலும் என்ன சொன்னார் தெரியுமா? "22 வருட கால இடைவிடாத அயராத போராட்டத்திற்கு எனக்கும், (ஜெயலலிதாவுக்கும்) எனது அரசுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி" என்று சொல்லிக்கொண்டார்.

நடுவர்மன்றத்தின் இறுதி ஆணை வெளி வந்ததே 5-2-2007 அன்று; அது தி.மு.கழக ஆட்சியிலேதான், அதாவது 6 ஆண்டுகளுக்கு முன்புதான். ஆனால் "22 வருட கால இடைவிடாத அயராத போராட்டத்திற்கு எனக்கும், எனது அரசுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி" என்று முதலமைச்சர் "பாட்டும் நானே; பாவமும் நானே" என்ற பாணியில் பேட்டி அளித்துக்கொண்டார்.

அது மாத்திரமல்ல; தஞ்சை மாநகரிலே 9.3.2013 அன்று பாராட்டு விழா! எதற்காக? "தனி ஒருவராகப் போராடி" காவேரி நதி நீரைப் பெற்றுத் தந்ததற்காக முதல்வருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள்; "பொன்னியின் செல்வி சிலை"யை முதல்வருக்குப் பரிசாக வழங்கினார்கள். கர்ணன், துரியோதனன் கதையை எல்லாம் ஜெயலலிதா கூறி, கர்ணனைப் போல, தான் கொடை வள்ளல், உதவி செய்கின்ற மனம் தனக்குத்தான் இருக்கிறது என்றெல்லாம் - ஜெயலலிதா அடிக்கடி சொல்வாரே அதைப்போல, தனக்குத்தானே "சுய தம்பட்டம் அடித்து" பாராட்டிக் கொண்டாரே, ஏடுகள் எல்லாம் பக்கம் பக்கமாக அந்தப் பேச்சை வெளியிட்டனவே; இப்போது என்ன ஆயிற்று? காவேரி நதி நீரை நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பின்படி பெற்றுத் தந்துவிட்டாரா? காவேரித் தண்ணீர் சென்ற ஆண்டு வரவேண்டிய காலத்தில் வந்ததா? மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டிய நாளில் திறக்கப்பட்டதா? சென்ற ஆண்டு குறுவைச் சாகுபடி நடைபெற்றதா? குறுவை பொய்த்துப் போனதால் அறிவிக்கப்பட்ட குழப்பமான நிவாரண உதவிகளாவது முறைப்படி அவர்களைச் சென்றடைந்ததா? காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைத்து விட்டதா? வெற்றி விழா எனும் வினோதத்தைத் தவிர வேறெதுவும் நடைபெறவில்லை என்பது தானே உண்மை.

காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட முதலமைச்சர் ஜெயலலிதாதான் காரணம் என்று தன்னைத் தானே பாராட்டிக் கொள்கிறவரைக் கேட்கிறேன்; 5-2-2007 அன்று நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு வெளியானபோது, அந்தத் தீர்ப்பை அ.தி.மு.க. வினரோ, ஜெயலலிதாவோ நல்ல தீர்ப்பு என்று ஏற்றுக்கொண்டார்களா? "கருணாநிதியின் தொடர் துரோகச் செயலால்தான் நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது, இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று

மைனாரிட்டி தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்று ஜெயலலிதா அறிக்கைவிட்டது உண்டா இல்லையா?

அப்படியானால், தமிழகத்திற்குப் பாதகமான அந்தத் தீர்ப்பினைத்தான் மத்திய அரசின் அரசிதழிலே வெளியிட ஜெயலலிதா காரணமாக இருந்திருக்கிறார் என்பதையாவது ஒப்புக் கொள்கிறார்களா?

"நடுவர்மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால் தான் காவேரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும்; கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால்தான், நடுவர்மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும்" என்று 21.3.1991இல், நடுவர்மன்றத்தை மிகவும் குறைத்து மதிப்பிட்டு, ஜெயலலிதா கூறியது உண்டா இல்லையா? "நடுவர்மன்றம் தீர்ப்பு வழங்கினால் கூட அதை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டாயம், கர்நாடக முதல்வருக்குக் கிடையாது" என்று ஜெயலலிதா எள்ளி நகையாடவில்லையா? ஏன், 2-4-2002 அன்று தமிழகச் சட்டப் பேரவையிலேயே, அ.தி.மு.க. ஆட்சியில் காவேரி நதிநீர் ஆணையத்தை, செயல்படாத ஆணையம் என்றும், பல் இல்லாத ஆணையம் என்றும், அந்த ஆணையத்தை ஏற்காமல் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறியது என்றும் பிரதமர் தலைமையிலான ஆணையத்தின் தரத்தைத் தாழ்த்தி ஜெயலலிதா பேசவில்லையா?

அதன் பிறகு, அதே அ.தி.மு.க. ஆட்சியில் 21.6.2002 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், "காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை" என்று ஆணையத்தையே அவமதித்திடும் வகையில் முடிவெடுத்து அறிவிக்கவில்லையா? பின்னர் அந்த முடிவினைத் தலைகீழாக மாற்றிக் கொண்டு, அவரே அந்த ஆணையக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லையா?

ஏன், அதற்கு முன்பே, 21-9-1998 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "The Cauvery River Authority headed by the Prime Minister is a very big fraud perpetrated on the farmers of the Cauvery Delta in Tamil Nadu. This Authority headed by the Prime Minister has no such authority or power to order or implement anything

regarding the release of Cauvery Water. I categorically state that the new Authority headed by the Prime Minister will not benefit Tamil Nadu even by an iota" என்று காவேரி நதிநீர் ஆணையத்தைக் கொச்சைப்படுத்திக் கூறவில்லையா?

மேலும், மேலும் இன்னமும் எவ்வளவோ எழுதிக் கொண்டே போகலாம்! ''இந்தியாவிற்கே முன்னோடியாகத் தனது தலைமையிலான தமிழக அரசு விளங்கிவருகிறது" என்று மேட்டூர் அணை திறப்பு பற்றிய அறிவிப்பில் குறிப்பிட்டுக் கொண்டதாலும், காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட தானும், தனது அரசும்தான் காரணம் என்று அறிக்கையிலே கூறியதாலும், உண்மையில் என்ன நிலை என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான்; கடந்த கால நிகழ்வுகளை நினைவுகூர்ந்திடும் கட்டாயத்திற்கு நான் ஆளாகி இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேனே தவிர, யாரையும் குறை கூற வேண்டும் என்பது என் நோக்கமல்ல!

அன்புள்ள,

மு.க.

29-7-2013

3785. நிறைவேறட்டும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா!

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்பது கடந்த பதினாறு ஆண்டுகளாக அகிலஇந்திய அளவில் பேசப்பட்டு வருகின்ற ஒரு பிரச்சினையாகும். மகளிர்க்கான இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதும், பிறகு ஏதோ ஒரு காரணத்தால், அந்த மசோதா நிறைவேற்றப்படாமல் போய்விடுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய அமைச்சர் திருமதி ஜெயந்தி நடராஜன் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது; கடந்த முறை பாராளுமன்றத்தில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டபோது, எதிர்க்கட்சிகள் கூச்சல், குழப்பம் ஏற்படுத்தி நிறைவேற்றவிடாமல் தடுத்துவிட்டனர். ஆனால் வரும் மழைக்காலக் கூட்டத் தொடரில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயன்று வருகிறது. இந்த மசோதாவை நிறைவேற்றிட எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

2010ஆம் ஆண்டிலேயே, தமிழகத்தில் கழக ஆட்சி இருந்தபோதே, மகளிர் இட ஒதுக்கீடு மசோதா எப்படியும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற எதிர்பார்ப்போடு 8-3-2010 அன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. ஆளுங்கட்சியான காங்கிரஸ் தனது உறுப்பினர்களுக்கு "கொறடா" உத்தரவு பிறப்பித்தது இயல்பான ஒன்று என்ற போதிலும், முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சியும் தனது உறுப்பினர் களுக்குத் தீர்மானத்தை ஆதரிக்க "கொறடா" உத்தரவு பிறப்பித்தது.

"இந்த முறை நிறைவேறிவிடும்" என்று ஒவ்வொரு முறையும் பரவலாகப் பேசப்பட்டு, ஆனால் ஏதோவொரு காரணத்தால் தள்ளிப்போய் வந்த இந்தக் கோரிக்கை இந்த முறை எப்படியும் நிறைவேறிவிடும் என்ற எதிர்பார்ப்பு 2010ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் எழுந்தது.

இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோதுதான் மகளிர்க்கு நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33 சதவிகித இட ஒதுக்கீடு செய்யும் பிரச்சினை பெரிதாகப் பேசப்பட்டது. அதற்கு முதற்கட்டமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கான "பஞ்சாயத்து ராஜ்"சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பது கட்டாயமாக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு நான்காவது முறையாக எனது தலைமையில் கழக ஆட்சி தமிழகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அதற்கு முன்பு பல ஆண்டுக்காலம் நடத்தப்படாமல் இருந்த உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை அறிவித்து, மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் தேர்தலை நடத்தி 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்புகளையேற்கும் நிலையை உருவாக்கியபோது, மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்துப் பதவிகளிலும் முதல்முறையாக, 33 விழுக்காடு ஒதுக்கீடு செய்து பெரும் சாதனை புரிந்ததின் வாயிலாக 44,143 மகளிர் அப்போது உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்கும் நிலைமையைத் தமிழகத்தில் கழக அரசு செய்து காட்டியது.

அதே 1996ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்தான் நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் மகளிர்க்கு இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா முதலில் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. அன்றைய பிரதமர் தேவகவுடா அவர்கள் தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியில் 81வது அரசியல் சாசனத் திருத்தத்தின்கீழ் இந்த மசோதாவை அன்றைய மத்திய சட்ட அமைச்சராக இருந்த திரு. ராம்காந்த்காலப் அவர்கள் முன்மொழிந்தார். சமாஜ்வாடி, ராஷ்டீரிய ஜனதாதளம் ஆகிய கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக அந்த மசோதா - நாடாளுமன்ற உறுப்பினர் கீதா முகர்ஜி தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அந்தக்

குழுவின் அறிக்கையானது அதே ஆண்டு டிசம்பர் 9ஆம் தேதியன்று பதினோராவது மக்களவையில் முன்மொழியப்பட்டது.

பின்னர் அதற்கடுத்த பன்னிரண்டாவது மக்களவையிலே, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியிலே - 84வது அரசியல் சாசனத் திருத்தமாக இந்த மசோதா நாடாளுமன்றத்தில் - 26-6-1998 அன்று மீண்டும் முன்மொழியப்பட்டபோதிலும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் மக்களவை ஒத்திவைக்கப்பட நேரிட்டது.

அதன்பிறகு பதிமூன்றாவது மக்கள் அவையில், திரு.வாஜ்பய் அவர்கள் பிரதமராக இருந்தபோது 22-11-1999 அன்று மீண்டும் மசோதா நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. அப்போது சட்ட அமைச்சராக இருந்த திரு. ராம் ஜெத்மலானி அவர்கள் மசோதாவை முன்மொழிந்த நேரத்தில் - சமாஜ் வாடி, ஆர்.ஜே.டி. கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து - சட்ட அமைச்சரின் கையிலே இருந்த மசோதாவின் நகலைப் பறித்துக் கிழித்தெறிந்தனர். அதன்காரணமாக அப்போதும் இந்த மசோதா நிறைவேற்றப்படவில்லை.

அதன் பின்னர் 2002ஆம் ஆண்டில் ஒரு முறையும் - 2003ஆம் ஆண்டில் இரண்டு முறைகளும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட போதிலும், அப்போதும் அதனை நிறைவேற்றிட இயலவில்லை. 2008ஆம் ஆண்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே - சட்ட அமைச்சராக இருந்த திரு.பரத்வாஜ் அவர்கள் மாநிலங்களவையிலே மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை முன்மொழிந்த நேரத்திலும், அப்போது அவையிலே ஏற்பட்ட அமளியால் மசோதா நிறைவேறவில்லை.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் குறைந்தபட்ச செயல் திட்டங்களில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவும் ஒன்று. 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதியன்று மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தொடர்பாகத் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியைத் தவிர்த்து, ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் மற்றும் அதன் ஆதரவுக் கட்சிகளான இடது சாரிகள், சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகளுடன் கலந்துரை யாடல் கூட்டத்தை மத்திய அரசு கூட்டியது. ஆனால் அப்போது நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தொடரில் பெண்களுக்கான மசோதாவை நிறைவேற்ற லல்லுபிரசாத்யாதவ், முலாயம்சிங்யாதவ் போன்றோர்

எதிர்ப்பு தெரிவித்ததாலும், கருத்து ஒற்றுமை ஏற்படாததாலும், பெண்கள் இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவு குறித்து உடன்பாடு காண முடியவில்லை.

2005ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற தி.மு.கழக மண்டல மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினையொட்டி, "தமிழக மகளிரே ஒன்று கூடுங்கள்" என்று நான் விடுத்த அறிவிப்புக்கிணங்க, அந்த ஆண்டு அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15இல் சென்னையில் மகளிர் பேரணி ஒன்று என் தலைமையில் நடைபெற்றது. மேலும் 2007ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல் திட்டக்குழு, மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட வேண்டுமென்றுகோரி மாவட்டத் தலைநகரங்களில் பிப்ரவரி 10ஆம் தேதி அந்த ஆண்டு மகளிர் பேரணி நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அவ்வாறே நடத்தப்பட்டது. அதே ஆண்டு ஜூலைத் திங்கள் 14, 15 ஆகிய இரு நாட்களில் கடலூரில் தி.மு.க. மகளிர் அணியினர் நடத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றுதான், "பெண்கள் சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் 33 சதவிகித தொகுதிகளில் பங்கேற்கும் வகையில் சட்ட முன்வடிவை நிறைவேற்றிட வேண்டும்" என்பதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் - இன்று நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாக இந்த மகளிர் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆழ்ந்த அக்கறைகொண்டு, ஒவ்வொரு மாநாட்டிலும், பொதுக்குழுவிலும் தீர்மானங்கள் நிறைவேற்றிடத் தவறியதில்லை. இன்றைக்கு இந்தியத்திருநாட்டின் பல இடங்களிலும் - மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்ற ஒலியைக் கேட்க முடிகிறது.

ஏன்; தனியாக மகளிர்க்கு இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரவேண்டும்? இப்போது மகளிர் அந்தப் பொறுப்புகளுக்குப் போட்டியிட முடியாதா? சட்டம் ஏதாவது தடுக்கிறதா?

சட்டம் தடுக்கவில்லை! சட்டமன்ற வேட்பாளராகவோ, நாடாளுமன்ற வேட்பாளராகவோ; தேர்தலில் ஒரு ஆண் போட்டியிடுவதைப்போல; இப்போது ஒரு பெண்ணும் போட்டியிடலாம்; அரசியல் சட்டம் அதைத்தடுக்கவில்லை. ஆனால் ஆணாதிக்கம் அவர்களைப் போட்டியிட அனுமதிப்

பதில்லை. ஆணாதிக்கத்தின் இந்தச் சனாதனச் சம்பிரதாயத்துடன் எவ்வளவு காலத்துக்குச் சண்டை போட்டுக்கொண்டிருக்க முடியும்; அதனால்தான் மகளிர்க்கு இத்தனை இடம் என்று ஒதுக்கீடு செய்து, அந்தச் சட்டப்படி அந்த இடங்களில் மகளிர் மட்டும்தான் போட்டியிட முடியும் என்று செய்துவிட்டால்; அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைக்கான அடிக்கல் நாட்டும் திருப்பணி நிறைவேறத் தொடங்கிவிடும்.

ஏற்கனவே தலித் எனப்படும் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களை இந்த உரிமைகளைப் பெறக் கூடியவர்களாகக் கைதூக்கி விட இருக்கின்ற தனித்தொகுதி முறை எல்லா மட்டத்திலும் அரசியல் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டிருப்பதை "மாதிரி" யாகக் கொண்டு; அந்தப் பழைய நிலைக்குப் பங்கமேதும் நேராமல்; இப்போது கோரிக்கையாக வைக்கப்படுகிற மகளிர் இட ஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டு அதற்கான துவக்கத்தை நடத்த சமூகப்பிரக்ஞையுள்ள, உரிமைகள் வழங்கப்படுவதில் உள்ள நியாயங்களை நிலைநாட்டுவதற்கு நினைத்திடும் இயக்கங்கள் முன்வர வேண்டும்.

பொதுக்கருத்து (consensus) உருவாக வேண்டும் என்று பொறுமையுடன் காத்திருப்பது பொறுப்புடையோர் செயல் எனினும்; கோரிக்கையைத் தள்ளிப்போடுவதற்காகக் 'காத்திருப்பு' என்பது ஏற்க இயலாத ஒன்றாகி விடும்.

சட்டம் நிறைவேற்றிடத் தேவையான வாக்குகள் கிடைக்காவிட்டால்கூட இந்த மசோதாவுக்கு ஆதரவுதராதவர்களை மகளிர் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டலாம் அல்லவா?

2010ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினை தீவிரமாக விவாதிக்கப்பட்ட நேரத்திலேயே நான் கருத்து தெரிவித்தபோது, முதலில் மகளிர்க்கு 33 சதவிகிதம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதும்; பின்னர் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று படிப்படியாக "உள் ஒதுக்கீடு" செய்து கொள்வதும் சரியானதாகும். முதலில் விருந்துக்கான அழைப்பையேற்று வீட்டுக்குள் செல்வோம். பின்னர் விருந்தில் படைக்கப்படும் பண்டங்களில் நம் உடலுக்கு ஒத்துக் கொள்ளக் கூடியது எது; ஒவ்வாதது எது என்பதைச் சொல்லி அதற்கேற்பப் பரிமாறச் செய்வோம் என்று கூறினேன்.

"Don't fail the Women of India" (இந்திய நாட்டு மகளிரை ஏமாற்றிவிடாதீர்கள்) என்ற தலைப்பில் "இந்து" நாளிதழ் 2010ஆம்

ஆண்டில் எழுதிய தலையங்கத்தில் "The United Progressive Alliance Government's announcement of its intention to push forward the Women's Reservation Bill without any dilution in the coming week is the best political news we have had for a long time. If all goes according to plan, the long-pending Bill will be adopted by both houses of Parliament on or around March 8. which marks the Centenary of International Women's Day" என்று எழுதியிருந்தது.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ் தனது தலையங்கத்தைத் தொடங்கும்போது, "The Government's renewed efforts to push ahead with the women's reservations bill underline the political value of the measure in its eyes rather than the possibility of enactment" என்று எழுதியது.

8-3-2010 அன்று பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் 33 சதவிகித இட ஒதுக்கீடு சட்டமசோதா, மாநிலங்களவையில் பெரும் அமளிக்கிடையே தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீதான வாக்கெடுப்பு அதற்கடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மறுநாள் பலத்த சர்ச்சை மற்றும் கூச்சல் குழப்பத்துக்கு இடையே மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் நிறைவேறியது. மசோதாவுக்கு ஆதரவாக 186 வாக்குகளும், எதிர்த்து ஒரே ஒரு வாக்கும் பதிவானது. மசோதா மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் கவிஞர் கனிமொழி பேசினார். மகளிர் இட ஒதுக்கீடு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டபோது,

9-3-2010 அன்று அதுபற்றி என்னிடம் கருத்து கேட்ட நேரத்திலேகூட, "இட ஒதுக்கீடு என்பது ஒரு பழத்தைப் போன்றது. அந்தப் பழத்தினுடைய ஒரு சுளையை எடுத்துச் சாப்பிடுவது தான் உள் ஒதுக்கீடு. இப்போது நமக்குப் பழம் கிடைத்திருக்கிறது. மகிழ்ச்சி அடைவோம். இனி யார் யாருக்கு எத்தனைச் சுளைகள் என்பது பற்றி தேவைப்படும்போது முடிவு செய்வோம்" என்று கூறியதோடு, பிரதமருக்கும் சோனியா காந்திக்கும் வாழ்த்துத் தந்தியும் அனுப்பினேன்.

அதற்குப் பிறகுத் தலைமைச் செயலகத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் திருமதி சோனியாகாந்தியும் பிரதமரும் கலந்து கொண்டபோது, அவர்களுக்கு முன் நான் உரையாற்றிய நேரத்தில், "மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை மாநிலங்களவையில்

நிறைவேற்றிவிட்டு முதன் முறையாக நமது மாநிலத்திற்கு பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களும் வந்துள்ளனர். அந்த வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றிவிட்டு முதன் முதலாக நமது தமிழகத்திற்கு வந்துள்ள அவர்களைப் பாராட்டி மகிழ்வதற்கு அடையாளமாக அனைவரும் ஒரு நிமிடம் தொடர்ந்து கைதட்ட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன். அவ்வாறே விழா நடைபெற்ற பெரும் பந்தலே அதிரும் வண்ணம் வந்திருந்த அனைவரும் கைதட்டிப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அதன் பிறகு உரையாற்றிய திருமதி சோனியாகாந்தி அவர்கள், "கலைஞர் அவர்களே, இங்கு மாநிலங்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறியது பற்றிக் குறிப்பிட்டதால் நான் ஒன்றைச் சொல்கிறேன்; அவரது ஆதரவு இல்லாமல் இது சாத்தியமாகி இருக்காது" என்று குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் நிறைவேறிய இந்த மசோதாவை, மக்களவையிலே நிறைவேற்ற முடியவில்லை. மூன்றில் இரண்டு பங்கு ஆதரவினைத் திரட்ட முடியவில்லை. இந்த நிலைதான் இப்போதும் தொடர்ந்து நீடித்து வருகிறது. நாடாளுமன்றம் கூடுகின்ற நேரத்தில் எல்லாம் அந்தக் கூட்டத் தொடரில் மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான மசோதா கொண்டுவரப்படும் என்றும், நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும் உறுதிமொழிகள் தரப்படுகின்றன.

"பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை" என்று சட்டம் நிறைவேற்றிய நம்மைப் பொறுத்தவரையில், நம்முடைய இயக்கத்தின் முக்கிய கொள்கைகளிலே ஒன்று மகளிர்க்கு இட ஒதுக்கீடு. அந்த முறையில் வரும் ஆகஸ்ட் திங்களில் நடைபெறவுள்ள கூட்டத்தொடரிலாவது மகளிர்க்கான இடஒதுக்கீடு மசோதா அனைவரது ஒத்துழைப்போடும், நல்லாதரவோடும் நிறைவேறும் என்ற நம்பிக்கையையும், நிறைவேற்றப்பட வேண்டுமென்று வேண்டுகோளையும் முன்வைக்கிறேன். நிறைவேறட்டும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா!

அன்புள்ள,

மு.க.

30-7-2013

3786. தாமதமே; உன் பெயர்தான் தமிழக அரசா?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சி எந்த அளவிற்கு விரைந்து செயல்படுகிறது (?) என்பதற்கு உதாரணமாக அண்மையில் அதாவது இந்தத் திங்கள் 28ஆம் தேதியன்றும், 29ஆம் தேதியன்றும் வெளிவந்துள்ள முதல் அமைச்சரின் இரண்டு நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

28-7-2013 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில், "இராமனாதபுரம், கன்னியாகுமரி, நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த 16 மீனவர்கள் ஈரான் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீட்க நான் தலையிட வேண்டுமென்று மீனவர்களின் குடும்பத்தினர் 24ந்தேதி மனு அளித்த பிறகே இந்தப் பிரச்சினை எனக்குத் தெரியவந்தது. அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது ஈரான் கடல் பகுதிக்குள் நுழைந்ததாகக் கூறி, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்குச் சட்ட உதவி கிடைக்காத சூழ்நிலையில் ஈரான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு ஆறு மாத காலம் சிறையும், 5,750 அமெரிக்க டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது. தண்டனைக் காலம் முடிந்தும், அபராதத் தொகையைச் செலுத்த முடியாததால், ஏழை மீனவர்கள் தொடர்ந்து சிறையில் இருக்கின்றனர். தமிழக மீனவர்களால் அங்குள்ள இந்திய தூதரகத்தைக்கூடத் தொடர்புகொள்ள முடியவில்லை. இதில் பிரதமர் உடனடியாகத் தலையிட்டு, அபராதத் தொகையைச் செலுத்த சவுதி அரேபியாவில் உள்ள இந்தியத் தூதரகத்தை அறிவுறுத்த வேண்டும். சிறையில் இருக்கும் மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஜெயலலிதா எழுதியுள்ளார். அந்தக் கடிதம் பிரதமர் அலுவலகத்திற்குச் சென்றடைந்ததோ இல்லையோ, தமிழகத்தில் உள்ள ஏடுகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்துள்ளது.

மீனவர்கள்பால் அக்கறையோடு தமிழக அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கையை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். ஈரான் சிறையில் வாடும் 16 தமிழக மீனவர்களையும் மீட்க மத்திய அரசும், பிரதமரும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை மத்திய அரசு செலுத்திட முன்வராவிட்டாலும்கூட, அதற்காகக் காத்திருக்காமல் தமிழக அரசே அபராதத் தொகையைச் செலுத்தி, 16 மீனவர்களையும் உடனடியாகத் தாயகம் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மீனவர் சமுதாயம் ஜெயலலிதாவிடம் எதிர்பார்ப்பதால் அதனை நானும் வலியுறுத்துகிறேன்.

முதலமைச்சர் தனது கடிதத்தில், மீனவர்களின் குடும்பத்தினர் 24ந்தேதி மனு அளித்த பிறகே இந்தப் பிரச்சினை தனக்குத் தெரியவந்தது என்று எழுதியிருக்கிறார். மீன் வளத்துறைக்கென அமைச்சரும், அந்தத் துறைக்கென அதிகாரிகளும் இருக்கிறார்களா; இல்லையா? அவர்கள் ஏன் இந்தத் தகவலை முதலமைச்சரின் கவனத்திற்குக் கடந்த ஆறு மாத காலமாகக் கொண்டுசெல்ல வில்லை? 27-7-2013 தேதிய "தினமலர்" நாளிதழிலேயே "தமிழக மீனவர்கள் 16 பேர் ஈரான் சிறையில் தவிப்பு - மீட்கக்கோரி குடும்பத்தினர் அமைச்சரிடம் மனு" என்ற தலைப்பில் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியிலேயே, "ஈரான் சிறையில் வாடும், 16 மீனவர்களின் குடும்பத்தினர், அவர்களை மீட்கக்கோரி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர்களிடம் ஏற்கனவே மனுக் கொடுத்துள்ளனர். அங்குள்ள மீன்வளத்துறை அதிகாரிகளிடமும் மனுக் கொடுத்துள்ளனர். மனுவின் நகலை மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ளனர். எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் நேற்று அமைச்சரைச் சந்தித்தனர்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டாலும், அந்தத் தொகுதியின் தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹெலன் டேவிட்சன், மீனவர்களைப் பற்றிய தகவல் அவருக்குத் தெரிந்தவுடன், 28-7-2013 அன்று மத்திய அமைச்சர்கள் திரு.வயலார்ரவி அவர்களுக்கும், திரு.சல்மான் குர்ஷித் அவர்களுக்கும், ஈரானில் உள்ள இந்தியத் தூதுவருக்கும் எழுதிய கடிதத்தில், அந்த மீனவர்கள் பற்றி 13-3-2013 அன்றே அந்த மத்திய அமைச்சர்களுக்கே கோரிக்கை வைத்ததையும்

நினைவூட்டியிருக்கிறார். மேலும் அந்த அமைச்சர்களுடன் தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதையும் இந்த நேரத்தில் நினைவுகூர்ந்திட விரும்புகிறேன். மத்திய அமைச்சர்களுக்கு நமது நாடாளுமன்ற உறுப்பினர் எழுதிய கடிதத்தில், "I am representing on behalf of the Indian Fishermen of my Constituency who are in Jail from 14th December 2012 to till date, which I have already intimated on via mail on 13-3-2013 regarding below mentioned. And I have received an acknowledgement letter from the Embassy on 23-5-2013. This is to inform you that till now the persons who are in the jail, they were unable to contact their family members for the past four months and I am not getting any progress related to the case. As they are the only earning member of the family, their family members are very much worried about them. Hence, I request your goodself to take immediate action for the immediate repatriation of Indian fishermen who are in Iran Jail" என்று எழுதியிருப்பதையும், தி.மு.கழகம் இதுபோன்ற பிரச்சினைகளில் எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதற்கும், அ.தி.மு.க. அரசின் செயல்பாடுகள் எந்த அளவிற்குத் தாமதமாக நடைபெறுகின்றன என்பதற்கும் எடுத்துக்காட்டாக இவை விளங்குகின்றன.

அமைச்சரிடம் மீனவர்கள் கொடுத்த மனுவிலேகூட, "மீனவர்கள் வருமானம் இல்லாமல் சிறையில் உள்ளதால், அவர்களை மீட்பதற்கான செலவு, தாயகம் திரும்புவதற்கான செலவு ஆகியவற்றைத் தமிழக அரசு ஏற்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழக அரசு இந்தச் செலவினை ஏற்கத் தானே முன் வந்து சிறையிலே உள்ள மீனவர்கள் விரைவில் தங்கள் ஊருக்குத் திரும்பிட உதவி செய்தால், "மீனவர்கள் வாழ்வில் விளக்கேற்றிய அம்மா அவர்களுக்கு நன்றி, நன்றி, நன்றி" என்று அந்தத் துறையின் அமைச்சரும், மற்றவர்களும் பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்க வாய்ப்பு ஏற்படும். அ.தி.மு.க. வினர் செய்யும் விளம்பரத்தைப் பற்றிக் கூறும் போது ஒன்றைக் கூற வேண்டும். முதலமைச்சர் சென்னையிலே இருக்கும்போது, அவருடைய வீட்டின் அருகே நடந்து செல்வதற்குக்கூட இடம் இல்லாமல் வரிசையாக "விளம்பரத் தட்டிகள்" முதலமைச்சரைப் புகழ்ந்து வைக்கப்பட்டிருக்கும். ஆனால் கடந்த ஒரு மாத காலமாக முதலமைச்சர் சென்னையிலே இல்லாத காரணத்தால், அம்மையார் ஒவ்வொரு நாளும் ஓர்

அறிவிப்பினைச் செய்துகொண்டிருந்த போதும், ஒரு விளம்பரத் தட்டிகூட அந்தச் சாலையில் வைக்கப்படவில்லை என்பதைக் காணும்போது, அவர்கள் எல்லாம் எந்த அளவிற்கு உள்ளன்போடு அவைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

இந்த நேரத்தில் இந்த ஆண்டு துவக்கத்தில் அதாவது ஜனவரி மாதம், இதுபோன்ற ஒரு பிரச்சினையில் பிரதமருக்கு நான் எழுதிய கடிதம் என் நினைவுக்கு வருகிறது. 9-1-2013 அன்று நான் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், "கடந்த 50 நாட்களுக்கும் மேலாக ஈரான் நாட்டிலுள்ள எக்கிஸ் தீவு சிறையில் வாடிவரும் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மற்றும் கேரளா மீனவர்கள் 29 பேரின் துயரத்தைத் தங்களது கவனத்துக்குக் கொண்டுவருவதற்காக இக்கடிதத்தை அனுப்புகிறேன். அவர்கள் ஏராளமான சிரமங்களுக்கும், அவலங்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. ஹெலன் டேவிட்சன் எழுதியுள்ள கடிதத்தில் அந்த மீனவர்களின் கொடுமையான அனுபவங்களை விளக்கியுள்ளார். அவர்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவவசதிகள் போன்றவை மறுக்கப் பட்டுள்ளன. ஈரான் சிறை நிர்வாகத்தினர் மனிதாபிமானமற்ற முறையில் நடத்துகின்றனர். இந்த மீனவர்கள் வெளிநாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால் அவர்களைச் சார்ந்துள்ள குடும்பங்கள் தங்களது அன்றாட வாழ்க்கைக்குச் சொல்லொணாத் துயரை அனுபவித்து வருகின்ற னர். இப்பிரச்சினை குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளபோதும், சிறைவைக்கப் பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க அதன் முயற்சிகள் பலன் அளிப்பதாகத் தெரியவில்லை. எனவே அந்த 29 மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதையும், கூடிய விரைவில் இந்தியாவுக்குத் திரும்ப அழைத்து வருவதையும் உறுதிசெய்ய இடைவிடாத முயற்சிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உத்தரவிடும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று நான் பிரதமருக்கு எழுதியிருந்தேன்.

நான் அனுப்பிய இந்தக் கடிதத்தின் அடிப்படையில் பிரதமர் அலுவலகம் அப்போது எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணத்தாலும், கன்னியாகுமரி தொகுதி நாடாளுமன்ற

உறுப்பினர் திருமதி. ஹெலன் டேவிட்சன் பிரதமர் அலுவலகத்தில் நான் எழுதிய கடிதத்தின் அடிப்படையில் நேரில் வலியுறுத்தியதாலும், ஈரான் சிறையிலே இருந்த 29 மீனவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர். அந்த மீனவர்கள் விமானத்தின் மூலமாகத் திருவனந்தபுரம் வந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினரும், அவர்களின் விடுதலைக்காகப் பெரிதும் பாடுபட்டவருமான திருமதி. ஹெலன் டேவிட்சன் அவர்கள் நேரில் சென்று அவர்களையெல்லாம் வரவேற்றதோடு, அந்த மீனவர்கள் சார்பாக ஹெலன் டேவிட்சன் அண்ணா அறிவாலயத்தில் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்துக்கொண்ட புகைப்படமும் அப்போதே "முரசொலி"யில் வெளிவந்துள்ளது. இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, இப்போது இந்த 16 மீனவர்களையும் விரைவில் விடுவிக்க மத்திய அரசும், மாநில அரசும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறேன்.

அடுத்து 29-7-2013 அன்று, பிரதமருக்கு முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், "மருத்துவப் படிப்புக்குக் கடந்த 18ந்தேதி நுழைவுத் தேர்வினை எங்களுடைய கோரிக்கையை ஏற்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ரத்து செய்து தீர்ப்புக் கூறினார்கள். ஆனால் மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வற்புறுத்தி மத்திய அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகுவோம் என்று கூறியிருக்கிறார். இது தவறான முடிவாகும். பொது நுழைவுத் தேர்வு தொடர்பாக, சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மறு ஆய்வு செய்யும் முடிவைக் கைவிடவேண்டும்" என்று பிரதமரைத் தமிழக முதலமைச்சர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் கடிதமும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புவந்தது இந்த மாதம் 18ஆம் தேதி. அதன்பிறகு இரண்டு நாட்கள் கழித்து 21ஆம் தேதியன்று மத்திய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் திரு.குலாம் நபி ஆசாத் செய்தியாளர்களிடம் கூறும்போது, உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்துச் சீராய்வு மனு தாக்கல் செய்வதுதான் சரியாக இருக்கும் என்று கூறி, அந்தச் செய்தி ஏடுகளிலே வெளிவந்தது. அதைப் படித்தவுடன், 22ஆம் தேதியன்று நான் எழுதிய "உடன்பிறப்பு" மடலில், நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து கடந்த பல ஆண்டுகாலமாக

எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளையும் விவரமாக எழுதியதோடு, கழகம் ஆட்சியில் இருந்தபோது 27-8-2010 அன்று குலாம் நபி ஆசாத் அவர்களே நுழைவுத் தேர்வு குறித்து நான் எழுதிய கடிதத்திற்கு ஆதரவாக எழுதிய பதில் கடிதத்தையும் அப்படியே வெளியிட்டிருந்தேன். மேலும் அந்தக் கடிதத்தின் இறுதியில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்க ஒன்று என்றும், அந்தத் தீர்ப்பினை மறு ஆய்வு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக மத்திய அமைச்சர் அறிவித்திருப்பது ஏற்றுக்கொள்ள இயலாதது என்றும், தி.மு. கழகத்தைப் பொறுத்த வரையில் நுழைவுத் தேர்வு எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்க்கும் என்றும் விரிவாக எழுதியிருந்தேன். 22ஆம் தேதியன்று நான் எழுதியது 23ஆம் தேதிய நாளிதழ்களில் வெளிவந்தது.

நான் 22ஆம் தேதி எழுதிய அந்தக் கருத்தினைத்தான், அதாவது உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யக்கூடாது என்ற கருத்தினைத்தான் நம்முடைய அ.தி.மு.க. அரசு 29ஆம் தேதியன்று பிரதமருக்குக் கடிதம் மூலமாகத் தெரிவித்திருக்கிறது. இதைத்தான் தமிழக அரசு எந்த அளவிற்கு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் விரைந்து செயல்படுகிறது என்பதற்கான உதாரணமாகக் காட்டிட விரும்புகிறேன். இடையிலே ஒரு சிறுசந்தேகம். நுழைவுத் தேர்வே கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்ற தமிழக அரசு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தமிழக அரசே கடந்த ஆண்டு எடுத்துக்கொண்டு, ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தனி அதிகாரியாக நியமித்து நிர்வாகத்தை அரசே எடுத்துக்கொண்ட போதிலும், இந்த ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வினை நடத்த முற்பட்டது ஏன்? எப்படியோ உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலும், ஈரானில் அவதிப்படும் மீனவர்களை விடுவிப்பதிலும், தாமதமாக எழுதியிருந்தாலும், சரியான கருத்தினைத் தெரிவித்திருப்பதற்காக; தமிழக அரசின் இந்த இரண்டு முடிவுகளையும் நான் வரவேற்கிறேன். தாமதமே; உன் பெயர்தான் தமிழக அரசா?

அன்புள்ள,

மு.க.

31-7-2013

3787. ஆகஸ்ட் 8: ஆர்ப்பாட்டத்தில் அலைகடலெனத் திரள்வீர்!

உடன்பிறப்பே,

இலங்கையில் வடக்கு மாகாண கவுன்சிலுக்கு வரும் செப்டம்பர் மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது. இலங்கை தலைமைத் தேர்தல் ஆணையர் மஹிந்த தேஷபிரியா, தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் 12-7-2013 அன்று ஆலோசனை நடத்தியிருக்கிறார். அந்தக் கூட்டத்திற்குப் பிறகு, தமிழ் தேசியக் கூட்டணிக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், "வடக்கு மாகாணத்தில் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளதால், மக்கள் சுதந்திரமாக நடமாட முடிய வில்லை. அங்கு ராணுவத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கோரி வருகிறோம். வரும் செப்டம்பரில் தேர்தல் நடைபெறவுள்ளதால், அதற்கு முன்னதாக ராணுவ வீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையரிடம் வலியுறுத்தியுள்ளோம். ஆனால் எங்களது கோரிக்கையை ஆணையம் நிராகரித்துள்ளது. எனினும், நிர்வாக நடவடிக்கைகளில் ராணுவம் தலையிடுவதைக் குறைத்துக் கொண்டு, அத்தகைய பணிகளில் போலீசாரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையர் உறுதியளித்துள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை நியாயமாக நடத்துவதை உறுதிப்படுத்தும் வகையில், காமன்வெல்த் மற்றும் ஆசிய நாடுகளின் பார்வையாளர்களை வரவழைக்க தேர்தல் ஆணையர் ஒப்புக் கொண்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரோஹன் ஹெட்டியார்ச்சி தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில், தேர்தலை நியாயமாக நடத்துமாறு ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் பெரிஸிடம் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

வடக்கு மாகாணத்தில் ராணுவம் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளதை, குறைக்க வேண்டுமென்று சர்வதேச நாடுகள் கூறி வருகின்றன. ஆனாலும், "பாதுகாப்புக்காக" என்று சாக்குச்சொல்லி, அந்த ராணுவத்தை விலக்கிக் கொள்ள இலங்கை அரசு மறுத்து வருகிறது. இந்தச் சூழலில் சுதந்திரமாக அங்கே தேர்தல் நடைபெற வேண்டுமென்றால், அங்கே குவிக்கப்பட்டுள்ள ராணுவத்தினரை அந்தப் பகுதியிலிருந்து விலக்கிக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் காவல் துறை மற்றும் நிலப் பகுதிகளை அவர்களிடம் ஒப்படைக்காமல் அதிகாரப் பரவல் சாத்தியமில்லை என்று இலங்கையின் வடக்கு மாகாணக் கவுன்சில் தேர்தலில் தமிழர் தேசிய கூட்டணி (டி.என்.ஏ) சார்பாக முதல்வர் வேட்பாளராக போட்டியிடும் சி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார். இலங்கை உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான இவர், மாகாணக் கவுன்சிலுக்கான அதிகாரத்தில் காவல்துறை மற்றும் நில உரிமை ஆகியவற்றை எடுத்துக் கொள்ளும் முடிவானது தற்கொலைக்குச் சமமாக அமையும் என்றும்; மாகாணக் கவுன்சிலில் சட்டம், ஒழுங்கை நிர்வகிக்கும் பொறுப்பு அந்தந்த கவுன்சில் வசமே அளிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள காவல் துறை மற்றும் ராணுவத்தினர் அனைவருமே சிங்களவர்களாவர். மொத்தம் 15 படைப் பிரிவு வீரர்கள் அங்கே முகாமிட்டிருக்கிறார்கள். அதாவது இரண்டு இலட்சம் வீரர்களைக் கொண்ட இலங்கை ராணுவத்தில், வடக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். மிக அதிக அளவிலான இந்த ராணுவக் குவிப்பு மக்களிடம் பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாரம்பரியமாக தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளையும், தமிழர்கள் வாழும் வீடுகளையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைப் பற்றியும், வடக்கு மாகாணத்தில் பெருமளவுக்கு ராணுவ நடமாட்டம் இருப்பதைப் பற்றியும், "டெசோ" மாநாட்டில் 12-8-2012 அன்றே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முக்கியமானவையாகும். அந்தத் தீர்மானங்களில்,

"ஈழப் பகுதிகளில் தமிழ் மக்களின் நிலங்களும் வீடுகளும் வன்பறிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சம்பூர்,

மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் தமிழர்களுக்கு உரிமையான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, வழிவழியாக வாழ்ந்து வந்த பகுதிகளில் தமிழ் ஈழ மக்கள் நிலங்களைப் பறிகொடுத்த நிலையில் சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் கொடுமைக்கு முடிவு கட்டும் முயற்சிகளை ஐ.நா. மன்றம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது" என்றும்,

"இன்றைய இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைக்குப் பதிலாக இராணுவத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. இராணுவம், அதன் நடவடிக்கைகளுக்காக, தமிழர் பகுதிகளில் தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான வீடுகளைக் கையகப்படுத்திக் கொண்டுள்ளது. காலியாக உள்ள வீடுகளைத் தன் கட்டுப்பாட்டில் மேற்கொள்ளும் இராணுவம், அவற்றைக் காலி செய்ய மறுக்கிறது. இராணுவத்தின் அனுமதியின்றி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழர்களின் வீடுகளில் எந்த சமூக நிகழ்ச்சிகளும் நடத்த முடியாது. இராணுவத்தினரே அங்கு மாவட்ட ஆட்சியராகவும் அரசு நிர்வாகிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். இன்றையத் தமிழ் ஈழம் ஓர் இராணுவ முகாம் போலக் காட்சியளிக்கிறது" என்றும் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொள்ளலாம்.

இலங்கையின் வடக்கு மாகாணத் தேர்தலில், விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர் எழிலன் மனைவி உள்ளிட்டோர் போட்டியிடப்போவதாகவும் செய்தி வந்துள்ளது. திரிகோணமலை மாவட்டத்தின், விடுதலைப் புலிகள் தலைவராக இருந்தவர் தான் எழிலன். அவரது மனைவி ஆனந்தி, இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திருக்கிறாராம். ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணிக் கட்சி சார்பில் தற்போது அமைச்சராக உள்ள டக்ளஸ் தேவானந்தாவும் முதல்வர் வேட்பாளராகப் போட்டியிட விரும்புகிறாராம். மேலும் முன்னாள் எம்.பி.க்கள் தர்மலிங்கம், சிவலிங்கம் உள்ளிட் டோரும் யாழ்ப்பாணத்தில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திருக்கிறார்களாம். தமிழ்க் கட்சிகளுக்குள் போட்டி அதிகரித்துள்ளதால், தகுதியான வேட்பாளரைத் தேர்வு செய்வதில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மும்முரமாக ஈடுபட்டுள்ளது என்றும் செய்திகள் வந்துள்ளன.

மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்திட வேண்டுமென்ற, இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தம், ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதாகும். இலங்கை ராஜபக்ஷே அரசின் ஆதரவோடு, சிங்களர் இயக்கம் 13-வது திருத்தத்தை எதிர்த்து வருகிறது; அந்தத் திருத்தத்தை ரத்து செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியும் வருகிறது. ராஜீவ்ஜெயவர்த்தனே ஒப்பந்தம், இந்தியாவின் அச்சுறுத்தலினாலும், அழுத்தத்தின் காரணமாகவும் நிறைவேற்றப்பட்டதென்று, சிங்களர் இயக்கங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன. ராஜீவ்ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் நமக்கு முழுமையான உடன்பாடு இல்லையெனினும்; இந்திய அரசும், இலங்கை அரசும் 1985 ஆகஸ்ட் முதல் 1986 டிசம்பர் வரை ஓராண்டு காலத்திற்கும் மேலாகவே விவாதித்து, ஆழ்ந்து பரிசீலித்து, பல கலந்தாலோசனைகளுக்குப் பின்னர்தான் அந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது என்பதே உண்மையாகும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, பிரிட்டிஷார் ஆளுகையின் கீழ் இலங்கை இருந்தபோதே, 1940ஆம் ஆண்டில், "டொனோமோர் கமிஷன்" (Donoughmore commission) பரிந்துரை ஏற்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணக் கவுன்சில்கள் அமைப்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. எனினும் அது செயலாக்கத்திற்கு வரவில்லை .

இலங்கை விடுதலை அடைந்ததற்குப் பிறகு, 1955ஆம் ஆண்டு , "சோக்சி கமிஷன்" (Choksy Commission), வட்டாரக் கவுன்சில்கள் குறித்துப் பரிந்துரை செய்திருந்தது. 1957ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பண்டாரநாயக - செல்வ நாயகம் ஒப்பந்தத்திலும், தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரக் கவுன்சில்கள் பற்றிய அம்சமும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

எனவே "தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணக் கவுன்சில்கள்" என்ற அம்சம், ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் 1987ஆம் ஆண்டு பிறந்த புதிய யோசனை அல்ல. 1940ஆம் ஆண்டிலிருந்தே விவாதிக்கப்பட்டு, இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு செயல் திட்டமாகும்.

இலங்கை வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களையும், வீடுகளையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டும், பெருமளவுக்கு ராணுவத்தை நிறுத்தி வைத்தும்,

13வது திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்தும், தேர்தல் நடத்துவதற்கு ராஜபக்ஷே அரசு முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த நிலைமையிலேதான், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஆணையர் திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் இலங்கைக்குச் செல்லவிருக்கிறார்.

இலங்கை பயணத்தின்போது தமிழர் பகுதிகளில் நடக்கும் சீரமைப்பு நடவடிக்கைகளை திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் ஆய்வு செய்யவிருக்கிறார். அவரது வருகையைக் குறித்து இலங்கை மனித உரிமை ஆணையத்தின் செயலாளர் பிரதிபா மகாநாமாகீவா, "இலங்கையில், போர் பாதித்த பகுதிகளில் நடக்கும் மறுவாழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் ஆணையர் வருகிறார்; நிலைமையைப் பார்வையிட்டு, ஜெனீவாவில், அடுத்த ஆண்டு நடக்கும் மனித உரிமைக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளார்" என்று கூறியிருக்கிறார்.

திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் இலங்கைக்குச் செல்லும்போது வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதற்கு முன்பே திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள முறைகேடுகள் பற்றியும், தமிழர்களுக்குச் சென்றடைய வேண்டிய நிவாரண உதவிகள் முறையாக சென்றடைய வில்லை என்ற குறை சர்வதேச அளவில் விவாதிக்கப்பட்டு வருவதைப் பற்றியும் நேரடியாகக் கண்டறிந்து அதைச் சரி செய்வதற்கான முயற்சிகளை ஐ.நா. அளவில் மேற்கொள்வார் என்று உலகத் தமிழர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நிவாரண உதவிகளைப் பற்றி ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமேயானால், இந்தியாவின் நிதியில் 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு, போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் குறைந்தது நான்கு பேருக்கு அதிக உறுப்பினர்கள் இருக்கும் குடும்பத்தினர்க்கு மட்டுமே வீடு ஒதுக்கப்படும் என்று இலங்கையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு என்பதற்குப் பதிலாக, பெரும்பாலும் சிங்களர்களுக்கு; இந்தியாவின் நிதியிலிருந்து கட்டப்பட்ட இந்த வீடுகளை ஒதுக்கீடு செய்யும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் உள்ள ஊர்ப் பெயர்களை தமிழிலிருந்து சிங்களத்திற்கு மாற்றுவதைப் பற்றி நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். வடக்கு மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்திற்கும், கிழக்கு மாகாணத்தில் உள்ள திரிகோணமலை மாவட்டத்திற்கும் இடையே உள்ள வரலாற்று ரீதியான இணைப்பைத் துண்டித்திடும் வகையிலும், சிங்களப் பகுதியான அனுராதபுரா மாவட்டத்தோடு இணைந்திருக்கும் வகையிலும், "வெளிஓயா" என்ற சிங்களப் பெயரிலேயே ஒரு புதிய மாவட்டத்தை ராஜபக்ஷே அரசு உருவாக்கி அங்கே சிங்களவர்களை மட்டுமே குடியேற்றி வருகின்ற நிகழ்வுகளும் தற்போது நடைபெற்று வருவதை "டெசோ" அமைப்பின் சார்பில் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின்படி, பொதுத் தேர்தல் நடைபெறும் காலத்தில் இது போன்ற மாவட்டங்களைப் புதிதாக உருவாக்குவதோ, எல்லைகளை மாற்றுவதோ, புதிய குடியேற்றத்தை ஊக்குவிப்பதோ கூடாது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருந்த போதிலும், அதை மீறுகின்ற வகையில் சிங்கள அரசு செயல்பட்டு வருவதையும் "டெசோ" அமைப்பின் சார்பில் ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, ஒட்டுமொத்தமாக இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தியும், இலங்கையில் நடைபெறவுள்ள "காமன்வெல்த்" மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வற்புறுத்தியும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியும், இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியும், "டெசோ" கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும், இந்திய மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும், சிங்கள ஆதிக்க வெறிக்கு எதிராகத் தமிழர் எழுச்சியை ஒன்று திரட்டவும்தான் வருகின்ற ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று தமிழகம் முழுதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களில் "தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்" நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அணிவகுக்க தாய்த் தமிழகத்திலே உள்ள தமிழர்கள் எல்லாம் தயாராகிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்

களோடு இணைந்து, தலைநகர் சென்னையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள நானும் வருகிறேன் என்பதையும் தெரிவித்து, நீயும் தவறாமல் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இலங்கைத் தமிழர்களுக்காக எப்போதும் இன எழுச்சிக் குரல் கொடுக்கத் தயங்காத கழகக் கண்மணிகளே; ஆகஸ்ட் 8 ஆர்ப்பாட்டத்திற்கு அலைகடலெனத் திரண்டு வாரீர் வாரீர் என்று அழைக்கின்றேன்!

அன்புள்ள,

மு.க.

01-08-2013

3788. அமர்த்தியா சென்னும் - அவர் விடுக்கும் அறைகூவலும்!

உடன்பிறப்பே,

‘‘நோபல்” பரிசு பெற்ற அமர்த்தியா சென் (Amartya Sen) மற்றும் ஜீன் டிரெஸ் (Jean D Reze) ஆகிய இருவரும் இணைந்து எழுதி, Goverflouisleiro “An Uncertain Glory-India and its contradictions” என்ற நூலினை அண்மையில் நக்கீரன் காமராஜ் தனது பிறந்த நாளினையொட்டி என்னிடம் அளித்தார். அமர்த்தியா சென் அவர்கள் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சிறந்த புகழ் வாய்ந்த பொருளாதாரப் பேராசிரியர். 1998ஆம் ஆண்டு பொருளாதாரத்திற்கான “நோபல்” பரிசினைப் பெற்றவர். உலகம் போற்றிடும் மிகச் சிறந்த பொருளாதார நூல்களை எழுதியவர். இவருடன் இணைந்து ஜீன் டி ரெஸ் என்பவர் கடந்த காலத்திலும் ஒரு சில நூல்களை எழுதியிருக்கிறார். ஜீன் டி ரெஸ் 1979ஆம் ஆண்டு முதல் இந்திய நாட்டில் வாழ்ந்து வருபவர். 2002ஆம் ஆண்டு இந்தியக் குடிமகனாக அங்கீகாரம் பெற்றவர். பல பெரிய பல்கலைக் கழகங்களில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றிய பழுத்த அனுபவமிக்கவர்.

இவர்கள் எழுதிய “நிலையில்லா புகழ்இந்தியாவும் மற்றும் அதன் முரண்பாடுகளும்” என்ற தலைப்பு கொண்ட அந்நூலில், பக்கம் 72இல், “A number of Indian States - Kerala and Tamil Nadu, for example - would be at the top of the South Asian Comparisons if they were treated as separate countries, and others - Uttar Pradesh and Madhya Pradesh, for example - would do enormously worse. But what is most powerfully apparent from these inter-State comparisons within India is just how much this diverse country can learn from the experiences of the more successful States within it.” (தெற்காசிய ஒப்பீடுகளில், இந்திய நாட்டில் உள்ள மாநிலங்களை ஒப்பீட்டு நோக்கத்திற்காகத் தனித்தனி நாடுகளாகக் கருதிப் பார்ப்போமேயானால், கேரளாவும், தமிழ்நாடும் மற்றெல்லா மாநிலங்களை விடவும் மேலாக முதல்

நிலையில் இருக்கும்; உத்தரப் பிரதேசமும், மத்தியப் பிரதேசமும் மிகவும் கடைசி நிலையில் இருக்கும்; இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு இடையிலான இந்த ஒப்பீடுகளில் இருந்து தெளிவாகத் தெரியவருவது என்னவென்றால், பன்முகம் கொண்ட ஒரு நாடு, மிக வெற்றிகரமான செயலாக்கம் மிக்க அந்த நாட்டு மாநிலங்களிலிருந்து உருவாகும் அனுபவங்களிலிருந்தே படிப்பினைகளைப் பெற முடியும்) என்று எழுதியுள்ளார்கள்.

இந்தியாவிற்குள்ளேயே ஒப்பீடு செய்து பார்க்க வேண்டிய அம்சங்களைப் பற்றியும், அதிலிருந்து பெற வேண்டிய படிப்பினைகளைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ள இந்த நூலின் ஆசிரியர்கள் சர்வதேச அனுபவத்திலிருந்து இந்தியா கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன என்றாலும்கூட; இந்தியாவிற்குள்ளேயே பலவகைப்பட்ட அனுபவங்களின் மூலம் கற்றுக் கொள்ள வேண்டியவையும் அதிகமாக இருக்கின்றன என்று சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். இந்திய மாநிலங்களின் வளர்ச்சி ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபட்டதாகும்.

இந்தக் கருத்தினைப் பிரதிபலிக்கும் வகையில்தான்; “நமது நாட்டில் பல்வேறு இனங்கள், மதங்கள், கலாச்சாரங்கள், மொழிகள் ஆகியவை ஒருங்கிணைந்த நிலையில் உள்ளன. இந்தப் பன்முகம் நமது வலிமையே தவிர, வலுவின்மை அல்ல. பல்வேறு மக்கள் பிரிவினர் வளர்ந்து செழிக்க விரும்பும் ஆவலை நாம் அதிகரிக்க வேண்டும்” என்று நான் முதலமைச்சராக இருந்த போது, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் 2008 ஆம் ஆண்டு பேசியிருக்கிறேன். தொடர்ந்து தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும், தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திலும், இந்தியாவில் உள்ள மாநிலங்களின் வளர்ச்சி என்பது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டதாகும்; வளர்ச்சியடைந்த மாநிலங்களையும், வளர்ந்து வரும் மாநிலங்களையும், வளர்ச்சி குன்றியிருக்கும் மாநிலங்களையும் ஒரே நிலையில், ஒரே அளவில் வைத்து மத்திய அரசு மதிப்பிடக்கூடாது; மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும்போது இணக்கமானதொரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமேயல்லாமல், வளர்ச்சியடைந்த மாநிலம் என்பதற்காக ஒரு மாநிலம் தண்டிக்கப்படுதல் கூடாது என்றெல்லாம் நான் விளக்கியிருக்கிறேன். எடுத்துக்காட்டாக 9-12-2006 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் “பாரத் நிர்மாண்”

திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டைப்போன்று செம்மையாகச் செயல்படும் மாநிலம், அது அடைந்த வெற்றிக்காக மறைமுகமாகத் தண்டிக்கப்படுகிறது என்பதையே இது உணர்த்துகிறது. பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்பு விலக்கு அளித்திடுமாறு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று தமிழகத்தின் நியாயத்தை விளக்கிப் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன்.

இந்திய மாநிலங்களுக்கு இடையிலான வளர்ச்சி வேறுபாடுகளுடையது என்பதை விளக்குவதற்காக, ஏராளமான புள்ளிவிவரங்களை அமர்த்தியா சென் தனது நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார். மகளிர் கல்வியைப் பொறுத்தவரை, தமிழகத்தில் 69.4 சதவிகிதம் பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ராஜஸ்தானில் 36.2 சதவிகிதம் பேரும், ஆந்திராவில் 49.6 சதவிகிதம் பேரும், ஒடிசாவில் 52.8 சதவிகிதம் பேரும், கர்நாடகாவில் 59.7 சதவிகிதம் பேரும், மேற்கு வங்கத்தில் 58.8 சதவிகிதம் பேரும்தான் கல்வியறிவு பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள் என்றும் அமர்த்தியா சென்னின் அந்த நூல் சுட்டிக்காட்டுகிறது.

அதைப்போலவே, 6 வயதிலிருந்து 14 வயதிற்குள்ளாக பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழகத்தில் 93.9 சதவிகித மாகும். கேரளாவில் 97.7 சதவிகிதமாகும். இமாசலப் பிரதேசத்தில் 96.2 சதவிகிதமாகும். இவை தவிர இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் அனைத்திலும் இந்த மூன்று மாநிலங்களை விட குறைந்த சதவிகிதத்தினரே பள்ளி செல்கிறார்கள் என்றும் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

8 வயதிலிருந்து 11 வயது வரையில் உள்ள குழந்தைகளில் நன்கு படிக்கத் தெரிந்தவர்கள் என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால், தமிழகத்தில் 79 சதவிகிதம்; இதிலும் கேரளா மாநிலத்தையும், இமாசலப் பிரதேச மாநிலத்தையும் தவிர மற்ற மாநிலங்களில் இதை விடக் குறைவான சதவிகிதத்தினரே படிக்கத் தெரிந்தவர்களாகும்.

5 வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு விகிதத்தைப் பொறுத்து, தமிழ்நாட்டில் 35.5 சதவிகிதம்தான்! கேரளாவில் மட்டும் 16.3 சதவிகிதம்! மற்ற மாநிலங்கள் அனைத்

திலும் 5 வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாகவே உள்ளது. உதாரணம் கூறவேண்டுமேயானால், மத்தியப் பிரதேசம் 94.2 சதவிகிதம்; ஒடிசாவில் 90.6 சத விகிதம்; உத்தரப்பிரதேசத்தில் 96.4 சதவிகிதம்; மேற்கு வங்கத்தில் 59.6 சதவிகிதம்; கர்நாடகாவில் 54.7 சதவிகிதம்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தமிழகத்தில் 29.4 சதவிகிதம் பேராகும். கேரளாவில் 19.6 சதவிகிதம். மத்தியப் பிரதேசம் 48.6 சதவிகிதம்; உத்தரப்பிரதேசம் 40.9 சதவிகிதம்; மேற்கு வங்கம் 34.2 சதவிகிதம்.

மனித வளர்ச்சிக் குறியீடு தமிழகத்தில் 0.749. தமிழகத்தைக் காட்டிலும் கேரள மாநிலத்திலும், இமாசலப் பிரதேசத்திலும்தான் மனித வளர்ச்சிக் குறியீடு அதிகம். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் அனைத்தும் இந்த மூன்று மாநிலங்களை விடக் குறைவு.

இந்தியாவின் மக்கள் தொகையில் சரிபாதியாக அதாவது 54.5 கோடி மக்கள் தொகை கொண்ட 7 பெரிய மாநிலங்களான பீகார், சத்தீஸ்கர், ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் ஆகிய வற்றில் ஏழ்மை நிலை மிக அதிகமாக இருந்து வருகிறது. இவற்றில் சில மாநிலங்களில், ஆப்பிரிக்கக் கண்டத்தில் நிலவி வரும் வறுமை நிலைமையை விட, மிகக் கொடுமையான நிலையே நீடித்து வருகிறது.

நான் இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் அமர்த்தியா சென் அவர்களின் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளன என்று எடுத்துக்காட்டியதும், நமது தமிழக முதல் அமைச்சர் அவர்கள் “பார்த்தீர்களா, பார்த்தீர்களா, என்னுடைய இரண்டு ஆண்டு கால ஆட்சியிலே தமிழ்நாடு எந்த அளவிற்கு முன்னேறிவிட்டது என்பதை கருணாநிதியே எடுத்துக்காட்டிவிட்டார்” என்று கூறிக் கொள்ளலாம். ஆனால் அமர்த்தியா சென் அவர்கள் இந்தப் புள்ளி விவரங்களை அ.தி.மு.க. ஆட்சி 2011 ஆம் ஆண்டு வருவதற்கு முந்தைய ஆண்டுகளிலேயிருந்து தொகுத்துத்தான் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

இரண்டு நூற்றாண்டு காலனி ஆதிக்கத்திற்குப் பிறகு இந்திய நாடு 1947இல் விடுதலை பெற்றது. விடுதலை பெற்ற உடனேயே ஜனநாயக அரசியல் வழிமுறையை இந்தியா பின்பற்றத் தொடங்கியது. அதில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும்,

பேச்சு சுதந்திரத்திற்கும், விரிவான அரசியல் உரிமைகளுக்கும் இடம் உண்டு. பிரிட்டிஷ் காலத்தில் இருந்த பஞ்சம் மறைந்து, விடுதலைக்குப் பின் படிப்படியாகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. கடந்த முப்பது ஆண்டுகளில் பொருளாதார முன்னேற்றம் விரைவுபடுத்தப்பட்டது. வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா இரண்டாவது பெரிய பொருளாதார வளர்ச்சி பெற்றுவரும் நாடாகும். ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளில் போதிய கவனமின்மை, பெண்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான பொறுப்பின்மை, இந்தியாவின் தற்போதைய மிகப் பெரிய பிரச்சினைகளாக இந்த நூலில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

மக்களுடைய வாழும் சூழ்நிலைகளில் மேம்பாடு காண்பதற்குத் தேவையான இயற்கை வளங்களை மிக அதிக அளவில் பயன்படுத்துதல், மக்களின் ஈடுபாட்டை அதிகரித்தல் போன்றவற்றில் போதுமான முன்னேற்றம் இல்லை என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடி நீர், தேவையான மின்சாரம், கழிவுநீர் வசதிகள், போக்குவரத்து மற்றும் சுகாதாரம் ஆகிய பிரச்சினைகள் நீடித்துக் கொண்டே இருக்கின்றன என்று அமர்த்தியா சென் அவர்கள் குறைபட்டிருக்கிறார்.

ஜப்பான், தென்கொரியா, சைனா போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் மனித வளங்களின் மேம்பாடும், வளர்ச்சியும், பயன்பாடும் இந்தியாவில் அலட்சியப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற அடிப்படை சவால்களிலிருந்து இந்திய நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால், திட்டமிடுதலில் மறு சிந்தனை தேவைப்படுகிறது. சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் ஏற்பட்டு வரும் பின்னடைவைப் பற்றிய விழிப்புணர்ச்சி மக்களிடையே உருவாக்கப்படுதல் வேண்டும். முக்கியமான பிரச்சினைகளில் பொது விவாதம் என்பது வசதி மிக்கவர்கள் மத்தியிலே மட்டும் நடைபெறும் ஒன்றாக மாறி வருகிறது;

பொது விவாதம், வசதியற்ற மக்களிடையேயும் உருவாக்கப்பட்டு ஊக்கப்படுத்தப்படுதல் வேண்டும். அரசியல் ஜனநாயகத்தை முழுமையாகப் பின்பற்றுவதன்மூலம் இந்தியாவின் அடிப்படை நிலைகளில் பெரும் மாற்றத்தை உருவாக்கிட முடியும்.

“பொருளாதார வளர்ச்சியிலும், வறுமைக் குறைப்பிலும் இந்தியா வெற்றிகரமான அத்தியாயத்தைத் தொடங்கியிருக்கிறது

எனினும், சர்வதேச ஏழ்மையின் இருப்பிடமாக இந்தியா இருந்து வருவதை மறைப்பதற்கில்லை. இந்தியாவில் உள்ள குழந்தைகளில் பாதிப் பேர் சத்தற்ற உணவையே அருந்தி வருகின்றனர். மிகப் பெரிய மக்கள் தொகையும், அளவுக்கு மீறிய வறுமையும், இந்தியாவின் எதிரே உள்ள சவால்களாகும்" என்றும்;

"இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிய நுட்பமான ஆய்வு இந்த நூலில் செய்யப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இந்தியப் பொருளாதாரத்தின் அளவற்ற வளத்தைப் பற்றியும், இந்த நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தற்போதைய இந்திய நாட்டுப் பொருளாதாரத்தைப் பற்றிய ஆழ்ந்த சரியான விமர்சனமாக இந்த நூலை எடுத்துக் கொள்ளலாம். இந்த நூலில் இந்தியப் பொருளாதாரம் மட்டுமல்லாமல், அரசியல், வரலாறு மற்றும் சட்டத்தைப் பற்றிய நுணுக்கங்களும் விரிவாக கையாளப்பட்டுள்ளன" என்றும்;

இந்த நூலைப் பற்றி சில விற்பன்னர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

"தற்போது குறைந்து கொண்டே வரும் வளர்ச்சிக் குறியீட்டைப் பற்றிய விவாதம் பெருகி வரும் காலகட்டத்தில் இந்த நூல் வெளி வந்திருப்பது பொருத்தமான ஒன்றாகும். குறைந்து வரும் வளர்ச்சிக் குறியீடு நமக்குள்ள கவலையை அதிகரிப்பதைவிட, வளர்ச்சிக் குறியீடு வளர்ந்து வரும்போது சமுதாயத்தில் வேறுபாடுகள் தொடர்ந்து நீடித்து வருவதுதான் மிகுந்த கவலையை ஏற்படுத்துகிறது. சமூக - பொருளாதாரக் களங்களில் தோன்றியுள்ள சவால்களை இந்திய ஜனநாயகம் சமாளிக்கத் தவறிவிட்டது. சமூக சமன்பாடின்மை அதிகரித்து வருகிறது. ஆப்பிரிக்க நாட்டில் காணப்படுவதை விட சற்றே அதிகமாகத்தான் கல்வி, சுகாதாரம், பெண்கள் எழுத்தறிவு, சத்துணவு போன்ற துறைகளில் இந்தியா வளர்ந்திருக்கிறது. வங்காள தேசம்கூட இந்தியாவைவிட சிறந்த சமூகக் குறியீடுகளைப் பெற்றிருக்கிறது. இந்தியா அமெரிக்கப் பாதையைப் பின்பற்றி வளர்ச்சி அடைந்து விடலாம் என்று எண்ணி விடக் கூடாது. பொதுத் துறை மற்றும் தனியார் துறை பொருளாதாரம் பற்றிய தவறான அணுகுமுறைகளே தொடக்கத்திலிருந்து பின்பற்றப் பட்டு வருகின்றன. மாற்றம் என்பது உடனடியாக ஏற்பட்டு விடாது; கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அது உருவாக முடியும்" என்பது போன்ற கருத்துக்களை இந்த நூலாசிரியர் அமர்த்தியா சென்

விவரித்திருப்பதையெல்லாம் தொகுத்து, "இந்து" நாளிதழில் திரு. ரகுவீர் சீனிவாசன் அவர்கள் கட்டுரையாகத் தீட்டியிருக்கிறார்.

இன்றைய (3-8-2013) "எகனாமிக் டைம்ஸ்" ஆங்கில நாளேட்டில் இந்த நூலைப் பற்றி சிறப்பானதொரு தலையங்கமே எழுதியிருக்கிறார்கள். அதில், "வளர்ச்சியை ஏற்படுத்தி அதனை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டுமே யானால், சிறந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதோடு, கல்வி மற்றும் முதலீடு ஆகியவற்றின் முக்கியத்துவம் உணரப்படுதல் வேண்டும் என்ற கருத்தை இந்த நூலில் வலியுறுத்தியிருக்கிறார். மக்களின் அடிப்படைத் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யாமல், எந்த ஒரு நாடும் ஏழ்மை நிலையிலிருந்து மீண்டு, செழிப்பான நிலைக்கு உயர்ந்துவிட முடியாது என்பதையும் விளக்கியிருக்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அளவில் இப்படிப்பட்ட கருத்துகளையெல்லாம் தொகுத்திருந்த போதிலும் நம்மைப் பொறுத்தவரையில் நான் முதலில் எழுதியவாறு; கேரளாவும், தமிழ்நாடும் தனி நாடாக இருந்திருந்தால், எவ்வளவோ முன்னேற்றம் அடைந்த நாடாகத் திகழ்ந்திருக்க முடியும் என்ற கருத்தும்; மாநிலங்கள் அனைத்தையும் ஒரே அளவில் சீர்தூக்கிடாமல், அந்தந்த மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், வளர்ச்சிக்கான கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு தனித்தனி அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் தான் நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றன.

குறிப்பாக சேது திட்டம் போன்றவற்றை தடுக்க நினைக்காமல்; ஒட்டுமொத்தமாக அவற்றால் ஏற்படக்கூடிய நன்மைகளை மட்டும் எண்ணிப் பார்த்து நிறைவேற்றிட அனைத்துத் தரப்பினரும் முன் வருவார்களேயானால் அமர்த்தியா சென் எழுதியிருப்பதைப் போல, நமக்கு எதிரே உள்ள சவால்களை சாமர்த்தியமாகப் புறந்தள்ளி முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து வேகமாக அடியெடுத்து வைத்திட முடியும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

அன்புள்ள,

மு.க.

04-08-2013

3789. கொடுத்ததையும் பறித்துக் கொண்ட கொடுமை!

உடன்பிறப்பே,

26-7-2013 அன்று காலை ஏடுகளில், "தமிழக அரசு ஊழியர்களுக்கு புதிய ஊதிய உயர்வு - அரசு ஊழியர் சங்கங்கள் வரவேற்பு" என்ற தலைப்போடு கொட்டை எழுத்துக்களில் ஒரு செய்தி வெளி வந்திருந்தது. அ.தி.மு.க. அரசு புதிதாக எந்த ஊதியக் குழுவையும் நியமிக்க வில்லையே; அகவிலைப்படி உயர்வும் இப்போது நிலுவையில் இல்லையே; என்ன ஊதிய உயர்வு? அதுவும் இன்றுதானே அறிவிக்கப்படுகிறது, அதற்குள் அரசு ஊழியர் சங்கங்கள் வரவேற்றிருக்கின்றனவே; என்றெல்லாம் கருதிக் கொண்டே அந்தச் செய்தியை முழுவதுமாகப் படித்தேன்.

மத்திய அரசின், ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தபடி, தி.மு. கழக ஆட்சியிலேதான் 2009ஆம் ஆண்டு , தமிழக அரசு அலுவலர்க ளுக்குப் புதிய ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. ஏன் அதற்கு முன்பே , 1989-ஆம் ஆண்டு தி.மு. கழக அரசு மூன்றாவது முறையாகப் பதவியேற்ற போது; மைய அரசு அலுவலர்களுக்கான ஊதிய விகிதங்களை விடக் குறைவான ஊதிய விகிதங்களே தமிழக அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, தமிழ்நாட்டில் முதன்முறையாக மைய அரசுக்கு இணையான ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்களுக்கு தி.மு. கழக அரசுதான் வழங்கியது. இதுபோன்றே 1996ஆம் ஆண்டில் தி.மு. கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், ஐந்தாவது மைய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி தி.மு. கழக அரசால் அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் பரிசீலனைக்குப்பின்னர் திருத்தப்பட்ட மைய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்குப் பிறகுதான் 2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில்தான் மத்திய அரசின் ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளையொட்டி, 1-1-2006 முதலே முன் தேதியிட்டு, திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள், ஓய்வூதியம் மற்றும்

குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இதனால் தமிழக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூபாய் 5,155.79 கோடி தொடர் செலவினம் ஏற்பட்டது. மேலும் அரசு அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய நிர்ணய நிலுவைத் தொகை வழங்கும் வகையில் தமிழக அரசுக்கு 11,093 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டது.

வழங்கப்பட்ட ஊதிய உயர்விலே ஒருசில முரண்பாடுகள் இருப்பதாக அரசு அலுவலர் சங்கங்களின் சார்பாக என்னிடம் கோரிக்கை வைத்த போது, அதனையும் ஏற்றுக்கொண்டு, அந்த முரண்பாடுகளை விசாரித்து அறிக்கை கொடுக்க திரு. ராஜிவ் ரஞ்சன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழுவும் கழக ஆட்சிக் காலத்திலேயே அமைத்து, அவரது பரிந்துரையின் பேரில் பல முரண்பாடுகள் கழக ஆட்சிக் காலத்திலேயே களையப்பட்டன. அதன் காரணமாக தமிழக அரசுக்கு 223 கோடி ரூபாய் தொடர் செலவினம் ஏற்பட்டது.

பின்னர், 2011இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, மேலும் சில முரண்பாடுகள் இருப்பதாகச் சில அலுவலர் சங்கங்கள் கூறியதன் அடிப்படையில், அ.தி.மு.க. ஆட்சியில் 2012ஆம் ஆண்டு திரு. கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் நிதித் துறை கூடுதல் செயலாளர் பத்மநாபன், இணைச் செயலாளர் உமாநாத் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். இந்தக் குழுவினர் அளித்த பரிந்துரைப்படிதான் ஒருசில அரசு அலுவலர்களுக்கு ஓரளவு ஊதிய விகிதம் உயர்த்தப்பட்டு, அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதைத்தான் அனைத்து நாளேடுகளும் வெளியிட்டிருந்தன.

இந்தச் செய்தியைப் படித்து யார்யாருக்கு என்னென்ன ஊதிய உயர்வு என்பதைத் தெரிந்து கொள்வதற்குக்கூட நேரம் இல்லாமல், இந்த அறிவிப்பு வெளிவந்த அந்தச் செய்தியோடு இணைத்து, ஆறாவது ஊதியக் குழு முரண்பாடுகளைக் களைந்து புதிய ஊதிய உயர்வை அறிவித்த முதல்வருக்கு தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம், தமிழக ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை பணியாளர் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுத் தணிக்கைத் துறை அலுவலர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படைப்

பணியாளர் மாநில மைய சங்கம் உட்பட பல்வேறு சங்கங்கள் நன்றி தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் வந்தன. அறிவிப்பு வெளிவருவதற்கு முன்பே, எப்படி இந்தச் சங்கங்களுக்கெல்லாம் விவரங்கள் தெரிந்து முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று வியப்பாகவும் இருந்தது.

அறிவிப்பினையும், அரசாணைகளையும் முழுமையாகப் படித்து விட்டு அடுத்தடுத்த நாள் ஏடுகளில் சிலர் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம் ஊதிய முரண்பாடுகளைக் களைய பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக அரசாணை வெளியிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம் முன் வைத்த பல்வேறு கோரிக்கைகள் முறையாகப் பரிசீலிக்கப்பட வில்லை. உதாரணமாக, பதவி உயர்வு பெறும்போது, பத்து சதவிகிதம் பணப் பயன் வழங்கப்பட வேண்டும்; உதவியாளர்களின் தர ஊதியம் உயர்த்தப்பட வேண்டும்; சிறப்பு ஊதிய விகிதம் பெறும் ஊராட்சி செயலர், கிராமப் பணியாளர், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர் போன்றோருக்கு, முறையான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக அரசாணை வெளியிடப்பட வில்லை. 2011 சட்டசபைத் தேர்தலின்போது ஜெயலலிதா அறிவித்தபடி புதிய பென்ஷன் திட்டம் கைவிடப்பட்டு, பழைய பென்ஷன் திட்டம் அமல்படுத்தப்படும் என்ற வாக்குறுதி ஆணையாக வெளியிடப்படவில்லை. எனவே திட்டமிட்டபடி ஆகஸ்ட் 2ந்தேதி சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில் 25 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று அந்தச் சங்கத்தின் மாநிலத் தலைவர் பாண்டியன் அறிக்கையே விடுத்தார். 26-7-2013 அன்று அரசு ஊழியர் சங்கங்கள் வரவேற்பு என்று பெரிய தலைப்பிட்டு வெளியிட்ட "தினமலர்" நாளேடே, 31-7-2013 அன்று அரைப்பக்க அளவிற்கு வெளியிட்ட செய்திக்கு "போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் தாசில்தார் சம்பளம் குறைப்பு - அரசு நடவடிக்கையால் கடும் அதிருப்தி" என்று தலைப்பிட்டுள்ளது. அந்தச் செய்தியில் முக்கியமாக,

"புதிய அரசாணை மூலம் பலருக்கு ஏற்கனவே பெற்ற சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது தற்போது தெரிய வந்துள்ளது. இது; சம்பந்தப்பட்ட ஊழியர்களிடம் கடும் அதிர்ச்சியை

ஏற்படுத்தியுள்ளது. வேளாண் துறையில் - வேளாண் அலுவலர், தோட்டக்கலைத் துறை அலுவலர்; வேளாண் பொறியியல் துறையில் - உதவிப் பொறியாளர்; கால்நடைத் துறையில் - உதவி இயக்குனர், ஆராய்ச்சி உதவி அலுவலர், மீன்வளத் துறையில் - ஆய்வாளர், ஆராய்ச்சி உதவியாளர்; நெடுஞ்சாலைத் துறையில் - உதவிப் பொறியாளர், எலெக்ட்ரானிக் பொறியாளர்; ஊரக வளர்ச்சித் துறையில் - உதவிப் பொறியாளர்; தொழில் துறையில் - உதவிப் பொறியாளர்; தொழிற்சாலை ஆய்வுத் துறையில், தொழிற்சாலை உதவி ஆய்வாளர்; மாநில சுகாதார போக்குவரத்துத் துறையில் - உதவிப் பொறியாளர், பணிமனை கண்காணிப்பாளர்; மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் - தொழில் நுட்ப உதவியாளர், ஜெனரல் போர்மென்; பட்டு வளர்ச்சித் துறையில் நிர்வாக அலுவலர்; பொதுப்பணித் துறையில் - இளநிலைப் பொறியாளர், மாவட்ட மறுவாழ்வுத் துறை அலுவலர்; பேரூராட்சி உதவிப் பொறியாளர்; இளநிலை எலெக்ட்ரிகல் ஆய்வாளர்; சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளர், வனக் காப்பாளர் ஆகியோ ருக்கு தற்போது சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது.

இவர்கள், ஆறாவது ஊதிய உயர்வுக்கு முன் அடிப்படைச் சம்பளமாக 6,500 ரூபாய் பெற்றனர். ஆறாவது ஊதிய உயர்வு அமல்படுத்தப்பட்டபோது (தி.மு.கழக ஆட்சியில்) அடிப்படைச் சம்பளம் 9,300 ரூபாயாக உயர்ந்தது. முதலில் நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு பரிந்துரைப்படி அடிப்படை சம்பளம் 15,600 ரூபாயாக (தி.மு.கழக ஆட்சியில்) உயர்த்தப்பட்டது. தற்போது இது தவறு எனக் கூறி, அடிப்படைச் சம்பளம் 9,300 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், இவர்களுக்கு மாதம் பத்தாயிரம் ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்படும். அதேபோல், தாசில்தார், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரின் அடிப்படைச் சம்பளம், ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைக்கு முன் 7,500 ரூபாயாக இருந்தது. ஊதிய உயர்வின் போது (கழக ஆட்சியில்) 9,300

ரூபாயாக உயர்ந்தது. ஒரு நபர் குழு பரிந்துரைத்த பின் 15,600 ரூபாயாக (கழக ஆட்சியில்) உயர்த்தப்பட்டது. தற்போது மீண்டும் 9,300 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப் பட்ட ஊழியர்களிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகத்திலேயே துணைச் செயலாளர்களாக உள்ளோருக்கும் இணைச் செயலாளர்களாக உள்ளோருக்கும் இடையே உள்ள மிகப் பெரிய வித்தியாசத்தைக் களைய வேண்டுமென்று துணைச் செயலாளர்கள் வைத்த கோரிக்கை ஏற்கப்படாததால் அவர்களும் அதிருப்தியிலே இருக்கிறார்களாம்.

இதுதான் அ.தி.மு.க. ஆட்சியில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வின் (?) விவரங்களாகும். இதைத்தான் பல்வேறு அலுவலர் சங்கங்கள் ஊதிய உயர்வு என்று அரசு அறிவித்ததும், முதல்வருக்கு நன்றி, நன்றி என்று அறிக்கை விட்டு விட்டார்கள்.

இதுபற்றிய செய்தியை வெளியிட்டுள்ள 31-7-2013 தேதிய "டெக்கான் கிரானிகல்" ஆங்கில நாளேடு கூட, "A volcano seems simmering in the Tamil Nadu bureaucracy, involving almost all the departments. Thousands of employees, including Police Inspectors, now face steep salary cuts and several of their unions are readying petitions to the Chief Minister for merciful review", according to PWD Engineers' Association President K. Mohanraj" என்று எழுதியுள்ளது. அதே நாளேட்டில், "Government staff are facing prospect of deep salary cuts following latest order - Asst. Engineers to be hit by Government Order" என்ற தலைப்பிலும் இதுபற்றி விவரமாக எழுதியுள்ளது.

தற்போது அ.தி.மு.க. அரசினால் எடுக்கப்பட்ட முடிவுகளினால் யார் யார் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரங்களை இங்கே தொகுத்து தந்திருக்கிறேன். "டெக்கான் கிரானிகல்" நாளேட்டில் "Unions representing the affected officials pointed out that the "Law of Natural Justice" prescribes emoluments and perks given to an employee should not be reduced" என்று தெரிவித்திருப்பதை மனதிலே கொண்டு அரசு அலுவலர் ஊதியப் பிரச்சினையில் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டுமென்று தி.மு. கழகத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

அ.தி.மு.க. அரசின் புதிய அறிவிப்பு குறித்து, தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் மாநில முன்னாள் தலைவர் பிச்சையப்பா, "ஒருவனுக்கு 2 வேளை சாப்பாடும், இன்னொருவனுக்கு 1 வேளை சாப்பாடும் அரசு போடுகிறது என வைத்துக் கொள்வோம். அவனுக்குப் போடுவது போல எனக்கும் 2 வேளை சாப்பாடு

கொடுங்கள் என 1 வேளை சாப்பாடு சாப்பிடுபவர் கோரிக்கை வைத்தால், அவனுக்கு 2 வேளை தருவதால்தானே நீயும் கேட்கிறாய், இதோ அவனுக்கு 1 வேளையாகக் குறைத்து விடுகிறேன் என்று முடிவெடுத்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது, இந்தச் சம்பள குறைப்பு விவகாரம்" என்று கூறியிருக்கிறார்.

அதுபோலவே அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தமிழ்ச்செல்வி, "எந்தக் குறைபாடுகளையும் சரி செய்ததாக எங்களுக்குத் தெரியவில்லை. அடிப்படை சம்பளத்தையும் குறைத்திருக்கிறார்கள். தர ஊதியத்தையும் குறைத்திருக்கிறார்கள் பதவி உயர்வு பெற தர ஊதியம் உயர வேண்டும். அது உயர்த்தப்படவே இல்லை. போக்குவரத்துப்படி, கல்விப்படி, வாடகைப்படி எதுவும் கவனிக்கப்பட்டதாகவே தெரியவில்லை. மொத்தத்தில் குறைபாடுகள் களையப்படவில்லை" என்று தெரிவித்திருக்கிறார்.

ஊதியக்குழு பற்றிய அரசு உத்தரவில் ஏமாற்றம் அடைந்த தமிழக ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் மூன்று கட்டப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவிப்பு செய்திருக்கிறார்கள்.

ஆனால், சில அரசு அலுவலர் சங்கங்களும், சில நாளேடுகளும் கண்ணை மூடிக் கொண்டு அ.தி.மு.க. அரசு அறிவிப்பு என்றால் அதிலே என்ன இருக்கிறது என்பதைப் பற்றி அமைதியாக ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்காமல், அதனை அவசரப்பட்டு ஆதரித்து அறிக்கை தருவதும், பின்னர் உண்மையை அறிந்து அதிர்ச்சியடைந்து ஆவேசம் கொள்வதும் நல்லதல்ல!

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால் – "அதிகாரிகளிடம் வேலை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், "ரிங் மாஸ்டர்" செய்வதைப் போல சாட்டையடி கொடுத்து வேலை வாங்கி வருகிறேன்" என்று முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையிலேயே முழங்கியதையும், "அரசின் மொத்த வருவாயில் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே சென்று விடுவதால் வளர்ச்சிப் பணிகளுக்கு என்ன இருக்கிறது?" என்று ஜெயலலிதா கேட்டதையும், இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களை அ.தி.மு.க. ஆட்சியிலே இரவோடு இரவாக "எஸ்மா" சட்டத்தின்கீழ் வீடு புகுந்து போலீசாரால் கைது

செய்யப்பட்டதையும், ஒரு இலட்சத்து எழுபதாயிரம் அரசு ஊழியர்களை ஒரே நாளில் வேலை நீக்கம் செய்ததையும்;

தி.மு. கழக ஆட்சியில் அரசு அலுவலர்களுக்கு வாரி வாரி வழங்கியதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தி.மு. கழக ஆட்சிதான் அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொற்காலமாக இருந்தது என்பதையும் அரசு அலுவலர்களே நன்றாக அறிவார்கள்!

அன்புள்ள,

மு.க.

05-08-2013

3790. ஆகஸ்ட் 8; ஆர்ப்பாட்டம்; அகிலமே வியக்கட்டும்!

உடன்பிறப்பே,

16-7-2013 அன்று சென்னை - அண்ணா அறிவாலயத்தில் தமிழ் ஈழம் ஆதரவாளர்கள் அமைப்பின் (டெசோ) கூட்டம் என்னுடைய தலைமையில் நடைபெற்ற போது நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களின் அடிப்படையில்;

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தியும்,

இலங்கையில் நடைபெறவுள்ள "காமன் வெல்த்" மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வற்புறுத்தியும்,

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியும்,

இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியும்

நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களையும், தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும், இந்திய மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும், சிங்கள ஆதிக்க வெறிக்கு எதிராக தமிழர் எழுச்சியை ஒன்று திரட்டவும், "டெசோ" இயக்கத்தின் சார்பில் வரும் ஆகஸ்ட் 8ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில், தமிழகம் முழுதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களில், "தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்" நடத்துவதென "டெசோ" இயக்கத்தின் சார்பில் முடிவெடுத்து அறிவித்ததற்கிணங்க;

நாளையதினம் சென்னையில் என்னுடைய தலைமையிலும், மதுரையில் தமிழர் தலைவர் இளவல் கி. வீரமணி தலைமையிலும், திருச்சியில் கழகப் பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையிலும், திருவள்ளூரில் விடுதலைச் சிறுத்தைகள்

இயக்கத் தலைவர் தொல். திருமாவளவன் தலைமையிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் நம்முடைய இயக்கங்களின் முன்னணியினர் தலைமையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் வெற்றிகரமான முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக நான் இது வரை மூன்று கடிதங்களை எழுதியிருக்கிறேன்.

இருந்தாலும் இந்தக் கடிதத்தில் எதற்காக இந்த ஆர்ப்பாட்டம் என்பதைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக, 16ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களின் சுருக்கத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தீர்மானம் 1 :- இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களும், இலங்கை அதிபராக இருந்த ஜெயவர்த்தனே அவர்களும் கையெழுத்திட்ட உடன்பாட்டின்படி, மாகாணக் கவுன்சில்களுடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ள, வழிவகை செய்யும் வகையில் இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தில் 13வது திருத்தம் செய்யப்பட்டது. ஆனால் இன்றைய இலங்கை அதிபர் ராஜபக்சே அரசு அதை முழுமையாக நடைமுறைப் படுத்தாமல், நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதில் தீவிரமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள், இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தத்தை உருக்குலைத்திட நடக்கும் முயற்சிகள் குறித்து அறிந்திருப்பதாகவும், இலங்கையில் தமிழ் மக்கள் மற்றும் இதர சமூகங்களைச் சேர்ந்த மக்கள் சமமாகவும் சுயமரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்ய முயற்சித்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இதுவரை எந்த ஒப்பந்தத்தையும் உறுதி மொழியையும் காப்பாற்றாத இலங்கை அரசு, தற்போது சிவசங்கர மேனன் அவர்களிடம் இலங்கை அதிபர் தெரிவித்த உறுதிமொழியை எந்த அளவிற்குக் காப்பாற்றப் போகிறது என்பதுதான் கேள்விக்குறியாகும்.

1987ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில், தற்போதைய இலங்கை அரசு இந்தியாவின் அனுமதியின்றித் தன்னிச்சையாகத் திருத்தங்கள் மேற்கொள்ளவிருப்பதாக,

இலங்கை அதிபர் இராஜபக்சேயின் சகோதரரும், இலங்கை அமைச்சருமான பசில் இராஜபக்சே தெரிவித்திருக்கிறார். மேலும், 13வது சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்ற கருத்தினை இலங்கை அதிபர் ராஜபக்சேவும், அவரது சகோதரரும் - இலங்கை பாதுகாப்புத் துறை அமைச்சருமான கோத்தபய ராஜபக்சேவும் வெளிப்படையாக தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

இரண்டு நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் தன்னிச்சையாக மீறுவதற்கோ திருத்தம் செய்வதற்கோ எந்த ஒரு நாட்டுக்கும் அதிகாரம் கிடையாது. காரணம், மேற்படி ஒப்பந்தத்தில் இந்திய நாட்டின் நலனும் அடங்கியுள்ளது. இந்தச் சூழ்நிலையில், பசில் ராஜபக்சேயின் அறிவிப்பு உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு எதிராக அமைந்துள்ளது.

13வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முழு அரசியல் தீர்வாக அமையாது என்பதும்; இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுடைய கருத்தினைக் கேட்டுத் தீர்வு காண்பது தான், ஈழத் தமிழர்களின் நலனுக்கு உகந்த தீர்வாக இருக்கும் என்பதும்தான், "டெசோ" அமைப்பின் நிலைப்பாடாகும். இருப்பினும் தற்காலிகத் தீர்வாகவாவது, ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் பயன்பட வேண்டும் என்று "டெசோ" அமைப்பு கருதுகிறது.

இந்திய அரசு, ஒப்பந்தத்தில் கண்டுள்ளவாறு, எந்தவிதத் திருத்தங்களும் இல்லாமல் 1987 ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று "டெசோ" அமைப்பின் இந்தக் கூட்டம் வலியுறுத்துகிறது.

தீர்மானம் 2 :- இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது என்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகமும், 'டெசோ' அமைப்பில் உள்ள மற்ற இயக்கங்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தமிழகத் தலைவர்களும், பல்வேறு தமிழ் அமைப்புகளும், தமிழ் இன உணர்வாளர்களும் வலியுறுத்திய பிறகும்; இலங்கையிலே அந்த மாநாடு நடைபெறுவது உறுதியாகிவிட்ட நிலையில் -

காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெற்றால், அதன் காரணமாகவே அடுத்த இரண்டாண்டுகளுக்கு காமன்வெல்த் அமைப்பின் அவைத் தலைவராக ராஜபக்சே இருப்பாரென்றும்; அதனால் 54 நாடுகளைக் கொண்ட அமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஒருவரை நீதி விசாரணைக்கு உட்படுத்துவது இக்கட்டாக ஆகிவிடக் கூடுமென் றும்; வலிமையான கருத்துகள் முன் வைக்கப்பட்டு வருவதால், இலங்கையில் நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டில் இந்தியா நட்பு நாடு என்று கூறிக் கொண்டு, அதிலே கலந்து கொள்ளுமேயானால், அங்கே நடைபெற்ற இனப்படு கொலைகளை இந்தியா ஏற்றுக்கொள்வது போலாகி விடும். அம்மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது எனும் அழுத்தமான வேண்டுகோளை தொடர்ந்து நாம் "டெசோ" சார்பில் வலியுறுத்தி வருகிறோம். இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது என்ற அறிவிப்பினை உடனடியாகச் செய்ய வேண்டுமென இக்கூட்டம் இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 3 :- இந்திய மத்திய அரசுக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் எத்தனையோ வேண்டுகோள் விடுத்த பிறகும், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் நின்றபாடில்லை. இத்தகைய கொடுமையான நிகழ்வுகள் கடந்த பல ஆண்டு காலமாகவே தொடர் கதையாக நீடித்துக் கொண்டே வருகின்றன.

ஒவ்வொரு முறை மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்படும் போதெல்லாம், தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள் மத்திய அரசுக்கு வேண்டுகோள் அறிக்கைகளை வெளியிடுவதும், "டெசோ" அமைப்பின் சார்பில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும், தமிழக அரசின் சார்பில் பிரதமருக்குக் கடிதம் எழுதுவதும் எந்த விளைவையும் இலங்கை அரசிடம் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. எனவே மத்திய அரசு இனியாவது உறுதியானதொரு நடவடிக்கையை, தமிழகத்தின் மீனவர்கள் பிரச்சினை ஒட்டுமொத்தமாகத் தீருகின்ற வகையில் உடனடியாக எடுக்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 4 :- இலங்கையில் பன்னெடுங் காலமாகத் தமிழர் வாழும் பகுதிகளில் எல்லாம் சிங்களவர்களைக் குடியேற்றும் கொடுமை தொடர்வதைப் பற்றியும், தமிழர் பகுதிகளில் உள்ள ஊர்ப் பெயர்களை தமிழிலிருந்து சிங்களத்திற்கு மாற்றுவதைப் பற்றியும், தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து எழுதிவருவதை நிரூபித்திடும் வண்ணம், வடக்கு மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்திற்கும், கிழக்கு மாகாணத்தில் உள்ள திரிகோணமலை மாவட்டத்திற்கும் இடையே வரலாற்று ரீதியாக இருந்த இணைப்பைத் துண்டித்திடும் வகையிலும், சிங்களப் பகுதியான அனுராதபுரா மாவட்டத்தோடு இணைந்திருக்கும் வகையிலும், "வெளிஓயா" என்ற சிங்களப் பெயரிலேயே ஒரு புதிய மாவட்டத்தை சிங்கள அரசு உருவாக்கி, அங்கே சிங்களவர்களை மட்டுமே குடியேற்றி வருகின்ற நிகழ்வுகளும் தற்போது நடைபெறுவதை, "டெசோ" இயக்கம் சுட்டிக்காட்டி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின்படி, பொதுத் தேர்தல்கள் நடைபெறும் காலத்தில் இதுபோன்ற மாவட்டங்களை உருவாக்குவதோ, எல்லைகளை மாற்றுவதோ, புதிய குடியேற்றத்தை ஊக்குவிப்பதோ கூடாது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருந்த போதிலும், அதை மீறுகின்ற வகையில் சிங்கள அரசு செயல்படுவதையும் இந்திய அரசு கவனத்தில் கொண்டு, இதனை உலக நாடுகள், மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாகத் தடுத்து நிறுத்திட ஆவன செய்திட வேண்டுமென்று, இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

உடன்பிறப்பே, இந்த நான்கு தீர்மானங்களை வலியுறுத்தித் தான் நாளைய தினம் நாம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக "டெசோ" இயக்கத்தின் சார்பில் நாம் நடத்துகின்ற முதல் ஆர்ப்பாட்டம் இதுவல்ல. "டெசோ" சார்பில் ஈழத் தமிழர்களுக்காக

29-4-1985 அன்று சென்னையில் நடைபெற்ற மறியலில் 4002 பேரும், 30ஆம் தேதி திருச்சியில் 3000 பேரும், மே 3ஆம் தேதி தர்மபுரியில் 1000 பேரும், 6ஆம் தேதி சேலத்தில் 3000 பேரும், 7ஆம் தேதி தஞ்சையில் 6000 பேரும், 8ஆம் தேதி வட ஆர்க்காட்டில் 2500 பேரும், 13ஆம்தேதி தென் ஆர்க்காட்டில்

3000 பேரும், 15ஆம் தேதி பெரியார் மாவட்டத்தில் 1500 பேரும், 16ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3000 பேரும், 17ஆம் தேதி கோவை, நீலகிரி மாவட்டங்களில் 3500 பேரும், 18ஆம் தேதி ராமனாதபுரம், பசும்பொன், காமராஜர் மாவட்டங்களில் 3000 பேரும், 20ஆம் தேதி மதுரை மாவட்டத்தில் 5000 பேரும், 22ஆம் தேதி நெல்லை, குமரி, புதுவையில் 5500 பேரும் ஈடுபட்டு கைது ஆயினர்.

இலங்கைத் தமிழர்களின் நலன் காக்க

16-5-1985 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற நானும் மற்றும் ஆயிரம் பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டோம்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்து டெசோ அமைப்பின் சார்பில் 3-10-1985 அன்று கோவையிலும், 4-10-1985 அன்று திண்டுக்கல்லிலும், 5-10-1985 அன்று தூத்துக்குடியிலும்,

6-10-1985 அன்று திருச்சியிலும், 7-10-1985 அன்று சேலத்திலும், 13-10-1985 அன்று வேலூரிலும் மிகப் பெரிய பேரணிகள் நடத்தப்பட்டன. 4-5-1986 அன்று மதுரையில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடே நடைபெற்றது.

கடந்த ஆண்டு 12-8-2012 அன்று சென்னையில் "டெசோ" இயக்கத்தின் சார்பில் "ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாடு" நடைபெற்றது.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து துன்புறுத்தி வருவதைக் கண்டித்து 18-2-2013 அன்று ராமேஸ்வரத்திலும், 19-2-2013 அன்று நாகப்பட்டினத்திலும், "டெசோ" இயக்கத்தின் சார்பில் "கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அவ்வாறே அந்த அறவழி ஆர்ப்பாட்டங்களும் தமிழ் மக்களின் பேராதரவோடு நடைபெற்றுள்ளன.

மனித உரிமைகளை மீறிய போர்க் குற்றவாளியான இலங்கை அதிபர் ராஜபக்சேவைக் கண்டித்திடும் வகையில் மார்ச் 5ஆம் தேதியன்று "டெசோ" இயக்கத்தின் சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை "முற்றுகையிடும் போராட்டம்"

நடைபெற்றது. மேலும் மார்ச் 7ஆம் தேதியன்று "டெசோ" இயக்கத்தின் சார்பில் டெல்லியில் நடைபெற்ற சிறப்பு மாநாடு மற்றும் கருத்தரங்கில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், பல்வேறு மனிதநேய அமைப்பினரும் கலந்து கொண்டனர். இலங்கை அரசின் இனப் படுகொலையைக் கண்டித்து அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி

12-3-2013 அன்று தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது.

15-4-2013 அன்று நடைபெற்ற "டெசோ" கூட்டத்தில், கச்சத் தீவினை இலங்கைக்கு ஒப்பந்தத்தின் மூலம் விட்டுக் கொடுத்தது அரசியல் சட்ட ரீதியாகச் செல்லுபடி ஆகாது என்பதுதான் உண்மை என்றும், எனவே 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதைப் பிரகடனப்படுத்தவும், "டெசோ" அமைப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதென முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே உச்ச நீதிமன்றத்தில் என் பெயரிலேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கும் உச்ச நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக் கிறது.

இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியாகத்தான் நாளை ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று தமிழகம் முழுவதிலும் "டெசோ" இயக்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கிறோம். இதற்கிடையே செப்டம்பர் 21ஆம் தேதி நடைபெறவுள்ள இலங்கையில் வடக்கு, வட மேற்கு, மத்திய மாகாணக் கவுன்சில்களுக்கான உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுத் தாக்கல் 2-8-2013ஆம் தேதியோடு முடிவடைந்து விட்டது. அதனையொட்டி பேசிய இலங்கை பிரதமர் டி.எம். ஜெயரத்னே, "மாகாணக் கவுன்சில்களுக்கான காவல் துறை அதிகாரம் மற்றும் நிலம் சம்பந்தமான உரிமைகள் பறிக்கப்படும்" என்று தெரிவித்திருக்கிறார். இதிலிருந்து இவருடைய பேச்சின் மூலம் 13வது சட்டத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்து, வடக்கு மாகாணத்தில் உரிமைகள் ஏதும் தராத "பொம்மை" அரசு ஒன்றை உருவாக்க எண்ணிடும் சூழ்ச்சிதான் தெரிகிறது. இதனை எதிர்க்கும் வகையிலேதான் நாளை நம்முடைய ஆர்ப்பாட்டம்

அமையவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தினை வெற்றிகரமாக ஆக்கித் தரவேண்டிய கடமை நமக்கு உள்ளது. சென்னையிலே நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு நானே தலைமை தாங்குகிறேன். அங்கே ஆர்ப்பரித்து வரும் அடலேறுகளாம் உடன்பிறப்புகளைச் சந்திக் கிறேன். நாளை ஆகஸ்ட் 8 ஆர்ப்பாட்டம்; தமிழர் பெருந்திரள் கண்டு தரணியே வியக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

07-08-2013

3791. இஸ்லாமியப் பெருமக்களுக்கு இதய வாழ்த்துகள்!

உடன்பிறப்பே,

நாளை (9.8.2013) இஸ்லாமியப் பெருமக்களுக்கான இரமலான் திருநாள். அவர்களுக்கெல்லாம் என் இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளும் நேரத்தில் கழக ஆட்சியில் அந்தச் சிறுபான்மைச் சமுதாயத்தின் நலனுக்கும், மேம்பாட்டுக்கும் செய்யப்பட்ட சாதனைகளைச் சற்றே நினைவுகூர்ந்திட வேண்டுமென்பதற்காகத் தொகுத்துத் தர விரும்புகிறேன்.

தமிழக அரசின் செய்தித்துறை 4-8-2013 அன்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் ஹஜ் யாத்திரைக் குழுவுக்கு மானியத்தை 30 லட்சம் ரூபாயாக உயர்த்தி முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தச் செய்தியின் தொடக்கத்தில் உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தியது பற்றியும், மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த அ.தி.மு.க. ஆட்சியில் இஸ்லாமியப் பெருமக்களுக்குச் செய்யப்பட்டிருக் கும் இந்தச் சாதனைகள் வெளிவந்திருக்கும் நேரத்தில், கழக ஆட்சிக் காலத்தில் இஸ்லாமியச் சமுதாயத்தினர்க் குச் செய்யப்பட்ட பல்வேறு சலுகைகளில்; 25-7-2013 அன்று சென்னையில் நடைபெற்ற "இஃப்தார்" நிகழ்ச்சியில் - "வாழ்த்துச் செய்தி" அனுப்பி அல்ல; நானே நேரில் கலந்து கொண்ட போது, காலத்தின் அருமை கருதி ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். தற்போது அரசின் செய்திக் குறிப்பினைப் பார்த்த பிறகு இஸ்லாமியர்களுக்கு கழக ஆட்சியில் செய்யப்பட்ட ஏனைய சாதனைகளையும் நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

சிறுபான்மை மக்களின் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதாரம் போன்ற நிலைகளை மேம்படுத்தவும், நலத்திட்டங்களைச் செம்மையாகச் செயலாற்றிடவும், சிறுபான்மையினர் நல இயக்குனரகம் 2007ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்டு 1.8.2007 முதல் இயங்கி வருகின்றது. இத்திட்டங்களை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும் அனைத்து மாவட்டங்களிலும் (திருப்பூர் நீங்கலாக) 30 கண்காணிப்பாளர், 30 இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர்க்கான 30 சதவீத இட ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கெனத் தனியே 3.5 சதவீத இட ஒதுக்கீடு (சட்ட முன் வடிவு எண்.9/2008) தி.மு.கழக ஆட்சியில் வழங்கப்பட்டு 15.9.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் "உருது அகாடமி" 15 இலட்ச ரூபாய் தொடக்க முதலீட்டுடன் அமைக்கப்பட்டு, அதனை தி.மு.கழக ஆட்சியில் 21-7-2000 அன்று நான் தொடங்கி வைத்தேன்.

உருது மொழியைப் பாடமாகப் பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் 3 மாணவர்களுக்கும், மற்றும் 3 மாணவியர்களுக்கும் முதல், இரண்டு மூன்று எனப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. கழக ஆட்சியில் 37 மாணவ / மாணவியர் பயனடைந்தனர்.

திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில் 250 பள்ளி, கல்லூரி இஸ்லாமிய மாணவியர்கள் பயனடையும் 5 புதிய விடுதிகள் 2008ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர்கள் கணினி பழகும் வகையில் ரூ.10.13 இலட்சம் செலவில் 25 கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 2009-2010ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் 5 விடுதிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒரு இலட்ச ரூபாய்ச் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு நிதி உதவியுடன் தொழிற்கல்வி / தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு 2007-2008ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 7090 மாணவ மாணவியர்களுக்கு 18 கோடியே 53 இலட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

மத்திய அரசு நிதி உதவியுடன் பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்புவரை பயிலும் மாணவ / மாணவியர்க்குக் கல்வி உதவித் தொகை 2007-08ஆம் ஆண்டு முதல் தி.மு.கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 67 ஆயிரத்து 683 மாணவ மாணவியர்க்கு 22 கோடியே 22 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

மைய - மாநில அரசுகளின் நிதி (7523) உதவியுடன் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை 2008-2009 ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப் பட்டு, முதற்கட்டமாக 15,340 மாணவ, மாணவியர்க்குக் கல்வி உதவித் தொகைகள் தமிழகத்திற்கெனப் பெற்று வழங்கப்பட்டது. இத்திட்டம் குறித்து தமிழக அரசால் சிறுபான்மை யின மக்களிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவாக, 2009-2010 ஆம் ஆண்டிற்கு 1 இலட்சத்து 54 ஆயிரத்து 264 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.18.90 கோடியும்; 2010-2011ஆம் ஆண்டிற்கு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 301 சிறுபான்மையின மாணவ / மாணவியர்க்கு ரூ.28.62 கோடியும்; கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். தி.மு.கழக ஆட்சியில் 2007ஆம் ஆண்டு முதல் ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட, இஸ்லாமிய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பதவிவழித் தலைவராகக் கொண்டு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் தொடக்கப்பட்டது. இச்சங்கங்கள் தொடங்குவதற்கு விதைத் தொகையாக தலா ஒரு ரூ.30 இலட்சம் நிதியினை வழங்கியதே தி.மு.கழக ஆட்சிதான். சங்க வளர்ச்சிக்காக இச்சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கு இணையாக பட்சம் ரூ.10 இலட்சம் இணை

மானியம் வழங்கிடவும் ஆணை பிறப்பிக்கப்பட்டு, கழக ஆட்சியில் 14 மாவட்டங்க ளுக்கு ரூ.44.37 இலட்சம் வழங்கப்பட்டது.

வேலையில்லாத சிறுபான்மையின மாணவ / மாணவியர் தனியார்த் துறைகளில் வேலை

வாய்ப்புகளைப் பெறுவதற்கும், அவர்களது திறனை மேலும் மேம்படுத்தும்வகையிலும் தகவல் மற்றும் தொழில்நுட்பம், ஆயத்த ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு, காலணிகள் வடிவமைப்பு போன்றவற்றில் தொழில்நுட்ப சிறப்புப் பயிற்சித் திட்டம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குத் தமிழக அரசின் நிதியுதவி பெற்று ரூ.2.50 கோடி செலவில் 2007-2008 முதல் தி.மு.கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நான்கரை ஆண்டுகளில் 10 கோடி ரூபாய்ச் செலவில் 41 ஆயிரத்து 316 பேர் பயனடைந்தனர்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவு அடங்கியுள்ள அறிக்கையில் உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது பற்றிப் பெருமையாகச் சொல்லியிருக்கிறார். ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் 24.8.2009 அன்று தி.மு.கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டு, 11 ஆயிரத்து 274 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன; 704 பயனாளிகளுக்கு ரூ.12.93 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கு உயிர்காக்கும் உயர் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது. 2010-2011ஆம் ஆண்டில் உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கு மிதிவண்டிகள் இலவசமாக வழங்கிட ரூ.3.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 28.2.2011 அன்று சென்னையில் தி.மு.கழக ஆட்சியில் இத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.

உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.200 என்பது 2006இல் தி.மு. கழக ஆட்சியில் ரூ.400 எனவும்; 1.12.2010இல் மாதம் ரு. 500 ரூபாய் எனவும் உயர்த்தப்பட்டது. அந்தத் தொகையைத்தான் அ.தி.மு.க. ஆட்சியில் மேலும் அதிகமாக உயர்த்தினார்கள். ஓய்வூதியம் பெறும் உலமாக்கள் எண்ணிக்கை 1998-1999இல் 2000 பேர் என்பது 2200 ஆகவும்; 2007-2008இல்

2400 ஆகவும் தி.மு.கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டது. உலமா ஓய்வூதியத் திட்டம் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் தி.மு.கழக ஆட்சியில் நீட்டிக்கப்பட்டது.

மதவழி மற்றும் மொழிவழிச் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக்காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும் 1989இல் மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று முதன்முதலில் 13.12.1989 அன்று தி.மு. கழக ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாணையம் 14.3.1990 முதல் செயல்படத் தொடங்கியது.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்திடும் சீரிய நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்திற்கு, சட்டப்படிக்கான அங்கீகாரம் அளித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் 2010 தி.மு.கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது. 1.8.2010 முதல் சட்டப்படிக்கான அதிகாரத்துடன் செயல்பட அரசாணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அருட்திரு வின்சென்ட் சின்னதுரை அவர்கள் தலைமையில், ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டது.

2006இல் தி.மு.கழக அரசு பொறுப்பேற்றவுடன், அதற்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட மதமாற்றத் தடைச் சட்டத்தினை ரத்து செய்தது. மேலும் அச்சட்டத்தை எதிர்த்து போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் முந்தைய அரசு பிடித்தம் செய்திருந்த ஒரு நாள் சம்பளத்தைத் திரும்ப வழங்கியது.

சிறுபான்மையினர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வண்ணம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தி.மு. கழக ஆட்சியில் 27.12.1999 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இக்கழகத்தின்மூலம் கடந்த கழக ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 7208 பேருக்கு 29 கோடியே 68 இலட்ச ரூபாய் தனிநபர் கடனாக வழங்கப்பட்டது. 5 ஆண்டுகளில் 966 பேருக்கு 10 கோடியே 67 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஆட்டோ கடன் வழங்கப்பட்டது. ஐந்தாண்டுகளில் கறவை மாடுகள் வாங்கிட 146 பேருக்கு 27 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது.

34,589 பேருக்கு 46 கோடியே 46 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு ஹஜ் குழு பற்றியும் விரிவாக ஜெயலலிதாவின் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். முஸ்லிம் மக்கள்தொகை அடிப்படையில், ஹஜ் பயணத்திற்கு ஒவ்வொரு நாட்டிற்கான ஒதுக் கீட்டைச் சவூதி அரசு நிர்ணயிக்கிறது. இவ்வொதுக்கீட்டில் இருந்து 2001ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அந்தந்த மாநில முஸ்லிம் மக்கள் தொகைக்கேற்றவாறு மாநிலங் களுக்கு ஹஜ் பயணத்திற்கான ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. தி.மு.கழக ஆட்சியில் ஒதுக்கீட்டிற்கும் அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டதால், கூடுதல் ஒதுக்கீடு வழங்கக்கோரி கழக அரசு இந்தியப் பிரதமரிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் மத்திய அரசு தமிழகத்திற்கு 5 ஆண்டுகளில் நிர்ணயித்த 13 ஆயிரத்து 626 பேருக்கும் அதிகமாக 5611 பேரைக் கூடுதலாக ஹஜ் பயணம் மேற்கொள்ள இஸ்லாமிய மக்களுக்குத் துணைநின்றது தி.மு.கழக அரசு.

தமிழக அரசு சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்படுத்திவரும் திட்டங்களை ஆய்வு செய்த மத்திய அரசின் தேசிய சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் தலைவர் திரு.எம். எஸ்.ஏ. சித்திக் அவர்களும், அவரது தலைமையில் வருகைபுரிந்த குழுவினரும், சிறுபான்மையினருக்கான தமிழகத் தி.மு.கழக அரசின் திட்டங்களில் முழு மனநிறைவுகொண்டு, கழக அரசு, 'சிறுபான்மையினருக்காகப் பாடுபடும் அரசு' (Pro-Minority) என்று பாராட்டினார்.

இஸ்லாமிய மக்களுக்காகக் கழக அரசு செய்தவை இவை மாத்திரம்தானா? 1969இல் மீலாது நபிக்கு முதன்முதல் அரசு விடுமுறை ; முந்தைய அ.தி.மு.க. அரசு 2001இல் ரத்து செய்த மீலாது நபி அரசு விடுமுறையை 15.11.2006 ஆணை மூலம் மீண்டும் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.

1973இல் உருது பேசும் முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்.

1974இல் சென்னை அண்ணா சாலை அரசினர் மகளிர் கல்லூரிக்கு "காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி" எனப் பெயர் சூட்டப்பட்டது.

2001இல் "காயிதே மில்லத் மணிமண்டபம்" 58 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் சென்னையில் அமைத்திட 25.2.2001 அன்று தி.மு.கழக ஆட்சியிலே அடிக்கல் நாட்டி, திறக்கப்பட ஆவன செய்யப்பட்டது.

இவை எல்லாம் தி.மு.கழக ஆட்சி இஸ்லாமிய சமுதாயத்திற்கு செய்த சாதனைகளுக்கான சான்றுகளாகும். இஸ்லாமிய சமுதாயம் "இப்தார்" நிகழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அந்தச் சமுதாயத்திற்காகத் தி.மு.கழகம் மேற்கொண்ட இந்தப் பணிகளை நினைவுபடுத்துவதில் பெருமை கொள்கிறேன்.

"இஸ்லாம் என்பது ஒரு வாழ்க்கை நெறி" என்றார் அண்ணா. இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயம் அனைத்திற்கும் பொதுவாகப் பொருந்தும் வாழ்க்கை நெறிகளைப் போதித்த அண்ணல் நபிகளார், ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் அன்புடன் பழகி, உறவை வளர்க்க வேண்டும் என்றார். மற்றவர்களைப் பற்றிக் குற்றம் குறைகள் கூறும் மனப்பான்மையை விட்டுவிட வேண்டும் என்று போதித்த அண்ணல் நபிகளார், "பிறருடைய குற்றங்களைத் தேடி அலையாதீர்கள்; நீங்கள் உயர்ந்த நிலை அடைவதற்காகப் பிறரைத் தாழ்த்தி விடாதீர்கள்; பிறர்மீது பொறாமை கொள்ளாதீர்கள்; பிறரைப் பற்றிப் புறம் பேசாதீர்கள்; பிறரிடம் முகம் சுளிக்காதீர்கள்" என்கிறார்.

நபிகள் பெருமானின் மணிவாசகங்களை மனதில் பதித்து, எளியோர்க்கு ஈந்து - ஈகைத் திருநாளாக இரமலான் திருநாளை குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தார், நண்பர்கள் சூழக் கொண்டாடி மகிழும் இஸ்லாமிய உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்குகிறேன்.

அன்புள்ள,

மு.க.

8-8-2013

3792. உணவு மசோதா; நமது நிலை!

உடன்பிறப்பே,

மக்களுக்கு உணவுரிமையை வழங்கி, வாழ்க்கை நிலையை உயர்த்திட வேண்டும் என்ற இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப் படையிலும், ஒவ்வொருவருக்கும் தேவையான உணவு என்ற உரிமையை அங்கீகரிக்கும் மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தின் அடிப்படையிலும் இயற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதன் வாயிலாக நாட்டிற்கு என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதைப் பற்றி மத்திய அரசும், அந்தச் சட்டத்தினால் தமிழகத்திற்கு என்னென்ன பாதகங்கள் ஏற்படும் என்று நமது மாநில முதலமைச்சர் ஜெயலலிதாவும் கருத்துக்களை எடுத்துவைத்திருக்கிறார்கள். 2009ஆம் ஆண்டு, குடியரசுத் தலைவர் உரையிலேயே உணவுப் பாதுகாப்புச் சட்டம் பற்றிய குறிப்பு இடம்பெற்று; இப்போது நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்திருக்கிறது. நான் என்னுடைய 6-8-2013 தேதிய அறிக்கையிலே இந்த உணவு மசோதாவின் சாதக பாதகங்களைப் பற்றியும், இது தமிழ்நாட்டிற்குத் தேவையா என்பதைப் பற்றியும் விரிவாக எழுதுவதாகக் கூறியிருந்தேன்.

இந்தியாவில் அனைவருக்கும் உணவுகிடைப்பதை உறுதி செய்வதற்காக உணவுப் பாதுகாப்பு அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், நாடு முழுவதிலும் உள்ள 82 கோடி மக்களுக்கு மலிவு விலையில் உணவு தானியங்கள் வழங்கி, வறுமையைப் போக்குவதுதான் இச்சட்டத்தின் நோக்கம் என்றும் மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.வி. தாமஸ் கூறுகிறார். அங்கன்வாடிகள் மூலம் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், மதிய உணவு அருந்தும் பள்ளிக் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்டிர்க்கும் தேவையான கூடுதல் ஊட்டச்சத்து வழங்கு வதையும் இந்தச் சட்டம் உறுதி செய்கிறது.

இந்த மசோதா பற்றித் தமிழக அரசின் முக்கியக் குறைபாடுகள் 1) மத்தியத் தொகுப்பிலிருந்து வரக்கூடிய உணவு தானியங்களின் அளவை எந்தவிதத்திலும் குறைக்கவே கூடாது; 2) தேசிய அளவில் 75 சதவிகிதம் ஊரக மக்களும், 50 சதவிகிதம் நகர்ப்பகுதி மக்களும் மானிய உணவு தானியங்களைப் பெறத் தகுதி உடையவர்களாகச் செய்வதால், குழப்பம் ஏற்படும்; 3) நகர்ப் பகுதிகளில் உணவு உற்பத்திக்கு வழி ஏதுமில்லை என்பதால், அங்கே அளிக்கப்படும் ஒதுக்கீடு 100 சதவிகிதமாகவும், அல்லது குறைந்தபட்சம் 75 சதவிகிதமாகவும் இருக்க வேண்டும்; 4) தமிழ்நாட்டுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 2.96 இலட்சம் டன்களிலிருந்து உணவு தானியங்களின் அளவு குறைந்தபட்சம் 1 லட்சம் டன்னாவது இந்த மசோதாவின் மூலம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; 5) பொது விநியோகத் திட்டத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் அரசுக் கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் மேலும் 3000 கோடி ரூபாய் செலவாகும்; 6) உணவு தானியங்கள் வழங்க இயலாதபோது, உணவுப் பாதுகாப்புப் படியை மாநில அரசு வழங்க வேண்டும் என்பன போன்றவற்றைப் பட்டியலிட்டுவிட்டு;

தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது மத்திய அரசின் கடமையாகும் என்றும்; மாநிலங்களோடு கலந்து விவாதித்த பிறகு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும்; இடையறாத விநியோகத்திற்கு வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும்; அந்தியோதயா அன்னயோஜனாவின்கீழ்க் கொடுக்கப்படும் இன்றைய விநியோகம் எந்தவிதத்திலும் குறையாது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும்; நகர்ப் பகுதி மக்கள் தொகையின் விகிதாச்சாரம் 50 சதவிகிதம் என்பதிலிருந்து முழுமையான நகர்ப் பகுதி மக்கள் என்று அதிகரிக்க வேண்டு மென்றும் கோரிக்கைகளை 2-8-2013 அன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

120 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் தற்போது 18 கோடிக் குடும்பங்கள்தான் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள். ஆனால் இந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, நகரங்களில் 50 சதவிகிதத்தினரும், கிராமங்களில் 75 சதவிகிதத்தினரும், ஆக நாட்டில் உள்ள

மக்களுள் 67.5 சதவிகிதத்தினர் - அதாவது 82 கோடி மக்கள் இந்தப் புதிய சட்டத்தினால் பயன்பெறுவார்கள் என்று மத்திய அரசு தெரிவிக்கின்றது. இச்சட்டத்தின்படி, ஒருவருக்கு ஒரு கிலோ அரிசி 3 ரூபாய், ஒரு கிலோ கோதுமை 2 ரூபாய் என்ற விலையில் மாதந்தோறும் வழங்கப்படும். 5 பேர் கொண்ட குடும்பத்தினருக்குத் தலா 5 கிலோ வீதம் 25 கிலோ அரிசியோ, கோதுமையோ வழங்கப்படும்.

உணவுப் பாதுகாப்பு மசோதாவைப் பல மாநிலங்கள் வரவேற்றுள்ள போதிலும், தங்களுக்குக் கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்தும் என்று தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் ஐயப்பாடு தெரிவிக்கின்றன. மத்திய அரசின் இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய நிதிச்சுமை மானிய விலையிலான உணவு தானியங்களால் ஏற்படக்கூடியதாகும். இப்பொழுது செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்குத் தேவைப்படும் மொத்த உணவு தானியங்களின் அளவு 612.3 இலட்சம் டன்களாகும். 2013-14ஆம் ஆண்டு விலைகளின்படி இதற்கான மானியத் தொகை சுமார் ரூ. 1,24,747 கோடியாகும். தற்போது நடைமுறையில் உள்ள பொது விநியோக முறை மற்றும் மற்ற நலத் திட்டங்களுக்கான உணவு மானியத் தொகையுடன் ஒப்பிடுகையில், ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ. 23,800 கோடி செலவாகும். இந்தக் கூடுதல் செலவை மத்திய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும் என்று மத்திய அரசு கூறுகிறது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து, ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் சில மாறுதல்களுடன் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. தமிழகத்தில் தற்போது மொத்த நியாய விலைக் கடைகள் 33,222. மொத்தக் குடும்ப அட்டைகள் 1 கோடியே 97 லட்சத்து 82 ஆயிரத்து 593. வழங்கிய மொத்த அரிசி அட்டைகள் 1 கோடியே 67 லட்சத்து 21 ஆயிரத்து 538. மத்திய அரசின் திட்டமான அந்தியோதயா அன்னயோஜனா மூலம் பயன்பெறும் மிக மிக ஏழ்மை நிலையிலே உள்ள குடும்பங்கள் 18 லட்சத்து 62 ஆயிரத்து 615. இவர்களையும் சேர்த்தால் மொத்த அரிசி அட்டைகள் 1 கோடியே 85 லட்சத்து 84 ஆயிரத்து 153.

மத்திய அரசு மாதந்தோறும் தமிழகத்திற்குச் செய்கிற அரிசி ஒதுக்கீடு 2 லட்சத்து 96 ஆயிரம் டன். அந்தியோதயா

அன்னயோஜனா திட்டத்தின்கீழ் ஒரு கிலோ அரிசி ரூபாய் 3 விலையிலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகிற மக்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 5.65 விலையிலும், வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ள மக்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 8.60 விலையிலும், 2001ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு வழங்கி வருகிறது.

தற்போது தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களுக்கு ரூ. 5.65 விலைக்கு வழங்கும் மத்திய அரசு, புதிய சட்டத்திற்குப் பிறகு, ஒரு கிலோ அரிசியை 3 ரூபாய் விலைக்கு வழங்க வுள்ளது. இதனால் தமிழக அரசு மத்திய அரசுக்கு வழங்க வேண்டிய விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.65 குறைந்து விடுகிறது. இது தமிழக அரசுக்கு இத்திட்டத்தினால் கிடைக்கும் இலாபம் என்று கூறப்படுகிறது.

2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாடாளுமன்ற மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மசோதாவின் அடிப்படையில், தமிழக அரசு போன்ற மாநிலங்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருந்தன. நிலைக் குழுவின் பரிந்துரைகளையும், மாநில அரசின் கருத்துகளையும் மனதிலே கொண்டு, மாநிலங்களின் பல்வேறு இடங்களுக்கு உணவு தானியங்களை அனுப்பிட ஆகும் போக்குவரத்துக் கட்டணம், கையாளும் செலவு, கடைக்காரர்களுக்கான விளிம்புத்தொகை போன்ற செலவுகளை எதிர்கொள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு உதவியளிக்க இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது.

குறைகளைக் களைவதற்கான அமைப்பைப் பொறுத்தவரை, தனியான அமைப்பை ஏற்படுத்துவதா அல்லது தற்போதுள்ள ஏற்பாட்டைத் தொடர்வதா என்பது குறித்து முடிவெடுக்கும் உரிமையை இந்தச் சட்டம் மாநில அரசுகளுக்கே அளிக்கிறது.

மத்தியத் தொகுப்பிலிருந்து ஒரு மாநிலத்திற்கு உணவு தானிய ஒதுக்கீடு அளவு குறையும் பொழுது, அதனால் ஏற்படக்கூடிய பொறுப்பை எதிர்கொள்ள, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்க இந்தச் சட்டத்தின் 23வது பிரிவு வகை செய்கிறது.

பயனாளிகளைக் கண்டறியும் பணியை இனிமேல் மாநில அரசுகளிடம் அளிக்கவே இந்தச் சட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள பொது விநியோக முறையை இந்த மசோதா பாதிக்குமா என்றால், பொது விநியோக முறை தற்போது மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பில் உள்ளது. உணவு தானியக் கொள்முதல், சேமிப்பு, மாநிலங்களுக்கு மொத்த ஒதுக்கீடு போன்றவை மத்திய அரசின் அதிகாரத்திற்குள் அடங்கி உள்ளன. மாநிலத்திற்குள் ஒதுக்கீடு, பயன்பெறும் குடும்பங்களைக் கண்டறிதல், குடும்ப அட்டைகளை வழங்குதல், நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற நடைமுறைகளை மாநில அரசுகள் கவனித்து வருகின்றன. பொது விநியோக முறையில் தேவையான சீர்திருத்தங்களைச் செயல்படுத்த, மத்திய, மாநில அரசுகள் முயற்சிகளை மேற்கொள்ள புதிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் வகை செய்கிறது. இந்த உணவுப் பாதுகாப்புச் சட்டம், எந்த மாநிலத்திலும் ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் உணவுப் பொருள்கள் வழங்கல் முறையினை மேம்படுத்துவதாக இருந்திட வேண்டுமே தவிர, சீர்குலைப்பதாக ஆகிவிடக் கூடாது.

இந்த உணவுப் பாதுகாப்பு அவசரச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன் மாநில அரசுகள் கலந்துகொள்ளப்பட்டதா? இல்லையா? என்றால் 2011ஆம் ஆண்டே தமிழக அரசின் கருத்துகள் கேட்கப்பட்டு, அதற்கு விரிவாகப் பதில் எழுதியதாக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். மத்திய உணவுத்துறை அமைச்சரும் மாநிலங்களோடு பல கட்டங்களில் விவாதம் நடத்தியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். பாராளுமன்ற நிலைக் குழு இந்த மசோதாவைப் பல முறை ஆய்வு செய்த பிறகு, மாநில உணவுத்துறை அமைச்சர்களின் கூட்டம் மத்திய அரசினால் நடத்தப்பட்டு கலந்தாலோசனை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மத்திய அரசின் புதிய சட்டம் மொத்த மக்கள் தொகையில் 67.5 சதவிகித மக்களுக்குப் பயன்பட வழிவகுக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் தற்போது பொது விநியோகத் திட்டத்தின் மூலம், மாநிலத்தின் மக்கள் தொகையில் 90 சதவிகிதம் பேர் பயனடைந்து வரும் நிலையில், மத்திய அரசின் இந்தப் புதிய சட்டம் பாதிப்பை ஏற்படுத்தி விடுமே என்று தமிழக அரசு கூறுகிறது.

தமிழக முதல் அமைச்சர் தெரிவித்துள்ள குறைபாடுகளும், கோரிக்கைகளும் அலட்சியப்படுத்தப்படக் கூடியவை அல்ல.

அவரும்கூட, இந்த உணவுப் பாதுகாப்பு மசோதாவில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும், அவை என்னென்ன என்றும்தான் பட்டியலிட்டிருக்கிறார். பிரதமருக்குக் கடந்த 2ஆம் தேதியன்று அவர் எழுதிய கடிதத்தை முடிக்கும்போதுகூட, "நாடாளுமன்றத்தின் முன்வைக்கக் கருதியுள்ள சட்ட முன்வடிவில், தமிழ்நாடு தெரிவித்துள்ளவாறு உரியவாறும், முறையாகவும் திருத்தங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறேன்" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, உணவுப் பாதுகாப்பு மசோதாவை முற்றிலுமாகப் புறக்கணித்திட வேண்டுமென்று கடும் எதிர்ப்பு எதையும் தெரிவித்துவிடவில்லை. ஆனால் நான்தான் ஏதோ மத்திய உணவு மசோதாவை ஆதரித்துத் தமிழகத்திற்கே துரோகம் செய்துவிட்டதாகத் தனது அறிக்கையில் ஜெயலலிதா தாண்டிக் குதித்துள்ளார்.

இந்த மசோதா குறித்து முக்கிய எதிர்க் கட்சியான பா.ஜ.க. ஆறு மணி நேரம் விவாதம் நடத்த வேண்டுமென்று நிபந்தனை விதித்துள்ளது. சமாஜ்வாடிக் கட்சித் தலைவர் முலாயம்சிங் அவர்களும் விவசாயிகள் இந்த மசோதாவினால் பாதிக்கப்படக் கூடாது என்றுதான் நிபந்தனை விதித்துள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 7-8-2013 அன்று தெரிவித்துள்ள கருத்தில், இந்த மசோதா எல்லாப் பகுதிகளிலும் உள்ள அனைவருக்குமான பொது விநியோக முறையாக மாற்றப்பட வேண்டும்; உணவுப் பொருள் என்பதில் சர்க்கரை, பருப்பு வகைகள் இணைக்கப்பட வேண்டும்; ஒரு நபருக்கு 5 கிலோ என்பதை 7 கிலோவாக உயர்த்த வேண்டும்; மாநிலங்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் குறையக் கூடாது; பொது விநியோக முறையோடு ஆதார் அடையாள எண், நேரடி பணமாற்றம் ஆகியவற்றை இணைக்கக் கூடாது; என்று ஐந்து திருத்தங்களை மசோதாவில் செய்ய வேண்டுமென்றுதான் கோருகிறார்கள். அதைப்போலவேதான் அ.தி.மு.க. அரசின் சார்பாக முதல் அமைச்சரும் ஒரு சில திருத்தங்களை முன்வைத்திருக்கிறார்.

நாடாளுமன்ற நிதிநிலைக் குழு இந்த மசோதா பற்றி விரிவாக ஆய்வு நடத்தியுள்ளது. அந்தக் குழுவில் அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவரும் இடம்பெற்றிருக்கிறார். அந்தக் கட்சியின் எதிர்ப்புகளையெல்லாம் அந்தக் குழுவிலே அவர் எடுத்துச்

சொல்லியிருக்கிறாரா? ஏனென்றால் அந்தக் குழு அறிக்கை கொடுத்தபோது வேறு ஒரு உறுப்பினர்தான் எதிர்ப்பு அறிக்கை தாக்கல் செய்திருக்கிறாரே தவிர வேறு யாரும் எதிர்ப்பு அறிக்கை தாக்கல் செய்ததாகத் தெரியவில்லை.

தி.மு. கழகத்தைப் பொறுத்தவரை இந்த மசோதா காரணமாகத் தமிழகத்தில் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் பொது விநியோகத் திட்டத்திற்கு எந்த வகையிலும் ஊனம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலும்; யாருக்கும் பாதிப்பு கூடாது என்பதிலும்; வேளாண்மையைத் தொடர்ந்து மேம்படுத்தி வேளாண் பெருமக்களின் நலன் காத்து, அவர் தம் விளை பொருள்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய உரிய விலை கிடைத்திட வேண்டும் என்பதிலும்; மாநில உரிமைகள் பறிபோய் விடக் கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறது. அதேநேரத்தில் இந்த மசோதாவின் காரணமாகக் கிடைக்கக்கூடிய பயன்களையும் இழந்து விடக்கூடாது. ஒட்டு மொத்தமாக மாநில அரசுதான் இந்த மசோதாவினால் நடைமுறையில் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்துக் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். இந்த மசோதாவினால் தமிழ்நாட்டிற்குப் பாதகம் தான் ஏற்படும், சாதகம் ஏற்படாது என்பதில் ஜெயலலிதா உறுதியாக இருந்தால்; சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீட்டைத் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளாது என்று அறிவித்ததைப் போல, இந்த உணவுப் பாதுகாப்பு மசோதாவைப் பொறுத்தவரை, தமிழகம் ஏற்காது என்று அறிவித்து விடலாம். ஆனால் முதல் அமைச்சரே தன் கடிதத்தில் திருத்தங்கள் தான் தேவை என்று கூறியிருக்கிறார். அனைத்து அரசியல் கட்சிகளும் மத்திய அரசின் இந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றுதான் வலியுறுத்தி வருகிறார்களே தவிர; சட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று குரல் எழுப்பிடவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்!

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை மாநிலங்கள் மீது திணிக்காமல், அந்தந்த மாநிலங்களின் நிலைமைகளையொட்டிய செயலாக்கத்திற்கான விருப்புரிமையை வழங்கிட மத்திய அரசு முன்வர வேண்டும். இந்தியத் திருநாடு விடுதலை பெற்று 60 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்ட பிறகாவது, தேசிய அளவில்

உணவுக்கான உரிமையை வழங்கி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திட வேண்டும் என்ற எண்ணம் பிறந்திருப்பது ஆக்கபூர்வமானது. எனவே உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை முழுமையாக எதிர்த்திடாமல் - அப்படியே ஆதரித்தும் விடாமல் அவசர அவசியமான திருத்தங்களுடன் மாநிலங்களில் உள்ள நடைமுறைக்கு ஏற்பக் கொண்டுவர மத்திய அரசு முன்வர வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே இருக்கின்ற மாநில உரிமைகளுக்கு இம்மியளவும் பாதிப்பு ஏற்படாமல், இந்த உணவுப் பாதுகாப்பு மசோதாநிறைவேற்றப்பட்டால் மாத்திரமே திராவிட முன்னேற்றக் கழகம் அதனை ஆதரிக்கும்!

அன்புள்ள,

மு.க.

10-8-2013

3793. மத்திய அரசு தருவதை மாநில அரசு மறுப்பதா?

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், 5.6.2006 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில், சென்னைத் துறைமுகத்தையும் மதுரவாயலையும் இணைத்திட உயர்மட்டப் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை அனுமதித்திட வேண்டுமென கேட்டுக் கொண்டதை அடுத்து, மத்திய அரசு ஒப்புதல் அளித்ததோடு, பிரதமர் மன்மோகன்சிங் அவர்களே நேரில் வந்து 8.1.2009 அன்று முதலமைச்சராக இருந்த என் தலைமையில், அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

கழக ஆட்சியில் விரைவாக நடைபெற்று வந்த இந்தத் திட்டத்தைத் தொடரவிடாமல் அ.தி.மு.க. அரசு தடுத்துவிட்ட காரணத்தால்தான், இந்தப் பணிகளை மேற்கொண்டு வந்த "சோமா" நிறுவனம், தனக்கு நஷ்ட ஈடு தர வேண்டுமென்று கோரியது.

முக்கியமான இந்த நான்கு வழி பறக்கும் சாலைத் திட்டம் என்னதான் ஆயிற்று என்று சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.பொன்னாண்டஸ் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்ட நேரத்தில், "Banks were refusing to finance the project in the absence of clear-cut information from the State Government about its stand and a delay in clearing encroachments" என்று தெரிவித்திருக்கிறார். அதாவது மாநில அரசு அதன் நிலை பற்றித் தெளிவாகத் தெரிவிக்காததாலும், நில ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே ஏற்படும் தாமதத்தைப் போக்காததாலும் வங்கிகள் இந்தத் திட்டத்திற்காக நிதி அளிக்க மறுத்து வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்.

மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம் பற்றி தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்ட இயக்குனர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், "சம்பந்தப்பட்ட துறைகளிடம் இருந்து ஒப்புதல்பெற்ற பின், திட்டப் பணிகள் துவங்கப்பட்டன. ஆட்சி மாறிய பின், மாநில அரசின் துறைகளில் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. நில ஆர்ஜிதம் மற்றும் பாதிக்கப்பட்டோர்க்கான மறுவாழ்வுப் பணிகளில், மாநில அரசிடம் இருந்து தேவையான ஒத்துழைப்பு இல்லை. இதற்குக் காரணம் என்னவென்றும் தெரியவில்லை. இந்தத் திட்டத்தில் மாநில அரசு ஆர்வம் காட்டவில்லை. கடந்த ஜனவரியில், பொதுப் பணித்துறையின் நீர்ஆதார அமைப்பின், தலைமைப் பொறியாளர் ஒரு கடிதம் அனுப்பினார். அதில், சில பணிகளை மேற்கொள்ள, கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பெறவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இதில் எந்த நியாயமும் இல்லை. உள்நோக்கம் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது நலனுக்கு எதிராக உள்ளது. இந்தத் திட்டத்துக்கு, மாநில அரசு முட்டுக்கட்டை போடுவதுபோல உள்ளது. எனவே, தலைமைப் பொறியாளரின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும், அதற்குத் தடை விதிக்க வேண்டும்; மேம்பாலத் திட்டத்தைத் தொடர்ந்து அமல்படுத்தி, குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்க, மாநில அரசு ஒத்துழைப்பு அளிக்க உத்தரவிட வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்திகளைத் தொடர்ந்து கடந்த இரண்டு மூன்று நாட்களாக "டைம்ஸ் ஆப் இந்தியா", "இந்து", "தினகரன்", "தினத்தந்தி", "தினமணி", "தினமலர்" போன்ற நாளேடுகளில் 1,815 கோடி ரூபாய் மதிப்பிலான சென்னை துறைமுகம் - மதுரவாயல் எக்ஸ்பிரஸ் பறக்கும் சாலை திட்டத்தையே கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், செயலாக்கம் நிறுத்தப்பட்டு, அதனால் ஏற்படுத்தப்பட்ட தாமதத்திற்காகக் காண்ட்ராக்டர் அதிக இழப்பீடு கேட்பதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இப்படிப்பட்ட முடிவினை எடுக்கும் நிலையில் இருப்பதாகவும் தொடர்ந்து செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால் தமிழகத் தலைநகரிலே நிறைவேற்றப்பட வேண்டிய இவ்வளவு

பெரிய திட்டம் கைவிடப்பட்டு விடுமோ, பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்ட திட்டம் ஆயிற்றே, இந்தத் திட்டத்தின் மூலம் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டுத் தென்சென்னை, வடசென்னை, திருவள்ளூர் மாவட்டங்களுக்குப் பெரும் பயன் ஏற்படுமே என்று அ.தி.மு.க. அரசு கவலைப்படுவதாகவே தெரியவில்லை. ஏன் இங்கே ஒரு அரசு செயல்படுவதாகவே தெரியவில்லை.

எவ்வாறு சேது சமுத்திரத் திட்டத்திற்கு மூடு விழா நடத்த எண்ணுகிறார்களோ - எப்படிப் புதிய தலைமைச் செயலகக் கட்டிடத்தை மூன்றாண்டுக் காலமாக இழுத்து மூடி வைத்திருக்கிறார்களோ - பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக எழுப்பப்பட்ட பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை முறையாகப் பராமரிக்காமல் விட்டு வைத்திருக்கிறார்களோ - எப்படிச் செம்மொழி ஆய்வு நிறுவனத்தையும், பாவேந்தர் ஆய்வு நூலகத்தையும் சரியாக இயங்கவிடாமல் செய்திருக்கிறார்களோ - அதைப் போலவே இந்த மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டத்திற்கும் மூடு விழா நடத்திட அ.தி.மு.க. ஆட்சியினர் நினைக்கிறார்கள். இந்தச் செய்தியினை வெளியிட்ட "தினத்தந்தி" நாளேடே, "சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ரூ. 1,815 கோடியில் செயல்படுத்தப்பட்டு, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள துறைமுகம் - மதுரவாயல் எக்ஸ்பிரஸ் பறக்கும் சாலைத் திட்டம் முற்றிலும் கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பணிகளை மேற்கொள்வதில் உண்டான கால தாமதத்திற்கு காண்ட்ராக்டர் 872 கோடி ரூபாய் அளவுக்கு அதிக இழப்பீடு கேட்பதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்டத்தைக் கைவிடும் நிலைக்கு வந்துள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்குப் பிரதமர் மன்மோகன் சிங் அடிக்கல் நாட்டினார். 2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பணி தொடங்கியது. எக்ஸ்பிரஸ் சாலைக்கான ராட்சதத் தூண்கள் ஒவ்வொன்றாக எழுப்பப்பட்டன. மொத்தம் 889 தூண்களில் 120 தூண்கள் அமைக்கப்பட்டுவிட்டன. அதில் 15 தூண்களில் சாலை அமைப்பதற்கான மேற்பரப்பும் கட்டப்பட்டு விட்டது. இதற்கிடையே தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட

நிலையில், கூவம் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள 15 தூண்களும் ஆற்றில் நீரோட்டத் தன்மையைப் பாதிக்கும் என்று சொல்லி, தமிழக அரசு இந்தத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தடை விதித்தது."

"ஓராண்டு காலமாகப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. மொத்த திட்டப் பணியில் 30 சதவீதத்தை முடித்துவிட்டதாகவும், ரூ.500 கோடி செலவு செய்திருப்பதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. நெடுஞ்சாலை ஆணையத்திற்கு 872 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை வழங்க விருப்பமில்லை. எனவே இந்தத் திட்டத்தை முற்றிலும் கைவிட்டுவிடலாமா என்ற முடிவுக்குத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வந்துள்ளது. இதற்கான அறிவிப்பை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஓரிரு நாளில் வெளியிடும் அபாயம் உள்ளது"

"இந்தத் திட்டம் கைவிடப்பட்டால் ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அதோடு சென்னைத் துறைமுகத்தின் வருவாய் அடியோடு குறையும். தற்போது ஏற்றுமதி செய்வதற்கான கண்டெய்னர்களை தென் மாவட்டங்களிலிருந்து கொண்டுவரும் டிரக்குகள் சென்னை புறவழிச் சாலை, மதுரவாயல், மாதவரம், புழல், நூறடி சாலை வழியாகத் துறைமுகத்தை வந்தடைகின்றன. அதேபோல் வட மாவட்டங்களில் இருந்து வரும் டிரக்குகள், மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ரோடு, எண்ணூர் நெடுஞ்சாலை வழியாகத் துறைமுகத்திற்கு வருகின்றன. மீஞ்சூர், மாதவரம் சாலையில் போக்குவரத்து நெரிசல் காரணமாக இந்த டிரக்கு வண்டிகள் ஊர்ந்தபடிதான் செல்கின்றன. இதனால் போக்குவரத்து நெரிசல் பன்மடங்கு அதிகரிக்கிறது. மணலி நெடுஞ்சாலையில் இருந்து துறைமுகத்தை வந்தடைவதற்குச் சில நேரங்களில் டிரக்கு வண்டிகளுக்கு இரண்டு நாள்கூட ஆகிவிடுவதுண்டு. இதன் காரணமாகக் கால தாமதம் ஏற்படுவதுடன் எரி பொருளும் வீணாகிறது என்பது டிரக்கு வண்டி உரிமையாளர்களின் தொடர் குற்றச்சாட்டாகும். துறைமுகம் - மதுரவாயல் எக்ஸ்பிரஸ் சாலை தான் மேற்கண்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக

அமையும். இந்தத் திட்டம் கைவிடப்படும் அபாயம் குறித்து த்தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளிடம் கேட்டபோது, "உகந்த சூழ்நிலை வந்தால் இந்தத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப் படும்" என்று தெரிவித்தனர்" என்று "தினத் தந்தி" இவ்வாறு விரிவாக வெளியிட்டுள்ள செய்தியைத்தான் மற்ற நாளிதழ்களும் பக்கம் பக்கமாக எழுதிப் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்கும் நல்ல திட்டம் ஒன்று கைவிடப்பட்டு விடுமே; அதனால் சென்னை மாநகருக்குப் பேரிழப்பு ஏற்பட்டு விடுமே என்று பதற்றத்தை வெளியிட்டுள்ளன..

தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் இது பற்றிக் கூறும்போது, "It was the "motivated, tainted" action of the State Government which had led to the situation of stalling of the project work" என்று தெரிவித்திருக்கிறது. இந்தத் துறை சார்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவோடு இணைக்கப்பட்ட மற்றொரு ஆவணத்தில் தமிழகத்திலே உள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறை சார்பில் நிறைவேற்றப்படும் பல திட்டங்களுக்குத் தேவையான நிலத்தைப் பெறுவதில் எப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்து, அந்த இடர்ப்பாடுகள் தாமதமின்றித் தீர்க்கப்படாதவரை, தற்போதுள்ள திட்டங்களை நிறைவேற்று வது மிகவும் சிரமம் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாக "இந்து" நாளேட்டில் எழுதியிருக்கிறார்கள். இத்தகைய செயற்கையான பிரச்சினைகளால் தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் புதிய திட்டங்களை எடுத்துக்கொள்ளத் தயங்குகிறார்களாம். மேலும் தமிழகத்திற்குப் புதிய திட்டங்களை ஒதுக்குவது பற்றித் தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் கூறும்போது, "மாநில அரசு தனது ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு, அதன்படி, உதவிட முன்வராதவரையில், மாநிலத்தில் புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்க இயலாது" என்று தெரிவிப்ப தாகவும் அதே "இந்து" இதழ் எழுதியிருக்கின்றது.

மதுரவாயல் - துறைமுகம் சாலையை நம்பி, ஏராளமான நிறுவனங்கள் சென்னை புறநகர்ப் பகுதிகளில் தொழிற்சாலைகளைத் தொடங்கத் திட்டமிட்டு, அந்த நிறுவனங்கள் எல்லாம் தற்போது தங்கள் பணிகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சென்னைத் துறைமுகம்; திருப்பெரும்புதூர்

அருகே 3,600 கோடி ரூபாய் செலவில் மிகப் பெரிய "கண்டெய்னர் டெர்மினலை" அமைக்கத் திட்டமிட்டிருந்தது. மேலும் 500 கோடி ரூபாய் செலவில் மற்றுமொரு உலர் துறைமுகப் பணிக்கும் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது அந்த இரண்டு பணிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டதாம். இந்தச் செய்தியினை "இந்து" நாளிதழில் ஆனந்த் என்ற செய்தியாளர், "Two Chennai Port Trust Projects in Limbo" என்று எழுதியிருக்கிறார்.

சென்னை துறைமுகக் கழகத்தின் அதிகாரி ஒருவர், "The stoppage of Maduravoyal Project is ruining us. We will be losing crores of rupees every year" என்று கூறியிருக்கிறார். இந்தத் துறையின் மத்திய அமைச்சர் தம்பி ஜி.கே.வாசன் அளித்த பேட்டியில், "மதுரவாயல் சாலைத் திட்டம் மாநில அரசினால் தடை செய்யப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. துறைமுகத்திற்கும், மாநகரத்திற்கும் அதுஒரு முக்கியமான திட்டம். அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தும்படி மாநில அரசைப் பலமுறை கேட்டுக் கொண்டோம். அண்மையில் இந்தத் துறையின் மத்திய அரசு செயலாளர் மாநில தலைமைச் செயலாளரிடமும் இதுபற்றி விவாதித்தார்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்திற்கு அ.தி.மு.க. அரசு விதித்த தடையை நீக்கக்கோரி மத்திய அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. அந்த வழக்கு 12-8-2013 அன்று விசாரணைக்கு வந்தபோது, நீதியரசர் அகர்வால், நீதியரசர் சத்யநாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு **"இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்யத் தமிழக அரசுக்குப் பலமுறை அவகாசம் கொடுக்கப்பட்டது. மீண்டும் மீண்டும் அவர்கள் அவகாசம் கேட்டு வருகின்றனர். இது கண்டிக்கத் தக்கது. வரும் 19ஆம் தேதி இறுதிக் கெடு விதிக்கப்படுகிறது. அன்று அரசு பதில் அளிக்க வேண்டும். தவறினால் நாங்களே முடிவெடுப்போம்"** என்று கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

சென்னை துறைமுகக் கழகத்தின் தற்போதைய தலைவர், அதுல்ய மிஸ்ரா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் கூறும்போது, "The port will take a big hit if the proposed 19 km Port - Maduravoyal project is to be dropped. Any more delay or cancellation of the project would put

in jeopardy projects worth Rs.4,000 crore the port had embarked on, keeping the elevated highway in mind. It was the expected lifeline for the port. It was meant to be the solution for congestion faced by containers".

"The project was compared to other similar projects such as Mumbai trans-harbour project and the Hosur Road elevated expressway. Besides decongesting city roads, the project was to reduce the distance travelled by container trucks from 52 km to 33 km." என்று மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரே வேதனையோடு தெரிவித்திருக்கிறார்.

மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் பற்றி காவல்துறை அதிகாரி ஒருவர் கூறியதாக "டைம்ஸ் ஆப் இந்தியா" (10-8-2013) வெளியிட்ட செய்தியில் இந்தத் திட்டம் செயலாக்கம் பெற்றால் பல உயிர்களைக் காப்பாற்ற முடியும்; ஒவ்வொரு நாளும் தற்போது 30 விபத்துகள் அங்கே நடைபெறுகின்றன; இந்தப் புதிய திட்டம் வருமானால், இந்த விபத்துக்களைத் தவிர்க்க முடியும்." என்று தெரிவித்துள்ளது.

இதைப் போலவே வியாபார நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் துறைமுகத்திற்குச் செல்வதற்கும், தங்கள் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் இந்தப் புதிய திட்டம் மிக மிக அத்தியாவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவ்வாறு சகல தரப்பினரும், அதிகாரிகளும், அனைத்து நாளேடுகளும், மத்திய அரசும் இந்தப் புதிய திட்டம் எவ்வளவு அவசர அவசியமானது என்று சொல்கின்ற நேரத்தில்; தமிழக முதல் அமைச்சரின் முடிவு காரணமாகப் பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்ட ஒரு திட்டம் இன்றைக்கு முடங்கிக் கிடக்கின்றது. இந்தியாவின் பிரதமரும், தமிழக முதல் அமைச்சராக இருந்த நானும் பங்கேற்று இத்திட்டத்தைத் தொடங்கினோம் என்ற காரணத்திற்காக இந்தச் சாலைத் திட்டம் நிறுத்தப்பட்டுத் தற்போது உயர் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று, அதற்குத் தமிழக அரசின் சார்பில் பதில் அளிக்கத் தக்க அடிப்படை இல்லாததால் தாமதிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் இத்தகைய வெகு மக்கள் விரோதப் போக்கினைக் கண்டிக்கும் வகையிலும், மதுரவாயல் - துறைமுகம் சாலைப் பணிகளுக்குத் தமிழக அரசு நியாயமின்றி விதித்துள்ள தடையை உடனடியாக

நீக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்திற்காக மாநில அரசு தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வகையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தென்சென்னை, வடசென்னை, திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டக் கழகங்களின் சார்பில் 17-8-2013 அன்று கழக துணைப் பொதுச்செயலாளர் வி.பி.துரைசாமி அவர்கள் தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர் ஜெ.அன்பழகன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் ஆர்.டி.சேகர், எஸ்.சுதர்சனம் ஆகியோர் முன்னிலையில் நெற்குன்றத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. மக்களின் நலனைக் கருதி கழகம் தொடர்ந்து நடத்தி வரும் பல்வேறு அறப்போராட்டங்களைப் போலவே, மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டத்திற்காகத் தி.மு.கழகம் நடத்தவிருக்கும் இந்த அறவழிப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திடக் கழகத் தோழர்களும், பொதுமக்களும், தோழமைக் கட்சியினரும், வணிகப் பெருமக்களும் முன்வர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

14-8-2013

3794. பெரியார், காமராசர் பெயரை மறந்த சுதந்திர நாள் உரை!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றைய தினம் (15-8-2013) செயிண்ட் ஜார்ஜ்கோட்டை முகப்பில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து "விடுதலை நாள் விழா" உரையாற்றியிருக்கிறார். அந்த உரையில் முதலமைச்சர் பல்வேறு புதிய அறிவிப்புகளையெல்லாம் செய்யப் போகிறார்; உரை தயாராகிக் கொண்டிருக்கிறது; டெல்லியில் பிரதமர் ஆற்றப் போகிற உரையை மிஞ்சக் கூடிய அளவிற்கும், இந்தியாவையே திரும்பிப் பார்த்திடச் செய்திடும் வகையிலும் வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு அதிரடியான முன் அறிவிப்புகளையெல்லாம் கொண்டு, அவரது உரை அமையும் என்றெல்லாம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது; அ.தி.மு.க. ஆதரவுப் பத்திரிகைகளெல்லாம் செய்தி வெளியிட்டு மக்களின் ஆர்வத்தைத் தூண்டின. ஆனால் முதலமைச்சரின் உரையைப் பார்க்கும்போது; கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் அரசுத் துறைகளில் என்னென்ன பணிகள் ஆற்றப்பட்டதாகக் கடந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டதோ, அதன் தொகுப்பாகத்தான் இருக்கிறதே தவிர வேறல்ல; உரையின் முடிவில் மட்டும் ஒரேயொரு அறிவிப்பு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தி அறிவித்திருக்கிறார்.

ஆனால் இந்த நிகழ்ச்சிக்காக ஆளுங்கட்சிக்கு வேண்டிய நாளேடுகளில் எல்லாம் ஒரு பக்க விளம்பரங்கள்! அதிலும் சில நாளேடுகளுக்கு முதல் பக்கத்திலேயே ஒரு பக்க விளம்பரங்கள்! கழக ஆட்சிக் காலத்தில் எல்லாம் இந்த நிகழ்ச்சிக்காக கால் பக்கத்தில் தான் விளம்பரம் வெளியிடுவார்கள். தற்போது வெளியிடப்பட்டுள்ள அந்த ஒரு பக்க விளம்பரத்திலே என்ன செய்தி தெரியுமா? எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்த அதாவது

"தமிழக முதல் அமைச்சர் தலைமைச் செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுவார்" என்ற அறிவிப்பைத் தவிர அதிலே வேறு ஒன்றும் இல்லை. இந்த ஒரு பக்கத்தோடு விளம்பரம் முடியவில்லை. மற்றொரு அரைப் பக்கத்திலே முதல் அமைச்சரின் முழு உருவப் படத்தோடு மற்றுமொரு விளம்பரம். அது என்ன தெரியுமா? போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்ச்சி. எந்த ஆண்டிலும் இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததில்லை. திடீரென்று இந்த ஆண்டு அப்படியொரு நிகழ்ச்சி. அதற்கு அரைப் பக்க விளம்பரங்கள்! டெல்லியில் குடியரசுத் தலைவர் ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்ச்சி நடைபெறும்போது, நம்முடைய மாநிலத்தில் அப்படியொரு நிகழ்ச்சி இல்லாமல் இருக்கலாமா என்பதற்காக திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி; நிகழ்ச்சி நடைபெற்றது இரண்டு நிமிடம்; அதற்கு அனைத்து ஏடுகளிலும் அரைப் பக்க விளம்பரங்கள். மக்களுடைய வரிப்பணம்தானே? இரண்டு பக்கங்களுக்கு விளம்பரம் கொடுத்தால்கூட யாரும் கேட்க முடியுமா?

இந்த ஆண்டு இந்தப் புதுமைகள் மாத்திரமல்ல; ஒவ்வொரு ஆண்டும் கோட்டையிலே கொடியேற்று கின்ற நிகழ்ச்சி காலை 8.30 மணி அளவிலேதான் நடைபெறும். ஆனால் என்ன காரணத்தாலோ கொடியேற்றுகின்ற நிகழ்ச்சி காலை 9 மணிக்குத்தான் நடைபெற்றது. இதற்கு முன்பு ஒருமுறை, அதுவும் அ.தி.மு.க. ஆட்சியிலேதான் "ராகு காலம்" என்பதால், அந்த நேரத்தில் முதலமைச்சர் கொடியேற்றுவது சரியல்ல என்று பஞ்சாங்கப்படி நல்ல நேரம் பார்த்து மாற்றப்பட்டதாகக் கூறப்பட்டது.

கோட்டையிலே கொடியேற்றுகின்ற நேரத்தில் மாத்திரம் மாற்றம் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் மாலையில் தமிழக ஆளுநர் முக்கியப் பிரமுகர்களுக்கு அவருடைய இல்லத்தில் வரவேற்றுத் தேநீர் விருந்தளிப்பார். அதிலும் இந்த ஆண்டு முதன்முறையாக மாற்றம். மாலையிலே நடைபெறும் தேநீர் விருந்தை, காலை 11 மணிக்கு என்று மாற்றிவிட்டார்கள். அதற்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்த விருந்தில், பிரதான எதிர்க்கட்சியான

தே.மு.தி.க., தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், காங்கிரஸ், பா.ம.க., மனிதநேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்கவில்லை என்றும் தே.மு.தி.க. அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் மா.பா. பாண்டியராஜன், சுந்தரராஜன் ஆகியோர் பங்கேற்றனர் என்றும் "தினமணி" எழுதியுள்ளது.

25-12-2011 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு முக்கிய அறிவிப்பினை வெளியிட்டார். அரசு அலுவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்கள் மக்களுக்கான நற்பணி ஆற்றுவதிலும், அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைய அரசு ஊழியர்கள் கையாண்ட புதிய உத்திகள், முயற்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மிகச் சிறந்த அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று "நல் ஆளுமை விருது" என்ற ஒன்றினை வழங்க முதலமைச்சர் ஜெயலலிதா முடிவெடுத்து, அந்த அறிவிப்பினை வெளியிட்டார். 2 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், பதக்கமும் ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று முதல்வரால் இது வழங்கப்படும். தமிழக அளவில் முதல்முறையாக அரசு நிர்வாகத்தில் ஊழியர்களுக்கு இடையே புதைந்துள்ள திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக உருவாக்கப்பட்ட இந்த முன்மாதிரித் திட்டத்துக்கு, விருதுகளுக்காக 6 லட்ச ரூபாயும், அவற்றைத் தேர்ந்தெடுக்கவும், ஆவணப்படுத்தவும் 8 லட்சம் ரூபாயும் என மொத்தம் ஆண்டுக்கு 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி முதலமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார் என்று ஏடுகளில் எல்லாம் செய்தி வந்தது.

ஆனால் 2012ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று, முதலமைச்சர் அறிவித்ததையொட்டி யாருக்கும் இந்த விருதுகள் வழங்கப்படவில்லை என்று "தினமணி"யே குறிப்பிட்டிருந்தது. 2013ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்றோ எந்தவொரு அரசு அலுவலருக்கும் இரண்டாவது ஆண்டாக இந்த விருது வழங்கப்பட வில்லை. ஆனால் மூன்று அரசு நிறுவனங்களுக்கான நல் ஆளுமை விருது வழங்கப்பட்டதாகவும், அந்த விருது தனி நபருக்கு இந்த ஆண்டும் இல்லை என்றும் செய்தி வந்துள்ளது. ஒருவேளை முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தது, எந்த அலுவலருக்கு

ஞாபகம் இருக்கப் போகிறது என்று நினைத்து விட்டார்களோ என்னவோ?

அடுத்து, சுதந்திர தின விழா போன்ற முக்கியமான விழாக்களில் உரையாற்றும்போது, "புரோடகால்" என்பது மிகவும் முக்கியமாகும். அதுவும் முதலமைச்சர் போன்ற பொறுப்புகளில் இருப்பவர்கள் அதில் கவனமாக இருக்க வேண்டும். முதல் அமைச்சர் இந்த முறை உரையாற்றும்போது பிரமுகர்களை விளிக்கையில், பேரவைத் தலைவரை விளித்து விட்டு, அதற்கடுத்து அமைச்சர்களை விளித்து விட்டு, அதற்கடுத்துதான் சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதியரசர் அவர்களே என்று விளித்திருக்கிறார். "புரோடகால்"படி, தலைமை நீதிபதியை விளித்து விட்டுத்தான் அமைச்சர்களை விளித்திருக்க வேண்டும். இனியாவது கவனமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதையெல்லாம் சொல்கிறேன். கடந்த ஆண்டு இதைவிட மோசம்; பேரவைத் தலைவரை அழைத்து விட்டு, அமைச்சர்களை விளித்து விட்டு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை விளித்து விட்டு, அதற்குப் பிறகுதான் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசரை விளித்தார். இதைக் கூடக் கவனிக்காமல் முதல் அமைச்சரின் உரை தயாரிக்கப்பட்டு, அவரைப் படிக்க வைத்திருக்கிறார்களே என்றுதான் வேதனையாக உள்ளது.

நேற்றையதினம் முதலமைச்சர் ஜெயலலிதா ஆற்றிய உரை, கடந்த ஆண்டு அவர் ஆற்றிய சுதந்திர உரையின் மறு பிரதியாகவே ஒருசில மாற்றங்களோடு அமைந்துள்ளது என்று கருதும்படியாக உள்ளது. உதாரணமாக கடந்த ஆண்டு முதல் அமைச்சர் உரையில், தொடக்கத்தில், "ஆங்கிலேய அடிமைத்தளையை தகர்த்தெறிய நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு மகத்தானது. நெற்கட்டும் செவல் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், திருப்பூர் குமரன், மருது சகோதரர்கள், வேலுநாச்சியார், வாஞ்சிநாதன், தில்லையாடி வள்ளியம்மை, வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதி, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், தீரர் சத்தியமூர்த்தி, சுப்ரமணிய சிவா, தீரன் சின்னமலை, மாவீரன் அழகு முத்துக்கோன், பெருந்தலைவர் காமராஜர், தந்தை பெரியார் என இந்திய விடுதலைக்காகப்

போராடிய எண்ணற்ற தியாக சீலர்களை போற்றி வணங்குகிறேன்” என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆண்டு நேற்றையதினம் முதலமைச்சர் ஆற்றிய உரையிலும், “சுதந்திரத்தைப் பெற ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தமிழகத்திலிருந்து முதலில் குரல் கொடுத்தவர்கள் பாளையக்காரர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இவர்களில் வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவர், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை, வ.உ.சிதம்பரம் பிள்ளை, மகாகவி சுப்பிரமணிய பாரதியார், திருப்பூர் குமரன், தீரர் சத்தியமூர்த்தி, சுப்ரமணிய சிவா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், அயல்நாட்டு வீராங்கனை அன்னிபெசன்ட் அம்மையார், மாவீரன் வாஞ்சிநாதன் என எண்ணற்ற தலைவர்கள் ரத்தம் சிந்தியும் உயிரைக் கொடுத்தும் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தை நமக்குப் பெற்றுத் தந்துள்ளனர்” என்று பேசியிருக்கிறார்.

சுதந்திர தின உரை என்பதால் அதற்காகப் பாடுபட்டவர்களின் பெயரைச் சொல்ல வேண்டு மென்பதற்காக கடந்த ஆண்டு சொல்லப்பட்டதையே இந்த ஆண்டும் சொல்ல நேர்ந்தது என்று சமாதானம் கூறலாம். ஆனால் எனக்குள்ள வருத்தம் எல்லாம் கடந்த ஆண்டு இடம் பெற்றிருந்த பெருந்தலைவர் காமராஜர், தந்தை பெரியார் போன்ற முக்கியமான தலைவர்களின் பெயர்கள் இந்த ஆண்டு முதல்வரது உரையில் விடுபட்டது வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறோ என்றுதான் எண்ணிடத் தோன்றுகிறது.

தொடர்ந்து முதலமைச்சரின் கடந்த ஆண்டு உரையிலும், இந்த ஆண்டு உரையிலும் பல்வேறு துறைகளின் மூலமாக இந்த அரசின் சார்பில் செய்யப்பட்ட தாகச் சொல்லப்படும் திட்டங்களின் தொகுப்புகள் இடம் பெற்றுள்ளன. பொதுவாக விடுதலை நாள் விழா உரைகள் ஒவ்வொரு ஆண்டும் ஆட்சியின் சார்பில் செய்யப்பட்ட சாதனைகளைத் தொகுத்து கூறுகின்ற ஒன்றாக அமைவது இயற்கைதான். அதைப்போலத்தான் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நிதிநிலை அறிக்கையின் போதும், மானியக் கோரிக்கைகளின் மீதும் நடைபெற்ற விவாதத்தின்போது கூறப்பட்டவைகள் தான் பெரும்பாலும் முதலமைச்சரின் இந்த ஆண்டு சுதந்திர தின உரையிலும் இடம் பெற்றுள்ளன.

குறிப்பாக 21-3-2013 அன்று பேரவையில் படிக்கப்பட்ட அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 49இல் 2011ஆம் ஆண்டு, "இந்த அரசு நிர்வாகப் பொறுப்பேற்ற பின்னர் 51,757 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்" என்று கூறப்பட்டுள்ளது. அதையேதான் முதலமைச்சரின் நேற்றைய உரையிலும், "கடந்த இரண்டு ஆண்டுகளில் 51,757 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்" என்று சொல்லியிருக்கிறார். இதிலிருந்து இந்த ஐந்து மாத காலத்தில் ஒரு ஆசிரியரைக்கூட இவர்கள் ஆட்சியிலே நியமிக்க வில்லை என்பதை முதல்வரின் உரையிலிருந்தே நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

கடந்த ஆண்டு பள்ளிக் கல்வித்துறை சார்பில் வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம்

3-4இல் 2011-2012இல், 49,369 ஆசிரியர் பணி இடங்களையும், 2012-2013இல் 13,756 ஆசிரியர் பணி இடங்களையும் நிரப்ப ஆணையிட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த இரண்டையும் கூட்டினாலே, 63,125 ஆசிரியர் பணி இடங்கள் என்றாகிறது. ஆனால் 51,757 ஆசிரியர்கள் என்று முதலமைச்சர் பேசியிருக்கிறார். எனவே ஆணையிட்ட இடங்களைக் கூட இன்னும் பூர்த்தி செய்யவில்லை என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் 2011-2012 என்று கூறும்போது, 2011ஆம் ஆண்டு மே திங்கள் வரை தி.மு.கழக ஆட்சி தான் தமிழகத்திலே இருந்தது என்பதையும், அந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் காரணமாகத்தான் 49,369 ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப முடிந்திருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். அதைக் கழித்து விட்டால், இந்த அரசின் முயற்சி காரணமாக வெறும் 2,388 ஆசிரியர்களை மட்டுமே புதிதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றுதான் முடிவுக்கு வர வேண்டியுள்ளது. இதுகுறித்து உண்மை நிலையை அரசுதான் தெளிவுபடுத்திட வேண்டும்.

மற்ற துறைகளின் மூலமாகச் செய்யப்பட்டு வருவதாகச் சொல்லிக் கொள்ளும் பல திட்டங்களைத்தான் அந்த உரையிலே முதலமைச்சர் வரிசைப்படுத்தி யிருக்கிறார்.

"சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் 1000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது"

என்று கடந்த ஆண்டு விடுதலை நாள் விழா உரையிலே குறிப்பிட்ட அதே முதலமைச்சர் நேற்றைய உரையிலும், "சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த 500 ரூபாய் ஓய்வூதியத்தை

1000 ரூபாயாக எனது அரசு வழங்கி வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதே வகையில்தான் கடந்த ஆண்டு கூறப்பட்டவைகளைத்தான் இந்த ஆண்டிலும் மீண்டும் நினைவுபடுத்தியிருக்கிறார்.

அடுத்து முதலமைச்சர் தனது உரையில் "கச்சத் தீவில் நமக்குள்ள உரிமையை நாம் நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று பேசியிருக்கிறார். அதைத்தான் மாலைப் பத்திரிகை ஒன்று கூட முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. இதேபோல்தான் 1991 ஆம் ஆண்டு முதலமைச்சர் ஜெயலலிதா பேசிய உரையை அனைத்து நாளேடுகளும் வெளியிட்டபோது அதற்குத் தலைப்பு "கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்று முதலமைச்சர் ஜெயலலிதா சூளுரை" என்பதாகும். இருபதாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அதற்குப் பிறகு மூன்று முறை முதலமைச்சராக இருந்துவிட்டார். 15-8-1991 அன்று ஜெயலலிதா என்ன பேசினார்? "கச்சத் தீவைத் திரும்பப் பெற மத்திய அரசுடன் வாதாடவும், தேவை ஏற்பட்டால் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது" என்று முழங்கிய ஜெயலலிதாதான், தற்போது "கச்சத் தீவில் நமக்குள்ள உரிமையை நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்று பேசியிருக்கிறார்.

இறுதியாக முதலமைச்சர் விடுதலை நாள் விழா உரையில் செய்துள்ள ஒரே அறிவிப்பு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தையும், குடும்ப ஓய்வூதியத்தையும் ஓரளவிற்கு உயர்த்தியிருப்பதுதான்! அதைக்கூட அவர் கடந்த ஆண்டு உரையிலிருந்துதான் "காப்பி" அடித்திருக்கிறார். ஆமாம், கடந்த ஆண்டு அவர் ஆற்றிய உரையிலும் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கான ஓய்வூதியத்தையும், குடும்ப ஓய்வூதியத்தையும் ஓரளவுக்கு உயர்த்தினார். இந்த ஆண்டு அதைவிட மேலும் உயர்த்தியிருக்கிறார். எனவே இதுகூட வழக்கமாகச் செய்யப்பட்டு வரும் அறிவிப்புதான்.

ஆக மொத்தத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட முதல் அமைச்சரின் சுதந்திர தின உரை, எப்படி தற்போது விலை மிகவும் உயர்ந்துள்ள வெங்காயத்தை உறிக்க உறிக்க அதில் ஒன்றும் இருக்காதோ, அது போலவே இந்த உரையிலும் ஊன்றிப் படிக்கப் படிக்க உப்பும் இல்லை, இனிப்பும் இல்லை, வெறும் காரம் மட்டுமே இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் வெங்காயத்தை உறிக்க உறிக்கக் கண்ணீர் வருவதைப்போல, இந்த உரையைப் படித்தாலும், நாட்டு மக்களின் நிலையை நினைத்துக் கண்ணீர்தான் வரும்!

அன்புள்ள,

மு.க.

17-08-2013

3795. இலங்கையை, இந்தியா இனியாவது புரிந்துகொள்ளுமா?

உடன்பிறப்பே,

இலங்கையில் நடைபெறும் "காமன்வெல்த்" நாடுகளின் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தி நேற்றையதினம் நான் வெளியிட்ட அறிக்கையைப் படித்திருப்பாய்! அதில் "இலங்கை விடுதலை அடைவதற்கு முன்பும், விடுதலை அடைந்த பின்னரும்; பண்டித நேரு, அன்னை இந்திரா அம்மையார், இளந்தலைவர் இராஜீவ் ஆகியோர் காலத்திலும்; ஈழத் தமிழர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட எந்த ஒப்பந்தத்தை யும் நிறைவேற்றாமல் அவற்றை மீறி, சர்வதேசக் கண்ணோட்டத்தில் நம்பகத்தன்மையை முழுவதுமாய் இழந்து நிற்கிறது இலங்கை" என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். அதுகுறித்த வரலாற்று ரீதியான நிகழ்வுகளை நினைவு படுத்தவே இந்தக் கடிதம்.

1920ஆம் ஆண்டு முதல் இந்தியாவிலிருந்து மலையாளிகள் கொழும்புக்குச் செல்லத் தலைப்பட்டு, பல்வேறு பணிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். 1920இல் 1000 என்ற அளவிற்கு இருந்த மலையாளிகள் 1930இல் 30 ஆயிரம் என்ற அளவிற்குப் பெருகினர். 1935இல் மலையாளிகளுக்கு எதிராகச் சிங்களவர்கள் குரல் கொடுத்தனர். சிங்களவரின் வேலை வாய்ப்பை மலையாளிகள் கெடுப்பதாக ஏ.இ. குணசிங்கா பேசினார். 1939இல் கொழும்பு சென்ற பொதுவுடைமைக் கட்சித் தலைவர் ஏ.கே. கோபாலன் இடதுசாரிகளிடையே பிணைப்பை ஏற்படுத்த முயன்றார். 1-5-1939 அன்று வெள்ளவத்தையில் நூற்பாலை ஒன்றில் அவர் உரையாற்றியபோது சிங்களவர் குழப்பம் ஏற்படுத்தினர். இவற்றின் விளைவாக, 1940களில் மலையாளிகள் கொழும்பை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

அதே 1939இல் 15 ஆயிரம் தமிழரை இந்தியாவுக்குத்

திருப்பி அனுப்புமாறு ஏ.ஈ. குணசிங்கா முன்மொழிந்ததை, தமிழ் உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, இலங்கை சட்டசபை தீர்மானமாக்கியது. அரசுப் பணிகளில் இருந்த தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்களை நீக்குமாறு டி.எஸ். சேனநாயகா முன்மொழிந்ததை, தமிழ் உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி சட்டசபை தீர்மானமாக்கியது.

26-7-1939 அன்று கொழும்பு காலிமுகத் திடலில் நேரு பேசிய பொதுக் கூட்டத்தில் குழப்பம் ஏற்படுத்த, ஏ.ஈ. குணசிங்கா தலைமையில் சிங்களவர்கள் புகுந்து எதிர் முழக்கங்களை எழுப்பினர். சிங்களவர்களின் இந்தச் சலசலப்பைக் கண்டு நேரு அஞ்சவில்லை. மேடையை விட்டு இறங்கி, குழப்பம் ஏற்படுத்த முயன்ற குண்டர்களை நோக்கிச் சென்றார். கூட்டத்தில் ஏற் படுத்தப்பட்ட குழப்பத்தின் விளைவாக நேருவால் தொடர்ந்து பேச இயலாமல் போய்விட்டது. - 1987இல் இராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்பாட்டில் கையொப்பமிட்ட இராஜீவ் காந்தி புறப்படுமுன், குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த மரியாதை அணிவகுப்பில், கடற்படையைச் சேர்ந்த சிங்களச் சிப்பாய் ஒருவன் துப்பாக்கிக் கட்டையால் இராஜீவ் காந்தியைத் தாக்கினான். காயங்களின்றி இராஜீவ் காந்தி தப்பினார். ராஜீவ் காந்தியைத் தாக்கிய அந்தக் கடற்படைச் சிப்பாய் அண்மையில் இரண்டு மாதங்களுக்கு முன்பு அளித்த ஒரு பேட்டியில், தான் இராஜீவ் காந்தியைத் தாக்கியதற்காக வருத்தப்படவில்லை என்று பெருமையாகக் கூறினான் என்றால், எந்த அளவிற்குச் சிங்களவர் உள்ளத்தில் இந்தியர்கள் மீது வெறுப்புணர்வு வேரூன்றிப் பரவி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

2000ஆம் ஆண்டு முதலாக நார்வே நாடு முன்னெடுத்து, அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, 2002ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்பாடும் போர் நிறுத்த உடன்பாடும் ஏற்பட்டன.

2008 ஜனவரி 8ஆம் நாள் இலங்கை அரசு இந்த உடன்பாட்டை ஒருதலைப்பட்சமாக முறித்தது. நார்வே சார்ந்த நடுநிலையாளரையும் போர் நிறுத்தக் கண்காணிப்பாளரையும் சிங்கள அரசு இலங்கையை விட்டு வெளியேற்றியது.

தமிழருக்கு உறுதிமொழிகளை வழங்குவது, தமிழரோடு உடன்பாட்டில் ஒப்பமிடுவது, பின்னர் உடன்பாட்டில் இருந்து விலகுவது, அதை மதிக்காமல் மீறி நடந்து கொள்வது என்பது சிங்களவர்களின் பாரம்பரியமான பழக்கமாக இருந்து வருகிறது. இதனால் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே உறவுகள் மோசமடைவது மட்டுமன்றி, இந்த இரு இனங்களுக்கிடையே நல்லெண்ணமும் இணக்கமும் ஏற்படுவது குதிரைக் கொம்பாகவே உள்ளது.

1925ஆம் ஆண்டு முதலே, சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் செய்யப்பட்ட உடன்பாடுகள் ஒவ்வொன்றையும் மதிக்காமல் மிதித்து மீறிய துரோக வரலாறு சிங்களவர்க்குச் சொந்தமானது. அந்த விவரத்தையும் இங்கே சுருக்கமாகத் தருகிறேன். - 1925ஆம் ஆண்டு சூன் 28ஆம் நாள் இலங்கைத் தமிழர் மகாசன சபை சார்பாக வைத்திலிங்கம் துரைசாமியும், இலங்கைத் தேசிய காங்கிரசின் ஆட்சிக்குழு சார்பாக சி.ஈ. கொரியாவும் யாழ்ப்பாணத்தில் கையெழுத்திட்ட "மகேந்திரா உடன்பாட்டை" சிங்களவர் ஒருதலைப்பட்சமாக முறித்தனர்.

பிரிட்டிஷார் வழங்கிய அரசியலமைப்பில் உள்ள சிறுபான்மையினர் பாதுகாப்புக்குரிய 29ஆம் பிரிவுக்கு முரணாக, 1948 இலங்கைக் குடியுரிமைச் சட்டம், 1949 இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் இரண்டையும் இயற்றி, மலையகத் தமிழர் பத்து இலட்சம் பேரின் குடியுரிமையை சிங்களவர் பறித்தனர்.

1930களில் இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்களமும் தமிழும் ஆட்சிமொழியாக வேண்டும் எனப் பேசியவர் ஜெயவர்த்தனா. 1954இல் கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் சிங்களத்தையும், தமிழையும் ஆட்சிமொழியாக்குவேன் எனச் சூளுரைத்தவர் பிரதமர் ஜான் கொத்தலாவலை. இந்த இருவரும் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி, அவர்கள் கொடுத்த உறுதிமொழிக்கு மாறாக, 1955இல் களனி என்ற இடத்தில் நடத்திய கட்சி யின் மாநாட்டில் "சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி" என்று தீர்மானம் இயற்றியது.

சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாகப் பிரிட்டிஷார் வழங்கிய அரசியல் அமைப்பின் 29வது பிரிவிற்கு முரணாகச் "சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி" எனும் சட்டத்தை 1956 சூன் 5ஆம் நாள்

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியவர், இலங்கைச் சுதந்திரக் கட்சியைச் சார்ந்த பிரதமர் பண்டார நாயகா.

சூலை 26ஆம் நாள் செல்வநாயகத்துடன் பண்டாரநாயகா ஏற்படுத்திய பிரதேச சபைகள் அமைக்கும் உடன்பாட்டை, 1958 மே மாதத்தில் சிங்களத் தீவிரத் தேசியவாதிகளின் தொல்லை தாங்காமல் ரத்து செய்தவர் அதே பிரதமர் பண்டார நாயகா.

ஐந்து இலட்சம் மலையகத் தமிழரின் விருப்பத்தைக் கேட்காமலேயே, 1964இன் சிறீமாவோ சாஸ்திரி உடன்பாட்டை மதிக்காமல், மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தியவர் பிரதமர் சிறீமாவோ பண்டார நாயகா.

1965 மார்ச் 25ஆம் நாள் செல்வநாயகத்துடன் எட்டிய அதிகாரப் பகிர்வு உடன்பாட்டை, சிங்களத் தீவிரத் தேசியவாதிகளின் எதிர்ப்பு ஊர்வலங்களுக்குப் பயந்து (அதில் 8-1-1966 அன்று புத்தபிக்கு ஒருவர் கொல்லப்பட்டார்) ரத்து செய்தவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த பிரதமர் டட்லி சேனநாயகா.

தமிழர்களின் பங்களிப்பின்றி, பிரிட்டிஷாரின் ஒப்புதல் இன்றி, ஒருதலைப்பட்சமாகக் குடியரசு என இலங்கையை அறிவிக்கும் அரசியலமைப்பை 1972 மே 22இல் உருவாக்கியவர் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயகா. ஒரு மொழி இருநாடு, இரு மொழி கள் ஒரு நாடு எனச் சோசலிசவாதியாய் 1956இல் நாடாளுமன்றத்தில் பேசிய கெல்வின் ஆர்.டி. சில்வா, பின்னர் சிங்கள இனவெறியராகிப் புத்த மதத்துக்கு முதலிடம், சிங்களமே ஆட்சி மொழி என ஆட்சியில் தமிழர் பங்கு பெற முடியாமல் அரசியல் அமைப்பு சாசனத்தைத் தயாரித்தார்.

ஆட்சி அதிகாரம் கொண்ட குடியரசுத் தலைவர் என்ற ஆட்சி முறையைப் புகுத்திய 1978இன் அரசியலமைப்பைத் தயாரித்தவர் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. சிங்கள அரசுக்கு நெருக்கமான வர்கள்தான் 1981இல் அறிவுக் களஞ்சியமான யாழ்ப்பாண நூலகத்தைக் கொளுத்தினர். 1983இல் இனக் கலவரத்தை அரசே திட்டமிட்டு நடத்தியதால் தமிழர் பல்லாயிரக்கணக்கில் நாட்டை விட்டு ஓடினர்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் தூதுவர் 3-1-1984 முதலாகக் கொழும்புக்குப் பலமுறை சென்று அரசுடனும் தமிழர் தரப்புடனும் கலந்து தயாரித்த வரைவுகளை குடியரசுத்

தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, அனைத்துக் கட்சி மாநாட்டின் பார்வைக்கு அனுப்பி, அம்மாநாடு தந்த கருத்துரைகளை முற்றிலும் புறக்கணித்து (26 ஆகஸ்ட் 1984) பிரதமர் இந்திரா காந்தியின் அமைதி முயற்சியை முறியடித்தார்.

பிரதமர் இராஜீவ் காந்தி கூட்டிய திம்புப் பேச்சு வார்த்தைகள் இலங்கை அரசின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமையால் தோல்வி கண்டன (17 ஆகஸ்டு 1985).

1986 சூன் 25இல் கொழும்பில் அனைத்துக் கட்சி மாநாடு, 18 நவம்பர் 1986இல் பெங்களூருவில் இராஜீவ் - ஜெயவர்த்தனா உச்சி மாநாடு யாவும் இலங்கை அரசின் பிடிவாதக் கொள்கையால் தோல்வி கண்டன.

1987 சூலையில் இராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்பாடு கொழும்பில் ஒப்பமிடப்பட்டது. இலங்கையின் வட கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் மரபு வழித் தாயகம் என்ற கொள்கை அந்த உடன்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வடகிழக்கு மாகாணங்கள் ஒரே ஆட்சி அலகாக இணைந்து, ஒரே மாகாண சபையின்கீழ், ஒரே ஆளுநர், ஒரே முதல்வர், ஒரே அமைச்சரவையின்கீழ் இயங்கும் என உடன்பாடு ஏற்றுக் கொண்டது.

இராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்பாட்டின் விளைவாக மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கும் இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தம் 14 நவம்பர் 1987இல் அமைந்தது. தற்போது அந்தத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்து, ஆட்சி அதிகார உரிமைகள் இல்லாத மாகாண அரசை உருவாக்குவதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நான் இங்கே பட்டியலிட்டுள்ள பல்வேறு நிகழ்வுகளிலிருந்து தமிழர்களுடனும் இந்திய அரசுடனும் கொண்ட உடன்பாடுகள் அனைத்தையும், சிங்களவர் ஒருதலைப்பட்சமாக உடைத்தெறிந்த நம்பகத் தன்மையற்ற போக்கினை உணர்ந்து கொள்ளலாம்.

இலங்கை அதிபர் ராஜபக்சே மீது நாம் ஏதோ உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே புகார் கூறுவதாகவோ, அவரைத் தமிழினப் படுகொலைக்குக் காரணமான போர்க்குற்றவாளியாக உலகின் முன் நிறுத்திச் சர்வதேச விசாரணை வேண்டுமென்று அடிப்படையின்றி நினைப்பதாகவோ கருதிடத் தேவையில்லை . சிங்கப்பூரின் முதல்

பிரதமரும், சிங்கப்பூரின் நவீன சிற்பி என்று அழைக்கப்படுபவரும், தற்போதைய பிரதமரின் அருமைத் தந்தையாருமான லீ குவான் யூ அவர்கள் இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து ஒரு பேட்டியில் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால்;

"இலங்கையில் சிங்களவர்கள் எப்போது முதல் இருக்கிறார்களோ, அப்போதிலிருந்தே தமிழர்களும் இருக்கின்றனர். தமிழர்களும், சிங்களவர் களும் இணைந்து வாழ்வதற்கான சூழல் இல்லை. இலங்கை ஒற்றை நாடாக இருக்கும் வரை மகிழ்ச்சியான நாடாக இருக்க முடியாது. இலங்கையில் தமிழர்களுக்காகப் போராடி வந்த விடுதலைப் புலிகள் வீழ்த்தப்பட்டுவிட்டனர். இதன்மூலம் இலங்கை இனச் சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டு விட்டது என்று இலங்கை அதிபர் ராஜபக்சே கூறி வருகிறார். இதை மற்றவர்களும் நம்ப வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். ஆனால் தமிழர்கள் அடங்கிக் கிடக்கமாட்டார்கள். சிங்களவர்களுக்குப் பயந்து ஓடி விடவும் மாட்டார்கள். இலங்கை அதிபர் ராஜபக்சேயின் பேச்சுக்களை நான் படித்திருக்கிறேன். அவர் ஒரு சிங்களத் தீவிரவாதி. இதை நான் நன்றாக அறிவேன். அவரது மனதை மாற்றவோ, அவரைத் திருத்தவோ முடியாது. இலங்கை இன்று மகிழ்ச்சியுடன் இல்லை. சிறுபான்மையினரான தமிழர்களை வெல்லும் தகுதியும், துணிச்சலும் சிங்களவர்களுக்கு நிச்சயம் இல்லை. யாழ்ப்பாணத் தமிழர்களை அவர்களால் நிச்சயம் வெல்லவே முடியாது. அதனால்தான் அவர்களை நசுக்கி ஒடுக்க முயலுகிறார்கள். இலங்கையில் இன்று நடந்து கொண்டிருப்பது அப்பட்டமான ஒரு இன அழிப்பு. நிச்சயம் தமிழர்கள் பொறுமையோடு நீண்ட காலம் காத்திருக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரை, சிங்களவர்களை விட தமிழர்களுக்குத்தான் அதிக மரியாதை தரப்பட வேண்டும். அதற்கு முற்றிலும் தகுதியானவர்கள் தமிழர்கள்தான்."

- என்றெல்லாம் திட்டவட்டமாக லீ குவான் யூ தெரிவித்திருக்கிறார்.

1983 ஆகஸ்ட் 16ஆம் தேதியன்று இந்திய நாடாளுமன்றத்திலேயே, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இலங்கையில் நடப்பது இனப் படுகொலையே என்று தெரிவித்ததை இன்றைய மத்திய அரசு மறந்து விடக்கூடாது.

இந்தியா – சீனா, இந்தியா – பாகிஸ்தான் யுத்தங்களின் போது, இலங்கை அரசு, இந்தியா வின் பக்கம் நிற்கவில்லை. இந்தியாவின் எதிரிகள் பக்கம் நின்றது. ஈழத் தமிழர்கள்தான் உணர்வுப்பூர்வமாக இந்தியாவை ஆதரித்தனர்.

இலங்கை அரசும், சிங்கள இனமும் இந்தியாவுக்கும், தமிழர்களுக்கும் எதிரான செயல்களிலேயே தொடர்ந்து ஈடுபட்டு வருவதையும், நட்பு நாட்டுக்கான எந்த குணாதிசயங்களையும் இலங்கை கொண்டிருக்கவில்லை என்பதையும் இந்திய மத்திய அரசு இப்போதாவது உணர்ந்து கொண்டு; எவ்வித தயவுதாட்சண்யமுமின்றி இலங்கை அரசைத் தட்டிக் கேட்கவும், இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13-வது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு உறுதியான அழுத்தத்தைத் தரவும் முன்வரவேண்டும். இந்தியாவின் தரப்பில் மேற்கொள்ளப்படும் சமரச முயற்சி எத்தகையதாயினும், அதைத் தனது சாகசச் சாதனையாகவே இலங்கை அரசு எடுத்துக் கொள்ளும் என்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால் இந்தியா பின்னர் வருந்த நேரிடும்!

அன்புள்ள,

மு.க.

19-08-2013

3796. மகளிர் மேம்பாடு - அன்றும், இன்றும்!

உடன்பிறப்பே,

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் "மாற்றுமுறை குறை தீர்வு மையக் கட்டிடம்" ஒன்று ரூ. 3.20 கோடி செலவில் கட்டப்பட்டு, அதன் திறப்பு விழா 20-8-2013 அன்று நடைபெற்றபோது, முதலமைச்சர் ஜெயலலிதா அதிலே கலந்துகொண்டு, மகளிருக்காக அ.தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களையெல்லாம் தொகுத்துச் சொல்லியிருக்கிறார். பெண்கள் சமூகரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் இடர்ப்பாட்டிற்கு ஆளாகக் கூடாது என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டங்களை யெல்லாம் அ.தி.மு.க. அரசு அமலாக்கி வருகிறது என்று கூறியதோடு, மற்ற மாநிலங்களுக் கெல்லாம் வழிகாட்டியாகச் செயல்படுவதாகவும் பேசியிருப்பதைப் படித்தபோது, என் கண் எதிரே, 2-2-2000 அன்று தர்மபுரி நகரில் அ.தி.மு.க.வினர் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக பேருந்து ஒன்றினை வழிமறித்துத் தீயிட்டபோது உடல் கருகி அலறிக் கொண்டே இறந்த மாணவிகள் கோகிலவாணி, ஹேமலதா, காயத்ரி ஆகியோர் தான் தெரிந்தனர்.

அந்த வழக்கில் தர்மபுரி செஷன்ஸ் நீதிபதி கடுமையாகக் கூறியபோது, "வழக்கில் தொடர்புடையவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவ்வழக்கை அனாதைக் குழந்தையைப் போல போலீஸ் அதிகாரிகள் நடத்தியுள்ளனர். போலீஸ் மீதான நம்பிக்கை நன்மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்துள்ளனர். இந்த இமாலயத் தவறுக்காக உள்துறைச் செயலாளர், சி.பி., சி.ஐ.டி. கூடுதல் எஸ்.பி.யை இந்த நீதிமன்றம் கண்டிக்கிறது. அரசுத் தரப்பு சாட்சியங்களைக் கலைப்பதற்கு அனுமதி அளித்த குற்றத்துக்காக சி.பி., சி.ஐ.டி., கூடுதல் எஸ்.பி. மீது, அதன் ஐ.ஜி., ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்றெல்லாம் கூறியதும் நினைவிற்கு வந்தது. மாணவியரைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு, பெண்களைப் போற்றும் மாண்புகள் பேசப்படுகின்றன.

அது மாத்திரமல்ல; 21-12-2012 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" இதழில் தமிழகத்தில் "கற்பழிப்புக்" குற்றங்களைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை வெளிவந்தது. அதன் தலைப்பு என்ன தெரியுமா? "செப்டம்பர் வரை 500க்கு மேற்பட்ட வழக்குகள் இந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது - தமிழ்நாட்டில் கற்பழிப்புக் குற்றங்கள் 9 சதவிகிதம் அதிகம்" என்பதாகும். தமிழ்நாடு போலீஸ் பற்றிய வலைதளத்தில், 2011ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர்வரை தமிழகத்தில் 484 கற்பழிப்புக் குற்றங்கள் என்பதற்கு மாறாக; 2012ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 528 கற்பழிப்புக் குற்றங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 528 குற்றங்களில், பெரும்பாலானவை அதாவது 75 கற்பழிப்புக் குற்றங்கள் சென்னை மாநகரில் மட்டும் பதிவாகியுள்ளன. பெண்களைப் போற்றிடும் இந்த அ.தி.மு.க. ஆட்சியிலேதான் இப்படிக் கற்பழிப்புக் குற்றங்கள் பெருகி வருகின்றன!

மற்றொரு கொடுமை - திருவைகுண்டம் அருகில் பள்ளிக்குச் சென்ற 7ஆம் வகுப்பு மாணவி 12 வயதான புனிதா என்பவர் மர்ம நபரால் பலாத்காரம் செய்யப்பட்டு, கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டு, அனைத்து நாளேடுகளிலும் அதுபற்றிப் பெரிதாகச் செய்தி வந்ததும், "பெருமைக்குரிய" இந்த ஆட்சியிலேதான்!

கடந்த ஏப்ரல் 12ஆம் தேதியன்று தொழில் நகரமான திருப்பூரில் ஒரு கொடுமை. எட்டு வயதான ஒரு மலையாளச் சிறுமி பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு, வீட்டிலே தனியாக இருந்த போது, ஒரு கும்பலால் அலற அலறக் கற்பழிக்கப்பட்டிருக்கிறாள்.

திருப்பூரிலே மாத்திரமல்ல; தேனி மாவட்டத்தில், ஆண்டிப்பட்டி அருகே உள்ள பாலக்கோம்பை கிராமத்தைச் சேர்ந்த எஸ்.எஸ்.எல்.சி. மாணவி நதியா என்பவர் கற்பழிக்கப்பட்டு, கொலையே செய்யப்பட்டாள்.

பாலியல் குற்றம் என்றால் டெல்லி மாநகரமே அல்லோலகல்லோலப்படுகிறது; பேரணி - முற்றுகைப் போராட்டம் என்று கொந்தளிப்பு ஏற்படுகிறது. கேரளச் சிறுமி

பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான செய்தி கேள்விப்பட்டதுமே கேரள முதலமைச்சரும், மலையாளிகள் சங்கத்தினரும் கவலை கொண்டு ஆறுதல் கரம் நீட்டுகிறார்கள். ஆனால் ஒரு பெண்மணி ஆளும் தமிழ் மாநிலத்தில், தட்டிக்கேட்க ஆளில்லாமல் பாலியல் குற்றங்கள் பரவலாக நடைபெறுகின்றன. ஆனால் முதலமைச்சர் பாலியல் வன்முறை சார்ந்த குற்றங்களைக் கடும் குற்றங்களாகக் கருதி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் காவல் துறையினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது என்று நேற்றையதினம் கூறியிருக் கிறார். அவர் கூறியிருப்பதற்கு மாறாகவே இத்தகைய கொடுங்குற்றம் பரவுகிறது!

திருச்சியில் அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் பரஞ்சோதி என்பவர் மீது டாக்டர் ராணி என்பவர் கொடுத்த வழக்கில் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கப் பணித்தும், பல நாட்களாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் இன்னும் பரிகாரம் கிடைத்தபாடில்லை!

அதுபோலவே கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் வசந்தி என்பவர் போலீசாரால் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டார் என்ற புகாரின் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காத தால், அவர் மதுரை உயர்நீதிமன்றக் கிளையிலே வழக்குத் தொடுத்தார். அதில் நீதிபதி கூறும்போது, "கற்பழிப்பு என்பதே சமுதாயத்துக்கு எதிரானது. அதைக் காவல் துறையினரே காவல் நிலையத்தில் வைத்து செய்துள்ளதாகக் குற்றச்சாட்டு வந்துள்ள நிலையில், காவல் துறை உயர் அதிகாரியான எஸ்.பி. கடும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதைச் செய்யாததோடு, வசந்தியின் புகார் உண்மைக்குப் புறம்பானது என்று பேட்டியும் கொடுத்திருக்கிறார். நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் இவ்வளவு நாட்களாக விசாரணைகூடச் செய்யவில்லை" என்றெல்லாம் கூறியதும் "பெருமைக்குரிய" இந்த ஆட்சியிலேதான்! வேலியே பயிரை மேய்வதை அ.தி.மு.க. ஆட்சி வேடிக்கை பார்க்கிறது.

கற்பழிக்கப்பட்டவர்கள் - கற்பழித்துக் கொலை செய்யப்பட்டவர்கள் என்று ஒரு குறிப்பெடுத்தால், வேலூர் மாவட்டம், திருப்பத்தூரை அடுத்து ஆண்டியப்பன் கிராமத்தில் ஒன்பது வயது சிறுமி காயத்ரி; 29-12-2012இல் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுப் படுகொலை; சிவகிரியில் நந்தினி என்ற பெண் கற்பழிக்கப்பட்டுக் கொலை; சைதாப் பேட்டையில்

விஜயா என்ற பெண்ணின் சடலம் (11-1-2013 தினத்தந்தி); நாகை மாவட்டத்தில் 11 வயது தலித்இனத்தைச் சேர்ந்த சிறுமியை இரண்டு பேர் சேர்ந்து கற்பழித்தனர். (23-12-2012 தினமணி); விருத்தாசலத்தில் மணிமுத்தாறு நதிக்கரையில் சுகந்தி என்கிற இளம் பெண் கற்பழிக்கப்பட்டார் (27-12-2012 தினமணி); சிதம்பரம் அருகில் மஞ்சக்குழி கிராமம், சந்தியா என்கிற இளம்பெண், கற்பழிக்கப்பட்டு 3வது மாடியிலிருந்து வீதியிலே எறியப்பட்டாள். (27-12-2012 தீக்கதிர்); தர்மபுரியில் அரூர் தாலுக்காவில் தாதராவலசை கிராமத்தில் மேனகா என்கிற இளம்பெண் திருமணமானவர் கற்பழிக்கப்பட்டுப் படுகொலை. (28-12-2012 தினமணி); தூத்துக்குடி மாநகரில், மாதாநகர் 2வது தெருவில் மாரியம்மாள் என்கிற இளம்பெண் கணவனைப் பிரிந்து 3 குழந்தைகளுடன் தந்தை வீட்டில் வசித்து வந்தார். விடியற்காலையில் வீடு புகுந்து கற்பழிக்கப்பட்டாள். (29-12-2012 தினமணி); விழுப்புரம் வானூர் ருக்மணிபுரம் பள்ளி மாணவி கல்கி என்பவள் கற்பழிக்கப்பட்டு சவுக்குத் தோப்பில் பிணமாகத் தொங்கவிடப்பட்டாள். (5-1-2013 தினத்தந்தி) - உடுமலையில் 12 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அவமானம் தாங்க முடியாமல் தீக்குளித்தாள்; நாமக்கல்லில் 18 வயது இளம்பெண், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நான்கு பேர் கொண்ட கும்பலால் கற்பழிக்கப்பட்டார். (6-1-2013 தினத்தந்தி); வேலூர் மாவட்டம், ஆர்க்காடு அருகில் திமிரி என்கிற ஊரில் அபிநயா என்கிற 17 வயதுப் பெண், அச்சுறுத்தல், மிரட்டல் காரணமாக, கற்பைக் காப்பாற்றிக் கொள்ளத் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார். (6-1-2013 தினத்தந்தி); அம்பத்தூரில் முகப்பேர் பகுதியில் பிளஸ் 2 படித்து வந்த மாணவியை வீடு புகுந்து கற்பழித்திட முயற்சி. (6-1-2013 தினத்தந்தி); சென்னை, பொழிச்சலூரில் பிரேமலதா கற்பழித்துக் கொலை செய்யப்பட்டுப் பிணமாக வீசப்பட்டுக் கிடந்தாள்.

(6-1-2013 தினத்தந்தி); திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகில் திருமணமான மீனா என்கிற இளம்பெண் தன் உறவினர் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது, 4 பேர் கொண்ட கும்பல் காரில் கடத்திச் சென்று கற்பழிப்பு; சென்னை கோயம்பேட்டில் வீட்டு வேலைசெய்து வந்த பெண் கண்ணம்மாவை வீட்டு உரிமையாளர் கற்பழித்தார். (7-1-2013 தினத்தந்தி); ஓரத்தநாடு, புதூரில் 6ஆம் வகுப்பு படித்து

வந்த 11 வயது சிறுமி, ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது கற்பழிக்கப்பட்டார். (4-1-2013 தினத்தந்தி); ராணிப்பேட்டை அருகில் சுடுகாட்டில் சிறுமி கொலை செய்யப்பட்டு, எரிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார். (13-1-2013 தினத்தந்தி); சென்னை ஆதம்பாக்கம் செல்வி ஜெராக்ஸ் கடையில் வேலை பார்க்கும் பெண் கற்பழிப்பு (4-1-2013 தினத்தந்தி) என்று அ.தி.மு.க. ஆட்சியில் பெண்களின் மீது நடத்தப்படும் கோரக் கொடுமைகள் பற்றி நாளேடுகளில் வெளிவந்த பட்டியல் நீண்டு கொண்டேபோகும்.

அ.தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் எண்ணற்ற அநீதிகளைப் பற்றி விளக்கிக் கூறியது போதும்; தி.மு.க. ஆட்சியில் மகளிருக்காகச் செய்யப்பட்ட சாதனைகள் என்ன; முதலமைச்சர் ஜெயலலிதா பட்டியலிட்டிருப்பதைப் போல உன்னால் முடியுமா என்று கேட்டால், அதற்கும் நான் பதில் கூறுகிறேன்.

1929ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, பெற்றோர் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை வழங்கும் தனிச் சட்டத்தினை 1989ஆம் ஆண்டில் மே திங்கள் 6ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது என் தலைமையிலான தி.மு.கழக அரசு!

அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றிவரும் திருமண உதவித் திட்டங்களைப் பற்றியெல்லாம் முதலமைச்சர் நேற்றுப் பேசியிருக்கிறார். “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்” 1989இல் கழக ஆட்சியில்தான் அறிமுகமே செய்யப்பட்டது. “அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டமும்” 1989இல் கழக அரசில் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அஞ்சுகம் அம்மையார் என்னைப் பெற்றெடுத்த காரணத்தால், அந்தத் திட்டத்தின் பெயர் நல்லெண்ணம் (?) கொண்டவர்களால் தற்போது நீக்கப்பட்டுவிட்டது!

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம், 1975இல் தி.மு. கழக அரசில் அறிமுகம் செய்யப்பட்ட திட்டமாகும்.

1989-90இல் கழக அரசு அமைந்தபோது குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ள மாணவிகளுக்குப் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி வழங்க ஆணையிடப்பட்டது. இதற்கு "ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்" என்று பெயர் சூட்டப்பட்டது. 1996இல் கழக அரசு மீண்டும் அமைந்தபோது, ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்பது 24 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. அது போலவே "ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம்"!

1989இல் தி.மு. கழக அரசில் "டாக்டர் முத்துலெட்சுமி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்" அறிமுகம் செய்யப்பட்டது. மகளிர் தொழில் முனைவோருக்கு நிதி உதவி, தொழில் மனை ஒதுக்கீட்டில் முன்னுரிமை, மீனவ மகளிருக்கு உதவிகள், மகளிர் நடத்தும் நியாய விலைக்கடைகள், மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் போன்ற திட்டங்களும் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன.

இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான். அதன் காரணமாக அப்போது 44,143 பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பதவியேற்கும் உன்னத நிலையைக் கழக அரசு உருவாக்கிக் காட்டியது.

1992இல் அ.தி.மு.க. ஆட்சியில்தான் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்தப்பட்டது என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆனால் 1973ஆம் ஆண்டிலேயே, தி.மு. கழக ஆட்சியில் "காவல் துறையில் பெண்களை நியமனம் செய்யும் திட்டம்" தொடங்கப்பட்டுவிட்டது.

1-6-1975இல் ஆதரவற்ற விதவைப் பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது.

1990இல் தி.மு. கழக ஆட்சியில் இந்தியாவிலேயே முதல் முறையாக அரசுப்பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கான பெண்கள் அரசு வேலை வாய்ப்புகள் பெற வழிவகுக்கப்பட்டது.

ஏழ்மை நிலையிலுள்ள பெண்களை வாழவைக்கும் திட்டமாக, 50 வயது கடந்தும் திருமணம் ஆகாமல், உழைத்து வாழமுடியாத சூழலில் வாழ்ந்துவரும் 9 ஆயிரத்து 100 ஏழைப் பெண்களுக்கு மாதந்தோறும் 400 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் ஜூலை 2008 முதல் புதிய திட்டமாகக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டது.

1989ஆம் ஆண்டு மே திங்களில் கழக அரசு தர்மபுரியில் தொடங்கிய மகளிர் திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் கிராமப்புறப் பெண்கள் குழுவாகச் சேர்ந்து தொழில் புரிந்து வருவாய் ஈட்டித் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகின்றனர்.

இப்படித் தி.மு. கழக ஆட்சியில், பெண்கள் சமூக ரீதியாகவும், கல்வி நிலையிலும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றம் காணவும், ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் திகழ்ந்திடவும், பெரியார் - அண்ணா வழி நின்று பல்வேறு துறைகளிலும் பெரும்பணிகள் ஆற்றப்பட்டன என்பதை மகளிர் மேம்பாட்டில் நாட்டம் கொண்டோர் மறந்திருக்க முடியாது! அவற்றை இன்றைய ஆட்சியாளர் மறைக்கவும் முடியாது!

அன்புள்ள,

மு.க.

22-8-2013

3797. விடை அளிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை!

உடன்பிறப்பே,

உலகில் 6 ஆயிரத்து 800 மொழிகள் உள்ளன எனக் கூறப்படுகிறது. எனினும், இன்றுள்ள மொழிகளில் 2,000 மொழிகள் மட்டுமே உலக அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றுள் கிரேக்கம், இலத்தீனம், அரேபியம், பாரசீகம், சீனம், ஈப்ரு, சமஸ்கிருதம் ஆகிய ஏழு மொழிகள் மட்டுமே, "செம்மொழி" எனும் தகுதியைப் பெற்றிருந்தன.

தமிழ் மற்ற செம்மொழிகளை விடவும் மேலானதாகும். இதற்குப் பல சான்றுகள் உள்ளன.

செம்மொழிகளில் இலத்தீன், ஈப்ரு ஆகிய மொழிகள் இன்று பயன்பாட்டில் இல்லை. கிரீக் மொழி இடையில் நசிந்துவிட்ட போதிலும், தற்பொழுதுதான் மேலும் வளமடைந்து வருகிறது. சமஸ்கிருதம் இன்று பேச்சு வழக்கில் இல்லை; சீனமொழி பட எழுத்து முறையில் உள்ளதால், அம்மொழியால் உள்ளத்து உணர்வுகளைத் தெளிவாக வெளிப்படுத்த இயலாது என மொழியியலார் கூறுகின்றனர். அரேபிய மொழி காலத்தால் மிகவும் பிந்தியது; பாரசீகம், அரேபிய வரி வடிவத்தில் எழுதப்படுகிறது;

இந்தச் செம்மொழிகள் அனைத்தையும் பார்க்கும்போது, தமிழ் மொழி - மற்ற செம்மொழிகள் எல்லாவற்றையும்விட உயர் தனிச் சிறப்பு வாய்ந்தது என்பது தெளிவாகிறது. இலக்கிய வளத்தைப் பொறுத்தவரை 2500 ஆண்டு காலமாக இடையறவுபடாத - தொடர்ச்சியான இலக்கியங்களைக் கொண்டுள்ளது தமிழ்!

தமிழ்மொழி எந்த ஒரு மொழியையும் சார்ந்திருக்கவில்லை; இது, தனித்தன்மை வாய்ந்த மொழி. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலிய பல மொழிகள் திராவிட மொழிகள் எனக்

கூறப்படுகின்றன. இந்தத் திராவிட மொழிகளுக்கெல்லாம் - மூலமொழியாக தமிழ் விளங்குகிறது.

இதனை நமக்கும் உலகத்திற்கும் எடுத்துச் சொன்னவர் டாக்டர் கால்டுவெல். அவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் உட்பட 12 திராவிட மொழிகளை ஆராய்ந்து எழுதியுள்ள, "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் நூல் இந்த உண்மையை நமக்கு உரைக்கிறது.

இந்த வரிசையில் தமிழ்மொழி "செம்மொழி" எனும் சிறப்பைப் பெற்று; நம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் தந்துள்ளது என்றால் அதற்குக் காரணம் தி.மு.கழகம் அல்லவா?

தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி வேண்டுமென்று பரிதிமாற்கலைஞர் போன்றவர்களும் ஏனைய தமிழ்ச் சான்றோர்களும், நூறாண்டுகளுக்கு மேலாக கண்ட கனவு, தி.மு. கழகம் பங்கு பெற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மத்தியில் ஆட்சியில் இருந்த காரணத்தால் திருமதி சோனியா காந்தி அவர்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக் கிடைக்கப் பெற்ற ஒன்றாகும். பின்னர், தமிழ்ச் செம்மொழி ஆய்வு நிறுவனம் கர்நாடக மாநிலத்திலே இருந்த நிலையில், அதனை தமிழகத்திற்கே மாற்றித் தர வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் தொடர்ந்து எழுப்பி, அதுவும் தி.மு. கழக ஆட்சியில்தான் கிடைத்தது. அந்த நிறுவனத்திற்காக தி.மு. கழக ஆட்சியில் தனியே தேவையான நிலம் ஒதுக்கப் பெற்று அங்கே எழில்மிகு கட்டிடங்கள் கட்டப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையில் தற்காலிகமாக தமிழ்ச் செம்மொழி ஆய்வு நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமான "பாலாறு" இல்லத்திலே நடந்து வந்தது. அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான நூலகத்தில் ஏராளமான அரிய ஆய்வு நூல்களும், பழம் பெரும் ஓலைச் சுவடிகளும் உள்ளன. கழக ஆட்சிக் காலத்தில் அந்த நூலகத்திற்கு இடம் இல்லை என்றதும், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்த தமிழகச் சட்டப்பேரவை, ஓமந்தூரார் வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட இடத்திற்கு மாற்றப்பட்ட காரணத்தால், அந்த இடத்திலே செம்மொழி ஆய்வு நிறுவனத்தின் நூலகம் "பாவேந்தர்" பெயரால் அமையப் பெற்றது.

ஆனால் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்தது; கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் என்பதால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் செம்மொழி ஆய்வு நிறுவன நூலகத்திற்கு குறிப்பிட்டு வேறு எந்த இடத்தையும் ஒதுக்காமல் இரவோடு இரவாக அந்த இடத்தையே காலி செய்து விட்டார்கள்.

அந்த நூலகத்தில் இருந்த நூல்கள் எல்லாம் மூன்று அறைகளில் குவித்து வைக்கப்பட்டுள்ளன என்றும், இடப் பிரச்சினை தொடர்பாக செம்மொழி ஆய்வு நிறுவனத்தினர் எழுதிய பல்வேறு கடிதங்களுக்கும் தமிழக அரசு பதில் அளிக்கவில்லை என்றும், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள் பயன்படுத்தி வந்த நூலகத்தையும், செம்மொழி ஆய்வு நிறுவனத்தையும் மீண்டும் செயல்படச் செய்ய வைக்க வேண்டும் என பலரும் வலியுறுத்தி வருகின்றனர் என்றும் ஏடுகளில் செய்தி வந்தன.

தமிழுக்கு செம்மொழித் தகுதி வேண்டுமென்று முதலில் குரல் கொடுத்த பரிதிமாற்கலைஞர் என்ற பெயரில் "கலைஞர்" என்ற பெயர் இடம் பெற்ற காரணத்தாலோ, அந்த நிறுவனம் கழக ஆட்சியில் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டது என்பதாலோ "காழ்ப்புணர்ச்சி"யின் உச்சி முகடு வரை சென்று அ.தி.மு.க. ஆட்சியினர் அதனைப் படாதபாடு படுத்தி வருகின்றனர்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் 8.11.2005 அன்று எனக்கு எழுதிய கடிதத்தில்,

"I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Govt., but particular credit goes to you and your party."

"தமிழ் செம்மொழி எனப் பிரகடனம் செய்வதற்கான நடைமுறைகள் அனைத்தும் தற்பொழுது முடிந்துள்ளன என்பதனைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பங்குபெற்றுள்ள அனைவருக்கும், இது சாதனையாகும்; ஆனால், இதன் பெருமை முழுவதும் உங்களையும், உங்கள் கட்சியையுமே சாரும்." - என்று எழுதினார்கள்.

தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்துப் பெருமைப்படுத்திய மத்திய அரசு, செம்மொழித் தமிழ் குறித்த ஆய்வுப் பணிகளையும், மேம்பாட்டுப் பணிகளையும் தமிழ்மொழியைப் பரப்பும் பணிகளையும் மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனத்திடம் ஒப்படைத்தது.

அதுகுறித்து, 28.11.2006 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில்,

"மைசூரில் உள்ள மத்திய மொழிகள் நிறுவனத்தின் நோக்கங்கள் செம்மொழி என்னும் கண்ணோட்டத்தில் அமைந்தது அல்ல; இந்தியாவின் அனைத்து மொழிகளின் மூலமும் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஒருமைப்பாடு உணர்வு ஆகியவற்றை வளர்த்திடும் நோக்கத்துடன், அந்நிறுவனம் செயல்படுகிறது. எனவே, தமிழ்மொழியின் சிறப்புகளை மேம்படுத்துதல் என்பதையே நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசின் செம்மொழித் தமிழாய்வு மையம்' சென்னையில் அமைக்கப்பட வேண்டும்" - என்று மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன்.

இந்தக் கடிதம் கிடைத்த அடுத்த நாளே அதாவது, 29.11.2006 அன்று, மாண்புமிகு மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் அவர்கள் எழுதிய கடிதத்தின் முடிவில், "I am asking the Ministry to include a suitable proposal for an Institute for Classical Tamil in the Ministry's XI th plan proposals".

"எனது அமைச்சகத்தின் 11வதுதிட்ட அறிக்கையில் செம்மொழித் தமிழ் நிறுவனம் அமைப்பதற்காகப் பொருத்தமான கருத்துருவைச் சேர்க்குமாறு அறிவுரைகள் வழங்கியுள்ளேன்" - என்று எழுதியிருந்தார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, பழைய மாமல்லபுரம் சாலையில் அதாவது, தற்போதைய ராஜீவ் காந்தி சாலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சோழிங்க நல்லூருக்கு அருகில் பெரும்பாக்கம் கிராமத்தில் 17 ஏக்கர் நிலம் தமிழக கழக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

30.1.2008 அன்று இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்,

சென்னையில் 17 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் எழுப்பப்படும் கட்டடத்தில் 76 கோடியே 32 இலட்ச ரூபாய் செலவில் தமிழகத்தில், "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்" அமைத்திடவும், இந்த ஆய்வு நிறுவனத்தின் தலைவராகத் தமிழக முதலமைச்சர் பொறுப்பு வகிப்பார் எனவும் முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவின்படி, செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்பதற்கு என்னிடம் ஒப்புதல் கோரப்பட்டு, அதற்கு ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்கான நிரந்தரக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் செய்திருந்த நிலையில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன.

ஆனால் தற்போது செம்மொழியின் நிலை இந்த அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன என்பதைப் பற்றி கடந்த வாரம் "கல்கி" இதழுக்கு பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்திருக்கும் செய்தி என்ன தெரியுமா? - "மிக ஆரவாரத்துடனும், கோலாகலத்துடனும், நம்பிக்கையோடும் தொடங்கப்பட்ட செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திக்குத் தெரியாத காட்டில் இருக்கிறது. தொடர்ந்து மாநில, மத்திய அரசுகள் அதன் செயல்பாட்டில் அலட்சியம் காட்டி வந்தால், ஒரு கட்டத்தில் நிறுவனத்தை இழுத்து மூட வேண்டிய நிலை கூட வரலாம். செம்மொழி நிறுவனத்தால் கொடுக்கப்படும் விருதுகளும் இரண்டு வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன. மத்திய அரசால் ஒதுக்கப்படும் நிதி குறைந்து கொண்டே வருகிறது. கொடுக்கப்படும் நிதியும் செலவழிக்கப்படாமல் திருப்பி ஒப்படைக்கப்படுகிறது. நிறுவனத்தை நடத்தும் ஆட்சி மன்றக் குழு திருத்தி அமைக்கப்படவில்லை. ஆட்சிக் குழு இல்லாததால் கல்விக் குழு மற்றும் நிதிக் குழுக்களும் அமைக்கப்படவில்லை. நிறுவனத்துக்கு முழு நேர இயக்குனர் இல்லை. தலைமை மற்றும் ஆட்சிக் குழு இல்லாததால் நிறுவனத்தின் செயல்பாடுகளின் சுணக்கம்; தேக்கம். புறநகரான பெரும்பாக்கத்தில் ஒதுக்கப்பட்ட நிலத்தில் செம்மொழி நிறுவனக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கவில்லை . இதனால், பல ஆய்வுப் பணிகள் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. 120 ஊழியர்கள் பணியாற்றிய இந் நிறுவனத்தில் இப்போது 72 பேர்தான். அவர்களுக்கும் சம்பளப் பிரச்சினைகள், பணிகளில் உற்சாகம் இல்லை. அரசியல் சகதியில் சிக்கித்

தவிக்கிறது செம்மொழி" என்றெல்லாம் அந்தத் தமிழ்ப் பேராசிரியர் தெரிவித்திருக்கிறார்.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்காக என்னுடைய சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை அளித்து, அதிலே கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஆண்டுக்கொருமுறை பத்து இலட்ச ரூபாய் மதிப்பில் விருது ஒன்றினை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கழக ஆட்சியில் கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்ற போது, திரு. அஸ்கோ பர்போலா அவர்களுக்கு அந்த விருது வழங்கப்பட்டது. அதன் பிறகு இரண்டாண்டுகள் ஆகியும் அந்த விருது இன்று வரை வழங்கப்படவில்லை. அதற்கான முயற்சியிலும் அ.தி.மு.க. அரசோ, முதலமைச்சர் ஜெயலலிதாவோ ஈடுபடவில்லை. அந்த அளவிற்கு செம்மொழியின் மீதும், தமிழின் மீதும் அம்மையாருக்கு அன்பு!

கழக ஆட்சியின் போது அரசின் முழு ஆதரவு இந்த நிறுவனத்துக்கு இருந்ததால், கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 41 செவ்வியல் நூல்களின் செம்பதிப்பு போடுவதற்கான பணிகள் தொடங்கியது. இறையனார் களவியல், ஐங்குறுநூறு, மருதத் தினை செம்பதிப்பு தவிர, டிஜிட்டல் செவ்வியல் சுவடிகள் அட்டவணைப் பணிகள் முடிக்கப்பட்டன. மணிப்பூர், பஞ்சாபி மொழியில் திருக்குறள் மொழியாக்கம் செய்யப்பட்டது. பல சங்க இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டன. ஐராவதம் மகாதேவன் எழுதிய "சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்" என்ற நூல் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது. "செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்" என்ற என்னுடைய நூல் பதிப்பிக்கப்பட்டது. பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணம், கல்வெட்டு, நாணயம் தொடர்பான குறுந்தகடுகள், காட்சிப் படங்கள் என்ற நவீனத் தகவல் தொடர்புத் தளத்துக்கு தமிழ் எடுத்துச் செல்லப்பட்டது. அகராதியில் இடம் பெறாத பத்தாயிரத் துக்கும் மேற்பட்ட சொற்கள் ஆவணப்படுத்தப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வாளர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. செம்மொழித் தமிழ் விருதுகளுக்கு 23 தமிழறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் விருதுகளை வழங்கினார். 300க்கும் மேற்பட்ட ஆய்வுக் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 40 ஆயிரம் நூல்கள், ஓலைச் சுவடிகள், குறுந்தகடுகள் கொண்ட நூலகம் உருவாக்கப்பட்டது.

ஆனால் இவ்வளவும் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான்! 2011இல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்தும் நின்றுபோயின. ஆட்சிமன்றக் குழுவுக்கு முதலமைச்சர்தான் தலைவர் என்பதால், பல விஷயங்களுக்கு அவரை அணுக முயன்ற முயற்சிகளே தோற்றுப்போயின. அவ்வளவு அரும்பாடுபட்டு தமிழைச் செம்மொழியாக்கவும், செம்மொழி ஆய்வு நிறுவனம் தமிழகத்தின் தலைநகரத்திலே அமையவும், அதன் சார்பில் பல்வேறு பணிகள் தமிழ் மொழிக்காக நடைபெறவும் பாடுபட்டவன் என்ற முறையில், இன்று அதன் கதியை நினைத்துக் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியவில்லை.

சென்னை நகரின் இதயம் போன்ற இடத்திலே தனியார் அனுபவித்து வந்த அரசு நிலத்தைக் கைப்பற்றி, செம்மொழியின் பெயரால் கழக ஆட்சியில் "செம்மொழிப் பூங்கா" ஒன்றினை ஏற்படுத்தினோம். அதன் நிலை என்ன என்பதை தயவுசெய்து அங்கே ஒருமுறை சென்று பாருங்கள்!

தமிழ்நாட்டு மக்கள் இவ்வளவையும் பார்த்துக் கொண்டு அமைதியாகத்தான் இருக்கிறார்கள். தமிழைச் செம்மொழியாக அறிவிக்கவும், சேது சமுத்திரம் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவும், மதுரவாயல், துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பல திட்டங்களைச் செயற்படுத்தவும், தலைமைச் செயலகத்திற்காகவும் - சட்டப்பேரவை நடைபெறவும் ஓமந்தூரார் வளாகத்தில் அழகான கட்டிடத்தைக் கட்டக் காரணமாக இருந்த என்னையே ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றிய தமிழ்நாட்டு மக்கள், இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மூடு விழா நடத்திய இன்றைய ஆட்சியாளர்களுக்கு விடை அளிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை!

அன்புள்ள,

மு.க.

23-08-2013

3798. அன்னை இந்திரா வழியில் தீர்வு காண்போம்!

உடன்பிறப்பே,

22-8-2013 அன்று நாடாளுமன்றத்தில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர், திரு. சல்மான் குர்ஷித் கூறும்போது, "இலங்கைச் சிறைகளில் 106 இந்திய மீனவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை மனிதாபிமான அடிப்படையில் அந்நாட்டு அரசு விடுதலை செய்ய வேண்டும். நமது மீனவர்களை இலங்கை அரசு சிறையில் அடைப்பது, இந்திய மக்களின் உணர்வுப்பூர்வ, சமூகம் சார்ந்த அரசியல் ரீதியான பிரச்சினையாக உள்ளது. அதனால், இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்குத் தீர்வு காணப்படாவிட்டால் அமைதியை நிலைநாட்ட இரு நாடுகளும் மேற்கொண்டு வரும் முயற்சிகளில் மனக்கசப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். இந்திய மீனவர்களின் நலன், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவருகிறது. இந்திய மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இலங்கையின் வடக்கு மாகாணத்தில் தேர்தல் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பிறநாட்டு மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அங்கே வலியுறுத்தப்பட்டு வருவதால், இந்திய மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இரு நாடுகளின் மீனவர்களின் கூட்டத்தை நடத்தவும் இலங்கை அரசுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்திவருகிறது. இந்தியாவினால் இலங்கை மீனவர்கள் யாரும் சிறைப்பிடிக்கப்படவில்லை. அது பலவீனத்தின் அடையாளம் கிடையாது, நியாயத்தின் அடையாளமே! இதுபோல நியாயமாக

இலங்கையும் நடந்துகொள்ள வேண்டுமென்று இந்தியா எதிர்பார்க்கிறது. நமது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் இப்பிரச்சினையை இலங்கையும் கவனிப்பதால், இதன் முக்கியத்துவத்தை அந்நாட்டு அரசும் புரிந்து செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம். அண்மையில் டெல்லி வந்த இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சருடன் பேசிய போதும் இந்திய மீனவர்களை விரைவில் விடுவிக்க வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டுள்ளது" என்றெல்லாம் குறிப்பிட்டிருப்பது நமக்குப் பெரும் ஆறுதலாக உள்ளது.

இவ்வாறு குறிப்பிட்ட மத்திய அமைச்சர், "மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண, மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது; ஆனாலும், இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு, இந்தியா மற்றும் இலங்கை மீனவர்கள் இணைந்து பேச வேண்டும். இருதரப்பும், பேச்சுவார்த்தை நடத்தினால் இணக்கமான சூழ்நிலையையும் தீர்வையும் எட்ட முடியும். இந்த யோசனையைச் செயல்படுத்த, இலங்கை அரசு தயாராக உள்ளது. தமிழக அரசும், மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார். இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள "எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளேடு, "Khurshid felt that for a long-term solution to the problem, there should be a third round of meeting between the fishermen associations of India and Sri Lanka. He appealed to the Tamil Nadu Government to give "final approval" for the fishermen to travel to Sri Lanka for a "face-to-face" meeting" என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளது. இதையேதான் சில நாட்களுக்கு முன்புகூட மத்திய அமைச்சர் நாராயணசாமி அவர்கள் செய்தியாளர் களிடம் கூறும்போது, தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும் என்பதைப் போலக் கூறியிருந்தார்.

மத்திய அமைச்சர் குர்ஷித் அவர்கள் நேற்றையதினம் "தினமணி" செய்தியாளரிடம் கூறும்போது, "இந்த விவகாரத்தில் தமிழக அரசும் மத்திய அரசுடன் சேர்ந்து செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கிறோம். தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் குழு மாநில அரசின் ஆதரவுடன் இலங்கை சென்று திரும்ப வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் இதுவரை அவர்களுக்கு உரிய அனுமதியைத் தமிழக அரசு தரவில்லை என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் ஜெயலலிதா வும்

இந்த விஷயத்தில் தனிக் கவனம் செலுத்தித் தமிழக மீனவர்கள் இலங்கை சென்று திரும்ப ஒத்துழைக்க வேண்டும். தமிழக அரசு ஒப்புதல் தெரிவித்த உடனேயே இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் தமிழக - இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்படும்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

எனவே இந்த முக்கியமான பிரச்சினையில் உண்மையிலேயே தமிழ்நாடு அரசு சுமூகப் பேச்சுவார்த்தைக்குத் தாமதம் செய்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால், இதுவரை மத்திய அரசு மீதே பழிசுமத்திக் காலம் கடத்தி வந்ததைப் போலச் செய்யாமல், தற்போதாவது தாமதத்தைத் தவிர்த்து மீனவர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

நமது மத்திய அமைச்சர் நாடாளுமன்றத்தில் பதிலளித்திருக்கும் அதே நாளில், இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ரஜிதாசேனரத்னே என்பவர் கொழும்பில் அளித்த பேட்டியில், "இலங்கை மீனவ சமுதாயத்தினர், இந்திய மீனவ சமுதாயத்தினர், இரு தரப்பினரும் ஒருவர் கடல் பகுதியில் மற்றவர்கள் 70 நாட்கள் மீன் பிடித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுள்ளனர். இதற்கு அனுமதி அளிக்க முடியாது எனக் கூறிவிட்டேன். அனைத்து நாடுகளும் சர்வதேச கடல் பகுதி என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் இதற்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகளுக்குத்தான் இது பொருந்தும். தமிழக அரசோ அல்லது அவர்களது மீனவர்களோ இந்த விதி முறையை மீற முடியாது. இந்த ஏற்பாட்டை (அதாவது தமிழக மீனவர்கள், இலங்கை கடல் பகுதியிலும், இலங்கை மீனவர்கள், இந்தியக் கடல் பகுதியிலும் மீன் பிடிக்க) அனுமதித்தால், அது இலங்கையின் வட பகுதி மீனவர்களுக்கு அநீதி இழைப்பதாகும்" என்றெல்லாம் கூறியிருப்பது பிரச்சினையை மேலும் மோசமாக ஆக்குவதாகவும், திசை திருப்புவதாகவும் உள்ளது.

இந்த அமைச்சர்கூடப் பரவாயில்லை. கடந்த வாரம் டெல்லிக்கு வந்திருந்த இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் அளித்த பேட்டி குறித்து இந்த வார "ஆனந்தவிகடன்" இதழ் "இது யார் கொடுத்த துணிச்சல்?" என்ற தலைப்பில் ஒரு தலையங்கமே எழுதியுள்ளது.

அந்தத் தலையங்கத்தில், "எங்கள் நாட்டு வளங்களை இந்திய மீனவர்கள் சூறையாடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது எங்கள் அரசின் கடமை. இதற்குமுன் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன் பிடித்து வந்த தமிழக மீனவர்களைக் கைது செய்தால், உடனே விடுதலை செய்து வந்தோம். ஆனால், அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை. அதனால், இப்போது இலங்கைச் சிறையில் இருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யும் உத்தேசம் இல்லை. அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி, தண்டனை வாங்கித் தரப் போகிறோம்" – இந்தியா வந்திருக்கும் இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பெரீஸ், ஒவ்வொரு வார்த்தையிலும் திமிர் தொனிக்க இந்தியத் தலைநகரில் அளித்த பேட்டி இது!

இனப் படுகொலை தொடங்கி, "இந்திய" மீனவர்கள் படுகொலை வரை பல காரணங்களை முன்வைத்து இலங்கையில் நடக்கவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்ற வாதங்கள் வலுப்பெற்றுவரும் நேரத்தில், அந்தக் காமன்வெல்த் மாநாட்டுக்கான அழைப்பிதழை அளிக்க வந்திருக்கும் இந்த இலங்கை அமைச்சர், "இலங்கை மீதான மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டு பற்றிய மற்ற நாடுகளின் கருத்துகளுக்கும், அவை காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பதற்கும் தொடர்பு இல்லை" என்று இந்தியாவுக்கும் சேர்த்துச் கருத்துச் சொல்லியிருப்பது உச்சகட்ட அதிர்ச்சி! இந்தியா எந்தெந்த மாநாட்டில் பங்கெடுக்க வேண்டும், பங்கெடுக்கத் தேவை இல்லை என்பதையெல்லாம் அடுத்த நாட்டில் இருந்து வந்த அமைச்சர் ஒருவர், இந்தியப் பிரதமரின் இல்லத்துக்கு அருகில் அமர்ந்துகொண்டு பேசுகிறார் என்றால், அவருக்கு இந்தத் துணிச்சலைக் கொடுத்தது யார்? மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசாங்கம்தான் எனில்... வெட்கக் கேடு!" என்று நொந்துகொண்டு "ஆனந்தவிகடன்" எழுதியுள்ளது.

"ஆனந்த விகடன்" இந்த அளவிற்கு வேதனைப்பட்டு தலையங்கம் எழுதியிருக்கிறது என்றால், இந்த மீனவர்கள் பிரச்சினை என்பது தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கின்றது. விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள ராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற போர் 2009ஆம் ஆண்டு முடிவடைந்தது வரையிலான இரண்டாண்டுகளில் 400 இந்திய மீனவர்கள் இலங்கைக்

கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போர் முடிவடைந்த பிறகு இந்த நான்காண்டுகளில் 1200 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

1983ஆம் ஆண்டு இலங்கையில் இனப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து 362 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் 90 மீனவர்கள் காணாமல் போய் இருக்கிறார்கள். 2009 மே மாதத்திற்குப் பிறகு 9 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 11 மீனவர்கள் காணாமல் போய் இருக்கிறார்கள். 2010ஆம் ஆண்டில் 100 மீனவர்களும், 2011ஆம் ஆண்டில் 500 மீனவர்களும், 2012ஆம் ஆண்டில் 300 மீனவர்களும், 2013ஆம் ஆண்டில் இதுவரை 253 மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தாலே, இலங்கை அமைச்சரின் திமிரான பேட்டிக்கும், போர் முடிவுக்கு வருவதற்கு முன்னரும், போர் முடிவுக்கு வந்த பின்னரும் இலங்கை அரசின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள வேறுபாட்டையும், அவற்றிற்கான பின்னணியையும் புரிந்துகொள்ள முடியும்!

இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தமிழக மீனவர்களுக்காக இந்திய அரசும், தமிழக அரசும் நடந்துகொள்ளும் விதத்தையும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் கேரள மீனவர்களுக்காகக் கேரள அரசும், இந்திய அரசும் நடந்துகொள்ளும் விதத்தையும் ஒப்பிட்டு நோக்குவதற்காக ஒரு உதாரணத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கேரளாவைச் சேர்ந்த மீனவர்கள் இரண்டு பேர் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கேரளாவில் நடுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அந்த வழியாக வந்த இத்தாலிக் கப்பல் பாதுகாவலர்கள் எந்தக் காரணமுமின்றி, அவர்களைச் சுட்டுக் கொன்றனர். இதுதொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து, இத்தாலிக் கப்பலில் பாதுகாவலர்களாக வந்த கடற்படை அதிகாரிகள் இரண்டு பேரைக் கைதுசெய்தனர். அவர்கள் மீது இந்தியச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசும் கேரள அரசும் திட்டவட்டமாகத் தெரிவித்தன. அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க ராஜ்ய ரீதியில் இத்தாலி அரசு பல்வேறு தொடர் முயற்சிகளை எடுத்தும், அவை வெற்றி

அளிக்கவில்லை. இதுதொடர்பாக இத்தாலி அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. பிரதமர் மன்மோகன் சிங், இத்தாலி அரசுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்தார். காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி அம்மையாரும் இத்தாலி அரசு துரோகம் இழைத்து விட்டதாகக் குற்றஞ்சாட்டினார்.

இத்தாலிக் கடற்படையினரால் கேரள மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட இந்த நிகழ்வில் மத்திய அரசும், கேரள மாநில அரசும் செலுத்திய அக்கறையில் நூறில் ஒரு பங்காவது தமிழக மீனவர்களுக்காகவும் செலுத்திட மத்திய அரசும், தமிழக மாநில அரசும் முன்வருமேயானால், பல்வேறு பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டுவிடும்.

மேலும் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது, சிங்களக் கேப்டன் ஒருவர், அடிக்கடி தமிழக மீனவர்களை, தமிழக எல்லைப் பகுதிக்குள்ளேயே வந்து தாக்கி வருவதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், அந்தக் கேப்டனைக் கைது செய்ய நமது கடற்படைக்கு உத்தரவிட்டார். நமது கடற்படை வீரர்களும் சிங்களக் கேப்டனைப் பிடித்து வந்து, மண்டபத்தில் சிறை வைத்தனர். அதன் பிறகு அந்தக் கேப்டனையும், சக இலங்கை வீரர்களையும் மன்னிப்புக் கேட்க வைத்து, இலங்கை அரசு திரும்பப் பெற்றது.

இந்தச் சம்பவத்தை இந்திய அரசும் தமிழக அரசும் நினைவிலே கொண்டு, இந்திராகாந்தி அம்மையார் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் போலத் தீவிரமான நடவடிக்கை தற்போதும் எடுக்கப்பட்டால் மட்டுமே, இலங்கை அரசு வழிக்கு வரும், இலங்கை அமைச்சர்களும் தங்கள் மனம் போனபடி பேசுவதை நிறுத்திக்கொள்ள முன்வருவார்கள், தமிழக மீனவர்களும் காப்பாற்றப்படுவார்கள்!

தமிழக மீனவர்கள் பல ஆண்டுகளாகச் சந்தித்து வரும் பிரச்சினைகள் நிரந்தரமான முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கில்தான், கடந்த ஆண்டு 12-8-2012 அன்று சென்னையில் "டெசோ" சார்பில் நடைபெற்ற "ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாட்டில்" நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாக,

> "இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பையும், நிவாரணத்தையும் உறுதி செய்யும்போது, இலங்கைக்

கடற்படையினால் இந்திய மீனவர்கள் மீது தொடுக்கப்படும் கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது நமது இன்றியமையாக் கடமையாகிறது. இலங்கைக் கடற்படையால் நிராயுத பாணிகளாக இருக்கும் அப்பாவித் தமிழக மீனவர்கள் ஈவிரக்கமின்றித் தாக்கப்படுகின்றனர்; கைது செய்யப்படுகின்றனர்; சுட்டுக் கொல்லப்படுகின்றனர்; அவர்களது மீன்பிடிப் படகுகள் மூழ்கடிக்கப்படுகின்றன; அவர்கள் பிடித்த மீன்கள் கைப்பற்றப்படுகின்றன. தமிழ் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகின்றனர்.

இந்தியாவின் நிர்வாக எல்லைக்குட்பட்டிருந்த கச்சத்தீவு இலங்கை அரசு வசம் ஒப்படைக்கப்பட்டதால், மீனவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றாலே இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தித் துன்புறுத்துகிறார்கள்.

> இந்தக் கொடுமைக்கொரு முடிவுகட்ட, கச்சத் தீவை இந்தியா மீண்டும் தனது ஆளுகையின்கீழ்க் கொண்டு வருவதோடு தனுஷ்கோடி அல்லது மண்டபம் முகாமில் இந்தியக் கடற்படைத் தளம் ஒன்றை இந்திய அரசு நிறுவ வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது"

– என்று நிறைவேற்றப்பட்டதையும் இந்த நேரத்தில் நினைவிலே கொண்டு, இந்திய அரசும், தமிழக அரசும் இந்திய மீனவர்களை சிங்களக் கடற்படையினரின் கொடுமைகளிலிருந்து காப்பாற்ற உடனடியாக இந்தியக் கடற்படைத் தளம் ஒன்றினை தனுஷ்கோடி அல்லது மண்டபம் முகாமில் அமைத்திடவும், அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் அணுகுமுறையைப் பின்பற்றவும் முன்வர வேண்டுமென்றும், மீனவர் பிரச்சினைக்கு இது ஒன்றே நிரந்தரத் தீர்வாக அமையுமென்பதால் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-8-2013

3799. இந்தச் சோதனையிலும் இந்தியா வெற்றி பெறும்!

உடன்பிறப்பே,

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து 68.80 என வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து அமெரிக்கா தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் டாலரின் மதிப்பை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாகவும், அதன் விளைவாகத்தான் இந்தியா, இந்தோனேசியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா, துருக்கி போன்ற நாடுகளின் நாணயங்களின் மதிப்பு வேகமாகச் சரிந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு 17 ஆண்டுக் காலம் இந்தியப் பிரதமராக இருந்தார். அப்போது அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 4.76. இந்திராகாந்தி 15 ஆண்டுக் காலம் பிரதமராக இருந்திருக்கிறார். அப்போது ரூபாயின் மதிப்பு 11.36 என்பதைத் தாண்டவில்லை. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது ரூபாயின் மதிப்பு 16.22 ஆகவும், பி.வி. நரசிம்ம ராவ் பிரதமராக இருந்த போது ரூபாயின் மதிப்பு 35.43 ஆகவும், வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது ரூபாயின் மதிப்பு 45.31 ஆகவும் இருந்ததுதான், தற்போது பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் ஒன்பதாண்டுக்கால ஆட்சியில் ரூபாயின் மதிப்பு 68.80 என்ற அளவிற்கு வரலாறு காணாத வகையில் மிகப் பெரிய வீழ்ச்சியைச் சந்திக்க வேண்டிய அதிர்ச்சியூட்டும் நிலை உருவாகி இருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை, 23-8-2013 அன்று சரிவில் இருந்து லேசாக மீண்டு ரூபாயின் மதிப்பு 64 ஆகி இருந்தது, 26-8-2013 அன்று 64.31 ரூபாய் என்றாகி, 27-8-2013 அன்று 66.24 என்ற அளவிற்கு ஒரே நாளில் 193 காசுகள் ரூபாயின் மதிப்பில் இழப்பு ஏற்பட்டது. அதாவது பத்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு ஒரே நாளில் 3 சதவிகிதம் வீழ்ச்சி அடைந்தது.

28-8-2013 அன்றும் நிலைமையில் முன்னேற்றமில்லை. மேலும் சரிவுதான் ஏற்பட்டது. காலையில் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 67.06 ஆகச் சரிந்து, பிறகு 67.18, 67.35, 67.37, 67.40 என்றெல்லாம் ஆகி, 68.80 ரூபாய் என்ற அளவிற்கு மதிப்புக் குறைந்தது. தொய்வடைந்திருக்கும் இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தி வலுவூட்டாவிட்டால், டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 75 ஆகச் சரியும் நிலைமை உள்ளது என்று வல்லுநர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். மொத்தத்தில், நடப்பாண்டு, ஜனவரி முதல், இதுவரை, அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு 19.50 சதவிகிதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சி கண்டுள்ளது. இது இந்தியப் பொருளாதாரத்தில் இதுவரை கண்டும் கேட்டுமிராத காரிருளாகும்.

அமெரிக்க டாலரின் நிலைமை இவ்வாறிருக்க, இங்கிலாந்து பணமான "பவுண்டு"க்கு நிகராகவும் ரூபாயின் மதிப்பு சரிந்துள்ளது. ஒரு "பவுண்டு"க்கு நிகரான ரூபாயின் மதிப்பு 106 ஆகக் குறைந்துவிட்டது. ஐரோப்பிய ஒன்றிய பணமான "யூரோ" வுக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 92 ஆகவும், சுவிஸ் "பிராங்க்" மதிப்பில் ரூ.75 ஆகவும், கனடா டாலர் மதிப்பில் ரூ. 65 ஆகவும், ஆஸ்திரேலிய டாலர் மதிப்பில் ரூ. 60 எனவும், நியூசிலாந்து டாலர் மற்றும் சிங்கப்பூர் டாலர் மதிப்பில் ரூ. 50க்கும் சரிந்துள்ளது. குவைத் "தினார்" மதிப்பு இந்திய ரூபாயில் ரூ.240க்கு அதிகம் என்ற நிலையை எட்டியுள்ளது. சர்வதேசச் சந்தையில் மிகக் குறைவாக மதிப்பிடப்படும் கரன்சி தற்போது இந்திய ரூபாய்தான் என்று "தி எகானமிஸ்ட்" ஏடு குறிப்பிட்டுள்ளது.

ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால் சங்கிலித் தொடர் போன்ற விளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கடந்த சில நாட்களாகப் பங்குச் சந்தையிலும் சரிவு ஏற்பட்டு வருகிறது. முதலீட்டாளர் களின் பங்குகளின் மதிப்பு 170 லட்சம் கோடி குறைந்துள்ளது.

ரூபாய் மதிப்பு வீழ்ச்சியைத் தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறப்பட்டாலும், எதுவும் உடனடியாகப் பயனளிப்பதாகத் தெரியவில்லை. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களும், இறக்குமதி நிறுவனங்களும் டாலரை அதிக அளவில் கொடுத்தே கொள்முதல் செய்கின்றன.

எண்ணெய் நிறுவனங்கள் அதிக அளவில் அமெரிக்க டாலர்களை வாங்குவதால், அன்னிய நாடுகளில் வெளிச்சந்தையில் இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வருகிறது. சிரியா நாட்டில் நடைபெற்று வரும் கலவரத்தால் 27-8-2013 அன்று லண்டன் வர்த்தகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை 0.4 சதவிகிதம் உயர்ந்தது. விலை மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில், 80 சதவிகிதத்தை வெளிநாடுகளிலே இருந்துதான் இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது. எனவே கச்சா எண்ணெய் விலை உயர்வ தால், இறக்குமதிக்கான செலவு அதிகரித்து டாலர் மேலும் அதிகமாக நமது நாட்டிலிருந்து வெளியேறும். அதன் காரணமாக மத்திய அரசின் பெட்ரோலிய மானியச் சுமை அதிகரிக்கும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பல பொருள்களுக்கான உதிரி பாகங்களை வெளிநாடுகளிலே இருந்துதான் வாங்க வேண்டும். இவ்வாறு ரூபாய் மதிப்பு சரிவால் டி.வி., செல்போன், லேப்-டாப், பிரிண்டர்கள் போன்றவற்றின் விலை உயரும். மின்னணுச் சாதனங்களைத் தயாரிக்கும் நிறுவனம் இவற்றின் விலையை 5 முதல் 7 சதவிகிதம்வரை உயர்த்த முடிவு செய்திருக்கிறதாம். "சோனி" நிறுவனம், தனது தயாரிப்புகளின் விலையை 4 முதல் 6 சதவிகிதம்வரை உயர்த்த முடிவு செய்திருக்கிறதாம். கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டர் தயாரிப்பு நிறுவனங்களோ 8 சதவிகிதம் விலையை உயர்த்த முடிவு செய்திருக்கின்றன.

நுகர்வோர் சாதனங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களுக்குத் தேவையானவற்றில் பாதியை வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கின்றன. கச்சா எண்ணெய், பருப்பு, சமையல் எண்ணெய், உரம், நிலக்கரி போன்றவற்றின் இறக்குமதிச் செலவுகள் அதிகரித்துப் பணவீக்கம் மேலும் உயரும். ஜூலை மாதத்தில் மொத்த விலை பண வீக்கம் 5.79 சதவிகிதமாகவும், சில்லறை விலை பணவீக்கம் 9.64 சதவிகிதமாகவும் உயர்ந் துள்ளது.

மெட்ரோ ரெயில் பணிகள் டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், ஐதராபாத் ஆகிய நகரங்களில் நடைபெற்று வருகின்றன. மெட்ரோ ரெயில்பணிகளை வெளிநாட்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வருவதால், இந்திய ரூபாய்

மதிப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் காரணமாக, ஏற்கனவே இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட கூடுதல் நிதி ஒதுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களுக்கும், பொறியாளர்கள் போன்ற பணியாளர்களுக்கும் டாலர்களில்தான் ஊதியம் வழங்கப்படுகிறது.

மத்திய முன்னாள் அமைச்சரும், பா.ஜ.க. தலைவர்களில் ஒருவருமான யஷ்வந்த் சின்கா அவர்கள், ''ரூபாயின் மதிப்பு கடுமையாகச் சரிந்து வருவதற்குப் பொறுப்பேற்று மத்திய அரசு பதவி விலக வேண்டும், அரசு பதவி விலகினால் மட்டுமே நெருக்கடியைச் சமாளிக்க முடியும், காங்கிரஸ் கூட்டணி அரசு பதவியில் இருந்து செல்ல வேண்டிய நேரம் இது, அப்போதுதான் பொருளாதாரம் சீரடையும், இந்தியப் பொருளாதாரத்தின் மீது முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்'' என்றெல்லாம் கூறியிருக்கிறார். மேலும் பல எதிர்க்கட்சித் தலைவர்களும் பொருளாதார ரீதியாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு படுதோல்வி அடைந்துவிட்டது, இந்த அரசுக்குப் பதவியில் நீடிக்க அருகதை இல்லை என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். இந்தியாவைப் பொருளாதார "சுனாமி" தாக்கியுள்ளதாகவும், இதற்கு மன்மோகன் சிங், ப. சிதம்பரம், மாண்டெக்சிங் அலுவாலியா ஆகியோர்தான் பொறுப்பு என்றும் அவர்கள் குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் நிறைவான பொருளாதார அறிவு படைத்தவர்தான். அவர்தான் இருபதாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். பழைய பொருளாதார உத்திகள் பலனளிக்காது என்றால், புதிய முறைகளைக் கையாண்டு வெகுவிரைவில் தீர்வு காண வேண்டும்.

மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள், ரூபாய் மதிப்பு சரிவைக் கட்டுப்படுத்த மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும், நிதிப்பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8 சதவிகிதமாகக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சொல்லியிருக்கிறார். மேலும் செய்தியாளர்களிடம் கூறும்போது, "ரூபாயின் மதிப்பு இலக்கைக் கடந்து சென்றுள்ளது; ரூபாய் மதிப்பு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது; நாம் பொறுமையாக இருக்க வேண்டும்; உறுதியாக இருக்க வேண்டும்; என்ன தேவையோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம்; ரூபாய்

அதன் சரியான மதிப்பை எட்டும்" என்றும் தெரிவித்திருக்கிறார். தான் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றபோது, பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருந்தது என்றும்; முன்னாள் நிதியமைச்சர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் அரசின் பொருளாதார சுமை அதிகரித்து விட்டதாகவும்; ஆனால் அதேநேரத்தில் தொழில் வளர்ச்சியோ, அல்லது வேளாண் மேம்பாடோ எதிர்பார்த்த அளவுக்கு நிகழவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அவரும் ரூபாயின் மதிப்பு எப்போது வலுவடையும் அல்லது உயரும் என்பதற்குக் காலக்கெடு எதையும் நிர்ணயிக்க முடியாது என்று கூறியிருக்கிறார்.

இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய நிதியமைச்சர் முன்மொழிந்துள்ள பத்து அம்சத் திட்டத்தில் நிதிப் பற்றாக்குறையை 4.8 சதவிகிதத்திற்குள் அடக்க வேண்டும்; நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை 7 ஆயிரம் கோடி டாலருக்குள் அடக்கிட வேண்டும்; நிதி ஆதார நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும்; மூலதனத்தை அதிகரிக்க வேண்டும்; முடங்கிக் கிடக்கும் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்; பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டை உயர்த்த வேண்டும்; மூலதனச் செலவை அதிகரிக்க வேண்டும்; பொதுத்துறை வங்கிகளின் செயல்பாட்டை உயர்த்த வேண்டும்; ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும்; தொழில்துறை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றெல்லாம் பட்டியலிட்டிருக்கிறார்.

இவருக்குப் பதிலளிக்கும் வகையில் இன்று "தினமணி"யில் கட்டுரை தீட்டியிருக்கும் எஸ். குருமூர்த்தி, "இந்திய ரூபாயின் மதிப்பு கடுமையாக வீழ்ச்சி அடைவதை 18 மாதங்களாக மௌன சாமியாராகப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, ரூபாயின் மதிப்பை நிலை நிறுத்துவதற்கு நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைக்கப்போவதாக ஆகஸ்ட் 12ஆம் தேதி அறிவிக்கிறார் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்" என்று சாடியிருக்கிறார்.

நடப்பு கணக்குப் பற்றாக்குறையை 7 ஆயிரம் கோடி டாலருக்குள் அடக்க வேண்டுமென்று நம்முடைய நிதியமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார். நடப்புக் கணக்குப் பற்றாக்குறை, அதாவது Current Account Deficit என்றால் என்ன என்பதைச் சற்றுப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் அன்னியச் செலாவணி கொடுத்து,

இறக்குமதி செய்யும் மொத்தத் தொகைக்கும், ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணிக்கும் உள்ள இடைவெளிதான், நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அல்லது நடப்புக் கணக்கு உபரி. நாம் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்தால் நடப்புக் கணக்கில் உபரி ஏற்படும். நாம் அதிக அளவுக்கு இறக்குமதி செய்தால் நடப்புக் கணக்கில் பற்றாக்குறை ஏற்படும். இந்தப் பற்றாக்குறை அதிகமாக ஏற்படும்போது, பொருளாதார நெருக்கடியை உண்டாக்கும். நடப்புக் கணக்குப் பற்றாக்குறை என்பதுதான்; தற்போது 8900 கோடி டாலர் பற்றாக்குறையாக அதிகரித்துள்ளது.

இந்த அளவிற்கு நடப்புக் கணக்கு பற்றாக் குறை அதிகமாகக் காரணம், கச்சா எண்ணெய், தங்கம் ஆகியவற்றை அதிகமாக இறக்குமதி செய்வதுதான் என்று அரசு தெரிவிக்கும் காரணம் மட்டுமே உண்மையானதல்ல.

நாம் இறக்குமதியைப் பற்றிப் பேசும்போது, இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களைப் பற்றியும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தயாரிப்பாளர் ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்காக மூலப் பொருளை இறக்குமதி செய்வதுதான் மூலதனப் பொருள் இறக்குமதி. அப்படி மூலப் பொருளை இறக்குமதி செய்து, புதிய பொருள்களைத் தயாரித்து அதிக விலைக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இறக்குமதியால் ஏற்படும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியும்.

2004-2005இல் மூலப் பொருள்களின் இறக்குமதி 2550 கோடி டாலர் அளவுக்கு இருந்தது. தற்போது 58700 கோடி டாலருக்கு மூலப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதுபோன்ற காரணங்களால்தான் டாலர் மதிப்பு மிகவும் உயர்ந்து, அதற்கு நிகரான இந்திய ரூபாயின் வெளிமதிப்பு வரலாறுகாணாத அளவிற்கு வீழ்ச்சி அடைந்து வருகிறது. இந்த ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை ரூபாய் மதிப்பு 18 சதவிகிதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன் காரணமாக இந்த நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 5 சதவிகிதத்திற்கும் கீழே செல்லும் என்று கூறப்படுகிறது.

“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்”

அதாவது, "இருப்பது, இயற்றக்கூடியது, இனியும் ஈட்டக்கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பதுபோல் தோன்றினாலும் கூட இல்லாமல் மறைந்து போய்விடும்"

(திருக்குறள்-கலைஞர் உரை) என்ற அய்யன் வள்ளுவரின் எச்சரிக்கையைக் கருத்திலே கொண்டு பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். நமது இயற்கை வளங்கள் எல்லையற்றவை. நமது மனித வளம் ஈடுஇணையற்றது. இந்தியா விடுதலை அடைந்ததற்குப் பின்னர் எத்தனையோ சவால்களைச் சந்தித்து முன்னேறி வருகிறது. தற்போது ஏற்பட்டுள்ள இந்தப் பொருளாதாரச் சோதனையிலும் இந்தியா நிச்சயம் வெற்றிபெறும் என எதிர்பார்ப்போம்!

அன்புள்ள,

மு.க.

30-8-2013

3800. உணவுப் பாதுகாப்புச் சட்டம் - இலாபமா? நட்டமா?

உடன்பிறப்பே,

உண்மைகளைத் திரித்துக் கூறுவதும், பொய்யான தகவல்களை ஓங்கி உரைப்பதும், முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குக் கைவந்த கலை. அந்த வகையில்தான் உணவுப் பாதுகாப்பு மசோதாவிற்கு ஆதரவு தெரிவித்ததால், "தி.மு.க.வின் இரட்டை வேடம் வெளிச்சத்திற்கு வந்துவிட்டது" என்று அங்கலாய்த்து நீண்ட நெடிய அறிக்கை ஒன்றை ஜெயலலிதா விடுத்திருக்கிறார். அதில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு ஏதோ தமிழகத்திற்கு எதிராகவே இயற்றி உள்ளதைப் போலவும், அதனை தி.மு.க. ஆதரித்ததால், தமிழக மக்களுக்குப் பெரிய துரோகத்தை இழைத்து விட்டதாகவும் ஒரு மாயமான தோற்றத்தை உருவாக்கிட மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்.

தமிழகத்தின் மொத்த மக்கள்தொகை 7 கோடியே 21 லட்சம். மத்திய அரசின் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் ஏற்றுக்கொண்டுள்ள புள்ளி விவரப்படி, தமிழகக் கிராமங்களில் 65.55 சதவிகிதமும், நகரங்களில் 37.79 சதவிகிதமும் ஏழையெளிய மக்கள் தொகையாகும். இந்த அடிப்படையில், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்த் தமிழகத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை மக்களில் 232.70 லட்சம் பேரும்; நகரப் பகுதிகளில் 131.88 லட்சம் பேரும் பயனடைவார்கள். நகரங்களிலும், கிராமங்களிலுமாகச் சேர்த்துத் தமிழகத்தில் 364.58 லட்சம் ஏழை மக்கள் இந்த சட்டத்தின்கீழ் பயன்பெறுவார்கள்.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் (AAY) சேர்க்கப்பட்டுள்ள, பரம ஏழைகளான 18.65 இலட்சம் பேருக்கு, தற்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ஒன்றுக்கு 35 கிலோ வீதம், மாதம் ஒன்றுக்கு 65 ஆயிரம் டன் என்ற அளவில் வழங்கப்படும் அரிசியில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது.

நகரங்களிலும், கிராமங்களிலுமாகத் தமிழகத்தில் உள்ள 364.58 லட்சம் ஏழைகளில், பரம ஏழைகளான 18.65 லட்சம் பேர் போக, எஞ்சியுள்ள 345.93 லட்சம் பேருக்கு, மாதம் ஒன்றுக்கு, ஒருவருக்கு 5 கிலோ வீதம் புதிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினால் வழங்கப்படவிருக்கும் அரிசியின் அளவு 1 லட்சத்து 72 ஆயிரத்து 900 டன் ஆகும்.

இதுவரை, அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் (AAY) உள்ளப் பிரிவினருக்குக் கிலோ அரிசி ரூபாய் 3க்கு 65 ஆயிரம் டன் அரிசியும், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள (BPL) பிரிவினருக்குக் கிலோ ரூபாய் 5.65 விலையில் 1 லட்சத்து 5 ஆயிரம் டன் அளவு அரிசியும் ஆக மொத்தம் 1 லட்சத்து 70 ஆயிரம் டன் அரிசியினைத் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு வழங்கி வந்தது.

ஆனால், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகள் மற்றும் பரம ஏழைகளுக்கு இதுவரை மாதம் ஒன்றுக்கு 1 லட்சத்து 70 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்த அரிசி, இனிமேல் மாதம் ஒன்றுக்கு அரிசியின் அளவு 2 லட்சத்து 37 ஆயிரத்து 900 டன் ஆகும். (1 லட்சத்து 72 ஆயிரத்து 900 டன் + 65 ஆயிரம் டன்). இந்த அரிசியின் விலை கிலோ 3 ரூபாய் மட்டுமே.

அதாவது தமிழகம் இந்தப் பிரிவுகளின் ழ் இதுவரை பெற்று வந்ததைவிட, கூடுதலாக 67 ஆயிரத்து 900 டன் அரிசி இந்தப் புதிய சட்டத்தின் காரணமாகப் பெற்றிடவிருக்கிறது.

இப்படிக் கூடுதலாகக் கிடைக்கவிருக்கும் அரிசியால் தமிழகத்திற்கு இலாபமா? நட்டமா? என்பதை யாரும் எளிதில் புரிந்துகொள்ளலாம். ஜெயலலிதா புரிந்துகொள்ளாவிட்டால், அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

புதிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மானிய விலையான கிலோ 3 ரூபாய் வீதம் மாதத்திற்கு 2 லட்சத்து 37 ஆயிரத்து 900 டன் அரிசியை, மத்திய அரசிடம் வாங்குவதற்கு, இனிமேல் ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு 856 கோடியே 44 லட்சம் ரூபாய் மட்டுமே!

இதுவரை தமிழ்நாடு அரசுக்கு, மத்திய அரசு அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் (AAY) மாதம் ஒன்றுக்கு 65 ஆயிரம் டன் அரிசியை, கிலோ ஒன்றுக்கு ரூ. 3 வீதமும்; வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கான திட்டத்தின்கீழ் (BPL) மாதம்

ஒன்றுக்கு 1 லட்சத்து 5 ஆயிரம் டன் அரிசியை, கிலோ ஒன்றுக்கு ரூ. 5.65 வீதமும்;

வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கான திட்டத்தின் கீழ் (APL) மாதம் ஒன்றுக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் டன் அரிசியினைக் கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 வீதமும் வழங்கி வருகிறது.

இதுவரை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு, கிலோ ஒன்றுக்கு ரூ.3 வீதமும், ரூ. 5.65 வீதமும், ஆண்டு ஒன்றுக்கு மத்திய அரசு 20 லட்சத்து 40 ஆயிரம் டன் அரிசியை வழங்கி வந்துள்ளது.

இனிமேல் புதிய திட்டத்தில், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு, கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் வீதம் ஆண்டு ஒன்றுக்கு 28 லட்சத்து 54 ஆயிரம் டன் அரிசியினை மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கும்.

அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இனிமேல் 8 லட்சத்து 14 ஆயிரம் டன் அரிசியை மத்திய அரசு தமிழகத்திற்குக் கூடுதலாகப் புதிய சட்டத்தின் கீழ் வழங்கவிருக்கிறது.

இது தமிழகத்திற்கு இலாபமா? நட்டமா? என்பதை அரிச்சுவடிக் கணக்கு அறிந்திருப்போர் கூடப் புரிந்துகொள்ள முடியும். ஜெயலலிதா புரிந்துகொள்ளாவிட்டால் யார் என்ன செய்ய முடியும்?

இதுவரை, வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்காகத் தமிழக அரசு கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 வீதம், மாதம் ஒன்றுக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் டன் வீதம், ஒவ்வொரு ஆண்டும், மத்திய அரசிடம் வாங்கி, தமிழக மக்களுக்கு வழங்கிய அரிசியின் அளவு 15 லட்சத்து 12 ஆயிரம் டன்களாகும்.

இனிமேல், கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 வீதம் மத்திய அரசிடம் தமிழக அரசு வாங்க வேண்டிய அரிசியின் அளவு மாதம் ஒன்றுக்கு 58 ஆயிரத்து 100 வீதம் ஆண்டு ஒன்றுக்கு 6 லட்சத்து 97 ஆயிரம் டன்கள் மட்டுமே! இது தமிழகத்திற்கு இலாபமா? நட்டமா? என்பதையும் நடுநிலையாளர்கள்தான் சொல்ல வேண்டும்.

நேரடியான இந்தக் கேள்விக்கு ஜெயலலிதா நேரடியாகவே பதில் சொல்லட்டும்!

வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்காக வாங்க வேண்டிய அரிசிக்காக ஆண்டு ஒன்றுக்குத் தமிழக அரசுக்கு ஆகும் செலவு 578 கோடி ரூபாயாகும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்காக வாங்க வேண்டிய அரிசிக்காக ஆண்டு ஒன்றுக்குத் தமிழக அரசுக்கு ஆகும் செலவு 856 கோடி ரூபாயாகும்.

இரண்டும் சேர்ந்து ஒட்டு மொத்தமாக ஆண்டு ஒன்றுக்கு புதிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசிக்காகத் தமிழக அரசு கொடுக்க வேண்டிய மொத்த விலை 1,434 கோடி ரூபாயாகும்.

ஆனால் தற்போது மத்திய அரசின் ஒதுக்கீட்டின்கீழ் பெறப்படும் அரிசிக்காக, தமிழக அரசு கொடுக்கின்ற விலை 2,231 கோடி ரூபாயாகும்.

எனவே உணவுப் பாதுகாப்புச் சட்டம் காரணமாகத் தமிழக அரசுக்கு ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு 797 கோடி ரூபாய் குறையும். (2,231 - 1,434) இது தமிழகத்திற்கு இலாபமா? நட்டமா? புதிய சட்டத்தைத் தி.மு.க. ஆதரித்தது சரியா? தவறா? நேரடியான இந்தக் கேள்விக்கு ஜெயலலிதா நேரடியாகவே பதில் சொல்லட்டும்!

ஆனால் இதையெல்லாம் அப்படியே மறைத்துவிட்டு, உண்மைகளை யார் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து விளக்கப் போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்த் தமிழகத்திற்குக் கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்றெல்லாம் ஜெயலலிதா சொல்லுவது அப்பட்டமான பொய்யாகும்.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கு ஜெயலலிதா கூறுகின்ற ஒரே காரணம், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்காக வழங்கப்படும் அரிசியைக் கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 விலையில்தான் வழங்க வேண்டும் என்பதுதான். இதைத்தான் அவர் கடந்த மாதம் 25-8-2013இல் வலியுறுத்தியிருந்தார்.

25-8-2013 இல் ஜெயலலிதா இந்தக் கோரிக்கையை வைப்பதற்கு முன்பாகவே 21-8-2013 அன்றே மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு.கே.வி.தாமஸ் அவர்களுக்கு, நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவரான தம்பி டி.ஆர். பாலு கடிதத்தின் மூலமாகவே கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 என்று தான் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி, அதற்கு 22-8-2013 அன்றே அந்தத் துறையின் அமைச்சர், டி.ஆர். பாலுவின் கோரிக்கை ஏற்கப்படும் என்றும், அந்தக் கோரிக்கையை மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்காக அனுப்பி யிருப்பதாகவும், விரைவில் அதுபற்றி முடிவெடுக்கப் படும் என்றும் தெரிவித்திருக்கிறார். (Dear Thiru T.R. Baalu, Please refer to your letter dated 21-8-2013 regarding National Food Security Bill, 2013. As regards the issue prices for additional allocations to be made to the State Governments over and above their entitlements under the Bill, my Ministry has sent a proposal for Cabinet Committee on Economic Affairs for fixing this price at the current APL prices, i.e., Rs. 6/10 per kg for wheat and Rs. 8/30 per kg. for rice. A decision in this matter will be taken shortly.) என்று மத்திய உணவு அமைச்சர் கையெழுத்திட்டுக் கடிதமே அனுப்பியிருக்கிறார். அதை மக்களவையில் அவர் பேசும் போதும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

டி.ஆர்.பாலு 21-8-2013 அன்று மத்திய அமைச்சருக்குக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்து, அவரும் 22-8-2013 அன்றே உறுதி கூறி பதிலளித்த கோரிக்கையைத்தான் முதலமைச்சர் ஜெயலலிதா 25-8-2013 அன்று வலியுறுத்திப் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு, அமைச்சர் கூறிய உறுதிமொழி சட்டத் திருத்தமாக ஏன் கொண்டு வரப்படவில்லை என்று தற்போது கேள்வி எழுப்பி, அதனால் அந்தச் சட்டத்தையே எதிர்க்க வேண்டுமென்று ஜெயலலிதா கூறுகிறார். வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அரிசி விலை கிலோ ரூ. 8.30 என்பதை மத்திய அரசு உயர்த்திவிடவும் இல்லை. அதற்கான ஆணை எதையும் பிறப்பித்து விடவும் இல்லை. ஆனால் ஜெயலலிதா தி.மு. கழகம் துரோகம் செய்துவிட்டது என்கிறார். இந்த நிலையில், இதிலே எங்கே இருக்கிறது துரோகம் என்பதைத் தமிழ் நாட்டு மக்கள்தான் கூறவேண்டும்.

"உணவுப் பாதுகாப்புச் சட்டம் தமிழகத்துக்கு லாபமா? நட்டமா?" என்ற தலைப்பில் இந்த மசோதா பற்றி "தினமலர்" சிறப்பு நிருபர் 30-8-2013 அன்று எழுதிய கட்டுரையின் முடிவாக இறுதியில், "உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமலுக்கு வருவதன் மூலம், தமிழக அரசுக்கு, அரிசி கொள்முதலில், மாதத்துக்கு 40.28 கோடி ரூபாய் மீதமாகும். இவ்வாறு அரசு தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன" என்று தெளிவாக எழுதியுள்ளது. மாதத்திற்கு 40.28 கோடி ரூபாய் என்றால் ஆண்டு ஒன்றுக்கு 483.36 கோடி தமிழக அரசுக்கு இந்த மசோதாவினால் மீதமாகும் என்று "தினமலர்" நாளிதழே குறிப்பிட்டிருக்கும்போது, தமிழகத்திற்குத் தி.மு. கழகம் துரோகம் செய்துவிட்டதாக ஜெயலலிதா கூறுவதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!

தேவையில்லாமல் ஜெயலலிதா இந்த அறிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை, கச்சத் தீவு பிரச்சினை, காவேரி, முல்லைப் பெரியாறு பிரச்சினைகளில் நான் ஏதோ தமிழகத்திற்குத் துரோகம் செய்து விட்டதைப்போல எழுதியிருக்கிறார். இப்படி எழுதினால்தான் இந்தப் பிரச்சினைகளில் அவர் என்னென்ன துரோகங்களைத் தொடர்ந்துசெய்தார் என்பதை ஆதாரத்தோடு நான் பட்டியலிட்டுக்காட்டி, அதைப் படிப்பதிலே அவருக்கு மகிழ்ச்சி ஏற்படும் போலும்! பிரச்சினைக்கு நேரடியாக அவரால் பதில் சொல்ல முடியாமல் போகும் நேரத்தில் எல்லாம் இப்படித் தான் எழுதியதையே மீண்டும் எழுதித் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பார்.

"மாநில சுயாட்சி" பற்றி ஜெயலலிதா இப்போதெல்லாம் பேசத் தொடங்கியிருப்பது விந்தையிலும் விந்தையாகும். மாநில சுயாட்சி பிரச்சினைக்காக நீதியரசர் ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்து, அறிக்கை பெற்று, அந்த வார்த்தைக்கு உயிர் கொடுத்ததே தி.மு. கழக அரசுதான்.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம், தமிழகம் ஏற்கனவே அனுபவித்து வந்த சலுகைகளும், உரிமைகளும் பாதிக்கப்படமாட்டா. மாறாக, ஆண்டுக்குத் தமிழ்நாட்டிற்கு ரூ. 797 கோடி அளவிற்குச் செலவு குறையும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, பெற்றுத்தந்துள்ள உண்மையை மறைப்பதற்காகவும், அரசியல்

காரணங்களுக்காக மத்திய அரசை எதிர்ப்பதற்காகவும்தான் முதலமைச்சர் ஜெயலலிதா இப்படியெல்லாம் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார்.

இப்போது இவ்வளவு வக்கணையாக அறிக்கைவிடும் ஜெயலலிதா, உணவுப் பாதுகாப்புச் சட்டமும், மத்திய அரசின் கூடுதல் நிதி உதவியும் இல்லாத நிலையில் தி.மு.கழக அரசு ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கியதை மறந்துவிட்டாரா?

மாறாக, 2003ஆம் ஆண்டில்தான் அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்தபோது "எச்" முத்திரையிட்டுக் குடும்ப அட்டை வழங்கி, இலட்சக்கணக்கான நடுத்தர ஏழையெளிய மக்கள் பெற்றுவந்த அரிசியைப் பறித்தாரே; அந்தக் கொடுமையைத் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று கருதுகிறாரா?

தமிழகத்திற்கு இதுவரை ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக வழங்கிய 36 இலட்சத்து 78 ஆயிரம் டன் அரிசியின் அளவு எந்த நிலையிலும் குறைக்கப்பட்டுவிடக் கூடாது என்று தி.மு. கழகத்தின் சார்பிலும் நேரடியாகக் கோரிக்கை வைக்கப்பட்டது. அதே கோரிக்கையை முதலமைச்சர் ஜெயலலிதாவும் பிரதமருக்கு கடிதம் மூலம் எழுதியிருந்தார். மத்திய அரசினால் இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, உணவுப் பாதுகாப்பு மசோதாவில் அது அரசு திருத்தமாகவே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. ஆனால் எப்போதும்போல ஜெயலலிதா, அந்தக் கோரிக்கை அவருடைய வலியுறுத்தல் காரணமாக மத்திய அரசு அந்தத் திருத்தத்தைச் செய்தது போலச் சொல்லிக் கொண்டிருக்கிறார். தமிழகத்தின் சார்பில் வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, அந்தச் சட்டத்தைத் தி.மு.க. ஆதரித்ததில் என்ன தவறு இருக்க முடியும்?

இதுவரை தமிழகம் பெற்றுவந்த அரிசியின் அளவு சிறிதளவும் குறைக்கப்படவில்லை.

வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு வழங்கிய அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 என்பதிலும் எந்த மாற்றமும் இருக்காது. இது நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் தம்பி டி.ஆர். பாலுவுக்கு, மத்திய உணவு அமைச்சர் எழுதிய கடிதத்திலேயே உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதிலும் உள்ள ஏழையெளிய மக்களின் பசியைப் போக்குவதற்காக இந்தச் சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. அ.தி.மு.க. சார்பில் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறவில்லை; திருத்தங்களை ஏற்க வேண்டுமென்றுதான் வலியுறுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியான பா.ஜ.க.வே இந்தச் சட்டத்தை ஆதரித்தது என்பதை மறந்துவிடக்கூடாது. அ.தி.மு.க. சார்பில் இந்தச் சட்டத்தை ஏற்கவில்லை என்றால், நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் குரல் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது, சட்டத்தை ஏற்கவில்லை என்று கூறி வெளிநடப்பு செய்திருக்கலாமே? ஏன் செய்யவில்லை? இரட்டை வேடம் போடுவது யார்? உணவுப் பாதுகாப்புச் சட்டம் - தமிழ்நாட்டிற்கு இலாபமா? நட்டமா?

அன்புள்ள,

மு.க.

3-9-2013

3801. மூடுவிழா நடத்திட முனைப்பு காட்டும் முதலமைச்சர்!

உடன்பிறப்பே,

மதுரவாயல் - துறைமுகம் உயர்மட்டப் பறக்கும் சாலைத் திட்டம் குறித்து நான் பலமுறை தெரிவித்திருக்கிறேன். மதுரவாயல்-துறைமுகம் உயர்மட்டப் பறக்கும் சாலைத் திட்டத்திற்கு 8-1-2009 அன்று மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களே நேரில் வந்து என்னுடைய முன்னிலையில் அடிக்கல்நாட்டி, திட்டம் வேகமாக நடைபெற்று வந்தபோது, தமிழக அரசினால் அந்தத் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடப்பட்டது பற்றியும், அந்தச் சாலைத் திட்டம் நடைமுறைக்கு வருமேயானால், அதன் காரணமாக எத்தனை கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அந்தப் பகுதியிலே தொடங்கப்படும் என்பது பற்றியும், தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் அந்தத் திட்டத்தைத் தொடருவதற்காக எப்படிப்பட்ட முயற்சிகளில் எல்லாம் ஈடுபட்டது என்பது பற்றியும், அந்தத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தி வந்த ஒப்பந்ததாரர், 873 கோடி ரூபாய் இழப்பீடு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தர வேண்டுமென்று வழக்குத் தொடுத்திருப்பது பற்றியும் கடந்த மாதம் 14ஆம் தேதியன்று "முரசொலி"யில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

நான் அதிலே எழுதியவாறு திருவள்ளூர், வடசென்னை, தென்சென்னை மாவட்டக் கழகங்களின் சார்பில் கடந்த 17-8-2013 அன்று நெற்குன்றத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கு ஆளுங்கட்சி அனுமதி தராமல் கைது செய்ததையும் மீறி, அந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நீதிமன்றத்திலும் தமிழக அரசின் சார்பில் பதில் மனு தாக்கல் செய்யாமல் இழுத்தடித்ததால், உயர் நீதிமன்றம் கெடுவிதித்த பிறகு, முதலமைச்சர் கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்தத் திட்டம்

பற்றி அதிகாரிகளுடன் ஆய்வு செய்ததாக, ஏடுகளில் எல்லாம் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் அந்த ஆய்வுக்குப் பிறகும் அந்தத் திட்டம் தொடரப்படுவதைப் போல எந்த அறிவிப்பும் அரசின் சார்பில் தரப்படவில்லை. மாறாக ஏற்கனவே திட்டமிட்ட வழித்தடத்தில் மழைக் காலங்களில் வெள்ள நீர் செல்வதைத் தடுக்காத வகையில் மாற்று வாய்ப்புகளைத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆராய வலியுறுத்த, முடிவு செய்தார்கள்.

"சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் மேம்பாலச் சாலைத் திட்டம் என்பது, துறைமுக வளர்ச்சிக்கான திட்டம் மட்டுமல்ல; மாநகரின் நெரிசலுக்குத் தீர்வு காண்பதோடு, மாநிலத்தின் தொழில், பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதால், மாநில அரசு தடையை நீக்கவேண்டும்" எனச் சுங்க முகவர்கள், வர்த்தக அமைப்புகள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

சென்னைத் துறைமுகம் ஆண்டுக்கு 15 இலட்சம் கன்டெய்னர்களைக் கையாண்டு வருகிறது. அன்றாடம் 4,000 கன்டெய்னர் லாரிகள் வந்து போகின்றன. போதிய சாலை வசதி இல்லாததால், நெரிசல் ஏற்பட்டு, விபத்துகள், உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்று காவல் துறை அதிகாரிகளே கருதுகிறார்கள். இதற்கெல்லாம் தீர்வாகத்தான் இந்தத் திட்டமே தீட்டப்பட்டது. பிரதமரின் ஆலோசகர் திரு. டி.கே. நாயர், மத்திய அரசின் செயலாளர் திரு. ஏ.கே. உபாத்தியாயா ஆகியோர் நேரில் சென்னைக்கு வந்து தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடமே பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலை ஆணையம் எடுத்த முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தன.

இந்த ஒரு திட்டம் மாத்திரமல்ல; அ.தி.மு.க. அரசு, கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட இதுபோன்ற எத்தனை திட்டங்களையெல்லாம் முடக்கிப்போட்டு வைத்திருக்கிறது என்பதைப் பற்றியும் நான் ஏற்கனவே பலமுறை தெரிவித்திருக்கிறேன்.

கோவை - மேட்டுப்பாளையம் இடையே 54 கிலோ மீட்டர் தூரத்திற்கு, 617 கோடி ரூபாயில், நான்கு வழிச்சாலை அமைக்க, 2012 ஜூலையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஒப்புதல் அளித்தது. இதற்கான முதற்கட்டப் பணி நடந்து வந்தது.

இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைக்கும் வகையில் தமிழக அரசு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும். ஆனால் தமிழக அரசு உடன்படிக்கையில் கையெழுத்திடாமல் இருந்தது. இதன் காரணமாக, நிலம் ஆர்ஜிதம் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கிடையே ஒப்பந்தம் கோரப்பட்டு, பணி ஆணையும் வழங்கப்பட்டது. இந்த நிலையில், சுங்கச் சாவடி அமையும் இடத்தை வேறுஇடத்திற்கு மாற்ற வேண்டுமென மாநில அரசு வலியுறுத்தியது. பின், மற்றொரு எல்லையில் அமைக்க வேண்டுமென்று கூறியது. மேலும் பல நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கோவை - மேட்டுப் பாளையம் நான்கு வழிச் சாலைத் திட்டத்தையே கைவிடுவதென முடிவு செய்தது.

28-8-2013 தேதிய "இந்து" நாளிதழிலே இந்தக் கோவை - மேட்டுப்பாளையம் பற்றி 5ஆம் பக்கத்தில் விரிவான செய்தி வெளிவந்திருந்தது. அதில், "In what could be its first salvo at the State Government, the National Highways Authority of India on Tuesday withdrew from a Project to extend National Highway-67 in Coimbatore District between Kangeyampalayam to Mettupalayam. A top NHAI official described it as the first step towards the national agency withdrawing from Tamil Nadu. This decision could have a bearing on major projects in Tamil Nadu, where the NHAI alleges it is encountering a series of hurdles from the State Government" என்று தொடங்கி விரிவாக எழுதியுள்ளது.

(காங்கேயம்பாளையம் - மேட்டுப்பாளையத்திற்கு இடையேயான சாலை அமைக்கும் திட்டத்தை, மாநில அரசுடன் உள்ள பிரச்சினை காரணமாக, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திரும்பப் பெற்றது. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தமிழகத்திலிருந்து தேசிய நிறுவனம் பின் வாங்குவதற்கான முதல் படி இது என்று தெரிவித்தார். இந்த முடிவு தமிழகத்திலே நடைபெறும் முக்கியத் திட்டங்களைப் பாதிக்கும். தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மாநில அரசிடமிருந்து தொடர்ந்து பல தடைகளைச் சந்தித்து வருவதே காரணமாகும்)

மாநில அ.தி.மு.க. அரசின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் இந்தத் திட்டம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் தற்போது கைவிடப்பட்டு விட்டது.

இதுபோலவே சிங்கப்பெருமாள் கோவில் - திருப்பெரும்புதூர் சாலையும், வண்டலூர்-வாலாஜாபாத் சாலையும் சந்திக்கும் ஒரகடம் கூட்டுச் சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 620 மீட்டர் நீளம் உள்ள ஒரு மேம்பாலத்தைக் கட்டுவதற்காக 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடிவெடுக்கப்பட்டது. 20.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மேம்பாலத்தைக் கட்டி முடிக்கும் பணி, கிழக்குக் கடற்கரை சாலை கட்டுமானப் பணி மேற்கொள்ளும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அங்கேயும் பணிகள் மிகவும் மந்தகதியில் நடைபெறுவதாகச் செய்திகள் வந்துள்ளன. இதற்கும் காரணம்; இந்த மேம்பாலம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது என்பதுதானா?

அடுத்து, திருச்சி - காரைக்குடி இடையே சுமார் 107 கி.மீ. தூரத்துக்கு நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் பணியை 374 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டது. 12-7-2010இல் தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட இத்திட்டம், இந்த ஆண்டு மே மாதத்திலேயே முடிந்திருக்க வேண்டும். இந்தச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்குத் தமிழக அரசு ஏற்கனவே தடையில்லாச் சான்றிதழ் வழங்கியிருந்தது. 90 சதவிகிதம் பணிகள் முடிந்து, மக்கள் பயன்பாட்டிற்கு வரும் நிலையில், ஏற்கனவே வழங்கப்பட்ட தடையில்லாச் சான்றிதழைத் திரும்பப்பெறும் உத்தரவை அ.தி.மு.க. அரசு பிறப்பித்தது. மக்கள் நலன்களுக்கு எதிராக இந்த உத்தரவு உள்ளதால், இதனை ரத்து செய்ய வேண்டுமென்று தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் வாதாடிய வழக்கறிஞர், இந்தச் சாலை மேம்பாட்டுப் பணிகளால் வழி நெடுகிலும் உள்ள நீர் நிலைகள் பாதிக்கப்படும் என்பதால், தடையில்லாச் சான்றிதழைத் தமிழக அரசு திரும்பப் பெற்றதில் தவறில்லை என்றார். தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பாக வாதாடிய மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பி. வில்சன், இந்தச் சாலைத்

திட்டத்தால் நீர்நிலைகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்று அண்ணா பல்கலைக்கழகம் கருத்துத் தெரிவித்துள்ளது. சென்னை ஐ.ஐ.டி. நிபுணர்கள் குழுவும் மக்களுக்குப் பல நலன்களை அளிக்கும் திட்டம் இது என்றும், இந்தத் திட்டத்தால் நீர்நிலைகள் பாதிக்கப்படாது என்றும் அறிக்கை அளித்துள்ளது. எனவே இலட்சக்கணக்கான மக்களுக்குப் பயனளிக்கும் இந்தத் திட்டத்துக்கு வழங்கிய தடையில்லாச் சான்றிதழைத் திரும்பப் பெற்ற தமிழக அரசின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சேலம் - உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தும் பணி, 2009ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்தது. 136 கிலோ மீட்டர் நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்காக 19 ஆயிரம் ஏக்கர் விளைநிலம் கையகப்படுத்தப்பட்டது. இதற்குரிய நிவாரணமாக நெடுஞ்சாலைத் துறை 250 கோடி ரூபாய் ஒதுக்கியது. சந்தை மதிப்பீட்டின்படி இழப்பீடு வழங்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கைவைத்துச் சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்தனர்.

2012 டிசம்பர் மாதத்திற்குள் உரிய இழப்பீடு வழங்க சேலம், விழுப்புரம் மாவட்டக் கலெக்டர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டனர். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகள் தரப்பில் உயர் நீதிமன்றத்தி லேயே சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் 30 சதவிகி தம் கமிஷன் கேட்பதாகப் புகார் கூறினார்கள். இந்த வழக்கில் கலெக்டருக்கு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது. விவசாயிகள் கையகப்படுத்திய நிலத்திற்கு இழப்பீடு கோரி போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியின் மற்றொரு சாதனையாக, சென்னை மாநகராட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டம் பற்றி இன்றைய (3-9-2013) "இந்து" நாளிதழ், "Proposal for flyover on Pantheon Road scrapped - Decision taken as consultant says it would be unfeasible; Proposed flyovers at PH Road, Arcot Road to be re-designed with more ramps" என்று தலைப்பிட்டுச் சென்னை மாநகரில் பாந்தியன் சாலையில் திட்டமிடப்பட்டிருந்த மேம்பாலம், சாத்தியக் கூறானதல்ல என்று "கன்சல்டண்ட்" தெரிவித்த காரணத்தால்,

அந்தத் திட்டம் கை விடப்படும் என்றும், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், ஆற்காடு சாலையில் திட்டமிடப்பட்டிருந்த மேம்பாலங்களும் திரும்ப வடிவமைக்கப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதே "இந்து" நாளிதழில் வெளிவந்துள்ள மற்றொரு செய்தியில் "கடந்த இரண்டாண்டு காலத்தில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்த மாநிலத்தில் எந்தப் பெரிய திட்டத்தையும் தொடங்கவில்லை. அதிலே முக்கியமாக, சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம்தான் நிறுத்தப்பட்ட முதல் பெரிய திட்டமாகும். மதுரவாயலில் இருந்து கன்டெய்னர்களை விரைவாகக் கொண்டு வருவதற்காக 1,815 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் தீட்டப் பட்டது. ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட திட்டத்திற்கு மாறாக இந்தப் பணி நடைபெறுவதாகக் கூறிப் பொதுப்பணித் துறையினால் கடந்த ஆண்டு இந்தத் திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இதற்கிடையே ஒப்பந்ததாரர் 873 கோடி ரூபாய் தனக்கு இழப்பீடு தர வேண்டுமென்று கோரியிருக்கிறார். சென்னைத் துறைமுகத்திலே உள்ள நெருக்கடியைத் தீர்க்கக்கூடிய ஒரு நல்ல திட்டம் இது. இந்தத் திட்டத்திற்குத் தற்போது ஏற்பட்டுள்ள நிலை, இந்த மாநிலத்திற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் ஒரு பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும்" என்று மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். மேலும் அவர், மாநில அரசு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள விரும்பினால், மீண்டும் திட்டத்தைத் தொடரத் தயாராக இருப்பதாகவும், விரைவில் கருத்து மாறுபாடுகள் தீர்க்கப்படும் என்றும் தெரிவித்ததாக "இந்து" நாளிதழ் எழுதியுள்ளது.

எனவே இந்தச் சூழ்நிலையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் என்பது எந்தத் தனிப்பட்ட யாருடைய பொறுப்பிலும் உள்ளதல்ல. மத்திய அரசின் சார்பு நிறுவனம்தான் அது. அதன் சார்பில் பல கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்கள் தமிழகத்திலே நடைபெற்றாக வேண்டும். ஒவ்வொரு திட்டத்திற்கும்; அதுவும் அந்தத் திட்டத்திற்காகப் பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்ட பிறகு, ஏதோ காரணத்தைக் கூறி முடக்கிப் போடுவது சரியல்ல. தமிழகத்தை ஆளுகிற பொறுப்பிலே உள்ளவர்கள் மத்திய அரசிடமிருந்து பல திட்டங்களைக் கேட்டு,

வாதாடிப் பெற்று, அதனை மாநிலங்களிலே நிறைவேற்ற முன்வர வேண்டுமே தவிர, இப்படியெல்லாம் ஒவ்வொரு திட்டத்தையும் காழ்ப்புணர்வோடு நிறுத்துவது என்பது நல்லதல்ல.

தி.மு. கழக ஆட்சியிலே ஓமந்தூரார் வளாகத்திலே கட்டப்பட்டது என்பதால் மூன்றாண்டுக் காலமாக அந்தக் கட்டிடங்கள் மூடப்பட்டு, முதலமைச்சரின் பிடிவாதம் காரணமாகப் பழைய தலைமைச் செயலகத்திலே நீடிப்பதால் என்ன பயன்? அங்கே கடந்த மாதம் மேலே இருந்த சுவர் கீழே விழுந்து ஒரு பெண்மணி காயப்பட்டு, மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட செய்தி வந்தது. நேற்றையதினம் தலைமைச் செயலகத்திலே மின்சாரக் கோளாறு காரணமாகத் தீ விபத்து ஏற்படுவது நல்லபடியாகத் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் முதலமைச்சர் இனியாவது யோசித்துப் பார்த்து நல்ல முடிவெடுப்பது அவருக்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது! மாறாகத் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் என்று கூறுவாரானால், பின் விளைவுகளைத் தமிழ்நாடு சந்தித்தே தீரவேண்டும்!

அன்புள்ள,

மு.க.

4-9-2013

3802. ஒகேனக்கல் திட்டமும், முத்தியால்பேட்டை காவல் நிலையமும்!

உடன்பிறப்பே,

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை "வீடியோ கான்பரன்சிங்" மூலமாக முதல் அமைச்சர் 29-5-2013 அன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே இருந்தவாறு திறந்துவைத்தார். அப்போது அவர் பேசிய நேரத்தில், கழகத்தின்மீது வழக்கம் போல் பல குற்றச்சாட்டுகளைக் கூறி, நான் அவற்றுக்கெல்லாம் 31-5-2013 அன்று விளக்கமாகப் பதில் அளித்திருந்தேன்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் ஒகேனக்கல் திட்டம் முடுக்கி விடப்பட்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா பேசினார். இந்தத் திட்டம் யார் ஆட்சிக் காலத்தில் விரைந்து திட்டம் தீட்டப்பட்டு, முடுக்கிவிடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது என்பதைப் பற்றியும், கழக ஆட்சியில் இந்தத்துறையின் அமைச்சராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் எந்த அளவிற்கு இந்தத் திட்டத்தை ஆர்வத்தோடு விரைவுபடுத்தினார் என்பதைப் பற்றியும், இந்தத் திட்டத்திற்காகக் கால அட்டவணை ஒன்றே தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில்தான் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் திட்டம் முடியக்கூடிய அளவிற்குக் கழக ஆட்சியில் முறைப்படுத்தப்பட்டு, அவ்வாறே பணிகள் நடைபெற்று வந்ததைப் பற்றியும் நான் தெளிவாகத் தெரிவித்திருந்தேன்.

ஒகேனக்கல் திட்டப்பணிகள் முழுமை பெறாமல் என்ன காரணத்தாலோ அவசர அவசரமாக இந்த ஆட்சியில் முதலமைச்சரைக் கொண்டு அதனைத் திறந்து வைத்ததைப் பற்றி நான் மாத்திரம் கூறவில்லை.

ஒகேனக்கல் திட்டப் பணிகள் முழுமை பெறவில்லை, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதற்கு அடையாளமாக "தினமலர்" நாளேடு வெளியிட்டிருந்த புகைப்படத்தையே எடுத்துக்காட்டி,

அவசர அவசரமாக இந்தத் திட்டம் தொடங்கிவைக்கப்படுவது ஏன் என்று நான் கேட்டிருந்த கேள்விக்கு முதலமைச்சர் ஏனோ இதுவரை பதிலே அளிக்கவில்லை.

நான் கூறியது உண்மை என்பதை நிரூபிக்கத்தக்க வகையில், "இந்து" நாளேட்டிலேயே "People in many rural areas were upset that the water did not reach them" (கிராமப்புறங்கள் பலவற்றுக்குக் குடிநீர் சென்று சேராததால், மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்) என்று வெளியிடப்பட்டிருந்தது.

12-8-2013 தேதிய "தினமலர்" நாளேட்டில் வெளிவந்த செய்தியில், "தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கத் துவங்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், முழுமை பெறாத நிலையில், கிராமப் பகுதிகளில், மீண்டும் "புளோரைடு" கலந்த நீரே, குடிநீராக விநியோகிக்கப்படுகிறது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலத்தடி நீரில், "புளோரைடு" அளவு, நிர்ணயிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக உள்ளது. இந்த நீரைச் சுத்திகரிக்க வழி இல்லாததால், குடிநீராகப் பருகுவோருக்கு எலும்பு, நரம்பு சம்பந்தமான நோய்களும், பல் கறைபடிதல் உள்ளிட்ட நோய்த் தாக்கமும் அதிகரித்தது. இதையடுத்து, இரு மாவட்டத்துக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க, 2008ஆம் ஆண்டு (திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்) ஜப்பான் நிதி உதவியுடன், 1,928 கோடி ரூபாய் மதிப்பில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்பட்டது. **இத்திட்டப் பணி முழுமை பெறாத நிலையில், சில மாதங்களுக்கு முன், சென்னையில் இருந்து வீடியோ கான்பரன்சிங் மூலமாக முதல்வர் ஜெயலலிதா துவக்கிவைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை, ஓசூர், தர்மபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா பகுதிகளில் திட்டப் பணிகள் ஆரம்பக் கட்டத்தில் உள்ள நிலையில், திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைத்தது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தில் 15 முதல் 20 சதவிகிதப் பணிகள் முடிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.** இத்திட்டத்தின் மூலம், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய நகராட்சிப் பகுதிகளுக்கு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டபோதும், நகராட்சிப் பகுதியில், முழு அளவில் குடிநீர் வழங்க முடியாத நிலை உள்ளது. ஒகேனக்கல் குடிநீரை,

முதலில் திட்டமிட்டபடி முழு அளவில் இரு மாவட்ட மக்களுக்கும் வழங்க வில்லை. இதனால், "புளோரைடு" கலந்த நீரையே, மக்கள் குடிநீராகப் பயன்படுத்தும் நிலை தொடர்கிறது. "போர்வெல்" தண்ணீர் மற்றும் ஒகேனக்கல் தண்ணீர் இரண்டும் கலந்தே கிராமப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது" என்று எழுதப் பட்டிருந்தது.

ஆனால் நான் எழுதியதற்கோ, "தினமலர்", "இந்து" ஆகிய நாளேடுகள் எழுதியதற்கோ ஆளும் தரப்பிலிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. முதலமைச்சர் ஜெயலலிதா அவசர அவசரமாகத் திறந்துவைத்த, அந்தத் திட்டம் எந்த நிலையிலே உள்ளது என்பதைப் பற்றித் தற்போது கடந்த மாதக் கடைசியில் 24-8-2013 தேதிய "இந்து" நாளேடு, புகைப்படத்தோடு விரிவாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியின் சுருக்கம் வருமாறு :-

"கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்ட மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நீண்ட நாட்களுக்குப் பிறகு 1,928 கோடி ரூபாய் திட்ட மதிப்பில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவங்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற வேண்டிய ஊரகப் பகுதிகளின் மக்கள் இன்னமும் அந்தத் திட்டத்தின் பலனை அனுபவிக்க முடியவில்லை என்கிற நிலைதான் இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் நிலுவையில் இருக்கும் குழாய்ப் பதிப்புப் பணிகள்தான் காரணம் என்கிறார்கள். நிலத்தடி நீரில் அதிக அளவிலான "புளோரைடு" இருப்பதன் காரணமாக இம்மாவட்ட மக்கள் பலன் அடைய வேண்டும் என்பதன் அடிப்படையில், அன்றாடம் 16 கோடி லிட்டர் தண்ணீர் காவிரி ஆற்றிலிருந்து பெறக்கூடிய வகையில் இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. ஆனால் காவிரிக் கரையோரம் உள்ள மக்கள் இன்னமும் 3 ரூபாய்க்கும், 4 ரூபாய்க்கும் ஒருகுடம் நீரை விலைக்கு வாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஏறத்தாழ 33 லட்சம் மக்களை உள்ளடக்கிய கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் ஓசூர் ஆகிய நகர மன்றங்களும், 15 நகரப் பஞ்சாயத்துக்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையும் வண்ணம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதில் பாதி அளவுக்கு என்று சொல்லத்தக்க

வகையில், 6,755 ஊரகக் குடியிருப்புகள் குடிநீர் பெற முடியாத பரிதாப நிலைதான் உள்ளது.”

இவ்வாறு எழுதியுள்ள “இந்து” நாளிதழின் செய்தியாளர், அந்தப் பகுதியிலே உள்ள ஒருசிலரைப் பேட்டிகண்டு அதையும் வெளியிட்டிருக்கிறார்.

பெண்ணாகரம் தாலுகா, நாகமறைப் பகுதியில் ஆற்றின் கரையோரம் தின்பண்டக்கடை வைத்துக் கொண்டிருக்கும் கே.சின்னப்பொண்ணு என்கிற விதவைப் பெண், “காவிரி என்னமோ கரை புரண்டுதான் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் எங்கள் கிராமத்தில் உள்ள மக்களோ குடிநீர் இன்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் முறையாகத் தண்ணீர்க் குழாய் பதிக்காததுதான்” என்று சொல்லியிருக்கிறார்.

எரியூர் கிராமத்தைச் சேர்ந்த ஆர். சின்னம்மா, எம். மாலா ஆகியோர், “இந்தத் திட்டத்தின்கீழ் இன்னமும் குழாய்கள்கூடப் பதிக்கவில்லை” என்று தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த ஆறு மாதங்களாக வண்டியில் நிலத்தடி தண்ணீர் எடுத்துவந்து விற்பனை செய்து வரும் ஏ.அன்பழகன் என்பவர், “தனியார் ஒருவரிடம் 1000 லிட்டர் நிலத்தடி நீரை 50 ரூபாய்க்கு வாங்கிவந்து விற்பனை செய்து வருகிறேன்” என்று கூறியிருக்கிறார்.

மேலும் சிலருடைய பேட்டியையும் “இந்து” வெளியிட்டிருக்கிறது. தி.மு.கழக ஆட்சியில் பெரிதும் பாடுபட்டு, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வழங்குவதற்காகத் தொடங்கப்பட்ட திட்டத்தை ஏதோ தாங்கள்தான் நிறைவேற்றினோம் என்பதைப் போலக் காட்டிக் கொள்வதற்காகத் திட்டம் முடிவடையாத நிலையிலேயே அவசர கதியில் அரைகுறையாக ஒகேனக்கல் திட்டம் தொடங்கப்பட்டது. அதைத்தான் அந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நேரத்திலேயே நான் விளக்கியிருந்தேன்.

முதலமைச்சர் ஜெயலலிதாவால் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டு மூன்று மாதம் ஆகிறது. ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் சுமார் 90 சதவிகித இடங்களுக்கு அ.தி.மு.க. அரசால் இன்னும் குடிநீர் வழங்க முடியவில்லை. குறிப்பாகக் கிருஷ்ணகிரி, ஓசூர் நகராட்சிப் பகுதிகளில்

வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் தண்ணீரும் பழைய நீர்த் தேக்கத் தொட்டிகள், பழைய குழாய்கள் மூலம் "ப்ளோரைடு" கலந்த நீரே வினியோகிக்கப்பட்டு வருகிறதாம். அந்த மாவட்டங்கள் முழுவதும் பல்வேறு இடங்களில் தண்ணீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடி, தாய்மார்கள் காலிக்குடங்களோடு சாலைக்கு வந்து போராட்டம் நடத்துகிறார்கள்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களுக்கு முழுமையாக ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத் தண்ணீரை வழங்கக்கோரி, அந்த மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த 29-8-2013 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டு, அதற்குக் காவல் துறையினரிடம் அனுமதி கோரிப் பத்து நாட்களுக்கு முன்பே மனு தரப்பட்டது. ஆர்ப்பாட்டம் குறித்துச் செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் இதுபற்றிய செய்தியும் வெளியிடப்பட்டது.

ஆனால் போராட்டத்திற்கு முதல் நாள் இரவு ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் காவல்துறை அனைத்து ஒன்றியங்களிலும் நோட்டீஸ் ஒட்டியது. எனினும், அதையும் பொருட்படுத்தாமல், கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பத்து இடங்களில் தாய்மார்கள் காலிக்குடங்களுடன் முழக்கமிட்டனர். மாவட்டம் முழுவதிலும் மாவட்டக் கழகச் செயலாளர் டி.செங்குட்டுவன் உட்பட பத்தாயிரம் பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டனர். நான் குறிப்பிட்ட இந்த விவரங்களிலிருந்து ஒகேனக்கல் திட்டப் பணிகள் முடிவடையாமலேயே அவசர அவசரமாக முதல் அமைச்சர் ஜெயலலிதாவே இதனைத் தொடங்கிவைத்தார் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

எதிர்க்கட்சிகள் உண்மையான நிலையை எடுத்துக் கூறினாலும் அதை ஏற்பதில்லை. ஏடுகள் விளக்கி ஆதாரப்பூர்வமாகத் தெரிவித்தாலும் அதையும் கவனிப்பதில்லை. யார் என்ன செய்ய முடியும்? முழுமை அடையவில்லை என்றாலும் நாங்கள் தொடங்கிவைப்பதுதான் திட்டம்; அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த நாட்டு மக்களின் தலைவிதி என்ற மனப்பான்மையோடு அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுகிறது என்பதற்கான மற்றொரு சான்றுதான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

தி.மு.கழக ஆட்சியில் திட்டமிடப்பட்ட திட்டங்கள் என்றால் அதற்கு மூடுவிழா நடத்தப் பார்ப்பதும், வேகமாக நடைபெறும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான பணிகளுக்குத் தடை போடுவதும், தவிர்க்க முடியாமல் ஒருசில திட்டங்கள் தொடங்கப்பட்டுவிட்டால், அந்தத் திட்டத்தை இப்படி அரைகுறையாக நிறைவேற்றுவதும் இந்த அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்கதையாக நீண்டுகொண்டே போகிறது. முடிவு அடையாத திட்டங்களை அவசரப்பட்டுத் திறந்து வைத்ததற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் உதாரணம் என்றால், முடிவடைந்த பணிகள் முதல் அமைச்சரின் தேதிக்காகக் காத்திருப்பதற்கும் உதாரணம் கூறுகிறேன்.

காவல் துறைக்கு இதைச் செய்தோம், அதைச்செய்தோம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களது ஆட்சியில் சென்னை மாநகரில் முத்தியால் பேட்டை காவல் நிலையம் - உபயோகத்தில் இல்லாத - மாநகராட்சிப் பள்ளி ஒன்றிலே நடைபெறுவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கடந்த மூன்றாண்டு காலமாக முத்தியால்பேட்டை காவல் நிலையம் இந்தப் பள்ளியிலேதான் செயல்பட்டு வருகிறது. முத்தியால்பேட்டை காவல் நிலையத்திற்காக ஒரு புதிய கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டு விட்டது. ஆனால் அதனைத்திறந்து வைப்பதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் தேதிக்காகக் காத்திருக்கிறதாம். தற்போது காவல் நிலையம் நடைபெறும் இரண்டு மாடிப் பள்ளிக் கட்டிடம் பொதுப்பணித் துறையினரால் ஆபத்தானது என்று கூறப்பட்டது. ஆனால் அங்கேதான் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய காவல் துறையினர் பணியாற்றி வருகிறார்களாம். இந்தக் காவல் நிலையத்திற்கான மூன்று மாடி புதிய கட்டிடம், ஓராண்டு காலமாகப் பணி முடிந்த நிலையில் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. 80 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தில் 30 அறைகள் இருக்கிறதாம்.

இதைப் போலவேதான் செம்பியம் காவல் நிலையமும் கடந்த மூன்றாண்டு காலமாக வாடகைக் கட்டிடம் ஒன்றில் காலம் தள்ளுகிறதாம். அங்கேயும் காவல் துறை நண்பர்கள் 120 பேர் வசதிக் குறைவான இடத்தில் கடமை ஆற்றுகிறார்கள். ஆனால் புதிய காவல் நிலையக் கட்டிடம் திறப்பு விழாவிற்கான தேதி இன்னும் கிடைக்கவில்லையாம்.

என்னுடைய இந்தக் கருத்துக்குப் பிறகாவது முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு அன்றாடம் கடிதம் எழுதுவதோடு, ஐந்து நிமிட நேரத்தை ஒதுக்கி, "வீடியோ கான்பரன்ஸ்" மூலமாகமாவது இந்தக் காவல் நிலையக் கட்டிடங்களைத் திறந்துவைக்க முன்வருவார் என்று எதிர்பார்க்கிறேன். காவல்துறை அதிகாரிகள் அதுவரை இந்தப் புதிய காவல் நிலையக் கட்டிடங்கள் கழக ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டவை என்பதை முதலமைச்சரிடம் கூறாமல் இருப்பது நல்லது!

இந்த ஆட்சியில் எவ்வாறு முடிவடையாத பணிகளை அவசரப்பட்டுத் தொடங்கிவைக்கிறார்கள் என்பதற்கும், முடிந்த பணிகளைத் திறந்து வைக்காமல் எவ்வாறு காலம் கடத்துகிறார்கள் என்பதற்கும் இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இனியாவது முதலமைச்சர் இதுபோன்ற குறைபாடுகள் எதிர்க்கட்சியினரால் கூறப்படும்போது, உடனே அவதூறு வழக்கு என்று காவல்துறையினரை ஏவி விடாமல் உண்மையைப் புரிந்துகொண்டு மக்களுக்குத் தொண்டாற்ற முற்பட்டால் ஆட்சியிலே எஞ்சியுள்ள இரண்டரை ஆண்டுகளிலாவது தமிழ்நாட்டு மக்களுக்காக ஓரளவு பயன்பட்டோம் என்ற பெருமை அவருக்கு வந்துசேரக்கூடும்!

அன்புள்ள,

மு.க.

6-9-2013

3803. கழக ஆட்சியில் மகளிர்க்கான மகத்தான திட்டங்கள்!

உடன்பிறப்பே,

"முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு" என்று நாளேடுகளில் இன்று பரபரப்புடன் வெளிவந்துள்ள செய்தி என்னவென்றால், திருமண உதவித் திட்டங்களுக்கான வருமான உச்ச வரம்புத் தொகையை ஜெயலலிதா உயர்த்தி அறிவித்திருக்கிறார் என்பதுதான். மேலும் 22 லட்சத்து 23 ஆயிரத்து 243 ரூபாய்ச் செலவில் சமையல் உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளாராம். 2013-2014 ஆம் ஆண்டில், மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் மாத்திரம் 1 லட்சத்து 18 ஆயிரத்து 580 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முதல் அமைச்சரின் இன்றைய அறிவிப்பு ஒரு கோடி ரூபாய் மதிப்புடையதுகூட அல்ல; வெறும் 22 லட்சம் ரூபாய்க்கு மட்டுமே உரியதாகும்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய இரண்டு திருமண நிதி உதவித் திட்டங்களுக்கு இதுவரை நிர்ணயிக்கப்பட்டிருந்த குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24 ஆயிரம் ரூபாயிலிருந்து 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்கப்படுகிறது என்று முதல் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

தமிழக அரசின் சார்பில் நடைமுறையில் ஐந்து திருமண உதவித் திட்டங்கள் உள்ளன. ஏற்கனவே தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த ஐந்து திருமண உதவித் திட்டங்கள்தான் இப்போதும் உள்ளன. அதாவது 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்; 2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்; 3. ஈ.வெ.ரா. மணியம்மையார்

நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்; 4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்; 5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்று கழக ஆட்சியில் இயங்கி வந்தன.

தற்போது ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சிக் காலத்திலும் இந்த ஐந்து திட்டங்களும் தொடர்கின்றன. ஆனால் ஒரே ஒரு மாற்றம். என்ன தெரியுமா? அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்பதை - அஞ்சுகம் அம்மையார் என்னுடைய தாய் என்ற காரணத்தால் - அந்தத் திட்டத்திற்கான பெயரை மாத்திரம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்று மாற்றி வைத்துக் கொண்டார்கள். எவ்வளவு பெரிய பதவி? எவ்வளவு சிறிய எண்ணம்?

அது எப்படியோ போகட்டும்; பெயரிலே என்ன இருக்கிறது? அந்த ஐந்து திட்டங்களில் மூன்று திட்டங்களுக்கு ஏற்கனவே வருமான வரம்பு என்பது கிடையவேகிடையாது. இரண்டு திட்டங்களுக்கு மட்டும் வருமான வரம்பு 24 ஆயிரம் ரூபாயாக இருந்ததை, இனி அறவே கிடையாது என்றுகூட அறிவிக்கவில்லை, வருமான வரம்பை 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அவ்வளவுதான்!

இந்த இரண்டு திட்டங்களில் ஒன்று மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம். இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா? பெண் கல்வியை ஊக்குவித்து உயர்த்தும் நோக்கில், 8ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் திருமணத்திற்கென அவர்களின் பெற்றோருக்குத் திருமண நிதி உதவித் தொகையை 5 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் 3-6-1989 அன்று முதல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது.

பின்னர் திருமண நிதி உதவி பெறுவதற்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பாகவும், திருமண நிதி உதவித் தொகை 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி ஜெயலலிதா தலைமையில்

ஏற்பட்டதும், தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காக 1-4-2002 முதல் நிறுத்தப்பட்டு விட்டது.

2006ஆம் ஆண்டு மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டவுடன், இந்தத் திருமண நிதி உதவி அளிக்கும் திட்டம் திரும்பவும் நடைமுறைப்படுத்தப் பட்டதோடு, திருமண நிதி உதவியும் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 20-3-2008 முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாயாகவும், 1-4-2010 முதல் 25 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோரின் குடும்ப ஆண்டு உச்ச வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 24 ஆயிரம் ரூபாயாகவும் தி.மு.கழக ஆட்சியிலேயே உயர்த்தப்பட்டது.

2006க்குப்பின் 4 இலட்சத்து 64 ஆயிரத்து 756 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 880 கோடியே 55 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டு, ஏழைக் குடும்பங்கள் தி.மு.கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் பயனடைந்துள்ளன.

2011ஆம் ஆண்டு முதல் தி.மு.கழக ஆட்சி தொடர்ந்திருக்குமேயானால், இந்த வருமான வரம்பு என்பதே மற்ற மூன்று திட்டங்களுக்கும் இல்லாமல் செய்திருப்பதைப் போல, ஐந்து திட்டங்களுக்கும் வருமான உச்ச வரம்பே இல்லை என்றாக்கப்பட்டிருக்கும். அதற்கு மாறாகத் தற்போது உச்ச வரம்பை 24 ஆயிரம் ரூபாய் என்பதை 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.

மற்றொரு திட்டமான, டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம், இளம் வயது விதவைகள், மறுமணம் செய்து புது வாழ்வு பெறுவதை ஊக்குவிக்கும் சமுதாயச் சீர்திருத்தத்தினைக் கருத்திலே கொண்டு, 1975ஆம் ஆண்டு அடியேன் முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவியாக வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரம் ரூபாய்,

20-11-2008 முதல் 20 ஆயிரம் ரூபாயாகவும், பின்னர் 25 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்! இத்திட்டத்தின்கீழ் கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 910 ஏழை விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள 1 கோடியே 72 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவைத் தாய்மார்களின் மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ்க் கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 16,365 பெண்களின் திருமணங்களுக்காக 30 கோடியே 32 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ்க் கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 2220 பெண்களின் திருமணங்களுக்காக 4 கோடியே 58 ஆயிரம் ரூபாய் நிதி உதவிவழங்கப்பட்டது.

இந்த ஐந்து திருமண நிதி உதவித் திட்டங்களின்கீழ் ஐந்தாண்டுகளில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 4 இலட்சத்து 95 ஆயிரத்து 634 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்காக மொத்தம் 937 கோடியே 50 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

சமுதாயத்தில் காணப்படும் சாதி வேறுபாடுகளைக் களையும் பொருட்டும், வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கும் பொருட்டும், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்த, கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் 1-7-1967 முதல் தி.மு.கழக ஆட்சியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கழக ஆட்சியில் 2006-2011ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 11 ஆயிரத்து 383 தம்பதியருக்கு 20 கோடியே 89 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கான பெயரைத்தான் நீக்கிவிட்டு, ஏற்கனவே தி.மு. கழக ஆட்சியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்திற்கு வைக்கப்பட்டிருந்த பெயரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பெயரை அ.தி.மு.க. ஆட்சியிலே சூட்டியிருக்கிறார்கள். இந்தக் கலப்புத் திருமணத் திட்டத்தின்கீழ்

பயனடைவோருக்கும் ஏற்கனவே வருமான உச்ச வரம்பு கிடையாது.

திராவிட இயக்கத்தின் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்று மகளிர் முன்னேற்றம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெண்கள் முன்னேற்றம் குறித்த பல சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றிப் பெண்கள் அரசியல் சமூகப் பொருளாதார நிலைகளில் விடுதலை பெற்று வாழ்வில் படிப்படியாக முன்னேறவும், பட்டம், பதவிகள் பெற்றுச் சமுதாயத்தில் உயர்நிலை பெறவும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1973இல் தமிழகக் காவல் துறையில் முதல்முதலாகப் பெண்கள் நியமனம்; இன்று இலட்சக்கணக்கான ஏழை எளிய மகளிர் வாழ்வில் பொருளாதார விடுதலைக்கு வழிவகுத்துச் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி - 1989இல் தருமபுரியில் தொடங்கிவைத்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; ஏழைப் பெண்களுக்கு ஈ.வெ.ரா. நாகம்மையார் பெயரில் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்; ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ள தற்போது 6000 ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்; 1990இல் அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு; பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் தனிச் சட்டம்; 1996இல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு; முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர்க்கு மானிய உதவி; தொழில் வளாகங்களில் தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர்த் தொழில் முனைவோர்க்கு முன்னுரிமை என்பன போன்ற பல்வேறு திட்டங்கள் கழக ஆட்சியில்தான் செயல்படுத்தப்பட்டுப் பெண்கள் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

அடுத்து முதலமைச்சரின் அறிவிப்பில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் துவக்கப்பட்டது என்றும், அந்தத் திட்டத்தின்கீழ்க் கடந்த முப்பதாண்டுகளாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்றும், அதை அறிந்த முதலமைச்சர் ஜெயலலிதா புதிய வகை உணவுகளை வழங்க உத்தரவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்ற பெயரையும், அந்தத் திட்டத்தையும் தி.மு. கழக ஆட்சியிலும், அதே பெயரில்தான் தொடர வேண்டுமென்று கருதி நடைமுறைப்படுத்தியவன் நான். அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கிய திட்டம் ஆயிற்றே, அதற்கு எப்படி மூடு விழா நடத்தலாம், முட்டுக்கட்டை போடலாம் என்றெல்லாம் நான் கருதியது கிடையாது. மாறாக அந்தச் சத்துணவுத் திட்டத்தை மேலும் சிறப்பாக நடத்திட வேண்டுமென்று திட்டமிட்டுச் செயல் படுத்தியவனும் நான் என்பதைத் தமிழ்நாடே நன்கறியும்.

பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டம் 15.7.2006 முதல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் செயல்படுத்தப்பட்டது. பின்னர் கழக ஆட்சிக் காலத்திலேயே 15.7.2007 முதல் வாரம் மூன்று முட்டை வழங்கப்பட்டு வந்தது. மேலும் 17.9.2010 முதல் வாரம் ஐந்து முட்டை வழங்கப்பட்டது. இதன்மூலம் **57 இலட்சத்து 74 ஆயிரத்து 673** பள்ளி மாணவ - மாணவியர்கள் பயன்பெற்றனர்.

முட்டை சாப்பிடாத 37249 குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாழைப்பழம் தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. மேலும் 15.7.2007 லிருந்து 1 முதல் 2 வயது வரை உள்ள, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ்ப் பயனடையும் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறை முட்டை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் **4 இலட்சத்து 80 ஆயிரத்து 870** குழந்தைகள் பயன்பெற்றனர்.

பணியிலிருக்கும் பொழுது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப் படையில் பணியிடம் வழங்க 25.10.2007 முதல் வகை செய்யப்பட்டது. சத்துணவுப் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு மூன்று மாதங்களுக்கு ஊதியத்துடன் வழங்க ஆணையிடப்பட்டது.

13.5.1996 முதல் 13.5.2001 இல் கழக அரசுக் காலத்தில் சத்துணவுப் பணியாளர்களுக்குக் குடும்பநல நிதித்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு; பணியிலிருக்கும்போது காலமான சத்துணவுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஒன்றரை இலட்சம் ரூபாய் குடும்ப நல நிதி வழங்கப்பட்டது.

சத்துணவு சமையலர் - உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்தியது. சத்துணவு - அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதித் திட்டம் தொடங்கப்பட்டு; அரசின் பங்குத் தொகை 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு முன்பு அ.தி.மு.க, ஆட்சியில் ஒருமுறைகூட ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் அவர்களுக்கு மூன்று முறை ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியிலேதான், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களில் பத்தாண்டுப் பணி முடித்தவர்களுக்கு, ஒரு ஊதிய உயர்வும், 20 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மற்றொரு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டது.

அ.தி.மு.க ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த சத்துணவு சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகிய அனைவருமே கழக ஆட்சியிலேதான் சிறப்பு ஊதிய விகிதம் பெற்றுவருகின்றனர்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க ஆட்சியில் அகவிலைப் படி தவிர ஏனைய படிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான், அவர்களுக்கு முதல்முறையாக 1.6.2009 முதல் மாதந்தோறும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவைகளும், 100 ரூபாய் மருத்துவப்படியும், 2000 ரூபாய் பண்டிகைக் கால முன்பணமும் வழங்கப்பட்டு வருகின்றன. சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க ஆட்சியில் மாதாந்திர ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களில் சமையலர்களுக்கும், முதல் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் - சமையல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் முறையே மாதந்தோறும் ரூபாய் 700, ரூபாய் 600, ரூபாய் 500 என்று முதல் முறையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் நலனிலும், குழந்தைகள் நலனிலும் அக்கறை கொண்டு கழக அரசு ஆற்றிய பணிகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. மகளிர் மேம்பாட்டுக்காக இன்றைய ஆட்சியினர்

நாங்கள் அதைச் செய்தோம்; இதைச்செய்தோம் என்று எதைச் சொல்லிக் கொண்டாலும், அவை அனைத்திற்கும் ஆணி வேராகத் தி.மு.கழக ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம்தான் அமைந்திருக்கிறது என்பதை மறைத்து விடமுடியாது. அந்த அளவுக்கு அனைத்து முனைகளிலும் அணி அணியாகப் பல்வேறு வகையான திட்டங்கள் வகுக்கப்பட்டு மகளிர் முன்னேற்றத் திற்காகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டன என்பதைத் தமிழக நிர்வாக வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

8-9-2013

3804. மூடநம்பிக்கை ஒழிப்பை முன்னெடுத்துச் செல்வோம்!

உடன்பிறப்பே,

மராட்டிய மாநில அரசு அண்மையில் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது. நரபலி, பில்லி சூனியம், மாந்திரீகம் மற்றும் இதர மனித நேயமற்ற கொடுமையான பழக்கங்களுக்கு எதிராக அந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, மோசடிச் செயல்களில் ஈடுபடுவோர் கைதானால், உடனே ஜாமீனில் வெளிவர முடியாது. குற்றம் நிரூபிக்கப்படும்போது, ஏழாண்டு தண்டனை கிடைக்கும். இந்தச் சட்டத்திற்கான மசோதா மராட்டிய மாநிலச் சட்டப்பேரவையில் மூன்று முறை அறிமுகப்படுத்தப்பட்டு, 29 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படாமலேயே இதுவரை இருந்து வந்தது.

மராட்டிய மாநிலச் சட்டப்பேரவையில் 13 ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டிருந்த இந்தச் சட்டம், அவசர அவசரமாக 22-8-2013 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அதற்குக் காரணம் மராட்டிய மாநிலத்தில் புகழ்பெற்ற பகுத்தறிவாளரும், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான தீரம்மிக்க போராளியுமான நரேந்திர தபோல்கர், புனே நகர வீதிகளில் 20-8-2013 அன்று படுகொலை செய்யப்பட்ட மாபாதகச் சம்பவம்தான். அந்தக் கோரச் சம்பவம் நாடெங்கிலுமுள்ள பகுத்தறிவாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நரேந்திர தபோல்கர் காலை நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு பேர், அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். அவர் கொல்லப்பட்ட செய்தி மராட்டிய மாநிலம் முழுவதும் தீயெனப் பரவியது. கண்டன ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புப் போராட்டம் மாநிலம் முழுவதும் நடைபெற்றன.

மருத்துவப் பட்டம் பெற்றவரான தபோல்கர், பன்முக ஆற்றல்களின் பெட்டகமாகத் திகழ்ந்தார். மூடநம்பிக்கை எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணிப் போர்வீரராக இருந்த அவர், சமூகச் சீர்திருத்தங்களில் பேரார்வம் காட்டினார். இந்தியச் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படையாக இருப்பது சாதியம்தான் என்று கருதினார். சாதிய அமைப்பை அறவே ஒழித்திட அரும்பாடுபட்ட நரேந்திர தபோல்கர், பண்பாட்டுப் புரட்சி நடக்காமல் சமத்துவம் சாத்தியமில்லை என்றார்.

"அறியாமையைப் போக்குவதற்கான போராட்டத்தில் எனக்கு எவ்வித ஆயுதமும் தேவையில்லை" என்று தபோல்கர் கூறினார். தபோல்கரின் நண்பர் அஜீத் அபயங்கர் என்பவர், "தபோல்கர், ஆண்டவனுக்கோ, மதத்துக்கோ எதிரானவர் இல்லை; நம்பிக்கையின் பெயரால் சுரண்டல் செய்யப்படுவதற்கு எதிராகவே அவர் போராடி வந்தார்" என்று கூறியிருக்கிறார். அபயங்கரின் இந்தக் கருத்தைப் படித்தபோது, "கோயில் கூடாது என்பதற்காக அல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாதே என்பதற்காக" என்ற, நான் எழுதிய "பராசக்தி"யின் வசனம் என் நினைவுக்கு வந்தது.

தனது வாழ்வில் அறிவியல் பிரச்சாரத்துடன் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் போராடியவர் தபோல்கர். சமூகநீதி நிலைத்திருக்கவும், சமத்துவம் மலர்ந்திடவும், சாதி மறுப்புத் திருமணங்களை அவர் ஊக்குவித்து, முன்னின்று நடத்தினார். மந்திரவாதிகள் மற்றும் மோசடிச் சாமியார்களுக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் கடுமையாகப் போராடியவர் அவர். மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அவர் தொடர்ந்து நடத்தி வந்த போராட்டங்களின் விளைவாக, மராட்டிய மாநிலத்தில் பல முனைகளிலும் அவருக்கு எதிரிகள் முளைத்தனர். பில்லி சூனியம், மாந்திரீகம் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான சட்டத்தை இயற்றிட வேண்டுமென்று தபோல்கர் நீண்டகாலமாகக் கோரி வந்தார். அவரது கோரிக்கை அவர் கொலை செய்யப்பட்டதற்குப் பிறகுதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக மராட்டிய மாநில அரசு இயற்றியிருக்கும் சட்டத்தைப் போலவே, தமிழகத்திலும் இயற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, திராவிடர் கழகத் தலைவர் இளவல் வீரமணி அவர்களும்,

பேராசிரியர்கள் - சமூக ஆர்வலர்கள் - அறிவியல் இயக்கத்தினர் பலரும் முன்வைத்திருக்கிறார்கள். மூடநம்பிக்கைகளைப் பற்றி விவாதிக்கக்கூடிய சூழ்நிலையைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உருவாக்கிட வேண்டும் என்ற வேண்டுகோளும் எழுந்துள்ளது.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வது அடிப்படைக் கடமை ஆகும் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 51-ஹ(ா) உணர்த்துகிறது. "It shall be the duty of every citizen of India to develop the scientific temper, humanism and the spirit of inquiry and reform" (அறிவியல் மனப்பான்மை, மனிதநேயக் கோட்பாடு, ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த மனப்பாங்கு ஆகியவற்றை வளர்த்தல்) என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தர்க்க நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதோடு, வேண்டுதல் வேண்டாமை அகற்றி, ஏற்கனவே மனதில் ஊறிப்போன கருத்துக்களை எதிலும் வலிந்து புகுத்திடாமல் பின்பற்றப்படும் நடைமுறையே அறிவியல் மனப்பான்மை என்பதற்கான விளக்கமாகும். தீவிரமாகக் கலந்தாலோசித்தல், விரிவாக விவாதித்தல் மற்றும் ஆழமாக ஆராய்தல் ஆகியவை அறிவியல் மனப்பான்மையின் முக்கியமான அம்சங்கள் ஆகும்.

பில்லி சூனியம், மாந்திரீகம், ஜோதிடம், ஏவல் என்பவை மூடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், அவை 'அறிவியல் மனப்பான்மை' என்ற கட்டமைப்புக்கு எதிரானவை ; இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானவை.

மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் தமிழகத்திலும் பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. எவ்வளவோ பிரச்சாரத்திற்குப் பிறகும், எத்தனையோ தெளிவுரைகள் வழங்கியதற்குப் பிறகும், அத்தகைய காரியங்கள் நடைபெறுவது - அதிலும் கல்விகற்றவர்களே அத்தகைய காரியங்களில் ஈடுபடுவது, கொடுமையானதும் வேதனைக்குரியதும் ஆகும். அண்மையிலே நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள் சமுதாயத்தை மூடநம்பிக்கை எப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது என்பதை உணர்த்துகிறது.

சென்னையை அடுத்த கொளத்தூர், ரெட்டேரிப் பகுதியைச் சேர்ந்தவர் திலகராஜ் என்பவர். இரத்தப் பரிசோதனை மையம் நடத்தி வந்தார். அவருடைய மனைவி மைனா என்ற லட்சுமி அழகு

நிலையத்தில் பயிற்சி பெற்றவர். இவர்களுடைய மகள் சினேகா, அழகுக்கலையில் ஆர்வம் கொண்டவர். தாய் - மகள் இருவரும் சேர்ந்து, தனியாக அழகு நிலையம் நடத்த முடிவுசெய்து, புழலை அடுத்த புத்தகரத்தில் ஒரு கட்டிடத்தின் முதல் மாடியில் கடையை வாடகைக்கு எடுத்தனர். 1-9-2013 அன்று காலை 5.30 மணி அளவில் 'லட்சுமி அழகு நிலையம்' எனப் பெயரிடப்பட்டு, திறப்பு விழா நடைபெற்றது. குரோம்பேட்டை நாகப்பா நகரைச் சேர்ந்த புரோகிதர் இராமமூர்த்தி என்பவர் கடையின் உள்ளே 'ஹோமம்' வளர்த்தார். பின்னர், டிஜிட்டல் போர்டால் ஆன கடையின் பெயர்ப் பலகைக்குச் சந்தனம், குங்குமம் வைத்து மலர்மாலை வைத்து 'பூஜை' நடத்தினார். பூஜைகள் முடிந்ததும் 'நல்லநேரம்' பார்த்து, கடையின் முன்பகுதியில் பெயர்ப் பலகையை மாட்ட திலகராஜ், அவரது மகள் சினேகா, எலக்ட்ரீஷியன் நவீன்சந்திரன், புரோகிதர் ராமமூர்த்தி ஆகிய நால்வரும் கடையின் உள்ளே இருந்து பெயர்ப் பலகையை வெளியே தூக்கி வந்தனர். கடையின் முன்பு பால்கனியில் நின்றவாறு நால்வரும் பெயர்ப் பலகையை மாட்ட, உயர்த்தித்தூக்கினார்கள். அந்தப் பலகையை 'வாஸ்து சாஸ்திர'ப்படி வைக்குமாறு புரோகிதர் ராமமூர்த்தி சொன்னார். அவர் அறிவுரைக்கேற்ப, பெயர்ப் பலகையை அப்படியும் இப்படியுமாக அந்த நால்வரும் மாற்றி மாற்றி வைத்தனர். இறுதியாக, புரோகிதர் சொன்னபடி பெயர்ப் பலகையைத் திருப்பி வைத்தபோது, மேலே சென்ற உயர் அழுத்த மின்சாரக் கம்பியில் பெயர்ப் பலகையில் இருந்த இரும்பு உரசி, அதன் வழியாக மின்சாரம் பாய்ந்து, அதைப் பிடித்துக் கொண்டிருந்த அந்த நான்கு பேரையும் மின்சாரம் தாக்கி, அதே இடத்தில் அவர்கள் கருகிப் பரிதாபமாகப் பலியாயினர். இந்தச் செய்தி எல்லா நாளேடுகளிலும் வெளிவந்திருந்தது. நெஞ்சைப் பிழிந்திடும் இந்தத்துயரச் சம்பவத்தை அறிந்த கழகப் பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் 2-9-2013 அன்று மின்சாரம் தாக்கி இறந்தோர் இல்லத்திற்குச் சென்று, திருவுருவப் படங்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தி, குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

வார ஏடு ஒன்றில் வந்த மற்றொரு செய்தி. பில்லி சூனியம், மந்திரங்களால் பெருமளவுக்குப் பணம் குவித்த திவ்யானந்தா என்ற பூசாரி பழனிச்சாமி என்பவர், தருமபுரியிலிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில் 17வது கிலோ மீட்டரில் இருமத்தூர் என்னும் இடத்தில், கொல்லாபுரி அம்மன் கோவிலுக்குப்

பக்கத்தில், அதற்குப் போட்டியாக சிவகாளியம்மன் கோவில் ஒன்றைக் கட்டினார். அந்தக் கோவிலுக்கு

8-9-2013 அன்று கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்து, அழைப்பிதழும் அச்சடித்து அனைவருக்கும் அனுப்பி இருந்தார். அந்தப் பூசாரியார், "எதிரிகளின் கை, கால்களை விளங்காமல் செய்கிறேன், சாகடிக்கிறேன், பில்லி சூனியம், செய்வினை செய்கிறேன்" என்று லட்சம் லட்சமாய்ப் பணம் பிடுங்குவதாகவும்; அம்மன் கோவில் அருகில் உள்ள இரண்டு ஏக்கர் அரசு நிலத்தை ஆக்கிரமித்து, 72 அடி உயர சிமெண்ட் சிலையைச் செய்து, நிறுவி இருப்பதாகவும் ; தனது பில்லி சூனியத் தொழிலுக்காகவே அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்திருப்பதாகவும் தகவல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. தன்னுடைய சுயலாபத்துக்காகப் பில்லி சூனியம், செய்வினை என்றெல்லாம் சொல்லி அப்பாவி மக்களை ஏமாற்றியதோடு, பூசாரி பழனிச்சாமி அரசு நிலத்தையும் ஆக்கிரமித்ததால், கும்பாபிஷேகத்திற்கு முன்பே கைது செய்யப்பட்டுள்ளதைப் பற்றி அந்தப் பகுதியில் பரபரப்பாகப் பேசப்படுகிறதாம்.

மற்றொரு செய்தி, நரபலியைப் பற்றியது.

15-4-2013 அன்று 'நாகரிக யுகத்தில் நரபலிக் கொடுமையா?' என்ற தலைப்பில், 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட எனது கடிதத்தில், சென்னை, வியாசர்பாடியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி விளக்கியிருந்தேன். குடுகுடுப்பைக்காரன் ஒருவன் 'செய்வினை' வைத்திருப்பதாகச் சொன்னதை நம்பி, சென்னை, வியாசர்பாடியைச் சேர்ந்த மகேஸ்வரி என்பவர், குடுகுடுப்பைக்காரன் கொடுத்த தாயத்தைக் கட்டிக்கொண்டு, கீதா என்பவரின் குழந்தை இரண்டரை வயது விஷ்ணுவை, தன் வீட்டிற்கு அழைத்து வந்து, தண்ணீர்த் தொட்டிக்குள் அமுக்கி, கொலை செய்ய முயற்சித்தார். குழந்தை மூச்சுத் திணறி, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில், மகேஸ்வரி குழந்தையைத் தூக்கிச் சென்று, பக்கத்து வீட்டு மாடியில் இருந்த தண்ணீர் பேரலில் தலைகீழாகப் போட்டுவிட்டு, தவறி விழுந்து விட்டதாக நாடகமாடினார். ஆனால், மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது குழந்தை இறந்துவிட்டான். குழந்தை விஷ்ணுவின் முகம், கை, கால்களில் காயங்கள் இருந்ததாக, பார்த்தவர்கள் தெரிவித்தார்கள். மகேஸ்வரி குடுகுடுப்பைக்காரன்

பேச்சை நம்பி, 'தோஷம்' கழிக்கும் நோக்கத்தில், குழந்தையை நரபலிக்காகக் கொலை செய்திருக்கலாம் என்று அந்தப் பகுதியில் உள்ளவர்கள் தெரிவித்தார்கள்.

"நரபலி பற்றிய இந்தச் செய்தியைப் படித்தபோது, நாம் 21ஆம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம், என் எண்ணத்தைத் துளைத்தெடுத்தது. அறிவியல் மிகவும் முன்னேறியிருக்கும் காலம் இது. மனித அறிவுக்கு எட்டாதது எதுவுமே இல்லை என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. உயிர்களின் பரிணாம வளர்ச்சி, கோள்களைப் பற்றிய முழுமையான ஆய்வு, தகவல் தொழில்நுட்பம் எனும் அறிவியல், இவ்வுலகத்தையே ஒருசிறு கிராமமாகச் சுருக்கி விட்டது; உள்ளங்கையில் உலகம் என்ற நிலை உருவாகிவிட்டது; இவற்றை எல்லாம் கண்டும் கேட்டும், மனித அறிவின் அருமை பெருமைகளை வியந்து போற்றுகின்ற அதே வேளையிலேதான்; "செய்வினை - குடுகுடுப்பைக்காரன் - தாயத்து - தோஷம் - நரபலி" என்றெல்லாம் செய்திகள் செவிகளில் விழும்போது; வியக்கத்தக்க உயரத்திற்கு விஞ்ஞானம் சென்றதற்குப் பிறகும், மூடநம்பிக்கை எனும் பள்ளத்தாக்கில் இருந்து இன்னும் மனித இனத்தின் ஒரு பகுதி விடுபடவில்லையோ என்று தோன்றுகிறது" என்று அந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன்.

நரேந்திர தபோல்கர் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று உணர்த்தியிருக்கிறது. "நாம் மீள வேண்டுமானால் - சுயமரியாதை பெற்ற மக்களாக வாழ வேண்டுமென்று நினைத்தால் - அடிமைப்படுத்தும் மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களையும் முதலில் விட்டுவிட வேண்டும்" என்று தந்தை பெரியார் அவர்கள் 1923ஆம் ஆண்டில் எடுத்துச் சொன்ன அறிவுரை, 90 ஆண்டுகள் கழிந்ததற்குப் பிறகும் இன்னமும் நமது சமூகத்தில் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை என்பதை நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

பகுத்தறிவு - அறிவியல் மனப்பான்மை குறித்த பிரச்சாரம் இன்னும் தீவிரமாகவும் இடைவெளி இல்லாமலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளபடி, சட்டநெறிமுறைகள்

வகுக்கப்பட்டு, முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் அவசியமாகிறது.

மூடநம்பிக்கை ஒழிப்புக்கு உரிய சட்டம் ஒன்றை மத்திய அரசும், மாநில அரசும் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும்; அறிவியல் மனப்பான்மை பற்றிய பாடத்திட்டம் பள்ளி - கல்லூரிப் படிப்பில் இணைக்கப்பட வேண்டும்; என்பது அவசரத் தேவையாகவும், கால ஓட்டத்தின் கட்டாயமாகவும் ஆகிவிட்டதால்; அந்தக் கோரிக்கையை அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து முனைப்போடு முன்னெடுத்துச் செல்வோம்! அதுவே நரேந்திர தபோல்கர் நினைவுக்கு நாம் செலுத்திடும் வீரவணக்கமாகும்.

அன்புள்ள,

மு.க.

10-9-2013

3805. பொது வாக்கெடுப்பே ஈழத்தமிழர்க்குப் புது வாழ்வு தரும்!

உடன்பிறப்பே,

“போருக்குப் பின்னர் உருவாகி வரும் நிலைமையை நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்” என்று இலங்கை அரசு தெரிவித்திருந்ததையொட்டியும், இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து ஆய்வு நடத்திடவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் திருமதி நவநீதம் பிள்ளை ஆகஸ்டு 25 அன்று இலங்கை சென்று, ஒருவார காலமாகப் பல பகுதிகளை ஆய்வு செய்து, போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களுடைய மனக்குறைகளையும், குமுறல்களையும் அனுதாபத்தோடு கேட்டறிந்து, இலங்கை அதிபர் ராஜபக்சேவையும், அரசியல் கட்சியினரையும், மனித உரிமை ஆர்வலர்களையும் பத்திரிகையாளர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு ஜெனீவா திரும்பியிருக்கிறார். போருக்குப் பின்னர் இலங்கைக்கு நேரில் சென்ற ஐ.நா. மன்றத்தின் முதல் முதுநிலை அலுவலர் நவநீதம் பிள்ளைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

போர்க் குற்றங்கள் புரிந்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்றும்; நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தி நிறைவேற்றிட வேண்டுமென்றும்; சர்வதேச சமுதாயம் இலங்கையை வற்புறுத்திக் கொண்டே இருக்கிறது. இத்தகைய பின்னணியில் நவநீதம் பிள்ளையின் இலங்கைப் பயணமும், அவர் இப்போது 9-9-2013 அன்று தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 24வது கூட்டத்தில் வழங்கிட உள்ள விளக்க உரையும், 2014 மார்ச் மாதம் நடைபெற உள்ள கூட்டத்தில் தரவிருக்கும் அறிக்கையும், உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கின்றன.

நவநீதம் பிள்ளை இலங்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கும் அங்கிருந்து முல்லைத் தீவு மாவட்டம் புதுமாத்தளை, முள்ளிவாய்க்கால், கோப்பாப்பிலா மாதிரிகிராமம், திரிகோணமலை உள்ளிட்ட பகுதிகளுக்கெல்லாம் சென்று போரினால் சீர்குலைந்த அந்தப் பகுதிகளில் என்னென்ன மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்ததோடு; தமிழ் மக்களைச் சந்தித்து அளவளாவி விவரங்களை அறிந்துகொண்டார்.

முள்ளிவாய்க்கால் சென்றபோது அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தமிழ்ப் பெண்கள் நவநீதம் பிள்ளையிடம், தங்களுக்கு இன்னும் வீட்டு வசதிகள், வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதரப்படவில்லை என்றும்; தங்களுடைய விவசாய நிலங்கள் சிங்கள ராணுவத்தால் கைப்பற்றப்பட்டு விட்டதாகவும், அவற்றைப் பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டனர். போரினால் தங்கள் குடும்பங்களில் பலரையும் பறிகொடுத்த பெண்கள் நவநீதம் பிள்ளையின் கால்களில் விழுந்து கதறித் துடித்தது கண்டு அவர் கண்ணீர் சிந்தினார்.

31-8-2013 என்ற நாள் 'பலவந்தம் காரணமாகக் காணாமல்போனோருக்கான சர்வதேச தினம்' (International Day of Forced Disappearances) ஆகும். அன்றைய தினம் நவநீதம் பிள்ளை கொழும்பு நகரில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது;

"இலங்கையில் உள்ள நிலைமை எனக்கு மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது. போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆன பின்னரும், இப்போதும் மக்கள் மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகின்றனர். பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். மேலும், இலங்கை அரசின் விசாரணைக் குழு காணாமல் போனவர்கள் பற்றி அளித்துள்ள அறிக்கை ஏமாற்றம் தருகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ராணுவ வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும். பாதுகாப்பு அமைப்புகளால் மனித உரிமை ஆர்வலர்கள் துன்புறுத்தப்படுவது அதிகமாகி இருக்கிறது. இலங்கை சர்வாதிகாரப் பாதையில் செல்வதற்கான அறிகுறிகள் மிகுந்து காணப்படுவது கவலையை ஏற்படுத்துகிறது. என்னுடைய

பயணத்தின்போது என்னுடன் கலந்துரையாடிய மனித உரிமை ஆர்வலர்கள், இலங்கைப் போலீசார் மற்றும் ராணுவத்தினரால் துன்புறுத்தலை எதிர்கொண்டது ஏற்றுக்கொள்ள முடியாதது. இலங்கை மோசமான நிலையில் இருப்பதாகவே தோன்றுகிறது. இலங்கையில் மக்கள் கண்காணிக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் அதிகரித்து வருகிறது. அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்குவதுடன், அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான வழிவகைகளும் செய்யவேண்டும்" என்று நவநீதம் பிள்ளை விளக்கியிருப்பது, இலங்கை நிலை குறித்துச் சர்வதேச சமுதாயத்தின் கவலையை மேலும் பெருக்கியிருக்கிறது.

"I have received reports that people I met during my visit were later questioned. I strongly object to this surveillance and harassment. Srilanka is showing signs of heading in an increasingly authoritarian direction. The war may have ended, but in the meantime democracy has been undermined and the rule of law eroded. Freedom of expression is under a sustained assault. I have called for the right to information act to be adopted, like many of its neighbours in SAARC." என்று நவநீதம் பிள்ளை வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார்.

"முல்லைத் தீவில் உள்ள கிராமங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு நான் செல்வதற்கு முன்பும் பின்பும் ராணுவம் மற்றும் போலீசார் சென்றதாக எனக்குத் தகவல் வந்தது" என்றும் நவநீதம் பிள்ளை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"நவநீதம் பிள்ளையின் அறிக்கை எங்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என்று நம்புகிறோம். ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் அடுத்த அறிக்கை, இதற்கு முந்தைய அறிக்கைகளைப் போல மென்மையாக இருக்காது என்றும் நிச்சயமாக நம்புகிறோம்" என்று இலங்கைக் கவிஞர் தீபச்செல்வன் 'இந்தியா டுடே'யிடம் கூறியிருக்கிறார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசு நீக்கிட வேண்டும்; போரில் காணாமல் போனவர்கள் குறித்து ஆய்வு நடத்த வேண்டும் என்று நவநீதம் பிள்ளை சொல்லியிருப்பது

இலங்கை அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது" என்று இலங்கைத் தமிழ் எம்.பி., யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கலங்கிக் கண்ணீர் வடித்தபோது, "நான் தூர தேசத்திலிருந்து உங்களுடைய பிரச்சினைகளை ஆராய்வதற்காகவே வந்துள்ளேன். காணாமல் போனவர்கள் பற்றிய பிரச்சினைகளை நான் முன்னரே அறிவேன். அதைப்போல இங்குள்ள மற்ற பிரச்சினைகளையும் ஆராய்ந்து தீர்வைத் தேடித் தரவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. உங்களுடைய பிரச்சினைகளுக்காக, எனக்குள்ள முழு அதிகாரத்தையும் பயன்படுத்தித் தீர்வைத் தேடித்தருவேன்" என்று நவநீதம் பிள்ளை உறுதி அளித்துள்ளார்.

எனினும்,

1) தமிழ் மக்களுக்கு நிம்மதியான மறுவாழ்வை உருவாக்கித் தரவேண்டும் என்ற கடமையை இலங்கை அரசு இன்னும் நிறைவேற்றவில்லை.

2) பதிமூன்றாவது சட்டத் திருத்தத்தின்படி நடந்துகொள்ள மறுத்து வருகிறது.

3) தமிழர் பகுதிகளில் இருந்து ராணுவத்தை முற்றிலுமாக விலக்கிக் கொள்ளவில்லை.

4) தமிழர் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றத்தை ஊக்குவித்து வருகிறது.

5) ராணுவத்தால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தமிழர்களின் வீடுகள் மற்றும் நிலங்கள் குறித்த பிரச்சினையில் மாற்றம் இல்லை.

6) தமிழ் மொழிக்கான சமஉரிமை அரசியல் சட்டரீதியாக அங்கீகாரம் செய்யப்படவில்லை.

7) காணாமல் போனவர்கள் பற்றிய முழுமையான பட்டியலைத் தயாரித்து நேர்மையான விவரங்களைத் தமிழ் மக்களிடம் எடுத்துச்சொல்ல எந்த முயற்சியும் இல்லை.

8) யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் சிங்கள ராணுவக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருவதால் இன்னும்

ஐந்தாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்கள் வாழ்வதற்குக்கூட இடமில்லாமல் போகலாம்.

9) மதவழிச் சிறுபான்மையோரின் வழிபாட்டுத்தலங்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

10) தமிழ் அரசியல் கைதிகளின் நிலை என்ன என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்பட வில்லை.

11) வடக்கு மாகாணத்தில் செப்டம்பர் 21 அன்று நடைபெற உள்ள தேர்தலுக்கு முன்பு, அடிப்படை ஜனநாயக வழிமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை.

12) தமிழர்கள் பிரச்சினையில் நிரந்தரமாகத் தீர்வு காண எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை;

- என்பன போன்ற எண்ணற்ற பிரச்சினைகள் முடிவின்றித் தீவிரமடைந்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் அவையின் வல்லுனர் குழு இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலை மற்றும் மனித உரிமைமீறல்கள் குறித்து ஆய்வு செய்து 2011 ஏப்ரல் மாதத்தில் அளித்த அறிக்கையின்படியோ; ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியோ; அதற்குப் பிறகு 2013ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியோ, இலங்கை அரசு நடந்து கொள்ளவும் இல்லை; தீர்மானங்களில் குறிப்பிட்ட எதையும் நிறைவேற்றுவது பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும் இல்லை.

மனித உரிமைகளுக்கான பல்வேறு அமைப்புகள் உண்மை கண்டறியும் குழுக்களை அமைத்து, தீர விசாரித்து வெளியிட்ட அறிக்கைகள் எதையும் இலங்கை அரசு சிறிதும் காதில் போட்டுக் கொள்ளாமல் அலட்சியப்படுத்தி விட்டது.

இலங்கை அரசே அமைத்த 'கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் காணும் குழு' (எல்.எல்.ஆர்.சி.) வழங்கிய அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றிட இலங்கை அரசு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை.

இந்த நிலையில், நவநீதம் பிள்ளை இலங்கை சென்று, நேரடியாகக் கண்டும் கேட்டும், ஆய்ந்தறிந்தும் தெரிவிக்கும் விவரங்கள் மற்றும் மேற்கொள்ளும் முடிவுகள் அடிப்படையில் தயாரித்து, ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடம் அவர் அளித்திடும் அறிக்கை, ஈழத் தமிழர்களுக்கு ஆறுதலாகவும், அவர்களுடைய பிரச்சினையை அடுத்த ஆக்கப்பூர்வமான கட்டத்திற்கு எடுத்துச் செல்வதாகவும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு வளர்ந்திருக்கிறது.

இலங்கை அரசாலும், இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகத்தில் உள்ளவர்களாலும், இலங்கைத் தமிழர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைப் போர்க் குற்றங்கள் என்றும், இனப் படுகொலை என்றும் பிரகடனப்படுத்த வேண்டும்; மேலும் நம்பகத்தன்மை வாய்ந்த சுதந்திரமான பன்னாட்டு ஆணையம் ஒன்றை அமைத்து, இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் மற்றும் இனப் படுகொலைகள் குறித்துக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் விசாரணை நடத்தப்பட வேண்டும்; என்று நாம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதற்கு நவநீதம் பிள்ளையின் அறிக்கை எந்த அளவுக்குத் துணைபுரியப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். எனினும் இலங்கையிலே உள்ள தமிழர்கள் மற்றும் உலக நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்கள் மத்தியில் ஐ.நா. மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்தி, அவர்களுக்குத் தேவையான அரசியல் தீர்வை முடிவு செய்திடும் உரிமையை அவர்களுக்கு வழங்குவது ஒன்றே, புதுவாழ்வு புலர்ந்திடச் செய்யும்! இத்தகைய நிரந்தரத் தீர்வுக்கு, நவநீதம் பிள்ளை நேரடி ஆய்வின் அடிப்படையில் தரவிருக்கும் அவரது அறிக்கைக்குப் பிறகு, ஐ.நா. மன்றம் தாராளமாக முன்வருமென்று உலகத் தமிழர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள்!

அன்புள்ள,

மு.க.

13-9-2013

3806. நீதி வெல்லும்; நிச்சயம் வெல்லும்!

உடன்பிறப்பே,

எந்தவிதச் சிக்கல் வந்தாலும் அதை ஏற்பது என்ற ஒரே முடிவோடு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஏனென்றால் நீதி நிலைக்க வேண்டும் என்பதில் எனக்குள்ள அசையா நம்பிக்கைதான்.

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயலலிதாவின் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக அரசு சார்பில் வழக்கறிஞராக இருந்தவர் திரு. பவானி சிங். இவருக்கு முன் இந்தப் பதவியில் இருந்தவர் திரு. ஆச்சார்யா.

ஆச்சார்யா அரசு வழக்கறிஞராக இருந்தபோது, அவர் மீது ஜெயலலிதா தரப்பில் பல புகார்கள் சொல்லப்பட்டதுடன், அங்கே பா.ஜ.க. ஆட்சி இருந்தபோது, சென்னையிலிருந்து அதிகார பலமிக்க ஒரு குழு, பெங்களூர் சென்று, முகாமிட்டுப் பணியாற்றியதன் விளைவாக, கனத்தமனதுடன், வெளிப்படையாக தனது மனச் சங்கடத்தைத் தெரிவித்துவிட்டு இந்த வழக்கிலிருந்தே தன்னை விடுவித்துக் கொண்டார். சிறப்பு அரசு வழக்கறிஞராகப் பணியாற்றிய பி.வி. ஆச்சார்யா பதவி விலகல் கடிதத்தைக் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பியபோது, தலைமை நீதிபதியாக இருந்த திரு. விக்ரமஜித் சென் அவர்கள் அந்தப் பதவி விலகலை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத் தலைமை நீதிபதி உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற பிறகு, பொறுப்பு தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றவர் திரு. ஸ்ரீதர் ராவ். அவர் ஆச்சார்யா அவர்களின் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக்கொண்டார்.

ஆச்சார்யா அவர்கள் விலகியபின், அவருடைய இடத்திற்கு கர்நாடக அரசால் அரசு வழக்கறிஞராக, ஜெயலலிதாவுக்கு எதிராக

வாதிடு வதற்காக நியமிக்கப்பட்டவர்தான் பவானிசிங். ஆனால் அவரது நடைமுறைகள் குற்றவாளிகளுக்கு ஆதரவாக இருந்து வந்தன. ஜெயலலிதாவின் சாட்சியங்கள் விசாரணை முடிவுற்றபின், அரசு வழக்கறிஞர்தான் தன் வாதங்களை எடுத்துவைத்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஜெயலலிதாவின் வழக்கறிஞர் பி. குமார் தன்னுடைய வாதங்களை எடுத்துவைக்க, அரசு வழக் கறிஞர் அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றபோது, கர்நாடக அரசுக்காக வாதாடிய மூத்த வழக்கறிஞர் திரு வாகனவதி ; திரு. பவானிசிங் அவர்களை, அரசு வழக்கறிஞராக நியமிக்க வேண்டுமென்று கர்நாடக அரசு பரிந்துரையே செய்யவில்லை என்றும், கர்நாடக அரசு வேறு நான்கு வழக்கறிஞர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களிலே ஒருவரைக் கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நியமித்துக் கொள்ளலாம் என்றும் பரிந்துரை செய்த விவரத்தைக் குறிப்பிட்டார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

அப்போது கர்நாடக மாநிலத்தில் தலைமை நீதிபதியாகப் பொறுப்பு நீதிபதி ஒருவர் இருந்தார். அவர்தான் இந்த வழக்கில் ஏற்கனவே அரசு வழக்கறிஞராக இருந்த ஆச்சார்யா அவர்களின் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக்கொண்டார். ஆனால் பொறுப்பு தலைமை நீதிபதி அரசு ஏற்கனவே பரிந்துரை செய்த நான்கு வழக்கறிஞர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்காமல், தன்னிச்சையாக இந்த பவானிசிங் என்பவரை அரசு வழக்கறிஞராக நியமித்தார்.

இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக இருந்த நல்லம்ம நாயுடுவுக்குப் பிறகு, இதனை விசாரித்த டி.எஸ்.பி. சம்பந்தம் என்பவர் குற்றம் சாட்டப்பட்ட வர்களுக்கு ஆதரவாக ஆஜராகி சாட்சியம் அளித் தார். அப்போதும் அரசு வழக்கறிஞர் பவானி சிங் அதைக்கண்டு கொள்ளவில்லை. ஒரு விசாரணை அதிகாரியை அதே வழக்கில் சாட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென்றால், நீதிமன்றம்தான் அவரை சம்மன் செய்து அழைக்க வேண்டும். அந்தக் குறைந்தபட்ச நடைமுறைகூட இந்த வழக்கிலே பின்பற்றப்படவில்லை. கடைசி சாட்சியாக (99வது சாட்சி) டி.எஸ்.பி. சம்பந்தத்தை ரகசியமாகக் கொண்டு வந்து

நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கச் செய்தார்கள். லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்த இந்த அதிகாரி, குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டு, சாட்சி ஆவணங்களைக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாகக் குறிப்பிடவும் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொறுப்பு விசாரணை அதிகாரி இப்படிச் சாட்சியம் அளித்ததற்குத் தனது உயர் அதிகாரிகளின் அனுமதியைக்கூட முறையாகப் பெறவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அரசு வழக்கறிஞர் ஆட்சேபிக்கவில்லை. நீதிபதியும் அதை அனுமதித்திருக்கிறார்.

இதே பொறுப்பு விசாரணை அதிகாரிதான், அரசு வழக்கறிஞரை மீறி, நேரடியாகச் சிறப்பு நீதிபதிக்கு இந்த வழக்குத் தொடர்பாக மறுவிசாரணை செய்யப்பட வேண்டுமென்று முன்பு கடிதம் எழுதியவர். இதுகுறித்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நாம் தாக்கல் செய்த மனுவை, கர்நாடக உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, டி.எஸ்.பி. சம்மந்தத்தின் கோரிக்கையை நிராகரித்ததுடன், தமிழகத்தின் தற்போதைய முதல்வர் செல்வி ஜெயலலிதா உத்தரவுப்படி செயல்படும் பொறுப்பு விசாரணை அதிகாரி சம்பந்தத்தையும் கண்டித்தது. பவானிசிங் பொறுப்பேற்றவுடன் அரசுத் தரப்பு சாட்சிகளான 259 பேர், மற்றும் ஆயிரக்கணக்கான ஆவணச் சாட்சியங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள இரண்டு மாதம் அவகாசம் வேண்டு மென்று கோரி 28-2-2013 அன்று மனுத் தாக்கல் செய்தார். இதுநாள் வரை இந்த மனு மீது சிறப்பு நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அவர் கேட்ட அவகாசமும் தரப்படவில்லை. அதற்காக அவர் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யவே இல்லை.

இதையெல்லாம் கண்ட பிறகுதான், இந்த வழக்கில் அரசுத் தரப்புடன் இணைந்து, ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாட எங்களை அனுமதிக்க வேண்டுமென்று கோரி சிறப்பு நீதிமன்றத்தில் தி.மு.கழகத்தின் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் நீதிபதி பாலகிருஷ்ணா எழுத்துப்பூர்வமாக உங்கள் கருத்துகளை எழுதித் தாக்கல் செய்யலாமே தவிர, வாதாட அனுமதியில்லை என்று தெரிவித்துவிட்டார். விசாரணை அதிகாரியாக இருந்த நல்லம்ம நாயுடுவை விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கும் இதுநாள்வரை பதில் இல்லை.

இந்த முக்கியமான வழக்கின் சான்றாவணங்களாக உள்ள கைப்பற்றப்பட்ட நகைகள் சென்னை ரிசர்வ் வங்கியின் கருவூலத்தில் உள்ளன. சொத்துக்குவிப்பு வழக்கின் விசாரணையின்போது, அந்தச் சொத்துக்களான நகைகள் எல்லாம் நீதிமன்றத்தின் பொறுப்பிற்குக் கொண்டு வரப்படவேண்டும். அவ்வாறு இதுவரை கொண்டுவரப்படவில்லை. இறுதி வாதம் நடைபெறுவதற்கு முன்பாக, அந்த நகைகளை நீதிமன்றத்தில் ஒப்படைப்பது பற்றிச் சிறப்பு நீதிமன்றம் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அந்த நகைகளைக் கொண்டு வந்து விசாரணை நடத்துவதற்கு முன்பாகவே, இந்த வழக்கில் தீர்ப்பளித்துவிட வேண்டுமென்று நீதிபதி அவசரப்படுவது, அவர் தன் பதவி ஓய்வுக்கு முன்பாகவே தீர்ப்பளித்திட வேண்டும் என்று கருதினார் போலும்! நகைகளை நீதிமன்றத்திற்கே கொண்டு வந்து பார்வையிடாமல், இந்த வழக்கில் தீர்ப்பளிக்க முடியாது.

அரசு வழக்கறிஞர் பவானிசிங்கை மாற்ற வேண்டுமென்று கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் 23.8.2013 அன்று பொதுச் செயலாளர் பேராசிரியர் மனுத் தாக்கல் செய்தார். 26-8-2013 அன்று கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி திரு. போபன்னா, கர்நாடக மாநில சட்டத் துறைக்கு நோட்டீஸ் அனுப்பினார். இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கினைப் பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் விசாரிக்க வேண்டுமென உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம், நியாயமான விசாரணை நடைபெறுவதை கர்நாடக உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டுமென்று தெரிவித்திருந்தது. அதனால்தான் கர்நாடக மாநில உயர்நீதிமன்றம் கர்நாடக மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. அன்றையதினமே கர்நாடக மாநில அரசு, பவானிசிங் அவர்களை மாற்றி உத்தரவிட்டது.

கர்நாடக மாநில அரசு பவானிசிங் அவர்களை மாற்றி 26ஆம் தேதியே ஆணை பிறப்பித்த போதும், 27ஆம் தேதியன்று சிறப்பு நீதிமன்றத்தில் பவானிசிங் ஆஜராகி வாதிடுவதில் முனைப்புக் காட்டினார். அவர் அவ்வாறு வாதிட்டுக் கொண்டிருக்கும் நேரத்திலேயே அவரை அந்தப் பதவியிலிருந்து கர்நாடக மாநில அரசு நீக்கிய ஆணை பற்றி நீதிபதிக்குத் தெரிய வந்துவிட்டதால், நீதிபதி நீதிமன்ற நடவடிக்கைகளை அப்படியே நிறுத்திவிட்டு தன் அறைக்குச் சென்றுவிட்டார். அப்போது பவானிசிங் நீதிமன்றத்திலிருந்து வெளியேறி அ.தி.மு.க. வழக்கறிஞர்களுடன்

ஆலோசனை நடத்தியிருக்கிறார். என்ன ஆச்சரியம் பாருங்கள்! புலியும் மானும் ஒரே இடத்தில் நீர் அருந்திய கதையைப் படித்தது இல்லையா? அதைப்போல, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான வழக்கறிஞர்களும், அவர்களை எதிர்த்து வாதிட வேண்டிய வழக்கறிஞரும் கூடி ஆலோசனை நடத்திய வேடிக்கையும் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்திலே நடைபெற்றிருக்கிறது.

கர்நாடக மாநில அரசு பவானிசிங் அவர்களை மாற்றியிருக்காவிட்டால், 27ஆம் தேதியன்றே அரசுத் தரப்பின் வாதத்தைப் பவானிசிங் முடித்துவிட்டதாகத் தெரிவித்து, நீதிபதியும் தீர்ப்பிற்கான தேதியை அறிவித்திருப்பார்.

கர்நாடகாவுக்குச் சொத்துக் குவிப்பு வழக்கு மாற்றப்பட்ட நாளிலிருந்து மனு மேல் மனுப் போட்டு வழக்கை இழுத்தடிப்புச் செய்து வந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் புதிய சிறப்பு நீதிபதியாக திரு. பால கிருஷ்ணா நியமிக்கப்பட்ட பிறகு, இந்த வழக்கை விரைவில் முடிப்பதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள். அதற்காகவே அரசுத் தரப்பு வழக்கறிஞர் இரண்டு மாதகாலம் அவகாசம் வேண்டுமென்று கேட்டதைக்கூட அளிக்காமல், தன்னுடைய பதவி ஓய்வு நாளான செப்டம்பர் 30ஆம் தேதிக்குள்ளாக இந்த வழக்கில் தீர்ப்பளிக்கும் அவசரத்துடன் செயல்பட்டதையும் புரிந்துகொள்ள முடிந்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் தரப்பில் முதலில் 133 சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று கோரியிருந்தனர். ஆனால் 99 சாட்சிகளை மட்டும் விசாரித்துவிட்டு, தங்களுடைய சாட்சிப் பட்டியலைத் திடீரென்று குறைத்துக்கொண்டனர். இந்த 99 சாட்சிகளிடமும்கூட, அரசு வழக்கறிஞரான பவானி சிங் முறையாகக் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

குற்றம்சாட்டப்பட்ட தரப்பு முக்கியமான ஆவணங்களை "ஜெராக்ஸ்" நகல்களாகக் கொடுத்த போதிலும், சிறப்பு நீதிபதி அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்காமல் பெற்றுக்கொண்டார். இது "ஒரிஜினல்" ஆவணங்களையே சமர்ப்பிக்க வேண்டும் என்ற விதியை மீறியதாகும். "ஜெராக்ஸ்" நகல்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அரசு வழக்கறிஞரும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அரசு வழக்கறிஞர் பவானிசிங் நீக்கப்பட்டதாக கர்நாடக மாநில அரசு ஆணை பிறப்பித்ததும், தனது பதவி நீக்கத்தை எதிர்த்து உச்சநீதிமன்றம் செல்லப்போவதாக 28ஆம் தேதி பவானிசிங் அறிவித்த நிலையில், 29ஆம் தேதியன்று அரசு வழக்கறிஞர் நீக்கப்பட்டது நியாயமற்ற செயல் என்று குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. என்ன வேடிக்கை? எதிர்த்தரப்பு வழக்கறிஞரை மாற்றியது தவறு என்று ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றத்திற்கே சென்றுவிட்டார்கள். எதிர்த் தரப்பு வழக்கறிஞர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து குற்றம் சாட்டப்பட்டவரே உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த வினோதத்தை டெல்லியிலே உள்ள மூத்த வழக்கறிஞர்கள் எல்லாம் பார்த்துத் தங்களுக்குத் தாங்களே சிரித்துக் கொண்டார்களாம்!

உச்சநீதிமன்றம் ஜெயலலிதா தாக்கல் செய்த இந்த வழக்கினை 30ஆம் தேதியன்றே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டது. அரசு வழக்கறிஞர் பவானிசிங் அவர்களை கர்நாடக மாநில அரசு நீக்கியதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டுமென்ற ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று, தடை விதிக்க மறுத்த உச்சநீதிமன்றம், புதிய அரசு வழக்கறிஞரை அந்த இடத்திலே நியமிக்கவும் கூடாது என்று கூறியதுடன், அந்த மனு மீது கர்நாடக மாநில அரசின் கருத்தினைத் தெரிவிக்க வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பியது.

6-9-2013 அன்று உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, கர்நாடக அரசுத் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பவானிசிங்கின் நியமனமே சரியானது அல்ல என்பதால் அவரைத் திரும்பப் பெற முடிவு செய்வதாகவும், தலைமை நீதிபதியுடன் கலந்து புதிய வழக்கறிஞரை நியமனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினார். அதையேற்ற நீதிபதிகள், புதிய வழக்கறிஞரை கர்நாடக ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியுடன் ஆலோசனை நடத்தி நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

10-9-2013 அன்று பவானிசிங் அவர்களுக்கே கர்நாடக மாநில அரசின் சார்பாக அதன் சட்டத் துறைச் செயலாளர் ஒரு கடிதம் அனுப்புகிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பாக, “As the Government of Karnataka was of the view that your appointment was

not made in accordance with the directions issued by the Supreme Court in that the requirement of consultation has not been complied with, the Government withdrew your appointment..... In the circumstances the Government is of the view that it would be appropriate that pending consideration of the matter by Hon'ble the Chief Justice, you do not insist upon appearing before the Court in the aforesaid case as Special Public Prosecutor" என்று தெரிவித்துவிட்டது.

அதாவது, ''தங்களின் நியமனம் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் படி அமையவில்லை என்று கர்நாடக அரசு கருதுவதால் தங்களின் நியமன உத்தரவை இந்த அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது ; இப்போதுள்ள சூழ்நிலையில் தலைமை நீதிபதியின் முன்னால் புதிய வழக்கறிஞர் குறித்த நடவடிக்கை நிலுவையில் இருப்பதை மனதிலே கொண்டு, சிறப்பு அரசு வழக்கறிஞராக நீங்கள் ஆஜராக வேண்டும் என்பதை வலியுறுத்தக் கூடாது என்று அரசு கருதுகிறது'' என்று கர்நாடக அரசு கடிதமே எழுதியிருக்கின்றது.

10ஆம் தேதி கர்நாடக அரசு இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தவுடன், பவானிசிங் என்ன செய்வதென்று முடிவெடுப்பதற்குப் பதிலாக, ஜெயலலிதாதரப்பினர் முடிவெடுத்துவிட்டார்கள். அதாவது இன்று (13-9-2013) மதியம் 1 மணி அளவில் உச்சநீதிமன்றத்தில் பவானிசிங் இந்த வழக்கிலே ஆஜராகக் கூடாது என்று கர்நாடக மாநில அரசு எழுதியுள்ள கடிதத்திற்கு இடைக்காலத் தடை வழங்கிட வேண்டு மென்று ஜெயலலிதா கோரிக்கை மனுத் தாக்கல் செய்தார்.

பவானிசிங் அரசு வழக்கறிஞர் - ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடுவதற்காக அரசால் நியமிக்கப்பட்டவர் - அவரே இந்த வழக்கில் நீடிக்க வேண்டுமென்று ஜெயலலிதா எதற்காகத் துடிக்கிறார்? உச்சநீதிமன்றமும், ஜெயலலிதாவின் கோரிக் கையை ஏற்று, கர்நாடக மாநில அரசு பவானிசிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு இடைக்காலத் தடை பிறப்பித்துள்ளது. ஜெயலலிதாதரப்பிலே அதற்காக எடுத்துவைத்த வாதம் என்ன? அதைப் பற்றியெல்லாம் பின்னர் எழுதுகிறேன்.

உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தடை காரணமாக, இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் 17ஆம் தேதியன்று விசாரணைக்கு

வரவிருக்கிறது. இதற்கிடையே பவானிசிங் அவர்கள் வாதாடக் கூடாது என்று கர்நாடக உயர்நீதிமன்றத்தில் கழகத்தின் சார்பில் தொடுத்த வழக்கின் விசாரணை 16ஆம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

எப்படியோ கர்நாடக மாநில சிறப்பு நீதிமன்ற நீதிபதி பாலகிருஷ்ணா இந்த மாதம் 30ஆம் தேதியோடு ஓய்வு பெறவிருக்கிறார். அதற்குள் இந்த வழக்கிலே தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கருதுகிறார்கள். நீதிபதி அவர்களும் தான் ஓய்வு பெறுவதற்குள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கருதினார். இதிலே இடையிலே ஒரு சிக்கல். சிறப்பு நீதிமன்ற நீதிபதியின் பிறந்த நாள்படி அவர் இந்த மாதம் 12ஆம் தேதியோடு ஓய்வு பெற்றிருக்க வேண்டும். மாதத்தின் மத்தியில் யாராவது ஓய்வுபெற நேரிட்டால், அவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு ஏதுவாக, அந்த மாதக் கடைசி வரையிலே தொடர்ந்து பணியாற்றலாம் என்று அரசு அளித்த சலுகை காரணமாக, நீதிபதி பாலகிருஷ்ணா செப்டம்பர் 30ஆம் தேதி வரை பணியாற்றலாம். ஆனால் அவர் இயற்கையாக ஓய்வுபெற வேண்டிய 12ஆம் தேதிக்குப் பிறகு, இந்த மாதம் 30ஆம் தேதி வரை அவர் பணியாற்றினாலுங்கூட, முக்கியத் தீர்ப்புகளை அவர் வழங்கக் கூடாது என்பது நீதிமன்ற மரபு. அதன்படி அவர் 30ஆம் தேதிவரை நீதிபதியாகப் பணி நீடித்தாலும், இனிமேல் அவரால் இந்த வழக்கிலே தீர்ப்பு வழங்கிட இயலாது என்பதுதான் உண்மை. இதையும் மீறிச் சிறப்பு நீதிமன்ற நீதிபதி வழக்கினை நடத்துவாரா என்பது கேள்விக்குறி!

பேரறிஞர் அண்ணா அவர்கள் "நீதி தேவன் மயக்கம்" என்று ஒரு புகழ் பெற்ற நாடகம் எழுதினார். அதில் அண்ணா அவர்களே நடிப்பார். அதைப் போல இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கிலும் நீதி தேவன் மயக்கம் அடையப் போகிறாரா? நிமிர்ந்து நிற்கப்போகிறாரா? நீதி தேவன் மயக்கம் அடைந்தாலும், உண்மையான நீதிபதிகளாகிய தமிழ்நாட்டு மக்கள் முன்பாக இந்த வழக்கின் இறுதிக் கட்டத்தில் உள்ள நிலைமைகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

14-9-2013

3807. அறப்போர் வாளேந்தி, அய்யா; அண்ணா வழியில் பயணம் தொடருவோம்!

உடன்பிறப்பே,

இன்று (17-9-2013) முப்பெரும் விழா! பெரியார் அவர்களின் 135வது பிறந்த நாள் - அண்ணா அவர்களின் 105வது பிறந்த நாள் - தி.மு.கழகத்தின் 65வது பிறந்த நாள் - இந்த மூன்று நாள்களையும் இணைத்து நமக்கு எழுச்சியூட்டும் ஏற்றமிகு விழா இந்த முப்பெரும் விழா!

தந்தை பெரியாரோடு ஏற்பட்ட தொடர்பு பற்றி அறிஞர் அண்ணா அவர்கள், "எனக்கு பெரியாரோடு தொடர்பு ஏற்பட்டது 1935ஆம் ஆண்டில். திருப்பூரில் நடந்த வாலிபர் மாநாட்டில் தான் முதலில் சந்தித்தது. அன்று முதல் அவர் எனது தலைவர் ஆனார். நான் அவருக்கு சுவீகாரப் புத்திரன் ஆகிவிட்டேன் பொது வாழ்வில்!" என்று தந்தைக்கும், தனயனுக்கும் உறவு முளைத்ததை உற்சாகம் பொங்கக் கூறியிருக்கிறார். அதுமட்டுமோ! மேலும் "இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர் - தெரிந்த தலைவர் - பார்த்த தலைவர் பெரியார் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது. செய்யவும் மனம் வந்ததும் இல்லை. வராது. பெரியார் நமது இதய பூர்வமான தலைவர். இதயத்தில் குடியேறிய தலைவர்" என்றும் பெரியாரைப் பற்றி அண்ணா பெருமிதத்தோடு சொல்லியிருக்கிறார். அந்தப் பெரியாரைப் பற்றி நான்,

"இனத்தினிலே கோளாறு புகுத்தி வைத்தோர்
இடிமுழக்கம் கேட்பதுபோல் - திணறிப் போனார்
பின்னி வைத்த மதங்கடவுள், மடத்தன்மை யெல்லாம்
மின்னலது வேகத்தில் ஓடியதுகாண்!
பாராட்டிப் போற்றி வந்த பழமைலோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்.

ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு ஆரியத்தின்
அடிப்பீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம்!
அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்
கண் ஜாடை தெரிந்தால் போதும்;
கறுப்புடை தரித்தோர் உண்டு
நறுக்கியே திரும்பும் வாள்கள்!!"

என்று 1945ஆம் ஆண்டு என்னுடைய 21வது வயதில் கவிதை எழுதினேன்.

தந்தை பெரியார், தன்னுடைய பொது வாழ்வின் இலட்சியத்தைப் பற்றி "குடியரசு" ஏட்டின் முதல் இதழிலேயே "மக்களுக்குச் சுயமரியாதையும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும். உயர்வு - தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணும் அறிவு வளர வேண்டும்" என்று தெளிவுபடுத்தினார். அந்த இலட்சியப் பாதையில் இறுதி மூச்சு இருந்தவரையில் கொஞ்சமும் விலகாமல் பயணித்தார். அந்தப் பெரியாரின் 135வது பிறந்த நாள்!

அந்தப் பெரியாரின் தளகர்த்தராம் நம்முடைய அண்ணா அவர்களின் 105வது பிறந்த நாள்! என்றென்றும் அந்தத் தமிழ்த் தாயின் தலைமகனின் நினைவு நம் நெஞ்சை விட்டு நொடிப்போதும் நீங்கியதே இல்லை. அவருடைய திருவுருவத்தை நம் நெஞ்சிலே செதுக்கி அவருடைய வழியில் அயராது பணியாற்றி வருகிறோம். அந்த அண்ணனைப் பற்றி,

"பூவிதழின் மென்மையிலும் மென்மையான
புனித உள்ளம் - அன்பு உள்ளம் -
அரவணைக்கும் அன்னை உள்ளம்! அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும் -
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்-
விழிமலர்கள் வேலாகும், வாளாகும்
தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்!
கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம் நிற்காது;

கை மலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை !
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலை நாணச் செய்து விடும்!”

என்று 1969ஆம் ஆண்டு நான் எழுதிய கவிதை வரிகள் இன்றும் எனக்கு உணர்ச்சியூட்டிக் கொண்டிருக்கிறது.

அந்த அண்ணன் தலைமையில், கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் 17-9-1949 அன்று உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் 65வது பிறந்த நாள் இன்று!

இந்த மாபெரும் இயக்கத்தைத் தொடங்கிய போது அறிஞர் அண்ணா அவர்கள், “நான் மிக மிகத் தெளிவாகவே கூறி விடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த விதத்திலும் திராவிடர் கழகத்திற்கு எதிரானதல்ல; எதிர்நோக்கம் கொண்டதுமல்ல; கொள்கை ஒன்றே. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை - ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகள்” என்று பிரகடனப்படுத்தினார். மேலும், “திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் ஒட்டு மாஞ்செடிதான். மண் வளம் ஏராளம். அதே பூமி. நீர் பாய்ச்ச, பதப்படுத்த, பாத்தி கட்ட முன் நிற்போர் பலர். ஒட்டு மாஞ்செடி பூத்துக் காய்த்துக் கனி குலுங்கும் நாள் வந்தே தீரும்” என்றும் உறுதிபடக் கூறியவர் அண்ணா .

அண்ணா தோற்றுவித்தது தி.மு. கழகம் எனினும்; பெரியாரைத் தலைவராகக் கொண்ட திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டதும் 1944இல் சேலம் மாநாட்டில் “அண்ணா தீர்மானம்” காரணமாகத்தான். அந்த அடிப்படையிலேதான் பெரியார் பிறந்த நாள், அண்ணா பிறந்த நாள், திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த நாள் என்ற மூன்றையும் இணைத்து ஆண்டுதோறும் “முப்பெரும் விழா”வாக நடத்தி வருகிறோம்.

தந்தை பெரியார் சமுதாயச் சீர்திருத்தச் சிற்பி என்றால், அறிஞர் அண்ணா அரசியல் மறுமலர்ச்சி ஆசான். பெரியாரும், அண்ணாவும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்

போன்றவர்கள். காரல்மார்க்சும் ஏங்கல்சும் எப்படி பொதுவுடைமை இயக்கத்தின் பிதாமகன்களோ; அதைப்போலவே பெரியாரும், அண்ணாவும் திராவிட இயக்கத்தின் பிதாமகன்கள் ஆவார்கள்.

அண்ணா அவர்கள் நமக்கு அளித்த சொற்றொடர்களாம்

- கோடு உயர்ந்தது; குன்றம் தாழ்ந்தது!
- இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!
- தம்பி உடையான் படைக்கு அஞ்சான்!
- மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு!
- கையில் காசில்லாதவர்கள் - மனதில் மாசில்லாதவர்கள்!
- சாலையோரத்திலே சில வேலையற்றதுகள்; வேலையற்றதுகள் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள் !
- இயற்கை கொஞ்சுகிறது, இல்லாமை கொட்டுகிறது!
- தன்னை வெல்வான், தரணியை வெல்வான்!

போன்றவை நம் எண்ணத்தை என்றென்றும் புதுப்பித்துக் கொண்டே இருக்கும்.

அந்த அண்ணன் உருவாக்கிய கொள்கைப் பாசறையாம் தி.மு. கழகம் ஆளுங்கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் அமர்ந்து, தனது இலட்சியங் களில் அண்ணா வழியில் பல சாதனைகளைப் புரிந்து வருகிறது. தற்போது மீண்டும் எதிர்க்கட்சி வரிசையிலே தி.மு. கழகம் அமர்ந்திருக்கிறது என்றாலும், ஜனநாயகக் கடமையைப் பொறுப்புடன் நிறைவேற்றி, தமிழ் மக்களின் பாதுகாவலனாக விளங்கும் என்பதில் யாருக்குமே அய்யப்பாடு இருக்க முடியாது.

இந்த ஆண்டு முப்பெரும் விழாவினை வேலூர் நகரிலே நடத்திட என்னிடம் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில், பந்தல் அமைக்கின்ற வேலையும் தொடங்கப்பட்டு விட்ட நிலையில், வானிலை செய்தியில் இந்த வாரம் 15ஆம் தேதி வரை தொடர் மழை

இருக்கக்கூடும் என்று தெரிவித்த காரணத்தால், திடலில் பந்தலிட்டு இந்த நிகழ்ச்சியை நடத்துவதைக் காட்டிலும், சென்னையில் அண்ணா அறிவாலயத்தில், கலைஞர் அரங்கில் நடத்துவது பொருத்தமாக இருக்குமென்று முடிவு செய்து, வேலூர் மாவட்டக் கழக நண்பர்களையெல்லாம் அதற்கு ஒப்புக்கொள்ள வைத்து, இன்று (17-9-2013) முப்பெரும் விழா கழகத்தின் சார்பில் நடைபெறுகின்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்கள்பால் கொண்டிருந்த நேசத்தை வெளிப்படுத்திடும் வகையில் எப்போதும் போல முப்பெரும் விழா நிகழ்ச்சியுடன் இணைத்து, தி.மு. கழக அறக் கட்டளையின் சார்பில் மாணவர்களுக்கு நிதியளிப்பு விழாவும் நடைபெறுகிறது. மேல்நிலைப் பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு தி.மு. கழக அறக்கட்டளை சார்பில் நிதியளிப்பும் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பித்தல் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு "முரசொலி அறக்கட்டளை" சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணா அவர்கள் தொழிலாளர்களிடம் கொண்டிருந்த தோழமையை வெளிப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் வழங்குவதைப் போலவே இந்த ஆண்டும் சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கான நற்சான்று, பண முடிப்பு, பதக்கம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இவற்றைத் தொடர்ந்து கழகத்தின் சார்பில் முப்பெரும் விழா விருதுகள் வழங்கும் விழா நம்முடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மிகப்பெரிய அறுவை சிகிச்சைக்கு ஆளாகி நலம் பெற்று வரும் பேராசிரியர் அவர்கள்; "பெயரை அழைப்பிதழிலே போட வேண்டாம், உடல் நலம் அனுமதித்தால் நானே வந்து விடுகிறேன்" என்று தெரிவித்திருந்தபோதிலும், நான்தான் "அழைப்பிதழிலே பேராசிரியர் தலைமையில் என்றே அச்சிட்டு விடுங்கள், உடல் நலம் இடம் கொடுத்தால் விழாவிலே கலந்து கொள்ளட்டும்,

இல்லாவிட்டால் பரவாயில்லை” என்று கூறி அவ்வாறே அழைப்பிதழை அச்சடிக்கச் செய்தேன்.

முப்பெரும் விழா நாளன்று ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதைப்போல இந்த ஆண்டு, தந்தை பெரியார் விருதினை மராட்டிய மாநிலத்தில் கழகத்தின் வேர் பரப்பிய மும்பை த.மு. ஆரிய சங்காரன் அவர்களுக்கும், அண்ணா விருதினை மொழிப் போர் தளகர்த்தர் எல். கணேசன் அவர்களுக்கும், பாவேந்தர் விருதினை எழுத்து வேந்தர் க. திருநாவுக்கரசு அவர்களுக்கும், என் பெயரால் உள்ள கலைஞர் விருதினை “ஆயிரம் விளக்கின் அற்புத விளக்கு” என்று என்னால் பாராட்டப்பட்ட எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

கழகப் பொருளாளர் தளபதி மு.க. ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் ஆர்க்காடு நா. வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்கள் துரைமுருகன், வி.பி. துரைசாமி, திருமதி சற்குணப்பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளார்கள். தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் ஜெ.அன்பழகன், எம்.எல்.ஏ., வரவேற்புரை ஆற்றிட, வடசென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் நன்றியுரையாற்ற உள்ளார். முப்பெரும் விழாவினை சென்னையில் நடத்துவதையொட்டி, விழா ஏற்பாடுகளை கழகப் பொருளாளர் தளபதி தலைமையில் தென் சென்னை, வட சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்களும், மாவட்டக் கழக முன்னணியினரும் இணைந்து செய்து வருகிறார்கள்.

இந்த முப்பெரும் விழா பற்றிய செய்திகள் ஏற்கனவே ஏடுகளில் வெளிவந்துள்ளன. சுவரொட்டி வாயிலாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அண்ணனுக்காக எடுக்கப்படும் இந்த விழாவில் கலந்துகொள்ள, அதுவும் குடும்பத்துடன் கலந்து கொள்ள, பயணம் புறப்பட்டிருப்பாய் என்பதை நான் நன்றாகவே அறிவேன். இருந்தாலும் அண்ணாவிற்காக நடத்தப்படும் விழாவிற்கு ஆண்டுதோறும் அழைப்பு விடும் இந்த அண்ணன் இந்த ஆண்டு அழைக்கவில்லையே என்ற நினைப்பு உன் நெஞ்சத்தில் நிழலாடும் அல்லவா? அதற்காகவே அவசர அவசரமாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஒருசிலர் என் அழைப்பு வந்தால் புறப்படலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடும். அவர்களும் இந்த மடல் கண்டதும் உடனடியாக குடும்பத்துடன் புறப்பட்டு வருவர் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.

பெரியார் காட்டிய பாதையில் - அண்ணா பண்படுத்திய வழியில் - திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அறப்போர் வாளும் கேடயமும் ஏந்தி நம் பயணத்தைத் தொடருவோம்!

அன்புள்ள,

மு.க.

17-09-2013

3808. கொலை பயத்தின் கோரப்பிடியில் தமிழகம்!

உடன்பிறப்பே,

காவல் துறை பற்றி நடந்த சம்பவங்களின் அடிப்படையில் நான் விமர்சனம் செய்தால் எதிர்க்கட்சி விமர்சனம் என்பார்கள். எனவே ஆளுங்கட்சி ஆதரவு வார இதழ் என்று கருதப்படும் ஜூனியர் விகடனில் வந்த செய்திகளையே முதலில் குறிப்பிடுகிறேன்.

"டெல்லியில் மாணவி, மும்பையில் பத்திரிகையாளர் பலாத்காரம் எனப் பெண்களுக்கு எதிரான சம்பவங்களில், வட மாநிலப் போலீசார் விரைவாகக் குற்றவாளிகளைக் கைது செய்தனர். ஆனால், திருச்சியில் எட்டாம் வகுப்பு மாணவி தவ்ஹித் சுல்தானா, தண்டவாளத்தில் உடல் சிதறிய நிலையில் கண்டெடுக்கப்பட்டு ஒரு மாதம் முடிவடைய உள்ள நிலையில், மரணத்துக்கான காரணத்தைக் கூட போலீசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது கொடுமை. இதற்காக திருச்சியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேசியவர்கள், "ரயில்வே போலீசார், திருச்சி மாநகரப் போலீசார், சி.பி., சி.ஐ.டி. போலீசார் தவ்ஹித் சுல்தானாவின் வழக்கு அடுத்தடுத்து மாற்றம் செய்யப்பட்டாலும், சுல்தானாவின் வலது கை, இடுப்புக்குக் கீழே உள்ள உறுப்புகளைக்கூட கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு திருச்சி காவல் துறை கோமாவில் இருக்கிறது" எனக் காட்டமாகப் பேசினர்.

த.மு.மு.க. மாவட்டச் செயலாளர் பேசுகையில், "இந்த வழக்கை முதலில் விசாரித்த ரயில்வே போலீசார், சுல்தானா தற்கொலை செய்து கொண்டதாக எடுத்த மாத்திரத்திலேயே சொல்லிவிட்டனர். பிரேதப் பரிசோதனையை வீடியோ பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டதையும் மறுத்துவிட்டனர். மாநகரப் போலீசார் சுல்தானா தனது நோட்டில் எழுதி வைத்திருந்த இரண்டு செல்போன் எண்களைக் கொண்டு, பொறியியல் கல்லூரி மாணவர்களான ஐந்து பேரைப் பிடித்து விசாரித்தனர். அதில் உமர் ஃபாரூக் என்பவனை

சுல்தானா காதலித்ததாகவும், 13ஆம் தேதி மாலை சுல்தானாவை தனது பைக்கில் இரட்டைமலை கோயிலுக்கு அழைத்துச் சென்ற ஃபாரூக் தன் நண்பர்களுடன் சேர்ந்து பலாத்காரப்படுத்தி கொலை செய்துவிட்டு உடலை தண்டவாளத்தில் வைத்து விட்டதாகவும் சொன்னார்கள். பிறகு அந்த ஐவரையும் சம்பவம் நடந்த இடத்துக்கு அழைத்துப் போய் விசாரித்தனர். இது எல்லாப் பத்திரிகையிலும் வெளியானது. ஆனால் இப்போது அந்த ஐந்து பேரையும் விட்டு விட்டு, இது தற்கொலை என்கிறார்கள். ஆடையில்லாத நிலையில் உடல் சிதறிய நிலையில் சுல்தானா கண்டெடுக்கப்பட்டார். தற்கொலை செய்து கொள்வதற்கு முன், யாராவது உடைகளைக் கழற்றி வைப்பார்களா? சுல்தானா உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்துக்கு அருகேயுள்ள தண்டவாளத்தில் கடந்த 5ஆம் தேதி திருச்சி புங்கனூரைச் சேர்ந்த இளைஞர் பார்த்திபன் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். கடந்த ஆண்டு மார்ச் 29ஆம் தேதி படுகொலை செய்யப்பட்ட ராமஜெயம் வழக்கிலும் - அதற்கு முன்பே இறந்துபோன ரியல் எஸ்டேட் அதிபர்கள் துரைராஜ், தங்கவேலு வழக்கிலும் இதுவரை குற்றவாளிகளை சி.பி., சி.ஐ.டி. போலீசார் கைது செய்யவே இல்லை" என்றெல்லாம் கூறியதாகச் செய்தி வந்துள்ளது.

"பெண் கற்பழிப்பு, கொடுமை வழக்குகள் தமிழகத்தில் அதிகரிப்பு" என்ற தலைப்போடு "தினமலர்" 13-9-2013 அன்று வெளியிட்ட செய்தியில், "தமிழகத்தில், கற்பழிப்பு மற்றும் கணவன் மற்றும் குடும்பத்தாரால் பெண்கள் கொடுமைப்படுத்தப்படும் வழக்குகள், கடந்த ஆண்டைவிட அதிகரித்துள்ளது. குறிப்பாக, சென்னை, விழுப்புரம் மற்றும் நெல்லை மாவட்டத்தில் கற்பழிப்புச் சம்பவங்கள் அதிக அளவில் பதிவாகியுள்ளன. கடந்த 2009இல் 3,426ஆக இருந்த பெண்களுக்கெதிரான குற்றங்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டு 4,306 ஆக உயர்ந்து விட்டது. இந்த ஆண்டில் கடந்த ஜூலை மாதம் வரை, பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை 4,287ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளேடு, "The State Government has registered as many as 20,633 cases against 12,624 persons involved in hoarding and illegal transporting of essential commodities meant for PDS and 454 persons have been arrested under the Prevention of Black

Marketing and Maintenance of Supplies of Essential Commodities Act" என்று தெரிவித்துள்ளது.

கடந்த வாரப் பத்திரிகை ஒன்றில் "வேலூர் வெள்ளையன், சேலம் ஆடிட்டர் ரமேஷ், திருச்சி ராமஜெயம் ஆகியோர் கொலை வழக்குகளில் குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லையே ஏன்?" என்ற கேள்விக்கு, "மூன்று வழக்குகள், முப்பது ஆகி அதுவும், முன்னூறு ஆகிவிடும் போலத் தெரிகிறது. திருச்சியில் ஓர் இளம் பெண் மர்மமான முறையில் சில வாரங்களுக்கு முன் கொலை செய்யப்பட்டார். அந்த வழக்கும் திருச்சி போலீசிடம் இருந்து சி.பி., சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டு விட்டது. அப்படியானால் சட்டம், ஒழுங்கைக் காக்கும் போலீஸ் எதற்குத்தான் லாயக்கு ? கண்டுபிடிக்கப்படாத குற்றச் சம்பவங்கள் அதிகமாகி வருவது போலீஸ் துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வருக்கும் அழகல்ல. தமிழக டி.ஜி.பி.க்கும் அழகல்ல" என்று பதில் அளிக்கப்பட்டிருந்தது.

144 தடை உத்தரவு அமலில் இருந்த மே 1ம் தேதி முதல் ஆகஸ்ட் 31ஆம் தேதி வரை, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 28 கொலைகளும், 3 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டலும், கொலை முயற்சி மற்றும் கொள்ளைச் சம்பவங்களும் நடந்துள்ளன என்று ஒரு செய்தியும் வெளிவந்திருக்கின்றது.

மணல் கொள்ளையைப் பற்றி எழுதவே தேவை யில்லை. அதுபற்றி ஏடுகளில் செய்தி வராத நாளே இல்லை. 14ஆம் தேதிய "எக்ஸ்பிரஸ்" நாளேடு லாரிகள் வரிசையாக நின்று தென்பெண்ணையாற்றில் மணல் அள்ளுவதைப் புகைப்படமாகவே எடுத்து வெளியிட்டிருக்கின்றது. சிவகங்கை மாவட்டத்தில் மணல் கொள்ளை நடப்பதை அறிந்து நடவடிக்கை எடுக்கச் சென்ற கல்லல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மீது லாரி ஏற்றிக் கொலை செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு முயற்சி நடைபெற்றுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில், சுத்தமல்லி, வண்ணார்பேட்டை, ராஜவல்லிபுரம், மணப்படை வீடு, கீழ நத்தம், சீவலப்பேரி, பாலாமடை போன்ற பகுதிகளில் இரவு நேரங்களில் மணல் கொள்ளையர்கள் "பொக்லைன்" மூலம் தாமிர பரணி ஆற்றில் மணல் அள்ளி வருகின்றனர். அங்கே மணல் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த காவல் துறையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தங்கம் கொள்ளை அடிக்கப்படுவது பற்றி கேட்கவே வேண்டியதில்லை. கோவை நகை வியாபாரி ஜெயின்லாலிடம் ஏழரைக் கிலோ - கோவை நகைப் பட்டறையில் ஒன்றரைக் கிலோ - கோவை ஆர்.எஸ்.புரத்தில் ஒன்றரைக் கிலோ - கோத்தகிரி தொழிலதிபரை வெட்டி ஒரு கிலோ - திருச்சி திருவெறும்பூரில் நகைக்கடையில் 3 கிலோ - திருப்பெரும்புதூர் நகை வியாபாரி பதன்சந்திடம் 4 கிலோ - தர்மபுரி, வேலூர், நெல்லை, பண்ருட்டி நகைக்கடைகளில் மட்டுமே ரூ. 20 கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் நாகர்கோயில் மீனாட்சிபுரத்தில் 2 கிலோ என்று மாநிலம் முழுவதும் கொள்ளை போன தங்கங்களின் கதை சோகமயமானது.

"தமிழகத்தை அதிர வைக்கும் கூலிப்படைகள்" என்ற தலைப்பில் 16-9-2013 அன்று திரு. ராமு அவர்கள் ஒரு கட்டுரையை "தீக்கதிர்" நாளிதழில் எழுதியிருக்கிறார். அதில், "தமிழகத்தில் சமீப காலமாக கொலைகள் அதிகரித்து வருகின்றன. கூலிப் படைகளை ஏவி முக்கியத் தலைவர்களைக் குறிபார்ப்பதும், குறிவைப்பதும் அதிகரித்து வருகிறது. கூலிப்படை தங்களை குறிவைப்பதாகவும், தங்களுக்குப் பாதுகாப்புக் கேட்டும் ஜனநாயகத்தின் முதல் தூணின் அங்கமாகத் திகழும் சட்டமன்ற உறுப்பினர்களே காவல் துறையிடம் பாதுகாப்புக் கேட்கும் அவல நிலை உருவானது. கூலிப் படைகளின் செயல்பாடுகளினால் தமிழகத்தின் குற்ற சதவிகிதம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக தேசிய குற்றப் புலனாய்வு ஆவண மையம் கணக்குக் கூறுகிறது. தமிழக அளவில் இந்தக் கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் கொலைக்கு 10 ஆயிரம் முதல் 1 லட்ச ரூபாய் வரையிலும், ஆள் கடத்தல் என்றால் 25 ஆயிரம் முதல் ஒன்றரை லட்சம் ரூபாய் வரையிலும் வாங்குவதாகக் கூறப்படுகிறது. இது கொலை செய்யப்படும் நபரின் தராதரத்தைப் பொறுத்து அமையும். கூலிப்படையை வாடகைக்கு அமர்த்தித் தருவோருக்கு 25 சதவிகிதத்திற்கும் குறையாமல் கமிஷன் கொடுக்கவேண்டும் என்றும் கூறப்படுகிறது" என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக போலீஸ் மற்றும் தீயணைப்புத் துறைகளில் ஓட்டுனர் பணி இடங்கள் ஆயிரக்கணக்கில் காலியாக உள்ளதால், அன்றாடப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

"ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடனேயே கொள்ளையர்கள், ரௌடிகள், திருடர்கள் எல்லாம் ஆந்திராவுக்கு ஓடிப்போய் விட்டார்கள் என்று பேசினார் முதல்வர் ஜெயலலிதா, ஓடிப் போனவர்கள் மீண்டும் சென்னைக்கு வந்து விட்டார்களோ என்று அஞ்சும் அளவுக்குச் சென்னையில் கொலை, கொள்ளை, கடத்தல் அதிகரித்திருக்கிறது. கடந்த வாரத்தில் பணத்துக்காகப் பள்ளி மாணவன் கடத்தல், பிச்சை எடுக்க வைக்க குழந்தை கடத்தல், வியாபாரியைக் கடத்தி பணம் வசூல் என்று கடத்தல்கள் பட்டையைக் கிளப்பின" என்று ஜூனியர் விகடன் கட்டுரையில் எழுதியிருக்கின்றது.

வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக் கழகத் துணை வேந்தரின் அறையை யாரோ மர்ம நபர்கள் வந்து எரித்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். மயிலாடுதுறையில் மயூரநாதர் கோவில் தங்கக் கலசத்தையே கொள்ளை அடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

தமிழகத்தில் நேற்று ஒரு நாளில் மட்டும் 12 பேரோ, 13 பேரோ படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சென்னையில் மட்டும் 4 பேர் படுகொலை, தாம்பரம் அருகே அக்காள், தம்பி - மாணவி சாதஸ்மி, அவரது தம்பி யுகேஷ் படுகொலை, ஜாபர்கான்பேட்டையில் பிரவீண் குமார் வெட்டிக் கொலை, நாசரெத்தில் தந்தை, மகள் லீமா, செல்லுத்துரை வெட்டிக் கொலை, சிவகங்கை அருகே 2 பேர் - வெங்கடேஷ், இளையராஜா வெட்டிக் கொலை, தஞ்சையில் மூதாட்டி - பாக்கியத்தம்மாள் கழுத்து அறுத்துக் கொலை, சென்னை ஆர்.கே. நகரில் வழிப்பறிக் கொள்ளையன், கூட்டாளியுடன் - சுதாகர், தங்கராஜ் படுகொலை, தூத்துக்குடி அருகே டீக்கடை உரிமையாளர் செம்புலிங்கம் வெட்டிக் கொலை என்பது நேற்றைய பட்டியல். நெடுநாளையப் பட்டியல் என்று பார்த்தால் இந்து முன்னணி முக்கியத் தலைவர் வெள்ளையப்பன், பா.ஜ.க. பிரமுகர், ஆடிட்டர் ரமேஷ், திருச்சியில் தம்பி நேருவின் இளவல் ராமஜெயம் ஆகிய கொலைகளில் குற்றவாளிகள் பிடிக்கப்படவே இல்லை. தூத்துக்குடி, மதுரை, சிவகங்கை, தஞ்சையில் 24 மணி நேரத்தில் 7 பேர் - வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தண்டையார்பேட்டை யின் ஆர்.கே. நகர் காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் கடந்த மூன்று மாதங்களில் 10 கொலைகள் நடந்துள்ளன

என்றும், தொடர் கொலைகளால் அந்தப் பகுதி மக்கள் பீதி அடைந்திருப்பதாகவும் ஒரு செய்தி இன்று வெளி வந்துள்ளது. அதாவது தண்டையார்பேட்டை ஐ.ஓ.சி. அருகே மாமூல் தகராறில் ஆயில் ராஜா என்பவர் கொலை செய்யப்பட்டார். தண்டையார் பேட்டை ஐ.ஓ.சி. அருகே போதைக் கும்பல் ஒன்று, பணத்திற்காக மேடவாக்கத்தைச் சேர்ந்த பி.டி.சி. மெக்கானிக் வாசுதேவனை கண்டம்துண்டமாக வெட்டிக் கொன்றிருக்கிறது. கொருக்குப்பேட்டையில் புது மாப்பிள்ளை கமல்ராஜ் என்பவர் கழுத்தறுத்துக் கொலை, கோஷ்டி மோதலில் ரவுடிகள் டவுக் சுரேஷ், கோபி ஆகியோர் கொலை, கடந்த 15ஆம் தேதி பட்டப்பகலில் பழிக்குப் பழியாக ரவுடி தனசேகரன் கொலை என்று பட்டியலிடப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில், அரவக்குறிச்சி அருகே கடந்த 1ஆம் தேதி தலையில் கல்லைப் போட்டு பெண் ஒருவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். போலீசார் விசாரணையில் தேனி மாவட்டம், பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த திலகவதி என்பதும், அவர் திருச்சி கிழக்குத் தொகுதி அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினரும், அரசின் தலைமைக் கொறடாவுமான ஒருவரின் உறவினர் என்றும் தெரியவந்தது. கடந்த 6ஆம் தேதி பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த கதிரேசன் என்பவர் மதுரை நீதிமன்றத்தில் இந்த வழக்கு காரணமாகச் சரணடைந்தார். அரவக்குறிச்சி போலீசார், கதிரேசனை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தனர். போலீஸ் காவலின் போது அந்தக் கதிரேசன் நேற்று முன்தினம் இறந்திருக்கிறார். புகைப்படம் எடுக்க வந்த பத்திரிகைக்காரர்களை அனுமதிக்காமல் காவலர் விரட்டி விட்டனர். கதிரேசன் எப்படி இறந்தார் என்று தெரியவில்லை. இதற்கிடையே அரவக்குறிச்சி இன்ஸ்பெக்டர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இது இன்றைய செய்தி.

இவ்வாறு தொடர்ந்து அன்றாடம் காவல் துறையைப் பற்றியும், கொலை, கொள்ளைகளைப் பற்றியும் ஏடுகளில் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. இதைப்பற்றி ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் யாரும் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. எதிர்க்கட்சிகளை பேசவிடாமல் செய்வது, பேசினாலும் அவதூறு வழக்குத் தொடுப்பது, மாவட்டங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிப்பது, மாவட்டங்களுக்குள் வரவே கூடாது என்று

ஆணை பிறப்பிப்பது, அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்குத் தடை விதிப்பது என்று ஆட்சியினர் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் செயல்பட்டு வருகிறார்கள்; அத்தகைய ஜனநாயகத்துக்கு விரோதமான காரியங்களில் காவல்துறையினர் ஈடுபடுத்தப்படுவதால், அவர்களுடைய பெரும்பாலான நேரம் அதிலேயே கழிந்து, அடிப்படைப் பணிகளான சட்டம் - ஒழுங்கு, கொலை, கொள்ளைச் சம்பவங்களில் புலனாய்வு போன்றவை புறக்கணிக்கப்பட்டு, தமிழக மக்கள் அச்சத்தின் கோரப்பிடியில் அனுதினமும் தவிக்கிறார்கள்!

கழக ஆட்சி நடைபெற்ற போது காவல் துறை சீரழிந்து விட்டது என்று அன்றாடம் அறிக்கை கொடுத்த இன்றைய முதலமைச்சரின் பொறுப்பிலே உள்ள காவல் துறை எந்த நிலையிலே உள்ளது என்பதை தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தொகுத்துத் தந்துள்ள இந்த விவரங்களிலிருந்து உண்மையைப் புரிந்து கொள்வதற்காகவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு.க.

21-09-2013

3809. நீவிர், வீட்டுக்கு விளக்குகள்; நாட்டுக்குத் தொண்டர்கள்!

உடன்பிறப்பே,

14.9.2013 அன்று சென்னையில் "அன்பகத்தில்" கழகப் பொருளாளர், தளபதி தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக இளைஞர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்று, நான்கு முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றி, அவை ஏடுகளில் வெளிவந்திருப்பதை நீ படித்து அறிந்திருப்பாய்!

அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் - "பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா பிறந்தநாள், தமிழ் இனத்தின் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழும் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமான நாள் ஆகியவை இணைந்த "முப்பெரும் விழா" தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆண்டுதோறும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது. இவ்விழாவின் தொடர்ச்சியாக தி.மு.க. இளைஞர் அணியின் சார்பில் தமிழகமெங்கும் பட்டிதொட்டிகள் தோறும் கழகத்தின் தங்கநிகர் கொள்கைகளையும், தமிழக மக்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில்கொண்டு தலைவர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத் திட்டங்களையும் மக்களிடையே விளக்கிடுவதோடு, நிர்வாகத் திறனற்ற ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்குச் சீர்குலைவு, எங்கு நோக்கினும் கொலை, கொள்ளை, வழிப்பறி, வன்முறை, கற்பழிப்பு, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, மின்வெட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் என அனைத்துத் தரப்பினரையும் வேதனைக்கு உள்ளாக்கி வரும் அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பட்டியலிட்டு அவற்றை எளிய முறையில் அச்சிட்டு, கிராமங்கள், குக்கிராமங்கள், நகரங்கள், வார்டுகள் என அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று வீடுவீடாக

விநியோகிப்பதோடு, ஆங்காங்கே திண்ணைப் பிரச்சாரம் எனப் பல்வேறு கோணங்களில் வியூகம் அமைத்துச் செயலாற்றிட இன்றே திட்டமிட்டு, பிரச்சாரப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்வதோடு, முதற்கட்டப் பிரச்சாரப் பணிகளை 24.9.2013ஆம் தேதி முதல் 30.9.2013ஆம் தேதிவரை தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு, தமிழகம் முழுவதும் நடத்திட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது" என்பதாகும்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் தொடர்ச்சியாக இளைஞர் அணியின் சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ள கழகச் சொற்பொழிவாளர்களின் பெயர்ப் பட்டியலும் இளைஞர் அணியின் செயலாளர் தம்பி ஸ்டாலினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டது. மாவட்ட இளைஞர் அணியின் அமைப்பாளர்கள் அந்தப் பட்டியலிலே உள்ள பெயருக்குரியவர்களைத் தொடர்புகொண்டு எந்தெந்தத் தேதிகளில் நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, பேச்சாளர்கள் எப்போது வருகிறார்கள், எத்தனை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் தொலைபேசி வாயிலாகப் பேசி வருவது என் கவனத்திற்கு வந்தது.

எந்தெந்த ஊர்களில், யார் யார் பேச்சாளர்கள், அவர்கள் எத்தனை மணிக்கு வருவார்கள் என்ற தகவல்களையெல்லாம் நேற்றையதினம் தம்பி ஸ்டாலின் அன்பகத்தில் அமர்ந்து மாவட்டவாரியாகப் பட்டியலாகத் தயாரித்து இன்றைய முரசொலியில் வெளியிட்டுள்ளார். அதுவே எட்டு மாவட்டங்களுக்குத்தான் முடிவடைந்துள்ளது. மற்ற மாவட்டங்களுக்குத் தொடர்ந்து வெளிவரும். இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிருக்கின்ற பேச்சாளர்கள், கழகத்தின் மூத்தப் பேச்சாளர்கள் அல்ல; சில வளர்ந்த பேச்சாளர்களும், சில வளருகின்ற பேச்சாளர்களும் இந்தத் தெருமுனைப் பிரச்சாரத்தில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் தர வேண்டியது கழகத்தவர் கடமை.

பேச்சாளர்கள் எந்தப் பொருள் பற்றி அந்தக் கூட்டங்களில் பேசுவது என்பதற்கான விவரங்களை - 90 வயதுக்கு மேலான நான் - அன்றாடம் காலை உணவை 11 மணி அளவில் அருந்துகின்ற

அளவிற்கு - காலையில் அமர்ந்து எழுதுகின்ற "உடன்பிறப்பு" கடிதங்களின் மூலமாகவும், "கேள்வி-பதில்கள்" மூலமாகவும் தெரிந்து கொண்டிருக்கலாம். கழகப் பேச்சாளர்கள், ஏன் குறிப் பாக நம்முடைய துணைப் பொதுச் செயலாளர் துரை முருகன் உட்பட பலர் அன்றாடம் என் கடிதங்களிலே உள்ள கருத்துகளை, பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கேற்ப இரவில் குறிப்பெடுத்து வைத்துக் கொள்வதாகவும், அது கூட்டங்களில் பேசுவதற்கு மிகவும் உதவிகர மாக இருப்பதாகவும் என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

தற்போது அரசியலில் மிகவும் பரபரப்பான செய்தியாக வெளிவந்து கொண்டிருப்பது முதலமைச்சர் ஜெயலலிதா மீதான 66 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு பற்றியதாகும். அந்த வழக்கு 1997ஆம் ஆண்டிலிருந்து 16 ஆண்டுக் காலமாக நடைபெற்றுவருகிறது. உச்ச நீதிமன்றத்திலும், பெங்களூரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்திலும், கர்நாடக மாநில உயர் நீதிமன்றத்திலும் என்று இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது. இதுவரை நூறு முறைகளுக்கு மேல் அந்த வழக்கில் குற்றம் சாற்றப்பட்டவர்கள் வாய்தா வாங்கியிருக்கிறார்கள். ஆனால் தற்போது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அந்த வழக்கினை விசாரிக்கும் குறிப்பிட்ட நீதிபதிதான் இந்த வழக்கு முடியும்வரை நீடிக்க வேண் டும் என்றும், தங்களுக்கு எதிராக வாதாடுவதற்காகக் கர்நாடக அரசால் நியமிக்கப்பட்டுள்ள அரசு வழக்கறிஞரும், தற்போது உள்ளவர்தான் நீடிக்க வேண்டுமென்றும் முறையிடுகிறார்கள் என்றால், அதிலே உள்ள சூட்சமத்தையும், சுயநல உள்நோக்கத்தையும் கிராமங்கள்தோறும் மக்களிடையே எடுத்து விளக்கிப் புரியவைத்திட வேண்டிய முக்கியக் கடமை உனக்கு உள்ளது. அதுபற்றி நான் 14.9.2013 தேதிய "முரசொலி"யில் இரண்டு பக்கங்களுக்கு மேல் எழுதினேன். ஆனால் அதிலே உள்ள கருத்துகள் தமிழகத்தில் வெளிவரும் தமிழ், ஆங்கில ஏடுகள் அனைத்திலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டன. அப்படியே வெளியிட்டாலும் ஒரு பத்தி, இரண்டுபத்திக்கு மேல் போவதில்லை. அரசுக்கு எதிரான செய்திகளையோ, ஜெயலலிதாவுக்கு எதிரான விமர்சனங்களையோ வெளியிட்டால் அந்தப் பத்திரிகைகளுக்கு முழுப் பக்க விளம்பரங்கள், அரைப் பக்க விளம்பரங்கள் கிடைக்காது. தற்போதெல்லாம் பத்திரிகைகளுக்கு, அவைகள் விற்கப்பட்டு வருகின்ற வருவாயைவிட, அரசு

விளம்பரங்கள் மூலமாகத்தான் அதிக வருவாய் வருகின்றதாம். எனவே "பத்திரிகாதர்மம்" என்பதையெல்லாம் சற்று ஒதுக்கி ஓரங்கட்டி வைத்துவிட்டு, ஜனநாயக ரீதியாக ஆற்றிட வேண்டிய கடமையை மறந்து, "வருமானம்" ஈட்டுவதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். கழகத்தைப் பொறுத்தவரை நாம் இந்த ஏடுகளை நம்பி இயக்கம் நடத்துபவர்கள் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே "இந்து" நாளிதழ் "அண்ணா அவர்களும் அந்தக் கூட்டத்திலே பேசினார்" என்று வெளியிட்டது உண்டு. அதையெல்லாம் மீறித்தான் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. கழகப் பேச்சாளர்கள், ஏடுகள் ஆற்ற வேண்டிய பணியைத் தாமே எடுத்துக்கொண்டு, நாட்டு நடப்புகளை மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

என்னுடைய கருத்துகளைத் தமிழக ஏடுகள் புறக்கணித்த காரணத்தால், அந்தச் செய்தி தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமலே போய்விட்டதா? ஏடுகளிலே அந்தச் செய்தி வெளிவரவில்லை என்றதும், "முரசொலி" யில் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி நான் எழுதிய கடிதத்தைக் கழக உடன்பிறப்புகள் ஆங்காங்கு துண்டு நோட்டீஸ்களாக அச்சடித்து விநியோகிக்க வேண்டுமென்று நான்கு வரிகள் வந்ததுதான் தாமதம், மறுநாள் முதல் மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் தங்கள் முயற்சியின் காரணமாகத் தங்கள் மாவட்டத்தில் எத்தனை ஆயிரம் துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து மக்களிடம் விநியோகித்தோம் என்று ஆர்வத்தோடு பட்டியல் அனுப்பத் தொடங்கினார்கள். இளைஞர் அணியினரோ ஒரு படி மேலே போய், துண்டு நோட்டீஸ்களைக் கையிலே ஏந்தி ஆங்காங்குப் பேருந்துகளிலே ஏறிக்கொண்டு அதிலே பயணம் செய்தவர்களுக்கெல்லாம் விநியோகித்த காட்சியை நீங்களே ஏடுகள் வாயிலாகக் கண்டிருப்பீர்கள். எனவே திருமண வீட்டில் சீப்பை எடுத்து ஒளித்துவைத்துக் கொள்வதைப்போல என்னுடைய கடிதத்தை ஆட்சியாளர்களுக்குப் பயந்துகொண்டு இருட்டடிப்புச் செய்தவர்கள் எல்லாம் ஏமாந்துதான் போனார்கள்! தெருமுனைப் பிரச்சாரத்தில் ஈடுபடவிருக்கும் பேச்சாளர்கள், அந்தத் துண்டுநோட்டீசில் இடம்பெற்றுள்ள கருத்துக்களைப் பொதுமக்களிடம் விளக்கிக் கூறிட வேண்டும்.

அடுத்து, தற்போது தமிழகத்திலே அன்றாடம் கேள்விக் குறியாக உள்ள பிரச்சினையான சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து கிடப்பதைப் பற்றி மக்களுக்கு விளக்கிட வேண்டும். "கொலைப் பயத்தின் கோரப்பிடியில் தமிழகம்" என்ற தலைப்பில், தற்போது தமிழகத்தில் உள்ள சட்டம், ஒழுங்குப் பிரச்சினை பற்றி பல்வேறு நாளேடுகளிலும், வார இதழ்களிலும் வெளிவந்த கருத்துகளையெல்லாம் தேடிப் பிடித்து தொகுத்துத் தந்துள்ளேன். அந்தக் கருத்துகளையெல்லாம் பொதுமக்கள் நன்றாகப் புரிந்து கொள்ளும் விதமாக, என்னென்ன ஏடுகள் இந்த ஆட்சியைப் பற்றி எவ்வாறு விமர்சனம் செய்துள்ளன என்பதையெல்லாம் நீங்கள் படித்துக் காட்டிட வேண்டும். காவல்துறையினருக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் திறக்கப்படாமல் அந்தக் காவல் நிலையங்கள் எவ்வாறு பாழடைந்த கட்டிடங்களிலே இயங்கி வந்தன என்பதையெல்லாம் ஆதாரத்தோடு குறிப்பிட்டு 6-9-2013 அன்று நான் உடன்பிறப்பு மடல் எழுதியிருந்தேன். அதற்குப் பிறகுதான் அவசர அவசரமாக முதலமைச்சரிடம் அதிகாரிகள், "கருணாநிதி முரசொலியில் இவ்வாறு உண்மைகளையெல்லாம் பட்டவர்த்தனமாக எழுதிவிட்டார், இனியாவது ஐந்து நிமிடம் நேரம் கொடுங்கள்" என்று கெஞ்சி முதல்வரிடம் நேரம் பெற்று, கட்டி முடிக்கப்பட்டு நீண்ட காலமாகத் திறக்கப்படாமல் உள்ள காவல் நிலையங்களையெல்லாம் முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்து, அந்தச் செய்தியைத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக வெளியிட்டன. எந்தப் பத்திரிகையும், முதலமைச்சரால் திறக்கப்பட்ட காவல் நிலையக் கட்டிடம் பற்றிக் கருணாநிதி குற்றம் சாற்றியிருந்தார், அதற்குப் பிறகுதான் முதலமைச்சர் நேரம் ஒதுக்கி அதைத் திறந்து வைத்தார் என்று குறிப்பிடவே இல்லை. இந்தச் செய்திகளையெல்லாம் நீங்கள் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என்று கூறப்பட்டு, பல கோடி ரூபாய்ச் செலவில் திருமணம் செய்து வைக்கப்பட்ட சுதாகரன், பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் கைது செய்யப்பட்டது பற்றியும், 2001ஆம் ஆண்டு முதல் 12 ஆண்டுகளாக அவர் மீது வழக்கு நடைபெற்று, தற்போது அளிக்கப்பட்ட தீர்ப்பு பற்றியும், தீர்ப்பை வழங்கிய நீதிபதி என்ன சொன்னார் என்பது பற்றியும் 20ஆம் தேதிய கேள்வி பதில் பகுதியில் விரிவாகத் தெரிவித்துள்ளேன்.

எவ்வாறு இந்த ஆட்சியில் பிடிக்காதவர்களை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காகவும், காழ்ப்புணர்ச்சியோடும் வழக்குப் போடப்படுகிறது என்பதற்கு நல்லதொரு விளக்கமாக அது அமையும்.

கச்சத் தீவு பிரச்சினை பற்றியும், விவசாயிகள் பிரச்சினை பற்றியும் 12.9.2013 அன்று கேள்வி-பதில்கள் பகுதியிலே எழுதியிருக்கிறேன். அதே நாளில் தஞ்சை நகராட்சி சார்பாக ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட ஒரு பணிக்கு "டெண்டர்" விடப்பட்ட வினோதம் பற்றியும், தேனியில் பேருந்து நிலையம் ஒன்று கட்டிமுடிக்கப்பட்டு அ.தி.மு.க.வினர் அதன் திறப்பு விழாவிற்கு முட்டுக்கட்டை போட்டுவருவது பற்றியும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

தி.மு. கழக ஆட்சியில் மகளிர்க்காக எத்தகைய மகத்தான திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டன என்ற விவரத்தைச் சற்று விரிவாகவே 8.9.2013 தேதிய முரசொலியில் தெரிவித்திருக்கிறேன். அ.தி.மு.க. அமைச்சர்கள் சிலர் கழக ஆட்சியில் மகளிர்க்காக எதுவும் செய்யவில்லை என்பதைப்போல "ப்ளக்ஸ் போர்டு" வைத்ததோடு சரி! ஆனால் எப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் மகளிர்க்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன என்பதையெல்லாம் தெரிவித்திருக்கிறேன். அவற்றைப் பற்றியும் தெருமுனைப் பிரச்சாரங்களில் கோடிட்டுக் காட்டவேண்டும். அதே நேரத்தில் கடந்த சில நாட்களாக மாற்றுத் திறனாளிகள் இந்த ஆட்சியில் எந்த அளவிற்குப் போராடுகிறார்கள் என்பதையும், அவர்களைக் கைது செய்யும் காவல் துறையினர் எவ்வாறு அந்த மாற்றுத் திறனாளிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதையும் விளக்கிக் கூறத் தவறக் கூடாது.

அ.தி.மு.க. ஆட்சியில் மின்வெட்டு நிலைமை எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றியும், ஆட்சிப் பொறுப்பேற்றபோது மூன்றே மாதங்களில் மின்வெட்டினைச் சரி செய்வோம் என்று சவால் விட்டவர்கள், மூன்றாண்டுகள் முடிகின்ற நிலையிலும் மின் வெட்டுப் பிரச்சினையைத் தீர்க்காமல் இருப்பதைப் பற்றியும் நினைவுபடுத்திட வேண்டும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கழக ஆட்சியில் எவ்வாறு விரைவுபடுத்தப்பட்டு வந்தது, தற்போது திட்டம் முழுமை அடையாத நிலையில் எந்த அளவிற்கு

விளம்பரம் செய்யப்பட்டு அவசர அவசரமாகத் திறந்து வைக்கப் பட்டது என்பதையெல்லாம் 6.9.2013 அன்று முரசொலியில் எழுதியிருக்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அதற்கு முன்பு மக்கள் நலனுக்காகவும், மாநிலத்தின் மேம்பாட்டுக்காகவும் தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களையெல்லாம் முடக்கிப் போடுவதற்காக என்னென்ன முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்பதையும் தெருமுனைப் பிரச்சாரங்களில் சுட்டிக்காட்டத் தவறக் கூடாது. குறிப்பாக தலைமைச் செயலகத்திற்காக தி.மு.கழக ஆட்சியில் 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டப்பட்ட கட்டிடம் மூன்றாண்டு காலமாக மூடப்பட்டுக் கிடப்பதையும், மதுரவாயல் - துறைமுகம் உயர் மட்டப் பறக்கும் சாலைத் திட்டத்தின் கதி என்ன என்பதையும், சேது திட்டம் கூடாது என்று நீதிமன்றம் வரை இந்த அரசு சென்றிருப்பதைப் பற்றியும் இந்தப் பிரச்சாரங்களில் தவறாமல் விளக்கிட வேண்டும்.

இப்படி எழுதிக்கொண்டே போகலாம்! ஆட்சியின் அவலங்களையெல்லாம் மறைப்பதற்காகவும், நாளேடுகள் அவற்றை வெளியிட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் ஒருவார காலத்தில் ஏடுகளுக்காக அ.தி.மு.க. ஆட்சியில் தரப்பட்ட முழுப் பக்க விளம்பரங்கள் எத்தனை என்பதையும், ஒவ்வொரு நாளிதழுக்கும் அந்த ஒருவார கால விளம்பரத்திற்காக அரசு அளித்த விளம்பரக் கட்டணம் எவ்வளவு என்பதையும் மிகவும் தெளிவாக எழுதி, அந்தப் புள்ளி விவரங்கள் தவறு என்றால், ஆட்சியினர் மறுப்பு வெளியிடட்டும், அதை ஏற்றுக் கொள்கிறேன் என்று செப்டம்பர் 1ஆம் தேதியே எழுதியிருந்தேன். இதுநாள் வரை அதற்கு எந்தப் பதிலும் ஆட்சியினர் தரவில்லை. மாறாக எதிர்க்கட்சியினர் மீது "அவதூறு வழக்கு"களைத் தொடுத்தே காலத்தைக் கழித்துவிட எண்ணுகிறார்கள். இதையெல்லாம் இந்த ஒரு வார காலம் தெருமுனைப் பிரச்சாரங்களில் ஈடுபடுவோர் எடுத்து விளக்கிடத் தவறக் கூடாது.

வெறும் வாய் ஜாலத்தாலும், வெற்று அறிக்கைகளாலும், பக்கம் பக்கமாக வெளியிடும் விளம்பரங்களாலும் மக்களை மயங்க வைத்து, ஏதோ தமிழக முன்னேற்றத்திற்கு அடுக்கடுக்கான காரியங்கள் நடைபெற்று வருவதைப் போல நம்பவைத்துக்

குளிர்காயலாம் என்று அ.தி.மு.க. ஆட்சியினர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சான்றுகளுடன் ஊர்கள்தோறும், தெருக்கள்தோறும், வீடுகள்தோறும் எடுத்து விளக்கிட வேண்டிய பொறுப்பை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும். என் தம்பி, தங்கைகளாம் நீவிர் நிறைவேற்றிடுவீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. நீவிர், வீட்டுக்கு விளக்குகள் அல்லவா; நாட்டுக்குத் தொண்டர்கள் அல்லவா?

அன்புள்ள,

மு.க.

23-9-2013

3810. விளம்பர வெளிச்சத்தில் காணும் கனவு!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக மின் வெட்டு நீடித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கடந்த பத்து நாட்களில் மட்டும் காற்றாலைகள் உற்பத்தி செய்த 5.73 கோடி யூனிட் மின்சாரம் வீணாகியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. தமிழகத்தில் கடந்த சில வார கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் மின்வெட்டு தொடரும் என்றெல்லாம் வரும் செய்திகளைப் பார்த்து மக்கள் பீதியும், பதற்றமும் அடையத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த நிலையில் காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் தங்களிடமிருந்து 50 சதவிகித மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள தமிழக அரசு மறுப்பதாகக் கூறி வழக்கே தொடர்ந்திருக்கிறார்களாம். இதுபற்றி இந்தியக் காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கஸ்தூரிரங்கையன் அளித்துள்ள பேட்டியில், "உலக அளவில் அதிகக் காற்றாலைகள் நிறுவியதில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 19,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் அளவுக்குக் காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 40 சதவிகிதம், தமிழகத்தில் உள்ளது. தமிழகத்தில் யாரெல்லாம் காற்றாலை அமைக்கிறார்களோ அவர்களிடமிருந்து அந்த மின்சாரம் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளப்படும் என்று அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதை நம்பித்தான் தமிழகத்தில் காற்றாலைகளின் எண்ணிக்கை அதிகமானது. தொழில் முனைவோர் அதிக அளவில் காற்றாலைகளை நிறுவி, மின்சாரத்தைத் தயாரித்து வந்தனர். கடந்த ஜூன் மாதம்வரை எல்லாம் நல்லபடியாகத்தான் நடந்தது. இப்போது எங்களிடமிருந்து மின்சாரத்தை வாங்கத் தமிழக அரசும், மின்வாரியமும் மறுத்து வருகிறது. இதனால் நாங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். அரசு வாங்கிக்கொள்ளும்

என்று நினைத்துத்தான் நாங்கள் காற்றாலைகள் அமைத்தோம். இப்போது அரசு நம்பிக்கைத் துரோகம் செய்கிறது. காற்றாலைகளை நிறுவிடக் கிட்டத்தட்ட 70 சதவிகிதத் தொகையை வங்கியில் கடனாகப் பெற்றுள்ளோம். இப்படித் திடீரென மின்சாரத்தை முழுமையாகப் பெற மறுத்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்? வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை வாங்குவதுதான் இதற்குக்காரணம். மிகக் குறைந்த விலையில் அதாவது யூனிட்டுக்கு ரூ. 3.05 விலையில் நாங்கள் உற்பத்தி செய்து வழங்குகிறோம். வெளி மாநிலங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு ரூ. 4.91. அங்கிருந்து கொண்டு வருவதற்கான கட்டணம் ரூ. 1.20 ஆகிறது. ஆக, ஒரு யூனிட் மின்சாரம் ரூ. 6.11 ஆகிறது. காற்றாலை மின்சாரத்தை வாங்காமல் இரட்டிப்பு விலையில் வெளி மாநிலத்திலிருந்து வாங்குவதால் மின்வாரியத்தின் நஷ்டம் மேலும் அதிகரிக்கிறது. இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தியில் முதல் இடத்தில் இருந்த தமிழகம் இப்போது ஐந்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தமிழக அரசுதான் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. எங்கள் பிரச்சினையைச் சொல்ல அதிகாரிகளைச் சந்தித்தோம். அமைச்சரைச் சந்தித்தோம். முதல்வர் அலுவலகத்திலும் முறையிட்டோம். ஆனால் தீர்வு கிடைக்கவில்லை. இரண்டு மாத பொறுமைக்குப் பிறகுதான் நீதிமன்றத்தை நாடியுள்ளோம்" என்றெல்லாம் கூறியிருக்கிறார்.

ஆனால் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் மேற்பார்வை பொறியாளர் கலியபெருமாள் என்பவர் "ஜி.வி." இதழுக்கு அனுப்பிய கடிதத்தில், காற்றாலை மின்சாரம் வாங்கப்படவில்லை என்று கஸ்தூரி ரங்கையன் கூறியது தவறான தகவல் என்று தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் 18-9-2013 அன்று வெளிவந்திருக்கின்ற இந்திய காற்றாலை மின்சாரம் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் பேராசிரியர் கஸ்தூரி ரெங்கையனின் அறிக்கையில், "வெளி மாநிலங்களிலிருந்து அனல் மின்சாரம் வாங்குவதால் தமிழகத்தில் உள்ள காற்றாலைகள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்க மறுக்கிறது. அத்துடன் காற்று சீசன் உள்ள ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை தினசரி 22 மணி நேரம் வரை காற்றாலைகள் ஓட விடாமல் நிறுத்தப்பட்டன. இவ்வாறு செய்தால்

காற்றாலைகள் செயல்பாடு கேள்விக்குறியாகும். நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் அனல் மின்சாரத்தைவிட, மாசு இல்லாத காற்றாலை மின்சாரத்தை முன்னேறிய நாடுகள் அதிகம் பயன்படுத்துகின்றன. அதேபோன்று தமிழகமும் காற்றாலை மின்சாரத்தைத் தொடர்ந்து நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

எனவே காற்றாலை மின்சாரத்தின் உண்மை நிலை என்ன என்பதை அந்தச் சங்கத்தினரும், தமிழக அரசும்தான் குழப்பத்தில் ஆழ்ந்துள்ள பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்நிலையில் மின்வெட்டு பிரச்சினை காரணமாகச் சென்னை மாநகரிலேயே பல தெருக்களில் இரவில் மின் விளக்குகள் எரிவதில்லை. கோவை மாநகரில் உள்ள தொழிற்சாலைகள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தொடர்ந்து செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

மின்வெட்டுப் பிரச்சினை குறித்து "இந்தியா டுடே" வார இதழில் இந்த வாரம் ஒரு சிறப்புக் கட்டுரையே வெளிவந்துள்ளது. அதன் தொடக்கத்திலேயே கோவை இடையர்பாளையம் பகுதியில் லேத் பட்டறை நடத்தும் ஏ. வாசுதேவன் என்பவர், மற்றவர்களைப் போலத் தற்கொலை செய்துகொள்ளத் தனக்கு துணிச்சல் இல்லை என்றும், அன்னியர் முன்பு அழுதுவிடக் கூடாது என்ற கௌரவம் தன் கண்களின் ஈரம் கரை கடக்காமல் தடுக்கிறது என்றும், மின்வெட்டால் குறித்த நேரத்தில் பணியை முடிக்க முடியவில்லை என்றும், மாதம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபாய்வரை "ஆர்டர்கள்" வந்ததற்கு மாறாகத் தற்போது 10 ஆயிரம் ரூபாய்க்குக்கூட கிடைப்பதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

"மின்வெட்டு பிரச்சினையை எதிர்கொள்ள இயலாத கோவை சிறுகுறு தொழில் நிறுவனங்களுக்குக் கொடுத்துவந்த ஆர்டர்களை சீனா உள்ளிட்ட இடங்களுக்குப் பெரிய நிறுவனங்கள் மடைமாற்றிவிட்டதால், சிறு குறு தொழில்கள் கடும் அழிவை எதிர்கொள்கின்றன. கடந்த ஆறு மாதங்களில் சிறு குறு தொழில்களில் ஏற்பட்ட பாதிப்பால் கோவை பகுதியில் மட்டும் 350 பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்" என்கிறார் தமிழ்நாடு குடிசை குறுதொழில் சங்க மாவட்டச் செயலாளர் ஜே.ஜேம்ஸ். மேலும் அவர், "மற்ற பெரிய நிறுவனங்கள்

போல் சிறு குறு தொழில்களால் ஜெனரேட்டர்களை பயன்படுத்த முடிவதில்லை. இதனால் ஆர்டர்கள் வேறு இடங்களுக்குப் போய்விட்டன. சுமார் 6 ஆயிரம் சிறு குறு தொழிற்கூடங்கள் மூடப்பட்டுள்ளதால் 60 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளார்கள்" என்று கூறியிருக்கிறார். வேலை இழந்த பலர் ஆட்டோ ஓட்டியும், அப்பளம் விற்றும் கூலிக்கு வேறு இடங்களில் வேலை பார்த்தும் பிழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

2011ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, அ.தி.மு.க. சார்பில் மக்களுக்கு வழங்கப்பட்ட தேர்தல் அறிக்கையில், "இருண்ட தமிழகம் ஒளிமயமாக்கப்படும்; வீடு, தொழில் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் தடையின்றி வழங்கத் துரித நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் இதற்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்." என்றெல்லாம் சொல்லியிருந்தார்கள்! ஆட்சிக்கு வந்து இரண்டாண்டு சாதனைகளை நான்கு பக்க விளம்பரங்களிலேயே சொல்லி மன நிறைவு கொண்டுவிட்டார்கள் ஆட்சியாளர்கள்! ஆனால் தமிழகத்தில் உண்மை நிலை என்ன? இருண்ட தமிழகம் ஒளிமயமாக்கப்பட்டிருக்கிறதா? ஒளிமயமாக இருந்த தமிழகம் இருண்ட தமிழகமாக ஆக்கப்பட்டிருக்கிறதா?

13-9-2013 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேடு என்ன கூறுகிறது? "The regular power cuts, extending to 20 hours a day in some districts, in the last fiscal year kept many investors away from Tamil Nadu" என்று (தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் 20 மணி நேரம் வரை மின்வெட்டு நிலவிய காரணத்தால், பெரும்பாலான தொழில் முதலீட்டாளர்கள் தமிழகத்திற்குள் வராமல் சென்று விட்டார்கள்) எழுதியுள்ளது.

"Last year, the power problem was severe and many small and medium scale industries went out of business. This is the main reason for the State losing many big investments" said D.S. Rawat, National Secretary General Assocham. (கடந்த ஆண்டு நிலவிய கடுமையான மின்வெட்டின் காரணமாகப் பல்வேறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் முடங்கிப் போய்விட்டன. இதுதான் மாநிலம் பல பெரிய முதலீடுகளை இழக்க முக்கியமான காரணம் என்கிறார்

தேசிய அளவிலான தொழில் வர்த்தகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் டி.எஸ். ரவாட்).

2011-2012ஆம் நிதியாண்டில் புதிய தொழில்களுக்கான முதலீடு என்பது 5.7 சதவிகிதமாக இருந்தது. ஆனால் நடப்பு நிதியாண்டின் அளவோ வெகுவாகக் குறைந்து 1.8 சதவிகிதம் என்கிற அளவிற்கு உள்ளது. இந்த மாதம் 10ஆம் தேதி ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையில் தமிழகம் கடைசி 8வது இடத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் புதிய தொழில்களுக்கான முதலீடு என்பது 1 லட்சத்து 96 ஆயிரம் கோடியாக இருக்கும் நிலையில், தமிழகத்தில் முதலீடு என்பது 3 ஆயிரத்து 533 கோடி ரூபாய் என்கிற அளவிலே உள்ளது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஜெயலலிதா பேசிய கூட்டங்களில் என்ன சொன்னார்? "ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் மின் வெட்டு இல்லாமல் செய்வோம்" என்று சொன்னாரா இல்லையா? மூன்று மாதங்கள் அல்ல, தற்போது இரண்டரை ஆண்டுகள் முடிந்துவிட்டன. என்ன நிலைமை? ஆட்சிக்கு வந்தவுடன் 2011ஆம் ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, அப்போதிருந்த 3 மணி நேர மின் வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், அந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றும் கூறினார். அந்தத் துறையின் அமைச்சர், 2012ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் "இந்தியா டுடே" இதழுக்கு அளித்த பேட்டியில், "2012 மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும்தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். அந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக்கொண்டால், தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்றார். இப்போது என்ன நிலைமை?

நான் கடந்த ஆண்டே இந்தக் கருத்தைத் தெரிவித்தபோது, "தமிழ் நாட்டின் மின்வெட்டு நிலைமையை மூன்றே மாதங்களில் சீர் செய்வேன் என்பது போன்ற எந்த வாக்குறுதியையும் தான் அளிக்கவில்லை" என்று ஜெயலலிதா பேரவையில் குறிப்பிட்டார். உடனடியாக நான் 6-11-2012 தேதிய "முரசொலி"யில், "10-6-2011 அன்று ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த பதில் உரை "தினத்தந்தி"

என்கிற நாளேட்டில் வெளிவந்துள்ளது. அதிலே முதலமைச்சர் ஜெயலலிதா 3 மணி நேர மின் வெட்டை 2 மணி நேரமாகக் குறைக்கப்படும் என்று கூறிய வாக்குறுதி வெளிவந்திருக்கிறது" என்று பதில் அளித்திருந்தேன். அதற்குப் பிறகு அம்மையார் அந்தப் பிரச்சினையை மற்ற பல பிரச்சினைகளைக் கைவிட்டதைப் போல அப்படியே விட்டுவிட்டார்.

அதன் பிறகு டெல்லி மாநிலம் உபரியாக வைத்திருக்கும் சுமார் 1,900 மெகாவாட் மின்சாரத்தைத் தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். மத்திய அரசு அதை வழங்க முடியாதென்று மறுப்பு தெரிவித்தது. மத்திய அரசு அந்த மின்சாரத்தை வழங்கினாலும், அதனைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கான மின்பாதை (கேரிடார்) இல்லை என்பதுதான் உண்மை. அதை நான் அப்போது தெரிவித்ததும், தி.மு. கழக ஆட்சியில் ஏன் அதற்கான மின்பாதையை அமைக்கவில்லை என்றார்கள். உடனே நான் அ.தி.மு.க. அரசின் 2012-2013ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "வெளி மாநிலங்களில் கிடைக்கும் மின்சாரத்தை நமது மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கான மின் வழித்தட வசதிகளில் நெருக்கடி உள்ளதால், மின்சாரத்தை வெளியிலிருந்து கொண்டு வருவதற்கு வழியில்லை" என்று அவர்களே தெரிவித்திருந்ததை எடுத்துக்காட்டிய பிறகு, வாயை மூடிக் கொண்டார்கள்.

25-4-2013 அன்று பேரவையில் முதலமைச்சர் செய்த அறிவிப்பில், "நீலகிரி மாவட்டத்தில் 7000 கோடி ரூபாயில் புனல் மின் திட்டம்! மின் கட்டமைப்பையும் தொடரமைப்பையும் வலுப்படுத்த 5000 கோடி ரூபாய்த் திட்டம்! 3572 கோடி ரூபாயில் 19 புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள்! திருவலத்தில் 1000 கோடி ரூபாயில் துணை மின் நிலையம் - மின் தொடர்கள்! தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மீண்டும் மாற்றிட 30,602 கோடி ரூபாய்த் திட்டங்கள்" என்றெல்லாம் படித்தாரே, அவைகள் எல்லாம் எந்த நிலையிலே உள்ளன?

கிராமங்களில் இன்றுவரை 15 மணி நேரத்திற்கு மேல் மின்வெட்டு! குழந்தைகள் இரவிலே காற்று இல்லாமல் தூங்குவதில்லை என்பதால் பெற்றோர்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு தெருக்களிலே அலைகிறார்கள். கோவை,

திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து சோற்றுக்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள். பல ஆயிரம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் தேடி அண்டை மாநிலங்களுக்கு ஓடிவிட்டார்கள். அதைப்பற்றி யெல்லாமா இந்த ஆட்சியாளர்கள் கவலைப்படுகிறார்கள்?

இந்த ஆட்சியில் மின்வெட்டு நிலைமை எப்படியிருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம் கூற வேண்டுமேயானால், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வு முன்னிலையில் 26-11-2012 அன்று ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், "மாநிலத்தின் பல மாவட்டங்களில் தினமும் சில மணி நேரத்துக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்படுவதாகவும், கோவை உள்ளிட்ட பல மாவட்டங்களில் தினமும் 12 மணி நேரத்துக்கும் மேலாக மின்சாரம் தடை செய்யப்படுவதாகவும் எங்களது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் தினமும் எத்தனை மணி நேரத்துக்கு மின்சாரம் நிறுத்தப்படுகிறது என்பது பற்றிய விரிவான அறிக்கையைத் தமிழ்நாடு மின்சார வாரியம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். மேலும் மின்சாரம் நிறுத்தப்படும் நேரங்கள் பற்றிய தகவலை ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு முன்னதாகவே தெரியப்படுத்தாதது ஏன் என்பது பற்றியும் மின்சார வாரியம் தனது அறிக்கையில் விளக்கம் அளிக்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியில் மின்சார நிலை எவ்வாறு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள நீதியரசர்களின் இந்தக் கருத்துப் போதாதா?

இந்த நிலையில் அன்றாடம் ஏடுகளைப் பிரித்தால் மின் உற்பத்தி நிலையங்கள் அங்கே நிறுத்தம், இங்கே நிறுத்தம் என்ற செய்திகளைப் பார்க்கிறோம். தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கான பணிகளை அ.தி.மு.க. பதவியேற்றதற்குப் பிறகு அக்கறை எடுத்துக்கொண்டு விரைவுபடுத்திடவில்லை. தனியாரிடமிருந்து காற்றாலை மின்சாரத்தை வாங்கி விநியோகிப்பதிலும் தடுமாற்றமும், தயக்கமுமே காணப்படுகிறது. மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு முன்னுரிமை கொடுக்காத காரணத்தால்,

பொதுமக்கள் அவதி குறையவில்லை; சிறு தொழில்கள் உற்பத்தி வெகுவாகக் குறைந்து விட்டது; வேலையிழந்து தவித்திடும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் நிலை விழி நீர் பெருக்குகிறது; முதலீட்டாளர்கள் தமிழகம் என்றாலே முகம் சுளித்திடும் அவல நிலை உருவாகி, தொழில் வளர்ச்சி துவண்டு விட்டது; வெறும் "ப்ளக்ஸ் போர்டு"கள், "பேனர்"கள், சுவரொட்டிகள், பத்திரிகைகளில் முழுப் பக்க விளம்பரங்கள் ஆகியவற்றிலேயே காலம் கழிகிறது! ஒட்டுமொத்தமாக, அ.தி.மு.க. ஆட்சியினர் விளம்பர வெளிச்சத்தில் கனவு காண்கிறார்கள்!

அன்புள்ள,

மு.க.

24-9-2013

3811. கேழ்வரகில் நெய் வடியுதாம்; கேளுங்கள் தமிழர்களே!

உடன்பிறப்பே,

23-9-2013 அன்று டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் வழக்கம்போல் மத்திய அரசைத் தாக்கித் தயாரிக்கப்பட்ட முதல் அமைச்சரின் உரையை, அமைச்சரவையில் உள்ள ஒரு அமைச்சர் அங்கே சென்று படித்திருக்கிறார். அந்த உரையில்,

"தமிழ்நாட்டில் இன்று சட்டம், ஒழுங்கு மிகவும் சிறப்பாக உள்ளது, அதனால்தான் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்வதாகத் தேசிய அளவில் பேசப்படுகிறது" என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் கடந்த 21-9-2013 அன்றுதான் தமிழகக்காவல் துறை பற்றியும், சட்டம் ஒழுங்கு எவ்வாறு தமிழகத்திலே சிதைந்து சீர்கெட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் என்னுடைய சொந்தக் கருத்தினை அல்ல; தமிழகத்திலே வெளிவரும், "ஜூனியர் விகடன்", "தினமலர்", "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "தீக்கதிர்", "தினகரன்" போன்ற இதழ்களில் வந்துள்ள செய்திகளையெல்லாம் தொகுத்து ஒரு பக்க அளவிற்கு விரிவாக எழுதியிருந்தேன். தற்போது முதல் அமைச்சரின் டெல்லி உரையைப் பார்க்கும்போது, தமிழகத்திலே வெளிவரும் இந்த ஏடுகளை எல்லாம் முதல் அமைச்சர் படிக்கவில்லையோ; நாட்டின் நிலைமைகளை நன்கு புரிந்துகொள்ளவில்லையோ; என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது.

"சட்டம் - ஒழுங்கு சிறப்பாக இருப்பதால் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது - டெல்லி தேசியப் பாதுகாப்புச் கூட்டத்தில் ஜெயலலிதா உரை" என்ற தலைப்பில் முதல் அமைச்சரின் நீண்ட உரையை எழுத்துப் பிசகாமல் வெளியிட்டுள்ள தமிழக

நாளேடுகளில் நேற்று முதல் நாள் மாலையிலும், நேற்று காலையிலும் சட்டம்-ஒழுங்கு தொடர்பாக என்னென்ன செய்திகள் இடம்பெற்றுள்ளன என்பதைச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

- சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் நரம்பியல் மருத்துவராகப் பணி புரிந்த டாக்டர் சுப்பையா, கடந்த 14ஆம் தேதி அபிராமபுரம் பில்ராத் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குப் புறப்படுவதற்காகக் காரில் ஏறினார். அப்போது அங்கு வந்த ஐந்து பேர் கும்பல் டாக்டர் சுப்பையாவைச் சரிமாரியாக அரிவாளால் வெட்டியது. 27 வெட்டுகளுடன் ரத்த வெள்ளத்தில் சாய்ந்த அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார்.

- சோழிங்கநல்லூர் அருகே செம்மஞ்சேரி பழைய மாமல்லபுரம் சாலையில் ஒரு ஆட்டோவின் பின்னிருக்கையில் ரத்தக் காயங்களோடு வாலிபர் ஒருவர் மயங்கிக் கிடந்திருக்கிறார். சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் இறந்து விட்டார். விசாரணையில் அவர் ஆட்டோ டிரைவர் சசிபாலன் என்று தெரிந்திருக்கிறது. அதே செம்மஞ்சேரியில் கட்டிடத் தொழிலாளியான வேல்முருகன் என்பவரும் கொலை செய்யப்பட்டு முட்புதரில் பிணமாகக் கிடந்திருக்கிறார்.

- சென்னைக்கு அருகில் மாங்காடு அருகே தொழிலதிபரும், அ.தி.மு.க. கிளையின் துணைச் செயலாளராகவும் உள்ள சேனு என்பவர் நேற்று முன்தினம் காலையில் குத்திக் கொலைசெய்யப் பட்டிருக்கிறார்.

- சேலத்தில் மூதாட்டி சரஸ்வதியைக் கொன்று 50 பவுன் கொள்ளை.

- மதுரையில் 23ஆம் தேதி காலையில் வெங்காய வியாபாரி பாண்டி என்பவர், மாநகராட்சி தி.மு.க. கிழக்கு மண்டல முன்னாள் தலைவர் வி.கே. குருசாமியின் தங்கை

கணவர், நான்கு பேர் கொண்ட கும்பலால் வெட்டிக் கொலை செய்யப் பட்டிருக்கிறார்.

- பாரிமுனையில் பார்வையற்றவர்கள் 150 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எட்டாவது நாளாக அவர்களின் போராட்டம் தொடருகிறது.
- ஜெயலலிதா சார்பில் டாக்டர் ராமதாஸ் மீது 3 அவதூறு வழக்குகள் - இவை நேற்று மட்டும் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. இதற்கு முன்பு எத்தனை வழக்குகளோ? இதுவரை என் மீது 12 அவதூறு வழக்குகள். எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் மீது 34 அவதூறு வழக்குகளாம்! அவர் துணைவியாரையும் அவதூறு வழக்குகள் துரத்துகின்றன போலும்! பத்திரிகைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. தமிழகம் அமைதிப் பூங்காவாம்!
- திருவள்ளூரில் நேற்று முதல் நாள் இரவு வியாபாரம் முடிந்த பிறகு நடராஜ் என்பவர் தன்னுடைய ஜவுளிக் கடையைப் பூட்டிவிட்டுச் சென்றவர், நேற்று காலையில் கடையின் முன்பக்க ஷட்டரைத் திறந்து உள்ளே சென்று பார்த்தபோது, பணப் பெட்டி உடைந்தும், துணிகள் சிதறிக் கிடப்பதையும் கண்டு அதிர்ச்சியடைந்தார். பணப் பெட்டியிலே இருந்த ஒன்பது லட்சம் ரூபாயைக் காணவில்லை. விலை உயர்ந்த துணிகளையெல்லாம் மூட்டை கட்டி அள்ளிச் சென்றுவிட்டனராம்.
- நீலாங்கரை - ஈஞ்சம்பாக்கம் பகுதியில் ஐந்து கடைகளை உடைத்து ஒன்றரை இலட்சம் ரூபாயைக் கொள்ளை அடித்துச் சென்றுவிட்டதாக வியாபாரிகள் போலீசில் புகார் செய்திருக்கிறார்கள்.
- தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் சார்பாக மத்திய அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் தமிழக அரசு ஆசிரியர்களுக்கும் வழங்கிட வேண்டுமென்பது போன்ற கோரிக்கையை வலியுறுத்தி 25ஆம் தேதி முதல் ஆசிரியர் தொடர் மறியல் போராட்டம் அறிவித்திருக்கிறார்கள்.

- மணல் திருட்டு விவகாரத்தில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. மணிக்குமார் அவர்களே சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டுமென்று உத்தர விட்டு, அதை எதிர்த்துத் தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொண்டிருக்கிறது.

- திருச்சியில் பா.ஜ.க. மாநாட்டில் நரேந்திர மோடி கலந்துகொள்வது பற்றி வைக்கப்பட்டிருந்த பேனர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் கிழிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியினர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

- கும்மிடிப்பூண்டி அருகே ஐம்பது இலட்ச ரூபாய் நில மோசடி - எட்டுப் பேர் மீது புகார்.

- தாம்பரத்தில் இளம்பெண்ணை ஏமாற்றிச் செயின் பறிப்பு - செம்மரக் கட்டைகளைக் கடத்தும் கும்பல் - 54 லட்சம் தங்கம் கடத்திய 3 பேர்.

- மத்திய அமைச்சர் பெயரைச் சொல்லி வேலை வாங்கித் தருவதாக 33 லட்சம் ரூபாய் மோசடி.

- துரைப்பாக்கத்தில் பன் சேகர் என்ற ரவுடி மது அருந்திவிட்டு அந்தப் பகுதியில் நடந்து செல்கிற பெண்களைக் கேலி செய்து வம்புக்கு இழுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அந்த வழியாக வந்து கொண்டிருந்த செல்வம் என்பவரிடமும் வம்பு இழுத்து அவரைச் சரமாரியாகத் தாக்கியிருக்கிறார். இதுபற்றிச் செல்வம் காவல் நிலையத்தில் புகார் செய்ததின் பேரில், காவல்துறையினர் பன் சேகரை காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து விசாரித்தனர். அப்போது ரவுடி பன் சேகரின் உறவினரான தென்சென்னை தெற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் விருகை ரவி தனது ஆதரவாளர் களுடன் காவல் நிலையத்திற்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு, பன் சேகரை அழைத்துக் கொண்டு போய் விட்டார். (காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் கூறியிருக்கிறார்

அல்லவா? இதுதான் காவல் துறையினருக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்ட இலட்சணம்!)

- சேலம் சிறையில் சுகுமார் என்ற கைதி இறந்த விவகாரத்தில் அமைச்சர்கள் மீது கொலை வழக்கு மனு விசாரணை தள்ளிவைப்பு - உயர் நீதிமன்றம் உத்தரவு.
- காட்பாடி அருகே வீடு மீது குண்டு வீச்சு - 3 பேர் தலை மறைவு.
- பேனர் கிழிப்பால் மோதல் - கடலூரில் கடைகள் அடைப்பு.
- திருப்பரங்குன்றம் தே.மு.தி.க. எம்.எல்.ஏ. கைது - மனைவி தலை மறைவு.
- பொன்னேரி காவல் நிலையத்தில் ஆர்த்தி என்ற பெண் தீக்குளிக்க முயற்சி.
- எர்ணாவூரில் கழுத்தை நெரித்து மனைவி நதியா கொலை.

Students protest for promised stipend - Research scholars at Madras varsity are yet to get funds, 2 years after scheme was launched!

ஒரே நாளில் ஏடுகள் சிலவற்றில் வெளிவந்த தலைப்புச் செய்திகளைத்தான் இங்கே தொகுத்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும் இதே நிலைதான். இதெல்லாம் நாட்டின் தலைநகரத்திலே - யாருக்குத் தெரியப்போகிறது என்ற எண்ணத்தோடுதான் தமிழக முதல் அமைச்சர், "தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்படுகிறது; அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது" என்று டெல்லிப் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் முதலமைச்சர் உரையில், "தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறுபான்மையினர் நல இயக்ககம் ஆகியவற்றின் மூலமாகச் சிறுபான்மையினரின் நலன்களில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முதலமைச்சர் குறிப்பிடும் "தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம்" என்பது தமிழகத்தில்

முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் 13-2-1989 அன்று தொடங்கப்பட்டது. "தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக"மும் 1-7-1999இல் தி.மு. கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது. ஆனால் அடுத்து அ.தி.மு.க. ஆட்சி பதவிக்கு வந்தபோது, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட் டோருக்கான பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தோடு ஒன்றாக இணைத்து, இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து விட்டார்கள். ஆனால் 2006இல் தி.மு.கழக அரசு மீண்டும் அமைந்தவுடன், "தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை" தனியே செயல்படும் வகையில் உருவாக்கி, அதன்மூலம் சிறுபான்மையினத்தவருள் தொழில் முனைவோர் சிறு தொழில் மற்றும் குறுந்தொழில் தொடங்கக் கடன் உதவிகள் எல்லாம் வழங்கப்பட்டன.

அடுத்து முதலமைச்சர் உரையில் சிறுபான்மையினர் நல இயக்ககம் பற்றியும் பெரிதாகக் கூறியிருக்கிறார். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கெனத் தனியாக ஓர் இயக்குனரகம் முதலில் 1969இல் தி.மு. கழக ஆட்சியில்தான் தொடங்கப் பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கெனத் தனியே ஓர் அமைச்சரை நியமித்ததும், அதற்கென மானியக் கோரிக்கை ஒன்றை அறிமுகப்படுத்தியதும் 1971ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலே தான். அதைப்போலவே சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கு அரசின் தனிக் கவனம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் நலனுக்கென ஒரு தனி இயக்குனரகம் அமைக்கப்படும் என்று 2007-2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கழக அரசு அறிவித்ததற்கிணங்க, "சிறுபான்மையினர் நல இயக்ககம்" ஒன்றினை அமைத்திட அனுமதித்து 6-4-2007இல் ஆணை யிடப்பட்டது. இவ்வளவையும் மறைத்துவிட்டு, முதலமைச்சர் உரையில், சிறுபான்மையினரின் நலன்களில் சிறப்புக்கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் கூறியிருப்பது எவ்வளவு தவறானது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

முதலமைச்சர் ஜெயலலிதா தனது டெல்லி உரையில் "தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது" என்று

குறிப்பிட்டிருப்பது, எந்த அளவுக்கு உண்மை நிலைக்கு மாறானது என்பதைத் தமிழகத்தில் அனைத்துத் தரப்பினரும் நன்கறிவர். அச்ச உணர்வின் காரணமாக, வெளிப்படையாகச் சொல்வதற்குப் பலருக்கும் தயக்கம்! ஜனநாயகக் கடமை ஆற்றிட வேண்டிய பத்திரிகைகளுக்கோ பெரும் பயம்! செடி கொடிகள் சாய்ந்து, காய்ந்து, மரங்களனைத்தும் பட்டுப்போய், வேலி உடைந்து, கொலைகாரர்களும், கூலிப்படையினரும், கொள்ளைக்காரர்களும் குடியேறி, பாம்புகளும், பூரான்களும், தேள்களும் நெளிந்திடும் "பூங்கா"வை, அமைதிப் பூங்கா என்றால், நம்புவதற்கு நாமென்ன நனவிழந்து விட்டோமா? கேழ்வரகில் நெய்வடிகிறதாம் ; கேளுங்கள் தமிழர்களே!

அன்புள்ள,

மு.க.

26-9-2013

3812. அழைக்காமல் பலரையும், அழைத்துப் பலரையும்?

உடன்பிறப்பே,

ஒரு விழாவினை எப்படி நடத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக, எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு உதாரணமாக நடந்த சினிமா நூற்றாண்டு விழா பற்றிச் சில கருத்துகளைக் கூறுகிறேன். இந்தக் கடிதம் என் ஆதங்கத்தின் விளைவு அல்ல! சினிமாத் துறையிலே உள்ள கலைஞர்கள் பலரின் உள்ளத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலே எழுந்த கோபம், தாபம் இவற்றோடு - அதிலும் குறிப்பாகவும், அதிசயமாகவும் தமிழ் ஏடுகள் சில வெளியிட்டுள்ள கருத்துக்களையும் இணைத்துத் தருவதே இந்தக் கடிதம்.

தமிழ்நாடு அரசும், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையும் இணைந்து இந்திய சினிமாவின் நூற்றாண்டு நிறைவு விழாவினை நான்கு நாட்கள் நடத்தி முடித்திருக்கிறார்கள். 24ஆம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கலந்துகொண்டு, கடந்த நூறாண்டு காலத்தில் இந்திய சினிமாவின் வளர்ச்சிக்காகப் பெரிய பங்காற்றிய "முதல் சாதனையாளர்" ஜெயலலிதாவிற்கு முதல் விருதினை வழங்கி அவரைப் பெரிதும் பாராட்டியதோடு, மற்றவர்களுக்கும் விருதுகளை வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்.

இந்த விழா தொடர்பாக என்னைப் பற்றிப் பலரும் குறிப்பிட்டுப் பல்வேறு ஏடுகளில் எழுதியிருக்கிறார்கள். செய்தியாளர்கள் பலரும் என்னைச் சந்தித்தபோது அதைப்பற்றி என்னிடம் கேட்டார்கள். ஒரு மூத்த வார இதழின் செய்தியாளர் ஒருவர், தேசியத் தலைவரின் பெயரைக் கொண்டவர், தொலைபேசியில் தொடர்புகொண்டு, "இவ்வளவு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன, அதைப் பற்றி நீங்கள் ஏன் எதுவும் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்" என்றெல்லாம்

கேட்டார். அவர்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சினிமா விழாவினைப் பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை என்றாலும், என்னுடைய கருத்தை எழுத வேண்டுமென்று பலரும் பெரிதும் வலியுறுத்தியதின் பேரில், நான் படித்த, கேள்விப்பட்ட செய்திகளை மட்டும் தொகுத்து வெளியிடுகின்றேன். இது யாரையும் குற்றஞ்சாட்டுவதற்காகவோ, தவறு காண்பதற்காகவோ அல்ல. அரசின் சார்பில், ஓர் அமைப்பின் சார்பில் பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து அரசு தரும் நிதி உதவியோடு இதுபோன்ற விழாக்களை நடத்தும்போது, மற்றவர்கள் குற்றம் சொல்வதற்குச் சிறிதும் வாய்ப்பளிக்காத வகையில் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஏனென்றால் கர்நாடக கலாச்சாரத் துறை அமைச்சர், இந்த விழாவிற்கு கர்நாடகாவில் இருந்து தமிழ் நாட்டுக்கு வந்த திரைத்துறைக் கலைஞர்கள் இடவசதி, போக்குவரத்து வசதி உரிய அனுமதி கிடைக்காமல் அலைக் கழிக்கப்பட்டனர் என்றும், அதற்குத் தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்று மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் கண்டனம் தெரிவித்திருப்பதாக ஏடுகளிலும் ஊடகங்களிலும் செய்தி வந்துள்ளது.

குறிப்பாக 24ஆம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவிற்குத் தலைமை ஏற்றவர் யார்? அரசு சார்பிலோ, தனியார் சார்பிலோ இதுபோல விழாக்கள் நடத்தப்படுமேயானால் அதற்கு ஒருவர் தலைமை தாங்குவதுதான் நீண்ட நெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபு. ஆனால் இந்த விழாவிற்கான முழுப்பக்க விளம்பரங்களில் "தலைமை ஏற்போர்" என்று குறிப்பிட்டு, தமிழக ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா, தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா, கேரள முதலமைச்சர் திரு. உம்மன் சாண்டி ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனவே இந்த விழாவிற்கு மூன்று பேர் தலைமை வகித்துள்ளார்கள்.

குடியரசுத் தலைவர், ஆளுநர், முதலமைச்சர்கள் ஆகியோர் இதுபோன்ற விழாவிலே கலந்துகொள்கிறார்கள் என்றால், தலைமை விருந்தினராக குடியரசுத் தலைவரும், நிகழ்ச்சிக்குத் தலைவராக ஆளுநரும், முன்னிலை வகிப்பவர்களாக முதலமைச்சர்கள் பெயரும் வெளியிடுவதுதான் "ப்ரோட்டாகால்" படி சரியான நடைமுறை. ஆனால் இந்த விழாவில்

ஆளுநரும், முதலமைச்சர்களும் தலைமை ஏற்போர்களாக வெளியிடுவதற்கு என்ன காரணம் என்பதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்! ஒரு விழாவிற்கு எத்தனை தலைவர்கள் என்பதை நிகழ்ச்சியை நடத்தியவர்கள் தான் கூற வேண்டும்!

மேலும் நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், இசைஞானி இளையராஜா, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். போன்ற மூத்த கலைஞர்களுக்கு முன் வரிசையிலே இடம் ஒதுக்கப்படவில்லை என்பது மாத்திரமல்ல, அவர்கள் முன்வரிசையில் சென்று அமர்ந்த பிறகு, அவர்களை இருந்த இடத்திலிருந்து எழுப்பிப் பின் வரிசையில் அமரச் செய்தது, ஒட்டுமொத்தக் கலைஞர்களையும் அவமானப்படுத்திய அநாகரிகச் செயலாகும். அந்தச் சாதனைக் கலைஞர்களுக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்காவிட்டால்கூட, அவர்கள் வரும்போதே வரவேற்று, அவர்களுக்கெனத் திட்டமிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் அமர வைத்திருக்க வேண்டும். மாறாக அவர்கள் அமர்ந்தவுடன் அங்கிருந்து அகற்றிப் பின் வரிசையில் அமர வைத்தது பண்பாடற்ற செயல் என்றே கூற வேண்டும்.

அதுமாத்திரமல்ல ; மூத்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, முதல் அமைச்சருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு, அந்தப் புகைப் படத்தை ஏடுகளிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில் ரஜினியும், கமலும் இரண்டாவது வரிசையில் எங்கோ நின்று கொண்டிருக்கும் காட்சியையும் கண்டேன். அவர்களுடைய இலட்சக்கணக்கான ரசிகர்கள் அந்தப் புகைப்படங்களைப் பார்த்து எந்த அளவிற்கு வேதனைப்பட்டிருப்பார்கள்? நான் மறுபடியும் கூறுகிறேன்; ஏதோ குறைசொல்ல வேண்டுமென்பதற்காக இதனைத் தெரிவிக்கவில்லை.

முதல் அமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ இதையெல்லாம் கவனிக்க நேரம் இடந்தராது. நிகழ்ச்சியின் அமைப்பாளர்கள்தான் ஆழ்ந்து ஆலோசித்துக் கவனித்திருக்க வேண்டும். ஏனென்றால் கலைஞர்கள் எப்போதும் மிகவும் சுயமரியாதை உடையவர்களாக, அனிச்ச மலரை ஒத்தவர்களாக இருப்பார்கள். அவர்களின் மனம் வேதனை அடையும்படி - தன்மானம் காயப்படும்படி நடந்து கொள்ளக்கூடாது.

அடுத்து, இந்த விழாவிற்கான அழைப்பிதழ்கள் ஜனநாயகத்தின் "நான்காவது எஸ்டேட்" என்று பெருமையோடு சொல்லப்படும் பத்திரிகைத் துறையினரில் பெரும்பாலான பத்திரிகையாளர்களுக்கு அனுப்பப்படவில்லை. தொலைக்காட்சியினர் பலருக்கும் உள்ளே செல்லவே அனுமதி இல்லை. பாவம்; அவர்கள் எல்லாம் இந்த ஆட்சிக்கு அனுசரணையாக எப்படியெல்லாம் செய்திகளை வெளியிடுகிறார்கள்; அதற்காகவாவது அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்க வேண்டாமா? வார இதழின் பத்திரிகையாளர்கள் "பார்வையாளர்களாக" உள்ளே சென்று, இந்த நிகழ்ச்சி பற்றிய செய்திகளைத் திரட்டி வெளியிட்டிருக்கிறார்கள். நான் ஏற்கனவே செய்தியாளர்களிடம் தெரிவித்ததைப்போல நாளேடுகள் அ.தி.மு.க. ஆட்சியில், "பயன்" கருதியும், "பயம்" கருதியும் சினிமா விழா பற்றிய இப்படிப்பட்ட விவரங்களை வெளியிட முன்வராமல், பொதுமக்கள் கவனத்திலிருந்து மூடி மறைத்துவிட்ட போதிலும், சில வார இதழ்கள் "துணிச்சலாக" கடந்த இரண்டு மூன்று நாட்களாக எழுதிவருகின்றன.

"குமுதம் ரிப்போர்ட்டர்" வார இதழில் செய்தியாளர் இரா. முருகேசன் மூன்று பக்கங்களுக்கு இந்த விழா பற்றி எழுதியிருக்கிறார். அதில் சில முக்கியப் பகுதிகள் வருமாறு :-

"இந்திய சினிமா நூற்றாண்டு விழாவில் விருது பெற்ற நடிகர் ரஜினிகாந்த், முதல்வருடன் குரூப் போட்டோ எடுத்தபோது ஒதுங்கிக் கொண்டார். "தலைவா" படப் பிரச்சினையில் சிக்கிய நடிகர் விஜய், முன்னதாகவே வந்திருந்த போதிலும், பின் வரிசையில் சென்று அமர்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து வந்த எந்த நடிகர் நடிகையும் அவருடன் அமராமல் சில சீட்டுகள் தள்ளி அமர்ந்துகொண்டனர். நிகழ்ச்சிக்குக் குறிப்பிட்ட பத்திரிகையாளர்கள், போட்டோகிராபர்களை மட்டுமே அனுமதித்தனர். நடிகர் ரஜினிகாந்த், அவர் மகள் சௌந்தர்யாவுடன் வந்தார். ரசிகர்கள் கைதட்டி, விசில் அடித்து ஆரவாரம் செய்தனர். ரஜினி மேடைக்குச் சென்று ரசிகர்களைப் பார்த்துக் கையசைத்து வணக்கம் தெரிவித்தவுடன் முன்வரிசையில் அமர்ந்தார். அவரிடம், "புரோட்டோகால்படி உங்களுக்கு மூன்றாவது வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது" என்று அரசு அதிகாரிகள் அவரை அங்கு அனுப்பி வைத்தனர். (இது எந்த வகை "புரோட்டோகால்"

என்பதை விழா அமைப்பாளர்கள்தான் விளக்க வேண்டும்) விழா மேடைக்குக் கீழே, சசிகலா, அமைச்சர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர். வழக்கமாக சினிமா விழா என்றாலே முதல்வரின் இருக்கைக்கு இடது மற்றும் வலது புறத்தில் நடிகர்கள் ரஜினி, கமல்தான் உட்கார்ந்திருப்பார்கள். இந்நிகழ்ச்சியில் முதல்வர் அருகில் சினிமாத் தயாரிப்பாளர்களும், 2வது வரிசையில் நடிகைகள் மனோரமா, சரோஜாதேவி, எல்.ஆர். ஈஸ்வரி உட்பட பலரும், மூன்றாவது வரிசையில் நடிகர் ரஜினி, கமல் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். குரூப் போட்டோவுக்காக கமல், இளையராஜா ஆகியோர் "சேரில்" உட்கார்ந்திருந்தனர். அவர்களை அரசு அதிகாரிகள் எழுந்து நிற்கச் சொன்னார்கள். குரூப் போட்டோவில் ரஜினி ஏனோ இடது ஓரம் ஒதுங்கிக் கொண்டார்".

இது "குமுதம் ரிப்போர்ட்டர்" எழுதியிருக்கின்ற கட்டுரையின் சுருக்கம்.

அடுத்து "ஜூனியர் விகடன்" நேற்றைய இதழின் அட்டைப்படத்திலே "ஜால்ரா விழா ஆன சினிமா விழா - கடைசியாய் ரஜினி - கசந்த கமல் - ஒதுக்கப்பட்ட விஜய்" என்று அவர்களின் படங்களையும் வெளியிட்டு நீண்ட கட்டுரை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்தக் கட்டுரையில் செய்தியாளர்கள் க. ராஜீவ் காந்தி, சி. காவேரிமாணிக்கம் ஆகியோர் தொகுத்து வெளியிட்டுள்ள சில பகுதிகள் வருமாறு :-

"சரித்திரத்தில் எழுதிக் கொண்டாடியிருக்க வேண்டிய "சினிமா-100" விழா அ.தி.மு.க. கட்சி விழா போல நடந்து முடிந்திருக்கிறது. சினிமா விழாவுக்குக் கருணாநிதிக்கு அழைப்பு இல்லை என்ற சர்ச்சைகள் அதிகமானதால், விழா தொடங்குவதற்குச் சில மணிநேரத்துக்கு முன், கருணாநிதிக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. சினிமா விழா காரணமாச் சென்னைத் திரையரங்குகளில் திரையிடப்பட்ட படங்கள் அனைத்தையும் முதல்வர்தான் தேர்வு செய்தாராம். "பருத்தி வீரன்", "அரவான்" போன்றவைகூட முக்கியத் திரைப்படங்கள் வரிசையில் திரையிடப்பட, தமிழ் சினிமாவில் வசனப் புரட்சியை ஏற்படுத்திய "பராசக்தி", "மந்திரி குமாரி", "வீரபாண்டிய கட்டபொம்மன்" உள்ளிட்ட படங்கள் எதுவுமே அந்த வரிசையில்

இடம்பிடிக்கவில்லை. தமிழக அரசு சார்பாக 10 கோடி ரூபாய் நிதி உதவி அளித்ததை வைத்து, நிகழ்ச்சியின் ஒளிபரப்பு உரிமை அப்படியே "ஜெயா டி.வி."க்குப் போனது. இதனால் மற்ற "சேனல்" களுக்கு விழாவில் அனுமதி இல்லை. கடைசி நேரம்வரை பத்திரிகையாளர்களுக்கும், அடையாள அட்டை வழங்கப்படவில்லை. அழைப்பிதழும், அனுமதிச் சீட்டும் இல்லாமலேயே பலரும் அரங்கில் நுழைந்தனர். "நான் யாரு தெரியும்ல? அ.தி.மு.க. காரன் கிட்டயே ஐ.டி. கார்டு கேட்குறியா?" என்று செக்யூரிட்டிகளை மிரட்டியே அ.தி.மு.க.வினர் பலரும் உள்ளே புகுந்தனர். வரவேற்புரை முதல் நன்றியுரை சொன்னவர்கள் வரை அனைவருமே ஜெயலலிதா புகழ் பாடினர். போதாக் குறைக்குக் கலை நிகழ்ச்சிகளிலும் ஜெ. புகழ் பாடப்பட்டது. ''கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ் சினிமா சுதந்திரமாகச் செயல்படுகிறது'' என்றும் ஜெயலலிதா பெருமிதப்பட்டார். கமலும் விஜய்யும் இதைக் கேட்டுக்கொண்டுதான் உட்கார்ந்திருந் தனர். ரஜினியும் கமலும் விருது வாங்கியவர்களில் அடக்கம். விழா மேடையில் கடைசி வரிசையில் கடைசியாக அமர்ந்திருந்தார் ரஜினி. 30 பேருக்கு விருது கொடுத்த பிறகுதான் ரஜினி அழைக்கப்பட்டார். பெயர் அறிவிக்கப்பட்டதும் ரஜினி வேகமாக வந்தார். விருதை வாங்கியதும் விறுவிறுவெனக் கிளம்பிவிட்டார். ஜெயலலிதாவும் எந்த ரியாக்ஷனும் காட்டவில்லை. கமல் விருது வாங்க வரும்போது ஜெயலலிதா முகத்தில் சின்ன சிரிப்புக் கூட இல்லை. ரஜினியும், கமலும் பேசும்போது அரங்கத்தில் ஜெயலலிதா இல்லை. அழைப்பே இல்லை என்று சொல்லப்பட்ட விஜய் வந்ததுதான் விழாவின் ஹைலைட். அவருக்கு விருது தரப்படவில்லை. ஃபிலிம் சேம்பர் உருவாக்கியிருந்த காணொளியில் கருணாநிதியின் புகைப்படமும், பெயரும் சில நொடிகள் வந்து போனது. விஜயகாந்த் நடித்த இரண்டு திரைப்படங்களில் சில காட்சிகளைக் காண்பித்தார்களே தவிர, அவரின் முகத்தைத் தப்பித் தவறியும் காட்டவில்லை. விழாவுக்கு வந்த பிரபலங்களைவிட வராத பிரபலங்களின் எண்ணிக் கைதான் அதிகமாக இருந்தது. பாலுமகேந்திரா, பாரதிராஜா, கவுண்டமணி, செந்தில், வடிவேலு, எஸ்.பி.பி., ஷங்கர், மணிரத்னம், பி. சுசீலா, எஸ். ஜானகி எனத் தமிழ் சினிமாவுக்குப் பெரும் பங்காற்றிய பெரும்பாலானவர்கள் வரவில்லை. இவர்களில் பலர் விழாவுக்கு அழைக்கப்படவே இல்லையாம். பாலுமகேந்திரா மட்டும் மறுநாள்

கலந்துகொண்டார். ஸ்ரீதேவி வந்திருந்தார், அவருக்கு விருது வழங்கப்படவில்லை. இரண்டு ஆஸ்கர் விருதுகளை வென்ற ஏ.ஆர். ரஹ்மான் பெயரும் விருதுப் பட்டியலில் இல்லை. காரணம், செம்மொழி மாநாட்டுப் பாடலுக்கு இசை அமைத்ததுதான் என்கிறார்கள். "தனக்குப் பிடித்த சினிமாக்காரர்களை மட்டும் கௌரவிக்க வேண்டுமென்று ஜெயலலிதா நினைத்திருந்தால், அதற்குத் தனியாக ஒரு விழா நடத்தியிருக்கலாம். சினிமா 100 என்ற பொதுவான விழாவை இப்படி ஜால்ரா விழாவாக மாற்றி விட்டார்களே" என்று ஆதங்கப்படுகிறார்கள் சினிமா பிரபலங்கள்".

இவ்வாறு ஜூ.வி. எழுதியிருப்பதோடு, "கழுகார் பதில்கள்" பகுதியில், "திரைத் துறையின் நூற்றாண்டு விழாவுக்குக் கருணாநிதியை அழைக்காதது தவறுதானே?" என்ற கேள்விக்கு, "நிச்சயமாக! "இந்திய சினிமா 100 வயதை எட்டி உள்ளதே.... அந்த விழாவுக்கு உங்களை அழைத்தார்களா?" என்று கருணாநிதியிடம் கேட்டபோது, "நான் யார்? என்னை அழைப்பதற்கு?" என்று அவர் பதில் சொல்லியிருக்கிறார். அந்த நான்கு சொற்களுக்குள்ளும் எழுபது ஆண்டு கால சினிமா இருக்கிறது. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியை சிறு நாடகமாகத் தனது பள்ளிப் பருவ காலத்தில் கருணாநிதி எழுதினார். அதைத் திருச்சி வானொலி நிலையத்துக்கு அனுப்பினார். ஆனால், அதை ஒலிபரப்ப இயலாது என்று அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டனர். அந்த நாடகம்தான் "மந்திரி குமாரி" சினிமா. அப்படத்தின் மூலம் தமிழகத்துக்கு எம்.ஜி.ஆர். கிடைத்தார். எம்.ஜி.ஆருக்கு ஒரு ஜானகி கிடைத்தார். "பராசக்தி" வசனத்தின் மூலமாகத்தான் சிவாஜியே கிடைத்தார். "ராஜகுமாரி"க்கு கருணாநிதி வசனம் எழுதியபோது, இந்தியாவுக்குச் சுதந்திரமே கிடைக்கவில்லை. கடைசியாய் அவர் கதை வசனம் எழுதிய படம் "பொன்னர்-சங்கர்", இரண்டு ஆண்டுகளுக்கு முன் வெளியானது. மொத்தம் 75 படங்கள் இதுவரை கருணாநிதியின் கதை வசனத்தில் வெளிவந்துள்ளன. மந்திரிகுமாரி, பராசக்தி, பூம்புகார், பூமாலை என 21 படங்களுக்குப் பாடல்கள் எழுதியிருக்கிறார். "காகித ஓடம் கடலலை மீது" இன்றும் இரவுப் பாடலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. மேகலா பிக்சர்ஸ், அஞ்சுகம் பிக்சர்ஸ், கலை எழில் கம்பைன்ஸ், பூம்புகார் புரொடக்ஷன்ஸ் ஆகிய நான்கு நிறுவனங்களை நடத்தியவர் கருணாநிதி. "நாம்" தொடங்கி "பாசக்கிளிகள்" வரை சுமார் 29

படங்களைத் தயாரித்தவரும் அவரே. எம்.ஜி. ஆருக்கு மகுடம் சூட்டிய "காஞ்சித் தலைவனும்", எஸ்.எஸ்.ஆரை நிலைநிறுத்திய "பூம்புகாரும்" இவரது தயாரிப்புகள். ஜெயலலிதாவை "எங்கள் தங்கம்" ஆக்கியதும் இவரது நிறுவனமே. இப்படிப்பட்டவரை அந்த விழாவுக்கு அழைப்பதுதானே சரி" என்று "ஜூனியர் விகடன்" பதிலளித்திருக்கிறது.

"நக்கீரன்" இதழும் இதே செய்திகளைத்தான் தொகுத்து வெளியிட்டுள்ளது. அந்த இதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில் இறுதியாக, "இந்திய சினிமாவின் நூற்றாண்டை பெருமையாகக் கொண்டாடுகிறோம் என்றார்கள். சினிமாவிற்குப் பெருமை சேர்த்தவர்கள் யாரும் பெருமைப்பட்டுக் கொள்கிற மாதிரியோ சந்தோஷப்பட்டுக் கொள்கிற மாதிரியோ விழா நடக்கவில்லை. சினிமாவுக்குப் பெருமை சேர்த்த கலைஞர்கள் அனைவரும் இந்த நூற்றாண்டு விழாவில் ஆனந்தமாக இல்லை. எல்லோருமே தங்களை அவமானப்படுத்திவிட்டார்கள் என்றே புழுங்குகின்றனர்" என்கிறார்கள், தமிழ்ச் சினிமாவின் பிரபலங்கள்.

தனது நெருங்கிய நண்பர்கள் சிலரிடம் ரஜினி, "விழாவிற்கு நான் சென்றிருக்கக்கூடாது. ஃபிலிம் சேம்பர் அழைத்ததே என்பதற்காகத்தான் போயிருந்தேன். ரொம்ப ரொம்ப அவமானப்படுத்தி விட்டார்கள். ஒவ்வொரு கலைஞனும் இந்த விழாவில் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறான்" என்று தனது மனக் குமுறல்களை வெளிப்படுத்தியதாக "கோலிவுட்"டில் பரவியுள்ளது. மொத்தத்தில் "தீபாவளியின் உற்சாகத்தோடு நடந்திருக்க வேண்டிய இந்த நூற்றாண்டு விழா, ஜெயா டி.வி.யின் தீபாவளி நிகழ்ச்சி ஒளிபரப்புக்காக நடத்தப்பட்ட விழா போல் ஆகிவிட்டது" என்கிற மனக்குமுறலும் சினிமா இண்டஸ்ட்ரி முழுக்க எதிரொலிக்கின்றன" என்று "நக்கீரனில்" எழுதப் பட்டுள்ளது.

"சினிமா 100 - சிக்கல் 1000" என்ற தலைப்பில் "ஆனந்தவிகடன்" செய்தியாளர்கள் "விகடன் டீம்" என்ற பெயரில் நீண்ட கட்டுரை எழுதியதில், குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் தெரிவிக்கின்றேன்.

"பல்வேறு குழப்பக் குளறுபடிகளுக்கு இடையில் அரங்கேறியது "சினிமா 100" விழா. சினிமா ஆளுமைகளுக்குப்

பெருமை சேர்ப்பதற்காக அரங்கேறிய இந்த விழா, அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ் சினிமாவுக்குப் பெருமை சேர்த்த பல சினிமா பிரபலங்களைக் காயப்படுத்தியது. "பராசக்தி", "மனோகரா" படங்கள் மூலம் தமிழ் சினிமாவில் தன் இருப்பை அழுத்தமாகப் பதித்திருக்கும் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு, விழாவுக்கு முந்தைய நாள்தான் அழைப்பிதழே சேர்ப்பிக்கப்பட்டது. அதுவும் "தயவுசெய்து விழாவுக்கு வந்து விடாதீர்கள்" என்ற தொனியிலான மரியாதை அது. நடிகர் சங்கத் தலைவராக இருந்த விஜயகாந்துக்கோ அழைப்பே இல்லை! இந்த நிகழ்ச்சிக்கு இயக்குனர் மகேந்திரன் அழைக்கப்படவே இல்லை. இயக்குநர் எஸ்.பி. முத்துராமனுக்கும் அழைப்பு இல்லை. விஜயகாந்த், பார்த்திபன், கார்த்திக், ராதிகா, வடிவேல் ஆகியோர் வரவேகூடாது என்பது அரசுத் தரப்பின் கடுமையான உத்தரவாம்! எம்.எஸ். விஸ்வநாதன், பஞ்சு அருணாசலம், சோ, பாரதிராஜா, கவுண்டமணி, வைரமுத்து, மணிரத்னம், ஷங்கர், ஏ.ஆர். முருகதாஸ், ஏ.ஆர். ரஹ்மான், விஜயகுமார், ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் போன்றவர்களுக்கு விருதும் இல்லை, நிகழ்ச்சிக்கு அழைப்பும் இல்லை. இது அம்மா நிகழ்ச்சி, ஹீரோ, ஹீரோயின்கள் கண்டிப்பா வரணும். வராதவங்க மேல கடுமையான ஆக்ஷன் இருக்கும் என ஃபிலிம் சேம்பர் நிர்வாகிகள் உத்தரவே பிறப்பித்தார்களாம்" - இவ்வாறு ''ஆனந்த விகடன்'' எழுதியிருக்கிறது.

பல கோடி ரூபாய் செலவழித்து நடத்தப்பட்ட இந்த விழாவின் முக்கிய சிறப்பு விருந்தினர் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்கள். எந்த ஏட்டிலும் அவருடைய முழுமையான பேச்சு வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. "தானும் கலந்து கொண்டேன்" என்ற அளவில்தான் அவருடைய வருகையும் எடுத்துக்கொள்ளப்பட்டதைப் போல் தெரிகிறது. "புரோட்டோகால்படி" சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை மூன்றாவது வரிசைக்கு அனுப்பியவர்கள்; இந்த நிகழ்ச்சி பற்றி 20-9-2013 அன்று வெளியிட்ட முழுப் பக்க விளம்பரத்தில் முதல் பெயராக முதலமைச்சரின் பெயர் கொட்டை எழுத்துக்களிலும், பாவம் ; குடியரசுத் தலைவரின் பெயர் விளம்பரத்தில் கடைசியாகவும் வெளியிட்டதோடு, அந்த விளம்பரத்தில் ஜெயலலிதாவின் முழு உருவப்படம்தான் வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர, குடியரசுத் தலைவரின் படமோ, ஆளுநரின் படமோ, மற்ற மாநில முதலமைச்சர்களின் படமோ வெளியிடப்படவில்லை. இது

"புரோட்டோகால்படி" முறையானதுதானா என்பதைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்தான் வெளியிடவேண்டும்!

தமிழ்த் திரைப்படத்தின் பரிணாம வளர்ச்சியை அறிந்துள்ள யாருக்கும், அ.தி.மு.க. ஆட்சி இணைந்து நடத்திய இந்தச் சினிமா விழாவில் நிகழ்ந்த வினோதங்களைக் காணும்போது;

"சூழ்ச்சியிலே சுவரமைத்து
சுயநலத்தால் கோட்டைகட்டி
சுடர் விட்ட நீதி தனைத்
தூக்கி எறிந்து விட்டு
சாட்சிகள் வேண்டாம்
சகலமும் நானென்று
சதிராடும் வீணர்களின்
அதிகார உலகமடா!"

- என்று பட்டுக்கோட்டையார் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். நடித்த "மகாதேவி" திரைப்படத்திற்காக 1959ஆம் ஆண்டு எழுதிய பாடல் வரிகள்தான் நினைவுக்கு வரும்!

இந்த விழாவிற்கு என்னை அழைக்கவில்லை என்பது பற்றி வார இதழ்கள் எல்லாம் எழுதியதோடு, அங்கே நடைபெற்ற சில சம்பவங்களையெல்லாம் எழுதியிருப்பதைப் பார்க்கும்போது அவர்களுக்கெல்லாம் என்ன நேரிடுமோ என்ற கவலைதான் எனக்கு ஏற்படுகிறது. ஆனால் அங்கே அழைக்கப்பட்ட சில பெரிய கலைஞர்கள் நடத்தப்பட்ட விதத்தை இந்த ஏடுகளின் மூலம் படிக்கும்போது, "நல்லவேளை நம்மை அழைக்காமல் விட்டார்களே; நம் "தன்மானம்" காப்பாற்றப் பட்டதே" என்றுதான் நான் எடுத்துக்கொள்கிறேன். அழைக்காமல் பலரையும், அழைத்துப் பலரையும் "பெருமைப்படுத்தி"(?) இருப்பதே இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழா!

அன்புள்ள,

மு.க.

28-9-2013

3813. எத்தனை சாமிக்கண்ணுகள் வளர்த்த கழகமிது!

உடன்பிறப்பே,

எனக்கு அகவை 90 என்பது உனக்குத் தெரியும்! இப்போதும் நான் அன்றாடம் அண்ணா அறிவாலயத்திற்கு வரத் தவறு வதில்லை. காலையில் "முரசொலி" நாளிதழுக்காக உடன்பிறப்பு மடல்களோ, கேள்வி பதில்களோ எழுதி முடிக்கவே 10.30 மணியாகி விடுகிறது. அதன்பிறகுதான் காலை உணவே! அதற்குப் பிறகுதான் அறிவாலயம். கழகத்தின் முன்னணியினர், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தேர்தல் நிதியளிக்க வருவோர், உள்ளூர் பிரச்சினைகளை என் கவனத்திற்குக் கொண்டுவர நினைப்போர் என பார்வையாளர்களைச் சந்தித்து முடிக்கவே பகல் 1 மணி ஆகிவிடும். 1 மணி அளவில் செய்திகளைப் பார்த்துவிட்டு, வெளியே வந்தால் அங்கேயும் கழகத் தோழர்கள், செய்தியாளர்கள் என்று நின்றுகொண்டிருப்பார்கள். செய்தியாளர்கள் "ஒரே கேள்வி! ஒரே கேள்வி!" என்பார்கள். அருகே அழைத்தால் ஒன்பது கேள்விகளைக் கேட்பார்கள்! ஒரு கேள்வி என்றீர்களே என்றால், ஒவ்வொருவருக்கும் ஒரு கேள்வி அய்யா என்பார்கள்! முடிந்தவரை பதிலளிப்பேன். அவர்களையும் தாண்டிப் புறப்பட்டு விட நினைத்தால், அப்போதும் ஒருசில கழகத் தோழர்கள்! அந்த வகையில்தான் கடந்த சில நாட்களுக்கு முன்பு நான் புறப்படத் தயாரான போது, ஒரு முதியவர் என்னை நெருங்கினார்.

"யார்? என்ன வேண்டும்?" என்றேன். "நான் கட்சிக்காரன் அய்யா, எனக்கு ஒன்றும் வேண்டாம்; உங்களைப்பார்க்க வேண்டும்; அவ்வளவுதான்" என்றார். கார் அருகே அழைத்தேன். "தலைவரே! எனக்கு 100வது வயது பிறக்கப்போகிறது; எனக்கு நினைவு தெரிஞ்சது முதல் நான் தி.மு.க; காஞ்சிபுரம் மாவட்டம். உங்களிடம் வாழ்த்துப் பெறுவது ஒன்றுதான் என்னுடைய விருப்பம்" என்றார். அவரை நான் வாழ்த்திவிட்டுப் புறப்பட்டேன். அந்தப் பெரியவருக்கு மிகப் பெரிய மன நிறைவு.

அவர் என் கையிலே கொடுத்த மனுவைப் படித்தேன். அதில், "அய்யா, வணக்கம். நான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வரும் ஏழை ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவனாகும். எனக்கு வயது 100 ஆகிறது. ஆதி முதல் இன்றுவரை நான் தி.மு.க. ஈசூர்கிளையில் உறுப்பினராக இருந்து தொண்டாற்றி வருகின்றேன். எங்கள் குடும்பமே தி.மு.க.வை சேர்ந்த தாகும். தி.மு.க.வின் கொள்கை பிடிப்போடு இன்றுவரை நான் இருந்து வருவது எங்கள் பகுதிவாழ் மக்கள் அறிந்த ஒன்றாகும். எனக்கு வருகிற 27-9-2013 ந்தேதி 100வது வயது பிறக்கப் போகின்றது. எனக்கு உங்களுடைய நல்லாசி கிடைக்க வேண்டி இம்மனுவைச் சமர்பிக்கின்றேன். மேலும், 27-9-2013 அன்று எங்கள் கிராமத்தில் 100வது வயது பிறந்த நாளைக் கொண்டாட இருக்கின்றேன். அதற்குத் தாங்கள் என்னை ஆசீர்வதிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு என்றும் தி.மு.க. தொண்டன். இதனுடன் எனது உறுப்பினர் அட்டை இணைத்துள்ளேன்" என்று எழுதியிருந்தார்.

இவரது 100வது பிறந்த நாள் 27-9-2013 என்பதை அறிந்த நான் தம்பி ஸ்டாலினிடம் மாவட்டக் கழகச் செயலாளரை அவருடைய இல்லத்திற்கே சென்று வாழ்த்தும்படி கூறிய தோடு, அவர் கொடுத்த, அந்த மனுவினைத் தம்பி ஸ்டாலினிடம் கொடுத்துவிட்டு நான் புறப்பட்டேன். சாமிக்கண்ணுவையும், அவருடைய துணைவியாரையும் தம்பி ஸ்டாலின் அவருடைய அறைக்கு அழைத்துச் சென்று பொன்னாடை அணிவித்து, ஆயிரம் ரூபாய் நிதியினையும் அளித்து அனுப்பிவைத்திருக்கிறார்.

மேலும் நான் கூறியதன்படி ஸ்டாலின் காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ அன்பர சனைத் தொடர்பு கொண்டு, சாமிக்கண்ணுவின் பிறந்த நாள் அன்று அவருடைய இல்லத்திற்கே சென்று அவரைக் கழகத்தின் சார்பில் கௌரவப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அண்ணா அறிவாலயத்தில் அந்த நூறு வயதான சாமிக்கண்ணு காஞ்சிபுரம் மாவட்டம் என்று சொன்னதன் விளைவாகவோ என்னவோ, காரில் இல்லத்திற்குப் புறப்பட்ட என் நினை வலைகளில் உடனே அண்ணா வந்தார், அவரைத் தொடர்ந்து சி.வி.எம். வந்தார், சி.வி. ராஜகோபால் வந்தார், கே.டி.எஸ். மணி வந்தார், காஞ்சி கல்யாணசுந்தரம் வந்தார், கம்பராசபுரம்

ராஜகோபால் வந்தார், வெங்கா வந்தார், மதுராந்தகம் ஆறுமுகம் வந்தார், பூவிருந்தவல்லி ராஜரத்தினம் வந்தார், தி.மு.க. வரலாறு எழுதிய டி.எம். பார்த்த சாரதி வந்தார், குன்றத்தூர் தா.மோகலிங்கம் வந்தார், அதே குன்றத்தூரைச் சேர்ந்த தி.ந.சம்பந்தம், மணிமொழியார் என்று ஒவ்வொருவரும் என் மனக்கண்முன் தோன்றி நலம் விசாரித்தனர்.

நினைவில் வந்த அண்ணாவிடம், "வயதாகி விட்டது அண்ணா" என்றேன். "என்ன வயதாகி விட்டது, 1969இல் உங்களைவிட்டு வரும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணி குறைந்தது இன்னும் ஐம்பதாண்டு காலத்திற்குத் தேவைப்படுகிறது என்று சொன்னேனே, அந்த ஞாபகம் வரவில்லையா? அந்த ஐம்பதாண்டு என்பது 2019ஆம் ஆண்டுதானே வருகிறது; அதற்குப்பிறகும் நம்முடைய கழகத்தின் பணி தமிழ்நாட்டிற்குத் தேவைதான்!" என்றார்.

அண்ணா அவர்கள் இருந்தபோது, காஞ்சிபுரம் நகருக்கு எத்தனை முறை அவரைச் சந்திக்கச் சென்றிருப்போம், எப்படியெல்லாம் பழகினோம், என்னென்ன கருத்துகளைக் கேட்டிருப்போம் என்பதையெல்லாம் அசைபோட்டுக் கொண்டே இல்லம் சென்றேன். இதற்கெல்லாம் காரணமாக இருந்த காஞ்சிபுரம் மாவட்டம் சாமிக்கண்ணுவிற்கு 100 வயது என்பதும் என் நினைவிற்கு வந்தது.

காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் அன்பரசனும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டக் கழக முன்னணியினரும் 27ஆம் தேதியன்று சாமிக்கண்ணுவின் இல்லத்திற்கே சென்று அந்தத் தம்பதியினருக்கு மாலை மரியாதை செய்து, என் சார்பில் பிறந்த நாள் வாழ்த்துகளையும் தெரிவித்து, மாவட்டக் கழகத்தின் சார்பில் பொற்கிழியும் வழங்கி, அதைப் புகைப்படம் எடுத்து எனக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அந்த முதியவரின் பெயர் திரு.சாமிக்கண்ணு. காஞ்சிபுரம் மாவட்டம், சித்தாமூர் ஒன்றியத்தில், ஈசூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனியில் வாழ்ந்து வருகிறார். அவருடைய துணைவியார் காசியம்மாள். சாமிக்கண்ணு விவசாயக் கூலித் தொழிலாளி. காசியம்மாள் விறகு வெட்டி விற்பனை செய்கிறார். விவசாயக் கூலி வேலையிலும் ஈடுபட்டு வருகிறார். இந்தத்

தம்பதியருக்கு கோவிந்தன், அசோக் என்று இரண்டு மகன்களும், தேவி, சத்தியவாணி என்று இரண்டு மகள்களும்! தி.மு. கழகத்தின் மீது தீவிர பற்றுக்கொண்ட சாமிக்கண்ணுவிற்கு என்னை நேரில் சந்தித்துப் பேச வேண்டுமென்பதே பல ஆண்டுக் காலக் கனவாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் பார்க்க முடியுமா என்று நினைத்துக்கொண்டே காலத்தைக் கழித்திருக்கிறார்.

தன்னைப் பார்க்கவரும் கழகத் தோழர்களிடம் 2016ஆம் ஆண்டு வருகிற சட்டமன்றத் தேர்தலில் தலைவர் கலைஞர் அவர்களை ஆறாவது முறையாக முதல்வராக ஆக்கியே தீர வேண்டும் என்று கூறிவருகிறாராம். தி.மு. கழகம் நடத்திய அனைத்து மாநாடுகளிலும் இவர் கலந்து கொண்டிருக்கிறாராம். சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நானும், பொருளாளர் தம்பி ஸ்டாலினும் கலந்துகொண்ட அனைத்துப் பொதுக் கூட்டங்களிலும் இவர் வராமல் இருந்ததில்லையாம். எந்தவொரு சாதாரண பதவிக்கும் வர வேண்டுமென்று இவர் எண்ணியதே இல்லையாம். தொண்டராக இருப்பதிலேதான் தனக்கு மகிழ்ச்சி என்கிறார்.

100 வயதாகும் இந்தக் கழகத் தோழரின் இரண்டாவது மகன் அசோக் என்பவர் 25-2-2009 அன்று சென்னை புழுதிவாக்கம் நகரிலே வசித்து வந்த நேரத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி, அவரும், அவருடைய துணைவியார் சிவசக்தி என்பவரும் அவர்களுடைய பிள்ளைகள் சீமான், சுரேஷ், மகள் சுகன்யா ஆகியோரும் தீயில் கருகி இறந்துவிட்டார்களாம். சாமிக்கண்ணுவை இந்தச் சம்பவம் பெரிதும் பாதித்த போதிலும், கழகப் பணியை நிறுத்தாமல் தொடர்ந்து செய்துவருகிறார்.

நமது கழகத்தில் இந்த ஒரு சாமிக்கண்ணு மாத்திரமல்ல; எந்தப் பதவியிலும் அவர் இருந்ததில்லை. கட்சியினால் தனக்கு என்ன இலாபம் என்று நினைத்துப் பார்த்ததுகூட இல்லை. இன்னும் எத்தனையோ சாமிக்கண்ணுகள் இணைந்து வளர்த்த கட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம். சாமிக்கண்ணுவைப் போன்றவர்கள் இந்தக் கட்சியிலே உறுப்பினராகச் சேர்ந்து கட்சியை வளர்க்கத் தொடங்கிய நேரத்தில், தமிழகத்தில் நம்முடைய கட்சி ஆட்சிக்கு வரும்; சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வருவார்கள் என்று எதிர்பார்த்ததில்லை.

கட்சியை வளர்க்க வேண்டும் என்பதுதான் ஒரே குறிக்கோளாக இருந்தது.

திராவிட இயக்கத்தின் 100ஆம் ஆண்டு தொடக்க விழாவினை 27-2-2012 அன்று கழகத்தின் சார்பில் எடுத்தோம். அந்த விழாவில் நானும், பொதுச்செயலாளர் பேராசிரியர், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீதியரசர் மோகன், பேராசிரியர் மா.நன்னன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோரும் கலந்து கொண்டோம். அந்தத் திராவிட இயக்கம் எனும் ஆலமரத்தின் விழுதுகளான சாமிக்கண்ணுவைப் போன்ற எண்ணற்ற தொண்டர்கள் கட்டிக்காத்து வருவதுதான் நமது இயக்கம். அந்த இயக்கத்தின் வளர்ச்சியே நம்முடைய வாழ்க்கை.

அந்த இயக்கத்தின் வளர்ச்சியைத் தவிர தனக்கு வேறொன்றும் தெரியாது என்று 100வது வயதிலும் முழங்கும் அருமை சாமிக்கண்ணுவை - நூறாண்டு காலத்திற்குமேல் அகவை உடைய திராவிட இயக்கத்தின் சார்பில் - ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த - 100 வயதான - ஆதி முதல் இன்றுவரை கழகத்தின் தீவிர உறுப்பினரான சாமிக்கண்ணுவையும் அவரது துணைவியாரையும், கழகத்தின் தலைவர் என்ற முறையில் மனமார வாழ்த்துகிறேன். நமக்குத் தெரிந்தவரை, இப்போதுள்ள நிலவரப்படி, நமது கழகத்தின் மூத்த தொண்டர் காஞ்சிபுரம் சாமிக்கண்ணு என்றுதான் கருதுகிறேன். அந்த மூத்த கழகத் தொண்டருக்கு நாம் அனைவரும் சேர்ந்து வாழ்த்துக் கூறுவோம். வாழ்க சாமிக்கண்ணு; வளர்க அவரின் தொண்டு!

அன்புள்ள,

மு.க.

30-9-2013

3814. “மெஜாரிட்டி” ஆட்சி என்றால் எதுவும் செய்யலாமோ?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து கொலை, கொள்ளைகள் நடைபெற்று வருகின்றன. 29-9-2013 தேதிய “தினமலர்” பத்திரிகையில் “கொலை, கொள்ளையில் சென்னை “டாப்” என்ற தலைப்பில் அரைப் பக்கத்திற்குச் செய்தி வெளியாகி யுள்ளது. அதில், “தமிழகத்தில் கொலை, கொள்ளை, திருட்டு, செயின் பறிப்பு தொடர்பான வழக்குகள் அதிகரித்து வருகின்றன. கடந்த 19ஆம்தேதி மாநிலம் முழுவதும் 12 கொலைச் சம்பவங்கள் ஒரே நாளில் நடந்தன. கடந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 1,806 பேரும், இந்த ஆண்டில் கடந்த ஜூலை மாதம் வரை 1,044 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். புள்ளி விவரங்களின்படி ஒரு மாதத்துக்குச் சராசரியாக 100லிருந்து 120 பேர்வரை கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். கொலை, கொலை முயற்சி, திருட்டு, வழிப்பறி, கொள்ளை, காயம் ஏற்படுத்துதல் போன்ற குற்றச் செயல்களில் தமிழக அளவில் சென்னை மாவட்டம் முதல் இடத்தில் உள்ளது. சென்னையில் சொத்துத் தொடர்பான கொலைகள், கடந்த ஆண்டு 85 சம்பவங்களும், இந்த ஆண்டில் கடந்த ஜூலை மாதம்வரை 70 சம்பவங்களும் அரங்கேறியுள்ளன. இந்த ஆண்டு ஜூலை மாதம்வரை 116 கொலைகள், 1,261 திருட்டுகள், 300 கொள்ளைகள், 54 வழிப்பறிகள் சென்னையில் நடந்துள்ளன. இது தவிர, தமிழகத்தில் செயின் பறிப்பு சம்பவங்களிலும் சென்னைதான் முதல் இடம்” - இவை அ.தி.மு.க. ஆட்சிக்கு “தினமலர்” எழுதியுள்ள பாராட்டுரை.

இதே 29-9-2013 நாளில் “தி இந்து” தமிழ் நாளேட்டில், “திகில் நகரமாகியது வேலூர் - ஒரே நாளில் அடுத்தடுத்த கொலை முயற்சி சம்பவங்கள்” என்ற தலைப்பில், “வேலூரில் வெள்ளிக்கிழமை மாலையில் அ.தி.மு.க. மாநகராட்சி கவுன்சிலர்

உட்பட அடுத்தடுத்து நடந்த இரண்டு கொலை முயற்சி சம்பவங்களால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த இடங்களில் நடந்த இந்தக் கொலை முயற்சி சம்பவங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. வேலூரில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பா.ஜ.க. மாநில மருத்துவரணிச் செயலாளர் டாக்டர் அரவிந்த் ரெட்டி, 2013 ஜூலை 1ம் தேதிஇந்து முன்னணி மாநிலச் செயலாளர் வெள்ளையப்பன் இருவரும் நடுரோட்டில் ஓடஓட வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இந்த இரண்டு கொலைச் சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கடந்த வெள்ளிக்கிழமை வேலூர் புதிய பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஓட்டல் துர்கா பவனில் பலர் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பைக்கில் வந்த 10 பேர் கொண்ட ஒரு கும்பல் நேரடியாக ஓட்டலுக்குள் நுழைந்துள்ளது. ஏற்கனவே, அங்குள்ள ஒரு டேபிளில் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். திடீரென சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களைச் சரமாரியாகத் தாக்கிய கும்பல், கண்ணிமைக்கும் நேரத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியால் வெட்டத் தொடங்கினர். 3 பேருக்கு விழுந்த வெட்டுக் காயங்களைப் பார்த்ததும் டிபன் சாப்பிட வந்த மற்றவர்கள், அலறல் சத்தத்துடன் ஓட்டலைவிட்டு ஓடத்தொடங்கினர். இதற்கு நடுவில் வெட்டுக்காயத்துடன் இருந்த ஒருவரை அந்தக் கும்பல் கடத்திச் செல்லவே; பரபரத்தது ஓட்டல்.

இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் இரவு 8 மணியளவில் தொரப்பாடி பகுதியில் “குரங்கு குல்லா” அணிந்து வந்த 2 பேர், 49வது வார்டு மாநகராட்சி கவுன்சிலர் சுகுமாரை வெட்டி விட்டுத் தப்பினர். ஒரே நாளில் அடுத்தடுத்து நடந்த இரண்டு கொலைமுயற்சி சம்பவங்கள் பொதுமக்களுக்கு ஒரு பக்கம் திகில் உணர்வை ஏற்படுத்தினாலும், போலீசாரும் சற்றுக் கலக்கமடைந்துள்ளனர்” என்று விரிவாகச் செய்தி வந்துள்ளது. இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் டெல்லி சென்ற அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் “தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. தமிழகமே அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது” என்று முதலமைச்சரின் உரையை அங்கே படித்து, இங்கேயுள்ள அனைத்து ஏடுகளுக்கும் அந்தப் பேச்சினை அனுப்பி வெளியிடச் செய்திருக்கிறார்கள்.

அடுத்து இந்த ஆட்சியில் தடையை மீறி குட்கா, ஜர்தா போன்றவை அமோகமாக விற்பனை செய்யப்படுவதாகவும், ஆனால் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தயக்கம் காட்டுவதாகவும் கூறப்படுகிறது. இந்தப் பொருள்களைத் தடையை மீறி விற்றால் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு, 5 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்று அரசு எச்சரிக்கை செய்துள்ளது. ஆனால் இந்தத் தடை விதிக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகியும், குட்கா, ஜர்தாவின் விற்பனை தற்போது அமோகமாக நடைபெறுவதாகவும், அதன் விலை பல மடங்கு உயர்ந்து விட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் அமோகமாக நடைபெறுவது, குட்கா - ஜர்தா விற்பனையும், "டாஸ்மாக்" விற்பனையும் மட்டும்தான்! இதுவும் நூறாண்டு பேசும் சாதனைகளில் ஒன்றென ஆளும்கட்சியினர் உற்சாகம் கொள்ளலாம்! விளம்பரம்கூடச் செய்துகொள்ளலாம்!

இந்த அழகில் காவல் துறை நிர்வாகத்தில் நடைபெறும் குளறுபடிகள் குறித்துத் தொடர்ந்து பதினைந்து நாட்களாக வரும் செய்திகளை நீயும் படித்திருப்பாய்! கடந்த 2004 ஆம் ஆண்டு சந்தன மரக் கடத்தல் வீரப்பன் காவல் துறையின் அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டபோது, ஆட்சியிலே இருந்த அ.தி.மு.க. அரசு, அந்த அதிரடிப்படையில் பணியாற்றியதாக காவலர் முதல் ஐ.ஜி. வரை சுமார் 1000 பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தலா ரூபாய் மூன்று இலட்சம் ரொக்கத் தொகையும், அவர்கள் பணியாற்றிய நகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் இலவச வீட்டுமனைகளும் வழங்கியது. மேலும், காவல் துறை அரசாணை எண்கள் 1252/2004 நாள் 29-10-2004 மற்றும் 1396/2004 நாள் 6-12-2004 மூலம் அதே 1000 பணியாளர்களுக்கு ஒருகட்ட சிறப்புப் பதவி உயர்வையும் அ.தி.மு.க. அரசு வழங்கியது.

மேற்படி சிறப்புச் சலுகைகளும், பதவி உயர்வும் பெற்ற அந்த 1000 நபர்களில் அ.தி.மு.க. அரசுக்கு வேண்டப்பட்டவர்களும், அப்போது ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருந்த காவல் துறை அதிகாரிகளுக்கு வேண்டப்பட்டவர்களும் அடங்குவர் என்று காவல் துறையைச் சேர்ந்த வேறு சிலரால் கூறப்பட்டது. சலுகை பெற்றவர்களில் பலர் காட்டுக்கே செல்லாமல் போயஸ்

தோட்டத்தில் மராமத்துப் பணிகள் செய்து வந்தவர்கள் என்றும் பல முனைகளிலே இருந்து குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட காவல் துறையில் இவ்வாறு ஆயிரம் நபர்களுக்கு மட்டும் சிறப்புப் பதவி உயர்வு வழங்கப்பட்டதால், பல நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டது மட்டுமன்றி, பதவி உயர்வு பெற்ற நபர்களைவிட, பணிமூப்பு பெற்ற நபர்கள் காவலர் முதல் கண்காணிப்பாளர் வரை, தாங்கள் செய்யாத தவறுக்காக, பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டு வருத்தமடைந்தனர். அதைப் பற்றி அந்தப் பெரும்பான்மையான காவல் துறை நண்பர்கள், அ.தி.மு.க. அரசு தங்களுக்கு வேண்டிய ஆயிரம் பேருக்குப் பதவி உயர்வு வழங்கியதால், தங்களுக்கு உரிய காலத்தில் வர வேண்டிய பதவி உயர்வு கிடைக்காமல் போய்விட்டது என்று முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த என்னிடம் நேரடியாகவே புகார் கூறினார்கள். நானும் அதுபற்றி உயர்மட்ட அதிகாரிகளிடம் கூறி, அவர்களின் துயரத்தைப் போக்குவதற்கு வழிவகை காண வேண்டுமென்று தெரிவித்தேன்.

காவல் துறைப் பணியாளர் சம்மந்தப்பட்ட சட்டங்களான Tamil Nadu Police Service Rules, Tamil Nadu Police Subordinate Service Rules ஆகியவற்றில் இத்தகைய பதவி உயர்வுகளுக்கு வழிவகை ஏதும் இல்லை என்று தெரிவித்தபோதும், வழங்கப்பட்ட பதவி உயர்வுகளை ரத்து செய்யாமல், 2007ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் பெருந்தன்மையோடு, சிறப்பு பதவி உயர்வுகளைப் பெற்றவர்களுக்கும், இதரப் பணியாளர்களுக்கும் பணிமூப்பு சம்மந்தமாகச் சீராய்வு செய்து சட்டத்தில் பரிந்துரைத்துள்ளபடி 3-10-2007 அன்று ஓர் அரசாணையினை வெளியிட்டது. அதன்படி அதிரடிப் படையினருக்கு ஒரு பதவி உயர்வு மட்டுமே வழங்கப்படும் என்றும் முந்தைய சீனியாரிட்டி வரும்போதுதான் அடுத்த பதவி உயர்வு வழங்கப்படும் என்றும் அறிவித்தது.

இந்த அரசாணையை எதிர்த்துச் சிறப்புப்பதவி உயர்வு பெற்றவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் பல "ரிட்" மனுக்களைத் தாக்கல் செய்தனர். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. வெங்கட்ராமன், 14-10-2009 அன்று அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து, தி.மு.க. அரசு கொண்டு வந்த

அரசாணை சரியானது என்று தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து "ரிட் அப்பீல்" மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதற்கிடையே 2011ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு ஏற்கனவே சிறப்பு பதவி உயர்வு பெற்ற காவல் துறையைச் சேர்ந்த 1000 பேருக்கு மேலும் பதவி உயர்வு வழங்கக்கூடிய வகையில், சட்ட விரோதமாக ஓர் அரசாணையை, 3-5-2012 அன்று வெளியிட்டது. ஆனால் "ரிட் அப்பீல்" வழக்குகளை; இரண்டு நீதிபதிகள் அடங்கிய சென்னை உயர் நீதிமன்ற அமர்வு விசாரித்து 5-4-2013 அன்று தள்ளுபடி செய்தது. அந்தத் தீர்ப்பில் அ.தி.மு.க. அரசு 3-5-2012 இல் பிறப்பித்த அரசாணையை ரத்து செய்ததோடு, அரசையும் அதற்காக விமர்சனம் செய்திருந்தது. மேலும் அந்தத் தீர்ப்பில் தி.மு.கழக ஆட்சியில் கொண்டுவந்த அரசாணை நிலைநிறுத்தப்பட்டு, அதன்படி காவல் துறைப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்றும் உத்தரவு அளிக்கப்பட்டது.

ஆனால் உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்தாமல், வீரப்பன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு இரண்டு பதவி உயர்வு அளிக்க மீண்டும் அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் இந்த அரசு மீது போலீஸ் அதிகாரி ராதாகிருஷ்ணன் உட்பட 32 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அதை நீதிபதி மாண்புமிகு கிருபாகரன் அவர்கள் விசாரித்து, அரசு வழக்கறிஞரிடம் காலிஇடங்கள் 88ஐயும் நிரப்பிவிட்டு நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் நீதிமன்றம் உரிய உத்தரவைத் தானாகப்பிறப்பிக்கும் என்றும் கடந்த மாதக் கடைசியில் ஆணை பிறப்பித்தார்.

ஆனால் அரசு வழக்கறிஞர், டி.எஸ்.பி.க்களுக்குப் பதவி உயர்வு தற்போதைய நிலையில் அளிக்க முடியாது என்று கூறினார். மனுதாரர்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், கடந்த மூன்றாண்டுகளாகப் பதவி உயர்வு கிடைக்காமல் டி.எஸ்.பி.க்கள் இருக்கிறார்கள் என்றும், பலர் பதவி உயர்வு பெறாமலேயே ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்றும் உடனடியாகப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

27-9-2013 அன்று இந்த வழக்கில் தீர்ப்புக் கூறிய நீதியரசர் கிருபாகரன், "டி.எஸ்.பி.யாகப் பணியாற்றும் நூற்றுக்கு

மேற்பட்டவர்கள் பதவி உயர்வு கிடைக்காமல் பதவி ஓய்வு பெற்று விட்டனர். தற்போது கூடுதல் எஸ்.பி. பதவிக்கு 78 காலி இடங்கள் உள்ளன. இந்தக் காலி இடங்களை அரசு உடனே நிரப்ப வேண்டும். இல்லாவிட்டால் இந்த ஆண்டு இறுதியில் 53 டி.எஸ்.பி.க்கள் பதவி உயர்வு கிடைக்காமல் ஓய்வு பெற்று விடுவார்கள். இவர்களுக்கு இரண்டு வாரத்தில் பதவி உயர்வு அளிக்கவேண்டும். இந்தப் பதவி உயர்வு தற்காலிகமானது. வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு இந்த உத்தரவு கட்டுப்படவேண்டும். வீரப்பன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட டி.எஸ்.பி. பெயர்களையும் இந்தப் பதவி உயர்வு வழங்கும்போது பரிசீலனை செய்து உரிய உத்தரவை அரசு பிறப்பிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

இந்தத் தீர்ப்புக்குப்பின், 29-9-2013 அன்று தமிழக அரசு அவசர அவசரமாக விடுமுறை நாளில் 98 டி.எஸ்.பி.க்களுக்குக் கூடுதல் எஸ்.பி.க்களாகப் பதவி உயர்வு அளித்து ஆணை பிறப்பித்தது. அந்தப் பட்டியலில், வீரப்பன் தேடுதல் படையில் இருந்ததாகக் கூறிப் பதவி உயர்வு பெற்றவர்களான, புழல் உதவி கமிஷனர் கந்தசாமி, சென்னை நகர காவல் துறை நலப்பிரிவு உதவி கமிஷனர் திருமலைச்சாமி, முதல்வர் பாதுகாப்புப் பிரிவு டி.எஸ்.பி., பெருமாள்சாமி, முதல்வரின் சிறப்புப் பாதுகாப்பு படைப் பிரிவு டி.எஸ்.பி. வீரப்பெருமாள் ஆகியோர் உட்பட இடம்பெற்றனர். இவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணையில் பல குளறுபடிகள் இருந்ததாகச் செய்தி வந்தது. உதாரணமாக கடலூர் மாவட்டத் தலைமையிட கூடுதல் எஸ்.பி.யாக ராஜன் என்பவர் இருந்தார். ஆனால் அவர் பணியாற்றி வந்த இடம் காலியாக இருப்பதாகக் கருதி, அந்த இடத்திற்கு முரளி என்பவரை நியமித்தார்கள். அதே மாவட்டத்தில் மதுவிலக்குப் பிரிவுக்கு ஜேக்கப் மாணிக்கராஜ் என்பவர் கூடுதல் எஸ்.பி.யாக இருக்கிறார். அவர் இடத்திற்குச் சீனிவாசன் என்பவரை நியமித்திருந்தார்கள்.

நீதிமன்றம் அ.தி.மு.க. அரசின் உத்தரவை ரத்துசெய்து, இரண்டு பதவி உயர்வு கொடுக்கக்கூடாது என்று தீர்ப்பளித்திருந்தது. ஆனால் அதையும் மீறி 20 பேருக்குப் பதவி உயர்வு ஆணை பிறப்பிக்கப்பட்டதால், உள்துறைச் செயலாளர், மற்றும் டி.ஜி.பி. ஆகியோர்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தொடர்ந்த இன்ஸ்பெக்டர் கவுதமன் என்பவர் திடீரென்று சில நாட்களுக்கு முன்பு

காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டு விட்டாராம். வழக்குத் தொடர்ந்த மற்றொரு இன்ஸ்பெக்டரான யாகூப் என்பவரும் திடீரென மாற்றப்பட்டுள்ளாராம்.

இதில் ஒருசில காவல் துறை நண்பர்கள் தெரிவிக்கும் தகவல், ராஜராஜன், முதல் அமைச்சருக்குப் பாதுகாப்புப் பணி மேற்கொண்ட பெருமாள்சாமி, வீரபெருமாள் ஆகியோரும் வீரப்பன் அதிரடிப்படையிலே இருந்ததாகக் கூறிப் பதவி உயர்வு வழங்கப்பட்டது என்றும், அவர்களுக்கு மேலும் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், உயர் நீதிமன்ற உத்தரவைக்கூட நிறைவேற்றாமல், அந்தத் தீர்ப்பையே அவமதிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர் சட்டத்தைத்திருத்தம் செய்து அரசாணை எண். 550/2013 வெளியிடப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

இந்தச் சட்டத்திருத்த ஆணையை எதிர்த்து, பாதிக்கப்பட்ட இதர காவல் துறை அதிகாரிகள் மொத்தம் ஐந்துரிட் மனுக்களையும், ஒரு நீதிமன்ற அவமதிப்பு மனுவையும் தாக்கல்செய்து, அவை நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்துவரும் நிலையில், அ.தி.மு.க. அரசு கடந்த மாதம் அவசர அவசரமாகக் காவல் துணை கண்காணிப்பாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கியுள்ளது. இந்தப் பதவி உயர்வைப் பெற்றவர்களில் பலர் முதலமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகள் என்றும், அவர்களுக்கு அவசர அவசரமாகப் பதவி உயர்வு செய்ததில் ஏராளமான குளறுபடிகள் ஏற்பட்டதாகவும் கடந்த பத்து நாட்களாகப் பத்திரிகைகளில் செய்தி வருகின்றன.

இதுபோலவே மற்றொரு வழக்கு. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2011ஆம் ஆண்டு 14 டி.எஸ்.பி.க்களைத் தேர்வு செய்தது. அதில் முறைகேடு என்று கூறி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தபோது, அதை ஏற்றுக்கொண்டு அந்த நியமனம் செல்லாது என்று தீர்ப்புக் கூறப்பட்டது. அந்த 14 பேரும் அப்பீல் செய்ததை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை. வழக்கு விசாரணையைத் தள்ளிவைத் துள்ளது. ஆனால் அந்த 14 டி.எஸ்.பி.க்களும் உயர் நீதிமன்ற உத்தரவிற்கு மாறாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் நியமனம் செல்லாது என்று உயர் நீதிமன்றம் கூறிய

பிறகும் அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவது நீதிமன்ற உத்தரவை மீறிய செயலாகும். தற்போது அந்த 14 டி.எஸ்.பி.க்களுக்கும் கூடுதல் எஸ்.பி.யாக அ.தி.மு.க. அரசு பதவி உயர்வு அளித்திருக்கிறதாம். இதை எதிர்த்தும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காவல் துறை நிர்வாகம் எவ்வாறெல்லாம் ஆட்டுவித்தபடி செயல்படுகிறது என்பதற்கு இந்த உதாரணங்களே போதுமென நினைக்கிறேன். இந்தத் தவறுகள் கழக ஆட்சியில் நடைபெற்று, இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்க்கட்சியிலே இருந்திருந்தால், அவருடைய அறிக்கையில் எப்படியெல்லாம் கழக அரசைத்தாக்கி எழுதியிருப்பார்? "இந்த மைனாரிட்டி ஆட்சியில் காவல் துறைக்குப் பொறுப்பேற்றிருப்பவர் இன்றைக்கே பதவியைவிட்டு விலகிட வேண்டும்" என்று கொக்கரித்திருப்பார். "மெஜாரிட்டி" ஆட்சி என்பதால் எதுவும் செய்யலாமோ?

அன்புள்ள,

மு.க.

8-10-2013

3815. ஊழலைத் தவிர வேறு எதுவும் உயரப் போவதில்லை!

உடன்பிறப்பே,

நெல் கொள்முதல் விலையை அ.தி.மு.க. அரசு அறிவித்தது பற்றியும், கழக ஆட்சிக் காலத்தில் எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டது என்பது பற்றியும் 29-9-2013 அன்று விரிவாகவே "கேள்வி-பதில்" பகுதியில் எழுதியிருந்தேன். அ.தி.மு.க. அரசுக்கு ஆதரவாகச் செயல்படும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேட்டில் கூட, 7-10-2013 அன்று "நெல் கொள்முதல் விலையை உயர்த்துக" என்ற கோரிக்கையை மத்திய, மாநில அரசுகளுக்கு விடுத்து தலையங்கமே தீட்டப்பட்டுள்ளது.

"கொல்லத் துடிக்கும் கொள்முதல் விலை" என்ற தலைப்பில் "தி இந்து" தமிழ் நாளிதழில் "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்பது பழமொழி; அது இன்று நெஞ்சில் அறையும் நிஜ மொழியாகவே மாறிவருவதுதான் வேதனை. உற்பத்திச் செலவையும், கொள்முதல் விலையையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், வறண்டுபோன நீர்ப் பிடிப்புகளையும் நிறைக்கும் அளவுக்குக் கண்ணீர் சிந்துகிறார்கள் விவசாயிகள். கடந்த ஓராண்டில் மட்டும் விவசாயத்தில் நஷ்டம் அடைந்து பத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். "நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காமல் பலரும் விவசாயத்தை விட்டே வெளியேறிவிட்டதாக" அதிர்ச்சியளிக்கும் தகவலைக் கூறுகிறார் "கிரியேட்" அமைப்பைச் சேர்ந்த பொன்னம்பலம். அரசு கொள்முதல் விலையைக் கூட்டுவது மட்டுமே இனி இந்திய விவசாயத்தை மீட்டெடுப்பதற்கான ஒரே வழி. வேலையும், கவனித்துக்கொள்ள ஆட்களும் இல்லாத வயோதிகர்களுக்கே மாதம் 1000 ரூபாய் ஓய்வூதியமாகக் கொடுக்கும் அரசு இயந்திரம்; வயக்காட்டில் ஆறு மாதம் பாடுபட்டு விளையவைக்கும் விவசாயிக்கு ஒரு ஏக்கரில் வருமானமாய்க் கொடுப்பது வெறும் 5000 ரூபாய் தான். இதுதான்

விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாறுவதன் காரணம்...” என்றெல்லாம் எழுதியிருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திருவாரூர் மாவட்டச் செயலாளர், திரு. வெ. வீரசேனன் விடுத்துள்ள அறிக்கையில், “பாசனம் பெறும் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் சென்று அடையாததாலும், குறைந்தபட்சம் தேவையான அளவு மழை பெய்யாததாலும் ஒரு போக சம்பா நெல் பயிர்களும், செம்மை நெல் சாகுபடிப் பயிர்களும் காய்ந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மன்னார்குடி, நீடாமங்கலம் ஒன்றியங்களில் வடவாறு விரிவாக்கக் கால்வாய்ப் பகுதிகளிலும் தண்ணீர் அறவே வராததால் நெல் சாகுபடிப் பணிகள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது” என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார். என்னுடைய திருவாரூர் தொகுதியிலும், அதற்குப் பக்கத்திலே உள்ள நன்னிலம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி தொகுதிகளிலும் பாசனம் பெறும் கடைமடைப் பகுதிகளுக்கு ஆறுகளின் மூலம் தண்ணீர் வரவே இல்லை. விவசாயிகளின் இந்த இன்னலைப் போக்கிடத் தமிழக அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் திருவாரூர் மாவட்டத்தில் கருகும் சம்பாப் பயிர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் விவசாயிகள் வாய்க்கால்களில் தரையோடு ஓடும் நீரைச் சிறிது சிறிதாகச் சேகரித்துக் குடும்பத்தினருடன் குடங்களில் பிடித்து வயல்களுக்கு ஊற்றிப் பயிரைக் காப்பாற்றிடப் பதற்றத்தோடு முயற்சி செய்யும் அவலம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். டெல்டா மாவட்டங்களான திருவாரூர், தஞ்சை, நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் 12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் மூன்று போகம் விளைந்த நிலங்கள், தற்போது ஒரு போக விளைச்சலுக்குக்கூட வழியின்றி வறண்டு கிடக்கின்றன.

அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டுவரை வேளாண்மைத் துறைக்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 3 ஆயிரத்து 396 கோடிரூபாய் என்றால், 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டுவரையிலான தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் இந்தத் துறைக்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 7 ஆயிரத்து 414 கோடி ரூபாயாகும். விவசாயிகள் வாங்கிய 7000 கோடி ரூபாய் கூட்டுறவு விவசாயக் கடன்களைத்

தள்ளுபடி செய்து, 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயிகள் குடும்பத்தினரைக் காப்பாற்றியதும் தி.மு. கழக ஆட்சிதான்.

விவசாயிகளுக்கான பயிர்க் கடன் வட்டி 2005-2006இல், அ.தி.மு.க. ஆட்சியில் 9 சதவிகிதம் என்று இருந்ததை;

2006-2007ஆம் ஆண்டு, தி.மு.கழக ஆட்சியில், 7 சதவிகிதமாகக் குறைத்து, 6,31,283 விவசாயிகளுக்கு, 1,250 கோடியே 62 இலட்சம் ரூபாயும்;

2007-2008இல் 5 சதவிகிதமாகக் குறைத்து, 6,48,397 பேருக்கு, 1,393 கோடியே 97 இலட்ச ரூபாயும்;

2008-2009இல் 4 சதவிகிதமாகக் குறைத்து, 6,91,192 விவசாயிகளுக்கு, 1,571 கோடி ரூபாயும்;

2009-2010இல் பயிர்க் கடன் வட்டியையே ரத்து செய்து 8,98,450 விவசாயிகளுக்கு 2,169 கோடியே 48 இலட்ச ரூபாயும்;

2010-2011இல் 8,01,960 விவசாயிகளுக்கு 2,453 கோடி ரூபாயும் என;

ஐந்தாண்டுகளில், தி.மு. கழக ஆட்சியில் மொத்தம் 36 இலட்சத்து 71 ஆயிரத்து, 372 விவசாயிகளுக்கு 8,838 கோடியே 29 இலட்ச ரூபாய் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன என்பதை யார் மறந்தாலும், விவசாயிகள் மறந்திருக்க முடியாது.

ஆனால், கடந்த இரண்டாண்டுகளாகச் சாகுபடி பொய்த்துப் போய் விட்ட நிலையில் சஞ்சலத்தில் வாடிக் கொண்டிருக்கும் விவசாயிகள் தற்போது விவசாயக் கடனால் பெரிதும் பாதிக்கப்பட்டு

வருந்தி வருகிறார்கள். அவர்களின் கடன்களை இந்த அரசு அறவே ரத்து செய்வதுடன், ஏற்கனவே கடன் பெற்று அதையே கட்ட முடியாத நிலையில் உள்ள விவசாயிகளுக்குப் புதிய கடன்களை வழங்கி, தங்கள் சாகுபடியை அவர்கள் தொடர வழி வகுத்திட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறேன்.

அதுபோலவே விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், 1 கோடியே 74 இலட்சத்து 65 ஆயிரத்து 498 விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு; 8 இலட்சத்து 72 ஆயிரத்து 981 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 684 கோடியே 2

இலட்சத்து 56 ஆயிரத்து 686 ரூபாய் முதியோர் ஓய்வூதியம், கல்வி, திருமணம், விபத்து போன்ற இனங்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான்!

விவசாயிகளுக்கு தலவரி, தலமேல் வரி, தண்ணீர்த் தீர்வை ஆகியவை ரத்து செய்யப்பட்டதும் - விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதும் - தென்னை விவசாயிகள் நல வாரியம் கண்டதும் - உழவர் சந்தைகளை அமைத்ததும் - விவசாயிகளைச் சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்துச் சுழல் நிதி வழங்கும் திட்டம் தொடங்கியதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான்!

சிறு, குறு விவசாயிகள் அரசின் சலுகைகளைப் பெறுவதற்கு உரிய அதிகாரியிடமிருந்து சான்று பெற வேண்டும். உதாரணமாக மானிய விலையில் விதை, பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற்றைப் பெற வேண்டுமானால் அவர்கள் சிறு, குறு விவசாயிகளுக்குரிய சான்று வைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தச் சான்றுகளை அரசு அதிகாரிகளிடமிருந்து பெறுவதற்கு இயலவில்லை என்று விவசாயிகள் கூறுகிறார்கள்.

நெல் கொள்முதல் விலையைப் பொறுத்தவரை சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,000 என்றும், சாதாரணரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,800 என்றும் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று 2-10-2013 அன்று திருவாரூர் நகரத்தில், கழக விவசாயி அணிச் செயலாளர் டாக்டர் கே.பி. இராமலிங்கம், எம்.பி., தலைமையிலும், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் முன்னிலையிலும் நடைபெற்ற தஞ்சை மண்டல விவசாயக் கருத்தரங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களுக்குமுன் சென்னையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேகூட நெல் கொள்முதல் விலையை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசு கடந்த ஆண்டு வழங்கிவந்த அதே ஊக்கத் தொகையினை இந்த ஆண்டும் வழங்கியுள்ளது போதுமானதல்ல என்றும், அனைத்துப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ள நிலையில், ஊக்கத்தொகையினை குவிண்டாலுக்கு மோட்டா ரகத்துக்கு ரூ. 200 எனவும், சன்ன ரகத்துக்கு ரூ. 250 எனவும்

வழங்கிட வேண்டுமென்றும் அந்தத் தீர்மானத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுபோலவே கழக ஆட்சியின்போது கரும்பு அரவைப் பருவம் தொடங்குவதற்கு முன்பாக விவசாயப் பிரதிநிதிகள், சர்க்கரை ஆலை அதிபர்கள், தமிழக அரசின் அதிகாரிகள் கலந்து கொள்ளும் முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டு, அதன்பிறகே கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கின்ற பழக்கம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்து வந்தது. ஆனால், தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு உதவி செய்திடும் நோக்கத்தோடு, கடந்த இரண்டாண்டுக் காலமாக அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு விலையை நிர்ணயம்செய்ய முத்தரப்புப் பேச்சுவார்த்தையை நடத்த முன் வரவில்லை. மேலும் தற்போது சர்க்கரை லெவி முறையை மத்திய அரசு விலக்கிக்கொண்டதால், சர்க்கரை ஆலைகளுக்குப் பெரும் இலாபம் வந்தும்கூட, கரும்புக்கு கூடுதலாக விலை நிர்ணயம் செய்யத் தமிழக அரசு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இனியாவது முத்தரப்புக் கூட்டத்தை முறையாக நடத்துவதோடு, தமிழக கரும்பு விவசாயிகளுக்கு, உற்பத்திச் செலவிற்கேற்ற விலை என்ற கணக்கில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு வண்டிச் சத்தத்தைக் கணக்கிலே சேர்த்துக்கொள்ளாமல், ரூ.3,500 வழங்கவேண்டுமென்றும், தற்போது நிலுவையிலே உள்ள அனைத்துக் கரும்பு விவசாயிகளுக்கான பணத்தையும் நவம்பர் 15ஆம் தேதிக்குள் வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையினை ஏற்காவிட்டால், 3-11-2013 அன்று தமிழகச் சர்க்கரை ஆலைகள் முன்பாகக் கழக விவசாய அணியின் சார்பில் போராட்டம் நடைபெறும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அ.தி.மு.க. வினரே நிர்வாகப் பொறுப்புக்கு வந்துள்ள காரணத்தால், விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய விவசாயக் கடன், விதை நெல், உரம் மற்றும் வேளாண்மை இடுபொருள்கள் அ.தி.மு.க.வினருக்கும், அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. அ.தி.மு.க.வினரால் நடத்தப்படும் ஆட்சி அ.தி.மு.க.வினர்க்கு மட்டுமே; பொது மக்களுக்கு அல்ல என்பதைப் போன்ற ஜனநாயக விரோத நடைமுறை உருவாக்கப்பட்டுவிட்டது!

கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட தென்னை நல வாரியம் தற்போது இந்த ஆட்சியில் செயலற்றதாக ஆக்கப்பட்டுள்ளது. தென்னை விவசாயிகளின் நலனைக் கருதி, அந்த வாரியத்தை மீண்டும் இயக்கிட அ.தி.மு.க. அரசு முன்வருமா என்று தெரியவில்லை.

தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு முக்கியத் திட்டங்களை அ.தி.மு.க. அரசு காழ்ப்புணர்ச்சியோடு மூடி வருகின்ற வரிசையில், கழக ஆட்சியில் நாகப்பட்டினம் மாவட்டத்தில், கீவளூரில் விவசாயக் கல்லூரி ஒன்று தொடங்கப் பட்ட போதிலும், அதனைத் தற்போது செயல்படவிடாமல் இந்த அரசு தடுத்துள்ளதையும் விலக்கிக்கொண்டு, விவசாயிகளின் பொது நலன் கருதித் தொடர்ந்து அந்தக் கல்லூரியை நல்ல முறையில் இயங்கிடச் செய்ய முன்வருவார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

பாசன நீர் மேலாண்மை பெரும் பாதிப்புக்குள்ளாகிவிட்டது. 4-10-2013 அன்று திருத்துறைப்பூண்டியில் சம்பா சாகுபடிக்குத் தண்ணீர் கேட்டு விவசாயிகள் சாலை மறியல் செய்திருக்கிறார்கள். மேட்டூர் அணை ஆகஸ்ட் 2ஆம் தேதி திறக்கப்பட்டும்கூட, காவிரி டெல்டாவில் கடைமடைப் பகுதிகளுக்கு இன்னமும் தண்ணீர் போய்ச் சேரவில்லை என்றும், திருத்துறைப்பூண்டி அருகே உள்ள கடைமடைப் பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் கருகும் சம்பாப் பயிரைக் காப்பாற்ற அடப்பாற்றிலிருந்து வடக்கு ராஜன் வாய்க்காலுக்கு முறை வைக்காமல் தண்ணீர் விட வேண்டுமென்றும் அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

“வரப்புயர நீர் உயரும்;
நீர் உயர நெல் உயரும்;
நெல் உயர குடி உயரும்;
குடி உயர கோன் உயரும்!”

என்று பாடினார் அவ்வைப் பிராட்டி! ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் வரப்பும் உயரவில்லை; நீரும் உயர வில்லை; நெல்லும் உயரவில்லை; குடிமக்களும் உயரவில்லை; குவியும் ஊழலைத் தவிர வேறு எதுவும் உயரப் போவதில்லை!

அன்புள்ள,
மு.க.
9-10-2013

3816. இனியும் தமிழினம் ஏமாறத் தயாராக இல்லை!

உடன்பிறப்பே,

7-10-2013 அன்று தமிழக அரசின் செய்தி வெளியீட்டில், முதலமைச்சர் ஜெயலலிதா என்ன உத்தரவிட்டிருக்கிறார் என்று ஏடுகளைப் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் என்ன தெரியுமா? தமிழ் மொழியைப் பற்றியும், அதன் மீது முதலமைச் சருக்கு உள்ள ஆர்வத்தைப் பற்றியும், திருக்குறள் பற்றியும், தொல்காப்பியம் பற்றியும், சங்கத் தமிழ் பற்றியும் ஏராளமான அறிவிப்புகள் பல கோடி ரூபாய்க்குச் செய்து தள்ளிவிட்டார்கள். எத்தனை கோடி ரூபாய்க்கான திட்டங்கள் என்று கேட்கிறீர்களா? அவசரப்பட வேண்டாம்; நானே விளக்கமாகச் சொல்கிறேன்.

சென்னைத் தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறந்த உட்கட்டமைப்புடன் கூடிய திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தினை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த பத்து லட்ச ரூபாய் மதிப்பீட்டில் எவ்வளவு பெரிய ஓவியக் காட்சிக் கூடத்தினை அமைக்க முடியுமென்பதை நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள்!

அந்த ஓவியக் கூடத்தில் என்னென்ன அமையப் போகிறது தெரியுமா?

திருக்குறளை விளக்கும் ஓவியங்களைக் காட்சிப்படுத்துதல், ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ள திருக்குறள் நூல்களைச் சேகரித்துக் காட்சிப்படுத்துதல் மற்றும் உரைநடை வடிவில் உள்ள திருக்குறள் நூல்களைச் சேகரித்துக் காட்சிப்படுத்துதல், திருக்குறள் தொடர்பான படக்காட்சிகள், குறும்படங்கள் மற்றும் உயிரூட்டுப் படங்கள் சேகரித்துக் காண்பித்தல், அரசு கவின்கலைக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஓவியர்களைக் கொண்டு திருக்குறள்

கூறும் அறநெறிக் கருத்துக்களை நிகழ்கால ஓவியங்களாகத் தீட்டுதல், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் நூல்களைச் சேகரித்துக் காட்சிப்படுத்துதல் மற்றும் வட்டெழுத்து மற்றும் கல்லெழுத்தில் உள்ள திருக்குறளைச் சேகரித்துக் காட்சிப்படுத்துதல் ஆகியன செயல்படுத்தப்படுமாம்.

திருக்குறள் மீதும், திருவள்ளுவர் மீதும் இந்த ஆட்சியினருக்குத்தான் எவ்வளவு அக்கறை? கடந்த சில மாதங்களுக்கு முன்னால் "முறையான பராமரிப்பின்றிச் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறுகிறது வள்ளுவர்கோட்டம் - வாடகைக் காதலிகளின் புகலிடமாகும் அவலம்" என்ற தலைப்பில் "தினத்தந்தி" நாளிதழே ஒரு செய்தியினைப் புகைப்படங்களோடு செய்திக் கட்டுரையாக வெளியிட்டிருந்தது. அதில், "சென்னை வள்ளுவர்கோட்டம் முறையான பராமரிப்பின்றிச் சமூக விரோதிகளின் கூடாரமாகவும், வாடகைக் காதலிகளின் புகலிடமாகவும் மாறிவருகிறது. திருக்குறள் எழுதப்பட்ட கல்வெட்டுகளில் காதல் ஜோடிகள், காதல் கவிதைகளும் காதல் சின்னங்களையும் எழுதிவைத்துள்ளார்கள். குடிமகன்கள் வள்ளுவர்கோட்டத்தினை திறந்தவெளி "பார்" ஆகப் பயன்படுத்தி வருகின்றனர்" என்றெல்லாம் எழுதப்பட்டிருந்தது.

வள்ளுவர்கோட்டம், சென்னையில் மத்தியப் பகுதியிலே மிகப் பெரிய அரங்கமாக அமைந்துள்ளது. இந்த ஆட்சியினர் அதைச் சரியாகக்கூடப் பராமரிக்கவில்லை. அந்த வள்ளுவர் கோட்டத்திலே திருக்குறள் ஓவியக்காட்சிகள் எல்லாம் அருமையாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டு, சென்னைத் தரமணியிலே திருக்குறள் ஓவியக்காட்சிக் கூடத்தினை அமைக்கப் போகிறார்களாம்! "கூரை ஏறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன், வானத்தைக் கீறி வைகுண்டத்தைக் காட்டுகிறேன்" என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது.

குமரி முனையிலே கழக ஆட்சியில் வைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை பராமரிப்பின்றி அ.தி.மு.க. அரசினால் விடப்பட்ட நிலையில், நான் விடுத்த அறிக்கையில், "அய்யன் வள்ளுவர் சிலை பராமரிப்புப் பணிக்காக உரிய நிதி ஒதுக்கீடு செய்து பணியை விரைந்து மேற்கொள்ள அ.தி.மு.க. அரசு முன்வரா விட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயே, அந்தப் பணியினை மேற்கொள்ளலாமா அல்லது குமரி மாவட்டத்தில்

கழகத்தின் சார்பில் மிகப் பெரிய போராட்டம் ஒன்றினை நடத்தி ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்க்கலாமா என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்" என்று அறிக்கைவிடுத்தேன்.

அதன்பிறகு அரசின் சார்பில் அந்தச் சிலை பராமரிப்புப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

அடுத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்பான கட்டமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் ஒன்றினை அமைக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்களாம். இதற்கு எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கீடு தெரியுமா? இதற்கும் பத்து இலட்ச ரூபாய்தான் மதிப்பீடு.

திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் பெருமை சேர்க்க இவ்வளவு பெரிய திட்டங்கள் என்றால், தொல்காப்பியரை விட்டுவிட முடியுமா? முதலமைச்சர் உத்தரவு என்ன? உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பியர் ஆய்விருக்கை ஒன்றினை ஏற்படுத்த முதல் அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதற்காக 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் உத்தரவிட்டுள்ளார்.

"தொல்காப்பியப் பூங்கா" என்று கழக ஆட்சியில் திறந்து வைக்கப்பட்ட பூங்கா, அ.தி.மு.க. ஆட்சியில் "தொல்காப்பியப் பூங்கா" என்ற அந்த உயரிய பெயர் மாற்றப்பட்டு "அடையாறு பூங்கா" என்று பெயரிடப்பட்டுள்ளது. இவர்கள்தான் தொல்காப்பியர் ஆய்விருக்கை ஏற்படுத்தப் போகிறார்கள்.

இந்தச் செய்தி 7-10-2013 அன்று அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டு, அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. இதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னால் 14-5-2013 அன்று இதே முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகச் சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் ஓர் அறிக்கையினைப் படித்தார். அந்த அறிக்கையில், "தமிழர்தம் வாழ்க்கை வளத்தை எடுத்துக்கூறும் தொல்காப்பியத்தின் பெயரால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்விருக்கை ஏற்படுத்தப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 50 இலட்சம்

ரூபாய் வைப்புத்தொகையாக வழங்கப்படும்" என்று முதலமைச்சர் அறிவித்துவிட்டு, நேற்றையதினம் மீண்டும் ஒரு முறை, அதே அறிவிப்பினைப் புதிய அறிவிப்புபோலச் செய்து, அதை அரசின் சார்பில் செய்தி வெளியீடாகவும் தந்திருக்கிறார்கள் என்கிறபோது இதற்கு என்ன பெயர் சூட்டுவது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.

அந்த அறிவிப்போடு சேர்ந்து அதே 14-5-2013 அன்று முதலமைச்சர் மற்றொரு அறிவிப்பையும் செய்தார். அதில், "அமெரிக்க நாட்டின் பெருமையையும் புகழையும் உலகளவில் பரப்பும் வகையில் அமைந்துள்ள சுதந்திரதேவி சிலையைப் போல், தமிழர்களின் நாகரீகம், பண்பாடு, இலக்கியச் செல்வங்கள், கட்டடக்கலைத் திறன் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில், மதுரையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்த்தாய் சிலை அமைக்கப்படும்" என்று அறிவித்து, பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் அந்த அறிவிப்பினைச் செய்த முதல்வரைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அந்த அறிவிப்பு செய்து ஐந்து மாதங்கள் முடிந்துவிட்டது. அந்தத் தமிழ்த்தாய் சிலை அமைக்கப்பட்டுவிட்டதா? அதன் திறப்பு விழாக் காணொலிக் காட்சி மூலமாகவே நடைபெற்றுவிட்டதா?

மேலும் ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றின் மாதிரிகளை உருவாக்கித் தமிழர்களின் தொன்மைச் சான்றுகளாய் விளங்கும் சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள மரம், செடி, கொடிகளுடன் "தமிழ்த்தாய்ப் பூங்கா" ஒன்றும் அங்கு உருவாக்கப்படும் என்று ஜெயலலிதா அப்போது அறிவித்தார். அந்தப் பூங்கா எங்கே உருவாக்கப்பட்டுள்ளது?

தி.மு. கழக ஆட்சியில் அரும்பாடுபட்டு நிர்மாணிக்கப்பட்ட "செம்மொழிப் பூங்காவை"யும், "தொல்காப்பியர் பூங்காவை"யும் இந்த ஆட்சியில் சரியாகப் பராமரிக்கப்படாமல் காய்ந்துபோக விட்டிருக்கும் கொடுமையைத்தான் காணமுடிகிறதே தவிர, தமிழ்த்தாய்ப் பூங்காவினைக் காண முடியவில்லை.

ஆனால் இந்த அறிவிப்புகூட, தி.மு. கழக ஆட்சியில் கோவையில் நடத்தப்பட்ட உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவுரையில், "ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்

சங்க காலத்தில் தமிழகத்தைச் சூழல் இயலின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நமது முன்னோர் ஐந்திணை நிலங்களாகப் பிரித்திருந்தனர். இந்த ஐந்திணை நில வகைகளில் தமிழக அரசு சார்பில், பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் அமைக்கப்படும்" என்று நான் அறிவித்திருந்தேன். அந்த அறிவிப்புத்தான் தற்போது "தமிழ்த் தாய்ப் பூங்கா"வாகப் பெயர் மாறியிருக்கிறதோ என்று எண்ணுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், 2010-2011ஆம் ஆண்டே, தி.மு. கழக ஆட்சியில் நிதிநிலை அறிக்கையில், பத்தி 115இல், "1982ஆம் ஆண்டில், மதுரைத் தல்லாகுளம் பகுதியில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென வழங்கி ஆணையிடப்பட்டுச் சமநிலைப்படுத்தப்பட்டுள்ள 14.15 ஏக்கர் நிலத்தில், "தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் சங்கம்" அமைத்து, தமிழகத்தின் கலை, இலக்கியம், பண்பாட்டு உயர்நிலை விளக்கும் காட்சியகம் அமைப்பதெனவும், உலகளாவிய நிலையில் தமிழர்க்கும், தமிழ் ஆய்வுக்கும் துணைசெய்திடும் வகையில் அரங்கம் அமைப்பதெனவும், அரங்கத்தில் சங்கப் புலவர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களின் திருவுருவச் சிலைகளைக் கால வரிசைப்படி உரிய வகையில் வடிவமைப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது" என்று அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்பின் இறுதியில் இந்த நடவடிக்கைகள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழர் பண்பாட்டினை உலகறியச் செய்வதற்கும் வழிவகை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நேரத்தில் தி.மு. கழக ஆட்சியில் தமிழுக்காகச் செய்யப்பட்ட ஓரிரு சாதனைகளை நினைவூட்டவா?

மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களின் "நீராருங் கடலுடுத்த" எனத் தொடங்கும் பாடலை 1970இல் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக ஆக்கியது.

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக தனி அமைச்சகம்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம் நியமித்தது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைத்தது.

தமிழக வரலாறு எழுத தமிழறிஞர்கள் குழு நியமனம்.

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு 75 லட்ச ரூபாய் நன்கொடை.

தமிழக வரலாறுகள் நூல்களாக வெளியிடப்பட்டன.

மலேயா பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட 50 லட்சம் ரூபாய்.

நூற்றாண்டுக் கனவான தமிழ் மொழிக்குச் செம்மொழித் தகுதி பெற்றது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு.

திருவள்ளுவருக்குக் குமரியில் 133 அடி உயரத்தில் சிலை - சென்னையில் வள்ளுவர் கோட்டம்.

தமிழில் பெயரிடப்படும் திரைப்படங்களுக்கு வரி விலக்கு.

10ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் தமிழ் கட்டாயப் பாடம் - தமிழ் மொழியில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.

“சென்னை மாநிலம்” என்று இருந்ததை “தமிழ்நாடு” என்று பெயர் வைத்தது.

“மதராஸ்” என்பதைச் “சென்னை” என்று மாற்றியது

மேலும் கோவை செம்மொழி மாநாட்டில் தமிழ் வளர்ச்சிக்கென்றே தனியாகத் தமிழக அரசின் சார்பில் நூறு கோடி ரூபாய் சிறப்பு நிதியம் உருவாக்கப்படும் என்றும் அறிவித்து அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது.

- என்று எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாக இப்போது அறிக்கை விட்டுக் கொண்டிருப்பவர்களின் தகுதி என்ன?

கழக ஆட்சியில் தற்போதுள்ள தலைமைச் செயலகத்தில் “பாவேந்தர் செம்மொழித் தமிழ் ஆய்வு நூலகம்” தொடங்கி வைக்கப்பட்டதே, அந்த நூலகத்தில் இருந்த அரிய பழந்தமிழ் நூல்களையும், சுவடிகளையும் தமிழ் ஆய்வாளர்களும்,

ஆர்வலர்களும் பயன்படுத்தி வந்தார்களே, அந்த நூலகம் இப்போது எங்கே? 2011ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்து அ.தி.மு.க. ஆட்சி பதவியேற்ற உடனேயே அந்த நூலகத்தை அங்கிருந்து அகற்றியதோடு, அதிலிருந்த நூல்களையும் எங்கோ கொண்டுபோய், யாரும் பயன்படுத்த முடியாதபடி செய்தவர்களா தமிழ்மொழியை வளர்க்கப் போகிறார்கள்?

சட்டப்பேரவையில் ஆண்டுதோறும் ஆளுநர் ஆங்கிலத்தில் உரையாற்றிய பிறகு, பேரவைத் தலைவர் அதன் தமிழ்மொழியாக்கத்தைப் படிப்பது மரபாக இருந்து வந்ததை, அ.தி.மு.க. ஆட்சியில் நீக்கிவிட்டார்கள். அதுபற்றிக் கழக உறுப்பினர்கள் கேட்டபோது, "நேரம் இல்லை" என்று கூறியவர்களா, தமிழ்மொழியை வளர்க்கப்போகிறார்கள்?

10-5-2013 அன்று சட்டப்பேரவையிலே நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்படும் என்று அறிவித்தவர்களா, தமிழை வளர்க்கப்போகிறார்கள்?

சமச்சீர் கல்விக்கான பாடப்புத்தகங்களில் கழக ஆட்சியில் அச்சிடப்பட்டிருந்த திருவள்ளுவர் படத்தையே "ஸ்டிக்கர்" ஒட்டி மறைத்த மகானுபாவர்களா தமிழ்மொழியை வளர்க்கப் போகிறார்கள்?

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக வழங்கப்படவிருந்த "அவ்வையார் விருது", அந்தத் துறையிலிருந்து நீக்கப்பட்டு வேறொரு துறைக்கு ஒப்படைத்தது மட்டுமல்லாமல், தமிழ்ப் புலமையே இல்லாத ஒருவருக்கு விருது வழங்கிய ஆட்சியினரா தமிழை வளர்க்கப் போகிறார்கள்?

அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை முறையாகப் பராமரிக்காமல் விட்டிருப்பதும், தமிழகத்தின் பண்பாட்டுச் சின்னமான கண்ணகி சிலையை அகற்றியதும் தமிழின்மீது பற்றுக் கொண்டவர்கள் செய்கின்ற செயலா?

ஏன்; செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! தமிழைச் செம்மொழியாக்கவும், அதன் மத்திய நிறுவனத்தை தமிழகத்திலே ஏற்படுத்தவும் கழக ஆட்சியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று என்ன நிலை?


செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்காக என்னுடைய சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை அளித்து, அதிலே கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஆண்டுக்கொருமுறை பத்து இலட்ச ரூபாய் மதிப்பில் விருது ஒன்றினை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கழக ஆட்சியில் கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்ற போது, திரு. அஸ்கோ பர்போலா அவர்களுக்கு அந்த விருது வழங்கப்பட்டது. அதன் பிறகு இரண்டாண்டுகள் ஆகியும் அந்த விருது இன்றுவரை வழங்கப்படவில்லை. அதற்கான முயற்சியிலும் அ.தி.மு.க. அரசோ, முதலமைச்சர் ஜெயலலிதாவோ ஈடுபடவில்லை. அந்த அளவிற்கு செம்மொழியின்மீதும், தமிழின்மீதும் அம்மையாருக்கு அன்பு!

இவர்கள்தான் திருக்குறள் ஓவியக் காட்சி, தொல்காப்பியர் ஆய்வு இருக்கை, சங்கத் தமிழ் காட்சிக்கூடம் என்றெல்லாம் அறிக்கைவிட்டு ஏமாற்ற நினைக்கிறார்கள்! இனியும் தமிழினம் ஏமாறத்தயாராக இல்லை!

அன்புள்ள,

மு.க.

10-10-2013



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022